என்பஎழுந்து இயங்கும் யாக்கையர்.

*(மாசு இல்லாமல் விளங்கும் திருமேனியை உடையோர்; மான்தோலைப் போர்த்த, தசைகெட்ட மார்பில் எலும்புகள் மேலே தோன்றி அசையும் உடம்பை யுடையோர், இமைக்கும் - விளங்கும். உரிமை - தோல்).*

*இவர்கள் ஏன் இப்படி இளைத்திருக்கிறார்கள்? இந்த உடம்பு சோற்றால் எடுத்த சுவர். சோறு குறைந்தால் இது மெலியும். அவர்களும் உணவு இல்லாமல் இளைத்துப் போயிருக்கிறார்கள். ஆம்; உணவு இல்லாமல் தான் இப்படி ஆகியிருக்கிறார்கள். ஆனால் ஏழைகள் அல்ல; தாமே வலிந்து உணவை உண்ணாமல் விரதம் இருப்பவர்கள்; அடிக்கடி சேர்ந்தாற்போல் பட்டினி கிடந்து தவம்புரிபவர்கள்.*

"உண்ணாது நோற்பர் பெரியர்"

*என்று திருவள்ளுவர் சொல்லவில்லையா?*

*நமக்குத்தான் ஒருவேளை காபி இல்லாவிட்டாலும் ஒன்றும் ஓடுவதில்லை. இவர்கள் உணவு கிடைக்காமல் இப்படி இல்லை. உண்ண வேண்டுமானால் ஆயிரம் பேர் சுவையுள்ள உணவைத் தரச் சித்தமாக இருக்கிறார்கள். ஆனாலும் இவர்கள் தாமாகவே உணவை உண்ணுவதில்லை. தாம் செய்யும் தவத்துக்கு அது இடையூறாக இருக்கிறதென்று விரதம் இருக்கிறார்கள். காமமும் தாமதகுணமும் உணவினால் மிகுதலின் இந்த விரதத்தை மேற்கொள்ளுகிறார்கள்.*

*நம்முடைய வாழ்க்கையில் நாம் பல பல காரியங்களைச் செய்கிறோம். ஒவ்வொருவரும் தமக்கு அமைந்த வாழ்க்கை வகைக்கு ஏற்பக் காலை முதல் இரவு வரையில் பல பல செயல்களில் ஈடுபட்டிருக்கிறார். யாவரும் எது செய்தாலும் செய்யாவிட்டாலும் தவறாமல் செய்கின்றவை இரண்டு. ஒன்று ஊண், மற்றொன்று உறக்கம்.*

"யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
உறங்குவது மாகமுடியும்"

*என்பர் தாயுமானவர். இந்த வாழ்க்கை என்னும் தேருக்குப் பல அங்கங்கள் இருந்தாலும், இதன் முன்சக்கரங்கள் இந்த இரண்டும். இது எங்கெங்கோ செல்கிறது; சாமாறே விரைகிறது. இதனை மாற்றி ஆமாறு செல்லத்தூண்ட வேண்டும். தேரின் போக்கை மாற்ற வேண்டுமானால் தேர் முழுவதையும் திருப்ப இயலாது. அதன் முன் சக்கரங்களில் முட்டுக்கட்டை போட்டுத் திருப்ப வேண்டும். வாழ்க்கைத் தேரைத் திருப்புவதற்கும் அதன் முன் சக்கரங்களாகிய ஊன் உறக்கம் என்பவற்றில் முட்டுக்கட்டை போட வேண்டும். அப்போது தேர் முழுவதும் திரும்பும்.*

*அதனால்தான் விரதம் இருப்பவர்கள் உணவில் வரையறையை மேற்கொள்கிறார்கள்; உணவு இல்லாமலே இருக்க முயலுகிறார்கள்; உறக்கத்தைக் குறைத்துக் கொள்கிறார்கள்; உறங்காமல் இருக்க முயலுகிறார்கள். "தனித்திரு, பசித்திரு; விழித்திரு" என்பது தவத்துக்குரிய நிலையைச் சொல்லும் உபதேசம்.*

*ஆகவே, தவம் புரிபவர்கள் உணவின்றிப் பல நாள் விரதம் இருக்கிறார்கள். அதனால் அவர்கள் உடம்பு இளைக்கிறது. சோற்றுக்கு இல்லாமல் பட்டினி கிடப்பவனுக்கும் உடம்பு இளைத்தாலும், அந்த உடம்பு ஒளியின்றி வாட்டமடையும். தவம் புரிபவர்களுக்கு உடம்பு மெலிந்தாலும் தவக்கனலின் ஒளி உடம்பில் தேசினை உண்டாக்கும்.*

"ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து"

*என்று மணிவாசகர் இந்த நிலையைக் கூறுகிறார்.*

*இந்த முனிபுங்கவர்கள், 'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி' அவ்வொளி புறத்திலும் பொசியும்படி செய்கிறவர்கள்.*

நன்பகல், பலவுடன் கழிந்த உண்டியர்

*(நல்ல நாட்கள் பலவற்றில் ஒருங்கே உணவை உண்ணாது விட்டவர்கள்).*

*இதுவரையில் இவர்களுடைய புறத்தோற்றத்தைப் பார்த்தோம். இனி இவர்களுடைய அகத்தையும் பார்க்கலாம்.*

*பட்டினி கிடப்பவர்களுக்குச் சள்ளுச் சள்ளென்று கோபம் வரும். இவர்களுடைய மனம் எப்படி இருக்கிறது? யாரிடத்திலும் பகை என்பது எள்ளளவும் இல்லை. பிறரிடம் வெறுப்பு வருமா? அதுவும் இல்லை. எந்தப் பிராணிக்கும் இன்னல் இயற்றத் தெரியாதவர்கள்; சகலஜீவ தயாபரர்கள். பகை இன்மையால் மனிதர்கள் யாவரும் இவர்களை அணுகிப் பணிகிறார்கள். செற்றமாகிய ஹிம்சை இல்லாமையால் எல்லாப் பிராணிகளும் இவர்களோடு உறவாடுகின்றன. மார்பிலே ஊனே இல்லை என்று உடம்பில் இல்லாததைச் சொன்னதுபோல, மனத்திலே பகையும் இல்லை. ஹிம்சையுணர்வும் இல்லை என்று உள்ளத்தில் இல்லாதவற்றையும் சொல்கிறார் நக்கீரர். பொல்லாத குணங்கள் இல்லாமையே பெருமை அல்லவா?*

*இவர்கள் உள்ளே உள்ள செல்வத்தைச் சொல்ல வேண்டாமா? மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவற்றில் புத்தி சக்தி மிக்கவன் அறிவாளி; இவர்களுக்கு அந்த அறிவு நிரம்ப இருக்கிறது என்பதில் ஆச்சரியம் ஒன்றும்*

*இல்லை. அறிவு இரண்டு வகை; நூலறிவு வாலறிவு என்பவை; அவற்றை அபரஞானம், பரஞானம் என்று சொல்வார்கள். தக்க ஆசிரியர்களைத் தேடிச் சென்று கற்கும் இயற்கையறிவுள்ள மாணவனுக்கு நூலறிவு கிடைக்கிறது. அது முயற்சியால் வருவது. வாலறிவு என்பது அநுபவத்தால் அறிவது. எத்தனை நூல்களைக் கற்றும் அந்த வாலறிவு இல்லையெனில் கற்றன அனைத்தும் வீணாகிவிடும்.*

*"நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக" என்று காரைக்காலம்மையார் பாடுகிறார். அந்த அறிவுக்கு எல்லையுண்டு. எல்லையிறந்த இறையருளனுபவத்தை அந்த அறிவால் அறிய இயலாது. வாலறிவு ஒன்றுதான் அருளநுபவ நுகர்ச்சிக்குரியது. "அறிவை அறிவது பொருளென அருளிய பெருமாளே" என்பதில் அருணகிரியார் சொல்வது வாலறிவை.*

*இந்த முனிவர்கள் வாலறிவிற் சிறந்தவர்கள். பல நூல்களைக் கற்றவர்களுக்கும் இந்த வாலறிவில் எள்ளளவும் தட்டுப்படுவதில்லை. இவர்களோ அந்த அறிவின் தலை நிலத்தில் இருக்கிறார்கள்.*

*''அப்படியானால் இவர்களுக்கு நூலறிவு குறைவுதானோ?'' என்று கேட்காதீர்கள். அதிலும் இவர்கள் குறைந்தவர்கள் அல்லர். கற்றறிந்த பேரறிவினர்களின் கூட்டத்தில் இவர்கள் தலைமை தாங்குபவர்கள்; கல்வியறிவுக்கு வரம்பாக விளங்குகிறவர்கள்; வாலறிவும் நூலறிவும் ஒருங்கே பொருந்திய மாபெருந் தலைவர்கள் இவர்கள்.*

இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர், யாவதும்
கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர்.

*(பகையையும் பிறரைச் செறுவதையும் நீக்கிய மனமுடையவர்; கற்றவர் சிறிதும் அறியாத வாலறிவினர்; கற்றவர்களுக்கு வரம்பாக நிற்கும் தலைமையை உடையவர்).*

*இவர்கள் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்றும் இல்லாத தூயவர்கள். மனிதனுக்குக் காமமும் வெகுளியும் தோன்றுவது இயல்பு. ஆனால் அவற்றை அடக்கி வெல்ல வேண்டும். "ஓங்குசினம் காத்துக் கொள்ளும் குணம்" என்பது ஆன்றோர் வாக்கு, இவர்கள் தம்முடைய மனத்திண்மையினால் காமத்தையும், வெகுளியையும் வென்றவர்கள். ஞானம் நிரம்பியவர்கள்; அதனால் மயக்கமும் இல்லாதவர்கள்.*

காமமொடு
கடுஞ்சினம் கடந்த காட்சியர்.

*(காமத்தோடு கடுமையான சினத்தையும் வென்ற ஞானத்தை உடையோர். கடந்த - வென்ற. காட்சி - ஞானம்).*

*காமத்தையும் சினத்தையும் வென்றவர் என்று சொன்னார். காட்சியர் என்றதனால் ஞானத்துக்கு மறுதலையாகிய மயக்கத்தையும் வென்றவர் என்பது தெளிவாகும்.*

*"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்*
*நாமம் கெடக்கெடும் நோய்" (360)*

*என்பது திருக்குறள். பிறவி நோய்க்குக் காரணமான இந்த மூன்றையும் கடந்த முனிபுங்கவர்களாகிய இவர்கள், இனிப் பிறவி பெறாமல் முக்தி பெறுவதற்குரியவர்கள்; இப்போதே அந்த இன்பத்தை நுகர்பவர்கள். அந்த நிலையைச் சீவன் முக்தி என்பார்கள். அதை அடுத்தபடி சொல்ல வருகிறார் நக்கீரர்.*

இடும்பை யாவதும் அறியா இயல்பினர்

*(சிறிதளவும் துன்பத்தை அறியாத இயல்புடையவர்கள்).*

*இன்ப துன்பங்களுக்கு அப்பாலே மலைபோல நிற்கும் இயல்புடையவர்கள் சீவன் முக்தர்கள்.*

*"இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை"*

*என்று பெருமிதம் கொள்ளும் நிலையை உடையவர்கள் அவர்கள்.*

*இன்பம், துன்பம் என்பன மனத்தில் உண்டாகும் அநுபவங்கள். விருப்பு வெறுப்புக்களால் இன்ப துன்பங்கள் உண்டாகின்றன. அவற்றை ஒழித்தவர்களை அவை சார்வதில்லை. அவ்விரண்டுக்கும் மேற்பட்ட அமைதியான ஆனந்தத்தில் அவர்கள் ஆழ்ந்து கிடப்பார்கள்.*

*உலகியலில் பொறிகளால் நுகரும் துன்பங்கள் உடனே துயரத்தை உண்டாக்குகின்றன; பொறி இன்பமோ பின்பு வரும் துன்பத்துக்குக் காரணமாகின்றன. ஆகையால் பொறியினால் நுகரும் இன்பம் துன்பம் இரண்டும் ஒருவகையில் இடும்பைகளே. அவற்றிற்கு அப்பாலே சென்றவர்கள் உயிரினால் இன்பம் நுகர்வார்கள்.*

*பொறியின் வாயிலாக வரும் இன்பதுன்பம் மனத்தைச் சார்ந்தவை. பொறிகள் அடங்கி நின்றாலும் மனம் இன்பதுன்பத்தை வாசனையினால் நுகரும்.*

*தூங்கும் போது கனவில் இன்ப துன்பங்களை மனம் அநுபவிக்கின்றது அல்லவா? சாக்கிரத்தில் மனம் பொறிகளோடு இயைந்து இன்பதுன்பங்களை உணர்கிறது; கனவில் அவற்றோடு சாராமல் நுகர்கிறது. இது தான் வேற்றுமை. மனம் தொழிற்படாத போது பொறி நுகர்ச்சி இராது. நன்றாகத் தூங்குகிறவனை எறும்பு கடித்தாலும் தெரிவதில்லை; கூப்பாடு போட்டாலும் அவன் காதில் விழுவதில்லை. பரிச இந்திரியமாகிய தோல் இருந்தாலும், ஒலிப் பொறியாகிய செவி இருந்தாலும், மனம் அவற்றோடு சாரவில்லை; அதனால் உணர்வும் இல்லை.*

*ஆகவே இன்பமும் துன்பமும் மனத்தைச் சார்ந்தவை. இந்த இரண்டும் கடந்த அனுபவம் ஒன்று உண்டு. அங்கே மனத்துக்கு வேலை இல்லை. அப்போது இன்பத்தை உயிர் தனி நின்று அனுபவிக்கிறது. அதுதான் ஆனந்தம்; அதுதான் சுக துக்கம் அற்ற இன்பம்; அதையே சிவானந்தமென்றும், பிரம்மானந்த மென்றும், ஆத்மானந்தமென்றும் பலபடியாகக் கூறுவர்.*

*அத்தகைய ஆனந்தத்திலே லயித்த இந்த முனிவர்களுக்குச் சிறிதும் துன்பம் என்பதே இல்லை.*

இடும்பை
யாவதும் அறியா இயல்பினர்.

*(சிறிதேனும் துன்பம் என்பதை அறியாத இயல்பை உடையவர்கள்).*

*இவர்கள் மனம் கண்ணாடிபோல் இருக்கிறது. விருப்பு வெறுப்பு இல்லாமல் இருக்கிறது. அந்த நிலை என்றும் பொருந்தி இருக்கிறது. இவர்களுடைய முதிர்ந்த ஞானமே இவர்களுக்கு இந்த நிலைமை உண்டாக்கியது.*

*இத்தகைய முனிவர்கள் முன்னாலே புகுகிறார்கள்.*

மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புக.

*(மனம் பொருந்த வெறுப்பில்லாத ஞானத்தையுடைய முனிவர்கள் முன்னாலே செல்ல).*

*முருகனைக் காணும் பொருட்டுக் கைலாயத்திலிருந்தும் வைகுண்டத் திலிருந்தும் அமராவதியிலிருந்தும் பெரிய தேவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதோ குறை இருக்கிறது. அதை நீக்கிக் கொள்ள முருகனை நாடி வருகிறார்கள். முருகனுக்குச் சிறிதே சினம் உண்டாகியிருக்கிறது. அதை ஆற்றி, தம்முடைய வேண்டுகோளைச் சமர்ப்பிக்க வருகிறார்கள்.*

*தாமே நேரில் சென்று சொல்ல அவர்களுக்கு அச்சமாக இருக்கிறது. முருகனுக்கு வேண்டியவர்களை முன்னிட்டுக் கொண்டு போகலாம் என்று தோன்றுகிறது. முருகனுக்கு மிகவும் வேண்டியவர்கள் பக்தர்கள்; ஞானியர். அதனால்தான் முனிபுங்கவர்களை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். தம் தம் தொழிலில் அவர்கள் சிறந்த தலைவர்களானாலும், இங்கே முருகன் சந்நிதியில் தலைமை அன்பர்களுக்குத்தான். இந்த நுட்பம் தெரிந்து, இந்த முனிபுங்கவர்களையே முன்னே போகச் சொல்லி ஆடல் பாடல் வல்லவர்களை அவர்களுக்குப் பின்னே அனுப்பி, அந்தப் பெரியவர்கள் பணிவாகப் பின்னே வருகிறார்கள்.*

*பிரம்மாவிடம் கோபம் கொண்டு சிறையில் அடைத்திருக்கிறான் முருகன். இப்போது தேவர்கள் வந்தால் அந்தக் கோபத்தை அவர்கள் மேலும் காட்டுவான். ஆகையால் கோபம் அடைந்த கணவனுக்கு முன் குழந்தையை விட்டு ஆறுதல் பெறச் செய்து, பின்பு செல்லும் மனைவியைப் போலத் தேவர்கள் முனிபுங்கவர்களை அனுப்பியிருக்கிறார்கள். அதனால் அவர்கள் முன்னே புகுகிறார்கள்.*

சீரை தைஇய உடுக்கையர். சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்.
மாசுஅற இமைக்கும் உருவினர், மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர், நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர், இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர், யாவதும்
கற்றோர் அறியா அறிவினர். கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர். காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர். இடும்பை
யாவதும் அறியா இயல்பினர், மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புக.

*முனிவர் பெருங்கூட்டம் முன்னே செல்கிறது. அவர்களைக் கையெடுத்துக் கும்பிட்டு விட்டு, பின்னே வருகின்றவர்கள் யார் என்று பார்ப்போம்.*

## இசைவாணர் வருகை

***முனிவர்கள் முதலில் போக, அவர்களை அடுத்துக் கந்தருவர்களும் அவர்களுடைய மகளிரும் வருகிறார்கள். அவர்கள் இனிய இசையை எழுப்புகிறவர்கள். முருகன் இசையில் ஈடுபடுகிறவன். ஆகவே, முருகனுக்கு உகந்த முனிவர்கள் முன்னே செல்ல அவர்களை அடுத்து அவன் விரும்பும்***

இசையைப் பாடுபவர்கள் புகுகிறார்கள். சினம் உடையவர்களுடைய சினத்தை ஆற்றுவது இசை. ஒருகால் முருகன் நான்முகனிடம் கொண்ட கோபம் ஆறாமல் இருந்தாலும் அதனை ஆற்றுவதற்கு அவர்களுடைய யாழிசை உதவும்.

கந்தருவர்கள் எப்படி இருக்கிறார்கள்? இசைவாணர்கள் எப்போதுமே தம்மை அணி செய்து கொள்ளும் இயல்புடையவர்கள். கந்தருவர்கள் இடையில் அணிந்துள்ள உடை மிக்க மெல்லியதாகவும் வெள்ளைவெளேரென்றும் இருக்கிறது. பாலைக் காய்ச்சும்போது மேலே ஆவி வருகிறதே, அதை அப்படியே முகர்ந்து ஆடையாக உடுத்துக் கொண்டால் எப்படி இருக்கும்? அப்படி இருக்கிறது அவர்களுடைய தூய உடை. "பாலொளி யன்ன பைந்துகில்'' என்று வேறு நூல்களிலும் வருகிறது. வெள்ளைப் புகைபோலவும் இருக்கிறது.

அவர்கள் மார்பில் மலர்மாலை விளங்குகிறது. இப்போது தான் மொட்டு மலர்ந்த மலர்களைக் கொண்டு கட்டிய புத்தம் புதிய மாலை அது; அந்த மார்பில் அழகாகத் தொங்குகிறது.

புகைமுகந்த தன்ன மாசில் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்து

(புகையை முகந்தாற் போன்ற அழுக்கு இல்லாத தூய உடையையும், மொட்டுக்கள் வாய் அவிழ்ந்து மலர்ந்த மாலை சூழ விளங்கும் மார்பையும் (உடைய கந்தருவர்) முகை - மொட்டு, தகை - மாலை).

அவர்களுடைய உடையும் மாலையும் தூய்மைக்கும் கலைப் பண்புக்கும் அடையாளமாக நிலவுகின்றன. அவர்கள் யாழை வாசிக்கிறார்கள். நரம்புகளை இறுகக் கட்டிய யாழ் அது. முறுக்கி இறுக்கிய நரம்புக் கட்டுத்தளர்ந்து போனால் அந்த அந்த நரம்பு அதற்குரிய சுரத்தைப் பேசாது. எப்படி அவை இறுக அமைய வேண்டுமோ, அப்படி அமைய வேண்டும். இப்படித் தந்திகள் கச்சிதமாக இறுக அமைந்த அமைப்பைத் திவவு என்று சொல்வார்கள். திவவு தளர்ந்து தொய்வு உண்டானால் பாட்டில் அபசுவரம் உண்டாகும்.

இசைவாணர்கள் இசை நிகழ்ச்சியைத் தொடங்குவதற்கு முன் இந்தத் திவவு சரியாக இருக்கிறதா என்று பார்த்து ஒழுங்காக அமைத்துக் கொள்வார்கள். சுருதியோடு ஒட்டிப் போகிறதோ என்று தம் காதை வாத்தியத்தின் அருகில் வைத்துப் பார்த்து ஒழுங்குபடுத்திக் கொள்வார்கள். நுட்பமான ஒலியும் தவறின்றி அமையவேண்டும் அல்லவா? அதனால் இப்படிக் கூர்ந்து பார்த்துச் சுருதி சேர்க்கிறார்கள். இத்தகைய நரம்புக் கட்டை உடைய நல்ல யாழைக் கந்தருவர்கள் வாசிக்கிறார்கள். யாழ் நல்ல முறையில் செய்தது. அதில் உள்ள நரம்புக் கட்டாகிய திவவும் நல்ல முறையில் பொருத்திக் கட்டியது.

*இனி, அதை வாசிக்கிறவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்க வேண்டாமா?*

*வாத்தியத்தை வாசிக்கும்போது விரல்கள் வேலை செய்கின்றன, ஆதலின் விரல்கள் நன்றாக இருந்தால் போதும் என்று நினைக்கலாமா? சங்கீதத்தில் மனோதர்மம் என்பது மிகவும் முக்கியமானது. இராகத்தின் கட்டுக்கோப்பு, அதாவது ஆரோகண அவரோகண கதி, எப்போதும் மாறாது. தாளத்தின் கணக்கும் மாறாது. ஆனால் இந்த ராகலயங்களுக்குள்ளே இழையும் இசை இசைவாணனுடைய மனோதர்மத்தால் பலபல வடிவங்களைக் கொள்ளும்; பலபல அலைகளை எழுப்பும். ஆதலின் இசைவாணனுக்கு மனோதர்மம் அவசியமானது. அதுதான் பாட்டுக்கு ஜீவனைப் போன்றது. இந்த மனோதர்மச் சிறப்பினால்தான் சிறந்த இசைவாணர்கள் தங்களுக்கே உரிய பாணியை உண்டாக்கிக் கொள்கிறார்கள்.*

*முருகனைத் தரிசிக்க வரும் கூட்டத்தில் இரண்டாவது வரிசையில் செல்லும் கந்தருவர்களாகிய இசைவாணர்களுக்கு நல்ல வளமான மனோதர்மம் இருக்கிறது. அது பாட்டில் நயத்தை உண்டாக்குகிறது. அந்த நயம் அவர்களுடைய மனத்திலிருந்து ஊற்றெடுக்கிறது. அது மட்டுமா? அவர்கள் வீணையை மீட்டி இசை எழுப்புவதோடு நிற்பதில்லை. அவர்களும் அதனுடன் இணைந்து, இழைந்து பாடுகிறார்கள். வீணையோடு இணைந்து பாடுபவர்களின் பாட்டு மென்மையாக இருக்கும். அவர்களுடைய மொழி மென்மொழி.*

*கந்தருவர்களின் மூன்று கரணங்களும் இசையோடு இசைந்து இன்புறுத்துகின்றன. அவருடைய உள்ளம், மனோதர்மமாகிய நயனுடைய நெஞ்சு. அவர்கள் மொழி மென்மொழி. அவர்கள் தங்கள் கரத்தினால் நல்ல திவவையுடைய யாழை மீட்டுகிறார்கள். இப்படி மனமொழி மெய்களின் இணைப்புச் செயலால் அவர்களிடம் யாழிசை உண்டாகிறது.*

செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்நரம்பு உளர.

*(காதிலே வைத்துப் பார்த்துச் சுருதிகூட்டிய நரம்புக்கட்டையுடைய நல்ல யாழிலே பயிற்சியுடையவர்களும், மனோதர்மமுள்ள நெஞ்சையும், மென்மையான மொழிகளையும் உடையவர்களுமாகிய கந்தருவர் இனிய யாழ் நரம்பை மீட்டிப் பாட,*

*நேர்பு - சேர்த்து. செய்வு - சுருதிகூட்டும் செய்கை. திவவு - நரம்புக்கட்டு. நயன் - இனிமை, அன்பு; இங்கே மனோதர்மம். மேவலர் - மேவுதலை உடையவர். உளர - மீட்ட).*

*முனிவரை அடுத்து யாழை வாசித்து இனிய பாட்டைப் பாடிக் கொண்டு வருகிறார்கள், கந்தருவர்கள். அவர்களுடைய மனைவிமார்கள் உடனிருந்து பாடிக்கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய அழகு சொல்லத் தரம் அன்று.*

*அவர்களுடைய உடம்பின் அமைப்பைப் பார்த்தால்* ***நோய் என்பதன் வாசனையே தெரியாதது என்று தோன்றுகிறது;*** *அவர்கள் நினைக்கிறபடி யெல்லாம் அந்த உடம்பு வளைந்து கொடுக்கிறது. அவர்களின் திருமேனி மாந்தளிரின் நிறம் பெற்றுப் பளபளக்கிறது. மாநிறம் என்று பொதுவாகச் சொல்வதுண்டு. உண்மையில் மாநிறம் உடையவர்கள் இந்த கந்தருவ மங்கையர். அந்த மேனி பளபளக்கும் பொழுதெல்லாம் அதில் ஒரு மெழுகு தோன்றுகிறது. அழகுத் தேமல் படர்ந்திருக்கிறது. பொன்னை உரைத்த பொடியை உடம்பெல்லாம் பூசினால் எப்படி இருக்கும், அப்படி மின்னுகிறது அந்த அழகுத்தேமல். அதைத் திதலை என்று சொல்வார்கள்.*

**நோய்இன்று இயன்ற யாக்கையர்; மாவின்**
**அவிர்தளிர் புரையும் மேனியர்; அவிர்தொறும்**
**பொன்உரை கடுக்கும் திதலையர்.**

*(நோயே இல்லாமல் அமைந்த உடம்பை உடையவர்; மாமரத்தின் பளபளக்கும் தளிரை ஒத்த வண்ணத்தை உடையவர்; அப்படிப் பளபளக்குந் தோறும் பொன்னை உரைத்தாற்போலத் தோன்றும் அழகுத் தேமலை உடையோர்).*

*அவர்கள் அணிந்த மெல்லிய ஆடை அவர்கள் மேனியழகைப் புலனாக்குகிறது. அவர்கள் தம் இடையில் பதினெட்டு வடங்களையுடைய மேகலையாகிய பருமம் என்னும் அணியை உள்ளே அணிந்திருக்கிறார்கள். உடை நழுவினாலும் இரகசியத்தை அந்த வடங்கள் மறைத்து விளங்கும். அந்தப் பகுதி மேடாகவும், பள்ளமாகவும் இலக்கணப்படி அமைந்திருக்கிறது. அவர்கள் சிறிதும் மாசுமறுவற்றவர்கள். அவர்களும் கந்தருவர்களோடு சேர்ந்து பாடுகிறார்கள். அந்தப் பாட்டில் சிறிதளவு கூட அபசுவரம் இல்லை; குற்றம் ஏதும் இல்லாதபடி கந்தருவர்களும் அவர் மகளிரும் இணைந்து பாடும் பாட்டுக் கேட்கிறது.*

**இன்னகைப்**
**பருமம் தாங்கிய பணிந்துஏந்து அல்குல்**
**மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்க.**

*(கண்ணுக்கு இனிய உளியை உடைய பருமம் என்னும் மேகலையைத் தாங்கியதும், தாழ்ந்தும் உயர்ந்தும் இலக்கணப்படி அமைந்ததுமாகிய இரகசிய உறுப்பையுடையவராகிய குற்றமற்ற மகளிரோடு அந்தப் பாடல் சிறிதும்*

*குறைபாடு இல்லாமல் எடுத்துக்காட்ட.*

*நகை - ஒளி. பருமம் - பதினெட்டு வடங்களைக் கொண்ட மேகலை. பணிந்து - தாழ்ந்து. ஏந்து - உயர்ந்து நிற்கும். மறு - குற்றம்).*

*கந்தருவர் யாழை மீட்டிப் பாட அவர்களுடன் கந்தருவ மகளிர் பாடுகிறார்கள். அழகு, தூய்மை, சிறந்த முறையால் அமைந்த கருவியாகிய யாழ் ஆகியவற்றையுடைய அவர்கள் பாடும் பாட்டு மிக மிக இனிமையாக இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?*

*உடம்பில் வளப்பம் இல்லாத முனிவர்களைச் சொல்லிப் பிறகு மேனி வளம் பெற்ற கந்தருவர்களைச் சொன்னார். இப்படி முரண்பட்ட தோற்றங்களைக் காட்டுவது நக்கீரர் இயல்பு என்பதைத் தொடர்ந்து பார்த்து வருகிறோம் அல்லவா?*

## அவர்கள் குறை

***முதலில் தவம் செல்ல, அதனை அடுத்து இசை செல்லுகிறது. இந்த இரண்டையும் முன்னிட்டுக் கொண்டு தேவர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு முருகனால் ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறது. அதற்காகவே கூட்டமாக வருகிறார்கள் தேவர்கள். திருமால் வருகிறார்; குணி உருத்திரன் வருகிறார்; இந்திரன் வருகிறான்; முப்பது முக்கோடி தேவர்களுமே வருகிறார்கள். இந்தக் கூட்டத்தில் ஒருவனைக் காணோம். மும்மூர்த்திகளில் ஒரு மூர்த்தியாகிய பிரமனைக் காணவில்லையே.***

***அவன் இப்போது சிறையில் இருக்கிறான். அதனால் படைப்புத் தொழில் நின்று போயிற்று. அது நிற்கவே, தொடர்ந்து செய்ய வேண்டிய காத்தல் முதலிய தொழில்களும் நின்று போய்விட்டன. அடுப்பு மூட்டினால் தானே சோறு சமைக்க முடியும்? அடுப்பு மூட்டிக்கொடுக்கும் சிற்றாள் வரவில்லை. அதனால் சமையலே நடைபெறவில்லை.***

***நான்முகனைச் சிறையில் அடைத்தவன் முருகன். அந்தப் பெருமானை அணுகிப் பிரமனுடைய பிழையைப் பொறுக்க வேண்டுமென்று இரந்து வரம் பெறுவதற்காகத்தான் இந்தத் தேவர்கள் வருகிறார்கள். நேரே போனால் முருகனுக்குப் பழைய கோபம் தலைக்காட்டுமோ என்று அஞ்சி, அவனுக்கு மிகவும் உகந்த முனிவர்களையும், இசை வாணர்களையும் முன்னிட்டுக் கொண்டு வருகிறார்கள்.***

***யார் யார் எப்படி வருகிறார்கள் என்பதை அடுத்தபடி வருணிக்கிறார், நக்கீரர்.***

## காண வரும் செல்வர்கள்

*முனிவர்களையும் இசைவாணர்களையும் முன்னிட்டுக் கொண்டு தேவலோகத் தலைவர்கள் முருகனைத் தரிசித்துத் தம்முடைய குறைகளை முடித்துக்கொள்ள வருகிறார்கள். மும்மூர்த்திகள் என்று கூறும் மூவரில் ஒருவனாகிய நான்முகன் இப்போது சிறைப்பட்டிருக்கிறான். மற்ற இருவரும் இந்திரனும் இங்கே வருகிறார்கள். மூவரும் பெருஞ் செல்வர்கள்; பலருக்கும் வரம் கொடுத்து நலம் செய்யும் பெரியவர்கள். ஆயினும் இப்போது ஏழையரைப் போல முருகனிடம் தங்கள் வேண்டுகோளைக் கூறி இரந்து பெற வருகிறார்கள்.*

*முதலில் நிற்பவரை அடையாளம் தெரிகிறதா? நெடுந்தூரத்தில் வரும்போதே இன்னார் வருகிறார் என்று தெரியும்படியாக ஓர் அடையாளம் இருக்கிறது. கருடக்கொடி பளபளக்கிறது. கருடனுடைய வீரம் பெரிது. பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பார்கள். அத்தகைய பாம்புக் கூட்டம் எவ்வளவு பெரிதானாலும் அஞ்சி நடுங்கும்படி செய்கிறவன் கருடன். பாம்புகளைக் கொத்துவது கூட அவசியம் அன்று. தன் சிறகைப் படபடவென்று அவன் அடித்துக் கொண்டாலே போதும். நாகங்கள் சுருண்டு விழும். பல கோடுகளையுடைய அந்தச் சிறகுகள் கருடனுக்கு அழகாகப் பொருந்தியிருக்கின்றன. கொடிய நாகங்களும் கருடனுக்கு அஞ்சி நடுங்கும்.*

*நஞ்சுடைய நாகத்துக்கு ஒவ்வொரு பக்கத்திலும் இரண்டு இரண்டாக வாயில் நான்கு நச்சுப்பற்கள் உண்டு. அந்தப் பற்களோடு இணைந்து நஞ்சுள்ள பைகள் இருக்கின்றன. பாம்பு ஒருவரைக் கடிக்கும்போது பற்கள் அழுந்தும். நச்சுப்பையிலிருந்து நஞ்சு பல்லிலுள்ள துளையின் வழியே சென்று கடிக்கப்பட்டவன் உடம்பில் ஏறும். டாக்டர் துளையுள்ள ஊசி வழியே மருந்தை ஏற்றுவது போலப் பாம்பும் துளையுள்ள பல்லால் நஞ்சை ஏற்றுகிறது. நான்கு நச்சுப்பற்களும் காளி, காளாத்திரி, யமன், யமதூதி என்று பெயர். நஞ்சு ஒடுங்கி நிற்கும் எயிற்றில் துளை இருக்கிறது. பாம்புகள் மூச்சு விட்டாலே துன்பம் உண்டாகும்; தீக்காற்று வீசும். அத்தகைய கொடிய நச்சரவங்களும் நடுநடுங்கி விழும்படி சிறகை அடிக்கும் பறவை கருடன். அவனை உயர்ந்து தோன்றும் தம் கொடியிலே கொண்ட செல்வர் திருமால். வெற்றியும் மிடுக்கும் உடையவர்கள் கொடி கட்டிக் கொள்வார்கள். திருமாலின் சிறப்பும் பல படியாக இருந்தாலும் இங்கே அவருடைய கொடியை மட்டும் கூறி அவருடைய பெருமையைப் புலப்படுத்துகிறார் நக்கீரர்.*

**கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால்எயிற்(று)**
**அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்**
**பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்**

புள்அணி நீள்கொடிச் செல்வனும்.

*(நஞ்சோடு உள்ளே அமைந்த துளையையுடைய - வெள்ளையான பல்லையுடையனவும், நெருப்பைப்போல மூச்சுவிடுவனவும், அச்சத்தை உண்டாக்குகின்ற கடுமையான வலிமையை உடையனவுமாகிய பாம்புகள் அஞ்சி விழும்படி அடிக்கும் பல கோடுகளை உடைய வளைந்த சிறகுகளையுடைய பறவையாகிய கருடனை அணிந்த உயர்ந்த துவசத்தையுடைய திருமாலும்,*

*கடு - நஞ்சு. தூம்பி - துளை. வால் எயிறு - வெள்ளையான பல். உயிர்க்கும் - மூச்சுவிடும். அஞ்சுவரு - அச்சம் உண்டாகின்ற. வரி - கோடு. கொடுஞ்சிறை - வளைந்த சிறகு).*

*அடுத்தபடி குணி உருத்திரன் வருகிறார். அவரையும் அவருடைய துவசத்தாலே இனம் கண்டு கொள்ளலாம். அவருடைய வாகனமும் கொடியுமாக இருப்பது இடபம். தாமமே இடபமாக இருப்பதனால் அது வெள்ளை வெளேரென்று மாசு மறுவின்றி விளங்குகிறது.*

*"வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி"*

*என்பது தேவாரம். இடப்பக்க கொடியை தம் வலப்பக்கத்திலே உயரப் பிடித்து வருகிறார். அப்பெருமானுடைய வீரம் சொல்லத் தரம் அன்று. அட்டவீரட்டானம் என்று அவருடைய வீரத்தைப் புலப்படுத்தும் தலங்கள் இந்நாட்டில் இருக்கின்றன. ஆண்மை விளங்கும் திண்மையான தோளையுடையவர். அந்த வீரமூர்த்தியின் ஒரு பாகத்தில் உமாதேவியார் அமர்ந்திருக்கிறார். அதுவும் ஓர் அடையாளம். இன்னும் ஒரு சிறந்த அடையாளம் அவருக்கு உண்டு. அது அவருக்கு அமைந்த கண்கள். பொதுவாகத் தேவர்கள் யாவரும் இமையாத கண்ணையுடையவர். மகாதேவராகிய அப்பெருமான் கண்களும் இமையாதவை என்று சொல்வது பெரிய சிறப்பு அன்று. யாருக்கும் இல்லாதபடி அவர் மூன்று கண்களைப் பெற்றவர்; இடமும் வலமும் உள்ள இரண்டு கண்களோடு ஞான நேத்ரமாகிய நெற்றிக்கண்ணை உடையவர்.*

*"இமையாத முக்கண், மூவரிற் பெற்றவர்"*

*என்று இந்தச் சிறப்பைத் திருக்கோவையாரில் மாணிக்கவாசகர் எடுத்துச் சொல்கிறார்.*

*அவருடைய வலிமைக்கு ஏதாவது ஓர் எடுத்துக்காட்டாவது சொல்ல வேண்டாமா? அவர் திரிபுரத்தை எரித்தவர். வெள்ளி, பொன், இரும்பு ஆகியவற்றால் அமைந்த மதில்களையுடைய திரிபுரங்களைக் கொண்ட மூன்று அசுரர்கள், பறக்கும் அப்புரங்களால் மக்களுக்குத் தீங்கு விளைவித்தனர். தம்முடைய புன்னகையால் அவற்றை அழித்தனர். அவ்வளவு*

பெருவலிமையுடைய செல்வர் அவர். அவரும் முருகனைக் காண வருகிறார்.

வெள்ளேறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமைஅமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்

*(வெள்ளையான இடபக் கொடியைத் தம் வலப்பக்கத்தே உயர்த்தியவரும், பலரும் புகழும் திண்மையான தோளை உடையவரும், உமாதேவியார் விரும்பித் தங்கும் திருமேனியை உடையவரும், இமையாத மூன்று கண்களை உடையவரும், மூன்று மதில்களை அழித்த வலிமையிலே மிக்க செல்வரும் ஆகிய குணி உருத்திரனும்.*

*வலவயின் - வலப்பக்கத்தில். உயரிய - எடுத்த. எயில் - மதில். முருக்கிய - அழித்த. முரண் - வலிமை).*

*அடுத்தபடி தேவருக்கு அரசனாகிய இந்திரன் வருகிறான். இமையா முக்கண் என்று குணி உருத்திரனைக் கண்ணால் அடையாளம் கண்டு கொள்வது போல அவனையும் கண்ணால் இனம் கண்டு கொள்ளலாம். அவனுக்கு உடம்பெல்லாம் கண். ஆயிரம் கண்களை உடையவன் இந்திரன். நூறு யாகங்களைத் தடையின்றி முடித்தால் இந்திரபதவியைப் பெறலாம். அதனால் அவனுக்குச் சதமகன் என்ற பெயர் வழங்கும். அவனும் பெரிய வீரன்தான்; போரில் வெளிப்படையாகப் பொருது பகைவர்களை அழிக்கும் வெற்றி மிடுக்குடையவன்.*

*அவனுடைய வளமும் செல்வமும் பெரும்புகழ் பெற்றவை. போக போக்கியங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது இந்திரனது வாழ்வு. அதனால்தான்,*

*"இந்திர லோகம் ஆளும் அச்சுவை"*

*என்று தொண்டரடிப்பொடி ஆழ்வார் அதனைச் சொன்னார். அவனுடைய பதவிக்கு ஏற்ற வாகனம் அவனுக்கு இருக்கிறது. அது வெள்ளையானையாகிய ஐராவதம். மற்ற யானைகளுக்கு இரண்டு கொம்புகளே உண்டு. ஐராவதத்துக்கோ நான்கு கொம்புகள். அது நடந்து வந்தால் பார்க்க அழகாக இருக்கும். வெள்ளிமலை கால்பெற்று நடந்து வருவது போல் இருக்கும்.*

*"வெள்ளி மலைஎனவே*
*கால்வாங்கி நிற்கும் களிற்றான்"*

*என்று கந்தர் அலங்காரத்தில் அருணகிரியார் சிறப்பிப்பார்.*

*ஐராவதம் தன்னுடைய துதிக்கையை நிலத்திலே புரள விடுகிறது. அதன் பிடரியில் வீற்றிருந்து தன் வளம் தோன்ற வருகிறான். இந்திரனாகிய செல்வன்,*

நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்(து)
ஈர்இரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்

*(நூற்றைப் பத்து முறை அடுக்கியதால் வரும் ஆயிரம் கண்களை யுடையவனும், நூறாகிய பலவகை வேள்விகளை முற்றச் செய்தவனும், எதிர்நின்று பகைவர்களை அழிக்கின்ற வெற்றிச் சிறப்பை உடையவனும், நான்கு உயர்ந்த கொம்புகளையும் அழகு வாய்ந்த நடையையும் பூமியில் தாழ்ந்த பெரிய வளைந்த துதிக்கையையும் உடைய, எல்லோரும் உயர்வாகச் சொல்லும் யானையாகிய ஐராவதத்தின் கழுத்தின் மேல் ஏறியவனும் ஆகிய வளம் மலிந்த செல்வத்தையுடைய இந்திரனும்.*

*நாட்டம் - கண், வென்று அடுகொற்றம் - வஞ்சியாமல் எதிர் நின்று கொன்று பெரும் வெற்றி. மருப்பு - கொம்பு. உயர்த்த - உயர்வாகப் புகழ்ந்த. எருத்தம் - கழுத்து).*

## வரும் காரியம்

***இவர்கள் எதற்காக வருகிறார்கள்?***

***இந்த உலகத்தில் நான்கு திசையில் நின்று நான்கு தேவர்கள் காக்கிறார்கள். இந்திரன், யமன், வருணன், குபேரன் என்னும் நால்வரும் முறையே கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்னும் திசைகளிலிருந்து காவல் புரிகிறார்கள். உலகத்தில் மக்கள் வாழும் பல நகரங்கள் இருக்கின்றன. அவற்றைக் காக்கும் தெய்வங்கள் அவர்கள்.***

***திசைகளில் நின்று அவர்கள் காத்தாலும் அவர்களுக்கும் மேலதிகாரிகளாக இருந்து உலகத்தை நடத்துகிறவர்கள் மூவர். அவர்களையே மும்மூர்த்திகள் என்று சொல்வார்கள். படைத்தல், காத்தல், அழித்தல் என்று மூன்று தொழில்களையும் பிரமன், திருமால், உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளும் இயற்றுகிறார்கள். படைக்கிறவன் முதலில் தன் தொழிலைச் செய்யப் பிறகு காக்கிறவன் தன் தொழிலைப் புரிய, இறுதியில் அழிக்கிறவன் தன் தொழிலை ஆற்றுவான். அஸ்திவாரம் போட்டுச் சுவரெழுப்பி மேல்தளம் போடவேண்டும். அஸ்திவாரம் போட ஒப்புக் கொண்டவன் அதைச் செய்யாவிட்டால் மற்ற***

இரண்டு வேலைகளும் நடத்தல் முடியாது. அவற்றைச் செய்கிறவர்கள் சும்மா இருக்க வேண்டியது தான். அதுபோல, உலகத்தைப் படைக்கும் முதல் தொழிலைச் செய்கிறவன் இப்போது தன் தொழிலைச் செய்யவில்லை. அந்த நான்முகன் சிறையில் இருக்கிறான். அதனால் படைப்புத் தொழில் நடக்கவில்லை. அதற்குப் பிறகே மற்றத் தொழில்கள் நடக்க வேண்டும். படைப்புத் தொழில் நின்றதும் மற்ற இருவருக்கும் வேலை இல்லை. பழையபடி எல்லாம் நடைபெற வேண்டுமானால் பிரமன் விடுதலைபெற வேண்டும். அப்போதுதான் மூன்று மூர்த்திகளும் தத்தம் தொழிலை முறையாகச் செய்ய முடியும்.

இதனை உணர்ந்து நான்முகன் விடுதலையைக் காரணமாகக் கொண்டு இவர்கள் வருகிறார்கள். பழையபடி மூன்று மூர்த்திகளும் தலைவராக இருந்து மூன்று தொழில்களையும் இயற்றி உலகத்தை இயங்கச் செய்ய வேண்டும் என்பதே இவர்கள் விருப்பம்.

நான்முகன் தாமரையில் தோன்றியவன். நீண்ட ஆயுளை உடையவன். அவன் இன்று சிறைப்பட்டிருப்பதற்குக் காரணம், முருகனை அவமதித்தது, கயிலைக்கு வந்த நான்முகன், முருகனைக் கண்டும் வணங்கவில்லை. அவனுடைய அகந்தையை அறிந்து அதனைப் போக்க எண்ணிய முருகன் அவனை அழைத்தான். யார் என்று கேட்டான். பிரமன் என்றான். என்ன தொழில் என்று கேட்கப் படைக்கும் தொழில் என்றான். என்ன வரும் என்ற போது வேதம் வரும் என்றான், “எங்கே, சொல்” என்று முருகன் பணிக்க, “ஓம்” என்று தொடங்கினான். அந்த அளவிலே நிறுத்தி, “அதற்குப் பொருள் சொல்'' என்று சொல்லப் பிரமன் சொல்லத் தெரியாமல் மயங்கினான். அப்போது முருகன் அவன் தலையிற் குட்டிச் சிறையில் இருத்திவிட்டுத் தானே படைக்கும் தொழிலை மேற்கொண்டான் என்பது கந்தபுராணத்தின் வரலாறு.

பழங்காலத்தில் வேறு ஒரு வகையில் நான்முகன் பதவியை இழந்த வரலாறு வழங்கிவந்தது. அதைத் திருமுருகாற்றுப்படைக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் எடுத்துரைக்கிறார். சூரசங்காரம் நடந்த பிறகு, இந்திரன் தன் மகளாகிய தேவயானையை முருகனுக்குத் திருமணம் செய்வித்தான். அப்போது மனம் மகிழ்ந்த முருகன் தன் கையில் உள்ள வேலைப் பார்த்து, “நமக்கு எல்லாம் தந்தது இவ்வேல்” என்றான், அப்போது அருகில் நின்றிருந்த பிரமன், ''இவ்வேலுக்கு நான்தானே சக்தி தந்தேன்? என் படைப்புக்கு அகப்பட்டது தானே இது?” என்று சொன்னான். அது கேட்ட முருகன் “நம் கையில் இருக்கும் வேலுக்கு நீ கொடுக்கும் சக்தியும் உண்டோ? ஏன் வீணே அகங்கரிக்கிறாய்? இவ்வாறு கூறிய நீ பூமியிலே போய்க் கிடப்பாயாக!” என்று சாபமிட்டானாம். அதனால் அவன் தன் நிலையையும் தொழிலையும் இழந்து உலகத்தில் பிறந்து உழன்றானாம்.

*நான்முகன் முருகனுக்கு அபசாரம் செய்ய, அதனால் அவன் தன் நிலையையும் தொழிலையும் இழந்தான் என்பது இந்த இரண்டு வரலாறுகளுக்கும் பொதுவான கருத்து. அவனைப் பழைய நிலையில் நிறுத்தித் தன் தொழிலைச் செய்யும்படி வைக்கவும், அதன்பின் தாமும் தம் தொழில்களை இயற்றித் தம் நிலையைப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டி முருகனிடம் வருகிறார்கள். திருமாலும் குணி உருத்திரனும் இந்திரனும் பிறரும்.*

நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவன் சுட்டிக் காண்வர.

*(நாற்றிசைக் காவலர்களாகிய நான்கு பெருந் தெய்வங்களின் காவலுக்கு உட்பட்ட நல்ல நகரங்கள் நிலைபெற்ற உலகத்தைக் காப்பாற்றுகின்ற, ஒன்றாக விரும்பும் கடைப்பிடியையுடையவர்களாகிய, பலரும் புகழும் மும்மூர்த்திகளும் பழையபடியே தம்தம் தொழில்களை இயற்றித் தலைவர்கள் ஆகும்படியாக, இன்பமுறுகின்ற பூவுலகில் வந்து தோன்றி தாமரையினால் தோற்றுவிக்கப்பட்டவனும், கேடில்லாத நீண்ட ஆயுளை உடையவனுமாகிய நான்முகனாகிய ஒருவனை எண்ணி அழகு தோற்றும்படி வருகிறார்கள்.*

*நிலைஇய - நிலைபெற்ற, ஒன்றுபுரி - ஒன்றையே செய்யும். கொள்கை - கடைப்பிடி; கடமை. மூவிரும் மூவேறு தொழில்களைச் செய்தாலும் எல்லாம் உலகத்தைக் காக்கும் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டவை, ஆதலின் மூன்றும் தொடர்புடையவை. ஒன்று இல்லாவிட்டால் மற்றவை நிகழ்வதில்லை. ஏமுறு - இன்பம் அடைகின்ற. பயந்த - பெற்ற. தா - கேடு. ஊழி - வாழ்நாள். காண்வர - தோற்றம் மிகும்படி; அழகு தோற்றும்படி).*

## முப்பத்து மூவர்

***முருகனைக் காணத் தேவலோகத்திலிருந்து ஒரு பெரிய கூட்டமே வந்து கொண்டிருக்கிறது. முன்னாலே முனிவர்களையும் கந்தர்வர்களையும் பிறரையும் விட்டுப் பின்னே திருமாலும் குணி உருத்திரனும் இந்திரனும் வருகிறார்கள். அவர்களுக்குப் பின்னாலும் பெருங்கூட்டம் வருகிறது. தலைவர்கள் உலா வருவதாக இருந்தால் வாத்திய கோஷ்டி முன்னால் போகும். விருதாவளிகளை எடுப்பவர்களும் போவார்கள். பிறகு தலைவர்கள் செல்வார்கள். அவர்களுக்குப் பின்னே அதிகாரிகளும் தொண்டர்களும்***

செல்வார்கள். அவ்வாறே இந்தக் கூட்டமும் அமைந்திருக்கிறது. முன்னும் பின்னும் பெருங்கூட்டம் வர, நடுவிலே மூன்று செல்வர்களும் வருகிறார்கள்.

அவர்களுக்குப் பின்னாலே யார் வருகிறார்கள்?

முருகனிடம் தங்களுடைய குறையைச் சொல்லி நிறைவேற்றிக் கொள்வதற்காகவே அந்தச் செல்வர்கள் வருகிறார்கள். பிரபஞ்சத்தில் அவர்கள் செய்யும் தொழில் தடைப்பட்டு விட்டது. அஸ்திவாரம் போன்ற படைப்புத் தொழில் நின்று விட்டது. அதைச் செய்கிறவன் சிறையில் அடைப்பட்டுக் கிடக்கிறான். அவனை மீட்க வேண்டும். அதுதான் வருகிறவர்கள் அனைவரிடையும் உள்ள பொதுவான நோக்கம். ஆயினும் இந்தச் சமயத்தில் தங்களுக்குத் தனித்தனியே வேறு குறைகள் இருப்பதனால் அவற்றையும் முருகனிடம் சொல்லிப் போக்கிக் கொள்ளலாம் என்று ஒவ்வொருவரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரிசி வாங்க வேண்டுமென்று கடைக்குப் போனால் வீட்டிலுள்ள குழந்தை குட்டிகளுக்கு வேண்டிய சில்லறைச் சாமான்களையும், தனக்கு வேண்டிய வெற்றிலை பாக்கையும் வீட்டுத் தலைவன் வாங்கிக் கொள்கிறான். அவனுடன் செல்லும் குழந்தைகளும் தங்களுக்கு வேண்டிய தின்பண்டங்களை வாங்கிக் கொள்கிறார்கள் அல்லவா?

இங்கே மூன்று செல்வர்களையும் பின்பற்றித் தேவலோகமே கூட்டமாகத் திரண்டு வருகிறது. பெரியவர்கள் முருகனைத் தரிசனம் செய்து கொள்ளப் போகிறார்கள். அவர்களோடு போனால் எளிதிலே தங்களுக்குத் தரிசனம் கிடைக்கும் என்பது அந்தத் தேவர்களுடைய எண்ணம். நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் ஆகும் அல்லவா?

தேவர்கள் முப்பத்து முக்கோடி என்பது ஒரு கணக்கு; ஒரு கோடிக்கு ஒரு தலைவர். ஆகவே முப்பத்து மூன்று பேர்கள், அவர்களும் நான்கு பிரிவாக உள்ளவர்கள். ஆதித்தர்கள் பன்னிரண்டு பேர்கள்; துவாதசாதித்தியர்கள் என்பர். ருத்திரர்கள் பதினொருவர்; ஏகாதசருத்திரர். எட்டுத் திசைகளையும் பாதுகாவல் செய்யும் வசுக்கள் எண்மர். தேவலோக வைத்தியர்களாகிய அசுவினி தேவர்கள் இருவர். ஆக, தேவலோகத்தில் பேரதிகாரிகளாக இருக்கும் தலைவர்கள் முப்பத்து மூவர்.

தேவர்கள் ஒளிபடைத்த திருமேனியை உடையவர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு சூரியனைப் போன்ற தேசு பெற்றவர்கள். அவர்கள் மேலே சொன்ன மூன்று பெருந்தலைவர்களையும் பின்பற்றி வருகிறார்கள்.

பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைக் பதினொரு மூவரொடு

*(சூரியனைப் போலத் தேசுடையவர்களாகத் தோன்றும் மாறுபாடு இல்லாத தோற்றத்தைப் பெற்ற, நான்கு வேறுபட்ட இயற்கையையுடைய முப்பத்து மூவரோடு - பிறரும் வருகிறார்கள் என்று சொல்ல வருகிறார்).*

*நச்சினார்க்கினியர், 'பகலில் தோன்றும் இகலில் காட்சி' என்பதற்கு வேறு ஒரு பொருள் கூறுகிறார். 'ஒரு பொருள் பலவாறு பகுத்துக் காண்டற்கண் வேறுபடத் தோன்றும் தம்முள் மாறுபாடு இல்லாத அறிவினையுடைய' என்பது அவர் உரை. பகல் என்பதற்குப் பகுத்து காணுதல் என்றும், காட்சி என்பதற்கு அறிவு என்றும் அவர் பொருள் கொண்டார். பொருள்களின் உண்மையை ஆராயும்போது அவர்கள் முப்பத்து மூன்று பேரும் ஒரே மாதிரியான முடிவுக்கு வருவார்களாம். அவர்களுக்குள் கருத்து வேறுபாடு (இகல்) இராதாம்.*

*உலகம் முழுவதும் இயங்குவதற்கு உரிய வேலைகளைச் செய்ய நியமிக்கப் பெற்றவர்கள் இந்த முப்பத்து மூன்று தேவர்கள். முப்பத்து மூன்று மந்திரிகளை யுடைய மந்திரி சபை போன்ற குழு இது. இந்தக் குழுவில் ஆளுக்கு ஒரு கருத்து இருந்தால் குழுவில் வேறுபாடு உண்டாகும்; ஆட்சி நன்கு நடைபெறாது. எல்லோரும் ஒருமித்த மனப்பாங்குடன் இருந்தால்தான் நிர்வாகம் நன்கு நிகழும். இந்த முப்பத்து மூவரிடமும், அந்த ஒருமைப்பாடு இருக்கிறதாம். இது நச்சினார்க்கினியர் கருத்து.*

*ஆதித்தர், ருத்திரர், வசுக்கள், மருத்துவர் என்று நான்கு சிறு குழுக்களாக இருப்பதால், 'நால் வேறு இயற்கை' என்று சொன்னார். மொத்தத்தில் அவர்கள் பதினொரு மூவர்; முப்பத்து மூன்று பேர்.*

## ***பதினெண் கணம்***

***திருமால் முதலிய மூன்று செல்வர்களையும் அடுத்து, அவர்களின் கீழ் நின்று அதிகாரம் செலுத்தும் முப்பத்து மூவர் வருகின்றனர். அவர்களை அடுத்துத் தேவர்களும் மற்றவர்களும் வருகிறார்கள். அவர்கள் பதினெட்டுப் பிரிவாக உள்ளவர்கள். அவர்களைப் பதினெண் கணத்தினர் என்று சொல்வர். அவர்களும் உயர்ந்த நிலையை உடையவர்கள்.***

**ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்**

***(பதினெண் வகையாகிய உயர்ந்த நிலையைப் பெற்றவர்களும்).***

***பதினெண் கணங்களுக்கு வகை வெவ்வேறாகக் கூறுவர்.***

நச்சினார்க்கினியர் தேவர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், கிம்புருடர், இயக்கர், விஞ்சையர், இராக்கதர், கந்தருவர், சித்தர், சாரணர், பூதர், பைசாசர், தாராகணம், நாகர், ஆகாசவாசிகள், போக பூமியோர் என்று கூறுவார். 'பிறவாறும் உரைப்பர்' என்று அவரே எழுதியுள்ளார்.

இந்தப் பதினெண் கணத்தைப் பற்றிய செய்தி புறநானூற்றிலும் வருகிறது. அந்நூலின் கடவுள் வாழ்த்தில் சிவபெருமான் அணிந்திருக்கும் பிறையைப் பதினெண் கணத்தினரும் துதித்து வழிபடுகிறார்கள் என்று பாரதம் பாடிய பெருதேவனார் பாடுகிறார்.

"அப்பிறை
பதினெண் கண்ணும் ஏத்தவும் படுமே"

என்பது அப்பகுதி. அதன் உரையாசிரியர், 'பதினெண் கணங்களாவார்; தேவரும் அசுரரும் முனிவரும் கின்னரரும் கிம்புருடரும் கருடரும் இயக்கரும் இராக்கதரும் கந்தருவரும் சித்தரும் சாரணரும் வித்தியாதரரும் நாகரும் பூதமும் வேதாளமும் தாராகணமும் ஆகாசவாசிகளும் போக பூமியோரும் என இவர். பிறவாறும் உரைப்பர்' என எழுதினார்.

சிலப்பதிகாரத்தில் இந்திர விழவூர் எடுத்த காதையில் காவிரிப் பூம்பட்டினத்தின் விழாக்காட்சிகளை இளங்கோவடிகள் வருணிக்கிறார். எல்லாத் தெய்வங்களுக்கும் சிறப்பு நடைபெறுகிறதாம். முப்பத்து மூன்று தேவர்களுக்கும் பதினெட்டுக் கணங்களுக்கும் விழா எடுக்கிறார்களாம்.

"நால்வகைத் தேவரும் மூவறு கணங்களும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறுவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்"

இங்கே வரும் மூவறு கணங்களுக்கு வகை கூற வந்த அடியார்க்கு நல்லார் இரண்டு பழைய வெண்பாக்களை மேற்கோளாகக் காட்டுகிறார். அவை வருமாறு:

"கின்னரர் கிம்புருடர் விச்சா தரர்கருடர்
பொன்னமர் பூதர் புகழியக்கர் - மன்னும்
உரகர் சுரர்சா ரணர்முனிவர் மேலாம்
பரகதியோர் சித்தர் பலர்"

"காந்தருவர் தாரகைகள் காணாப் பசாசகணம்
ஏந்துபுகழ் மேய இராக்கதரோ - டாய்ந்ததிறல்
போகா இயல்புடைய போகபுவி யோருடனே
ஆகாச வாசிகளா வார்"

*தொல்காப்பியப் பொருளதிகார உரையில் பேராசிரியர் 'பேயும் பூதமும் பாம்பும் ஈறாகிய பதினெண்கணம்' என்றும், தக்கயாகப் பரணி உரையாசிரியர், 'பதினென்கணங்களாவன தேவகணம், பிதிரர்கணம் முதலியன' என்றும் எழுதுவர்.*

*முப்பத்து மூன்று தேவர்களும் அவர்களுக்குப்பின் பதினெண் கணத்தினரும் ஆவினன்குடி முருகனைத் தரிசிக்க வருகிறார்கள். இந்தப் பெருங்கூட்டத்தில் உள்ளவர்களைத் தனித்தனியே அடையாளம் காட்ட முடியுமா? ஆகவே பொதுவாக அவர்களைப் பற்றிய சில செய்திகளைச் சொல்கிறார் நக்கீரர்.*

*எல்லோரும் ஒளியுடைய மேனி படைத்தவர்கள். வானத்தில் கணக்கில்லாத நட்சத்திரங்கள் மினுக்கு மினுக்கென்று காட்சி தருவதைப் போல அவர்கள் விளங்குகிறார்கள். கணக்குக்கு வாராத கூட்டம்; ஒளி படைத்த மேனியையுடைய கூட்டம். அந்த இரண்டுக்குமே நட்சத்திரங்கள் உவமையாகின்றன.*

மீன்பூத் தன்ன தோன்றலர்.

*(விண்மீன்கள் ஒளியுடன் விளங்குவதைப் போன்ற தோற்றத்தை உடையவர்கள்).*

*அவர்கள் முருகனைக் காணவேண்டும் என்ற ஆர்வத்தோடு வருகிறார்கள்; தலைவர்களோடு சேர்ந்து போனால் தான் தரிசனம் கிடைக்கும்; பின் தங்கி விட்டால் கிடைக்காமல் போனாலும் போகும். ஆதலால் மிக்க வேகமாக வருகிறார்கள். மீன்கள் நிரம்பிய இடமாகிய கடலின் மேலே காற்று வீசினாற் போன்ற வேகத்தையுடையவராக அவர்கள் வருகிறார்கள்.*

மீன்சேர்பு
வளிகிளர்ந்து அன்ன செலவினர்.

*(மீன்கள் உலாவுகின்ற இடத்தைச் சேர்ந்து காற்று எழுந்தால் ஒத்த வேகமான நடையையுடையவர்கள். மீன் : ஆகுபெயர்).*

*இவ்வாறு வருகிறவர்கள் பெரிய வலிமையை உடையவர்கள். ஏழைகள் மெலிவுடன் பணக்காரர்களைத் தேடிச் செல்வது போல வரவில்லை. பணக்காரர்கள் அரசியல் அதிகாரிகளைப் பார்க்க வருகிறது போல வருகிறார்கள். பணக்காரர்களாக இருந்தால் என்ன? அரசியல் ஆணைக்கு முன் எம்மாத்திரம்?*

*இங்கே வருகிறவர்கள் இயல்பாகவே பெருவலிமையை உடையவர்கள். காற்றும் நெருப்பும் கலந்து அடித்தால் அவற்றின் முன் ஏதாவது நிற்க முடியுமோ? அந்தத் தீயைப் போன்ற வலிமையை உடையவர்கள்.*

வளியிடைத்
தீஎழுந்த தன்ன திறலினர்.

*(காற்று வீசும் பொழுது தீ எழுந்தாற் போன்ற வலிமையை உடையவர்கள்).*

*“வேகமாகப் போ!”*

*“என்ன இப்படித் தள்ளுகிறாய்?”*

*“அதோ நம் தலைவர் எவ்வளவு தூரம் முந்திப் போய்விட்டார் நீ மெல்ல நகருகிறாயே!”*

*“சரிதான், போ”*

*இப்படி வேகமாகப் போகும் கூட்டத்தில் மக்கள் பேசுவதை நாம் கேட்டிருக்கிறோம். ஆவினன்குடிக்கு யாத்திரை வரும் அந்தக் கூட்டத்தினரும் பேசிக் கொள்கிறார்கள். பேச்சா அது? இடிக்குரல் அல்லவா? எல்லோருக்கும் முன்பே போகவேண்டும் என்று ஒவ்வொருவருக்கும் ஆத்திரம். பெருங்கூட்டத்தில் உரத்துப் பேசினால்தானே காது கேட்கும்? அதனால் அவர்கள் உரக்கக் குரல் கொடுக்கிறார்கள். நெருப்புப் பிறக்கும்படி மேகங்கள் மோதி இடி இடிக்கிறது போல இருக்கிறது அவர்களுடைய குரல்.*

தீப்பட
உரும்இடித் தன்ன குரலினர்

*(தீ உண்டாகும்படியாக இடி இடித்தாற் போன்ற குரலையுடையவர்களாகி - வருகிறார்கள்)*

*நான்முகனைச் சிறை மீட்க வேண்டுமென்றால் தலைவர்கள் மாத்திரம் சென்றால் போதாதோ? இவர்கள் ஏன் போகவேண்டும்?*

*அரசாங்கத்தினால் ஏதேனும் ஒரு காரியம் ஆக வேண்டுமானால் சில தலைவர்கள் மட்டும் கையெழுத்திட்டு விண்ணப்பம் அனுப்பவதில்லை. அந்தக் காரியம் மிகவும் அவசியமானது. அவசரமானது என்பதைக் காட்டுவதற்காகப் பொதுமக்களுடைய கையெழுத்துக்களையும் வாங்கி அனுப்புவார்கள். தலைவர்கள் மட்டும் கையெழுத்திட்டு அனுப்பும் மனுவைவிட இந்த மனுவுக்கு வலிமை அதிகம். அவ்வாறே இங்கே தாம் சாதிக்க விரும்பிச் செல்லும் காரியத்திலே பலருக்கும் சிரத்தை உண்டு என்று காட்டும் பொருட்டு, இத்தனை கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு வருகிறார்கள் பெருந்தலைவர்கள்.*

*அதோடு, அவரவர்களுக்கு முருகனைத் தரிசனம் செய்ய வேண்டும் என்றும் ஆசை. இந்தச் சமயத்தில் அதனை எளிதில் நிறைவேற்றிக்*

*கொள்ளலாம் என்று புறப்பட்டிருக்கிறார்கள். அன்றியும் அவரவர்களுக்கே உரிய சில குறைகளும் உண்டு. அவற்றையும் முருகனிடம் விண்ணப்பித்துக் கொள்ளலாமே, இதை நக்கீரர் சொல்கிறார்.*

விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காண.

*(எல்லோருக்கும் பொதுவாக உள்ள பெரிய குறையைத் தீர்த்துக் கொள்வதோடு, அதன் சார்பில் தாம் பெறவேண்டியவற்றைத் தங்கள் தங்கள் முறையிலே நின்று பெற்றுக் கொள்ளும் பொருட்டு (மேலே சொன்ன யாவரும்) ஆகாயத்தே இயங்கிக் கொண்டு வந்து ஒருங்கே தரிசனம் செய்து கொள்கிறார்கள். அப்படி அவர்கள் தரிசித்துக் கொள்ளும்படி முருகன் ஆவினன் குடியில் எழுந்தருளியிருக்கிறான் என்று சொல்ல வருகிறார்.*

*விழுமிய - மேலான, குறை - காரியம். மருங்கில் - சார்பில். கொண்மார் - கொள்ளும் பொருட்டு. அந்தரக் கொட்பினர் - ஆகாசத்தில் சுழன்று வருகிறவர்கள். உடன் - ஒருங்கே).*

*தங்களுக்கு உற்ற காரியங்களில் மேலானது, யாவருக்கும் பொதுவானது, விழுமிய குறை, நான்முகனைச் சிறையினின்றும் விடுவிப்பது, அதனை 'விழுமிய உறு குறை' என்றார். 'நான்முக ஒருவற் சுட்டியது' அது. ஆனால் அதற்குமேல் அதனைச் சார்ந்து தாம் பெற வேண்டிய முறையான சில குறைகளும் அவர்களுக்குத் தனித்தனியே உண்டு. அவற்றையும் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற எண்ணத்தோடு வருகிறார்களாம்.*

*இந்தப் பெருங்கூட்டம் வந்து தரிசித்துக் கொள்ளும்படி முருகன் திருவாவினன்குடியில் எழுந்தருளியிருக்கிறான்; தேவசேனையம்மையாருடன் எழுந்தருளியிருக்கிறானாம்.*

*முதலிலேயே அந்தப் பெருமாட்டியை, "மறுவில் கற்பின் வாணுதல்" என்று குறிப்பிட்டதைப் பார்த்தோம். களவுக்காதல் இல்லாமலே கற்புக் காதல் செய்த பிராட்டியாதலின் அவ்வாறு சொன்னார். இங்கும் அப்படியே சொல்கிறார். 'கேடு இல்லாத பதிவிரதத்தையுடைய மடந்தை' என்கிறார்.*

தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன்குடி அசைதலும் உரியன்; அதாஅன்று.

*(கேடு இல்லாத விரதத்தையுடைய மடந்தையாகிய தேவசேனையோடு சில காலம் திருவாவினன்குடியில் தங்கியிருக்கும் செயலையும் உடையவன்; அது மட்டும் அன்று).*

*கொள்கையென்பது கடைப்பிடி அல்லது விரதத்தைக் குறிக்கும்; இங்கே பதிவிரதமாகிய கற்பைக் குறித்தது, கற்புமணப் பிராட்டியாகிய தேவகுஞ்சரியுடன் சில காலம் திருவாவினன்குடியில் முருகன் எழுந்தருளியிருப்பான் என்று மூன்றாவது படைவீட்டைச் சொல்லிவிட்டு, அடுத்த படை வீட்டைச் சொல்லத் தொடங்குகிறார் நக்கீரர்.*

பகலில் தோன்றும் இகல்இல் காட்சி
நால்வேறு இயற்கைக் பதினொரு மூவரொ(டு)
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்,
மீன்பூத்து அன்ன தோன்றலர், மீன்சேர்பு
வளிகிளர்ந்து அன்ன செலவினர், வளிஇடைத்
தீயெழுந்து அன்ன திறலினர், தீப்பட
உரும்இடித்து அன்ன குரலினர், விழுமிய
உறுகுறை மருங்கின்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துஉடன் காணத்
தாஇல் கொள்கை மடந்தையொடு சில்நாள்
ஆவி னன்குடி அசைதலும் உரியன்; அதாஅன்று

## ஆவினன்குடியும் பழனியும்

*திருவாவினன் குடியென்பது, இன்று பழனியென்று புகழ்பெற்று விளங்கும் தலம். இப்போது மலைமேலுள்ள திருக்கோயிலைப் பழனியென்றும், அடிவாரத்திலுள்ள திருக்கோயிலைத் திருவாவினன்குடி என்றும் வழங்குகின்றனர். நகருக்கும் பழனியென்ற பெயரே இப்போது வழங்குகிறது.*

*பழங்காலத்தில் அந்த ஊருக்கு ஆவினன்குடி என்று பெயர். ஆவியர்குடி என்பது குறுநில மன்னர்களின் குடிகளில் ஒன்று. அவர்கள் அரசாண்டு வந்த இடம் இது. கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய பேகன் இந்தக் குடியில் தோன்றியவன். வையாவிக் கோப்பெரும் பேகன் என்பது அவன் முழுப்பெயர். ஆவி, வையாவி என்னும் இரண்டும் அக்குடிக்கு உரிய பெயர். அவர்கள் வாழ்ந்த இடத்தை ஆவினன்குடி என்றும் வையாவியூர் என்றும் வழங்கினர். வையாவிபுரி என்றும் கூறுவதுண்டு. பழனியின் மற்றொரு பெயராகிய வையாபுரி என்பது வையாவிபுரி என்பதன் திரிபேயாகும். நாளடைவில் வையாவிபுரி வையாவூர் ஆகி அதை உள்ளிட்ட நாடு வைகாவூர் நாடு என்று ஆகிவிட்டது. "வைகாவூர் ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே" என்று இந்த நாட்டையும் ஊரையும் அருணகிரியார் பாடுகிறார்.*

*பொதினி என்பது பிறகு பழனியென்று மருவியது. பழங்காலத்தில் மலையின் மேலும் கோயில் இருந்தது என்று சங்க நூல்களால் தெரிய வருகிறது. பேகனுடைய குலதெய்வம் முருகன்.*

*பிற்காலத்தில் பழனிக்குப் புராணம் ஒன்று எழுந்தது. திருவாகிய இலக்குமியும் , ஆவாகிய காமதேனுவும், இனனாகிய கதிரவனும் பூசித்தமையால் திருவாவினன்குடி என்று பெயர் வந்ததென்றும், தம்மை வலம் வந்த விநாயகருக்குச் சிவபெருமான் மாங்கனியைக் கொடுத்து விட்டு உலகை வலம் வந்த முருகனுக்குக் கொடுக்காததனால் அவன் சினந்து இம்மலைமேல் வந்து நிற்க, அவனைத்தேடி வந்த சிவபெருமான், "பழம் நீயே" என்று கூற, அதுவே காரணமாக மலைக்குப் பழம் நீ என்று பெயர் வந்தது. அதுவே பழநியாயிற்றென்றும் புராணம் கூறும்.*

*மலையின்மேலும் அடிவாரத்திலும் திருக்கோயில்கள் இருப்பதைத் திருச்செங்கோடு, திருக்கழுக்குன்றம் முதலிய இடங்களில் காணலாம். அவ்வாறு திருவாவினன்குடியாகிய பழனியம்பதியிலும் இருக்கின்றன.*

*இத்தலத்திற்குப் பல திருப்புகழ்ப்பாக்கள் உண்டு. தலபுராணத்தையன்றி இரண்டு பிள்ளைத் தமிழ்களும் ஒரு பள்ளும் இருக்கின்றன. தண்டபாணி சுவாமிகள் பழனித் திருவாயிரம் என்ற நூலைப் பாடியிருக்கிறார். பழனி இரட்டைமணி மாலை ஒன்று உண்டு. இவற்றையன்றிக் கும்மி, கீர்த்தனங்கள் முதலிய இசைப் பாடல்களும் உண்டு.*

*இத்தலம் முன் காலத்தில் கொங்கு நாட்டைச் சார்ந்திருந்தது; இப்போது திண்டுக்கல் மாவட்டத்தில் சேர்ந்திருக்கிறது.*

**பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனார் உரை**

*இனி 'சீரை தைஇய' என்பது தொடங்கி, 'ஆவினன்குடி அசைதலும் உரியன்' என்னுந்துணையும் ஒரு தொடர். இதன்கண் முனிவர்களும் தேவர்களும் திருமால் முதலிய கடவுளரும் தமது அருள் வேண்டி வந்து தொழ முருகப்பெருமான் திருவாவினன்குடி என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருத்தலை அறிவுறுத்துகின்றார்.*

### *திருவாவினன் குடி*
### *துனியில் காட்சி முனிவர்*

*(125-137) :* **அதாஅன்று ................. முற்புக**

***பொருளுரை :*** ***அதாஅன்று - அத் திருச்சீரலைவாயையல்லாமலும், சீரை தைஇய உடுக்கையர் - மரவுரியை உடையாகச் செய்த உடையினை***

*உடையவரும், சீரொடு வலம்புரி புரையும் வால் நரை முடியினர் - அழகோடு வடிவாலும் நிறத்தாலும் வலம் புரிச்சங்கினை ஒத்த வெள்ளிய நரைமுடியினை உடையவரும், மாசு அற இமைக்கும் உருவினர் - எக்காலத்தும் நீராடுதலின் அழுக்கற விளங்கும் வடிவினை உடையவரும், மானின் உரிவை தைஇய ஊன்கெடு மார்பின் என்பு எழுந்து இயங்கும் யாக்கையர் - கருமானின் தோல்போர்த்த நோன்பாலே விட்ட பட்டினியால் தசைகெடுகின்ற மார்பின்கண் எலும்புகள் கோவை தோன்றி உலவும் உடம்பினை உடையவரும், நன்பகல் பலவுடன் கழிந்த உண்டியர் - எப்பொருளும் நுகர்தற்கு நன்றாகிய பகற்பொழுதுகள் பலவும் சேரக் கழிந்த உணவினையுடையவரும், இகலொடு செற்ற நீக்கிய மனத்தினர் - மாறுபாட்டோடே நெடுங்கால நிற்கும் செற்றத்தினையும் போக்கிய மனத்தை உடையவரும், மாவதும் கற்றோர் அறியா அறிவினர் - பலவற்றையும் கற்றோரும் சிறிதும் அறியப்படாத இயல்பான அறிவினையுடையவரும், கற்றோர்க்குத் தாம் வரம்பு ஆகிய தலைமையர் - பலவற்றையும் கற்றோர்க்கும் தாம் எல்லையாகிய தலைமையை உடையவரும், காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியர் - அவா வோடே கடிய சினத்தையும் போக்கின அறிவினையுடையவரும், இடும்பை யாவதும் அறியா இயல்பினர் - தவத்தான் மெய்வருத்தம் உளவேனும் மனத்தான் வருத்தம் ஒருசிறிதும் அறியப்படாத இயல்பினையுடையவரும், மேவரத் துனியில் காட்சி முனிவர் முற்புக - பொருந்துதல் வரும்படி ஒருவருடனும் வெறுப்பில்லாத நல்ல அறிவினையுடையவரும் ஆகிய முனிவர் முன்னே செல்லா நிற்ப;*

***கருத்துரை :*** ***மரவுரியை உடுத்தவரும், வலம்புரிச் சங்கையொத்த அழகிய நரைமுடியை உடையவரும் அழுக்கின்றி விளங்கும் திருமேனியை உடையவரும், கருமானின் தோலினைப் போர்த்தவரும், நோன்பாலே பட்டினி விட்டமையால் தசைகெட்ட மார்பின்கண் எலும்பின் கோவை இயங்கப் பெற்றவரும், பலநாள்கள் ஒருங்கே உண்ணாது கிடந்து இடையே உண்ணும் உணவினையுடையவரும், மாறுபாட்டோடே செற்றத்தையும் போக்கின மனத்தையுடையவரும், கற்றோரானும் அறியப்படாத அறிவினை உடையவரும், கற்றோர்க்குத் தாம் எல்லையாகிய தலைமையுடையவரும், அவாவுடனே - சினத்தையும் போக்கிய அறிவினையுடையவரும், தவத்தானே உளவாம் மெய்வருத்தம் உளவேனும், மனத்தான் வருத்தம் சிறிதும் அறியப்படாத இயல்பினையுடையவரும், ஒருவருடனும் வெறுப்பில்லாத நல்லறிவினை யுடையவரும் ஆகிய முனிவர் முற்படச் செல்லாநிற்ப என்பதாம்.***

***அகலவுரை :*** *சீரை - மரவுரி. சீரை தைஇய உடுக்கையர் என்றதற்குச் சீரையைக் காவிக்கல்லைக் கரைத்த நீரிற்றோய்த்து உடுத்த உடையினர் என்பாருமுளர். இதற்குச் சீரை என்பதற்குத் துகில் என்று பொருள்கோடல்*

வேண்டும். சீர் - அழகு. வலம்புரியை அழகானன்றி வடிவானும் நிறத்தானும் ஒக்கும் முடியினர் என்றவாறு. நெடுங்காலந் தவத்துறை நின்றார் என்பது தோன்ற நரைமுடி கூறினார். மாசு - ஈண்டுப் புறவுடலின்கண் அழுக்கு. முனிவர் ஒருநாளில் பலகால் நீராடும் வழக்கமுடையராதலின் அவர் புறவுடலும் மாசற்றுத் திகழ்வதாயிற்றென்க. இதனை,

> "நீர்பலகான் மூழ்கி நிலத்தசைஇத் தோலுடையாச்
> சோர்சடை தாழச் சுடரோம்பி - ஊரடையார்
> கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
> வானகத் துய்க்கும் வழி" (புறப்-வெ-வாகை-கசா)

என்பதனானும் அறிக.

இமைத்தல் - விளங்குதல். மான் - ஈண்டுக் கருமான். கருமானின் தோலை முனிவர் போர்த்துக்கோடல் வழக்கம். இதனைக் கிருட்டினாசனம் என்பர் வடநூலார். "நீர்பலகால்" என்ற வெண்பாவில் "தோலுடையா" என்று வருதலும் அறிக. உரிவை - தோல். உரிவை தைஇய மார்பு; ஊன் கெடுமார்பு எனத் தனித்தனி கூட்டுக. ஊன் கெடுதற்கேது நோன்புகளாலே பட்டினிவிடுதல் என்க. பட்டினியால் மார்பின்கண் தசைகெட்டமையின் என்புகோவை தோன்றிற்று என்க. முனிவர் மூச்சினை உள்வாங்கி வெளியே விடுந்தோறும் அவ்வென்பு உயர்ந்தும் அமிழ்ந்தும் இயங்கிற்றென்க. பல பகல்கள் சேரக் கழித்துப் பின்னர் உண்ணும் உணவினையுடையார் என்றபடி. இதனை "மாதோபவாசம்" என்பர் நச்சினார்க்கினியர். அஃதாவது ஒருதிங்கள் இடையறாது பட்டினி விடுமொரு நோன்பென்க. இதனால் முனிவர் தம்முடலைப் பொருளாகக் கொண்டு பேணாது தந்தவத்திற்குக் கருவியாமளவே அதனைப் போற்றுவர் என்பது புலனாதல் அறிக.

> "மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
> உற்றார்க் குடம்பும் மிகை" (குறள் - 345)

என்னுந் தமிழ்மறையானும் முனிவர்க்கு உடம்பு மிகையாதலறிக. இதனால் இவ்வுடம்பை யான் என்னும் அகப்பற்றிலாமை கூறினாராயிற்று. யான் என்னும் செருக்கிற் கேதுவாகிய உடம்பும் உருவுடம்பும் அருவுடம்பும் என இருவகைப்படும். ஆதலின், இதுகாறும் அம் முனிவர் புறவுடம்பியல்பு கூறுமாற்றானே அவர்க்கதன்கண் பற்றின்மை காட்டி இனி அருவுடம்பாகிய அவர்தம் மனவியல்பினைத் தெரிந்தோதுகின்றார் என்க.

இகல் - மாறுபாடு. செற்றம் - பகைமைக்குணம்; நெடுங்காலம் நிகழ்வது. இவ்விரண்டும் வெகுளியினின்றும் தோன்றும் தீக்குணங்கள் என்க.

'யாவதும் கற்றோர் அறியா அறிவினர்' என்றது, இறையறிவு கைவரப் பெற்றோர் என்றபடி. என்னை? உலகறிவு உயிர் அறிவு இறை அறிவு என்னும் மூன்றனுள் உலகறிவும் உயிர் அறிவுமே கற்றோர் எய்திய அறிவாக, ஏனை இறையறிவு அருளாலே எய்தப் பெறுதலின், அவ்வறிவினையுடையார் என்பார், 'கற்றோர் யாவதும் அறியா அறிவினர்' என்றார். இவற்றை, பாசஞானம் பசுஞானம் பதிஞானம் என்று கூறுப. இதனை,

"பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடிப் பாத
நீழற்கீழ் நில்லாதே" (சித்தியார் சுபக் - 212)

எனவரும் சிவஞானசித்தியாரானும் உணர்க.

கல்விப்பயன் அஃதன்றிப் பிறிதில்லையாகலின், இறையறிவு கைவரப்பெற்று இம்மையிலேயே வீட்டின்பம் மருவப்பெற்ற இம்முனிவரே கற்றோர்க்கு எல்லையாகிய தலைமையுடையோராயினர். இவரைச் சீவன் முத்தர் என்ப. சீவன் முத்தராவார் இம்மையிலே வீடு பேறடைந்தோர் என்க. என்னை?

"புண்ணியமேல் நோக்குவிக்கும் பாவங்கீழ் நூக்கும்
புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னாலே
நண்ணியஞா னத்தினால் இரண்டினையும் அறுத்து
ஞாலமொடு கீழ்மேலும் நண்ணானாகி
எண்ணுமிக லோகத்தே முத்திபெறும் இவன்றான்
எங்கெழில்என் ஞாயிறுஎமக் கென்றுகுறை வின்றிக்
கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து காயம்
கழிந்தக்கால் எங்குமாய்க் கருதரன்போல் நிற்பன்"
(சித்தியார் சுபக் - 283)

என்பவாகலின்;

காமம் வெகுளி மயக்கம் என்னும் முக்குற்றங்களின் நாமமும் கெட்ட மெய்க்காட்சியாளர் என்பார் காமமொடு கடுஞ் சினங்கடிந்த காட்சியர் என்றார்.

"காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய்" (குறள். 360)

என்றார் பொய்யில் புலவரும். வினையெல்லாம் இவற்றின் காரியங்களாகலின், இவர் இருவினையறுத்துத் தூயராய் வினையினீங்கிய விளங்கிய அறிவின் முனிவர் என்பார் காட்சியர் என்றார். காட்சி - ஈண்டு மெய்க்காட்சி என்க.

"உலகினில்என் செயலெல்லாம் உன்விதியே நீயே

*உள்நின்றும் செய்வித்தும் செய்கின்றாய் என்றும்*
*நிலவுவதோர் செயலெதுக்கு இன்றுன் செயலே என்றும்"*

*நினைவாராய், இறையருள் வெள்ளத்தே மூழ்கி யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்னும் இக் கோணை ஞான எரியால் வெதுப்பித் தாம் செவ்வே நிற்கும் மெய்க்காட்சியாளராகலின் 'இடும்பை யாவதும் அறியா இயல்பினர்' என்றார்.*

*துனி - வெறுப்பு. தோற்றம் என்ற பொருளும் உண்டு. திருமால் முதலிய தேவர்களினும் இத் துனியில் காட்சி முனிவரே முருகப் பெருமானாற் பெரிதும் விரும்பப்படுதல் பற்றி முனிவர் முற்புக என்றார்.*

*இனிச் 'சீரை தைஇய உடுக்கையர்' என்பது முதல், 'முனிவர் முற்புக' என்னுந் துணையும் தொடர்ந்த இவ்வடிகளில், இறைபணிநின்ற சான்றோருடைய இயல்பெல்லாம் தன்மை நவிற்சியாகத் தெரிந்தோதி, ஓதுவோருளத்தே தூய முனிவர் கூட்டத்தைக் கண்கூடாகத் தோற்றுவித்த நல்லிசைப் புலமையின் மாண்பினையும் ஓர்ந்தின்புறுக.*

### யாழியக்கும் கந்தருவர் மாண்பு

**(138-142) : புகை ................. இன்னரம்புளர**

***பொருளுரை :*** *புகை முகந்தன்ன மாசுஇல் தூவுடை - புகையை முகந்து கொண்டாலொத்த அழுக்கேறாத தூய உடையினையும், முகைவாய் அவிழ்ந்த தகை சூழ் ஆகத்து - மொட்டாம் நிலைமையினின்றும் வாய் நெகிழ்ந்த மாலை சூழ்ந்த மார்பினையும், செவி நேர்பு வைத்த செய்வுறு திவவின் நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின் - எஃகுச் செவியாலே இசையை அளந்து நரம்பைக் கட்டின சுற்றுதலுறும் வார்க்கட்டினையுடைய நல்ல யாழின் இசையிலே பயின்ற நன்மையையுடைய நெஞ்சாலே, மென்மொழி மேவலர் இன் நரம்பு உளர - எக்காலமும் மெல்லிய மொழியே பேசுதல் பொருந்திய கந்தருவர் இனிய யாழ் நரம்பை இயக்குதற் பொருட்டு.*

***கருத்துரை :*** *புகையை முகந்து கொண்டாலொத்த நுண்ணிய ஆடையுடையோரும், மொட்டலர்ந்த மாலை சூழ்ந்த மார்பினை உடையோரும், தமது எஃகுச் செவியாலே இசையை அளந்து பண்ணுறுத்திய வார்க்கட்டினையுடைய யாழின் இசையிலே பயின்று பயின்று நன்மையுடைத்தாகிய நெஞ்சுடைமையாலே எக்காலமும் இனிய மென்மொழியே பேசும் இயல்பினையுடையோரும் ஆகிய கந்தருவர் இனிய யாழ் நரம்பினை இயக்குதற் பொருட்டு என்பதாம்.*

***அகலவுரை :*** *இயக்குதற் பொருட்டு மகளிரொடு விளங்க எனக் கூட்டுக.*

*புகை என்பதற்குப் பாலாவி எனலுமாம். என்னை? ஆடையின் நுண்மைக்கும் நிறத்திற்கும் ஈண்டுப் புகை உவமையாகலான் ஏனைப் புகைகள் பருப்பொருளாய்க் கருமை முதலிய நிறமுடையனவாதலும் உண்மையின் அவை உவமையாகா என்க. "பாலாராவிப் பைந்துகிலேந்தி" என்று சீவக சிந்தாமணியினும் (க0கூசா) 'பானீர் நெடுங்கடற் பனிநா ளெழுந்த மேனீ ராவியின் மெல்லிதாகிய கழுமடிக் கலிங்கம்' என்று பெருங்கதையிலும் (உ.எ: கருச. சு) வருதல் காண்க. "புகை விரிந்தன்ன பொங்கு துகில்" (புறம் - ஙகஅ:உ) "ஆவியந்துகில்" (சீவக - அஎங) "ஆவியன்ன பூந்துகில்" (சீவக - கூஎ) ஆவி நுண்டுகில்" (பெருங். கூ - சா : சாச) எனப் பிறாண்டும் வருதலறிக.*

*மாசில் தூவுடை என்பதற்கு, "தெய்வத் தன்மையால் அழுக்கேறாத உடை" என்பர் நச்சினார்க்கினியர். முகை - அரும்பு. தகை - தகைக்கப்படுவது; கட்டப்படுவது என்னும் பொருட்டாய் மாலைக்கு ஆகுபெயராய் நின்றது. ஆகம் - மார்பு.*

*செவி - ஈண்டுக் கூர்மையுடைய செவி என்க. இசையை நுண்ணிதின் உணர்தற்குரிய கூரிய செவி என்றவாறு. எஃகுச் செவியென்பர் நச்சினார்க்கினியர். எஃகு - கூர்மை; "ஊராண்மை மற்றதன் எஃகு" என்னும் திருக்குறளிலும் அஃதப் பொருட்டாதலறிக. தோற்செவி, மரச்செவி, எஃகுச் செவி எனச் செவியை மூவகைப்படுத்தோதுவர். "எஃகு நுண் செவிகள் வீழ" (உகஅ) என்றார் சீவகசிந்தாமணியினும். செய்வுறுதல் - சுற்றுதல் முதலிய செய்கைகளை உடையதாதல். பண்ணுறுத்தப்படுதலுமாம். திவவு - வார்க்கட்டு. நல்லியாழ் என்றது, யாழ்க்குண்டாம் குற்றம் நீங்கிய யாழ் என்றவாறு. யாழ்ப்பயிற்சி மனத்தைப் பண்படுத்தி இனிமை உடையதாக்குமாகலின், இனிதுற மெத்தெனப் பேசுதற்கு யாழ்ப் பயிற்சியை ஏதுவாக்கிக் கூறிய நுணுக்கம் உணர்க. மென்மொழி - ஈண்டு இனிமையும் மென்மையும் உடைய மொழி என்க. இன்னரம்பு - இனிய யாழ் நரம்பு. யாழ் நவின்ற மென்மொழி மேவலர் என்ற குறிப்பால் கந்தருவர் என்பது பெற்றாம். என்னை? கந்தருவரை "யாழோர்" என்றும் வழங்குபவாகலான்.*

### கந்தருவ மகளிர்

**(143-147) : நோய் ................. விளங்க**

***பொருளுரை :*** **நோயின்று இயன்ற யாக்கையர் - மக்கட்குரிய நோய் இல்லையாக இயன்ற உடம்பினையுடையவரும், மாவின் அவிர் தளிர் புரையும் மேனியர் - மாவினது விளங்குகின்ற தளிரை ஒக்கும் நிறத்தினையுடையவரும். அவிர்தொறும் பொன்னுரை கடுக்கும் திதலையர் - விளங்குந்தோறும் பொன்னுரை விளங்கினாற்போல விளங்கும் துத்தியினையுடையவருமாகிய, இன்நகைப் பருமந் தாங்கிய பணிந்து ஏந்து அல்குல் மாசுஇல் மகளிரொடு -**

*கட்இனிய ஒளியினையுடைய பதினெண் கோவையாகிய மேகலையணிந்த தாழவேண்டியவிடம் தாழ்ந்து உயரவேண்டியவிடம் உயர்ந்த அல்குலையுடைய குற்றமில்லாத கந்தருவமகளிரோடே மறுவின்றி விளங்க - தாமும் குற்றமின்றி விளங்காநிற்ப;*

***கருத்துரை :*** *நோய் இல்லாதியன்ற நல்லுடம்பினையுடையாரும் மாந்தளிர் போன்ற திருமேனியுடையாரும், பொன்னுரை போன்ற மிளிரும் துத்தியை உடையாரும் மேகலையணியப்பட்ட பணிந்தேத்தும் அல்குலையுடையாருமாகிய தம் மகளிரோடே குற்றமிலராய் விளங்கா நிற்ப என்பதாம்.*

***அகலவுரை :*** *மென்மொழி மேவலர் நரம்புளரும் பொருட்டுயாக்கை முதலியவற்றையுடைய குற்றமற்ற தம் மகளிரோடே மறுவின்றி விளங்கா நிற்ப எனக் கூட்டுக.*

*நோயின்று என்பதன்கண் இன்றி இன்னும் குறிப்பு வினையெச்சம் உகரமாய் இன்று என்றாயிற்று. இதனை,*

*"இன்றி என்னும் வினையெஞ் சிறுதி*
*நின்ற இகரம் உகரம் ஆதல்*
*தொன்றியல் மருங்கிற் செய்யுளுள் உரித்தே"*

*எனவரும் தொல்காப்பிய (உயிர்மயங்-ஙரு) விதியானே அறிக.*

*யாக்கை - உடம்பு. மா - மாமரம். புரையும் : உவமஉருபு. அவிர்தல் - விளங்குதல். உரைகல்லில் உரைத்த பொன்னுரை. திதலைக்கு உவமை; திதலை - தேமல். இன்னகைப் பருமம் - கண்ணுக்கு இனிய ஒளியினையுடைய பருமம் என்க. பருமம், பதினெண்கோவையையுடைய மேகலை. இதனை,*

*"எண்கோவை காஞ்சி எழுகோவை மேகலை*
*பண்கொள் கலாபம் பதினாறு - கண்கொன்*
*பருமம் பதினெட்டு முப்பத் திரண்டு*
*விரிசிகை என்றுணரற் பாற்று"*

*என்னும் வெண்பாவானுணர்க. ("பருமம் பதினான்கு" என்றும் பாடமுண்டு).*

*பணிந்தேந்து அல்குல் என்றது, தாழவேண்டிய இடம் தாழ்ந்து உயரவேண்டிய விடம் உயர்ந்துள்ள அல்குல் என்றவாறு; "அவிழ்ந்து வீங்கு திவவு" என்றாற் போன்று. மாசிவமை - ஈண்டு அகந்தூய்மை. இறைவனைப் பாடு மகளிராதலால் மாசின்மை வேண்டிற்று. மாசில் மகளிர்க்கேற்பவே மென்மொழி மேவலரும் மறுவின்றி விளங்கினர் என்க.*

*இனி கசஅ முதல் - கருச வரையில், முருகப்பெருமான்பாற் குறைவேண்டி*

வரும் தேவர்களில் முதற்கண் திருமால் வருகையைக் கூறுகின்றார்.

## திருமால்

*(148-151) :* கடு ................ செல்வனும்

***பொருளுரை :*** *கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால் எயிற்று - நஞ்சுடனே உறைக்குள்ளே கிடந்த துளையினையுடைய வெள்ளிய எயிற்றினையும், அழல் என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல் - நெருப்பென்னும்படி நெட்டுயிர்ப்புக்கொள்ளும் கண்டார்க்கு அச்சந்தோன்றும் கடிய வலியினையும் உடைய, பாம்பு படப்புடைக்கும் - பாம்புகள் மாளும்படி அடிக்கின்ற, பல்வரிக் கொஞ்சிறைப் புள் அணி நீள்கொடிச் செல்வனும் - பல வரியினை உடைத்தாகிய வளைந்த சிறகினையுடைய கருடனை அணிந்த நீண்ட கொடியினையுடைய திருமாலும்;*

***கருத்துரை :*** *நஞ்சோடே உறைக்குட் கிடந்த துளையினையுடைய வெள்ளிய பல்லையுடையனவும், தீக்கால்வது போன்று நெட்டுயிர்ப்புக் கொள்வனவும், கண்டார்க்கு அச்சந் தோற்றுவிப்பனவுமாகிய கொடிய வலியினையுடைய பாம்புகள் மாளும்படி அடிக்கும், பல வரிகளையுடைய வளைந்த சிறகையுடைய கருடனை அணிந்த நெடிய கொடியினையுடைய திருமாலும் என்பதாம்.*

***அகலவுரை :*** *கடு - நஞ்சு. நஞ்சு, பையினுள்ளே இருத்தலால் ஒடுங்கியஎன்றார். பாம்பினது நச்சுப் பல்லில் பல நுண்டுளைகள் உள; அப்பாம்பு ஒன்றனைக் கடிக்குங்கால் பற்கள் தம் மடியிலுள்ள நச்சுப் பையை அழுத்துவனவாம்; அங்ஙனம் அழுத்துங்கால் பையிலுள்ள நஞ்சு பற்களின் துளை வழியே ஒழுகிக் கடியுண்ட உடலின் குருதியொடு கலந்து கொல்லும் என்ப. ஆசிரியர் நக்கீரர் ஈண்டுப் பாம்பின் இயல்பினை இரண்டடிகளிலே நன்கு தெரிந்தோதுதலறிக.*

*தூம்பு - துளை. வால் எயிறு - வெண்பல் இவை "காளி, காளாத்திரி, யமன், யமதூதி என நான்காம்" என்பர் நச்சினார்க்கினியர். அழல் - பாம்பின் நெட்டுயிர்ப்பின் வெம்மைக்குவமை என்க. திருமாலினது கொடியாகிய கருடன் தன் பகையாகிய பாம்புகளைப் புடைத்தல் கூறினார். அத் திருமால் நச்சரவம் போன்று நல்லோர்க்குத் தீங்கியற்றும் அரக்கர் முதலியோரை அடர்த்து உயிர்களைப் பாதுகாப்பான் என்பது குறிப்பாற்றோன்றுமாறு, 'புல்வரிக் கொடுஞ்சிமைப்புள்' என்றது கருடனை. செல்வன் என்றது, கடவுள் என்னும் பொருட்டு, வட நூலோர். "ஈசுவரன்" என்பதுமது. "புள்ளணிநீள் கொடி புணர்நிலை தோன்றும்" (சிலப் - கக : கஙசா) என்றும் "மண்ணுறு திருமணி*

*புரையும் மேனி விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்" என்றும் (புறம். - ருசு : கு - சு) பிறரும் ஓதுதல் காண்க.*

**உருத்திரன்**

*(151-154) :* **வெள்ளேறு ................. செல்வனும்**

***பொருளுரை :*** *வெள் ஏறு வலம் வயின் உயரிய - வெள்ளிய ஆனேற்றை வலப்பக்கத்தே வெற்றிக்கொடியாக உயர்த்திய, பலர் புகழ் திணி தோள் - பலரும் புகழ்கின்ற திண்ணிய தோள்களையுடைய, உமை அமர்ந்து விளங்கும் - இறைவி ஒருபாகத்தே பொருந்தி விளங்காநின்ற, இமையா முக்கண் - இதழ்குவியாத மூன்று கண்ணினையுமுடைய, மூவெயில் முருக்கிய - முப்புரத்தை எரித்த, முரண் மிகு செல்வனும் - மாறுபாடு மிக்க உருத்திரனும்;*

***கருத்துரை :*** *வெள்ளிய ஆனேற்றை வெற்றிக்கொடியாக வலப்பக்கத்தே உயர்த்தவனும், பலரானும் புகழப்படுகின்ற திண்ணிய தோளையுடையவனும், இறைவி ஒருபாகத்தே பொருந்தி விளங்கும் திருமேனியை உடையவனும், இமைத்தலில்லாத மூன்று கண்களையுடையவனும் முப்புரத்தை எரித்தவனும், மாறுபாடு மிக்கவனும் ஆகிய உருத்திரனும் என்பதாம்.*

***அகலவுரை :*** *ஏதுவலன் உயரிய செல்வன்; தோளுடைய செல்வன்; உமையமர்ந்து விளங்குஞ் செல்வன்; முக்கட் செல்வன்; எயில் முருக்கிய செல்வன்; முரண்மிகு செல்வன் எனத் தனித் தனி கூட்டுக. உருத்திரனுக்கு ஊர்தியும், கொடியும் வெள்ளேறு என்பதனை,*

> *"ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த*
> *சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப" (புறம். 1)*

*என வரும் புறப்பாட்டானுமறிக.*

*வலவயின் என்பதற்கு வெற்றிக்களத்தே என உரைப்பர், நச்சினார்க்கினியர். இறைவனுடைய திருவருளே இறைவி எனலின் அவ்வருள் அவனின் வேறாகாமை தோன்ற தன்னொரு கூற்றிலே இறைவியைக் கொண்டனன் என்க. அமர்ந்து விளங்குதலாவது, 'எத்திறம் நின்றா னீசன் அத் திறம் அவளும் நிற்றல்' என்க. அமர்தல் - பொருந்துதல். என்னை?*

> *"சத்தியாய் விந்துசத்தி யாய்மனோன் மனிதா னாகி*
> *ஒத்துறு மகேசை யாகி உமைதிரு வாணி யாகி*
> *வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தி ஒருத்தி யாகும்*
> *எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்"*
> *(சித்தியார் சுபக். - 145)*

*என்பவாகலான். இனி இங்ஙனம் இறைவனும் இறைவியும் ஒருருவின் இயைந்து நிற்றலை ஆசிரியர் இளங்கோவடிகளார் இறைவியின் மேலேற்றி,*

*"சடையும் பிறையும் தாழ்ந்த சென்னிக்*
*குவளை யுண்கண் தவளவாண் முகத்தி*
*கடையெயி றரும்பிய பவளச் செவ்வாய்த்தி*
*இடைநிலா விரிந்த நித்தில நகைத்தி*
*இடமருங் கிருண்ட நீல மாயினும்*
*வலமருங்கு பொன்னிறம் புரையும் மேனியன்*
*இடக்கை பொலம்பூந் தாமரை ஏந்தினும்*
*வலக்கை அஞ்சுடர்க் கொடுவாள் பிடித்தோள்*
*வலக்கால் புனைகழல் கட்டினும் இடக்கால்*
*தனிச்சிலம் பரற்றும் தகைமையன்"* *(சிலப். உங : க-க0)*

*என்று புனைந்த இவ்வழகிய அடிகளூடே அம்மையப்பரின் திருவுருக் காட்சியைக் கண்கூடாகக் கண்டுணர்க.*

*என்றும் அழிவில்லான் ஆகலின், அவன் திருக்கண்களும் இமையாவாயின என்க. மூவெயில் என்றது, முப்புரத்தை. தேவர்கட்குத் தீங்கியற்றிய மூன்று அசுரருடைய எயிலைச் சிரித்தெரித்தான் என்பது புராணம். முரண் - வலியுமாம். மாறுபாடெனக் கொள்ளின் நிலனும் நீரும் தீயும் வளியும் வெளியுமாகிய பூதங்கடோறும் உறைந்து ஒன்றனோடொன்று மாறுபட்ட செயல்களை நிகழ்த்தும் செல்வன் என்க. நீரிற்றண்மையும் தீயில் வெம்மையுமாய் நிற்றல் போல்வது மாறுபாடு என்க.*

### இந்திரன்

*(155-159)* **: நூற்றுப்பத்து ................. செல்வனும்**

***பொருளுரை :** நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து - நூற்றைப் பத்தாக அடுக்கிய கண்களையும், நூறு பல் வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து - நூறென்னும் எண்ணாகிய பலவேள்விகளை வேட்டு முடித்ததனாற் பெற்ற பகைவரை வென்று கொல்கின்ற வெற்றியினையும் உடையனாய், ஈரிரண்டு ஏந்திய மருப்பின் எழில் நடைத் தாழ் பெருந் தடக்கை உயர்த்த யானை - நான்காகிய முன்புறமுயர்ந்த கொம்பினையும் அழகிய நடையினையும் நிலத்தே கிடக்கின்ற பெரிய வளைவினையுடைய கையினையும் நூலோரானே உயர்த்துக் கூறப்படுதலையும் உடைய யானையினது, எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும் - புறக்கழுத்திலே ஏறிய திருமகளின் விளக்கமுடைய இந்திரனும்;*

***கருத்துரை :** ஆயிரங்கண்களையும், நூறு வேள்விகளையியற்றிப் பெற்ற*

*வெற்றியினையும் உடையனாய், நான்கு ஏந்திய கொம்புகளையுடைய நெடிய கையையுடைய புகழ்பெற்ற யானையின் பிடரிடத்தே ஏறிய திருமகள் நோக்கமிக்க இந்திரனும் என்பதாம்.*

***அகலவுரை :*** *நூற்றுப்பத்தடுக்கிய என்றது, நூற்றைப் பத்தாக அடுக்கிய என்றவாறு. அஃதாவது ஆயிரம், இந்திரன் கௌதம முனிவருடைய சாபத்தாலே தன் உடல் ஆயிரம் அல்குல்கள் உண்டாகப் பெற்று மீண்டும் அம்முனிவர்பால் இரந்து அவை கண்ணாம்படி பெற்றான் என்ப. இதனை,*

*"தீவிழி சிந்த நோக்கிச் செய்ததை யுணர்ந்து செய்ய*
*தூயவன் அவனை நின்கைச் சுடுசர மனைய சொல்லால்*
*ஆயிரம் மாதர்க் குள்ள அறிகுறி யுனக்குண் டாகென்*
*றேயினன் இவையெ லாம்வந் தியைந்தன இமைப்பின் முன்னம்"*

*(கம்பராமா - அகலி - எஅ)*

*என்றும்,*

*"அந்தஇந் திரனைக் கண்ட அமரர்கள் பிரமன் முன்னா*
*வந்துகோ தமனை வேண்டமற்றவை தவிர்த்து மாறாச்*
*சிந்தையின் முனிவு தீர்ந்து சிறந்தஆ யிரங்கண் ணாக்கத்*
*கந்தம துலகு புக்கார் தையலும் கிடந்தாள் கல்லாய்"*

*(கம்பராமா - அகலி - அஎ)*

*என்றும் வரும் இராமாவதாரத்தானுணர்க.*

*நாட்டம் - கண். இந்திரன் ஆவோன் நூறு பரிவேள்வி செய்து முற்ற வேண்டும் என்ப. இவ்வேள்வி ஒவ்வொன்றும் இயற்றுங்கால் உலகில் குதிரையை விடுத்து அதுசென்ற திசைக்கண் மன்னரை எல்லாம் வென்றடிப்படுத்தல் வேண்டுமாகலின், 'வேள்வி முற்றிய வென்றடு கொற்றம்' என்றார். இதனானே இந்திரனுக்குச் "சதமகன்" என்னும் பெயருண்மையும் அறிக. இந்திரன் யானை யூர்தியை உடையோன். இவ்வியானை ஐராவதம் எனப்படும். இதற்கு நான்கு கொம்புகள் உண்டென்ப ஆகலின், ஈரிரண்டேந்திய மருப்பின் என்றார். ஏந்திய என்றது, கொம்பின் முன்புறம் உயர்ந்த என்றவாறு. இதனை ஏந்திய ஈரிரண்டு மருப்பின் என மொழிமாற்றி "தலைகள் ஏந்தியிருக்கின்ற நான்காகிய கொம்பு" என்றார் நச்சினார்க்கினியர்.*

*எருத்தம் - புறக்கழுத்து; பிடரி வானுலகத்தார்க்கெல்லாம் அரசனாகலின் 'திருக்கிளர் செல்வன்' என்றார். திருக்கிளர்தலாவது எல்லாச் செல்வமும் மிக்கிருத்தல்.*

***இத்தேவர்கள் முருகக்கடவுளைக் காணவருதற்குரிய காரணம்***

*(160-165) :* நாற்பெருந் தெய்வத்து ................. சுட்டி

***பொருளுரை :*** *நாற் பெருந் தெய்வத்து - பிரமன் திருமால் உருத்திரன் இந்திரன் எனப்படும் நான்கு பெருந்தெய்வங்களிலே வைத்து, நன்னகர் நிலைஇ உலகங்காக்கும் ஒன்றுபுரி கொள்கை - நல்ல நகரங்கள் நிலைபெற்றுள்ள உலகத்தை ஓம்புதற்றொழில் ஒன்றையே விரும்புங் கோட்பாட்டையுடைய, பலர் புகழ் மூவரும் தலைவராக - பலரானும் புகழப்படுகின்ற அயனை ஒழிந்த ஏனை மூவரும் தத்தம் தொழில்களை முன்புபோல நிகழ்த்தித் தலைவராக வேண்டி, ஏமுறு ஞாலந் தன்னிற்றோன்றி - பாதுகாவலுறுகின்ற இம் மண்ணுலகிலே வந்து தோன்றி, தாமரை பயந்த தாவில் ஊழி நான்முக ஒருவற் சுட்டி - திருமாலுடைய திருவுந்தித் தாமரை பெற்ற குற்றமற்ற ஊழிகளையுடைய நான்கு முகத்தையுடைய ஒருவனைப் பழைய நிலையிலே நிறுத்தலைக் கருதி;*

***கருத்துரை :*** *அயன் திருமால் உருத்திரன் இந்திரன் என்னும் நான்கு பெருந் தெய்வங்களிலே நல்ல நகரங்கள் நிலைபெற்ற உலகத்தை ஓம்புதற்றொழில் ஒன்றையே விரும்புங் கோட்பாட்டுடனே பலரானும் புகழப்படுகின்ற அயனை ஒழிந்த மேலே கூறப்பட்ட மூன்று கடவுளரும், தத்தம் தொழிலைப் பண்டுபோற் செய்து தலைவராகக் கருதித் திருமாலின் திருவுந்தித் தாமரையாற் பெறப்பட்டவனும், அளவில்லாத ஊழியை உடையவனும், நான்கு திருமுகங்களையுடையவனுமாகிய அயனை விடுவிக்கக் கருதி என்பதாம்.*

***அகலவுரை :*** *நாற்பெருந்தெய்வத்து மூவர் என்றது, அயன் முதலிய நான்கு பெருந் தெய்வங்களுள் வைத்து ஈண்டோதப்பட்ட திருமாலும் உருத்திரனும் இந்திரனுமாகிய மூவரும் என்றவாறு. இங்ஙனம் நேரிதிற் பொருள் காணாது "நாற்பெருந் தெய்வமாவன இந்திரன் யமன் வருணன் சோமன் என்னுந் தெய்வங்கள்" என்று நச்சினார்க்கினியர் இயைபற உரைத்தார். இன்னும் "நாற் பெருந் தெய்வம் என்றார் அந்தணர் தெய்வம், அரையர் தெய்வம், வைசியர் தெய்வம், சூத்திரர் தெய்வம் என்பதற்கு, இதனைச் சிலப்பதிகாரத்துங் கண்டு கொள்க" என்பாருமுளர்.*

*படைத்தல், காத்தல், அழித்தல், துறக்க நாட்டைக் காத்தல், என்னும் சிறந்த தொழிற்றலைவராகலின் பெருந் தெய்வம் என்றார். தொழில் வேறுபடினும் எவ்வாற்றானும் உலகம் காத்தலே இத்தெய்வங்களின் மேற்கோளாகலின், உலகம் காக்கும் ஒன்று புரி கொள்கை என்றார். இத் தெய்வங்கள் படைத்தல் அழித்தல்களும் செய்யாநிற்ப உலகம் காத்தலாகிய ஒன்றையே விரும்பும் கோட்பாடுடையன என்றது என்னையோ எனில், ஈண்டு உலகம் என்றது உயிரையே ஆதலின், படைத்தல் முதலிய எல்லாத் தொழிலும்*

*முடிவில் அவ்வுயிர்களை மருட் கேவலத்தினின்றும் சுத்தாவத்தையிற் செலுத்தி வீட்டின்பம் நல்கிக் காத்தற் பொருட்டேயாகலான் அனைத்தும், காத்தற் றொழிலே என விடுக்க. இதனை,*

> *"சொன்னஇத் தொழில்கள் என்ன காரணம் தோற்ற என்னின்*
> *முன்னவன் விளையாட் டென்று மொழிதலு மாம்உ யிர்க்கு*
> *மன்னிய புத்தி முத்தி வழங்கவும் அருளால் முன்னே*
> *துன்னிய மலங்கள் எல்லாம் துடைப்பதும் சொல்ல லாமே"*
>
> *(சித்தியார் சுபக் - ருகூ)*

*என்றும்,*

> *"அழிப்பிளைப் பாற்றல் ஆக்கம் அவ்வவர் கன்ம மெல்லாம்*
> *கழித்திடல் நுகரச் செய்தல் காப்பது கன்ம வொப்பில்*
> *தெழித்திடல் மலங்கள் எல்லாம் மறைப்பருள் செய்தி தானும்*
> *பழிப்பொழி பந்தம் வீடு பார்த்திடின் அருளே எல்லாம்"*
>
> *(சித்தியார் சுபக் - ருஎ)*

*என்றும் வரும் மெய்ம் மொழிகளானும் உணர்க.*

*ஏனைத் தெய்வங்கள் எல்லாம் தொழத்தகும் தெய்வமாகலான் பலர் புகழ் மூவர் என்றார். மூவருந் தலைவராக என்றது என் சொல்லியவாறோவெனின்?*

*பண்டொரு காலத்தே முருகப் பெருமான் அகந்தை கொண்ட அயனை அவன் அகந்தையைப் போக்கும் பொருட்டுப் பிரணவமந்திரத்தின் பொருள் யாதென வினாவ, அவன் அதற்கு விடை தந்திடாமையின் தலையிற் குட்டிச் சிறையிட்டனன் என்றும், 'அயன் சிறைப்பட்டமையானே படைப்புத் தொழில் நடவாதொழிய ஏனைத் தேவர்கட்குரிய ஏனைத் தொழில்களும் நடவாதொழிந்தன' என்றும் கூறுப. இதனானே தலைமையிழந்த தேவர்கள் அவனைச் சிறைவீடு செய்து மீண்டும் படைப்புத் தொழில் செய்விக்குமாற்றானே தத்தம் தொழிலைத் தாமும் பெற்றுத் தலைவராதலைக் கருதி என்றவாறு.*

*ஏம் - ஏமம் என்பது கடைகுறைந்து நின்றது. ஏமம் - காவல் என்னும் பொருட்டு. தங்கள் காவலைப் பொருந்தும் இம் மண்ணுலகத்தே தம் விண்ணுலகினின்றும் இழிந்து வந்து தோன்றி என்பார் 'ஏமுறு ஞாலந் தன்னிற் றோன்றி' என்றார். தோன்றி என்றது, இவர் உலகில் தோன்றுதலரி தென்பதை உணர்த்தி நின்றது.*

*தாமரை - திருமாலின் திருவுந்தித் தாமரை. அத் திருவுந்தித் தாமரையிலே அயன் தோன்றினான் என்ப. ஆகலின், 'தாமரை பயந்த... நான்முகன்' என்றார். பயந்த - ஈன்ற. தாவிலூழி - குற்றமற்ற பல ஊழிகளையுடைய என்க. ஊழியைப்*

*படைக்கும் நான்முகன் எனினுமாம். 'நான்முக ஒருவற் பயந்த பல்லிதழ்த் தாமரைப் பொருட்'டென்றார் (சOங-ச) பெரும்பாணாற்றுப்படையினும்,*

*இனித், தாமரை என்னும் பேரெண்ணினைப் பெற்ற குற்றமற்ற ஊழி எனினுமாம். சுட்டி என்பது உள்ளத்தே குறிக்கோளாகக் கொண்டு என்றவாறு.*

*இனி, நான்முகனை முருகப்பெருமான் சிறையிட்டமையை,*

> *"................................................ 'படைப்போன்*
> *அகந்தை யுரைப்பமறை யாதியெழுத் தொன்று*
> *உகந்த பிரணவத்தி னுண்மை - புகன்றிலையால்*
> *சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ங னென்றுமுனம்*
> *குட்டிச் சிறையிருத்தும் கோமானே"          (கந்தர் கலி : கO-ரு)*

*எனப் பிறரும் ஓதுமாற்றான் உணர்க.*

*இனி, மூவருந் தலைவராக என்றதற்கு, "பிள்ளையார் அயனைச் சபித்தலின் அயன் படைத்தற் றொழிலைத் தவிரவே ஏனையிருவர்க்கும் காத்தற்றொழிலும் அழித்தற்றொழிலும் இன்றாமாகலின் மூவரும் தத்தமக்குரிய தொழில்களைப் பெற்றுத் தலைவராக என்றார்" என்றும்,*

*"சாபமென்றது; பிள்ளையார் அசுரரை அழித்துத் தேவரைக் காத்ததற்கு இந்திரன்மகள் தெய்வயானையாரை அவர்க்குக் கொடுத்தவிடத்தே, பிள்ளையார் தம் கையில் வேலை நோக்கி 'நமக்கு எல்லாந் தந்தது இவ்வேல்" என்ன, அருகிருந்த அயன் 'இவ் வேலிற்கு இந்நிலை என்னால் வந்ததன்றோ' என்றானாக, 'நங்கையில் வேலுக்கு நீ கொடுப்பதொரு சத்தியுண்டோ' என்று கோபித்து, 'இங்ஙனம் கூறிய நீ மண்ணிடைச் செல்வாய்' என்ற சாபத்தை" என்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். இதற்கேற்பவே "ஞாலந் தன்னில் தோன்றி" என்றதற்கு "பிள்ளையார் சபித்தலாலே மண்ணிடத்தே தோன்றி" என்று உரை கூறியுள்ளார்.*

**ஏனைத் தேவர்களின் வருகை**

***(165-174) : காண்வர ................. காண***

***பொருளுரை :*** ***காண்வர - அழகுண்டாக, பகலில் தோன்றும் இகல் இல் காட்சி - பகுத்துக் காண்டற்கண் வேறுபடத் தோன்றியும் தம்முள் மாறுபாடில்லாத அறிவினையுடைய, நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு - நான்காகிய இயல்பினையுடைய வேறுபட்ட முப்பத்து மூவரும், ஒன்பதிற்றிரட்டி உயர்நிலை பெறீஇயர் - பதினெண் வகையாகிய உயர்ந்த நிலையைப் பெற்றவரும், மீன்பூத்தன்ன தோன்றலர் - விண்மீன்கள் மலர்ந்தாலொத்த தோற்றத்தையுடையராய், மீன் சேர்பு வளிகிளர்ந்தன்ன***

*செலவினர் - மீன்கள் உலாவுகின்ற இடத்தைச் சேர்ந்து காற்று எழுந்தாலொத்த செலவினையுடையராய், வளியிடைத் தீ எழுந்தன்ன திறலினர் - காற்றிடத்தே நெருப்பு எழுந்தாலொத்த வலியினையுடையவராய், தீப்பட உரும் இடித்தன்ன குரலினர் - நெருப்புப் பிறக்க உருமேறு இடித்தாற் போன்ற குரலினை உடையராய், விழுமிய உறுகுறை மருங்கில் தம் பெறுமுறை கொண்மார் - இடும்பையாயுள்ள தமக்குற்ற குறைவேண்டும் பகுதியிலே தம் தொழில்களைப் பண்டு போலப் பெறுமுறையினை முடித்துக் கோடற்கு, அந்தரக் கொட்பினர் வந்துடன் காண வானத்தே சுழற்சியினையுடையராய் வந்து ஒருசேரக் காணா நிற்ப;*

***கருத்துரை :** பகுத்துக் காணுங்கால் வேறுபடத் தோன்றியும் தம்முன் மாறுபாடில்லாத அறிவினையுடைய நான்காகிய வேறுபட்ட முப்பத்து மூவரும் பதினெண் வகையாகிய உயர்ந்த நிலையினையுடையாரும், விண்ணின்கண் மீன்கள் பூத்தாற்போன்று பொலிவுறத் தோன்றிக் காற்றுப் போன்று விரைந்த செலவினையுடையராய், காற்றிடைத் தீத் தோன்றினாற் போன்ற வலியினை யுடையராய் இடி இடித்தாற்போன்ற குரலினையுடையராய்த் தமக்கு இடும்பையாகிய குறையை முருகப் பெருமான்பாற் கூறியிரந்து தத்தம் தலைமையைப் பெறுமுறையை முடித்துக் கோடற்கு வானத்திலே சுழன்று வந்து ஒருங்கே காணா நிற்ப என்பதாம்.*

***அகலவுரை :** பகல் - பகுத்தல்; பகுக்கும் முன்னர் ஆதித்தன் என ஒன்றாய்ப் பகுத்துக் காணுமிடத்தே பன்னிரண்டாய்த் தோன்றும் என்றவாறு. இவ்வாறே உருத்திரன் வசு மருத்துவன் என்னும் மூன்றற்கும் உரைத்துக் கொள்க. எனவே, ஆதித்தர் உருத்திரர் வசு மருத்துவர் என்னும் நால்வேறியற்கையையுடைய முப்பத்து மூவர் என்றவாறு. பதினொரு மூவர் - முப்பத்துமூவர். தேவர் ஆகலின் இகலில் காட்சியுடையோர் என்றார்.*

*'ஒன்பதிற் றிரட்டி உயர்நிலை பெறீஇயர்' என்றது, பதினெண் கணங்களை, அவராவார், தேவரும் அசுரரும் தைத்தியரும் கருடரும் கின்னரரும் கிம்புருடரும் இயக்கரும் விஞ்சையரும் இராக்கதரும் சித்தரும் சாரணரும் பூதரும் பைசாசகணமும் தாராகலாமும் நாகரும் ஆகாயவாசிகளும் போகபூமியோரும் என்னும் இவர். இதனை,*

*"கின்னரர் கிம்புருடர் விச்சா தரர்கருடர்*
*பொன்னமர் பூதர் புகழியக்கர் - மன்னும்*
*உரகர் சுரச்சா ரணர்முனிவர் மேலாம்*
*பரகதியோர் சித்தர் பலர்"*

*என்றும்,*

*"காந்தருவர் தாரகைகள் காணாப் பசாசகணம்*
*ஏந்துபுகழ் மேய விராக்கதரோ - டாய்ந்ததிறற்*
*போகா வியல்புடைய போகபூமி யோருடனே*
*ஆகாச வாசிகள்ஆ வார்"*

*என்றும் வரும் வெண்பாக்களானும் அறிக. (சிலப். ரு : களசா - அ. அடியார் - மேற்.)*

*பெறீஇயர் என்றது எச்சப்பொருள். அல்லது வியங்கோட் பொருளில் வாராமல் தொழிற்பெயராக வந்தமை காண்க. வானத்தே ஒளியுடைய இத்தேவர் கூடியிருத்தற்கு மீன் பூத்திருத்தல் உவமை என்க. சேர்பு - சேர்ந்து. மீன் - ஈண்டு விண்மீன். வளி - காற்று. உரும் - இடி. விழுமம் - ஈண்டு இடும்பை என்னும் பொருட்டு; தமக்கு இடும்பையாகிய உறுகுறை என்க. அது நான்முகனைச் சிறையிட்டமை பெறுமுறை, கொண்மார் - முருகக்கடவுளிடத்து இரந்துபெறு முறைமைத்தாகிய சிறைவிடும் தம் தலைமையும் கொள்ளும் பொருட்டென்றவாறு.*

### திருவாவினன்குடி

*(175 - 176) :* **தாவில் ................ உரியன்**

***பொருளுரை :*** *தா இல் கொள்கை மடந்தையொடு - குற்றமற்ற அறக் கற்பினையுடைய தெய்வயானையாருடன், சின்னாள் ஆவினன் குடி அசைதலும் உரியன் - சிலநாள் திருவாவினன்குடி என்னும் ஊரிலே இருத்தலும் உரியன்.*

***கருத்துரை :*** *குற்றமற்ற அறக்கற்பினையுடைய தெய்வயானையாருடனே சிலநாள் திருவாவினன் குடி என்னும் ஊரிலே இருத்தலும் உரியன் என்பதாம்.*

***அகலவுரை :*** *ஆதலானே ஆண்டுச் சென்றாலும் அப் பெருமானை நீ காணக் கடவை என்பதாம்.*

*தா - குற்றம், கற்பு என்பது மேற்கோளே யாகலான் கொள்கை என்றார். தாவில் கொள்கை எனவே, அறக்கற்பு என்றாராயிற்று. மகளிர் மாண்பினில் எவற்றினும் தலைசிறந்தது கற்பே ஆதலின், அஃதொன்றனையே விதந்தோதினார். மடந்தையொடும் அடைதலும் உரியது எனவே, இல்லறத்தார் இயல்பில் ஆண்டுறைகின்றான். ஆகலின் தன்பால் வந்த விருந்தினரை அவ்வறத்தானே நன்கு போற்றுவன் என்றாராயிற்று. ஆவினன் குடி - பழனி, இவ்வூரைப் பற்றி.*

*இனிச் சித்தன் வாழ்வென்று சொல்லுகின்ற ஊர் முற்காலத்து ஆவினன்குடி என்று பெயர் பெற்ற தென்றுமாம். அது:*

*"நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்*
*வில்லந் தொறுமூன் றெரியுடைத்து - நல்லரவப்*

*பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியரின்*
*னாட்டுடைத்து நல்ல தமிழ்”*

*என்று ஔவையார் கூறியதனாலுணர்க. “சித்தனென்பது பிள்ளையாருக்குத் திருநாமம்” என்று கூறியுள்ளார் நச்சினார்க்கினியர்.*

*நக்கீரர் காலத்தினாதல் நச்சினார்க்கினியர் காலத்தினாதல் இது பழனி என வழங்கப்படவில்லை. திருவாவிநன்குடி எனத் தந்நகரமிட்டு எழுதுவாரும் திருவாவினன்குடி என நன்னகரமிட்டெழுதுவாரும் என இரு திறத்தாரும் உளர். திருவாவிநன்குடியாயின் அழகிய வாவியை உடைய நல்ல குடியினையுடைய ஊரென்க. திருவாவினன்குடியாயின் திருஆ இனன் குடி எனக் கண்ணழித்துச் செல்வமாகிய ஆனினங்கள் மிக்ககுடி என்க. பண்டைக்காலத்தே இது பொதினி என்னும் பெயருடைத்தாய் ஆவி என்னும் வேளிர் தலைவனுக்கு உரியதாயிருந்தது என வரலாற்றாசிரியர் கூறுவர். எனவே, ஆவி நன்குடி - ஆவி என்பானுக்குரிய நன்குடியை உடைய ஊர் என்றாலே சாலப் பொருந்துதல் அறிக.*

*இனி, முனிவர் முற்புக மேலவர் மகளிருடன் விளங்கத் திருமாலும் உருத்திரனும் இந்திரனுமாகிய பலர்புகழ் மூவரும் தலைவராக, நான்முக ஒருவற்சுட்டி முப்பத்து மூவரும் பதினெண் கணத்தாரும் தோன்றலர் செலவினர் குரலினர் கொட்பினராய் வந்து காண, மடந்தையொடு சின்னாள் ஆவினன் குடியில் அசைதலும் உரியன் என்று தொடர்பு காண்க.*

*இனி, களநு - ‘அதாஅன்று’ என்பது தொடங்கி, கஅகூ ‘ஏரகத்துறைதலும் உரியன்’ என்னும் துணையும் ஒருதொடர், இதன்கண்.*

*முருகக்கடவுள் திருவேரகம் என்னும் திருப்பதியின்கண் வீற்றிருக்கும் மாண்பினை விரித்தோதுகின்றார்.*

# பழனி திருக்கோயில் ஆட்சிமுறை

*''பழனி'' அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தேவஸ்தானத்தைச் சேர்ந்த சுற்றுக்கோயில்கள் 26 ஆகும். வருமானம் அதிகமாக வந்து மிகப்பொலிவுடன் நித்திய, நைமித்திக பூசைகள் நடந்து வரும் கோயிலுக்குக் கீழ் அப்பகுதியைச் சுற்றியுள்ள கோயில் நிர்வாகங்களைக் கொண்டு வரும் மரபு நெடுங்காலமாக இருந்து வருகிறது. உதாரணமாகப் பழனி-உடுமலைப்பேட்டை, கொழுமம் பாதையில் கொழுமம் என்ற ஊர் உள்ளது. இங்குள்ள தாண்டவேசுவரர் கோயில் அமராவதி ஆற்றங்கரையில் உள்ள முதல் சிவாலயம் ஆகும். ஒரு நூற்றாண்டுக் காலத்துக்குப்பின் பிற அடியார்களோடு சேர்ந்து அக்கோயிலைப் புதுப்பித்துக் குடமுழுக்கு விழாக்காணும் பேற்றை பதிப்பாசிரியர் 1994-ஆம் ஆண்டு பெற்றார். அக்கோயில் வரலாற்றுச் சுவடிகளைப் பார்க்கும்போது 1900 ஆண்டுகளில் பழனிமலைக்கோயில் கொழுமம் கோயில் நிர்வாகத்துக்குக் கீழ் இருந்துள்ளது. மிகப்பெரிய எஸ்டேட்டுகளும் கொழுமத்தில் இருந்துள்ளன. கொழுமம் தாண்டேசுவரர், பழனி முருகனுக்கு உதவியுள்ளார். இன்று பழனி முருகன், கொழுமம் தாண்டவேசுவரருக்கு உதவும் நிலையில் உள்ளார். இது சாதாரண மனிதர்களான நமக்கும் பொருந்தும். இனி பழனிமலைக் கோயில் ஆளுமை நிர்வாகத்துக்கு வருவோம்.*

**ஆவினன்குடி கால வரையறை**

*கால வரையறையில் பழனிப்பதி சங்ககாலத்திலிருந்தே பேசப்பட்டு வந்துள்ளது.*

| | | |
|---|---|---|
| 1. | திருமுருகாற்றுப்படை | திருவாவினன்குடி |
| 2. | அகநானூறு | முழ்வுறழ் திணி தோ ணெடுவேளாவி<br>பொன்னுடை நெடுநகர்ப் பொதினி (அகம்–61)<br>முருகனற் போர்நெடு வேளாவி, யறு கோட்டி யானைப்<br>பொதினியாங் காண் (அகம்–1) |
| 3. | சிலப்பதிகாரம் | வேளாவிக்கோ மாளிகை காட்டி (சிலப். 28. 198) |
| 4. | மேற்காண் நூல்களால் இது மூவேந்தர்களால் ஆளப்பட்ட செய்தி கிடைக்கிறது. | |
| 5. | 12, ,13, 14–ஆம் நூற்றாண்டுகளில் கொங்குச் சோழர்கள் ஆட்சியில் இருந்தது. | |
| 6. | 15, ,16, 17–ஆம் நூற்றாண்டுகளில் பிற்காலப் பாண்டியர்கள், விஜயநகர ஆட்சி, மதுரை நாயக்க மன்னர்கள் ஆட்சி. | |
| 7. | 18–ஆம் நூற்றாண்டில் மைசூர் அரசின் கீழ் திண்டுக்கல் மாகாணமாக 25 பாளையங்களில் ஒன்றாயிருந்தது. | |
| 8. | 1792–ஆம் ஆண்டில் நான்காவது மைசூர் போருக்குப்பின் ஆங்கில அரசின் கீழ்வந்தது. | |

| | |
|---|---|
| 1845 வரை | சென்னை மாகாண அரசியலாரின் ஆளுகை |
| 1846 | ஆயக்குடி ஜமீன்தாரர் ஆளுகை |
| 1850 | பழனி ஜமீன்தாரர் ஆளுகை |
| 1863 | Act 20/2863 சட்டத்தின்கீழ் நிறுவிய தேவஸ்தான கமிட்டி |
| 1927 | Madras Act 2/1927. சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்புக் கழகம். Madras Hindu Religious Endowment ஆட்சி |
| 1939 | நிருவாக அதிகாரி (Executive Officer) பொறுப்பேற்றல் |
| 1943 | Advisory Committee எனப்படும் ஆலோசனைக் கமிட்டி நிர்வாகம் |
| 1950 | தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறைக் கீழ் இணை ஆணையாளர் / செயல் அலுவலர் மற்றும் தலைவர், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் ஆட்சி |

## பழனி, ஆவினன்குடித் தலத்து இலக்கியங்கள்

| வ.எண் | நூலின் பெயர் | நூலாசிரியர் |
|---|---|---|
| 1. | திருப்புகழ் | அருணகிரிநாதர் |
| 2. | பழனித்தல புராணம் (1550–ஆம் ஆண்டு) | மூலம் பாலசுப்பிரமணியக் கவிராயர். உரை – யாழ்ப்பாணம் நா.கதிரைவேற்பிள்ளை |
| 3. | வையாபுரிப் பள்ளு (300 ஆண்டுகட்கு முன் இயற்றப்பட்டது) | பழனிச்சமீன் விசையகிரி வேலச்சின்னோவையன் – 247 செய்யுள்கள் |
| 4. | பழனி பிள்ளைத்தமிழ் | பழனிச்சமீன் விசையகிரி வேலச்சின்னோவையன் – 31 பாடல்கள் |
| 5. | பழனியாண்டவர் மயில்விடு தூது | கவியரசு கு.நடேசக்கவுண்டர் முருகப்பெருமானிடம் மயிலைத் தூதாக அனுப்புகிறார் |
| 6. | பழனித் திருவாயிரம் (இதன்கண் வெண்பாமாலை, வெண்பா அந்தாதி, அலங்காரம் என 16 நூல்கள் அடங்கும்) | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் |

| | | |
|---|---|---|
| 7. | கந்தர் சஷ்டிக்கவசம் | தேவராய சுவாமிகள் |
| 8. | கந்த புராணம் | கச்சியப்ப சிவாசாரியார் |
| 9. | திருத்தொடையல் (30 அருட்பாடல்கள்) | பாம்பன் சுவாமிகள் |
| 10. | பழனி நான்மணிமாலை – 40 பாடல்கள் | |
| 11. | திருப்பழனி வெண்பா – 100 பாடல்கள் | |
| 12. | பழனி வெண்பா அந்தாதி – 100 பாடல்கள் | மாம்பழக் கவிச்சிங்க நாவலர் |
| 13. | பழனாபுரி மாலை – 100 பாடல்கள் | |
| 14. | பழனிக்கோயில் விண்ணப்பம் – 120 பாடல்கள் | |
| 15. | பழனிக் கோவை | டி.கே. இராமானுஜ அய்யங்கார் |
| 16. | பழனி பிள்ளைத்தமிழ் – 617 பக்கம் | மூலம், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், உ.வே.சா. பதிப்பாசிரியர் |
| 17. | பழனிமலை வடிவேலர் பதிகம் | பத்மாவதி |
| 18. | பழனியாண்டவர் கலித்துறை | அழகிய சிற்றம்பலக் கவிராயர் த. பெரியாண்டவன் |
| 19. | பழனி வேலவர் தோத்திரம் | |
| 20. | பழனி மாலை | |
| 21. | பழனி பதிற்றுப்பத்தந்தாதி | அண்ணாமலைக் கவிராயர் |
| 22. | பழனிமலை வடிவேலர் சந்நிதி முறை | அண்ணாமலைக் கவிராயர் |

# அருணகிரிநாத சுவாமிகளின் திருப்புகழில் பழனியும், ஆவினன்குடியும்

### அதிசயம் அநேகம் உற்ற பழனி

*பழனித் திருமலையைக் கண்ட நொடிப்பொழுதே, அருணகிரிநாத சுவாமிகளிடத்தில் ஊனுருகும் பேரின்பப் பேராவல் பெருகியது. மனம், மொழி, மெய்களால் அணுப்பொழுதும் பிரியாமல், பேரின்பப் பேராவலிலேயே திளைப்பதற்குப் பழனித் திருமலையின் திருக்காட்சி, கருவியாகின்ற அருட் சிறப்பினைச் சுவாமிகள் உணர்ந்தார். 'பழனி ஞானமலை' என்று சுவாமிகள் போற்றியுள்ளார். அப்பேரின்ப அனுபவமே, பழனித் திருமலையானது, காசித் திருத்தலத்தைக் காட்டிலும் அருட்சிறப்பு அதிகம் உடையது எனச் சுவாமிகளைப் பாடச் செய்தது.*

*'காசியின் மீறிய பழனியங்கிரி' என்னும் சுவாமிகளின் திருவாக்கு, 'விதமிசைந்தினி' திருப்புகழில் இடம்பெற்றுள்ளது.*

### நெஞ்சுக்கு அறிவுரை

*பெருஞ்சிறப்புற்ற திருப்பழனியின் திருநாமமும் கூட, உய்வைத் தரவல்லது. அவ்வுயர்வினை உணராமல், பலகாலம் பயனின்றிக் கழித்த தற்சிறுமை நிலையினை நினைந்து கண்ணீர் வடித்தார் அருணகிரிநாத சுவாமிகள். பழனித் திருமலையும், அம்மலையுறைகின்ற பெருமானும் அன்றி, 'நமக்கு இனித் தஞ்சம் யார்?' என நெஞ்சுக்கு அறிவுறுத்தினார்.*

'படிக்கின்றிலை! பழனித் திருநாமம்! படிப்பவர் தாள்
முடிக்கின்றிலை! முருகா என்கிலை! முசியாமலிட்டு
மிடிக்கின்றிலை! பரமானந்தம் மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின்றிலை! நெஞ்சமே! தஞ்சமேது நமக்கினியே' (கந்தர் அ. 75)

*எனக் கண்ணீர் பெருக்கிப் பழனி ஊரை அடைந்தார்.*

'சிவமயமாய் விளங்கவல்ல திருமலையை மனதாலும்
நினையாத அறியாமையை நினைந்தார்
உனது பழனிமலை யெனும் ஊரைச் சேவித்தறியேனே'

*என உள்ளம் மிக வாடினார்.*

### திருஆவினன்குடிக்குத் திருப்புகழ்

*பழனி ஊரின்கண், மலையின் அடிவாரத்தில் அமைந்ததாகிய திருஆவினன்குடியைச் சுவாமிகள் முதலில் தரிசித்தார். இத்திருத்தலமானது,*

*திருமகள் நீங்காத சிறப்புடையது; தேவர்த் தலைவனாகிய இந்திரனால் வழிபடப்பட்டது என்பன போன்ற பல அருட்சிறப்புக்களையும் சுவாமிகளே தமது திருப்புகழில் குறித்தருளியுள்ளார்.*

*'மாமாது மேவிய ஆவினன்குடி' (வாரணந்தனை - 100)*

*'அமரர்க்கு இறையே வணங்கிய பழனித் திருவாவினன்குடி'*
*(பகர்தற்குரி தான - 110)*

*என்று பரவிக் களித்தார்.*

**திருஆவினன்குடி ஞானபண்டித சுவாமி**

*சுவாமிகள், 'நாத விந்து கலாதி நமோ நம' எனத் தொடங்கித் திருப்புகழ்ச் சாற்றினார். திருக்கயிலாய ஞானஉலா பாடிய சேரமான் பெருமாள் நாயனாரின் ஆட்சிக்குட்பட்டு விளங்கியது வைகாவூர் நாடு. அதனுள் அமைந்ததே திருஆவினன்குடித் திருத்தலம். சுவாமிகள், அத்திருத்தலத்தில் பெருமானின் பரத்துவத்தை வியந்துள்ளார். 'நாதம், விந்து ஆகிய கலைகளுக்கு மூலப்பொருளாக, வேத மந்திர உள்பொருளாக', ஞான பண்டித சுவாமியாகப் பெருமானைப் பாடி மகிழ்ந்துள்ளார்.*

**அடியார் இணக்கத்துக்குரிய மெய்யறிவைத் தந்தருள்க**

*'கும்பிபாகம்' என்பது கொடுநரகம். அந்நரகிடை வீழாமல், திருமுருகனது திருவருளைப் பெறுவதற்கு ஏதுவாகிய அடியார் இணக்கத்துக்குரிய மெய்யறிவைத் தந்தருள்க என்பவராய்,*

*'.......................................... வெந்தெழு*
*கோர கும்பியிலே விழுந்திட நினைவாகிக்*
*கூடு கொண்டுழல் வேனை அன்பொடு*
*ஞான நெஞ்சினர் பால் இணங்கிடு*
*கூர்மை தந்தினி யானவந்தருள் புரிவாயே' (மூலமந்திர - 103)*

*எனப் பாடியுள்ளார்.*

**திருஆவினன்குடிப் பெருமானே திருஞானசம்பந்தன்**

*பாண்டியனின் வெப்புநோய் நீங்கவும், ஏடு எதிர் ஏறிச் செல்லவும், சமணரைக் கழுவேற்றியும் திருஞானசம்பந்தனாகி, திருவிளையாடல் புரிந்தவன் திருஆவினன்குடியில் வாழ்கின்ற பெருமானே என்றும் உணர்கின்ற அருளனுபவமும் அத்திருத்தலத்தில் வாய்க்கப்பெற்றார்.*

**மோனசுந்தர யோக நாயகன்**

*'நாலிலிங்கதின்' (104) திருப்புகழில், யோக ஆதாரங்கள் ஆறின் வழியாகவும் உணரப்படுகின்ற மௌன சுந்தர யோக நாயகனாக, திருஆவினன்குடிப் பெருமானே விளங்குவதாகக் குறித்துள்ளார்.*

*"மூது ணர்ந்ததி யான பூரண*
*ஞான முண்டக மீதி லேறிய*
*மோன சுந்தர யோகநாயக"*

*என ஆவினன்குடிப்பெருமான், ஞானியர்க்கும் யோகியர்க்கும் அரும்பொருளாகப் புலப்படுகின்ற பெருந்திறத்தைச் சுவாமிகள் பாடியுள்ளார்.*

**திருஆவினன்குடிப் பெருமானின் இயல்பு-அருமை-எளிமை**

*சுவாமிகள், ஞானியரும் யோகியரும் அரிதின் முயன்று திருஆவினன்குடிப் பெருமானை அடைய இயலும் என அவனது பெருமையைப் பாடியுள்ளார். அதே திருப்புகழில், அவன் தேவர்க்கு அருளிய இயல்பையும், வள்ளிக்கு அருளிய அருமை, எளிமை ஆகிய தன்மைகளையும் குறித்துப் பாடியுள்ளார்.*

*"ஆசை கொண்டொரு வேட மோகினி*
*பாத பங்கய மீது வீழ்திரு*
*ஆவினன்குடி மேவு தேவர்கள் பெருமாளே"*

*மேற்கண்ட அடிகளில், இறைவனின் இயல்பும், அருமையும், எளிமையும் வெளிப்படக் காணலாம்.*

| | | |
|---|---|---|
| *தேவர்க்கு அருளியது* | - | *அனைத்து உயிர்க்கும் கருணை செய்தலாகிய இயல்புத்தன்மை* |
| *வள்ளியை ஆட்கொள்ள தானே வேடுவக் கோலத்தில் வந்தது* | - | *பக்குவமுற்ற உயிர்க்குத் தானே வலியவந்து இரங்கியருள்கின்ற அருமைத்தன்மை* |
| *சன்மார்க்கத்தால் வள்ளியை ஆட்கொண்டருளியது மட்டுமல்லாமல் அவளது பாதமும் பணிந்தது* | - | *உண்மை அடியவர்க்கும் அடியவராய் விளங்குகின்ற எளிமைத்தன்மை* |

*சுந்தரருக்காகத் தூது சென்றமை, மணிவாசகருக்காக குதிரைச் சேவகனாகியும், மண்சுமந்தும், பிரம்படிபட்டும், அடியவர்க்கும் அடியவனாகி அடிமைத்திறம் பூண்ட தன்மை. இவ்எளிமைத் திறத்தையே மணிவாசகர், 'தாயினும் சாலப்பரிந்து' எனக் குறித்தருளினார்.*

**வயலூரனே திருஆவினன்குடி வாழ்வோன்**

*நாளும், பொழுதும், நொடிப்பொழுதும் தவறாமல் திருமுருகனின் திருப்புகழையே பாடும்படியான பேற்றினைத் தமக்குத் தந்தருளியவன் வயலூர்ப் பெருமான். அவனே, திருஆவினன்குடியிலும் வீற்றிருந்து அருள்கின்றான் என்பதை, 'கோலகுங்கும' திருப்புகழில்,*

*"பாதபங்கய முற்றிட வுட்கொண்*
*டோது கின்ற திருப்புகழ் நித்தம்*
*பாடு மன்பது செய்ப்பதியிற்றந் தவனீயே"*

*எனச் சுவாமிகள் குறித்தருளியுள்ளார்.*

**வயலூரனே திருப்பழநியிலும் அருள்கின்றான்**

*வயலூரனே திருப்பழநி மலையிலும் நின்றருள்வதாகச் சுவாமிகள் பெற்ற அருளனுபவம், 'குறித்த மணி' எனத் தொடங்குகின்ற திருப்புகழில்,*

*"திகழ்படு செய்ப்பதிக்குள் எனைத்*
*தடுத்தடிமைப் படுத்த அருட்*
*டிருப்பழிநிக் கிரிக்குமரப் பெருமாளே"*

*என இடம்பெற்றுள்ளது.*

**ஜெபமாலையும் தந்தருளியவன்**

*திருஆவினன்குடியின் குன்றுகளெங்கிலும், திருக்குமரனின் திருக்காட்சியானது நீக்கமற நிறைகின்ற அற்புதத்தைச் சுவாமிகள் உணர்ந்தார். 'திருவாவினன்குடிக் குன்றுகளெங்கிலுமே வளர்ந்தருள் பெருமாளே' எனப் பாடிக் களித்த நிலையில், திருஆவினன்குடிப் பெருமான் அவருக்குச் செபமாலையும் தந்தருளினான்.*

*"ஜெபமாலை தந்த சற்குருநாதா*
*திருவாவினன்குடிப் பெருமாளே"*

*என்னும் கூற்று, 'அபகார நிந்தை' திருப்புகழில் இடம்பெற்றுள்ளது.*

**அருள்ஞான இன்பமது அருள்வாய்**

*அச்சம் கொண்டு அழைத்தால், முன்தோன்றி ஆற்றுகின்ற திருவருளும், உன்னையே நினைக்கின்ற அறிவுப் பெருக்கமும், அறிவினில் நின்று இனிக்கின்ற அருள்ஞான இன்பமும் தந்தருள வேண்டும் எனச் சுவாமிகள் பழனிப் பெருமானிடத்தில் வேண்டிப் பாடினார்.*

*“அடியேனை அஞ்சலென வரவேணும்*
*அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய*
*அருள்ஞான இன்பமது புரிவாயே”*

*என்பது, ‘சிவனார் மனங்குளிர’ என்னும் திருப்புகழின் அடிகள்.*

*‘பெரியதோர் கரி’ என்னும் திருப்புகழிலும், சுவாமிகள் பெருமானை வழிபடுகின்ற பரமஞானமாகிய இன்பத்தை வேண்டி,*

*“உனதுதாள் தொழுதிட இன்பஞானமது அருள்வாயே”*

*என விண்ணப்பித்துள்ளார்.*

**திருப்பழநிமலையில் அருளனுபவம்**

*‘நினைத்த போதில் நீ வரவேணும்’ எனச் சுவாமிகள் வேண்டியபடியே, நகையொளி சிறந்த திருமுகத்துடன் அவன் திருக்காட்சி நெஞ்சில் நிறைகின்ற திருவருள் அனுபவத்தைச் சுவாமிகள் பெற்றார். அத்திருமுகத் தரிசனத்தையும், தாமரைத் திருவடிகளையும் மறவேன்’ என்பதனை,*

*“குரம்பை மலசலம்” திருப்புகழில் குறித்துப் பாடியுள்ளார்.*

*“.............................................. மயிலேறித்*
*தழைத்த சிவசுடர் தனையென மனதினில்*
*அழுந்த உரைசெய வருமுக நகையொளி*
*தழைந்த நயனமும் இருமலர் சரணமு மறவேனே”*

*என்னும் அடிகள், சுவாமிகளின் அன்புறுதிக்குச் சான்றாவன. அவ்அன்புறுதியால், பழநிப்பெருமானே தமக்குத் திருவடி சூட்டவும் சுவாமிகள் பேறு பெற்றார். ‘எனது தலையிற் பதங்கள் அருள்வோனே’ என்பது, ‘களபமுலை’ திருப்புகழில் அமைந்த அகச்சான்று. இப்பேரின்பப் பரவசத்தின் வெளிப்பாடே, ‘குன்றுங்குன்றும்’ என்னும் சந்தச்சுவை ததும்பும் இனிய திருப்புகழாகும்.*

**திருப்புகழில் பழநித் திருமலை வரலாறு**

*ஞானப்பழத்துக்காக வெகுண்டு, குமரப்பெருமான் பழநித் திருமலையில் நின்ற அருள் வரலாறு, ‘புடவிக் கணி’த் திருப்புகழில் இடம்பெற்றுள்ளது.*

*“பரன் வெட்கிட வுளம் மிகவும் வெகுண்டக்*
*கனியைத் தரவிலையென.............. பழநிச் சிவகிரி*
*தனிலுறை கந்தப் பெருமாளே”*

*என்று பாடி, சுவாமிகள் பழநிமலையின் அருள் வரலாற்றைப் பதிவு செய்துள்ளார்.*

**திருப்புகழில் அடியவரின் அருட்புகழ்**

*'ஆதாளிகள்' எனத் தொடங்குகின்ற பாடல் முதலாக, 'பாரியென' எனத் தொடங்குகின்ற பாடல் வரையிலான, ஐந்து திருப்புகழிலும் சுவாமிகள், முருகப் பெருமானை, 'வீரையில் எழுந்தருளியுள்ள பழநிப் பெருமாளே' எனக் குறித்தருளியுள்ளார்.*

*வீரை நகரானது, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த சிவத்தலம். இது, திருப்பெருந்துறைக்கு மேற்கே, பார்த்திபனூருக்கு அருகில் அமைந்துள்ளது. அத்திருநகரில் வாழ்ந்த அடியார் ஒருவர், அங்கு பழநித் திருப்பெருமானின் திருஉருவை அமைத்து வழிபட்டு வந்தார். அத்துடன், அவர் சுவாமிகளுக்குத் தோழராகவும் விளங்கினார். அவரைச் சுவாமிகள், 'கலிசைச் சேவகன்' என்றும், 'காவேரிச் சேவகன்' என்றும் போற்றியுள்ளார்.*

**திருப்புகழில் கலிசைச் சேவகனார்**

*கலிசைச் சேவகனார், மன்மதனை ஒத்த அருளழகு வாய்க்கப் பெற்றவர். மேகத்துக்கு இணையான கொடைவன்மை கொண்டவர். தமது செல்வத்தைக் காற்றினும் கடிய வேகத்தில் இரப்போர்க்கு வழங்குகின்ற புரவலனாகிய பாரியை ஒத்த வள்ளன்மை உடையவர். அவர்தம் உள்ளத்தில் வீற்றிருக்கின்ற, வீரைநகர் வாழ் பழநிப்பெருமாளே எனச் சுவாமிகள் போற்றியுள்ள திறத்தால், கலிசைச் சேவகனாரின் பக்தித்திறமும் புலனாகும்.*

*"மேகநிக ரானகொடை மானாய காதிபதி*
*வாரி கலி மாருத கரோபாரி மாமதன*
*வேள் கலிசை வாழவரு காவேரி சேவகன துளமேவும்....*
*........வீரைநகர் வாழ்பழநி வேலாயு தாவமரர் பெருமாளே",*
*"கலிசைவரு காவேரி சேவகனோ டன்பு புரிவோனே" (122)*

*என்பன சுவாமிகளின் அருள்மொழிகள்.*

**முத்தமிழ் வித்தக முருகன்**

*சிவனருளால் முருகப்பெருமான், 'ருத்ரஜன்மர்' எனப் பெயர்க்கொண்டு, ஊமைப்பிள்ளையென வளர்ந்து, 'இறையனார் அகப்பொருள்-இன் உண்மைப் பொருளைச் சங்கப் புலவோர்க்கு உணர்த்திய வரலாறை, சுவாமிகள், 'கடலைச் சிறைவைத்து' என்னும் திருப்புகழில் மொழிந்துள்ளார். மேலும், இத்திருப்புகழில் அமைந்துள்ள கண் குறித்த வருணனையானது, சுவாமிகளின் கவித்திறத்துக்குச் சான்றாகும். மேலும், இத்திருப்புகழில்,*

*"தமிழ்த் த்ரயத்து அகப்பொருள் வ்ருத்தியினை உணர்*
*வித்தருள் வித்தக சற்குரு நாதன்'*

*எனப்பாடி, முருகப்பெருமானே, அகத்தியர் முதலான தமிழ்ப்புலவர்க் கூட்டத்துக்கும் முதலாகிய 'தமிழ்க் குருநாதன்' என்பதனை விளங்கச் செய்துள்ளார்.*

**திருஞானசம்பந்தன் என நின்ற சிறப்பு**

*செந்தமிழில் சிறந்த திருப்பதிகங்கள் பாடும்படியான திருவருளையும் திருஞானசம்பந்தருக்கு ஞானப்பாலொடு அம்மை, சுரந்தருளிய சிறப்பினையும் சுவாமிகள், 'பகர்தற் கரிதான' என்னும் திருஆவினன்குடித் திருப்புகழில் குறித்துள்ளார்.*

*"பலதிசை மெச்சத் தெரிந்த செந்தமிழ்*
*பகரென இச்சித் துகந்து கொண்டருள்*
*பழநியில் வெற்பிற் றிகழ்ந்து நின்றருள் தம்பிரானே'*

*எனப் பாடிக் களித்தும் ஆறாத வேட்கை கொண்டவராய், மேலும் திருஞானசம்பந்தரின் அருள்வாழ்வை விரித்துரைத்துள்ளார்.*

*அம்மை, தாம் வழங்குகின்ற ஞானப்பாலை உண்ணுக; இஃது, ஞானத்தைத் தரும் என்று அறிவுறுத்தியதாகவும் சுவாமிகள் மேலும் பாடியுள்ளார்.*

**திருவடி சூட்டியருள்வாய்**

*நினது திருப்புகழைப் பாடுகின்ற பெரும்பேறு என்றும் நிலைக்க வேண்டும். அதற்கு நினது திருவடியையும் சூட்டியருள வேண்டும் எனச் சுவாமிகள், பழநிப் பெருமானிடத்தில் வேண்டினார்.*

*"தண்டை யணிபாதம்*
*எனது தலைமிசை யணிந்து அழுதழுது உனது அருள்விரும்பி*
*இனிய புகழ்தனை விளம்ப அருள்தாராய்,*

*என்பது, 'விரை மருவி' திருப்புகழில் அமைந்த திருவாக்கு.*

**பழநித் திருமலையே ஆறெழுத்தின் திருஉரு**

*'சிறுபறையும்' திருப்புகழில் அகத்தியர் அருச்சித்துப் பேறு பெற்ற வரலாற்றைச் சுவாமிகள் குறித்தருளியுள்ளார். முருகனை அருச்சிக்க, அவனது ஆறெழுத்துத் திருநாமமே சாலச் சிறந்தது என்னும் கருத்து மேலெழுந்த வேளையில், பழநித் திருமலையே, ஆறெழுத்தின் திருஉருவாகவும் விளங்கவல்ல அருட்சிறப்பை உணர்ந்து பாடியுள்ளார்.*

*"சரவணபவா வென்று வற்கரமும் ஆகிவளர்*
*பழநிமலை மேனின்ற சுப்ரமணி யாவமரர் பெருமாளே"*

*என்றமைந்த சுவாமிகளின் திருவாக்கு, பழநித் திருமலையைக் 'கண்ணாரக் காண்பதும் பெரும்பேறு' என்பதனை வலியுறுத்தும்.*

**பாடும் பணியே பணியாய் அருள்வாய்**

*'கலகவாள் விழி' திருப்புகழில், முருகனது திருப்புகழைக் கூறவல்ல அருள் நூல்களை ஆராய்கின்ற பணியே பணியாக வேண்டும். அதற்கென, இடர் தொலைந்த நல்வாழ்வை அருள வேண்டுமென முருகப்பெருமானை வேண்டியுள்ளார்.*

*"இருகண் மாயையி லேமூழ் காதே*
*யுனது காவிய நூலாராய்வேன்*
*இடர்படாதருள் வாழ்வே நீயே தரவேணும்,*

*எனப் பழநி மேவு குமாரனிடத்தில் வேண்டினார். 'ஏமவைகல் பெறுக யாம் எனவே' என்பது பரிபாடல். அதாவது, திருவருள் துணைமிக்க வாழ்நாளை வேண்டுவதாகப் புலவர் பரிபாடலில் விண்ணப்பித்துள்ள நிலையும் இங்கு உணரத்தக்கது.*

**திருவடியைப் பற்றுவதும் எந்நாளோ?**

*உடலாகிய கட்டை, இடுகாட்டில் விறகுக் கட்டைகளுக்கு இரையாகிச் சாம்பலாவது என்பதனை 'சகடத்திற்' திருப்புகழில் சுட்டியுள்ளார். 'அகல்வினை' எனத் தொடங்குகின்ற திருப்புகழில், 'பிறவியென்னும் பெருவினை நீங்க, தேன்நிறைந்த வெட்சி, குரா முதலான மலர்களிட்டுப் பெருமானின் திருவடியைப் பற்றும்படியான நாளென்று வாய்க்குமோ?' எனச் சுவாமிகள் வேண்டியுள்ளார்.*

*இத்திருப்பாடலில் குதிரை முகம் கொண்ட பெண் பூதத்திடமிருந்து நக்கீரரைக் காத்தருளிய வரலாறும், திருஞான சம்பந்தரென வந்து, திருக்குறளினும் மேலான திருப்பதிகங்கள் வழங்கி, வையையாற்றிலும் ஏடு எதிரேறி நிற்கச் செய்த பெருமாளே எனப் பழநிப் பெருமானைப் பணிந்துள்ளார்.*

*"முப்பால் செப்பிய கவிதையின் மிக்காரத்தினை எழுதி*
*மனத்தே எற்றிய பெருமாளே'*

*என்பது சுவாமிகளின் திருவாக்கு.*

**பக்தியிலும் உறுதித்திறம்**

*'அதல விதல' என்னும் திருப்புகழில், பெருமான், அணுவுக்குள் அணுவாய் நின்றிலங்குகின்ற பரத்துவத்தை அவன் உணர்த்தவே தான் உணர்ந்ததாகவும், அவன் உணர்த்திய வகையால் அவனது பெருந்திறத்தைத் திருப்புகழாகப் பாடவும்*

*துணிந்ததனை நினைந்து அன்பு பெருக்குகின்றார். அந்நன்னிலையிலிருந்து நீங்கி, கீழான உலகியலை ஒருபோதும் தான் மனதாலும் நினையேன்' எனச் சுவாமிகள் பெருமானிடத்தில் கொண்ட பக்தித்திறத்தை உறுதிபடச் சாற்றியுள்ளார்.*

*"........................................................ உணர்வில்*
*உணரும் அனுபவமனம் பெற்றிடும் படியை வந்து நீமுன்*
*உதவ இயலினில் செஞ்சொற்ப்ர பந்தமென*
*மதுர கவிகளில் மனம் பற்றி ருந்து புகழ்*
*உரிய அடிமையுனை யன்றிப் பிரபஞ்சமதை நம்புவேனோ'*

*என்றமைந்த சுவாமிகளின் அருள்வாக்கு, உலகியலை நீத்த உயிர்ப்பேரின்ப வாழ்வுக்கு வகை செய்யும்.*

### அன்புரிமை பாராட்டல்

*'அறமிலா' எனத் தொடங்கும் திருப்புகழில் பழநிமலைக்குமரனை, 'பெரியநாயகி பெற்ற பழநி மாமலையுற்ற பெருமாளே' எனப் போற்றியுள்ளார். 'ஆறுமுகம்' என்னும் திருப்புகழில், அடியார் உற்ற துயரினைச் சடுதியில் தீர்த்தருளாவிடில், உன்னைப் புகழ்பவர் யார்? எனச் சுவாமிகள் பெருமானிடத்தில் அன்புரிமை பாராட்டியுள்ளார்.*

*"ஏழைகள் வியாகுலம் இதேதெனவினாவில் உனை*
*ஏவர் புகழ்வார்"*

*என்றமைந்த கூற்று அன்புரிமையின் வெளிப்பாடு.*

### ஆறுமுகம் என ஓதித் திருநீறணி

*ஆறுமுகம் என்னும் திருப்பெயரினை, ஆறுமுறை ஓதித் திருநீறு அணிந்தால் தொல்லை வினை எளிதில் தீரலாம் என்ற அருள்விடையினையும் சுவாமிகள் மொழிந்துள்ளார்.*

*"ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்*
*ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி*
*ஆகம்அணி மாதவர்"*

*என்பது சுவாமிகளின் திருவாக்கு.*

### பாடும் பணியே பணியாய் அருள்வாய்

*'இத் தாரணிக்குள்' என்னும் திருப்புகழில் உடல்சுமந்து, இறுதியில் சாம்பலாகி நீரில் கரைகின்ற பாசமாகிய வாழ்வினை நீக்கி, தமிழ்க்கவிதையால்*

*திருமுருகனருளைப் பரவிப் பணிந்துருகத் திருவருளைத் தந்தருள வேண்டியுள்ளார்.*

*"நீரிற் படிந்துவிடு பாசத் தகன்றுனது*
*சற்போ தகப்பதும் முற்றே தமிழ்க்கவிதை*
*பேசிப் பணிந்துருகு நேசத்தை யின்றுதர இனிவரவேணும்"*

*எனப் பாடியதோடு, பெருமான் ஒவ்வொரு உயிருக்கும் உயிராக விளங்கவல்ல பெருந்திறத்தை, 'ஆவி சுற்றும் ஒளியாகி' என்றும், 'அடியவர் ஆவிக்குள் நின்று உலவிவரு பெருமாளே' என்றும் சுட்டியுள்ளார்.*

**மெய்யுடை வாழ்க்கை அருள்வாய்**

*'கரியமேகமதோ' என்னும் திருப்புகழில், குற்றம் உள்ளவனாக நூறு ஆண்டுகள் வாழ்வதினும், மேம்பட்டவன் அடியவனாக விளங்கி விரைவில் உனது தாமரைத் திருவடிகளை அணைய அருள்புரிவாய் என வேண்டுபவராகச் சுவாமிகள்,*

*"மடவாருடன் மிகநாடி*
*கசட னாய்வய தாயொரு நூறுசெல்*
*வதனில் மேலென தாவி நீயிரு*
*கமல மீதினி லேவர வேயருள் புரிவாயே"*

*எனப் பாடியுள்ளார்.*

**திருப்புகழ் இசையால் திருவருள் இன்பம்**

*கரியினை எனத் தொடங்குகின்ற திருப்புகழில் பழநிமலைப் படிகளில் குரங்கினம் பலாக்கனியைப் பிளந்துண்டு மகிழ்கின்ற காட்சியைப் பதிவுசெய்து மலைவளத்தைச் சுட்டியுள்ளார். 'கருப்பு விழில்' என்னும் திருப்புகழில், முருகப் பெருமானின் திருக்கருணைக்கு, ஆளாவதற்குச் சிறந்த வழியொன்றினைச் சுவாமிகள் சுட்டியுள்ளார்.*

*திருப்புகழை உரைப்பவர், படிப்பவர்தம் வறுமையும் பகைமையும் நீக்கவல்ல பெருமானாக, பழநி மலையுறை முருகப்பெருமான் விளங்குகின்றான். அவன் இசைப்பிரியன். ஆதலால், திருப்புகழை இசையுடன் பாடிப் பணிந்தால் இன்பநிலை பெறலாம்.*

*"இசைப்பிரிய திருத்த மாதவர் புகழ் குருநாதா"*

*என்று திருப்புகழ் இசைவழிபாட்டு நெறியினைச் சுவாமிகளே முன்மொழிந்துள்ளார் எனலாம்.*

*கந்தர் அந்தாதியிலும் சுவாமிகள்,*

*முருகப் பெருமானை 'ராக விநோதன்' எனப் போற்றியுள்ளமையும் இங்கு நினையத்தக்கது.*

*இக் 'கருப்புவிழில்' என்னும் திருப்புகழானது, மூன்று திருப்புகழ்ப் பாடல்களாக அமையவல்லது. இதன் ஒவ்வோர் அடியின் இறுதியிலும் உள்ள தொடரைத் தனித்தனியே வகுத்தமைத்தால், அத்தொடர்கள் இணைந்து தனியொரு பாடலாக அமைகின்ற சிறப்புள்ளது.*

**திருவடி சூடுவதில் தீராத ஆவல்**

*'குருதி மலசலம்' என்னும் திருப்புகழில், மாயையும், வினையும் தொடர்ந்து வந்துத் தம்மைத் தாக்காதிருக்க வேண்டும் எனவும், அதற்கெனத் திருவருள் அனுபவத்தில் எப்போதும் தம்மை மறந்து பிரிப்பின்றி ஒன்றியிருக்க வேண்டும். அதற்குக் கருவியாகவுள்ள திருவடியை மீண்டும் தமக்குச் சூடியருள வேண்டும் எனச் சுவாமிகள் பழநிமலைப் பெருமானிடத்தில் வேண்டினார்.*

*அருணையிலும், வயலூரிலும் திருவடி சூட்டப்பெற்றும், பழநித் திருமலையில் மீண்டும் மீண்டும் அத்திருவடிப் பேற்றினை அடிகள் நாடியமை தீராத பேரின்ப ஆவலுக்குச் சான்று.*

*சுந்தரர் பெருமானுக்குச் சிவபெருமானார் பலகாலம் திருவடி சூட்டி அருளியது நினையத்தக்கது. 'உணர்ந்தார்க்கு உணர்வறியோன்' என்பது திருக்கோவையார். இறைவனை உணர்தலாகிய அருளனுபவமானது, ஒவ்வொரு அணுப்பொழுதும் அறிதொறும் அறியாமை கண்டற்றால் என்பது போல, புதுமைத்தாய் விளங்கவல்லது. அத்தகைய, பரம்பொருளின் திருவருள் இன்பத்தை சுரக்கவல்லது இறைவனின் திருவடியே. இதனை உணர்ந்தே சுவாமிகள், திருவருள் அனுபவ நிலைப்புக்கான ஏதுவாக, திருவடி சூடுதலைப் பழநிமலைப் பெருமானிடத்தில் மீண்டும், மீண்டும் வேண்டி நின்றார்.*

*"மனது துயரற வினைகள் சிதறிட*
*மனத பிணியொடு கலைகள் சிதறிட*
*மனது பதமுற எனது தலைபதம் அருள்வாயே"*

*எனப் பழநிப் பெருமானிடத்தில் வேண்ட, அவனும் அவ்வண்ணமே திருவடி சூட்டி தமது திறத்தை, 'களப முலை' எனத் தொடங்குகின்ற திருப்புகழில் குறித்தருளியுள்ளார்.*

*"சிவ வெற்பமர்ந்த குகவேலா*
*எனது தலையிற் பதங்கள் அருள் வோனே"*

என்பது, சுவாமிகளின் பரமானந்தப் பரவசப் பெருவாக்கு. மேற்கண்ட தொடரில், 'சினவெற்பு' எனப் பழநித் திருமலைக் குறிக்கப்பெறுகிறது. இடும்பன் சுமந்து வந்த சிவமலை, சக்தி மலை ஆகியவற்றுள் சிவமலையே பழநி என நிலைகொண்டது என்பது வரலாறு.

ஆறுமுகமும், பன்னிரு தோளும், மலர்மாலையும் விளங்குகின்ற திருவருட் பொலிவோடு, அகம் குளிர, அமுத மொழியால் உபதேசமும் வழங்கி, திருவடியும் சூட்டியருள்க என்பதனை, 'சிறுபறையும்' என்னும் திருப்புகழில்

"இனியமொழி செப்பிச் சிவத்தபத மருள்வாயே"

எனச் சுவாமிகள் பாடியுள்ளார்.

### யோக ஞானப் பரவச மொழிகள்

'குழலடவி' என்று தொடங்கும் திருப்புகழில் அமைந்த சிலேடை நயமானது சுவாமிகளின் சொல்நயத்துக்கும், பொருள் நயத்துக்கும் சான்றாகும்.

'சிந்து கூர' என்னும் திருப்புகழில், 'தண்டமிழ்சேர் பழநி' எனச் சுவாமிகள் பழநித் திருமலையைப் போற்றிப் பரவியுள்ளார்.

'ஞானங்கொள்' என்னும் திருப்புகழும், 'மூலங்கிளர்' என்னும் திருப்புகழும் சுவாமிகளுக்கு யோகஞான சித்திகள் கைவரப்பெற்ற அருளனுபவத்தைக் குறிப்பன.

### வழிவழி அடிமையாக ஆட்கொண்டான்

'நிகமம்' எனத் தொடங்குகின்ற திருப்புகழில், 'ஆணவமலத்தின் உருவாக நின்று நாளும் மலம் கலங்கிய சிறுமையையும் நினையாது, பழநிமலைப் பெருமான், தம்மை வழிவழி அடிமையாக ஆட்கொண்டான்' எனப் பாடியுள்ளார்.

"மலரூபம் வரவர மனத்திகைத்த பாவியை
வழியடிமை கொண்டு (மிக்க மாதவர்)
வளர் பழநிவந்த கொற்ற வேலவ பெருமாளே"

என்றமைந்த அருள்வாக்கு, 'அனைத்து உயிர்க்கும் ஆணவமலச் சிறுமை நீங்க பழநிப் பெருமானின் திருவருள் துணை என்றும் உண்டு' என்பதனை உறுதிபட சாற்றும்.

### திருவருள் விண்ணப்பம்

உள்ளம் குளிரவும், ஊன் உருகவும், மேலான மெய்யறிவைத் தாயன்புடன் தமக்குத் தந்தருள வேண்டும் என்னும் திருவருள் விண்ணப்பத்தைச் சுவாமிகள்,

'நெற்றி வெயர்த்துளி' என்னும் திருப்புகழில் வேண்டியுள்ளார்.

"உச்சித மெய்ப்புற அனைத் தயாவுடன்
மெய்ப்படு பத்தியினிணக்க மே பற
வுட்குளிர் புத்தியை யெனக்கு நீதர வருவாயே
நற்பழநிப் பதிசெழிக்க மேவிய பெருமாளே"

**சிவலோகம் புக ஆசை**

'பஞ்ச பாதகன்' என்னும் திருப்புகழில், 'சிறுமையேனாகிய யானும், சிவலோகம் புகக் கொண்ட ஆசையினை அறிவாய்' எனப் பழநிப் பெருமானிடத்தில் விண்ணப்பித்துள்ளார்.

"அண்டர் மாலயன் தேடிஅறியாத ஒளி
சந்த்ர சேகரன் பாவை விளையாடு படி
கந்த நாடுடன் கூடிவிளை யாடஅருள் புரிவாயே"

வானவரும், மாலும், நான்முகனும் தேடியும் காணாத சோதியாகிய பிறையணி பெம்மானும், பாவையாம் உமையும் கூடி விளையாடுகின்ற, படிகம் போன்ற வெள்ளொளிமிக்கது சிவலோகம். அங்குள்ளோருடன் தாமும் கூடி விளையாட அருள்புரிய வேண்டுமெனச் சுவாமிகள், மேற்கண்ட பழனித் திருப்புகழில் பாடியுள்ளார்.

**சொல்மாலை சூடி மகிழ்வோன்**

'மலரணி' என்னும் திருப்புகழில், பழனிமலைப் பெருமான், பொற்பதக்கம், ஆரம் முதலான பொன்மாலைகளோடு, தாம் பாடித் தருகின்ற திருப்புகழ்ச் சொல் மாலைகளையும் சூடி மகிழ்கின்றான் என நெஞ்சுருகியுள்ளார்.

"பலபல பைம்பொற் பதக்கம் ஆரமும்
அடிமை சொலுஞ்சொற் றமிழ்ப் பனீரொடு
பரிமள மிஞ்சக் கடப்ப மாலையும் அணிவோனே"

"மங்கைக் கதித்த மாமலையொடு............
பழநியில் அன்புற்றிருக்கும் வானவர் பெருமாளே"

இத்திருப்புகழில், 'கதித்த மலை' என்றமைந்த சொல்லாட்சியானது, கோவை இரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள முருகவேள் திருத்தலம் என்பது, தணிகைமணி அவர்களின் ஆய்வுக் குறிப்பு.

**சுவாமிகளின் சொல்லழகு**

சுவாமிகள் 'முருகுசெறி' என்னும் திருப்புகழில்,

'அமளிபடும் அமளி மலரணையின் மிசை துயிலுகினும்
அலர்கமல மலரடியை மறவேனே'

எனப் பாடியுள்ளார். இதிலமைந்த, 'அமளிபடும் அமளி' என்பதில், 'அமளி' என்பது, ஆரவாரப்படுகின்ற என்றும், படுக்கை என்றும் இருவேறு பொருள் தருகின்ற ஒரு சொல்லாகும்.

ஆரவாரம் மிக்க அமளியில் அணைகின்ற சிற்றின்பத்தைக் காட்டிலும், நினது திருவடித் தாமரையில் அணைவதே பேரின்பம் என்று கூற விழைந்தே சுவாமிகள் இச்சொல்லாட்சியைக் கையாண்டுள்ளார். இச்சொற்பெருக்கானது, நாமும், திருவடிப்பேற்றினை நோக்கி, மெய்யறிவு கொள்வதற்குச் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியது எனலாம்.

**அழைத்தால் உன்னைப் பெறலாம்**

'வரதா மணி நீ' எனப் பழநிப் பெருமானை அழைத்தால் பெறற்கு அரிய பொருளையும் பெற்று மகிழலாம் என்பது, சுவாமிகளின் அருளனுபவப் பெருவாக்கு.

இவ்வாறு, மேற்சுட்டிக் கூறப்பெற்றத் திருப்புகழ்ப் பாடல்கள் அல்லாமல், பழநித் திருமலைக்கென்று அமைந்த பிற திருப்புகழ்ப் பாடல்களும் உள. அவற்றுடன், 'நாலி லிங்கத்தின்' என்னும் திருப்புகழின் அநுபந்தப் பாடல் ஒன்றையும் சேர்த்தால், பழநியம்பதிக்கு 96 திருப்புகழ்ப் பாடல்கள் சுவாமிகளால் அருளப்பட்டுள்ளன எனப் பொதுநிலையில் உரைக்க இயலும். அவற்றுள் பாடல்கள் அருளப்பட்ட தலத்தின் அடிப்படையில், பாடல் எண்ணிக்கையைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திருஆவினன்குடி, பழநித் திருஆவினன்குடி | - | 13 |
| 2. | சிவமலை, சிவவெற்பு, சிவகிரி<br>(பழநிக்கும் இத்திருப்பெயர் உண்டு)<br>(சிவகிரி எனத் தனித்தலமும் உளது) | - | 4 |
| 3. | பழநிச் சிவகிரி | - | 2 |
| 4. | வீரை - வீராபுரி - பழநி | - | 6 |
| 5. | பழநி, பழநிமலை, பழநிப்பதி, பழனாபுரி | - | 71 |
| | | | 96 |

இவ்வாறு, திருப்புகழ்ப் பாடல் வரிசையில் அமைந்த திருத்தலங்களில் பழநிமலைக்கே அதிகப் பாடல்கள் அமைந்துள்ளமை, சுவாமிகள் அதிக காலம் இத்திருத்தலத்தில் தங்கி இருந்திருக்க வேண்டும் என்னும் கருத்துக்கு அணி செய்வதாகும்.

# பழனித்தல புராணம் - ஓர் அறிமுகம்

டாக்டர். **இரத்தின கிருட்டிணமூர்த்தி**
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்
அ.ப..ஆ.க.ப. கல்லூரி, பழனி.

*அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி எழுந்தருளியுள்ள பழனியம்பதி முருகனின் ஆறுபடை வீடுகளுள் மூன்றாவது ஆகும். தொல்காப்பியர் முருக வழிபாட்டைக் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியங்களிலும் முருக வழிபாடு குறிக்கப்படுகிறது. தமிழர் முருக வழிபாட்டில் ஈடுபாடு கொண்டவர் என்பதை வேறு சான்றுகளாலும் அறிய முடிகிறது. எங்கெல்லாம் அழகும் இன்பமும் காட்சி தருகிறதோ அங்கெல்லாம் முருகன் உள்ளான் என்பதாக நம் சான்றோர் இயம்புவது நினைத்தற்குரியது. உண்மையே அழகு. அழகே உண்மை என்ற கோட்பாடு தமிழர்தம் தொன்மைப் பண்பாடு.*

*“ஆவினன்குடி அசைதலும் உரியன்” என்பது திருமுருகாற்றுப்படை. ஆவியர் குடியைச் சேர்ந்த வையாவிக் கோப்பெரும் பேகனும் அவன் மரபினரும் ஆட்சி செய்த பகுதியாகப் பழனியும் அதனைச் சார்ந்த பகுதிகளும் குறிப்பிடப் படுகின்றன. ‘பொதினி’ என்ற பெயரால் பழனி அழைக்கப்பட்டது என்பதை அகநானூற்றில் காண முடிகிறது.*

*இத்தகைய தொன்மை வாய்ந்த பழனியம்பதி குறித்து எழுதப் பெற்ற நூல் பழநிப் புராணம் என்பதாகும். பழனித்தல புராணம் எனப்படுவதும் இந்நூலேயாம். இந்நூலை அறிமுகப்படுத்தும் அளவில் இக்கட்டுரை எழுதப்பட்டது என்க.*

*இன்றைக்குப் பழனித் தல வரலாற்றை நிறைவாக எடுத்துரைப்பது இந்நூல் எனலாம்.*

### தலபுராண ஆசிரியர்

*பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாலசுப்பிரமணியக் கவிராயர் என்பார் முருகனடியார்கள் வேண்டுகோளை ஏற்றுப் பழனிப்புராணம் என்ற நூலை இயற்றினார். பழனித் திருக்கோயிலில் அகம்படித் தொழிலும், தேவார திருவாசகங்கள் ஆகிய திருவருள்நெறித் தமிழ்வேதத்தை நியமப்படி ஓதுதல் தொழிலிலும் அமர்ந்திருந்த பெரிய கவிராயர் என்பார் இவர் தந்தையாவார். பாலசுப்பிரமணியக் கவிராயர் வடமொழி தென்மொழிகள் ஆகியவற்றின் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தெளிந்தார். திருவாவடுதுறைச் சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் இடத்தே சிவஞானபோதம் முதலிய மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கனையும், சிவாகமங்களையும் நன்குணர்ந்து வேதாந்தத் தெளிவான அத்துவித மதம் சைவசித்தாந்தமே என்று மனங்கொண்டார்.*

*அக்கதீபிகை, சைவசித்தாந்த தரிசனம், பஞ்சராத்திர மதசபேடிகை, வேதாந்த சித்தாந்த சமரச தீபம், மாயாவாத சகசிர தூஷணி, குகோத் கர்ஷம் கூவிளநீப மகாத்மியம் என்னும் நூல்களை இயற்றினார். தஞ்சாவூர் அரச சமஸ்தானத்தார் 'கவிராசன்' எனும் பட்டம் வழங்கி இவரைப் பாராட்டினர். சேர சமஸ்தானத்தின் நன்மதிப்பினைப் பெற்றார். பிள்ளை லோகாசிரியர் என்னும் வடமொழி வாணரை இவர் வாதில் வென்றதாகவும், திராவிட வேத நிர்ணயம் என்னும் கிரந்தத்தை இயற்றியதாகவும் கூறுவர்.*

*பழனி மான்மியங்களை விரித்து ஒரு புராணம் பாடுக என்று முருகனடியார்கள் வேண்டினர். முருகனின் புகழ்களையெல்லாம் பாட வேண்டும் என்ற ஆர்வம் உந்த, பாலசுப்பிரமணியக் கவிராயர் கந்த புராணத்தில் கிரிப் பிரகாச காண்டத்தில் இருபத்தினான்காம் அத்தியாயத்தில் விவரிக்கப் பெற்ற வராககிரி மான்மியத்தை நன்கு அறிந்து பழனிப் புராணத்தை மூன்று நாட்களில் பாடி முடித்தார் என்பர்.*

*கொங்கார் பழநிக் குடியார் முதுக்குறைவோர்*
*எங்கார் மயிற்கடவு ளின்பழநி - மங்காத*
*நற்புகழைச் செய்யெனமூன் றாநாளி நல்கிட்டான்*
*சிற்புகழான் மெய்ப்புலவன் தேர்*

*என்னும் வெண்பா கவிராயர் பழனிப் புராணம் படைத்த செய்தியைக் குறிக்கின்றது.*

**நூல் தோன்றிய காலம்**

*இப்புராணத்தின் மூன்றாம் பதிப்பு யாழ்ப்பாணத்து மேலைப் புலோலி நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் இயற்றிய பொழிப்புரையுடன் 1924-இல் வெளியிடப்பட்டுள்ளது. அறிஞர் கதிரைவேற்பிள்ளை அவர்கள் குறிப்பின்படி இன்றைக்கு முந்நூற்று நாற்பது ஆண்டுகட்கு முன் இயற்றப்பெற்ற நூல் பழனிப்புராணம் எனலாம்.*

**நூலமைப்பு**

*'ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நாற்கவிகளிலும் வல்லவராய்; கவி, கமகன், வாதி, வாக்கி என்னும் நாற்பெரும் புலமை படைத்தவராய், வடமொழி, தென்மொழி என்னும் இருமொழிப் பெருங்கடல்களின் நிலை கண்டுணர்ந்த கவிமேகமாய் பழநிப்புராணம் பாலசுப்பிரமணியக் கவிராயர் விளங்கினார்' என்பார் கதிரைவேற்பிள்ளை. ஏற்றப் பெற்ற காப்பிய இலக்கணங்கள் நிரம்பப் பெற்று சொல், பொருள், தொடை, நடை, நோக்குகள் வாய்க்கப் பெற்றுக் குமாரக் கடவுளின் பெரும் புகழையும் பழனித் தலத்தின்*

மான்மியங்களையும் நன்கியம்பும் நல்லதொரு தமிழ் ஏடாகப் பொலிகிறது பழனிப் புராணம்.

வண்டமிழ் நிலத்தில் வைகும் கந்தவேள் அடியார் கூட்டம் அவன் அருட்கடலில் மூழ்கும் பெருவாழ்வையும், பேரின்பத்தையும் அடைவதற்கு எனப் பழனிப் புராணம் பாடப் பெற்றமைக்குக் காரணம் கூறப்படுகிறது. இருபத்து மூன்று சருக்கங்களைக் கொண்ட இந்நூல் விருத்தயாப்பில் இயற்றப் பெற்றுள்ளது. கவிராயரின் கவித்திறனுக்கோர் சான்றாக விளங்குகிறது இப்படைப்பிலக்கியம்.

நூலின் தொடக்கம் வேழமாமுகவனைத் துதிக்கும் காப்புச் செய்யுளாகும். அடுத்து, கடவுள் வணக்கப் பகுதி உள்ளது. சிவபெருமான், உமையம்மை, விநாயகர் ஆகியோரை வணங்கி, வழிபடும் கவிராயர்; முருகப் பெருமானைத் தண்டபாணிசுவாமிகள், செல்வகுமாரர், ஆறுமுகநாயனார், தலைவன், குழந்தை வேலப்பர், குழந்தை வேலாயுதர், முத்துக் குமாரசுவாமி என்பதாகப் போற்றுகின்றார். வள்ளி, தெய்வானையைப் பரவுகின்றார். திருநந்தியடிகள், நவவீரர், சைவசமயக் குரவர் நால்வர், சிவனடியார், குகனடியார், சந்தானக்குரவர் ஆகியோரைப் பணிகின்றார்.

நூற்பெருமை, அதன்காலம், பெயர், காரணம் ஆகியவற்றைப் பாயிரம் பகர்கிறது. அவையடக்கம் கவிராயரது உயர்பண்பின் சான்றாகிறது.

கிரிச்சருக்கம் தொடங்கிச் சேரன்கோன் சருக்கம் முடிய இருபத்துமூன்று சருக்கங்கள் இப்புராணத்தில் உள்ளன. இச்சருக்கங்களில் நவிலப்பெறும் செய்திகள் அனைத்தும் விவரிக்கின் பெருகும் என்பது கருதி ஒவ்வொரு சருக்கத்தின் பெயர் மட்டும் பிரசுரிக்கப்படுகின்றது.

1. கிரிச்சருக்கம்
2. வராககிரிச் சருக்கம்
3. மாயாத்திரிச் சருக்கம்
4. பன்றிக்குட்டிக்குப் பால்கொடுத்த சருக்கம்
5. அருச்சுனன் தவச் சருக்கம்
6. வராககிரிச் சீவத்தான சருக்கம்
7. நதியுற்பவித்த சருக்கம்
8. கன்னிகார வனச் சருக்கம்
9. அக்கினிசேடர் அருச்சனைச் சருக்கம்
10. கௌசலசேரன் அருச்சனைச் சருக்கம்
11. திருமணச் சருக்கம்

12. நகர்செய் சருக்கம்
13. திருவாவினன் குடிச் சருக்கம்
14. பிரமேந்திரச் சருக்கம்
15. நித்திய நாதச் சருக்கம்
16. சுவணகுத்தச் சருக்கம்
17. வசுமந்தச் சருக்கம்
18. சண்முக நதிச் சருக்கம்
19. சிவகிரி சத்திகிரிச் சருக்கம்
20. மலைகள் பழனியடைந்த சருக்கம்
21. அகத்தியச் சருக்கம்
22. தீர்த்தச் சருக்கம்
23. சேரர்கோன் சருக்கம்

"எந்தஞான்றும் பரசிவன் எவ்வுயிரும் ஈன்றாள் உடனிருக்கும்
எந்தஞான்றும் ஒருதனிவேல் இறைவனரசு வீற்றிருக்கும்
எந்தஞான்றும் பொறிபுலன் எறிந்தோரிருக் கையாயிருக்கும்
எந்தஞான்றும் அடைகுநர் பேரின்பம்இசைய நுகர்விக்கும்"

தெய்வநலக்கவிஞர் பாலசுப்பிரமணியக் கவிராயர் தாம் இயற்றிய பழநித்தல புராணத்தில் திருவாவினன்குடி எனும் பழநித்தலத்தின் மாண்பினை இப்படிப் பாடுகின்றார். தமிழ்க்கடவுள் திருமுருகன் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியாக மேற்குத்திருவாசல் கொண்ட சிவகிரி எனப்பெறும் பழனி மலைக் கோயிலில் வீற்றிருப்பது, அருள்மிகு குழந்தை வேலாயுதசுவாமியாகத் திருவாவினன்குடி எனப்பெறும் சாரற்கோயிலில் அருளாட்சி புரிவது, வள்ளி தெய்வயானை ஆகியோருடன் இணைந்த நிலையில் ஊர்க்கோயிலாம் அருள்மிகு பெரியநாயகியம்மன் கோயிலில் அருள்மிகு முத்துக்குமாரசுவாமியாகப் பேரருள் காட்சி வழங்குவது ஆகிய பெருஞ்சிறப்பினை முருகனது ஆற்றுப்படை வீடுகளுள் மூன்றாவது படைவீடான பழநியில்தான் கண்டுமகிழ முடியும். சரவணப் பொய்கையும், சண்முகநதியும், பிற புனிதத் தீர்த்தங்களும் இத்தலத்தில் சிறப்புகளாக உள்ளன. பழனியப்பா, பழனியாண்டவர், பழனியாண்டி, கந்தா, முருகா, வேலா என்று முருக பக்தர்கள் பழனியம்பதிக் கடவுளை நெஞ்சுருக அழைக்கின்ற பேரொலியும் அரகர அரகர அரகரோகரா என்ற பெருமுழக்கமும் என்றென்றும் எங்கணும் பழநியம்பதியில் ஒலித்த வண்ணமிருக்கும். கந்தக் கடவுளின் திருவருளைப் பெறவேண்டும் என்னும் பேரார்வத்துடன் காவடிகளை ஏந்திய வண்ணம், அப்பெருமான் திருப்புகழைப் பாடியும், பேரானந்தத்துடன்

ஆடியும், இசைக்கருவிகளை முழக்கியும் பழநியை நோக்கிப் பாதயாத்திரையாகத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இரவு பகல் என்று நினையாமல் தங்கள் நெஞ்சமெல்லாம் பழனியாண்டவனையே எண்ணிக்கொண்டு வருகின்ற அடியார்களைக் காண்பதே பெறற்கரிய பேறாகும்.

தங்கள் வாழ்வின் வளத்திற்கு வேண்டுவன அளிக்கும் வள்ளல் என்று பழனியாண்டவனை மக்கள் வழிபடுகின்றனர். அன்புடன் தங்கள் காணிக்கைகளைச் செலுத்துகின்றனர். பழனியாண்டவன் தாங்கள் எண்ணிய வற்றை நிறைவேற்றித் தருகிறான் என்ற நம்பிக்கையுடன் நாளும் பழநிக்கு வரும் மக்கள் எண்ணிக்கை பெருகிக்கொண்டே இருக்கிறது.

தொன்மைச் சிறப்புடைய பழநித்தலத்தைப் பற்றிச் சிறப்பித்துப் பாடிய சான்றோர் பலர். பழநியில் பிறந்த பாலசுப்பிரமணியக் கவிராயர் அறிஞர்கள், முருகன் அடியார்கள் வேண்டுகோளுக்கிணங்க, பழனித்தலபுராணம் என்னும் அரியதோர் காவியத்தை இயற்றியுள்ளார். சற்றேறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்நூல் இயற்றப்பெற்றது. முருக வழிபாட்டின் மாண்பினை விவரிக்கும் இப்புராணத்தில் சைவாகம நெறியின் சீர்மையைக் காணலாம். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் தேர்ச்சி பெற்றவராக விளங்கும் இந்நூலாசிரியர் வடமொழிப் புலமை மிக்கவராயும் திகழ்ந்துள்ளார்.

பழநிதலபுராணம் 987 விருத்தப்பாக்களைக் கொண்டுள்ளது. கலிவிருத்தம், கலிநிலைத்துறை, அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம், எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம், எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம், கொச்சகக் கலிப்பா, எழுசீரடிச் சந்தவிருத்தம், நாலடித்தரவுக் கொச்சகக்கலிப்பா, அறுசீரடிச் சந்தவிருத்தம், வஞ்சி விருத்தம் ஆகிய யாப்புக்களில் இயற்றப்பெற்றுள்ள பாடல்கள் செந்தமிழ்த் திறத்தின் சீர்மைக்குச் சான்றாகும்.

உருவகங்கள், உவமைகள், பிற அணிகள், பாடல்களில் ஆளப்பெற்றுள்ளன. அவை உருக்காட்சிகளாக மலர்ந்து காவியமணம் பரப்புகின்றன. யாழ்ப்பாணம் மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் பழநித்தலப்புராணத்தின் பாடல்களுக்குப் பொழிப்புரை, விளக்கவுரை அருளியுள்ளார்கள்.



பழனி திருக்கோயில்

# வையாபுரிப் பள்ளு

## பள்ளு

*இக்காலத்தில் பள்ளு என்ற பெயரில் வழங்கும் பிரபந்தம் பண்ணை வயல்களில் உழவுத் தொழில் புரியும் மக்களின் வாழ்க்கையினை அடிப்படையாகக் கொண்டதாகும். இது உழத்தியர் பாட்டு என்றும் கூறப்பெறும். வச்சணந்தி மாலை, வெண்பாப் பாட்டியல் என்னும் நூல்களில் பள்ளுப் பிரபந்த இலக்கணம் கூறப்படவில்லை. பன்னிரு பாட்டியல் என்னும் நூல்;*

*"புரவலர் கூறி அவன் வாழியவென்று*
*அகல்வயல் தொழிலை ஒருமை உணர்ந்தனள்*
*எனவரும் ஈரைந்து உழத்திப் பாட்டே"*

*என்று உழத்திப் பாட்டிற்கு இலக்கணம் கூறுகின்றது. இவ்விலக்கணம் இப்பொழுது காணப்படும் பள்ளுப் பிரபந்த அமைப்பொடு பொருந்து மாறில்லை. பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வீரமாமுனிவர் இயற்றிய சதுரகராதியில், பள்ளு இலக்கணம் முதன் முதலாக இடம்பெறுகிறது. அதில் 'உழத்திப் பாட்டு' என்னும் பிரபந்த விளக்கத்தில் இக்காலத்துப் பள்ளுப் பிரபந்தங்களில் காணும் அமைப்பு கூறப்பட்டுள்ளது. இதனால் உழத்திப் பாட்டு என்ற பிரபந்தமும், இன்று காணும் பள்ளுப் பிரபந்தமும் வீரமாமுனிவர் காலத்தில் ஒன்றாகவே கருதப்பட்டு வந்தது என்று தெரிகிறது. பின்னர் வந்த கதிரைவேற்பிள்ளை அகராதியில் பள்ளு என்பது, உழத்திப் பாட்டாகிய பிரபந்தம் என்று விளக்கப்பட்டுள்ளது. பள்ளிசை, பள்ளேசல் என்றும் இப்பிரபந்தம் குறிக்கப்படும்.*

*இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்க் கூறுகளையும், தழுவி இப்பிரபந்தம் அமைகிறது. இதில் இடம்பெறும் பாடல்கள் சந்த இன்பமும், தாள அறுதியும், பண்நயமும் ஒருங்கேபெற்று புலமைமிக்கவர்களையேயன்றிப் பொதுமக்களையும் கவரும் தன்மையனவாய் விளங்குகின்றன. அவை பொருள் காண்பதில் சிரமம் இல்லாத எளிமையான, சேரி மொழிகளைக் கொண்டிருப்பதால் பொருளாலும் பாமரர்களைக் கவராநிற்கும். மேலும் இப்பாடல்கள் அனைத்தும் இசையோடு பாடி, ஆடி நடிப்பதற்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ளமையால், கல்லாரும் கண்டு கேட்டு இன்புற ஏதுவாக உள்ளன. இவ்வகையில் படித்து இன்புறுவதற்கும், நடித்து இன்புறுவதற்கும் ஏற்றதோர் முத்தமிழ்ப் பிரபந்தமாக இப்பள்ளுப் பிரபந்தங்கள் அமைந்துள்ளன. தமிழ்நாட்டில் இப்போது அறியப்படும் பள்ளுப் பிரபந்தத்தின் எண்ணிக்கையைப் பார்க்குங்கால், பண்ணைவாழ் பாமர மக்களிடையேயும், பண்டிதர்களிடையேயும்*

இப்பிரபந்தம் கொண்டிருந்த செல்வாக்குப் புலனாகும். பள்ளுப் பிரபந்தங்கள் மக்களுள் சிறந்தவர் ஒருவரையாவது, சிறப்புற்ற ஒரு குழுவினரையாவது பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெறும். தெய்வங்களில் ஒன்றைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இப்பிரபந்தம் அமைக்கப்படுவதும் உண்டு. இம்மூவகைக்கும் முறையே செண்பகராமன் பள்ளு, மாந்தைப் பள்ளு, முக்கூடற் பள்ளு ஆகிய பிரபந்தங்கள் எடுத்துக்காட்டாகும். பாமர மக்கள் பாடியும், ஆடியும், படித்தும், கேட்டும் இன்புறும் சுவை மிக்கதாக இருப்பதனால் சிற்றிலக்கியங்களில் பள்ளுப் பிரபந்தத்தின் எண்ணிக்கையே மிகுதியாக உள்ளது. நெல்லு வகையை எண்ணினாலும், பள்ளு வகையை எண்ண முடியாது என்ற பழமொழி இதுபற்றி எழுந்தது போலும்!

**வையாபுரிப் பள்ளு**

இப்பள்ளுப் பிரபந்தம் வையாபுரி நாட்டின் முதன்மையான ஊராகத் திகழும் பழனியில் கோயில் கொண்டுள்ள முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டதாகும். வையாபுரி நாடு இப்போதைய மதுரை மாவட்டத்திலுள்ள பழனி, கொடைக்கானல் வட்டங்களின் பெரும்பகுதியைக் கொண்டு விளங்கியது. முப்பேரரசர்களின் ஆட்சிக் காலத்தில் 'வேள்' என்னும் பெயருடைய குறுநில மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். அவர்களில் "வையாவிக்கோ" என்றும் "ஆவி" என்றும் பெயர் கொண்ட வேளிர்களால் ஆளப்பட்டமையால் இப்பகுதி 'வையாபுரி நாடு' என்றும் 'ஆவினன்குடி' என்றும் வழங்கலாயிற்று. தமிழகத்தின் ஐந்து மண்டிலங்களில் ஒன்றாகிய கொங்கு மண்டிலத்தின் 24 நாடுகளில் வையாபுரி நாடும் ஒன்று. அருணகிரி நாதரும் தம் திருப்புகழில் இதனை, "சேரர் கொங்குவை காவூர் நன்னாடதில், ஆவினன் குடி" என இன்றும் வழங்கும் பெயர் இவ்வுண்மையைக் காட்டி நிற்கின்றது. பழனங்கள் சூழ்ந்திருந்தமையின் பழனி என்று கூறப்பட்ட பெயரே இக்காலத்தில் பெரிதும் வழக்கத்திலுள்ளது. சமயச் சிறப்புமிக்க நிலையில், இதன் பெருமை கூறவந்த புராணங்கள், திரு + ஆ + இனன் + கு + டி - திருவாவினன்குடி என்று கொண்டு, இலக்குமியும் காமதேனுவும் சூரியனும் பூமியும் மதியும் வழிபட்ட தலம் என்றும், பழம் + நீ - பழநி என்று கொண்டு முருகப்பெருமான் ஞானப்பழமாய் விளங்கிய இடம் என்றும் விளக்கலாயின. காலப்போக்கில் வரலாற்று உண்மைகள் புராணங்களால் இவ்வாறு திரையிடப்பெற்றன. இப்பகுதி பன்றி மலை முதலான மலைகளையும், கல்லாறு, கானாறு, பொருந்தலாறு, பச்சையாறு, பாலாறு, வரத்தாறு என்னும் ஆறு ஆறுகள் அடங்கிய சண்முக நதியினையும், நூறு ஊர்களையும், எட்டு மங்கலங்களையும், பன்னிரண்டு பள்ளிகளையும் கொண்டிலங்கிய வளமிக்கதாகும்.

சமீன்தார்கள் ஆட்சி நிலவிய காலத்தில் (16, 17, 18-ஆம் நூற்றாண்டுகள்)

இப்பகுதி பழனிச் சமீன் எனப்பட்டு, சமீன்தார்களால் ஆளப்பட்டு வந்தது. பழனி மலைக்கு விசையகிரி, சிவகிரி, சிவாசலம், சந்திரசைலம், சித்தன் வைப்பு எனப்பல பெயர்கள் உண்டு. பழனிச்சமீனில், சமீன்பட்டம் பெற்று ஆளுமவர்கள் தம் இயற்பெயருக்கு முன்னால், 'விசையகிரி' என்ற அடைமொழியினையும், பின்னால் ''சின்னோவள் ஐயன்'' என்ற அடைமொழியினையும் சேர்த்து வழங்கப்பட்டார்கள். சின்னோவள் என்பது, அச்சமீன்தார்களின் குலதெய்வப் பெயராகும். அப்பெயர் தலைவன் என்ற பொருள்படும், ஐயன் என்ற பெயரோடு சேர்ந்து சின்னோவள் ஐயன் என்றாகிப் பின்னர் "சின்னோவையன்" என்று திரிந்து, இறுதியில் 'சின்னோவன்' என்று மருவி வழங்கலாயிற்று. இப்பள்ளு நூல் ஆசிரியர், தம் பாட்டுடைத் தலைவனாக, பழனிச் சிவகிரி முருகையனைக் கொண்டிருப்பதனைக் காப்புப்பாயிரச் செய்யுள்களாலறியலாம். அதனால் இது 'வையாபுரிப் பள்ளு' என்னும் பெயர்பெற்று விளங்குகிறது.

**நூலாசிரியர்**

பழனிச்சமீன் ஆட்சி மரபில் வந்த குமார விசையகிரி வேலச்சின்னோவன் இப்பிரபந்த ஆசிரியராவர். இதனைத் தம் நூலில் அவரே 'சுப்ரமண்யன் விசையகிரி வேலச்சின்னோவன் பாடும் பள்ளேசல்' (49), 'விசையகிரிச் சின்னோவய்யன் சொன்ன பள்ளேசல்' (184) எனக் குறிப்பிட்டுள்ளார். காப்புப் பாயிரத்தில் 'வான்மீக வியாசனைப்' (4) புகழ்வதாலும், இந்நூலாசிரியரின் முன்னோருள் ஒருவர் பாடிய 'மீனாட்சியம்மைக்கும்மி' இவர்களைத் "தேமேவு வான்மீகி கோத்ரன்'' எனப் புகழ்வதாலும் இவ்வாசிரியர் வான்மீகி கோத்திரத்தைச் சார்ந்தவராவர் என்று தெரிகிறது.

**காலம்**

இந்நூலாசிரியர் தன் தந்தையாரை, ''சிவபதம் சேர் விசையரங்க சொக்கநாதன் - மகிழ் செல்வன் புகழ் விசையகிரி வேலச் சின்னோவன்" (231) எனக் குறிப்பதால், அவர் மதுரையினையாண்ட விசயரங்க சொக்கநாத நாயக்கரால் சிறப்புச் செய்யப்பட்டவர் என்று தெரிகிறது. இந்நூலாசிரியர் பாடிய சமயமாலைச் செய்யுளொன்றால், ஆலயத் திருப்பணிச் சீர்திருத்தம் கி.பி.1773-இல் நடந்தேறியதாகத் தெரிகிறது. இதனால் இந்நூல் 18-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றியதாகலாம். முக்கூடல் பள்ளுச் செய்யுட்களோடு தன் செய்யுட்கள் சிலவற்றையும் சேர்த்து, 'முக்கூடற்பள்ளு நாடகம்' என்னும் பெயரில் திரு. சின்னத்தம்பி வேளார் வெளியிட்ட நூலில், இவ்வையாபுரிப் பள்ளுவின் செய்யுட்கள் சில (112, 117) இடம்பெற்றுள்ளன.

**நூல் அமைப்பு**

இந்நூல் வெண்பா, கலிப்பா, விருத்தம், சிந்து முதலிய பாவும்

பாவினங்களும் கொண்டு அமைந்துள்ளது. கடவுள் வாழ்த்து ஒன்றும் காப்புப் பாயிரம் ஆறும் நூல் இருநூற்று நாற்பதும் ஆக, இப்பள்ளு 247 செய்யுட்களைக் கொண்டுள்ளது. சந்த இன்பமும் கவிநலமும் மிக்க பாடல்கள் மிகுந்துள்ளன. பெரும்பாலான இசைப்பாடல்களுக்கு இராகம், தாளம் முதலியன வகுக்கப்பட்டுள்ளன. மேலும் பல்லவி, அனுபல்லவி, சரணங்களோடு அமைந்த கீர்த்தனப் பாடல்கள் சிலவும் இடம்பெற்றுள்ளன. நாட்டு மக்களிடையே குறிப்பாகக் கல்வியறிவுமிக்கில்லாத பாமரர்களிடையே வழங்கும் பேச்சு மொழியினை மிகுதியும் கொண்டு இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. தமிழக உழவர் சமுதாயத்தில் காணப்படும் பழக்க வழக்கங்கள், பழமொழிகள் முதலியவற்றை இந்நூலினிடையே விரிவாகக் காணலாம். பள்ளுப் பிரபந்தங்களில் முதன்மையானது என்று கருதப்படும் முக்கூடற்பள்ளுவின் போக்கினை அடி யொற்றியே இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நூலில், இந்து சமயஞ்சார்ந்த குடும்பங்களோடு, அந்தோணிக் குடும்பன், அருளாக் குடும்பன், இராயக் குடும்பன், இயேசு வடியான் சவரிமுத்தன் பாக்கிய குடும்பன் என்னும் பெயருடைய கிறித்துவ உழவர்களையும், மரியாள், அன்னம்மை, மானூர், அந்தோணி, அந்தோணி மகள் என்னும் பெயருடைய கிறித்துவ உழவர்களையும் காண்கிறோம். இவற்றால் இந்நூல் தோன்றிய காலத்தில் இப்பகுதியில் கிறித்துவ மக்கள் பரவியிருந்ததனையும், அம்மத வேறுபாடின்றி மக்கள் பண்ணைகளில் தொழில்புரிந்து வந்ததையும் உய்த்துணரலாம். இந்நூலில் "ரோமாபுர வழிசேர் தென்பழனிப் பள்ளி" என 164-ஆம் செய்யுளில் வரும் தொடரில், ரோமாபுரி என்பது அக்கிறித்துவ மக்கள் வாழ்ந்த பகுதியின் பெயர் என்பதைக் காட்டிலும், அக்கிறித்துவர்கள் ரோமன் கத்தோலிக்க நெறியைச் சார்ந்தவராகலாம் எனக் கொள்வது ஏற்புடைத்தாகத் தெரிகிறது.

**நூற்பொருள்**

பள்ளர் சேரியில் வாழும் பள்ளர்களின் குடும்பச் சித்திரமே இப்பிரபந்தத்தின் பொருள் அடிப்படையாகும். ஒரு பள்ளரின் குடும்பச் சித்திரம் நாடகப் பாங்கில் அமைத்துக் காட்டப்பட்டுள்ளது. பண்ணையில் வேலை செய்யும் பள்ளன் ஒருவனுக்கு இரு மனைவியர். வையாபுரிப்பள்ளியாகிய மூத்தவள் சைவ சமயத்தவள். இளையவளான பழனிப்பள்ளி வைணவ சமயம் சேர்ந்தவள். பள்ளன் இளையவள் பால் கொண்ட மையலின் காரணமாக அக்குடும்பத்தில் எழும் சிக்கலே பள்ளு நாடகமாகச் சித்தரிக்கப்படுகிறது. தொடக்கத்தில் இருபள்ளியர், பள்ளன் வரவினைக் காண்கிறோம். பள்ளன் தன் பெருமை கூறப் பள்ளியரும் தம் பெருமையொடு தத்தம் நாட்டுவளத்தையும் பேசுகின்றனர். அவர்கள் மழைவேண்டி, கூவுமாறு குயிலை வேண்டுவதோடு

*பல்வேறு சிறு தெய்வங்களையும் பரவுகின்றனர். ஒருவர்மேல் ஆவேசம் வந்து மழைவரம் பெறுகின்றார். மழைக்குறி தோன்றி, மழை காலூன்றிப் பெய்ய, வெள்ளம் பெருகி வருகிறது. குறிஞ்சி முதலான ஆறுகளிலெல்லாம் வெள்ளம் மிக்கு வருகிறது. பண்ணைத் தலைவன்பால் மூத்தபள்ளி தன் கணவனைக் குறை கூறி முறையிடுகின்றாள். இளையவளும் முறையிட, அவளை பண்ணைத்தலைவர் அதட்டி அங்கு வந்த பள்ளனை பண்ணைச் செயல் பற்றிக் கேட்கிறார். அவன் பண்ணைத் தொழிலாகச் செய்ய வேண்டுவனபற்றிக் கூறியபின், கிடை அமைக்க ஆயர் வருகின்றனர். மூத்தபள்ளி கணவன்மீது குற்றம் சாட்ட பண்ணையார் அவனைத் தொழுவில் மாட்டுகின்றார். அதனைக் கண்டு இளையவள் வருந்த, மூத்தவள் சோறுகொண்டு வந்து, பள்ளனைக் காண்கிறாள். மூத்தவள் பண்ணையாரை வேண்டி தன் கணவனை விடுவிக்கிறாள். பள்ளன், வித்துக்கள், மாடுகள், கலப்பைகள் வகை பற்றி உரைக்கிறான். நல்லநாளில் ஏர் பூட்டி உழுகின்றனர். காளை வெருண்டுபாயப் பள்ளன் கீழே விழுந்து கிடக்கின்றான். புலம்பிய பள்ளியர் மகிழ, எழுந்த பள்ளன் நாற்றுப் பாவுகின்றான். நட்டபின் அச்செழிப்பு கண்டு பள்ளன், பள்ளியர் களிப்புறுகின்றனர். விளைந்த நெல்லைச் செப்பஞ்செய்து, பள்ளன் அளக்கின்றான். மூத்தபள்ளி முறையிட, இரண்டு பள்ளிகளும் ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்கின்றனர். இறுதியில் இருவரும் மனம் நெகிழ்ந்து ஒன்றுபடுகின்றனர். இவ்வாறு செல்லும் நூல் வாழ்த்தொடு முடிகின்றது.*

*இந்நூலில் மக்கள் மழைவேண்டி, அணையேத்தம் செய்து தெய்வத்தை வாழ்த்துவதாகக் கூறுமிடத்து, அணையடிக் கருப்பன் முதலாக 30 சிறு தெய்வங்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவை பழனியைச் சுற்றியுள்ளவை.*

# பழனிப்பிள்ளைத்தமிழ் - கவிதை நயமும் பக்திச் சுவையும்

முனைவர். **கி.ரா. ரேவதி**
திருவாரூர்

*"பழனிப் பிள்ளைத்தமிழ்" பழனி முருகனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது. இதன் ஆசிரியர் விசயகிரி வேலச் சின்னோவையன் ஆவார். இந்நூலில் அமைந்துள்ள கவிதை நயமும், பக்திச் சுவையும் இங்கு ஆராயப்படுகின்றன.*

## கவிதை நயம்

*'பழனிப் பிள்ளைத்தமிழ்' அகவல் விருத்தப்பாவால் அமைந்துள்ளது. தொல்காப்பியம் 'ஆசிரியம்' என்பதை அகவல் என்னும் வேறு பெயராலும் குறிப்பிடுகிறது.*

*"அகவல் என்பது ஆசிரி யம்மே"[1] என்பது நூற்பா. ஆசிரியம் என்பது யாப்பையும், அகவல் என்பது ஓசையையும் குறித்து எழுந்த பெயர்களாகும். தமிழ் இலக்கியத்தில் தொன்றுதொட்டு இடம்பெற்று வரும் ஆசிரியப்பா பக்தி காலக் கவிஞர்களாலும் இறைவனைப் போற்றுதற்குரிய யாப்பு வடிவமாகக் கையாளப்பெற்றது.*

*"விருத்தம் என்னும் பாவினம், தமிழ்க் கவிதை இலக்கியத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சிறப்புப் பொருந்தியதாகும். இதன் நெகிழ்ச்சியும் ஒலிநயமும் பாமர மக்களின் கருத்தையும் கவரும் வகையில் அமைந்தன. விருத்தம் என்பது வெவ்வேறு வகை நடையும், வகை வகையான ஓசையும் அமைந்து மாறி மாறி வரக் கூடியதாக இருத்தலைக் கண்டு அதைப் புலவர் பலரும் போற்றத் தொடங்கினர்"[2] என்பர் மு. வரதராசன்.*

*"ஆசிரியம், வஞ்சி முதலிய பாவகைகள் கவிஞனுடைய கற்பனைக்கு ஏற்ப விரிந்து கொடுப்பவை அல்ல. எனவே சொல்லாட்சி முறையிலும் ஓசையிலும் கவிஞன் ஏற்றும் பொருளை முற்றும் ஏற்கமுடியாமல் அப் பாமுறைகள் தவித்தன. புதிய விருத்தப் பாடலால் இக்குறை நீங்கிற்று" என அ.ச. ஞானசம்பந்தன் கூறுவர்.*

*கீழ்க்காணும் பாடல் கவிஞரின் கவித்திறனுக்குச் சான்றாக அமைகிறது.*

*பொன்னே வருக பொன்னரைஞாண்*
*பூட்ட வருக சிறுசதங்கை*
*புனைய வருக மணிப்பதக்கம்*
*பூண வருக தவழ்ந்தோடி*

*முன்னே வருக செவிலியர் கண்*
*முகத்தோ டணைத்துச் சீராட்டி*
*முத்த மிடற்கு வருகவெதிர்*
*மொழிகள் மழலை சொல வருக*
*தன்னே ரில்லா நுதற்றிலதநீ*
*தரிக்க வருக விழியினின்மை*
*சாத்த வருக மேலாகத்*
*தானே வருக தேவர்தொழ*
*மன்னே வருக மாமாலின்*
*மருகா வருக வருகவே*
*வளஞ்சேர் பழனிச் சிவகிரி வாழ்*
*வடிவேள் முருகா வருகவே"*

*என்று பழனி முருகனை நெஞ்சுருகி அழைக்கின்றார் புலவர்.*

**பெயர்ச் சிறப்பு**

*'முருகன்' என்றாலே அழகு என்பதனால் 'அழகெல்லாம் முருகன்' என்று கூறுவர். என்றும் இளமையுடையவன் என்பதனால் முருகனுக்கு 'குழகன்' என்ற பெயர் உண்டு. இப்பெயர் பக்தர்கள் மனத்தில் முருகனை என்றும் குழந்தையாகத் தோன்றச் செய்கிறது. அவன் குகையில் வசித்ததால் 'குகன்' என்று அழைக்கப்படுகிறான். 'சைவந் தழைக்க வந்தவனாகவும் 'சதுரா' என்றழைப்பதால் நான்கு வேதங்களின் சாரமாக முருகனைக் கவிஞர் பாராட்டும் நயம் காணக் கிடைக்கிறது. முருகன் வேதங்கள் எல்லாம் தொழும் திருப்பாதங்களை உடையவன் என்று 'மறைதொழ சரணா' என்றழைக்கிறார். ஞானாசிரியனாய்த் தந்தைக்கே உபதேசித்த கருணையால் 'சிவகிரித் தேசிகா' என்று முருகனைக் கவிஞர் பாராட்டும் திறம் நோக்கத்தக்கது.*

**கற்பனை**

*கவிதைப் புனைவில் முக்கிய இடம் வகிப்பது கற்பனை. கற்பனையை வெறும் கற்பனை, படைப்புக் கற்பனை, இயைபுக் கற்பனை எனத் திறனாய்வாளர்கள் வகைப்படுத்துவர். விசயகிரி வேலச் சின்னோவையன் நல்ல கற்பனைத் திறம் கொண்டவர்.*

*எங்கள் சிற்றிலை அழிப்பதால் "உனது அழகிய பாதமலர் தூசி படிந்து சிவந்திடுமே" என்று கற்பனை நயத்துடன் அழகுறக் கூறுகின்றார்.*

**சந்த நயம்**

*திருப்புகழில் சந்த நயம் அமைந்துள்ளது போல் பழனிப்பிள்ளைத்*

தமிழிலும் சந்தநயம் அமைந்துள்ளது.

“கன்னங் கறுத்த குழல்செறுகிக்
கடைசி மடவார் கழனிதொறும்
கதித்து விளைந்த செஞ்சாலிக்
கதிரை யரிவாள் கொடு கொய்து
சின்னஞ் சிறிய விடைதுவளச்
சென்று வரம்பின் கரையருகிற்
செல்லு மளவிற் பசுஞ்சோலைத்
தேமாங் கனியை யுதிர்த் தெழுந்து”

என்று பாடுவதற்கும், கேட்பதற்கும் இனிமையைக் கூட்டிச் செல்லும் இயல்புடைத்து.

**ஓசை நயம்**

கவிதையின் சிறப்புக்கு ஓசை அடித்தளமாய் அமைகிறது. பா என்பது பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை என்பர். பழனிப் பிள்ளைத்தமிழ்ப் பாடல்களில் ‘ஓசை நயம்’ மிக அருமையாக அமைந்துள்ளது. ஆற்றொழுக்குப் போல பாடல் நெடுகிலும் ‘இடையறா ஓசை நயம்’ அமைந்துள்ளமைக்கு பின்வரும் பாடலைச் சான்றாகக் காட்டலாம்.

“வண்டாட நறவூரி மணமீறு மணிநீப
மாலையாடக் குழைகள்சேர்
மகரகுண் டலமாட வச்ரகே யூரமுடன்
மார்பிற் பதக்கமாடக்
கொண்டாடு நெற்றியிற் சுட்டியா டக்கரிய
கொந்தளக் குஞ்சியாடக்
கோலநெடு வான்முகடு தொடுகடற் றிவலைபோற்
குறுவெயர் முகத்திலாடக்
கண்டாடு மதரங் குவிந்தாட மாற்றேது
கனகத் திழைத்த வரைஞாண்
கதிர்விரித் தாடநவ மணியினாற் செய்தவிரு
காலிற் சதங்கை யாடத்
திண்டாடு மசுரைக் கொல்லவரு தீரனே
செங்கீரை யாடியருளே
திருமருவு பழனிவளர் சிவகிரியின் முருகனே
செங்கீரை யாடியருளே”

பாடலின் தொடக்கம் முதல் இறுதி வரை ‘ஆட’ என்ற சொல்லைத் திரும்பத் திரும்ப எடுத்தாண்டு “ஓசைநயத்தை” அமைத்துள்ளார் புலவர்.

**மோனை**

*பழனி பிள்ளைத்தமிழ் முழுவதும் மோனைத் தொடையிலேயே அமைந்திருப்பது கவிதை நயத்தை மிகுவிப்பதாக அமைந்துள்ளது.*

*"பால்மணங் கமழ்தரத் தேன்வழிந் தொழுதுநின்*
*பவளவாய் முத்தமருளே*
*பழனிவளர் சிவகிரியில் மருவுகுரு தேசிகா*
*பவளவாய் முத்த மருளே"*

*என்றவாறு முதல் பாடலிலிருந்து இறுதிப்பாடல் வரை மோனைத் தொடையிலேயே அமைந்துள்ளது.*

**பக்திச் சுவை**

*குழந்தையைத் தெய்வமாகவும் தெய்வத்தைக் குழந்தையாகவும் நினைந்து பக்தி செய்வது இந்தியப் பண்பாட்டில் ஒன்று. இது குறித்து 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்ற தமிழ்ப் பழமொழி வழங்கி வருவது இக் கருத்தை தெளிவாய் உணர்த்தும். 'பிள்ளைத்தமிழ்' என்பது பிற்காலத்தில் பெருகி வளர்ந்த ஓர் இலக்கிய வகையாகும். இதற்கான முற்கூறுகளைத் தொல்காப்பியத்தில் காணமுடிகிறது. பொருளதிகாரப் புறத்திணையியலில் 'குழவி மருங்கினும் கிழவதாகும்' என்றொரு நூற்பா உள்ளது. "விளையாட்டு மகளிரொடு பொருந்துமிடத்துக் குழவிப் பருவத்தும் காமப் பகுதி கூறப்படும்" என இதற்கு இளம்பூரணர் உரை கூறுவர். மேலும் மேற்குறித்த தொல்காப்பிய நூற்பா, "தெய்வக் குழந்தையாகிய கண்ணனிடம் ஆயமகளிர் கொண்ட காதலை உட்கொண்டு கூறியதென்றே கொள்ளற்பாலது" என்பது அவர் கருத்து.*

*பிள்ளைத்தமிழ் வகை இலக்கியத்தில் இருநிலைகள் காணப்படுகின்றன. பாட்டுடைத் தலைவனின் குழந்தைப் பருவக் குறும்புகள், தோற்றப் பொலிவு போன்றவையும் அவனுடைய இளமைப் பொலிவு, வீர தீரச் செயல்கள், அருங்குணங்கள் இவற்றைப் போற்றியும் பிள்ளைத்தமிழ் பாடப்படுகிறது. இதே உத்தியைத்தான் பழனி பிள்ளைத்தமிழிலும் கவிஞர் கையாண்டுள்ளார்.*

*குழந்தைக்கு நீராட்டுவதும், நீராட்டிய பின் மருந்து கொடுப்பதும் உலக வழக்கு. பிள்ளைத்தமிழுக்கு முன்னோடியாகக் கருதப்படும் பெரியாழ்வார்;*

*"......................................................*
*பையவாட்டிய பசுஞ்சிறு மஞ்சளால்*
*ஐய நாவழித்தாளுக்கு அங்காத்திட*
*வைய மேழுங்கண்டாள் பிள்ளை வாயுளே...."*

*என்று தமது திருமொழியில் கண்ணனுக்கு யசோதை நீராட்டி, மஞ்சளால் நாக்கு*

வழித்ததையும், அப்போது குழந்தையின் வாயில் ஏழு உலகும் கண்டதையும் பாடியருளினாற் போலப் பழனி பிள்ளைத்தமிழில் முருகனுக்கு நீராட்டுவதும் மருந்து புகட்டுவதும் பக்திச்சுவையும் அழகுமிக்க காட்சியாய்ப் பாடப்பட்டுள்ளது. செங்கீரைப் பருவத்தில்,

“பொற்றக டுரிஞ்சிய மணிக்கலச நீர்கொண்டு
    புனலாட்டி யுச்சி மோந்து
புல்லிவா யதரமு முந்திசெவி நாசியிற்
    புனலேறி டாமலூ திப்
பற்றிய நிலப்பொட்டு நெற்றிமிசை யிட்டழகு
    பாரித்த பட்டாடையாற்
பண்புறைய வீரம் புலர்த்திநவ மணியிட்ட
    பருமணிச் சுட்டிகட்டி
நற்றமிழின் முனிபரவு குருவென்று தாலாட்டி
    நறுவசம் பூறலூ ட்டி”

என்ற கவிதை வரிகளில் தெய்வக் குழந்தையாகிய முருகனை, பொன் தகட்டில் மணிகள் பதிக்கப்பட்ட கலசத்தில், நீர் கொண்டு கொப்பூழ், காது, நாசி ஆகியவற்றுள் நீர்புகாமல் நீராட்டி, முத்தமிட்டுப் பட்டாடையால் துடைத்து, நெற்றியில் பொட்டிட்டு, நவமணி பதித்த சுட்டிகட்டி, நல்ல தமிழ் முனிவராகிய அகத்தியர் வழிபடும் குருவென்று கூறித் தாலாட்டி வசம்பு நீர் ஊட்டியதாகப் பாடப்பட்டுள்ளது.

பூதனையைக் கொன்ற பச்சிளங் குழந்தையாகிய கண்ணனுக்கும் மருந்து ஊட்டும்பொழுது, திருமால் மருகன், சிவபாலன், சைவந் தழைக்க வந்த சதுரன், சிவன் மதலை, சிவகிரித் தேசிகன், வித்தக மிகுந்திறல் வேள்படை விசாகன், முப்பத்து முக்கோடி தேவர்க்கு முதலாளி, தெய்வக் குழந்தை என்று பக்தியால் குழைந்த மனம் தாயன்பைக் கொண்டு விளங்கும் நிலைக்கு இது சுவையான சான்று.

**குழந்தை முருகன் வருணனை**

செங்கீரைப் பருவத்தில் குழந்தை முருகனின் உருவ நலன் வருணிக்கப்படுகிறது. வண்டுகள் மொய்க்கும் தேன் ஊறி மணம் மிகுந்த அழகிய கடம்ப மாலை சூடவும், மகர வடிவக் குண்டலங்கள் காதுகளில் ஆடவும், வயிரம் பதித்த கேயூரம் தோளிலும், பதக்கம் மார்பிலும், நெற்றியில் சுட்டியும் ஆடவும், கருநிறமான குடுமி ஆடவும், அழகிய ஆகாய முகட்டைத் தொடுகின்ற கடலின் துளி போல சிறுவியர்வைத் துளிகள் முகத்தில் ஆடவும், கற்கண்டு போன்ற உதடு குவிந்து ஆடவும், மாற்றுயர்ந்த தங்கத்தால் ஆகிய அரைஞான் ஒளி வீசி ஆடவும், நவமணிகளும் பதித்த சதங்கைகள் இரண்டு காலிலும் ஆடவும் திண்டாடும் அசுரர்களைக் கொல்லவந்த தீரனே என்று பாடுகிறார்.

**குமரப்பருவ அருஞ்செயல் போற்றல்**

*காப்புப் பருவத்திலேயே முருகனின் குமரப் பருவ அருஞ்செயல்களைப் போற்றி மற்ற தெய்வங்களிடம் முருகனைக் காக்குமாறு வேண்டுதல்.*

*"வித்தக மிகுந்திறல் வேள்படை விசாகனை"*

*என்றும்,*

*"உத்தமனை வெற்றியஞ் சேவலங் கொடிவிரு*
*துயர்த்தவனை யாறுமுகனை"*

*என்றும்,*

*"சித்தர்வித் யாதர ரியக்கர்கின் னரர் முனிவர்*
*திசைமுகப் பிரம தேவர்*
*தேவர்கோன் முதலாய முப்பத்து முக்கோடி*
*தேவர்க்கு முதலாளியே என்றும்"*

*குமரப்பருவத்து முருகனின் வீரமும், வெற்றியும் காப்புப் பருவத்தில் கூறப்படுகின்றன.*

**ஊர்ச் சிறப்புக் கூறல்**

*முருகனைப் போலவே அவன் உறையும் பழனி மலையும் அழகின் உறைவிடமாக வருணிக்கப்பட்டுள்ளது. ஐந்து வகை இலக்கணங்களையும், ஐந்து காவியத்துறைகளையும் ஆராய்ந்து; ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நாற்கவியும் சொல்லும் கவிஞர்கள் தோத்திரம் முழங்கவும், உண்மைத் தவசிகள் முள்ளோடு கூடிய நீண்ட தண்டுடைய வெண்டாமரையில் வீற்றிருக்கும் கலைமகள் கொழுநனான பிரமனுடன் வந்து நின்று வேதஒலி முழக்கவும், கையின் வழியே மனதுவர அதன்வழி கண்வர நரம்பை மீட்டும் யாழ் வாசிக்கும் கந்தர்வர்கள் வீணை ஓசையும் யாழ் ஓசையும் முழக்கவும், தேவர்கள் மலர்தூவி தெய்வ துந்துபியோடு வலம்புரிச் சங்கை முழக்கவும், திருவாவினன்குடியிலுள்ள பழனிமலை முருகனே, "முகில் படிந்த சோலையின் நெருக்கத்தில் இளமயில் அழகிய தோகையை உதறிக் கண்கள் விளங்கச் சிறை விரித்தாட இளமாந்தளிரை மென்று குயில்கள் பாடி, புள்ளி பொருந்திய அழகிய சிறகை உடைய வண்டுகள் மகரந்தத்தை நிறைய உண்டு இன்னிசை பாட, தூங்குகின்ற பலாப்பழத்தை உதிர்க்கின்ற சூல் கொண்ட குரங்குகள் கமுகின்மேல் ஏறும் அழகிய பழன நிலத்திலே, கருப்பம் பாலைக் காய்ச்சுகின்ற உழவரது பெண்கள், இசையோடு குரவைக் கூத்து முழங்க, மருத வளம் நிறைந்த புகழ்கொண்ட தருமம் மிகுந்த வையாபுரிக்கிறைவனே" என்று ஊர்ச்சிறப்பைப் பக்தியோடு பாடுகிறார்.*

*மேலும் புராணத்தன்மை* (Mythical Quality) *பழனிப் பிள்ளைத்தமிழில் சைவ, வைணவ வேறுபாடின்றித் தமிழ் மொழியின் தனிக்கடவுள் முருகன் என்பதால்*

அன்புக்கு ஆட்படும் இறைவன் தமிழுக்கு ஆட்பட்ட புராணச் செய்தியும், வைணவக் கடவுளான திருமாலின் பெருமையும் கூறப்படுகிறது. திருமழிசையாழ்வார் தம் தமிழ்ப் புலமையில் வசப்பட்ட இறைவன் அவருடன் பாய்சுருட்டிக் கொண்டு சென்ற கதை;

"பாமேவு கவிஞனுக் கருள்சுரந் தன்பின்னொடு
பாய் சுமந் தெய்த்துவந்து"

என்ற வரிகளில் குறிப்பிட்டுக் காட்டுகிறார். இது தமிழ்க் கடவுள் முருகன் மீதுள்ள பக்திக்கும் தமிழ்மீதுள்ள பக்திக்கும் வேறுபாடு இன்றித் தமிழ் என்றால் முருகன், முருகன் என்றால் தமிழ் என்ற பிரிக்கவியலாப் பிணைப்புக்குச் சான்றாகும்.

இதனால் தானோ "தூங்கப் புயனோர் திருமான் மருகா" என்று திருமாலின் மருகனே என்று திருமாலுக்கும் சிறப்புச் செய்கிறார். மேலும் முருகனை "தமிழா லுயருஞ் சிவமா மலையாய்" என்றும் சிறப்பிப்பது தமிழுக்கும் முருகனுக்கும் உள்ள பிணைப்புக்குச் சான்று.

மேலும் வரலாற்றுத்தன்மையும் (Historical Quality) விளங்குமாறு சிற்றில் பருவத்தில், மதுரையிலேயே பாண்டிய மன்னன் காணக் கழுவிலேறிய சமணர்களின் வீடு இதுவன்று என்று சிற்றில் பருவத்தில் சிறுமிகள் கூற்றாகச் சமணர்கள் அரசர்பால் தண்டனை பெற்ற வரலாறு கூறப்படுகிறது. சமணர்களும் தமிழ் வளர்த்தனர். அவர்கள் தமிழ் சைவந் தழைக்க வந்த தமிழல்லவே. அமிழ்தினும் இனிய தமிழானாலும் இனிய தெய்வம் முருகனுக்கெதிரான பரசமயக் கொள்கையினரான சமணரை ஏற்குமா அடியார்கள் உள்ளம்? சப்பாணிப் பருவத்தில்,

"கொன்றுழக் கிச்சென்று திருநீறி டாச்சமணர்
குடர்தனைச் சிதறியமரர்"

என்ற தொடர் மூலம் சமணர் மீது உள்ள காழ்ப்பும் கந்தக் கடவுள் மீது கொண்ட பக்தியும் காணக் கிடைக்கின்றன.

கந்தனின் திருவடிகளைச் சரண்புகுந்த பக்தர்களுக்கு எந்நாளும் குறைவில்லை என்ற கருத்தை, அம்புலிப் பருவத்தில்,

"தேய்வதுஞ் சிறிதுநாள் வளர்வது முனக்குண்டு
சிந்தையி லிவன் பதத்தைப்
போதுகொ டருச்சித்த பேர்களுந் தேய்வுறார்"

என்று பாடுகிறார்.

இவ்வாறு "பழனி பிள்ளைத்தமிழில்" கவிதை நயமும், பக்திச்சுவையும் ஒரு நாணயத்தின் இருபக்கம் போல இணைந்தமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பழனியாண்டவர் மயில்விடு தூது

*இந்நூலை இயற்றியவர் கவியரசு கு. நடேசக் கவுண்டர் ஆவார். முருகப் பெருமானிடம் மயிலைத் தூதாக அனுப்புகின்றார். பழனித் தலச்சிறப்பு, மலைக்கோவிலில் நிகழும் பூசைகள், வழிபாட்டு முறைகள், பூசையின் போது கமழும் நறுமணங்கள், தேவார-திருப்புகழிசை, பக்தர்கள் கூறும் அரகர மந்திர ஒலி, முருகனுக்குச் செய்யப்பெறும் அபிடேகங்கள், முருகப் பெருமான் உலா வரும் காட்சி, பழனியாண்டவரின் அருள்பாலிக்கும் திறம் முதலியனவற்றைப் பக்திச்சுவை ததும்ப எடுத்துரைக்கின்றார் கவியரசு கு. நடேசக் கவுண்டர். எடுத்துரைத்தல் முறையில் (Narrative) சொல்லிச் செல்லும் பாங்கும், வருணனைத் திறனும் இந்நூலாசிரியனின் கவித்திறனைக் காட்டுகின்றது.*

*"சந்தனச் சாந்தின் மணமோ தண் பனி நீர் வாசனையோ*
*மந்திரமாம் வெண்ணீற்றின் மாமணமோ - பந்தமுறு*
*மாலைகளின் தூமணமோ மட்டற்ற தேனறுநெய்*
*ஆலை தரு பூங்கழைச்சா றைந்தமிர்தம் - கோலக்*
*கலயரிடு குங்கலியம் காரகிலின் றூப*
*மலையு மணமோ வகுத்துச் - சொலவொண்ணா*
*தோதுந் திருப்புகழ் தேவார மோங்கிசையோ*
*கீதங்க ளின்முழக்கோ கேடில்லா - நாதசுர*
*வாசினையோ கண்டா மணி முழக்கோ தொண்டர் குழாம்*
*ஆசி லரஹரவென் னார்ப் பொலியோ - பேசுங்கால்*
*ஏது பெரிதென் றியம்ப லெளிதன்று*
*சோதி திருவாலயத்துட் தொண்டர் குழாம் - கோதில்*
*ஒருவர் திருமார்பி லுற்றதிரு வெண்ணீ*
*றொருவர் முதுகிலுற வீண்டித் - திருமுன்னர்ச்*
*சேவித்து நிற்கும் திறங்கண்டவர் போலப்*
*பாவித்து நின்று பரவினேன்"*

*என்று கவிஞர் மலைக்கோயிலில் நிகழும் பூசைச் சிறப்பினை எடுத்துரைக்கின்றார்.*

*"ஞானவடிவேல் வலக்கை நண்ணமுரு கேசனைப்*
*பானல்வாய் ஞானம் பரிமளிக்கும் - மோன*
*பரமகுரு நாதனைப் பண்ணவர்தம் கோவை*
*வாதனைமெய் யன்பர்தமை வாழ்த்தும் - விரதனை*
*மாணிக்க வண்ணனை வண்பவளத் தின்றிரளை*

*ஆணிக் கனகத்தை யாரொளியைப் - பேணுநரைப்*
*பேணிப் பிறப்பிறப்புப் பேராழி நீக்கியருள்*
*தோணியை முத்தியினைத் துய்க்கவிடும் ஏணியை*
*அன்பர்க் கிருநிதியை யாரமுதை யோர்முக்கண்*
*இன்பக் கரும்பி யெழுஞ்சாற்றைத் - துன்பமுற*
*வேததரு மீது விளையு நறுந்தேனைத்*
*தீதகலு மெய்ஞ் ஞானத் தீங்கனியைச் - சோதி*
*யயில்வே லருட்பழனி யாண்டவனை யென்பால்*
*மயிலே விரைந்தழைத்துவா"*

*என்று பழனியாண்டவரிடம் கவிஞர் மயிலைத் தூதுவிடுகின்றார். முருகப் பெருமானின் சிறப்புக்களையெல்லாம் எடுத்துக் கூறி நூலை முடிக்கின்றார் ஆசிரியர்.*

*முருகன் கோயில் கொண்ட இத்தலம் தமிழிலக்கியங்களில் தொடர்ந்து குறிக்கப்பட்டு வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். பழனியாண்டவர் மீது நூற்றுக்கும் மேற்பட்ட பக்திச் சிற்றிலக்கியங்கள் தோன்றியுள்ளன.*

**சஷ்டிக் கவச பலன்**

*பழநியம்பதி வாழும் தண்டபாணித் தெய்வம் அன்பர்களின் இன்னலைப் போக்கும் அற்புதமானவர்.*

*செவ்வாய் தோஷத்தால் சிரமப்படுவோர்கள், செவ்வாய்க் கிரகம் நீச்சமடைந்திருப்பவர்கள், செவ்வாய் திசையில் மிகுந்த பலனை விரும்புபவர்கள் முதலியோர் பழநி முருகனை மனத்தில் கொண்டு இக்கவசத்தைப் பாராயணம் செய்ய வேண்டும். கண் கோளாறுகள், பலவிதமான நோய்கள், விஷ ரோகங்கள், பகைவரின் தீய சொற்கள் போன்றவை நீங்கும்.*

*புலமை, இனிய சொல்வளம், செல்வச் செழிப்பு முதலியன உண்டாகும்.*

*வைத்தியர்கள் தங்கள் மருந்தின் பலன் சித்திக்க வாரம் ஒரு முறையாவது சந்தியா காலங்களில் பாராயணம் செய்ய வேண்டியது அவசியம். பழநி தண்டபாணி சர்வ பவரோக வைத்தியசுவாமி ஆவார்.*

## தேவராய சுவாமிகள் அருளிய கந்த சஷ்டிக் கவசம்

### காப்பு

**(குறள் வெண்பா)**

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை.

### கவசப் பாடல்

திருவா வினன்குடி சிறக்கும் முருகா
குருபரா குமரா குழந்தை வேலாயுதா
சரவணா சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழைப் பங்காளா
பரமேஸ் வரிக்குப் பாலா தயாபரா
வரமெனக்(கு) அருள்வாய் வாமனன் மருகா
இரண்டா யிரம்வெள்ளம் யோகம் படைத்தவா
திரண்டா ருகமனம் தீர்க்கம் படைத்தவா
இலட்சத் திருநான்கு நற்றம்பி மாருடன்
பட்சத் துடனே பராசக்தி வேலதாய்
வீரவாகு மிகுதள கர்த்தனாய்
சூரசம் ஹாரா துஷ்டநிஷ் டூரா
கயிலாய மேவும் கனக சிம்மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய மாமுனிக் கருந்தமிழ் உரைத்தவா
சுகத்திரு முருகாற்றுப்படை சொல்லிய
நக்கீரன் நற்றமிழ் நவமென வினவிக்
கைக்கீழ் வைக்கும் கனமிசைக்குதவா
திருவருணகிரி திருப்புகழ் பாட
இரும்புகழ் நாவில் எழுதிப் புகழ்ந்தவா
ஆயிரத்தெட்டாம் அருள் சிவதலத்தில்
பாயிரம் தோத்திரம் பாடப் புகழ்ந்தவா
எண்ணா யிரம்சமண் எதிர்கழு வேற்றி
விண்ணோர் குமாரன் வியாதியைத் தீர்த்தவா
குருவாம் பிரமனைக் கொடுஞ்சிறை வைத்து
உறுப்பொருள் வேதம் உரைத்தாய் சிவனுடன்

கருதிமெய் யோகம் சொல்லியது ஒருமுகம்
அருள்பெரு மயில் மீ(து) அமர்ந்தது ஒருமுகம்
வள்ளிதெய் வானையை மருவியது ஒருமுகம்
தெள்ளுநான் முகன்போல் சிருட்டிப்பது ஒருமுகம்
சூரனை வேலால் துணித்த(து) ஒருமுகம்
ஆரணம் ஓதும் அருமுறை யடியார்
தானவர் வேண்டுவ தருவது  ஒருமுகம்
ஞான முதல்வர்க்கு நற்பிள்ளை பழநி
திருப்பரங் கிரிவாழ் தேவா நமோ நம
பொருட்செந்தி லம்பதி புரப்பாய் நமோநம
ஏரகம் தனில் வாழ் இறைவா நமோ நம
கூரகம் ஆவினன் குடியாய் நமோ நம
சர்வசங் கரிக்குத் தனயா நமோ நம
உறுசோலை மலைமேல் உகந்தாய் நமோ நம
எல்லாக் கிரிக்கும் இறைவா நமோ நம
சல்லாப மாக சண்முகத் துடனே
எல்லாத் தலமும் இனிதெழுந் தருள
உல்லா சத்துறும் ஓங்கார வடிவே
மூல வட்டத்தில் முளைத் தெழும் ஜோதியைச்
சர்வ முக்கோணத் தந்தமுச் சக்தியை
வேலா யுதமுடன் விளங்கிடும் குகனைச்
சீலமார் வயலூர்ச் சேந்தனைத் தேவனை
கைலாச மேருவா காசத்தில் கண்டு
பைலாம் பூமியும் பங்கய பார்வதி
மேலும் பகலும் விண்ணுரு லேந்தி
நாற்கோணத்தில் நளினமாய் அர்ச்சனை
கங்கை யீசன் கருதிய நீர்புரை
செங்கண்மால் திருவும் சேர்ந்துசெய் அர்ச்சனை
அக்கினி நடுவே அமர்ந்த ருத்திரன்
முக்கோண வட்டம் முதல்வாயு ருத்திரி
வாய்அறு கோணம் மகேசுவரன் மகேசுவரி
ஐயும் கருநெல்லி வெண்சாரை தன்மேல்
ஆகாச வட்டத்து அமர்ந்த சதாசிவன்
பாகமாம் வெண்மைப் பராசக்தி கங்கை

தந்திர அர்ச்சனை தலைமேல் கொண்டு
மந்திர மூலத்தின் வாசியைக் கட்டி
அக்கினிக் குதிரை ஆகாசத் தேவி
மிக்கமாய் கருநெல்லி வெண்சாரை உண்பவர்
பாகமாய் ரதமும் பகல்வழி யாரை
சாகா வகையும் தன்னை அறிந்து
ஐந்து ஜீவனுடன் ஐயஞ்சு கல்பமும்
வித்தை உமைசிவன் மேன்மையுங் காட்டி
சந்திர சூரியர் தம்முடன் அக்கினி
அந்தி ரனைக்கண்டு அறிந்தே யிடமாய்ச்
சிந்தையுள் ஏற்றுச் சிவசம்பு தன்னை
மந்திர அர்ச்சனை வாசிவா என்று
தேறுமுகம் சென்னி சிவகிரி மீதில்
ஆறுமுகமாய் அகத்துள்ளே நின்று
வாசல் ஒன்பதையும் வளமுடன் வைத்து
யோசனை ஐங்கரன் உடன் விளையாடி
மேலைக் கருநெல்லி வெண்சாரை உண்டு
வாலைக் குழந்தை வடிவையும் காட்டி
நரை திரை மாற்றி நாலையும் காட்டி
உரைசிவ யோகம் உபதேசம் செப்பி
மனத்தில் பிரியா வங்கண மாக
நினைத்தபடி என் நெஞ்சத் திருந்து
அதிசயம் என்றுன் தன் அடியார்க்(கு) இரங்கி
மதியருள் வேலும் மயிலுடன் வந்து
நானே நீயெனும் இலட்சணத்துடனே
தேனே என்னுளம் சிவகிரி எனவே
ஆறா தாரத்து ஆறுமுகம்
மாறா திருக்கும் வடிவையும் காட்டி
கனவிலும் நனவிலும் கண்டுனைத் துதிக்க
தனதென வந்து தயவுடன் இரங்கிச்
சங்கொடு சக்கரம் சண்முக தெரிசனம்
எங்கு நினைத்தாலும் என்முன்னே வந்து
அஷ்டாவ தானம் அறிந்தவுடன் சொல்ல
தட்டாத வாக்கும் சர்வா பரணமும்

இலக்கணம் இலக்கியம் இசையறிந் துரைக்கத்
துலக்கிய காவியம் சொற்பிரபந்தம்
எழுத்துச் சொற்பொருள் யாப்பலங்காரம்
வழுத்தும் என் நாவில் வந்தினி திருந்தே
அமுத வாக்குடன் அடியார்தம் வாக்கும்
சமுசார சாரமும் தானே நிசமென
வச்சிர சரீரம் மந்திர வசீகரம்
அட்சரம் யாவும் அடியேனுக்குதவி
வல்லமை யோகம் வசீகர சக்தி
நல்ல உன் பாதமும் நாடிய பொருளும்
சகலகலை ஞானமும் தானெனக் கருளி
செகதல வசீகரம் திருவருள் செய்து
வந்த கலிபிணி வல்வினை மாற்றி
இந்திரன் தோகை எழில்மயில் ஏறிக்
கிட்டவே வந்து கிருபை பாலிக்க
அட்டதுட் டமுடன் அநேக மூர்க்கமாய்
துட்டதே வதையும் துட்டப் பிசாசும்
வெட்டுண்ட பேயும் விரிசடைப் பூதமும்
வேதாளம் கூளி விடும்பில்லி வஞ்சனை
பேதாளம் துன்பப் பிசாசுக்கள் நடுநடுங்க
பதைபதைத் தஞ்சிடப் பாசத்தால் கட்டி
உதைத்து மிதித்தங்(கு) உருட்டி நொறுக்கிச்
சூலத்தாற் குத்தித் தூள்தூளுருவி
வேலாயுதத்தால் வீசிப் பருகி
மழுவிட் டேவி வடவாக் கினிபோல்
தழுவிஅக் கினியாய் தானே எரித்துச்
சிதம்பர சக்கரம் தேவி சக்கரம்
மதம்பெறும் காளி வல்ல சக்கரம்
மதியணி சம்பு சதாசிவ சக்கரம்
பதிகா்ம வீரபத்திரன் சக்கரம்
திருவை குண்டம் திருமால் சக்கரம்
அருள்பெருந் திகிரி அக்கினி சக்கரம்
சண்முக சக்கரம் தண்டாயுதத்தால்
விம்ம அடிக்கும் எல்லாச் சக்கரமும்

ஏக ரூபமாய் என் முன்னே நின்று
வாகனத் துடன்என் மனத்துள் இருந்து
தம்பனம் மோகனம் தயவாம் வசீகரம்
இம்பமா கருடணம் மேவுமுச் சாடனம்
வம்பதாம் பேதனம் வலிதரும் ஆரணம்
உம்பர்கள் ஏத்தும் உயர்வித் வேடணம்
தந்திர மந்திரம் தருமணி அட்சரம்
உந்தன் விபூதி உடனே செபித்து
கந்தனின் தோத்திரம் கவசமாய்க் காக்க
எந்தன் மனத்துள் எது வேண்டினும்
தந்துரட் சித்தருள் தயாபரா சரணம்
சந்ததம் எனக்கருள் சண்முகா சரணம்
சரணம் சரணம் சட்கோண இறைவா
சரணம் சரணம் சத்துரு சம்ஹாரா
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## மூன்றாவது படைவீடு - (திருவாவினன்குடி)

*பழனி மலையையும், மலையடிவாரத்தில் உள்ள திருவாவினன்குடி தலத்தையும் உள்ளிட்ட நகரமே பழனி என அழைக்கப்படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகளின் பிரிவுகளான வராகமலை, கொடைக்கானல் மலை முதலிய மலைகள் சூழ்ந்துள்ள செழிப்புமிக்க பள்ளத்தாக்கில் இந்நகரம் இயற்கை வனப்புடன் அமைந்துள்ளது.*

*"முருகன் நற்போர் நெடுவேள் ஆவி*
*அறுகோட் டியானைப் பொதினி"*

*என்றும்,*

*"முழவுறழ் திண்தோள் நெடுவேள் ஆவி*
*பொன்னுடை நெடுநகர்ப் பொதினி"*

*என்றும் அகநானூற்றுப் பாடல்களில் 'பழனி' பற்றிக் கூறப்பட்டுள்ளது.*

*திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் திருவாவினன்குடி முருகனை முனிவர்களும் கந்தர்வர்களும் வழிபடுவதைக் கூறுகின்றார்.*

*கருடக்கொடியை உடைய திருமாலும், ஏற்றுக் கொடியுடையவனும் உமையை ஒரு பாகத்தே பெற்றவனும் இமையா முக்கண்களை உடையவனுமாகிய உருத்திரனும், ஆயிரம் கண்களை உடைய இந்திரனும் திருவாவினன்குடி சென்றனர். இவர் அனைவரும் தன்னை வந்து காணும்படி முருகன் திருஆவினன்குடியில் எழுந்தருளியுள்ளான் என்று நக்கீரர் பாடியுள்ளார்.*

**பழநி முருகனின் தோற்றமும் சிறப்பும்**

*பழனி ஆண்டவர் ஆண்டிப் பண்டாரமாகத் தவக்கோலத்தில் காட்சியளிக்கிறார். ஆண்டவரின் திருவுருவச் சிலை நவபாஷணம் எனும் மருந்தால் ஆனது. முருகனுக்கு ஐந்தமுத முழுக்கு (பஞ்சாமிர்த அபிஷேகம்) மிகவும் சிறப்பாகச் செய்யப்படுகிறது. அன்பர்கள் இடும்பனைப் போல மலர்க்காவடி, பால்காவடி, சர்க்கரைக்காவடி, பன்னீர்க்காவடி கொண்டு வந்து முருகனை வழிபடுகின்றனர்.*

## மாம்பழக் கவிச்சிங்க நாவலர் (ஏகசந்தக்கிரகி)

*காம்பழகாய் மிருதுவுற்ற தோளியர்கள்*
*மதனன் இலக்கணங்கள் ஆதி*
*ஆம்பழமை யானபதி னெண் புராணப்*
*பொருளும் ஆய்ந்து தேர்ந்து*
*தாம்பழகி யேஎவரும் சபாசெனமுத்*
*தமிழ்விரிக்கும் தகைமை வாய்ந்த*
*மாம்பழவாணனை ஒருபோ தென்னினும்*
*கண்டோர்க்கு அமுத வாக்குண்டாமே.*

**- இலிங்கையர், பேறையூர் வித்துவான்**

*பழனி முத்தமிழ்ச் சக்கரவர்த்தி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் 19-ஆம் நூற்றாண்டில் கி.பி. 1836 முதல் 1884 வரை 48 ஆண்டுகள் வாழ்ந்தவர். பழனி ஞான தண்டாயுதபாணிப் பெருமான் திருவருட் கருணையால் ஏக சந்தக் கிரகியாக விளங்கியவர். தமக்கு எவரும் ஈடுஇணையில்லாத நாற்கவிராசராகத் திகழ்ந்தவர். பழனித்தலம் விஸ்வகுலம் முத்தையாச்சாரியார், அம்மணி அம்மாள் தவப்புதல்வர். இவரது குடிப்பெயர் மாம்பழம்; அந்தப் பெயரிட்டே இவரை மாம்பழம் என அழைத்தனர்.*

*இவரது சிறுவயதில் வைசூரி என்னும் கொடிய நோய் இவரைத் துன்புறுத்தியது. குழந்தை பிழைப்பது அரிது எனக் கண்ட இவரது தந்தையார் பழனி மலை மீது குழந்தையை எடுத்துக்கொண்டு சென்று பழனியாண்டவர் முன்பு பலமுறை அழுதுதொழுது "முருகா குழந்தையைக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டிக் கொண்டு மகவை மலைமீதே படுக்க வைத்துவிட்டு வந்துவிட்டார்.*

*மறுநாள் காலையில் மலைமீது சென்று தந்தையார் குழந்தையைப் பார்க்கும் போது அம்மைக் கொப்புளங்கள் ஆறி இருந்தன. குழந்தை முருக நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தது. ஆனால் கண் பார்வை மறைந்திருந்தது. எல்லாம் முருகன் செயல் என்று எண்ணிக் குழந்தையை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வந்து பேணி வளர்த்து வந்தனர்.*

*தனயனுக்கு ஐந்து வயது நிரம்பியபின பள்ளிக்கு அனுப்ப முடியாத நிலையில் தன் மடிமீது புதல்வனைப் படுக்க வைத்து முதுகில் உயிர் எழுத்து மெய் எழுத்துக்களை எழுதிக் காட்டினார். ஒரே நாளில் குழந்தை உயிர் மெய் முப்பது எழுத்துக்களையும் தெரிந்து கொண்டது. மற்றும் சில நாட்களில் தமிழ் எழுத்துக்களுடன் எண், பெயர், முறை, பிறப்பு முதலானவைகளைக் கற்று*

உணர்ந்ததுடன் எவ்வளவு பெரிய வாக்கியங்கள் சொன்னாலும் கற்பலகையில் பிழையின்றி எழுதியும் காட்டியது.

இதைக் கண்ட தந்தையார் மிகவும் அதிசயம் உற்று நல்ல ஆசிரியரை அழைத்துப் பாடம் சொல்லச் செய்தார். ஆசிரியர் இவருக்கு ஒரு முறை பாடம் சொன்னால் முழுவதும் ஒப்புவிப்பவர் ஆனார். இவ்வாறு பல ஆசிரியர்கள் வந்து வந்து பாடம் சொல்வார் ஆயினர். சில வருடங்களில் ஐந்து இலக்கணங்களும், பல இலக்கியங்களும், தொல்காப்பியம் முதல் பல் காப்பியங்களும், வடமொழி வாணரிடம் வடமொழிச் சாஸ்திரங்களும் ஐயம் திரிபு இன்றி உணர்ந்தவரானார். அவர் உள்ளமும், உடம்பும் கல்வி மயமாக இருந்தது. எனவே இவர் சகல கலா வல்லவரானார்.

இவர் மூலம் பல பிரபந்தங்களைப் பெற வேண்டிக் தண்டபாணிக் கடவுள் இவரை "ஏக சந்தக் கிரகியாக" மாற அருள்பாலித்தார். நாமெல்லாம் பல முறை முயன்று மனனம் செய்த பாடல்கள் சில காலத்தில் மறந்து போகும். ஒரு ஏக சந்தக் கிரகி ஒரு பாடலை ஒருதரம் கேட்டால் ஆயுள் முழுவதும் மறக்க மாட்டார். இத்தகைய சிறப்பியல்பு அவர் வாழ்ந்த 48 ஆண்டுகளில் பல பிரபந்தங்களைப் பாட வைத்தது.

பின்னர் இராமநாதபுரம் சென்று சேதுபதி மன்னர் பொன்னுச்சாமித் தேவர் அவர்களால் "கவிச்சிங்கம்" என்ற பட்டம் பெற்றார். மேலும் ஸ்ரீமான் பொன்னுச்சாமித் தேவர் அவர்கள் இவரைச் சந்தித்தபோது இவரைக் "கண்ணில் ஆதவன்" என்று பாராட்டினார்.

இவர் அருளிச் செய்த பாடல்களில் கிடைத்தவற்றை எல்லாம் திரட்டி மார்க்கையன் கோட்டை பழனிச்சாமி ஆச்சாரியார் அவர்கள், ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர், பிரம்மஸ்ரீ உ.வே. சாமிநாதையர் ஆகியோர் விருப்பத்தின்படிப் பிரபந்தத் திரட்டு ஒன்றை 1908-ல் வெளியிட்டார். கிடைக்காமல் போன பாடல்கள் அனந்தம் என்பர்.

## மாம்பழக் கவிச்சிங்க நாவலரின் பழனிப்பிரபந்தங்கள்

முனைவர். **சு. வேங்கடராமன்**
மதுரை

*தமிழ்க் கடவுளாம் முருகனைப் பரவி, பல்வகைப் பிரபந்தங்களைப் பாடிய, சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் மாம்பழக் கவிச்சிங்க நாவலர் தலையாயவர். அவர் தமிழ், வடமொழி இரண்டிலும் வல்லவர். கேள்விச் செல்வம் மூலம் கற்றவர். நான்கு வகைக் கவிகளையும் இம்மென்னும் முன்னே பாடுவதில் அவர் வல்லவர். மாம்பழம் என்னும் பெயர் மதுரஉரை என்ற பொருளில் காரணப் பெயராக, குலப்பெயராக அவருக்கு அமைந்தது. அவர் பாடிய பல்வேறு பிரபந்தங்கள் இரு தொகுதிகளாக 1908-இல் வெளிவந்தன. அவர் பழனி முருகனை வழிபடு கடவுளாகக் கொண்டு வாழ்ந்தவர். 'யாம் ஓதிய கல்வியும் எம் அறிவும் தாமே பெற வேலவர் தந்ததவை' என்னும் அருணகிரிநாத சுவாமிகளின் நெறியில் வாழ்ந்தவர். பழனிமலை முருகன்மீது அவர் நிறையப் பாடியுள்ளார். அவைகளுள் பழனி நான்மணிமாலை (40 பாடல்கள், வாழிப்பாடல் 2), திருப்பழனி வெண்பா (100 பாடல்கள், வாழிப்பாடல் 3), பழனி வெண்பா வந்தாதி (100 பாடல்கள், வாழிப்பாடல் 2), பழனாபுரி மாலை (100 பாடல்கள், வாழிப்பாடல் 1), பழனிக்கோயில் விண்ணப்பம் (120 பாடல்கள்) ஆகிய பழனித்தலத்தின் மீது பாடப்பட்ட 5 பிரபந்தங்களைக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. சிற்றிலக்கிய மரபும், பாட்டுடைத் தலைவனான முருகனின் தனிப்பெரும் முழுமுதல் தன்மையைப் பரவுவதும் பொதுப்பண்புகளாக இவைகளில் உள்ளன. பிரபந்தம் என்னும் புலமை இலக்கிய மரபில் இருப்பினும் பாடல்கள் எளிமையாக உள்ளன. இப்பிரபந்தங்களிலே காணப்படும் பழனி நகரச் சிறப்பு, பழனி தண்டாயுதபாணி கோயில் சிறப்பு, வழிபாட்டு மரபு என்பவை பற்றிய அற்றை நாள் செய்திகளைத் தரும் பாங்கை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அவ்வகையில் மாம்பழக் கவிச்சிங்க நாவலரின் இப்பிரபந்தங்கள் வரலாற்றுச் செய்திகளைக் கொண்டுள்ளன என்று இதனால் அறியலாம். பழனித் திருக்கோயில் பற்றிய கோயில் ஒழுகு ஒன்றைக் காலமுறைப்படி உருவாக்க இத்தகு அரிய இலக்கிய ஆவணங்கள் உதவும்.*

### பரவல்

*சமயநூல்கள் அனைத்திலும் இறைவனைப் பரவுதலும் வரம்வேண்டலும் பொதுவாக இடம்பெறும். தம்முடைய நோய் வினைகள் அனைத்தையும் அறவே நீக்க வேண்டும் என்றும் தமக்கு அருள்புரிய வேண்டும் எனவும் மாம்பழக் கவி முருகனிடம் வேண்டுகிறார். தம்முடைய கல்வியும், தாம் பெற்ற ஞானமும் முருகன் அருளால் வந்தவை; அவை மேலும் மேலும் பெருக இறைவன் அருள்*

*செய்ய வேண்டும் என்கிறார்.*

*"உனதரு ளாலடி யேற்கமை கல்வியுணர்ச்சியனு*
*தினமுயர் வாயபி விர்த்தி பெறும்படி செய்"*

*(பழனாபுரிமாலை-23)*

*பழனி வெண்பா அந்தாதி, பழனிக் கோயில் விண்ணப்பம், பழனாபுரி மாலை ஆகிய பிரபந்தங்களில் இப்போக்கைக் காணலாம். தம்முடைய உடல்நோயையும், பிறவிக்கேதுவான வினையையும் நீக்கவேண்டும். பெண்களின் கண் வலையிலிருந்து தம்மைக் காக்கவேண்டும் என்று மீண்டும் மீண்டும் பாடுகிறார்.*

*"தயாநிதிநீ யென்பதுதான் சத்தியமே யானால்*
*வியாதியினா லென்னை மெலிவிக்கை - நியாயமதோ*
*சொல்லாய் விரைவிற் சுகந்தர வேண்டும் பழனி*
*வல்லாய்"* *(பழனி வெண்பா அந்தாதி - 88)*

*முருகன் தம்மை ஆட்கொண்டு தமக்குக் காட்சி நல்க வேண்டும் என்று வேண்டுகிறார். 'தார்புனை தோளும், கமலத்தாளும் தன் வேலும் மார்புறை நூலும், சேவலும் மயிலும் நேர் பொலியக் காட்சி கொடுக்க வேண்டும்' என்று (பழனிவெண்பா அந்தாதி-45) வேண்டுகிறார். 'நின்னைப் பணிவதுவே எனக்குப் பணி' என்று மனமுருகப் பாடுகிறார். அகத்தியர், நக்கீரர், அருணகிரி ஆகியோருக்கு அருளிய பழனிக்குமரன் தனக்கும் அருள்தர வேண்டும் என்று பரவுகிறார்.*

**பழனித்தல வருணனை**

*இறைவன் உறையும் திருத்தலங்களில் இருந்து வாழ்வது தலவாசம் என்று போற்றப்படும். பழனியில் பிறந்து வளர்ந்த மாம்பழக்கவி, ஆவினன்குடியையும் பழனியையும் மீண்டும் மீண்டும் போற்றிப் பாடுகிறார். பழனி, பழனாபுரி, சிவகிரி, விசையகிரி என்றெல்லாம் பழனியைக் கொண்டாடுகிறார். பழனி, அடியார்களின் பாச வினைகளைத் தீர்க்கும் நகரம். அதை ஆசையுடன் கேட்டாலும், துதித்தாலும், வினைநீங்கி மெய்ஞ்ஞானம் கிட்டும் என்று மீண்டும் மீண்டும் பாடுகிறார்.*

*"ஆசையொடு கேட்பினுங் கண்டாலும் துதித்திடினும்*
*பாசவினை தீர்க்கும் பழனியே" (33)*

*"புத்தியில ராயிருந்த போதினுங்கண் டாலுடனே*
*புத்தியை யுண்டாக்கும் பழனியே" (35)*

*"ஆர்வமிகுத் தேபரவு மன்பர்கட்கு மெய்ஞானப்*
*பார்வை கொடுத்தாளும் பழனியே" (36)*

என்று திருப்பழனி வெண்பாவில் பழனியின் மேன்மையைப் போற்றுகிறார். வயல்கள் (பழனம்) நிறைந்திருப்பதால் அந்த நகரம் பழனி எனப் பெயர்பெற்றது. 'கழனிகள் சூழ்ந்த பழனியங்கிரி' (பாடல்-12). 'கழனிகள் சூழும் பழனியில் வாழும் கர்த்தனே' (பாடல் 15).

"பூமகள் தன்களி றாமென விளங்கும்
வயல்சூழ் பழனி மலையில் வீற்றிருக்கும்" (பாடல் 24)

என்று பழனி நான்மணிமாலையில் பழனியை வருணிக்கிறார். நீர்வளமும் நிலவளமும் வயல் வளமும் நிறைந்த பழனி என்று புலவர் மரபில் வருணிக்கிறார். 'கூடி வயல் தோறும் மணிகொண்டு இறைப்பதென்ன மள்ளர் பாடி விரை தூற்றும் பழனி' (பாடல் 7).

"கொங்கவிழ்பூம் பண்ணைநல்லோர் கொண்ட நிறைசெல்வமென
பைங்கதிர்பெற் றோங்கும் பழனியே" (11)

"மிக்க நெற்கொய் தேதொழுவர் வேந்துளபோர் பல்கிரிபோற்
பக்கமெலாந் தோன்றும் பழனியே" (12)

என்று திருப்பழனி வெண்பாவில் பழனி நகரை வருணிக்கின்றார். திருப்பழனி வெண்பா முழுவதும் பழனி நகரை வளமிகுந்த நகரமாக இலக்கிய மரபில் கற்பனை செய்து பாடுகின்றார். பழனிக்கோயில் விண்ணப்பம் நூலில் பழனித் திருக்கோயில் குறித்துப் பல செய்திகளைப் பாடுகிறார். நகர வருணனை முழுவதும் கற்பனையாக இலக்கிய மரபில் அமைந்துள்ளது. இதனைப், 'பூங்குயில் கேட்பச் சுகமும் பூவையும் ஆறங்கம் முறைபாங்கு பெற ஓதும் பழனி' (பாடல் 29) எனவும் 'வெய்யவனாற் காய்ந்து நொந்த வெப்பகற்றல் போற்கொடிகள் பையமதி தோயும் பழனியே' (பாடல் 26) எனவும் வரும் பாடல்களால் அறியலாம். தமிழில் தோன்றிய சமயச் சிற்றிலக்கியங்கள், நகர வருணனைக்கு இத்தகைய கற்பனை வருணனை மரபைக் கொண்டிருந்தன. அதே தடத்தில் திருப்பழனி வெண்பாவும் அமைந்துள்ளது. கண்முன்னே காணக்கூடிய நகரைவிட்டு, கற்பனையான நகரைப் புலவர்கள் வருணித்தனர் என்றாலும் பழனிக்குமாரன் அருளின் காரணமாகத் தலவாசம் செய்தற்கு உகந்த நகரமாக, அடியவர் வினைகளை வேரறுக்கும் திருத்தலமாக மாம்பழக் கவியால் 'பஞ்செனவே செய்யும் பழனியே' (பாடல் 34) என்று திருப்பழனி வெண்பாவில் பழனித் தலத்தின் மேன்மை சுட்டப்படுகிறது. ஆகவே வருணனையில், கற்பனை மரபைப் பின்பற்றினாலும் தலச் சிறப்பை இயல்பான முறையில் பாடுகிறார்.

**கோயில் சிறப்பு**

பழனித் திருக்கோயில் மலையின் மீது அமைந்துள்ளது. இக்கோயில் சேர

*மன்னனால் அமைக்கப்பட்டது என்று பழனிக்கோயில் விண்ணப்பம் கூறுகிறது. 'சேரர் கோன்செய் சிவாசலக் கோயில் வாழார மார்ப தண்டாயுத பாணியே' (பாடல் 4) என்று பழனிக்கோயில் விண்ணப்பம் நூலில் வருகிறது. சேர மன்னன் இக்கோயிலைக் கட்டினான் என்ற வரலாற்றுச் செய்தியை மாம்பழக்கவி இதில் சுட்டுகிறார். மேலும் 'பழனிக்கிரி மீதினிற் சேரவன் செய் காண்டரு பைம்பொன் விமானத் துவகை கனிந்த வுனை' (பாடல் 3, ப.155) எனவும், 'சிவகிரிக் கண் புவனமுய்யச் சேரர்பிரான் புரிதருபச் சிமத்து வார நவமணிப் பொன் சினகரத்து ஞானகரு ணாநிதியாய்' (பாடல் 9, பக்கம் 12) என்று வருமிடங்கள் இதனைக் காட்டும். மாம்பழக் கவிராயர் காலத்தில் பழனித் திருக்கோயில் சிறப்புடன் விளங்கியுள்ளது. பழனிக்குமரனை வழிபடச் சேர நாட்டிலிருந்து (கேரளம்) மக்கள் வந்துள்ளனர். கோயில் வளர்ச்சி பெற, வழிபடுவோர் கூட்டம் மிகுந்திட, புலவர், சேரமன்னன் இக்கோயிலை எடுப்பித்தான் எனவும், பொன் விமானம் சமைத்தான் எனவும் பாடினார். எந்தச் சேரமன்னன் காலத்தில் பழனித் திருக்கோயில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டது. எந்த மன்னன் பொன் விமானம் சமைத்தான் என்பன ஆய்வுக்குரியன. மரபு வழியாக வழங்கி வந்திருந்தாலுங்கூட, கவிராயர் அவர்கள் பழனிக்கோயில் விண்ணப்பம் நூலில் பதிவு செய்திருக்கிறார்.*

**வழிபாட்டு நெறி**

*பழனித் திருக்கோயில் வழிபாட்டு மரபில் இன்றளவும் காணப்படும் சிலவற்றை மாம்பழக் கவிராயர் பாடியுள்ளார். பழனிமலை மீதுள்ள குமரன் வழிபாட்டு நெறியில் மலையை வலம் வருதல் (கிரிபிரதட்சணம்) இன்றளவும் காணப்படுவதாகும். பொதுவாக மலைக்கோயில் வழிபாட்டில் மலையை வலம் வருதல், உடலுக்கும் மனதிற்கும் வலிமை சேர்ப்பது என்பதால் முன்னோர்கள் இதனை வழிபாட்டுச் சடங்காக ஆக்கினர். இதனைப் பழனிக்கோயில் விண்ணப்பம் நூலில் மாம்பழக்கவி பாடுகின்றார்.*

*"வண்மை தங்குநின் மால்வரை சூழ்வர*
*வுண்மை யன்புமல் வூக்கமும் யாக்கையிற்*
*திண்மை யுந்தரல் வேண்டுந் தினமுமெற்*
*கண்மை நின்று தண்டாயுத பாணியே"        (பாடல் 8)*

*என்ற பாடலில், மலையை வலம் வருவதால் அன்பும், ஊக்கமும், திண்மையும், உடலுக்கும் மனதிற்கும் கிட்டுகின்றன. எனவே தினமும் மலைவலம் வரவேண்டுமென்று பாடுகிறார்.*

*இறைவன் திருநீறு தீராத வினைகளைத் தீர்க்கும் என்ற நம்பிக்கை திருஞான சம்பந்தர் காலத்திலிருந்தே சைவ மரபில் காணப்படுகிறது. என்றாலும் பழனித்திருக்கோயில் வழிபாட்டு நெறியில், முருகன் திருமேனியில் அபிடேகம்*

*செய்யப்பட்ட திருநீறு மருந்தாக உள்ளது என்னும் நம்பிக்கை இன்றளவும் உள்ளது. இறைவன் அருளுடன் கூடிய இத்திருநீற்றைப் பூசுவதால் நோய் பஞ்சாகப் பறந்துவிடும். திருநீற்றுக்கு மேலான மருந்து இல்லை என்று பாடுகிறார். 'வேற்று மருந்தேன் விபூதியொன்றே போதாதோ, தேற்று னருண்மாத் திரமிருந்தாற் காற்றுலவு பஞ்சாமே' (பழனி வெண்பா அந்தாதி, பாடல் 70) என்று வருமிடம் இதனைக் காட்டும்.*

*பழனி மலை முருகனுக்குக் காவடி எடுத்து வழிபடுவது பழமையான மரபாக இருந்து வந்துள்ளது. பல இடங்களிலிருந்தும் காவடி எடுத்துவரும் அடியவர்களுக்கு அருள்செய்து, அதன்மூலம் பல இடங்களுக்கும் தன்னுடைய அருட்சிறப்பை (மகிமையை) இறைவன் வெளிப்படுத்துகிறான் என்று மாம்பழக்கவி பாடுகிறார். 'எங்கெங்கேயோ விருந்தனந்த ரெழிற் காவடி களெடுத்துவர, வங்கங் கேபோய் மகிமை விளைவித் தருள்கின்றனை' (பழனிக்கோயில் விண்ணப்பம்-1, பக்கம் 109). காவடிகள் எடுத்துவரும் அன்பர்கள் எண்ணற்றவர்களாக உள்ளனர். எனவே காவடிகளின் எண்ணிக்கை எண்ண முடியாதன. 'எண்ண முடியாக் காவடிகள் எய்துவன' (பாடல் 2, பக்கம் 109) என்றும் பாடுகிறார். இச்செய்தி இன்றளவும் நடைமுறையில் உள்ளதாகும். வழிபடுவோர் எண்ணற்றவர்களாக இருப்பதால், திருக்கோயிலுக்குக் கிட்டும் காணிக்கையும் அளவிறந்ததனவாக ஆகிவிட்டது. இதனை,*

*"எய்துவன காணிக்கையும் அவ்வண்ணம்" (பாடல் 2, ப.109)*

*என்று பாடுகிறார். காணிக்கை பல வகைகளில் அமைந்திருப்பதை இன்றும் காணலாம்.*

*மேலே காட்டிய பழனிப் பிரபந்தங்கள் பொதுவான சமய இலக்கிய மரபுகளுடன் பழனித்தலம் பற்றிய சில அரிய செய்திகளைக் கொண்டு விளங்குகின்றன.*

**விசயகிரி வேலச்சின்னோவையன் – பழனி பிள்ளைத்தமிழ்**

சீரார் நலஞ்சேர் பூவுலகில் தேவா சுரரின் மற்றையரில்
தினமு முனது கொலுக்காணச் செல்லா தாரார் திறைவளங்கள்
தாரா தாராருனதுபதந் தனையேவணங்கித் தொழவேண்டித்
தழுவா தாரா ரெவ்வேளை சமயங் கிடைக்கு மென நினைந்து
வாரா தாரா ருனதருளை வாழ்த்திப் புகழ்ந்து துதிக்க
வசியா தாரார் பணிவிடைகள் வரிசைப்படியே நடத்தாதார்
ஆரா ரெனத்தா லாட்டுகின்ற வரசே வருக வருகவே
அருள்சேர் பழனிச் சிவகிரிவா ழையா வருக வருகவே.

**மாம்பழக் கவிச்சிங்க நாவலர் – பழனாபுரி மாலை**

சராசர சீவ தயாநிதி நீயிச் சமயமென்முன்
வராவிடில் யானினி யாரை நினைத்து வரம்பெறுவேன்
குராவடி வேல குழந்தைக் குமர குருமணிச்சூட்
டராவணை மால்பர வும்பழ னாபுரி யாண்டவனே
கையா லுனைத்தொழச் சென்னியி னாலுன் கழல் வணங்க
மெய்யா யடிக்கடி வாக்காற் றுதிக்க விதித்துமனம்
நையா வியற்கையு நல்கினியென்னை நழுவவிடேல்
ஐயா வுனக்கப யம்பழ னாபுரி யாண்டவனே.

**பெ. அண்ணாமலைக் கவிராயர் – பழனிப் பதிற்றுப் பத்தந்தாதி**

போக்கு வரவு மியிர்திரியப்
புலையாஞ் செனன மெடுத்தெடுத்துத்
தாக்கு முதிரக்கருக்குழியிற்
சலிக்கும் படிக்கோ வெனைவிதித்தாய்
கோக்கு முகிலால் மயிலாட
நுவல்வா னரங்கள் தென்னைமடல்
சாய்க்கு மதுரப் பழனிநகர்த்
தலைவா யெவர்க்குந் தயாபரனே.

**பழனிமலை வடிவேலர் – சந்நிதி முறை**

மதிமவுலி மார்பில்விளை யாடுகம லங்கவுரி
மழதனி லுதித்தகமலம்
வண்டமிழ்ச் சங்கத்திலிருந்தகம லம்பிரமன்
வந்தனைகள் செய்தகமலம்
அதிகவிதை அருணகிரி சூட்டுகம லந்தெய்வ
யானைகுற வாசகமலம்
அணிமணி திருத்திப் புனைந்தகம லம்பணிசெய்
அடியார்வினை மாற்றுகமலம்
கதிர்முலைக் குறமங்கை தினைவனப் புற்களும்
கற்களும் முறுத்துகமலம்
கானமயி லேறிவிளை யாடிநட மாடுசுரர்
கணங்கள்கொண் டாடுகமலம்
பதிதனாம் என்னுடைய வன்மன மெனுங்கரும்
பாறையில் முளைத்தலருமோ

பழமறை சொலியசீல தொழுமவர்க ளனுகூல
பழனிமலை வடிவேலனே.

**கவிஞர் கண்ணதாசன் – தெய்வத் தோற்றம்**

குன்றத்துப் பழனம் தேர்ந்தான்
குடும்பத்தின் நீங்கி வந்தான்
மன்றத்தில் குவிவார்க் கெல்லாம்
மனவிளக் கேற்றி வைத்தான்
அன்றந்தச் சேரன் தந்த
அழகிய கோவில் கொண்டு
நின்றனன் தண்ட பாணி
நீணிலம் காக்க வென்றே
கழனியிற் செந்நெல் ஆட
காற்றுலாம் வயல்கள் ஊடே
உழவர்கள் தமிழிற் பாட
ஊரெல்லாம் முருகா என்று
இழையுமோர் கவிதை ஓட
எங்கணும் காண்பார் வந்த
பழனியின் தெய்வத் தோற்றம்
பக்தியின் திருநீ ரோட்டம்
அரசினர் அமைத்து வைத்த
அறமன்றத் தார்இந் நாளில்
முருகனுக் கழகுஞ் சேர்த்தார்
முறைமுறை கல்வி தேர
பொருள்நிறை பள்ளி; மன்றம்
புதிய கண்டார்; கந்தன்
திருவருள் அவரைக் காக்கும்
தேசமும் புகழே பாடும்.

## நூல் மறுபதிப்புத் திட்டம் :

பழனியாண்டவர் பற்றிய இலக்கியங்களை மறுபதிப்பு செய்து வெளியிடும் திட்டம் நடைமுறையில் உள்ளது. இத்திட்டத்தின்படி "பழனித்தலபுராணமும் **(1998)**, பழனிப் பிள்ளைத் தமிழும் **(1997)**" மிகச் செம்மையான பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.

# இருபத்தொன்றாம் நூற்றாண்டில் திருவாவினங்குடி குழந்தைவேலனும் பழனி பால தண்டாயுதபாணியும்

(மூன்றாம் படை வீடு)

காவினன் குடிலுறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவா விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மாலுற
ஆவினன் குடிவரும் அமலற் போற்றுவாம்.

– கந்தபுராணம் (துதிப்பாடல்)

*முருகப்பெருமானின் மூன்றாவது படைவீடாகத் திகழ்வது* ***திருவாவினன்குடி*** *(இது நக்கீரர் வகுத்த வரிசைப்படி)* ***பழனி*** *என்ற இடம் வேறு,* ***திருவாவினன்குடி*** *என்ற இடம் வேறு, பழனி மலையின் அடி வாரத்தில் உள்ள ஸ்தலப் பகுதியே திருவாவினன்குடியாகும். மலைதான் பழனித்தலம். ஆனால் இன்று எல்லாவற்றையுமே சேர்த்து ஒரே நகரமாக பழனி என்று அழைக்கிறார்கள். இத்தலம் திண்டுக்கல்லில் இருந்து சுமார் 55 கி.மீ. தூரத்திலும் மதுரையிலிருந்து சுமார் 115 கி.மீ. தூரத்திலும் அமைந்துள்ளது. தமிழகத்தின் அனைத்து பெருநகரங்களிலிருந்தும் பழனிக்கு பேருந்துகள் உள்ளன. இனி ஸ்தல வரலாறுகளுக்கு வருவோம்.*

## திருவாவினன்குடி தல வரலாறு

*பழனி மலைக்குக் கீழே உள்ள திருவாவினன்குடி ஒரு காலத்தில் நெல்லி வனமாகத் திகழ்ந்தது. இந்த நெல்லி வனத்தில் உள்ள சரவணப்பொய்கை தீர்த்தத்தருகே ஒரு சந்தர்ப்பத்தில் மஹாவிஷ்ணுவால் புறக்கணிக்கப்பட்ட ஸ்ரீ மகாலக்ஷ்மியும் அவருடன் பூமாதேவியும்; "விஸ்வாமித்ரரின்" படையை வென்ற அகங்காரத்தால் தனது வலிமையை இழந்த காமதேனுப்பசுவும்; தன்னால்தான் உயிர்களனைத்தும் வாழ்கின்றன என கர்வம் கொண்ட காரணத்தால் "சிவனின்" சாபத்திற்கு ஆளான சூரிய பகவானும்; தக்ஷனது யாகத்தில் கலந்து கொண்டு "ஸ்ரீ வீரபத்திர மூர்த்தியால்" தண்டிக்கப்பட்ட அக்னி தேவனும் தவம் செய்து கொண்டிருந்தனர். இவர்கள் அனைவரும் முருகனை வழிபட்டு தமது குறைகள் நீக்கப் பெற்றமையால் இத்தலம் அவர்களின் பெயர்களைக் குறிக்கும் அமைப்புடன்* ***திரு (மஹாலக்ஷ்மி) ஆ*** *(காமதேனு)* ***இனன்*** *(சூரியன்) கு (பூமாதேவி)* ***டி*** *(அக்னி) என்பவை சேர்த்து* ***திரு-ஆ-இனன்-கு-டி*** *அதாவது* ***திருஆஇனன்குடி*** *என்றானது.*



**அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி, பழநி.**

போகர் சித்தரின் நவபாஷாண அற்புத தண்டபாணி
பழநி மலை நின்று மேற்கு நோக்கி அருளும் திவ்ய ஸ்தலம்.
ஆண்டி முதல் அரசனும் பணியும் தங்க கோபுர ஞானப்பழம் இவனே.

*திருவாவினங்குடிக் கோயிலுக்கு அருகில் உள்ள சரவணப் பொய்கை தீர்த்தமும், ஸ்தல விருக்ஷமாக விளங்கும் நெல்லி மரமும், கோயிலில் உள்ள ஸ்ரீமஹாலக்ஷ்மி, காமதேனு, சூரியன், பூமாதேவி, அக்னி முதலிய தேவதைகளின் சன்னிதிகளும், சித்திரங்களும் இவ்வரலாற்றை நமக்கு உறுதிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளன.*

*திருவாவினங்குடிக் கோயில் பழனிமலை அடிவாரத்தில்* ***வையாபுரி என்ற*** *ஏரியின் கரைமேலிருக்கிறது. இவ்வாலயத்தின் வடக்கில்* ***சரவணப்பொய்கை*** *தீர்த்தம் உள்ளது. முருகனை தரிசனம் செய்ய வருபவர்கள் இப்பொய்கையில் நீராடிச் செல்வதும், காவடி எடுப்போர் இப்பொய்கையின் அருகில் இருந்தே காவடி எடுத்துச்செல்வதும் வழக்கமாகும்.*

**திருவாவினன்குடி முருகன்**

*முருகப்பெருமான் மயில் மீதமர்ந்து அருள்புரியும்* ***ஸ்ரீ குழந்தை வேலாயுத ஸ்வாமி*** *ஆவார். இம்முருகனை இந்திரன் முதலான தேவர்கள், முனிவர்கள், சிவபெருமான், மஹாவிஷ்ணு போன்றோரெல்லாம் வந்து தரிசித்ததாக நக்கீரர் குறிப்பிட்டுள்ளார். அப்படிப்பட்ட சிறப்புகள் உள்ள முருகனை நாமும் வணங்குவோம். அதுமட்டுமல்ல இத்தலத்தில் உள்ள இப்பெருமானை வழிபட்ட பின்பே பழனி மலைக்கோயிலுக்குச் செல்லவேண்டும் என்பது பழங்கால மரபென்கிறார்கள். இங்கு நடைபெறும் பல திருவிழாக்களில் பத்துநாட்கள் கொடியேற்றி உற்சவம் நடக்கும்* ***பங்குனி உத்திரத்திருவிழாவே*** *மிகப்பெரும் விழாவாகும்.*

**திருப்பழனிமலை**

*திருவாவினன்குடி கோயிலிலிருந்து சிறிதுதூரத்தில் தான் உலகப்புகழ் பெற்ற* ***ஸ்ரீ ஞானதண்டாயுதபாணியின்*** *கோயிலை உடைய* ***பழனிமலை*** *அமைந்திருக்கிறது. இடும்பன் கயிலையிலிருந்து கொண்டு வந்த இருமலைகளுள்* ***சிவகிரி****தான் இந்த பழனிமலை.* ***சக்திகிரி****தான் இடும்பன் பெயரால் விளங்கும் இடும்பன் மலை. பழனிமலைக்கு எதிரில் சற்று தொலைவில் தான் இந்த* ***இடும்பன் மலை*** *உள்ளது. பழனி மலை தரைமட்டத்திலிருந்து சுமார் 450 அடிகள் உயரமுள்ளது. சுமார் 697 படிக்கட்டுகளைக் கொண்டுள்ளது. மலைக்கோயிலை மக்கள் அடைய நான்கு வழித்தடங்கள் உள்ளன. அவை* ***படிக்கட்டுப் பாதை, யானை செல்லும் பாதை, இழுவை ரயில் பாதை*** *மற்றும்* ***ரோப்கார் பாதை.*** *முருகனுக்கு அபிஷேக நீர் எடுத்துவர 5 ஆவதாக* ***திருமஞ்சனப்பாதை*** *என்றும் ஒரு பாதை உள்ளது. இது மலையின் பின்புறமுள்ளது. ஆனால் இதனை மக்கள் பயன்படுத்துவதில்லை.*

**பழனி ஸ்தல வரலாறு**

*ஒரு முறை நாரத முனிவரை வாழ்த்தி அபூர்வ மாங்கனி ஒன்றினைத் தந்தார்*


Exit downwards
Outer Prakara
வெளித்திருச்சுற்று
Golden Vimanam
தங்க விமானம்
Great Mandapam
பெரிய மண்டபம்
Inner Prakara
உள்திருச்சுற்று
Paravel Mandapam
பாரவேல் மண்டபம்
Raja Gopuram
ராஜ கோபுரம்
Nayakkar Mandapam
நாயக்கர் மண்டபம்
Water Tank
தண்ணீர்த் தொட்டி
Pilgrim Steps & Elephant Path
Winch Station
Reception Room

*பிரம்மதேவன். (இதனை சிலர் மாதுளங்கனி என்பார்கள்) அந்த ஞானக்கனியை எடுத்துக் கொண்டு ஈசனைச் சந்திக்க கயிலாய மலைக்குப் புறப்பட்டார் அந்த திரிலோக சஞ்சாரி. அங்கு சென்ற அவர் அக்கனியை ஈசனுக்கு அளித்தார். நமக்கோ வயதாகிவிட்டது. இனி இக்கனி நமக்கெதற்கு என்று கூறிய சிவனோ அதனை தம் பிள்ளைகளான, விநாயகனுக்கும் முருகனுக்கும் அளிக்க முற்பட்டார். ஆனால் இக்கனியை பகிர்ந்து உண்ணக் கூடாது இது ஞானக்கனி எனவே ஒருவர் மட்டுமே உண்டு பயனடைய முடியுமென்றார் நாரதர். சரி இருவருக்கும் ஒரு போட்டி வைப்போம் என்று முடிவெடுத்த சிவபெருமான் குழந்தைகளே இங்கு வாருங்கள் உங்கள் இருவரில் இவ்வுலகத்தை முதலில் யார் சுற்றி வந்து வெற்றி பெறுகிறீர்களோ அவர்களுக்கே இந்த* ***ஞானக்கனி*** *பரிசாகும் என்று விதிமுறை அறிவித்தார்.*

*உடனே தமது மயில் வாகனத்தில் ஏறி உலகத்தைச் சுற்றப்பறந்தார் திருமுருகன். தமது தாய் தந்தையரான சிவனும் உமையுமே இந்த உலகம் என்றறிவித்து அவர்களை வலம் வந்து ஓர் யுக்தி மூலமாகப் பழத்தைப் பெற்றுவிட்டார் விநாயகப் பெருமான். உலகத்தை சுற்றிவந்த முருகன் நடந்தவை அறிந்து வருந்தினார். எல்லோரிடமும் கோபித்துக் கொண்டு கயிலை மலையிலிருந்து புறப்பட்டு தெற்கே வந்தார். ஓர் துறவிபோல் மொட்டைத் தலையுடனும் கோவணத்துடனும் ஒரு தண்டம் கொண்டு* ***ஸ்ரீ தண்டாயுதபாணியாக*** *இந்தப் பழனி மலை மீதேறி நின்றுகொண்டார். உடனே அங்கு வந்த சிவனும், உமையும், செந்தமிழ்க்கிழவி ஔவையும், முருகா ஞானப்பழமே நீதான். உனக்கு தனியாக ஒரு ஞானப்பழம் வேண்டுமா? என்று கேட்டு முருகனை சமாதானம் செய்தனர். அவர்கள் எல்லோரும் முருகனைப் பழம்நீ என்றதால் இத்தலம்* ***பழனி*** *என்றதாயிற்று என்பது அருளாளர்களின் வாக்கு (சிலர்* ***பொதினி*** *என்பதே* ***பழனி*** *என்றாயிற்று என்றும், சிலர்* ***பழனம்*** *என்பது ஒருவகை நிலம், இப்பகுதி அந்த நிலப்பகுதியாக இருப்பதால்* ***பழனி*** *என்றானதாகவும் கூறுகிறார்கள்).*

*பழனி மலைக்கோயிலின் ஸ்தல விருக்ஷம் கடம்பமரமாகும். ஆம்! கடம்பமாலை அணிவோனுக்கு கடம்பு ஸ்தல விருக்ஷமாக இருப்பது முறைதானே. இங்கு முருகனுக்கு* ***முடிகாணிக்கை*** *தருவதற்காக பக்தர்கள் மொட்டையடித்துக் கொள்வதும்,* ***அலகு குத்திக்*** *கொள்வதும்,* ***காவடி எடுப்பதும்*** *சிறந்த நேர்த்திக் கடன்களாகும்.* ***பழனி பஞ்சாமிர்தம்*** *உலகப் புகழ்பெற்றது. பழனியில்* ***அசிமுகத்தீர்த்தம், தேவதீர்த்தம், அமுததீர்த்தம், பிரம்மத் தீர்த்தம், ஞானதீர்த்தம்*** *என்ற புனித தீர்த்தங்களும் உள்ளன.*

**பழனி ஸ்ரீ பால தண்டாயுதபாணி**

*பழனி மலைக்கோயில் கருவறையில் வலக்கையில் தண்டாயுதம் ஏந்தி இடக்கையை இடையில் ஊன்றி ஓர் கோவணம் அணிந்து* ***ஞானதண்டாயுத***

*பாணியாக மேற்கு நோக்கி நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறார். போகரால் நவபாஷாணத்தால் உருவாக்கப்பட்ட சிலை இதுதான். ஸ்ரீ தண்டபாணி அதிகாலைப் பூஜையில் காவி உடையில் துறவுக் கோலத்திலும், காலைசந்தியில் குழந்தை வடிவத்திலும், உச்சிகாலத்தில் கிரீடத்தோடு தேவர் போலவும், சாயரக்ஷை பூஜையில் ராஜ அலங்காரத்திலும் காட்சி தருவது மிகவும் சிறப்பாகும்.*

**மலைக்கோயில்**

*பழனிப் பெருமானது திருமலை ஊர் நிலப்பரப்புக்கு மேல் 450 அடி உயரமுடையது. ஏறிச்செல்லும் படிகள் 697 ஆகும். மலைக்கோயிலுக்குச் செல்வோர் முதலாவதாக அடிவாரத்திலுள்ள பாத விநாயகர் கோயிலை வலம் வந்து கிரி வீதி சுற்றியும் மலைமேற் செல்லுவார்கள். பழனிக் குன்றினைச் சுற்றி அழகியதொரு கிரிப்பிரகாரம் உண்டு. அது ஏறக்குறைய ஒன்றேகால் மைல் சுற்றளவுடையதாகும். இதன் இரு மருங்கிலும் அழகிய கடம்பு முதலிய பலவகை மரங்கள் செழித்தோங்கி உள்ளன. கிரியின் நாற்புர வீதியிலும் ஐந்து மயில் மண்டபங்களும், தொடர்ந்த வரிசையில் பொருந்திய பல மடாலயங்கள் முதலியனவும் சிறந்து விளங்குவனவாகும். இன்னும் ஆங்கு மதுரை வீர சுவாமி, ஐம்முக விநாயகர், சந்நியாசியப்பன், அழகிய நாச்சியம்மன் முதலியோர் ஆலயங்களும், நாகமநாயக்கரது திருமூர்த்திகள், பிரமதீர்த்தம், நந்தவனங்கள், திருக்கோயில் கருணை இல்லம், நாதசுர தவுல் பள்ளிகள், சாதுசுவாமிகளது சண்முக விலாசம் என்ற அன்னதான சமாஜ்மடம், அரிசன சேவா சங்கத்தாரது நந்தனார் விடுதி முதலியன உள. கிரிவலம் வந்ததும் அடிவாரப் பக்கத்தே மீனாட்சி அம்மையார் திருமண்டபம் காணத்தக்கது. இங்கே பழனி வைகாவூர் நன்னாட்டை ஆண்ட பாளையக்காரர்கள், அவர்களின் பத்தினிமார்கள் ஆகியவர்களின் உருவச்சிலைகள் திகழ்ந்தன.*

*திருமலைக்கோயில் மேற்குத் திசையினை நோக்கியதாகும். திருவாயில் அடைந்த பின்பு கட்டைக் கோபுரவாயிலும், அதன் அணித்தான சுப்பிரமணிய விநாயகர் சந்திதியும் இருமருங்கும் நாயக்கர் மண்டபமும் தோன்றும். இன்னும் வைசியர் மண்டபம் தாண்டி ஐந்து நிலைமாடங்கள் பொருந்திய இராசகோபுரம் கடந்து இரண்டாம் பிரகாரம் அடைவர். அங்கே 12 கற்றூண்கள் தாங்கிய பாரவேல் மண்டபம் முன்னே காட்சியளிக்கும். இது ஒரு அழகிய அணி மண்டபம் கற்றூண்கள் வேலைப்பாடுடையன. அவைகளுள் பீமசேனன் புருடா மிருகத்துடன் போராடும் காட்சியும் மற்றும் நாயக்கர், பாளையக்காரர் பலரது உருவச் சிலைகளும் குறிப்பிடத்தக்கன. இதனை ஒட்டி வாத்திய மண்டபம் உள்ளது. இதற்கு எதிரே தட்சிணா மூர்த்திக்கும், அதன் மருங்கே மலைக்கொழுந்து சிவன். அம்மனுக்குமாக மூன்று திருத்தளிகள் உள. திருமலையின் இப்பாகமே இம்மலையின் சிகரமென்பர்.*

*இதற்கடுத்த திருவாயில் துவாரபாலகர்கள் காப்புடையது. இங்கு நுழைந்ததும் மகாமண்டபம். இது பக்தர்கள் இருமருங்கிலும் இறைவனைத் தரிசித்து ஈடுபடுதற்கமைந்தது. இம்மண்டபத்தின் 12 கற்றூண்களும் மிக வேலைப்பாடுடையன. உள் நுழைந்ததும், இடப்பக்கத்திலேயே கல்மேடை மீது நடராசர், சிவகாமியம்மை, திருவுருவங்களுள்ளன. பின்னும் அதற்கடுத்து ஆண்டவன் பள்ளியறையும், சண்முகநாதர் திருச்சந்நிதியும், அதனையடுத்து திருவுலாப்போதரும் சின்னக்குமரர் திருச்சந்நிதியையும் போற்றி ஆண்டவனை அணுகும் அணி திகழ் மண்டபத்தில் முருகப்பெருமான் சந்நிதியை அடையலாம்.*

**திருமுருகன் சந்நிதி**

*இதுதான் ஆண்டவனது கருவறைக்கடுத்த முன்னணி மண்டபமாகிய அர்த்த மண்டபத்தின் திருவாயில், அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமியை*

*பிடர்கிடர்ந்த புன்குஞ்சியும் பெருகிய கருணைக்*
*கடலலம்பு கண்களுங் கவினெழுகிய முகமும்*
*வடிவுநூலு மார்புங்கை யொண்கோலும் வயங்க*
*நெடியகோ வணவுடையு டனின்றது கண்டான்*

*எனப் பழநித்தலபுராண ஆசிரியர் பாலசுப்பிரமணியக் கவிராயர் போற்றுகின்றார்.*

*மேற்கு நோக்கிய நிலையில் இறைவன் காட்சியளிக்கின்றான். அவ்வண்ணலின் இணையற்ற திருமுகமும் அருள்கனிந்த திருநோக்கமும், புன்னகை தவழும் திருவாயும், மதாணி துலங்கும் திருமார்பும், ஒல்லிய அரையின் வைத்த இடக்கரத்தின் செவ்வியும், ஞான தண்டமேந்திய வலத்திருக்கரத்து எழிலும், திருத்தாள்களின் பொலிவும், திருத்தண்டைகளின் அழகும் காண்போரைப் பரவசம் அடையச் செய்யும். அன்பர்கள் பலப்பலவான திருக்கோலங்கள் புனைந்து நோக்குந்தோறும் புதிய திருமுக மண்டலப் பிரகாசத்துடன் ஆண்டவர் விளங்குகின்றான். அன்பர்க்கெளிய ஆண்டவன், தன் பக்தர்கள் வியப்புறு நடிப்பது வியப்பன்றே! ஆண்டவன் திருமேனி போக முனிவரால் ரசக்கட்டால் செய்த நவபாஷாணமெனப்படும் ரச(லிங்க) மூர்த்தம் ஆகும். ஆண்டவன் மேற்கு நோக்கும் காரணத்தாலன்றோ மலையாள நாடு அளவற்ற செழிப்பும், எதிலும் செறிந்து இலங்குகின்றது என்பர்.*

*இக்கோயில் எழுந்த காலத்தே, பழனிமலை போக சித்தருக்குரிய உறைவிடமாயும், அவருடைய சித்துக்களால் மக்கள் பெரு நன்மையடைந்த இடமாயும், விளங்கியிருத்தல் வேண்டும். ஆதலால் உடலுக்குறுதி தரும் மருந்து வகைகளையும், அவற்றிற்குரிய மருத்துவ நூல்களையும் ஆக்கிக் கொடுத்த அவ்வித்தக யோக சித்தத்துள் மக்கள் உயிர்ப்பிணி அகன்று மறுமைப்பயனை*



**பழனிமலைத் திருக்கோயில்** ரோப்கார் நுழைவாயில் (தொங்கு ஊர்திப்பெட்டி வாகனம்)

*அடைய வேண்டுமென்று கருதினர். ஒப்பற்ற இறைவனைத் தமது உள்ளத்தின் பேராற்றல் கொண்டு (நவபாஷாணத்) திருமேனியிடத்து நிலைபெறச் செய்தருளினார் போகர். இப்பாஷணைக் கட்டினால் செய்யப்பட்ட திருமேனி மீது அபிஷேகிக்கப்பெறும் பால், தேன், சந்தனம் முதலிய பொருள்களை உட்கொள்பவர் தமக்குள்ள பல நோய்கள் நீங்கப்பெற்று நலமடைகின்றனர். எண்ணற்ற பிறவிகளை எடுத்துழலாமல் பிறவித்தளையினையே அறுக்கும் ஆண்டவன் உடற்பிணியை அறுப்பது வியப்போ?*

**தமிழ் அருச்சனை**

*இறைவனின் திருவருட் குணநலன்களையும் அரும்பெரும் பண்பு நலன்களையும், திருநாமச் சிறப்புக்களையும் அருளாளர்கள் அருளிச் செய்த பாடல்களிலிருந்து பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் மந்திரச் சொற்களைக் கொண்டு 108 போற்றி எனவும், 1008 போற்றி எனவும் தமிழில் படைத்து, இறைவனைத் தமிழில் அருச்சிக்கும் வழிபாட்டு முறை தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் செய்விக்கப்பட்டு வருகின்றன.*

*தமிழ்க்கடவுள் என்னும் சிறப்பிற்குரியவன் முருகக் கடவுள். முருகன் கோயில்களுள் பழனித் திருக்கோயில் தமிழகத்திலேயே முதன்மையான திருக்கோயிலாக விளங்குகின்றது. இத்தகைய சிறப்பிற்குரிய அருள்மிகு பழனியாண்டவருக்கு 1008 போற்றி தமிழ் அருச்சனை முறை 19.10.97 ஆம் நாள் முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பக்தர்கள் பழனி முருகனின் அருளியல் தன்மைகளை உணர்ந்து வழிபாடு செய்யும் பொருட்டு தமிழ் அருச்சனை நூல் ஒன்றினைத் திருக்கோயில் நிர்வாகம் வெளியிட்டுள்ளது.*

**மலைச் சுற்றுக் கோயில்கள்**

*போகர் சந்நிதி மலைமீது உட்பிரகாரத் தென்மேற்கு மூலையிலுள்ளது. அவர் பூசித்த புவனேசுவரி அம்மையின் திருமேனி இன்றும் பூசையிலுள்ளது. இவ்விடத்தேதான் போகர் சமாதியிலிருந்தாரெனக் கூறுவர். இதனின்றும் தண்டாயுதபாணிப் பெருமான் திருவடி நிலைக்கு ஒரு சுரங்க வழி இருக்கின்ற தென்றும், கடைசி முறையாக இதனுட்சென்ற போகர் சித்தர் திரும்பி வராது அங்குள்ளார் என்றும் சொல்லப்படுகிறது. இன்னும் இக்கோயிலின் தென்பாகத்தில் கன்னிமார் என்னும் சப்த கன்னிகைகளின் சந்நிதியும், கோபுர வாயிலையடுத்து வடபுறம் ஈசுவரன், அம்மன் கோயிலும், கோயில் உட்பிரகாரத்து ஈசானிய மூலையில் நவவீரர்களுக்குச் சந்நிதியும் உள்ளன. இப்பிரகாரத்தின் தென்பாகத்தில் கைலாசநாதருக்கு ஒரு திருத்தளியும், அதற்கடுத்து, சண்டேசுவரர் திருச்சந்நிதியும் உள்ளன.*

## பிற திருக்கோயில்கள்

### திருவாவினன் குடிக்கோயில்

*திருவாவினன்குடிக் கோயிலே இப்புராதன தல ஆதிக்கோயிலாகும். இதனையே நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் முருகனின் மூன்றாம் படைவீடாகப் போற்றியுள்ளார். இத்தலத்திலே முருகப்பெருமான் மயில் மீது அமர்ந்து குழந்தை வேலாயுத சுவாமி என்ற பெயருடன் விளங்குகின்றார். காலவரையறைக்கெட்டாத இக்கோயில் காரைக்குடி திருநா.மு.சுப. இலட்சுமணன் செட்டியார் குடும்பத்தாரால் சிற்ப முறையிலே புதுப்பிக்கப்பெற்று 1910 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் நாள் மேற்படி குடும்பம் காரைக்குடி திரு. நா.மு.சுப.ராம. சுப்பிரமணிய செட்டியார் அவர்களால் கும்பாபிஷேகமும் நடந்தேறியுள்ளது. பழமையான இக்கோயிலின் கோபுரமும் முன் மண்டபமும் புதுப்பிக்கப்பட்டு திருஆவினன்குடி திருப்பணிக் கர்த்தாக்கள் திரு. நாமு.லெ. அவர்களாலும், திரு. நா.மு.சுப.ராம.சுப. இராமநாதன் செட்டியார்* B.Sc., *அவர்களாலும் மற்றும் அக்குடும்பத்தார்களாலும் தொடங்கப்பெற்று நடைபெற்று முடிவுற்றது. இவ்வாலயத்தில் பல புராதனக் கல்வெட்டுக்கள் இருந்திருத்தல் வேண்டும்.*

*25.11.1998 ஆம் நாள் இத்திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற்றது. திருக்குட நன்னீராட்டு விழாவினையொட்டி "திருப்புகழ் மண்டபம்" கட்டப்பட்டுள்ளது.*

*ஆவினன்குடிப் பெருமானுக்கு நாள்தோறும் ஆறுகாலம் பூசனையும், மாதக் கார்த்திகை திருவுலாவுடன் மற்ற சிறப்புகளும் நடைபெறுகின்றன. இத்தல விருட்சம் நெல்லியாகும்.*

*பழனித்தல தரிசன முறையைக் கூறுவதான செய்யுளொன்று பாராட்டற்குரியதாகும். அது பின் வருமாறு :*

*தருமிரவி யுதயமது கண்டுவை காபுரி*<br>
*தனைக்கண்டு சுத்தி கண்டு*<br>
*சண்முகப் புனல்கண்டு நியமாதி கண்டுபின்*<br>
*சரவணப் பொய்கை யாடி*<br>
*அருள்பெருக மாவினன் குடிகண்டு கைலாசர்*<br>
*அம்மைபெரி யம்மையைக் கண்(டு)*<br>
*அம் பொன்மலை கண்டதி லிடும்பர்சந் நிதிகண்டங்(கு)*<br>
*அநேக கண் காட்சி கண்டு*

*கருணைகண் டருள்வள்ளி தெய்வானை யைக் கண்டு*
*களிகண் டிருக்கு முன் றன்*
*கமலபா தங்கண்ட பேரொருக் காலுமக்*
*காலனைக் கண்டிடு வாரோ?*
*பரிதிவலி கண்டவன் றனைவென்ற தம்பிதன்*
*பராக்ரமங் கண்டது ரையே*
*பழமறைசொ லியசீல தொழுவர்க ளநுகூல*
*பழனிமலை வடிவேலனே.*

**– வடிவேலர் சந்நிதி முறை**

**சரவணப்பொய்கை**

*திருவாவினன்குடிக் கோயிலின் வடகிழக்கில் சரவணப்பொய்கை அமைந்துள்ளது. முன்பு இது ஒரு கவலைக் கிணறாக இருந்தது. அதனைச் சட்டிச் சாமியார் என்ற பெரியார் யாசகம் செய்து புதுக்கினார். இப்போது இது ஒரு அழகிய தடாகம். சுற்றிலும் கைப்பிடிச் சுவரெடுத்துப் படிவரிசையும் கட்டப்பட்டுள்ளது. முருகப் பெருமானுடைய வரலாறு சுட்டும் வண்ண ஓவியங்களடங்கிய முகப்பு இப்போது கட்டப்பட்டுள்ளது. பழனி முருகனைத் தரிசனம் செய்வோர், இப்பொய்கையிலும் நீராடிச் செல்வர். காவடியெடுப்போர் இத்தலத்தினின்றும் தம் பிரார்த்தனைகளைக் கொண்டு செல்வர். இது திருக்கோயில் நிர்வாகத்திலிருக்கிறது. இதற்கு மின்சார மோட்டார் வைத்து பொய்கை நீரைத் தொட்டிகளில் நிறைந்து, ஆண்களும் பெண்களும் தனித்தனியே மறைவாக நீராட சவுகரியம் செய்யப்பட்டு இருக்கிறது.*

**தங்கத்தேர்**

*முருகப்பெருமான் தினமும் மாலை 7.00 மணிக்கு தங்க இரதம் ஏறி மலைக்கோயில் வலம் வருகிறார். சஷ்டி, நவராத்திரி, தைப்பூசம் போன்ற சில விசேட நாட்களைத் தவிர மற்ற எல்லா நாட்களிலும் தங்கரத உலா உண்டு. ரூ.2000/- கட்டணம் செலுத்தினால் அடியார்கள் யார் வேண்டுமானாலும் நுகத்தைப் பிடித்து இழுத்துச் செல்லலாம். சில நாட்களில் எண்ணற்ற அடியார்கள் பணம் செலுத்துகிறார்கள். 50 அடி 100 அடி தூரத்துக்கு ஒரு அடியார் குழுமத்துக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு எல்லாருக்கும் திருத்தேர் இழுக்கும் பேற்றை முருகவேள் கொடுத்துள்ளார். இந்தத் தேரைக் காணிக்கையாக 1940 ஆம் ஆண்டுகளிலே செய்து கொடுத்தவர் திரு. V.V.C. முருகேச முதலியார் ஆவார்.*

**நிலங்கள்**

*சுவாமிக்கு 354.67 ஏக்கர் நன்செயும் 426.55 ஏக்கர் புன்செயும் நமது முன்னோர்களால் எழுதிவைக்கப்பட்டுள்ளன.*

**மலைக்கோயில் செல்ல மின் இழுவை ரயில்**

*பக்தர்கள் இறைவனைத் தரிசிப்பதற்கென்றே மலைமீது ஏற முதன் முதலில் மின் இழுவை இரயில் விடப்பட்டது பழநியில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. மின்சாரத்தின் உதவியால் இயங்கும் இந்த மின் இழுவை ரயில் வயது முதிர்ந்தவர்களுக்கும், நடக்க இயலாதவர்களுக்கும், உடல் நலம் இல்லாதவர்களுக்கும், குழந்தைகளுக்கும் மலைமீது சென்று ஆண்டவனைத் தரிசித்துவர மிகவும் வசதியாக இருக்கிறது.*

*மூன்று மின் இழுவை ரயில்கள் இயங்குகின்றன. இந்த ரயில்கள் எட்டு நிமிடங்களில் மலையின் உச்சியைச் சென்றடைந்து அங்கிருந்து புறப்பட்ட எட்டு நிமிடங்களில் அடிவாரத்தை வந்தடைகின்றன.*

*இந்த மின் இழுவை ரயில்கள் காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை இயங்குகின்றன. இந்த ரயிலில் பயணம் செய்ய ஒரு தடவைக்கு பெரியவர்களுக்கு தலா ரூ.10/- 10 வயதுக்குட்பட்டவர்களுக்கு தலா ரூ.5/- கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது.*

**ரோப் கார்**

*படிப்பாதை, யானைவழிப்பாதை, மின் இழுவை இரயில் பாதை என்ற மூன்றையடுத்துத் தமிழகத்திலே முதன்முதலாக ரோப்கார் எனப்படும் தொங்கு ஊர்திப்பெட்டி இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பெட்டியிலும் 2 / 4 பேர் அமர்ந்து செல்லுமாறு அமைக்கப்பட்டுள்ளது. 10, 20 பெட்டிகள் மின் விசையால் தொடர்ந்து செயல்படுகின்றன. படி ஏறமுடியாத வயோதிகர்கள் பயன்படுத்துகிறார்கள்.*

**அன்னதானம்**

*காலை 8.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை தொடர்ந்து அன்னதானம் நடைபெறுகிறது.*

**மூலவர் தங்க விமானம்**

*தமிழகத்தில் முதன்முதலாகத் தங்கத்தகடு மூலவர் விமானத்தின் மேல் இங்குதான் மேயப்பட்டது. தமிழகத்திலேயே மிக அதிகமாக வருமானம் வரும் கோயில் இத்திருக்கோயிலாகும்.*

மலைக்கோயில் மின் இழுவை ரயில்



**பெருவிழாக்கள்**

*தைப்பூசம், பங்குனி உத்திரம், வைகாசி விசாகம்/அக்னி நட்சத்திரம், கந்தர் சஷ்டி என்று பல விழாக்கள் ஆண்டு முழுவதும் பழனியில் நடைபெறும். காவடி எடுத்து வருவது என்பது ஒரு பெரிய விழாவாகும். தைப்பூசத்துக்கு வரும் கூட்டம் பல இலட்சங்களைக் கடந்தது என்று சொல்ல வேண்டும். மக்கள் ஊர் ஊராகத் திரண்டு நடந்து வருவார்கள். காரைக்குடி, செட்டிநாடு, மதுரைப் பகுதிகளிலிருந்து திண்டுக்கல்-பழனி சாலை வழியாக இலட்சக்கணக்கான மக்கள் நடந்து வருவதைக் காணக் கண் கோடி வேண்டும். அந்த 10 நாட்கள் திண்டுக்கல், பழனி சாலையில் வாகனங்களை ஓட்டவே முடியாத அளவு கூட்டம். வாகனமே நடைவேகத்தில் தான் செல்ல முடியும். வழிநெடுக நீர்மோர்ப் பந்தல்களையும், அன்னதானக் கூடங்களையும் காணலாம். வாகனமே ஓட்ட முடியாத நிலை ஏற்பட்டு அரசும், பொதுமக்களும் நெடுஞ்சாலைக்கு அருகிலே 10 அடி அகலத்தில் தனியாக நடைபாதையையே உருவாக்கி விட்டனர். நடைபாதை சமச்சீர்செய்யப்பட்டு நெடுஞ்சாலையைப் போன்றே கல்பதித்துப் பராமரிக்கப்படுகிறது. ஊரே காலி செய்யப்பட்டு அனைவரும் வரும்போது உணவுப் பொருட்கள் சமைக்கும் ஏற்பாட்டுடன் ஓரிரு பெரிய வாகனங்களே கூட வரும். ஆங்காங்கே சமைத்து ஊர் மக்கள் முழுவதும் உணவருந்திக் கொண்டே தல யாத்திரையைத் தொடர்வார்கள். மலைமேல் அன்னதானங்களும், அபிடேகங்களும் சிறப்பாக நடைபெறும். இருபதாம் நூற்றாண்டில் மூலவர் பாலதண்டாயுதபாணிக்குப் பாலாபிடேகம் செய்யப்பட்ட பால் 697 படிகளில் வடிந்து அடிவாரமே வந்து சேர்ந்ததாகக்கூட வரலாறு உண்டு.*

***அரகர, அரகர, அரோகரா என்ற மகுடங்கள் எப்பொழுதும் திருமுருகத் தலங்களில் ஒலித்துக் கொண்டே இருக்கும்.***

**அரகர :-**

*அரன் - பாவத்தைப் போக்குபவன். "ஹரஹர" என்று கூறுபவர் வல்வினை நீங்கப் பெறுவர்.*

**"ஹரஹரா எனாமூடர்" – திருப்புகழ்**

*"ஹரஹர" என்று முழங்கினால் உலகந் துயர் தீர்ந்து உயர்வு எய்தும்.*

**"எல்லாம் அரன்நாமமே**
**சூழ்க வைய முந்துயர் தீர்கவே" – ஞானசம்பந்தர்**

# பழனி நவபாஷாண
# முருகன் சிலையின் ரகசியம்

*"பழனி" ஸ்ரீ பாலதண்டாயுத பாணியின் சிலை நவபாஷாணத்தால் ஆனது. இதனை செய்து அங்கே நிறுவி தொடர்ந்து பூஜைகள் நடைபெறத் தொடக்கி வைத்தவர் செந்தமிழ்ச் சித்தர் **போகர்.** இவர் பதினெண்சித்தர்களில் ஒருவர். இவர் இளமை காலத்தில் பெண்போகத்தில் பிரியமுடையவராகத் திரிந்ததால் போகர் என்று பெயர் பெற்றார். இவர் அகத்தியரின் மாணாக்கர் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் இவர் காலாங்கிநாதர் என்ற சித்தரின் மாணாக்கர் என்பதை போகர் 7000 என்ற அவருடைய நூலின் மூலமாகவே அறிய முடிகிறது. இவருடைய சீடர் "புலிப்பாணிச்சித்தர்". இவர்தான் மிகவும் நெருங்கியவர். மேலும் கொங்கணர், கருவூரார், சுந்தரானந்தர், மச்சமுனி, சட்டைமுனி, கமலமுனி, நந்தீசர், இடைக்காடர் போன்ற சித்தர்களும் இவருடைய மாணாக்கர்களே என்றும் சிலர் கூறுகிறார்கள்.*

*இவர் அஷ்டமாசித்திகள் புரிவதில் வல்லவர். சித்தர் வல்லபம் பல இவருக்கு உண்டு. சப்த சமுத்திரங்களைத் தாண்டி பறந்து சென்று பல சஞ்சீவி மூலிகைகளைக் கொண்டுவந்தவர் என்றும், அம்மூலிகை கிடைக்காமல் மாயம் புரிந்த போது ஸ்தம்பன மந்திரத்தை பிரயோகித்து அவற்றை ஓரிடத்தில் நிலைக்கச் செய்து பிடித்து விட்டார் என்றும், மேருகிரிக்கு அப்பால் சென்று பல வகைத் தாதுக்களைத் தேடி எடுத்துவந்தார் என்றும், இவரை சித்தர்கள் சிலர் புகழ்ந்துள்ளனர். மனிதர்க்கு மட்டுமின்றி இவர் சிங்கம், புலி, பூனை போன்ற மிருகங்களுக்கும் கூட மந்திரோபதேசம் செய்த மகிமைமிக்கவர் என்றும் கூறுகிறார்கள். ஸ்ரீ ஞானதக்ஷிணாமூர்த்தியாகிய சிவன் தாம் சக்திதேவிக்கு உபதேசித்த ஏழு லக்ஷம் மந்திரக்கிரந்தங்களை சுருக்கி ஏழுகாண்டங்களாகத் தமிழில் தந்தவர் என்றும் இவரைப் போற்றுகிறார்கள். இவருடைய நூல்களில் மிகச்சிறந்தவை **700 யோகம், போகர் 7000, நிகண்டு 17,000 சூத்திரம்** ஆகியவை. போகர் முருகப்பெருமானால் சித்திகள் பெற்றவர். அதனால்தான் அவர் கௌமார பக்தராக இருந்து பழனி பாலதண்டாயுதபாணி சிலையினை நவபாஷாணம் என்ற அரிய மருந்து வகைகளால் உருவாக்கி ஸ்தாபிதம் செய்தார். இதனை அவர் செய்ததற்கான காரணத்தை நாம் பிறகு பார்க்கலாம்.*

### நவபாஷாண ரகசியம்

*பாஷாணங்களில் பிறவிப்பாஷாணங்கள் 32, வைப்பு பாஷாணங்கள் 32, இவ்வாறாக 64 பாஷாண வகைகள் உள்ளன. இவற்றுள் சுமார் 9 பாஷாணங்களை தேர்ந்தெடுத்தார். இவை நஞ்சுப் பொருள்களாகும். இவற்றை நேரடியாக*

*உண்டால் மனிதன் இறந்து போவான். எனவே இவற்றினுள் உறையும் மருத்துவ குணங்களை ஆராய்ந்தார் போகர். சரக்குகளுக்குள் சத்துருச்சரக்கென்றும், மித்துருச்சரக்கென்றும் சில வகைகள் உண்டு. ஒரு சரக்கின் விஷத்தன்மையைப் போக்க அதற்கு எதிரான வினைபுரியும் மற்றொரு சத்துருச்சரக்கால் அதனைக் கொல்ல வேண்டும். ஒரு சரக்கின் மருத்துவத்தன்மையை மேலும் வீரியப்படுத்த அதற்கு நண்பனாக விளங்கும் மற்றொரு மித்துருச் சரக்கால் அதை மேம்படுத்த வேண்டும். இவ்வாறாக அந்த நவபாஷாணங்களில் உள்ள நச்சுத்தன்மைகளை நீக்கி மருத்துவத் தன்மையின் வீரியத்தை அதிகப்படுத்தி மூலிகைகளால் அவற்றில் வேதி வினை புரிந்து உருக்கி வார்க்கும் பதத்தில் அதனை பதமாக்கி அதனால் பழனி ஸ்ரீ பால தண்டாயுத பாணியின் திருவுருவத்தை உருவாக்கினார் போகர் பெருமான்.*

**நவபாஷாணங்கள் எவையெவை?**

*நவபாஷாணங்களை பலர் பலவிதமாகக் குறிப்பிடுகிறார்கள். எனவே இக்கருத்தில் குழப்பம் நிலவுகிறது.* ***சாதிலிங்கம், மனோசிலை, காந்தம், தாரம், கெந்தி, ரசகற்பூரம், வெள்ளைப் பாஷாணம், கௌரிபாஷாணம், தொட்டி பாஷாணம்*** *என்ற ஒன்பது சரக்குகளே என்று* ***அபிதான சிந்தாமணி*** *என்ற நூல் போன்ற சில கலைக்களஞ்சியங்களும் கூறியுள்ளன. இல்லை இல்லை* ***பாதரசம், மதார்சிங், தாளகம், லிங்கம், கந்தகம், வீரம், பூரம், வெள்ளை, மனோசிலை*** *என்ற ஒன்பது சரக்குகளே என்று சில ஆராய்ச்சியாளர்களும் கூறியிருக்கிறார்கள். நவபாஷாணங்கள் நஞ்சுள்ளவை அவற்றை உண்ணத்தக்க மருந்தாக மாற்றிக் கட்டுவது ஒரு சித்துவேலை, இதை செய்யத் தெரிந்தவர் அகத்தியர், அவரிடம் கற்றவரே போகர் என்றும் சிலர் குறிப்பிடுகின்றனர். நவபாஷாணத்தால் செய்த பழனி முருகன் சிலை காற்று, நீர், எண்ணெய், நெய், தேன் ஆகிய பொருள்களால் கரையாது என்றும், நெருப்பால் பாதிப்படையாது என்றும் இது தீராநோய்களைத் தீர்த்து ஆயுளை அதிகரிக்கச் செய்யும் என்றும் மஹான்கள் குறிப்பிடுகிறார்கள்.*

**நவபாஷாணங்களின் மருத்துவகுணம்**

*உலகில் ஒரு நோய்க்கு ஒரு மருந்து அல்லது பல மருந்துகள் தருகிறார்கள். மனித குலத்துக்கு வரும் மனநோய்களும், உடல் நோய்களும் மொத்தம் 4448 வகைகளாகும். இவற்றை ஒரே ஒரு மருந்தைத் தருவதன் மூலம் குணமாக்க முடியுமா? என்று சிந்தித்தார் போகர். அதன் வெளிப்பாடுதான்* ***சர்வரோக நிவாரணியாக*** *விளங்கும் இந்த நவபாஷாண முருகன் சிலை. இதனைச் செய்து, கருவரையில் அதனை ஸ்தாபித்து, அதற்கு அபிஷேகம் செய்யும் பால், பசுநெய், பன்னீர், சந்தனம், பஞ்சாமிர்தம், விபூதி போன்ற பிரசாதங்களை மக்களுக்குத்*

*தந்து அதனை அவர்கள் உண்பதன் மூலம் அவர்களின் நோய்களை இலவசமாகவே நீக்கி சுகம் பெற வைப்பதே அவரின் லக்ஷியமாக இருந்தது. அந்த லக்ஷியத்தில் அவர் வெற்றியும் பெற்றார்.*

**மேலும் 9 நவபாஷாண சிலைகள்**

*போகர் மேலும் இதுபோல் 9 நவபாஷாண சிலைகளை செய்தார் என்றும், பழனிமலை, இடும்பன் மலை போன்ற இடங்களில் உள்ள சில மறைவிடங்களில், குஹைகளில் ரகசிய இடங்கள் ஏற்படுத்தி அவற்றை பத்திரப்படுத்தி வைத்துள்ளார் என்றும், அவை எதற்காக என்றால் பழனி நவபாஷாண சிலை காலப்போக்கில் சேதமடைந்து குறைவு ஏற்பட்டால் அதற்கு பதிலாக மாற்றிப் பிரதிட்டை செய்வதற்காகவே என்றும், பாரம்பரியமிக்க சில சித்தமருத்துவ வல்லுனர்கள் கூறுகிறார்கள். இன்று அவற்றை கண்டுபிடித்து எடுத்து மீண்டும் பிரதிட்டை செய்யும் அளவுக்கு திறமைமிக்கவர்கள் யாரையும் காணமுடியவில்லை. எதிர்காலத்திலாவது யாராவது மகான்கள் வந்து தம் ஞானதிருஷ்டியினால் அவற்றைக் கண்டுபிடித்து எடுத்து பிரதிட்டை செய்தால் மனித குலம் நோய்களின் அரக்கப் பிடியிலிருந்து விடுபட்டு மகிழும். இதற்கு திருமுருகன் தான் கருணை புரியவேண்டும்.*

## இடும்பன் வரலாறு

*செந்தண்மைமிக்க பைந்தமிழ் முனிவராகிய அகத்தியர், கந்தகிரி சென்று, கந்தவேளைச் சிந்தையன்புடன் தொழுது துதித்து, 'ஐயனே! பன்னிருகையனே! அடியேன் பொதியமலையில் வைத்துப் பூசிப்பதற்கு ஈண்டு சிவ சொரூபமாகவும் சத்திரூபமாகவும் விளங்கும், சிவமலை சத்திமலை என்ற இரு சிகரங்களையும் தந்தருளல் வேண்டும்' என்று வேண்டினார். வேண்டும் அடியர் புலவர் வேண்ட அரிய பொருளை வேண்டுமளவில் உதவும் வேலாயுதக் கடவுள் அவ்வாறே அகத்தியனாருக்கு அருமலைகள் இரண்டையும் அளித்தருளினார். அகத்தியனார் மகத்துவமிக்க அத் திருமலைகள் இரண்டையும் பெயர்த்துக்கொண்டு பூவுலகின் கண் வந்தார். பூர்ச்சவனம் என்னும் தலம் வந்ததும், செவ்வேளின் திருவருளால் அச்சிகரிகள் இரண்டனையும் அங்கு வைத்துப் பொதியை நோக்கி வருவாராயினார்.*

*சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்னும் அசுரர்களின் சேனைகளுக்கும், அக் குலத்தினருக்கும் வில்வேதமாகிய அத்திர சத்திர வித்தைகளைப் பயிற்றியவன் இடும்பாசுரன். அவன் மனைவி இடும்பி சூராதியவுணர்கள் வேலாயுதத்தினால் ஒடுங்கியபின், வில்லாசிரியனான இடும்பன் தன் மனைவி இடும்பியுடன், வீரமகேந்திரபுரியை விடுத்து, சிவசிந்தையுடன் வனசஞ்சாரம் புரிந்து*

*கொண்டிருந்தான். ஒரு சிறந்த வனத்தில் சிவபெருமானை நேசித்துப் பூசித்தான். சிவபெருமான் தோன்றியருளினார். இடும்பன் எல்லை யில்லாத மகிழ்ச்சியுடன் தொழுதான். அழுதான். "எந்தையே! ஈசனே! இமையவர் நேசனே! அடியேன் அறுமுகக் கடவுளுக்கு அடிமையாகி அப்பரம கருணாநிதியின் திருவருளைப் பெற வேண்டும்'' என்று வேண்டினான். அரனார் அவ்வரம் நல்கி மறைந்தருளினார்.*

*அவன் சிவமூர்த்தியை வழிபட்ட தலம் இடும்பவனம் எனப்பட்டது. அது கோயிலூருக்குத் தென்கிழக்கே பத்து கல் தொலைவில் உள்ளது.*

*இடும்பன் மனைவியுடன் வனசஞ்சாரம் புரிந்து கொண்டு திருக்குற்றால மலையைச் சார்ந்தான். அங்கு அகத்திய முனிவரைக் கண்டு, அவரது அடிமலர் மீது வீழ்ந்து வணங்கி, ''தவப்பெருந் தலைவரே! தயாநிதியே! அடியேன் சூராதியவுணர்களின் நல்லாசிரியன். கந்தவேள் கருணையை நாடி நிற்கின்றேன். தேவரீர் முருகவேளின் சீடரன்றொ? சிறியேனைக் குமரவேளின் திருவருட்கு உரியவனாக்கி ஆண்டருள்வீர். அடியேன் உமது அடிமலர்க்கு அடைக்கலம்" என்று வேண்டினான்.*

*அகத்தியனார் அவனை அருட்கண்ணோக்கம் புரிந்து, 'அஞ்சேல்' என்று அங்கையமைத்துக் கூறுவார். ''அன்பனே! உனக்குக் குமரவேள் திருவருள் கிடைக்கும். திருக்கேதார தலத்திற்கு அருகில் உள்ள பூர்ச்சவனத்திலே சத்திகிரி சிவகிரி என்ற இரு சிகரங்கள் இருக்கின்றன. அவற்றை யெடுத்து நம் பொதியமலைக்கு வருவையேல் உனக்குக் குமாரநாயகன் திருவருள் கிடைக்கும். அழியாத புகழும் பெறுவாய். அத் திருமலைகளின் பெருமை சொல்லுந்தர மன்று; சென்று கொணர்தி" என்று பணித்தருளினார். அங்குச் செல்லும் வழியையும் உணர்த்தி, சடக்கர மந்திர உபதேசமும் செய்து அனுப்பினார்.*

*இடும்பன் தன் மனைவி இடும்பி யென்பாள் காய்கனி கிழங்குகள் தந்து உபசரித்துவர, குறுமுனியாகிய குருபரன் கூறிய வழியே சென்றான். இடையில் உள்ள திருத்தலங் களையெல்லாம் தரிசித்துக்கொண்டு பூர்ச்சவனம் என்னும் திருத்தலத்தைச் சேர்ந்தான். அங்கு அகத்தியர் வைத்த சத்திகிரி சிவகிரிகளைக் கண்டு களித்தான். "யானே தவமுடையேன்; என் புண்ணியமே புண்ணியம்" என்று உள்ளம் உவந்தான். பூசைக்குரிய சாதனங்களை மனைவி ஆயத்தம் புரிந்து தர, இடும்பன் அம் மாமலைகளைப் பூசித்தான். அகத்தியர் உபதேசித்த சடக்கர மந்திரத்தை விதிப்படி ஜெபித்துக் கண்களை மூடி, ஒருமையுடன் தவம் புரிந்தான்.*

*அப்போது பிரமதண்டம புயதண்டாகவும், அட்டதிக்கு நாகங்களும் கயிறுகளாகவும் தன்னருகில் வந்தன.*

அவற்றைக் கண்டு அதிசயித்த அத்திருவாளன் துண்ணென்றெழுந்து, எட்டு நாகங்களையும் உறிபோற் சமைத்து, இரு மலைகளையும் அதில் வைத்து, பிரம தண்டுடன் பிணித்து, மூலமந்திரத்தைச் சிந்தித்து, முருகவேளை வந்தித்து, காவடியாக்கி எடுத்துத் தோளில் வைத்தான். முழங்காலை மண்ணில் ஊன்றி யெழுந்தான். "அரோகரா! அரோகரா" என்று கூவிக்கொண்டு தென்திசை நோக்கி நடந்தான். பல காதங்கள் கடந்தான்.

பன்னிருகட்பரமன் திருவிளையாட்டினால் வழி மயங்கி, விந்தமலை வழியாக, ஸ்ரீசைலம், திருக்காளத்தி, திருத்தணிகை, திருக்காஞ்சி, திருவருணை, திருமுதுகுன்றம் முதலிய தலங்களைச் சேவித்துக்கொண்டு வந்தான். ஆங்காங்கு காவடியையிறக்கி இறைவனை வழிபட்டு, மனைவி தேடித்தரும் காய்கனிகளை யருந்தி, தண்ணீர் பருகி இளைப்பாறிக்கொண்டு சென்னிமலையென்ற புட்பகிரியைச் சார்ந்தான். அங்கு வழித்தெரியாது மயங்கினான். அங்கு அறுமுகவேள் ஓர் அரசகுமாரனைப் போல் தோன்றி, "இடும்பைக்கு இடும்பை தரும் இடும்பா? நீ இவ்வழியே போய் வராகமலையில் தங்கி, அவ்வழியே பொதியாசலம் போகக்கடவாய்" என்று கூறியருளினார்.

இடும்பன் அகமகிழ்ந்து சென்று வராகமலை வழி சென்று திருவாவினன் குடியை அடைந்தான். திருவேலிறைவன் திருவிளையாட்டால் மலைகள் மிகவும் பாரமாகித் தோளை வருத்தின. இடும்பன் சிறிது இளைப்புடன் காவடியை இறக்கி வைத்துவிட்டு, வாமதேவ முனியாச்சிரமஞ் சென்று, இடும்பி தந்த இனிய காய் கனி கிழங்குகளையுண்டு இளைப்பாறி, மீண்டும் மலைகளைத் தூக்கத் தொடங்கினான். எத்துணை முயன்றும் காவடி எழவில்லை. பெருமூச்சு விட்டான். மீண்டும் மீண்டும் பெரிதும் முயன்று எடுக்கலுற்றும் மலைகள் மேல் எழாமை கண்டு கவலையுற்றான். சுற்றுமுற்றும் பார்த்தான். சிவகிரியின் மீது ஒருபுறம் குராமரநிழலில் ஒரு சிறு குழந்தை நிற்பதைக் கண்டான்.

அசுரகுல திலகன் அதிசயித்தான். "இப் பாலகன் யாவன்? தேவகுமாரனோ? இயக்கனோ? சித்தனோ? முருகவேளோ?" என்று ஐயுற்று அருகிற் சென்றான்.

அமரர் போற்றுங் குமரநாயகன், பிடரியில் இருண்டு சுருண்ட தலைமயிர் தொங்கவும், கருணையொழுகும் கண்களும், ஆயிரகோடி சூரியர் ஒருங்கே திரண்டாலன்ன ஒளி மிகுந்த திருமேனியும், முப்புரி நூல் புரளும் திருமார்பும் தண்டு தாங்கிய திருக்கரமும் விளங்க நிற்கக் கண்டான். "ஏ! குழந்தாய்! நீ யார் மகன்? இங்கு நீ தனித்து நிற்கும் காரணம் யாது? வழி தவறி வந்தனைகொல்? விரைந்து சொல்" என வினாவினான். முருகவேள் ஒன்றும் பதில் கூறாது முறுவல் புரிந்தனர்.

இடும்பன் ஆலகாலம்போல் சீறி, "ஏ மைந்த! மலையினின்றும் இறங்கி

*விலகிப்போ. யான் கொலையே புரியும் அசுரகுல குரு. வீணே துன்பத்தைத் தேடிக் கொள்ளாதே" என்றான். குழந்தை வேலவர் நகைத்து, "அப்பா! அசுரனே இம்மலை எமக்கு இருக்கையாகும். உனக்கு வலிமையிருக்குமாயின் இவற்றை எடுத்துக்கொண்டு போதி" என்றனர். இடும்பன் மிகவுஞ் சினங் கொண்டான். "ஏ பாலகனே! நீ மாயையில் வல்லவன் போலும். நன்று; நன்று. நான் மாயவனைச் சிறுவனாகக் குறுகச் செய்தருளிய குறுமுனிவரது அடியவன். உன் செருக்கையும் மாயையுங் காண்கின்றேன்" என்று கூறிக் கைகளைப் பிசைந்தான். பற்களைக் கடித்தான். வாயை மடித்தான். புருவத்தை நெறித்தான். குரா வடிவக் குமரன் மீது பாய்ந்தான்.*

*குராவடிக் குழந்தை வேற்குமரக் கடவுள், தமது திருக்கரத்தில் விளங்கும் தண்டாயுதத்தினால் சிறிது தாக்கினார். மூதண்ட முகடு உடைந்து வீழ்ந்ததுபோல இடும்பன் அலறி வீழ்ந்து மடிந்தான். நாகங்களும் பிரம தண்டும் அஞ்சி யகன்று அகத்தியனார்பால் சென்று அஞ்சலி செய்து நிகழ்ந்ததைப் புகன்று, தத்தம் இருப்பிடஞ் சேர்ந்தன.*

*இடும்பன் இறந்த பேரொலியைக் கேட்ட இடும்பி, உள்ளம் பதைபதைத்து ஓடிவந்து கணவன்மீது வீழ்ந்து புலம்பினாள்.*

*என் உயிர்த்துணைவா! குறுமுனியின் அருள்பெற்ற கொற்றவ! சூரர்க்கும் வில்வித்தை கற்பித்த வீராதிவீர! நின்னைக் கொன்ற வீரன் யாவன்? அந்தோ! நினை யிழந்து நான் எங்ஙனம் வாழ்வேன். பதியையிழந்த பாவியானேன். தெய்வமே! நின் சோதனையோ! முன்புரிந்த வினையின் வாதனையோ?" என்று பலவாறு அழுதாள்.*

*குராமரத்தின் நிழலில் நிற்குங் குழந்தையைக் கண்டாள். "இவர்தான் என் கணவரைக் கொன்றவர் போலும். சூரனைக் கொன்றவர்தான் சூரனது வில்லாசிரியராம் என் கொழுநரைக் கொழுநரைக் கொல்லுதல் கூடும். இவர்தான் எம்மைக் குலமுழு தாளவந்த குன்றம் எறிந்த கூர்வேலவர்; சூர்முதல் தடிந்த சீராளர்" என்று திருவருள் உணர்த்த உணர்ந்தாள். ஓடி எம்பிரான் இணையடி மீது வீழ்ந்தாள். ''தேவதேவா! மூவர் தொழும் முதல்வா! நினது திருவிளையாடலின் திறத்தை யறியாத எனது கணவனைக் கொல்வது முறையோ? கருணைக் கடலே!*

புங்கவர் வழுத்தும் வேற்கைப் புனிதனே அயிரா ணிக்கு
மங்கல நாணை யீந்த வரதனே என்றும் நின்றாட்
பங்கயம் போற்றும் நாயேன் பதியினை யளித்துப் பொன்னாண்
இங்கெனக் களிப்பாய் தண்டம் ஏந்திய இளைய தேவே.

வேலனே போற்றி ஞான விகிர்தனே போற்றி ஞானக்
கோலனே போற்றி தெய்வக் குமரனே போற்றி ஈசன்
பாலனே போற்றி ஞான பண்டித போற்றி ஞான
சீலனே போற்றி தேவ தேவனே போற்றி போற்றி

*என்று துதித்தாள். அவள் கண்களினின்றும் கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. அங்குள்ள கல்லும் உருகியது.*

*அயில்வேற் கடவுள் மயில்மேல் காட்சி தந்தருளினார்! கணங்கள் புடைசூழ்ந்தன; வேதங்கள் ஒலித்தன; தேவதுந்துபிகள் முழங்கின; கந்தவேள் கடைக்கண் கருணை இடும்பன் மீது வீழ்ந்தது. தூங்கி யெழுந்தவனைப்போல் துண்ணென எழுந்தான். அண்டர் நாயகனைக் கண்டான். ஆராத காதல் கொண்டான்; ஆகுலத்தை விண்டான். "திருமுருகா! திருமால் மருகா! பார்வதி பால! அமரர் போற்றுங் குமர நாயக! சிறியேன் அறியாது செய்த பெரும் பிழையைப் பொருத்தருள்க" என்று அடிமலர்மீது வீழ்ந்து துதித்தான்.*

*பழநியாண்டவர் ''அன்ப! அஞ்சற்க. இம்மலைகள் இங்ஙனமே இருக்கத்தக்கன; குருமுனியும் ஈண்டு வந்து வழிபடுவானாக. அடியார்கள் அனைவரும் ஈண்டுவந்து வந்தித்து வேண்டுவன பெறுவார்களாக. நீ இம்மலையின் இடைப்பகுதியில் நமக்கு அடியவனாக நிற்பாய். உலகில் உள்ளோர் வழிபாட்டிற்குரிய சாதனங்களை உன்போல் காவடியாகக் கொணர்வார்களாக. உன்னை முதலில் வழிபட்டு பின்னர் நம்மை வழிபாடு புரிவார்களாக. உன்னை வணங்கினோர் எம்மை வணங்கிய பயனைப் பெறுக. நமது பூரண அருளை நீ பெற்றாய்" என்று திருவருள் புரிந்து நின்றனர்.*

*அதுமுதல் பழநிமலைக்கு எண்ணில் காவடிகள் கொணர்ந்து இடும்பனையும் தண்டபாணியாகிய கடம்பனையும் அடியார்கள் என்றும் வழிபட்டு இன்புறுவாராயினார்கள்.*

## திருவேரகம் - பொருளடக்கம்


| வ.எண் | (பாடல் அடிகள் 177–189) பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | நச்சினார்க்கினியர் உரை | 565 |
| 2. | உரையாசிரியர் உரை | 567 |
| 3. | பரிமேலழகர் உரை | 568 |
| 4. | கவிப்பெருமாள் உரை | 569 |
| 5. | பரிதியார் உரை | 570 |
| 6. | முனைவர் கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 570 |
| 7. | கி.வா. ஜகன்னாதன் உரை | 573 |
| 8. | பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் உரை | 582 |
| 9. | சுவாமி மலையின் தொன்மை – குருமலை | 594 |
| 10. | திருவேரகத்தைப் பற்றி அருளப்பட்ட நூல்கள் | 601 |
| 11. | இருபத்தொன்றாம் நூற்றாண்டில் திருவேரகம் | 630 |
| 12. | தலச்சிறப்பு | 634 |
| 13. | தீர்த்தச்சிறப்பு | 636 |

உ
*சிவமயம்*

# 4. திருவேரகம்

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅ(து)
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்(டு)
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்(து)
இருபிறப் பாளர் பொழுதுஅறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர்தற் புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுஉவந்(து)
ஏரகத்து உறைதலும் உரியன், அதாஅன்று;

---

**1. நச்சினார்க்கினியர்**

*இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது* - ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல். *ஈதல் ஏற்றலென்னும் ஆறாகிய நன்மை பொருந்திய இலக்கணத்தில் வழுவாமல்.*

*வழாமல், வழுவாமலெனத் திரிக்க.*

*இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல் குடி - தாயுந் தந்தையுமாகிய இருவர் குலத்தையும் உலகத்தார் நன்றென்று மதித்த பலவாய் வேறுபட்ட பழைய குடியிற் பிறந்த இருபிறப்பாளர் (182).*

*குடி - குண்டினர், காசிபர் என்றாற்போல்வன.*

*(அறுநான் கிரட்டி யிளமை நலியாண் டாறினிற் கழிப்பிய:) அறுநான்கு இரட்டி ஆண்டு நல்லிளமை ஆறினிற் கழிப்பிய - இருபத்துநான்கின் இரட்டியாகிய நாற்பத்தெட்டியாண்டு நல்லிளமையை வேதங்கூறிய நெறியிலே போக்கிய இருபிறப்பாளர் (182).*

*பிரமசரியங்காத்த அந்தணர்.*

*அறன் நவில் கொள்கை - அறத்தை எப்பொழுதுங் கூறுகின்ற கோட்பாட்டினையும்,*

*மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து - நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வடிவமாகிய மூன்று வகையைக் கருதின ஆகவனீயம் தக்கிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்று தீயானுண்டாகிய செல்வத்தினையுமுடைய.*

*இருபிறப்பாளர் - உபநயனத்துக்கு முன்பு ஒரு பிறப்பும் பின்பு ஒரு பிறப்புமாகிய இரு பிறப்பினையுமுடைய அந்தணர்,*

*பொழுது அறிந்து நுவல - தாங்கள் வழிபடுங் காலமறிந்து தோத்திரங்களைக் கூற,*

*ஒன்பது கொண்ட மூன்று புரி நுண் ஞாண் - முந்நூற் கொண்டு முப்புரி யாக்குதலின், ஒன்பதாகிய நூலைத் தன்னிடத்தே கொண்ட ஒருபுரி மூன்றாகிய நுண்ணிய பூணு நூலையும்,*

*ஞாணினையும் (188) கொள்கையினையும் (180) செல்வத்தினையுமுடைய (181) இரு பிறப்பாளரென்க,*

*புலராக் காழகம் புலர உடீஇ - நீராடுங்கால் தோய்க்கப் பட்ட கலிங்கம் உடம்பிலே கிடந்து புலர உடுத்து,*

*என்றது - ஈரத்துடனேயிருந்து வழிபடுதல் கூறிற்று.*

*உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து - தலை மேலே வைத்த கையினை யுடையராய்த் தன்னைத் துதித்து,*

*ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி - ஆறெழுத்தினைத் தன்னிடத்தே அடக்கியிருக்கின்ற கேட்டற்கரிய, மறையை உச்சரிக்கப்படும் மந்திரத்தை,*

*அது "நமக்குமாராய" என்பதாம்.*

*நா இயல் மருங்கில் நவிலப் பாடி - நாப் புடை பெயரும் அளவிலே பயில உச்சரித்து,*

*விரை உறு நறு மலர் ஏந்தி - மணமிக்க நறிய பூவை எடுத்து,*

*பெரிது உவந்து ஏரகத்து உறைதலும் உரியன் - பெரிது மகிழ்ந்து ஏரகமென்கின்ற ஊரிலே இருத்தலுமுரியன்;*

*இரு பிறப்பாளர் (182), புலரவுடீஇத் (184) தற்புகழ்ந்து (185) நறுமலரேந்திக் (188) கூப்பிய கையராய் (185) நவிலப் பாடிப் (187) பொழுதறிந்து நுவல (182) அதற்குப் பெரிது மகிழ்ந்து ஏரகத் துறைதலும் உரியனென முடிக்க,*

ஏரகம் - மலைநாட்டகத்தொரு திருப்பதி.

அதாஅன்று - அதுவன்றி,

**2. உரையாசிரியர்**

இரு மூன்று எய்திய இயல்பினின் வழாஅது - ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் அறு தொழிலையும் பொருந்திய முறைமையிற் றப்பாது,

இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி - தாயார் தந்தையார் என இருவர் மரபும் உலகம் நன்றென்று மதித்த கோத்திரங்கள் பலவாய் வேறுபட்ட பழைய குடியின்கட்பிறந்த,

அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு - ஆறாகிய இலக்கத்தை நாலிலே கூட்டி யேற்ற இருபத்து நாலதனை இரட்டிக்க நாற்பத்தெட்டு நல்ல இளமைப் பருவமாகிய காலத்தை,

ஆறினிற் கழிப்பி அறம் நவில் கொள்கை - வேத நெறியிலே பிரமசரியத்திலே கழித்து அதன்பின் மனையறத்தைப் பயின்ற கொள்கையராகி,

மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து - நாற்சதிரம் முச்சதிரம் வில்வடிவமாகிய மூன்று வகையினைக் கருதியிட்ட குண்டத்தில் ஆகவநீயம் தெக்கணாக்கினி காருகபத்தியம் என்ற பேர் பெற்ற மூன்று தீயைப் பொருந்திய செல்வத்தையுடைய,

இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல - பூணூற் சடங்குக்கு முன் ஒரு பிறப்பும் பின் ஒரு பிறப்பும் ஆகிய இரு பிறப்பினையுடைய அந்தணர்தம் ஓதத்தக்க பொழுதுகளை அறிந்து வேதங்களை ஓதுதற்கு.

ஒன்பது கொண்ட மூன்று புரி நுண் ஞாண் - ஒன்பது நூலைப் பொருந்திய மூன்று புரியாகிய நுண்ணிய பூணு நூலையுடையராய்,

புலராக் காழகம் புலர உடீஇ - நீராடுங்காற் தோய்க்கப்பட்ட சேலையை உலர உடுத்து,

உச்சிக் கூப்பிய கையினர் - தலையிலே கூப்பிய கையையுடையராய்,

தற்புகழ்ந்து ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி - பிள்ளையாரைத் துதித்து, ஆறெழுத்தாலுண்டான பிள்ளையார் மந்திரத்தை அடக்கிக் கொண்ட. அரிய மறைகளை ஆசாரியரிடத்தே கேட்ட கேள்விப்படியே,

நாவியல் மருங்கின் நவிலப் பாடி - நாவானது அகன்ற புடைகளிலே படிய ஓதி,

*விரை உறும் நறுமலர் ஏந்தி - மணமிக்க நறுவிய பூக்களை யேந்தி வழிபட,*

*பெரிது உவந்து ஏரகத்து உறைதலும் உரியன் - மிக மகிழ்ந்து ஏரகமென்னும் திருப்பதியிலே இருத்தலும் உரியன்;*

*இருபிறப்பையுடைய அந்தணர் (182), பூணூலுடையராய்ச் (183) சேலையைப் புலர உடுத்தித் (184) தலையிலே கூப்பிய கையையுடையராய் (185) வேதங்களையோதி (187) நறுமலரேந்தி (வழிபட) (188) ஏரகத்துறைதலும் உரியன்,*

*அதாஅன்று - அதுவன்றி,*

### 3. பரிமேலழகர்

*இருமூன் றெய்திய இயல்பினின் வழாஅது - அறுவகையான ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்கிற அறுவகைத் தொழிலையும் அடைந்த ஒழுக்கத்தினையுடைய வைதிகாசாரம் வழுவாது,*

*இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி - மாதாவையும் பிதாவையும் குறித்த பலவாக வேறுபட்ட பழைய மரபாயுள்ளோர்,*

*அறுநான்கு இரட்டி இளமை நல்யாண்டு, ஆறினிற் கழிப்பிய அறனவில் கொள்கை - தனக்கு முறைமையான வேதஞ்சொன்ன வழியிலே, பிரமசரிய மெனப்படும் ஒழுக்கத்தாலே அறுநான்கிரட்டிய நாற்பத்தெட்டு வயதைக் கழித்துத் தரும சாஸ்திரங்களை யோதி, இந்தக் கோட்பாட்டுடனே,*

*வியாகரணம், சோதிடம், நிருத்தம், சிக்ஷை, ஆறிற்கழிப்பியசைவம், பாசுபதம், சுத்தம், சாவிதியங்கள், ஆறுமுகம் என்று சொல்லப்பட்ட ஆறு சமயங்களிலும் கழித்துச் சந்தேவியம் எனினும் அமையும்.*

*மூன்று வகை குறித்த - மூன்று பிரிவாய் நிச்சயித்த; மூன்றாவது ஒன்று வேதத்தை வழங்கவும், ஒன்று தேவர்கட்குத் தட்சணை கொடுக்கவும், ஒன்று பூலோகத்தை இரட்சை பண்ணவும் இவ்வாறாய்.*

*முத்தீச் செல்வத்து - இங்ஙனம் மூன்றாய் நிச்சயித்து அக்கினிகளைத் தமக்குப் பேறாக உடைய,*

*இரு பிறப்பாளர் - மாதா உதரத்தினின்றும் உற்பவித்ததொரு பிறப்பு, உபநயத்தினால் தோன்றியதொரு பிறப்பு, இவற்றால் இரண்டு பிறப்புடையார்,*

*பொழுதறிந்து நுவல - உதய காலத்தும் மத்தியான காலத்தும் அத்தமான காலத்தும், தாபனம் அநுட்டானம் பூசை செய்வதறிந்து இந்த மூன்று காலத்திலே மூன்று தொழிலையும் முயன்று செய்ய,*

*ஒன்பது கொண்ட மூன்று புரி நுண்ஞாண் - ஒன்பது இழையையும்*

*நவசக்தியாகக் கொண்டு மூன்று புரியாம் முறுக்கின வடத்தை மும்மூர்த்தியாகக் கொண்டு,*

*புலராக் காழகம் புலர உடீஇ - ஸ்நானம் பண்ணிப் புலராத புடவையை உடம்பிலே புலர, உடுத்து,*

*உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து - பிள்ளையார் சீபாதத்தை நினைந்து தலைமேற் குவித்த கையினையுடையவர்களாய்,*

*ஆறெழுத்தடக்கிய அருமறைக் கேள்வி - ஆறு அக்ஷரத்தைத் தன்னிடத் தடுக்கிய வேதாகமங்களை,*

*"ஆறு திருவெழுத்துங் கூறு நிலைகண்டு" எனப் பிறர் கூறுதலானும் அறிக.*

*நாவியல் மருங்கில் நவிலப்பாடி - நாவாலியன்ற இடத்திலே கைவர ஓதி,*

*விரையுறு நறுமலர் ஏந்தி - தேனையுற்ற நறுநாற்றங்களையுடைய திருப்பள்ளித் தாமங்களை ஏந்திக் கொண்டு,*

*பெரிதுவந்து ஏரகத்துறைதலு முரியன் - மிகவும் விரும்பித் திருவேரகம் என்னும் திருப்பதியிலே எழுந்தருளியிருத்தலும் உரியன் என்றவாறு,*

*திருவேரகம் என்பது மலைநாட்டகத்ததோர் திருப்பதி. அதாஅன்று - அதுவன்றியும்,*

*திருவேரகத்தின் சிறப்பு - இருபிறப்பாளர் நீராடுங்கால் தோய்க்கப்பட்ட கலிங்கம் உடம்பிலே கிடந்து புலரஉடுத்து மணமிகுந்த நறுமலரையேந்திக் கூப்பிய கையராய் நவிலப் பாடி வழிபடு காலமறிந்து, தோத்திரங்களைக் கூற அதற்குப் பெரிது மகிழ்ந்து திருவேரகத்து அமர்ந்துறைதலும் உரியன்,*

**4. கவிப்பெருமாள்**

*ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் இரத்தல் என்கின்ற ஆறியல்பையும் பொருந்திய முறையில் வழுவாமல் மாதாவின் கோத்திரமும் பிதாவின் கோத்திரமும் நன்றென்று மதிக்கப்பட்ட பலவாய் வேறுபட்ட பழைய குடியின்கட் பிறந்த நாற்பத்தெட் டாண்டாகிய நல்ல இளமைக் காலத்தைப் பிரமசரிய நெறியிலே கழித்துத் தருமத்திலே சொல்லுகிற கோட்பாட்டினை யுடைய மூன்று வகையாலே குறிக்கப்பட்ட மூன்று தீயையுஞ் செல்வமாகவுடைய இரண்டு பிறப்பான உபநயனம் பண்ணுதற்கு முன்பே பிறப்பும் ஆகிய இரண்டு பிறப்பினையுமுடைய பிராமணர் முக்காலமுமறிந்து தோத்திரம் பண்ண;*

*அந்தப் பிராமணர்கள் ஒன்பது வடம் கொண்டு முறுக்கின மூன்று புரியாகிய நுண்ணிய பூணு நூலைத் தரித்தவராய் நீரில் முழுகினபடியினாலே*

*ஈரம் புலராத கழாயத்தை வேள்வித் தீயாலே உலரும்படி உடுத்துச் சிரசிற் குவித்த கையையுடையவர்களாய்ப் பிள்ளையாரைப் புகழ்ந்து பிள்ளையாருடைய திருமந்திரமாகிய ஆறெழுத்துக்களையும் மடக்கின அரிய வேதக் கேள்வியினை நாவால் இயன்றவிடத்தே ஆரவாரிக்கும்படி பாடி நறு நாற்றமிக்க நல்ல மலர்களை ஏந்தி வணங்கி நிற்க, அவர்கள் வணங்குகைக்குப் பெருகவும் திருவுள்ளம் விரும்பியருளித் திருவேரகமென்கிற திருப்படை வீட்டிலே வாழ்வதற்கு முரியவன்; அங்கே செல்க; அங்கன்றாயின்னம் பிள்ளையாரைக் காணலாமிடஞ் சொல்லப் புகுகின்றார்.*

### 5. பரிதியார்

*இருவர்...... தொல்குடி - தாய் மரபினும் தகப்பன் மரபினும் மறுவில்லாத பெருமையான குடி, மூன்றுவகைக் .......... செல்வத்து - நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வளையமும் ஆகிய ஆகவனீயம். தெட்சணாக்கினி, காருகபத்தியம் என்கின்ற மூன்று குண்டலமும் முத்தீயுங் கூட நித்ய ஓமம் பண்ணுஞ் செல்வத்தையுடைய,*

*ஒன்பது ............ ஞாண் - இருபத்தேழு இழையினால் ஆன பூணூல். புலராக் காழகம் புலர வுடீஇ - தோய்ந்த சோமன் தேகத்திலே தரித்து உலரும்படி தோத்திரம் பண்ணி,*

*“புன்மயிர்ச் சடைமுடிப் புலராவுடுக்கை, முந்நூன் மார்பின் முத்தீச் செல்வத், திருபிறப்பாளர்” சிலப்பதிகாரம். ஆறெழுத்தடக்கிய - குமாராய நம வென்னும் ஆறெழுத்தை. அருமறைக்கேள்வியர் - அரியதான மறைகளை ஓதின கேள்வியர். நாவியல் ....... பாடி - அடிநாக்குப் புரளும்படி தோத்திரம் பண்ணி. ஏந்தி - பூசை பண்ண, ஏரகம் - திருவேரகப்பதி,*

### 6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்

*வைதீக ஆசாரம் - வேத ஒழுக்கம். இருமூன்றெய்திய இயல்பு - ‘அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்’ (தொல் - பொருள்), ஆறறி அந்தணர்க்கு,*

*என வருவனவும் இவருக்கு இவ்விருமூன்று பண்புகள் உளவாதலைக் குறிக்கும்.*

*ஆறினில் கழிப்பி - வேதம் கூறிய நெறியிலே போக்கி என நச்சினார்க்கினியரும், பரிமேலழகரும் உரை காண்பர். ‘வியாகரணம், சோதிடம், நிருத்தம் சிக்ஷை, ஆறிற்கழிப்பிய சைவம், பாசுபதம், சுத்தம், சாவிதியங்கள், ஆறுமுகம் என்று சொல்லப்பெற்ற ஆறு சமயங்களினும் கழித்து சந்தேவியம் எனினும் அமையும்’ என்றொரு குறிப்பும் இவர் உரையில் காணப்படுகின்றது. இப்பகுதியில் பிழை உளதாகத் தெரிகிறது. ஆறு என்பது நெறி என்ற பொருளில் அன்றி ஆறு என்னும் எண்ணுடைய பொருள்களைக் குறிப்பதாக இப்பகுதி*

அமைந்துள்ளது. அவ்வெண்ணிக்கையுடைய பொருள்களுள் வேதத்திற்குரிய ஆறு அங்கங்களையும், அறுவகைச் சமயங்களையும் குறிப்பதாக இப்பகுதி அமைந்துள்ளது. ஆதலின் இப்பகுதி பின் வருமாறு அமையத்தக்கது.

உலகியற்சொல்லை ஒழித்து வைதிகச் சொல்லை ஆராயும் நிருத்தமும், அவ்விரண்டையும் உடன் ஆராயும் ஐந்திரத் தொடக்கத்து வியா கரணமும், போதாயனீயம், பாரத்துவாசம், ஆபத்தம்பம், ஆத்திரேயம் முதலிய கர்ப்பங்களும், நாராயணீயம், வாராகம் முதலிய கணிதங்களும், எழுத்தாராய்ச்சியாகிய பிரம்மமும், செய்யுள் இலக்கணமாகிய சந்தமும், ஆறு அங்கங்களாகும். அறுவகைச் சமயங்கள் புறம், புறப்புறம் முதலிய நால்வகைச் சமயங்கட்கும் உள்ளன.

புறப்புறச் சமயத்தார் - உலோகாயதர், மாத்தியமிகர், யோகாசாரர், சௌத்திராந்திகர், வைபாடிகர் என்னும் நால்வகைப் பௌத்தர், ஆருகதர் என்னும் அறுவருமாவர்.

புறச்சமயத்தார் - தார்க்கிகர், மீமாஞ்சகர், ஏகான்ம வாதிகள். சாங்கியர், யோகமதத்தினர், பாஞ்சராத்திரிகள் என்னும் அறுவருமாவர்.

அகப்புறப் சமயத்தார் - பாசுபதர், மாவிரதர், காபாலர், வாம மதத்தினர், வைரவ மதத்தினர், ஐக்கியவாத சைவர் என்னும் அறுவருமாவர்.

அகச்சமயத்தார் - பாடாணவாத சைவர். பேதவாதசைவர். சிவசமவாதசைவர். சிவசங்கிராந்த வாதசைவர். ஈசுவரவவிகாரவாத சைவர், சிவாத்துவித சைவர் என்னும் அறுவருமாவர்.

எனவே இப்பொருண்மைகள் அனைத்தையும் உணர்ந்தவர்கள் என்னுமாறு இவ்வுரைப் பகுதி அமைந்திருக்கலாம்.

ஆறினில் கழிப்பி அறம் நவில் கொள்கை - வேதநெறியிலே பிரமச்சரியத்திலே கழித்து அதன்பின் மனையறத்தைப் பயின்ற கொள்கையராகி என உரை காண்பர் உரையாசிரியர். ஏனைய உரையாசிரியர்கள் அனைவரும் பிரமச்சரியத்தால் செய்யும் நெறிமுறைகளைப் பின்பற்றுதல் என இங்குக் கொள்ள இவர் மட்டும் மனையறத்தால் ஏற்கும் நெறிமுறைகளையும் ஏற்றவர் எனக் குறிப்பது ஆழ எண்ணற்குரியது.

மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வம் - ஆகவனீயம் முதலாய மூவகைப்பட்ட தீ என உரையாசிரியர் அனைவரும் குறிக்கப் பரிமேலழகர் மட்டும் ஒன்று வேதத்தை வழங்கவும், ஒன்று தேவர்கட்குத் தட்சணை கொடுக்கவும், ஒன்று பூலோகத்தை இரட்சை பண்ணவும் ஆய மூவகைத்தீ என விளக்கங் காண்பர்.

*பொழுதறிந்து நுவல - தாங்கள் வழிபடும் காலமறிந்து தோத்திரங்களைக் கூற என்பர் நச்சினார்க்கினியர். அந்தணர் தாம் ஓதத்தக்க பொழுதுகளை அறிந்து வேதங்களை ஓதுதற்கு உன உரைகாண்பர் உரையாசிரியர். உதயகாலத்தும், மத்தியான காலத்தும், அத்தமன காலத்தும் தாபனம், அனுட்டானம் பூசை செய்வதறிந்து இந்த மூன்று காலத்திலே மூன்று தொழிலையும் முயன்று செய்ய என உரை காண்பர் பரிமேலழகர்.*

*புலர உடுத்தி - உடம்பில் கிடந்து புலர உடுத்து என நச்சினார்க்கினியரும், பரிமேலழகரும், பரிதியாரும் உரைகாண்பர். கவிப்பெருமாள் மட்டும் வேள்வித் தீயாலே உலரும்படி உடுத்து என உரைகாண்பர்.*

*காழகம் - கலிங்கம்; ஆடை என்பர் நச்சினார்க்கினியர். சேலை என்பர் உரையாசிரியர். புடவை என்பர் பரிமேலழகர்.*

*கழாயம் என்பர் கவிப்பெருமாள். சோமன் என்பர் பரிதியார். காழாடியம் - காஷாயம்; கல்லாடை.*

*ஆறெழுத்தடக்கிய அருமறைக் கேள்வி - ஆறெழுத்தினைத் தன்னிடத்தே அடக்கியிருக்கின்ற கேட்டற்கரிய மறைய உச்சரிக்கப்படும் மந்திரத்தை. அது நமக்குமாராய என்பதாம் என விளக்கம் காண்பர் நச்சினார்க்கினியர். ஆறெழுத்தால் உண்டான பிள்ளையார் மந்திரத்தை அடக்கிக் கொண்ட அரிய மறைகளை ஆசாரியரிடத்தே கேட்ட கேள்விப்படியே என உரைகாண்பர் உரையாசிரியர். பரிமேலழகரும் இவ்வாறு கூறி ஆறு திருவெழுத்தும் கூறும் நிலை கண்டு எனப் பிறர் கூறுதலானும் அறிக என மேலும் விளக்கங்காண்பர். கவிப்பெருமாளும் இவ்வுரையைத் தழுவுவர். பரிதியார், குமாராய நம என்னும் ஆறெழுத்தை; அரியதான மறைகளை ஓதிய கேள்வியர் என விளக்கம் காண்பர். ஆறெழுத்து இன்னதென்பதை விளக்கிய முறையில் நச்சினார்க்கினியரும் பரிதியாரும் ஒன்றுபடினும் ஓதும் முறையில் வேறுபட உரைக்கின்றனர். கேள்வி என்பதற்கு தன் ஆசாரியனிடத்துக் கேட்டவாறு என உரையாசிரியர் கூறியிருப்பது மரபறிந்து ஓதும் முறைமையை விளக்கி நிற்கிறது.*

*நாஇயல் மருங்கின் நவிலப்பாடி - நாப் புடை பெயரும் அளவிலே பயில உச்சரித்து என உரை காண்பர் உரையாசிரியரும், நச்சினார்க்கினியரும். நாவால் இயன்ற இடத்திலே கைவர ஓதி என உரை காண்பர் பரிமேலழகரும், கவிப்பெருமாளும். அடிநாக்குப் புரளும்படி தோத்திரம் பண்ணி என உரை காண்பர் பரிதியார். பரிதியார் உரையே சீரியதாகின்றது.*

*திருவேரகம் - மலை நாட்டகத்ததொரு திருப்பதி என்பர் நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும். எனினும் இன்று புனல் நாட்டிலுள்ள சுவாமிமலையைக் குறிப்பதாகக் கொள்கின்றனர்.*

# கி.வா. ஜகந்நாதன்
# திருவேரகம்

*இப்போது நக்கீரர் நம்மைத் திருவேரகம் என்னும் திருத்தலத்துக்கு அழைத்து வருகிறார். அது காவிரிக் கரையில் உள்ள படைவீடு. ஆற்றங்கரைகளில் அந்தணர் இருந்து வேதம் ஓதி வேள்வி புரிவார்கள். பழைய காலத்தில் ஆறுகளின் இருமருங்கும் பல அகரங்கள் ஓங்கி வளர்ந்தன. திருவேரகமும் அப்படி அமைந்த அகரங்களில் ஒன்று. அங்கே அந்தணாளர்கள் மிகுதியாக வாழ்ந்தார்கள்; ஏரகத்தில் எழுந்தருளியிருக்கும் முருகனை வழிபட்டு இன்புற்றார்கள்.*

*நக்கீரர் ஏரகத்தை விரிவான வகையில் வருணிக்கவில்லை, அங்கே முருகனை வழிபடும் அந்தணர்களின் இயல்பை மட்டும் கூறுகிறார். தமிழ்நாட்டில் மிகப் பழங்காலந்தொட்டே அந்தணர்கள் வாழ்ந்து வருகிறார்கள். பழைய இலக்கண இலக்கியங்களில் அவர்களைப் பற்றிய செய்திகள் பல வருகின்றன. அவர்கள் வேதம் ஓதுதல், வேள்வி செய்தல், விரதம் இருத்தல், அரசர்களுக்குக் குருவாக இருந்து நலம் செய்தல், தலைவர்களுக்குப் பாங்கராக இருத்தல், தமிழ்ப் புலமையும் பெற்றிருத்தல் முதலியவற்றைப் பற்றி அந்நூல்கள் கூறுகின்றன.*

*பதின்மூன்றே அடிகளில் திருவேரகம் என்னும் படை வீட்டைப் பாடுகிறார் நக்கீரர். அவற்றில் 12 அடிகள் முருகனை வழிபடும் அந்தணர்களைப் பற்றிச் சொல்கின்றன. இனி அவற்றைப் பார்ப்போம்.*

## அறு தொழிலாளர்கள்

***அவர்கள் ஆறு தொழில்களைச் செய்பவர்கள், 'ஷட்கர்ம நிரதர்கள்' என்று சொல்வார்கள். "அறு தொழிலோர் நூல்" என்று திருவள்ளுவரும் கூறினார். ஆறுமுகநாதனுடைய அடியார்களைப் பற்றிக் கூற வருவதனால் எடுத்தவுடன் ஆறு என்னும் எண்ணைப் பெற்ற தொழில்கள் நினைவுக்கு வருகின்றன.***

**இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது**

***(ஆறு என்று தமக்கு அமைந்த இலக்கணத்தினின்றும் பிழையாமல்)***

***"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்"***

***(புறத்திணையியல் 20)***

***என்று இந்த ஆறு இயல்புகளைத் தொல்காப்பியர் கூறுகிறார். இப்போது கிடைக்கும் தமிழ் நூல்களில் மிகப் பழையது தொல்காப்பியம். ஆறு தொழில்கள் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், கோடல், கொடுத்தல் என்பன. வேத***

சாஸ்திர புராணங்களையும் பிற நூல்களையும் கற்றுப் பயிலுதலே ஓதல். இவற்றில் முக்கியமானது வேதம் ஓதுதல். ஓதுவதற்குள் சிறந்ததாதலின் வேதத்தை ஒத்து என்று வழங்குவர்.

அந்தணர் ஓதும் நூல்களில் தலை, இடை, கடை என்று மூன்று தரம் உண்டு. இவற்றை நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பொருளதிகார உரையில் விரிவாகச் சொல்கிறார். இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம் என்னும் மூன்றும் தலையாய நூல்கள். இறைவன், அகத்தியன், மார்க்கண்டேயனார், வான்மீகனார், கவுதமனார் போன்றவர்கள் இயற்றிய தமிழ் நூல்களும் தலையான ஒத்து என்று சொல்வர். இவர்கள் தலைச் சங்கத்திலிருந்து தமிழ் பாடியவர்கள் என்று ஒரு வரலாறு உண்டு. அதர்வவேதமும் ஆறு சாஸ்திரங்களும் தர்மசாஸ்திரமும் ஆகியவை இடையாய ஒத்து; மத்திய நிலையில் உள்ள நூல்கள். அகத்தியம், தொல்காப்பியம் என்னும் இலக்கணங்களும் இடைச்சங்கத்தார் இயற்றிய நூல்களும் இடையாய ஒத்து என்பர். இதிகாச புராணங்களும் மறுப்பு நூல்களும் கடையாய ஒத்து; கடைச் சங்க நூல்களையும் இந்த வரிசையில் சேர்ப்பார் நச்சினார்க்கினியர். இந்த மூன்று வகை நூல்களிலும் சிறந்த பயற்சி உள்ளவன் ஓதற்சிறப்புடைய அந்தணன்.

ஓதுவித்தலாவது தக்கவர்களுக்கு மேலே சொன்ன நூல்களைக் கற்பித்தல். 'ஓதுவித்தலாவது கொள்வோன் உணர்வுவகை அறிந்து அவன் கொள்வரக் கொடுக்கும் ஈவோன் தன்மையும் ஈதல் இயற்கையுமாம்' என்று விளக்குவார் நச்சினார்க்கினியர்.

வேட்டல் என்பது வேள்வி செய்தல். நாள்தோறும் செய்யும் வேள்விகளும் அவ்வப்போது செய்யும் வேள்விகளுமாக அவை பல வகைப்படும். வேள்வி செய்வதால் தேவர்கள் மனமகிழ்ந்து மழை பெய்வித்தல் முதலிய நன்மைகளைச் செய்வார்கள் என்று பழங்காலத்தினர் நம்பினார்கள்.

வேட்பித்தல் என்பது பிறர் வேள்வி செய்ய அதற்குத் தாம் வழி காட்டியாக இருந்து நடப்பித்தல். கோடல் என்பது தக்காரிடம் தானம் பெறுதல். கொடுத்தல், தக்கவர்களுக்குத் தானம் வழங்குதல்.

"ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்றல் ஆறுபுரிந் தொழுகும்
அறம்புரி அந்தணர்"

(பதிற்றுப்பத்து, 24)

என்று சங்கப் புலவர் ஒருவர் பாடுகிறார்.

ஏரகத்தில் உறையும் அந்தணர்கள் இந்த ஆறு தொழில்களையும் வழுவாமற் செய்பவர்கள்.

*அந்தணர்களுக்குத் கோத்திரமும், சூத்திரமும் உண்டு. கோத்திரம் என்பது கௌசிக கோத்திரம்? பாரத்துவாச கோத்திரம் என்பன போல வழிவழி வந்த குடியின் அடையாளம். சூத்திரம் என்பது ஆபஸ்தம்பம், ஆசுவவாயனம். திராஹ்யானம் என்பன போலத் தாம் செய்யும் கர்மாக்களுக்கு வழி துறை வகுக்கும் நூலைச் சொல்வது. ஒரு கோத்திரத்தில் பிறந்தவர்கள் அதே கோத்திரத்தில் பிறந்தவர்களை மணம்புரிந்து கொள்ளமாட்டார்கள். ஆதலின் தந்தை ஒரு கோத்திரமானால் தாய் வேறு கோத்திரமாக இருப்பாள். மணமகனுக்கும் மணமகளுக்கும் தனித்தனியே கோத்திரங்கள் இருப்பதைத் திருமணத்தில் கூறுவார்கள். பிதிர்க்கடன் இருக்கும்பொழுது தந்தை தாய் பிறந்த இருவேறு கோத்திரத்தையும் சுட்டிக் கடன் இருப்பார்கள். கோத்திரத்தால் வேறுபட்ட தாய் தந்தையர்களின் குடிவேறு வேறாக இருக்கும். இப்படிப் பல கோத்திரங்கள் உண்டு.*

*மிகப் பண்டைப் பழங்காலம் முதலே இந்த அந்தணாளர் திருவேரகத்திலிருந்து முருகனை வழிபட்டு வருகிறார்கள். தமக்கு வேண்டியன வெல்லாம் குறைவின்றிக் கிடைப்பதால் ஊரை விட்டுப் போகாமல் வாழ்கிறார்கள். "பதியெழுவறியாப் பழங்குடி" என்று பழைய நூல்கள் கூறும். அவ்வாறு வாழும் தொல்குடி அந்தணர் இவர்கள்.*

### இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி

*'தந்தை தாய் என்னும் இருவருக்கும் உரிய கோத்திரமாகத் தனித்தனியே இரண்டு முனிவர்களைச் சுட்டிக் கூறும் பலவாக வேறுபட்ட பழைய குடி' என்பது பொருள். இந்தத் தொல்குடியில் பிறந்தவர்கள் நக்கீரர் காட்டும் முருகன் அடியார்கள்.*

*வேதசாஸ்திரங்களை ஓதும் செயலில் அந்தணர்களுக்கு நாற்பத்தெட்டு ஆண்டுகள் கழிந்துவிடும். அந்த நாற்பத்தெட்டு ஆண்டுகளிலும் குருகுலவாசம் செய்து பிரமசரியம் காத்துக் கல்வியை நிறைவேற்றிய பிறகே திருமணம் செய்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்யும் மணத்துக்குப் பிராம்மம் என்று பெயர். 'பிரமமாவது ஒத்த கோத்திரத்தானாய் நாற்பத்தெட்டியாண்டு பிரமசரியம் காத்தவனுக்குப் பன்னீராட்டைப் பருவத்தாளாய்ப் பூப்பு எய்தியவளைப் பெயர்த்தும் இரண்டாம் பூப்பு எய்தாமை அணிகலன் அணிந்து தானமாகக் கொடுப்பது' என்பது நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம்.*

*இங்கே நாம் பார்க்கும் அந்தணர்கள் நாற்பத்தெட்டு ஆண்டுகளை நன்னெறியில் கழித்து அறத்தையே விரும்பி நின்று பிரமசரிய விரதம் காத்தவர்கள்.*

அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு
ஆறினில் கழிப்பிய அறன்நவில் கொள்கை

*(நாற்பெத்தெட்டாகிய இளமைப் பருவத்துக்குரிய நல்ல ஆண்டுகளை நிற்க வேண்டிய நெறியிலே நின்று கழித்த, தர்மத்தையே விரும்பும் கடைப்பிடியை - (உடையவர்கள்) கொள்கை என்பது கடைப்பிடி அல்லது விரதம்).*

*இவ்வாறு நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசரிய விரதம் காத்த பிறகு மணம் புரிந்து இல்வாழ்வை நடத்துகிறவர்கள் அவர்கள். அவர்கள் ஆகவனீயம், தஷிணாக்கினி, காருகபத்தியம் என்னும் மூன்று அக்கினிகளை ஓம்பும் இயல்புடையவர்கள். அந்தத் தீயையே தமக்குச் செல்வமாக உடையவர்கள். ஒவ்வோர் அக்கினியும் ஒவ்வொரு வகையாக உள்ளது.*

மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து.

*'மூன்று வகையாகச் சொல்லப்பட்ட மூன்று வேள்வித் தீயையே செல்வமாகவுடைய' என்பது பொருள். இதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் "நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வடிவுமாகிய மூன்று வகையைக் கருதின ஆகவனீயம், தக்கிணாக்கினி, காருகபத்தியம் என்னும் மூன்று தீயான் உண்டாகிய செல்வத்தினையுடைய" என்று உரைத்தார். வேறு உரைகாரர் ஒருவர் 'மூன்றாவன; ஒன்று வேதத்தை வழங்கவும் ஒன்று தேவர்களுக்குத் தட்சிணை கொடுக்கவும், ஒன்று பூலோகத்தை ரட்சை பண்ணவும் இவ்வாறாய முத்தீ' என்று விளக்குகிறார்.*

*"அந்தணர் அருங்கடன் இறுக்கும் முத்தீ"*

*"ஒன்றுபுரிந் தடங்கிய இரு பிறப்பாளர்*
*முத்தீ"*

*(புறநானூறு, 2, 367)*

*என்று வேறு சங்கப் புலவர்களும் இந்த முத்தீயைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.*

*அந்தணர்களை இருபிறப்பாளர் என்பர். வடமொழியில் த்விஜர் என்பர். பூணூல் புனைவதற்கு முன் ஒரு பிறப்பும், அதன்பின் வேறு பிறப்பும் உடையவரைப் போல இருத்தலின் இவ்வாறு கூறுவர். அவர்கள் முருகனை வழிபடும் வேளையை அறிந்து வந்து துதிகளைக் கூறுகிறார்கள்.*

இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல

*'உபநயனத்துக்கு முன் ஒன்றும் பின் ஒன்றுமாகிய இரு பிறப்பினையுடைய அவ்வந்தணர்கள் துதிக்க வேண்டிய பொழுதை அறிந்து தோத்திரங்களைக் கூற' என்பது இதன் பொருள். பொழுதறிந்து நுவல என்பதற்கு, 'உதயகாலத்தும்*

*மத்தியான்ன காலத்தும் அத்தமன காலத்தும் தாபனம், அநுட்டானம், பூசை ஆகிய மூன்று தொழிலையும் முயன்று செய்ய, என்று ஒரு பழைய உரைகாரர் உரை எழுதுகிறார்.*

*இங்கே உள்ள அந்தணரின் இயல்புகளைப் பழம் புலவர்கள் பல இடங்களில் கூறியுள்ளனர். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில்,*

*"ஒன்றுபுரி கொள்கை இருபிறப் பாளர்*
*முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி*
*ஐம்பெரு வேள்வியும் செய்தொழில் ஓம்பும்*
*அறுதொழில் அந்தணர் (கட்டுரை காதை)"*

*என்று கூறுவர்.*

## வழிபடும் முறை

***இப்படித் துதித்து வழிபடும் அந்தணர்கள் முருகனுடைய ஷடக்ஷர மந்திரத்தை ஜபித்து வேத மந்திரங்களைக் கூறி மலரை ஏந்தி அருச்சிக்கிறார்கள்; மந்திரபுஷ்பம் சமர்ப்பிக்கிறார்கள். இதை அடுத்தபடி சொல்கிறார் நக்கீரர்.***

***இந்த அந்தணர் மூன்று முப்புரி நூல்களை அணிந்திருக்கிறார்கள். பிரமசாரியானால் மூன்று புரிகளை மாத்திரம் அணிந்திருப்பார்கள். இவர்கள் இல்வாழ்வார்; மூன்று புரிகள் சேர்த்த நுண்ணிய பூணூல்கள் மூன்றை அணிந்திருக்கிறார்கள்; எல்லாம் சேர்ந்து ஒன்பது இருக்கின்றன. நீராடி வந்தவர்கள் ஆடையை உலர்த்தாமல் ஈரமாகவே உடுத்தியிருக்கிறார்கள். அது இடையில் இருந்தபடியே உலருகிறது.***

**ஒன்பதுகொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்**
**புலராக் காழகம் புலர உடீஇ.**

***'மூன்று புரிகளையுடைய ஒன்பது என்னும் எண்ணிக்கை கொண்ட நுண்ணிய நூலை (அணிந்து) உலராத ஆடையை இடையில் கிடந்தவாறே உலரும்படி உடுத்து' வழிபடுகிறார்கள். முந்நூல் கொண்டு முப்புரியாக்குதலின், ஒன்பதாகிய நூலைத் தன்னிடத்தே கொண்ட ஒரு புரி மூன்றாகிய நுண்ணிய பூணூல்' என்று உரை வகுப்பார் நச்சினார்க்கினியர்,***

***"ஒன்பது போலவர் மார்பினில் நூலிழை"***

***என்பது அப்பர் திருவாக்கு. நூலையும் புலரா உடையையும் உடைய அந்தணரை,***

***"புன்மயிர்ச் சடைமுடிப் புலரா உடுக்கை***
***முந்நூல் மார்பின் முத்தீச் செல்வத்து***

*இருபிறப் பாளர்"* *(25 : 126-8)*

*என்று சிலப்பதிகாரத்திலும் காணுகிறோம்.*

*தம்முடைய கைகளைத் தலையின்மேலே கூப்பிக் கொண்டு முருகனைத் துதிக்கிறார்கள் இவ்வந்தணர்கள். பிறகு ஷடக்ஷர மந்திரத்தை ஜபிக்கிறார்கள். அதன்பின் கையில் மலர்களை ஏந்திப் புஷ்பாஞ்சலி செய்கிறார்கள்.*

உச்சிக் கூப்பிய கையினர், தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்தி.

*(தலையின்மேல் குவித்த கையையுடையவர்களாய் முருகனைப் புகழ்ந்து, ஆறு எழுத்துக்களைத் தன்பாற் கொண்ட அரிய உபதேச மந்திரத்தை நாக்குப் புரளும் அளவிலே பலமுறை கூறி, மணம் மிக்க நறுமலர்களை ஏந்தி வழிபடவும்).*

## ஆறெழுத்து

*ஆறெழுத்தைத் தன்னுள்ளே அடக்கிய அரிய மந்திரம் ஷடக்ஷரம். மறை என்பது மந்திரம். கேள்வி - உபதேசம். உபதேச மந்திரத்தை அவ்வாறு கூறினார். முருகனுக்கு உரியது ஷடக்ஷர மந்திரம். அது பிரணவத்தின் விரிவாக இருப்பது; அதனால், "ஓரெழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே" என்று அருணகிரியார் பாடினார்.*

*ஆறெழுத்து இன்னதென்று குறிக்கும்போது நச்சினார்க்கினியர், 'அது நமோ குமாராய என்பதாம்' என்று எழுதியிருக்கிறார். வடமொழிச் சந்தியிலக்கணப்படி அது நம: குமாராய என்று இருக்க வேண்டும். மந்திரங்களுக்கு இலக்கண வரம்பில்லை என்று சொல்வதுண்டு மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் பதிப்பில், 'நமக் குமாராய' என்ற பிரதிபேதமும் காணப்படுகிறது.*

*நச்சினார்க்கினியர் கூறும் உரையினால், நமச் சப்தத்துடனும் ஒரு ஷடக்ஷரம் வழங்கியதென்று தெரிய வருகிறது. பஞ்சாக்ஷரம், அஷ்டாக்ஷரம் முதலிய மந்திரங்கள் நமச்சப்தத்துடன் இணைந்தே உள்ளன. நாம் பெருக வழங்கும் சரவணபவ என்ற ஆறெழுத்தில் நமச்சப்தம் இல்லை. ஒரு கால் அந்த மந்திரங்களோடு இணை சேரும் வகையில் இப்படியும் ஒரு ஷடக்ஷரம் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.*

*மந்திரத்தை உச்சரிக்கும் முறை மூன்று உண்டு. அவை மானஸம், மந்தம், வாசிகம் என்பன. மனத்துக்குள் மந்திரத்தை எண்ணி ஜபிப்பது மானஸமுறை.*

*“துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்*
*நெஞ்சகம் நைந்து நினைமின், நாள்தொறும்*
*வஞ்சகம் அற்றடி வாழ்த்த, வந்தகூற்று*
*அஞ்ச உதைத்தன அஞ்செ ழுத்துமே”*

*என்று திருஞானசம்பந்தர் திருவாக்கில் அஞ்செழுத்தை ‘நெஞ்சகம் நைந்து நினைக்’கும் மானஸ முறை குறிக்கப் பெறுகிறது. மெல்லப் பிறர் காதில் கேளாதபடி நாவைப் புரட்டி உச்சரித்தல் மந்தம். வெளிப்படையாக வாயைவிட்டுச் சொல்லுதல் வாசிகம். வாசிகத்தைவிட மந்தம் சிறந்தது.*

*இங்கே முருகனை வழிபடும் அந்தணர்கள் பல துதிகளை வாயாரப் பாடிய பிறகு ஆறெழுத்தை மந்த முறையில் உச்சரிக்கிறார்கள். ‘நா இயல் மருங்கின் நவிலப் பாடி’ என்றது அதனையே கூறுகின்றது. நவிலுதல் - பல்கால் உருவேற்றுதல். பாடுதல் - இங்கே, உச்சரித்தல்.*

*ஷடக்ஷர மந்திரத்தை உச்சரித்துக் கையில் மலர்களை ஏந்தி வழிபடுகிறார்கள். அபிஷேக ஆராதனைகள் முடிந்த பிறகு கையில் மலரை வைத்துக் கொண்டு வேதமந்திரங்களைச் சொல்லி இறைவன் திருவடியில் சமர்ப்பிப்பது மரபு. இதை மந்திர புஷ்பம் என்று சொல்வார்கள். பூசையின் இறுதியில் நறுமலர் ஏந்தி வழுத்துதல் வழக்கமாதலின் அதை இங்கே இறுதியில் வைத்துச் சொன்னார்.*

பெரிதுஉவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்; அதாஅன்று

*(இவ்வாறு அந்தணாளர்கள் வழிபடுவதை மிகவும் திருவுள்ளத்தில் உவந்து முருகன் திருவேரகத்தில் எழுந்தருளியிருப்பதற்கு உரியவன்; அது மட்டும் அன்று).*

*இன்னும் இடங்கள் உள்ளன என்று தொடர்கிறார்.*

## ***ஏரகம் எது?***

***திருவேரகம் என்ற படைவீடு இன்னது என்பதைப் பற்றி முற்காலத்தும் பிற்காலத்தும் சில வேறுபாடான கருத்துக்கள் நிலவி வருகின்றன. திருமுருகாற்றுப்படைக்கு உரை வகுத்த நச்சினார்க்கினியர், ‘மலை நாட்டகத்து ஒரு திருப்பதி’ என்று எழுதினார். சுப்பிரமணியம் என்று வழங்கும் தலத்தை அவர் எண்ணி அவ்வாறு எழுதியிருக்கக் கூடும் என்று சிலர் கூறுவர். நாஞ்சில் நாட்டில் உள்ள குமரகோயில் என்ற தலமே ஏரகம் என்று சிலர் எழுதியிருக்கிறார்கள். நாஞ்சில் என்பது ஏரைக் குறிக்கும்; சொல் என்றும், நாஞ்சில் நாட்டில் உள்ளதாதலின் ஏர் அகம் என்று பெயர் அமைந்ததென்றும்,***

இன்றும், ஈர உடையுடன் வழிபடும் முறை அங்கே உள்ளதென்றும் பிறவாறும் சில காரணங்களைக் காட்டுகின்றனர்.

ஆனால் அருணகிரிநாத சுவாமிகளுடைய கருத்து, காவிரிக்கரையில் சோழநாட்டில் இன்று சுவாமிமலை என்று வழங்கும் திருத்தலமே திருவேரகம் என்பது, அவருடைய திருப்புகழ்ப் பாக்கள் இதை நன்கு தெளிவுறுத்துகின்றன.

"**ஏரக** வெற்பெனும் அற்புத மிக்கசு
**வாமிமலைப்பதி** மெச்சிய சித்த"

"ஏரக வெற்பெனும் அற்புத மிக்கசு
**வாமிமலைப்பதி** நிற்கும் இலக்ஷண"

"தனி ஏரகத்தின் - முருகோனே
தருகா விரிக்கு **வடபாரிசத்தில்**
சமர்வேல் எடுத்த - பெருமாளே"

"குளிர்கா மிகுத்த வளர்பூக மெத்து
**குடகா விரிக்கு வடபாலார்**
திருவே ரகத்தில் உறைவாய்"

**"யாவும் அலை கொண்டுகைத்த காவிரிபுறம்பு சுற்றும்
ஏரகம்அமர்ந்தபச்சை மயில்வீரா"**

என்னும் திருப்புகழ்ப் பகுதிகளில் இதைக் காணலாம்.

ஆகவே சோழநாட்டுச் சுவாமிமலையே திருவேரகம் என்பதில் ஐயம் இல்லை.

ஏரகம் என்ற பெயர் வந்ததற்கு என்ன காரணம் என்பதை இங்கே ஆராய்வது பொருத்தமென்று எண்ணுகிறேன்.

அப்பர் சுவாமிகள் திருவாக்கில் ஏர் என்ற தலத்தின் பெயர் வருகிறது. தனிப்பதிகம் பெறாத தலமாகையால் அது வைப்புத்தலங்களுள் ஒன்றாகக் கொள்வதற்குரியது.

"இடைமரு தீங்கோய் இராமேச்சரம்
இன்னம்பர் ஏர்இடவை ஏமப்போரூர்"

(ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்)

இரும்புதலார் இரும்பூளையுள்ளார் ஏரார் இன்னம்பரார்

(திருவீழிமிழலைத் திருத்தாண்டகம்)

என்ற இடங்களில் அத் தலத்தின் பெயர் வருகிறது.

*கும்பகோணத்துக்கு வடக்கே இரண்டு மைல் தூரத்தில் ஏரகரம் என்றுள்ள ஊரே இந்த வைப்புத்தலம். இப்போது பேச்சு வழக்கில் ஏராரம், ஏராவரம் என்று வழங்குவர். அங்கே இரண்டு சிவாலயங்கள் உள்ளன. ஒன்று சிதைந்திருக்கிறது. அதிலுள்ள கல்வெட்டிலிருந்து அந்த ஊர், 'இன்னம்பர் நாட்டு ஏராகிய மும்முடிச் சோழமங்கலம்' என்று வழங்கியதாகத் தெரியவருகிறது. ஆகவே அந்த ஊரே ஏர் என்ற வைப்புத்தலம் என்று உறுதியாகக் கொள்ளலாம். தஞ்சைக் கோயிலில் உள்ள கல்வெட்டு ஒன்றிலும் இவ்வூர்ப் பெயர் வருகிறது. (தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி 2; கல்வெட்டு, 70)*

*இந்த ஊர் சுவாமி மலைக்கு ஈசானிய திசையில் இருக்கிறது. ஏர் என்னும் தலத்தின் அகத்தே இருப்பதால் ஏரகம் என்று பெயர் வந்திருக்கலாம். அல்லது அக்காலத்தில் அந்தணர்கள் வாழும் அகரம் மிகப் பெரிதாக இருந்து அதனிடையே முருகன் கோயில் இருந்திருக்கலாம். ஏரைச் சார்ந்த அகரமாதலின் ஏரகரம் என்று வழங்கியப் பிறகு அதுவே ஏரகமாக மாறியிருக்கலாம். ஏர் என்ற வைப்புத் தலமும் ஏரகமும் அடுத்தடுத்து இருப்பதைப் பார்க்கும்போது இத்தகைய எண்ணங்கள் தோன்றுகின்றன.*

*நமக்கு அருணகிரியார் அருள்வாக்கே ஆணையாதலின் சுவாமி மலையே திருவேரகம் என்று கொண்டு போற்றிப் புகழ்ந்து வழிபடுவோமாக.*

# பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார் திருவேரகம்

## இருபிறப்பாளர் முருகனை வழிபடு மாண்பு

*(176-189) :* அதாஅன்று ................. உரியன்

***பொருளுரை :*** *அதாஅன்று - அவ்வூரேயல்லாமல், இருமூன்று ஏய்திய இயல்பினின் வழாஅது - ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறாகிய நன்மைபொருந்திய இலக்கணத்தில் வழுவாமல், இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி - தாயும் தந்தையுமாகிய இருவர் குலத்தையும் உலகத்தார் நன்றென்று மதித்த பலவாய் வேறுபட்ட பழைய குடியிற் பிறந்த, அறுநான்கு இரட்டி இளமை நல் யாண்டு - இருபத்து நான்கின் இரட்டியாகிய நாற்பத்தெட்டாகிய இளமை மிக்க நன்றாகிய யாண்டுகளை, ஆறினிற் கழிப்பிய - மெய்ந்நூல் கூறும் நெறியானே கழித்த, அறன் நவில் கொள்கை - அறத்தை எப்பொழுதும் கூறுகின்ற கோட்பாட்டினையும், மூன்றுவகை குறித்த முத்தீச் செல்வத்து - நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வடிவமுமாகிய மூன்று வகையைக் கருதின ஆகவனீயம் தக்கிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்று தீயானுண்டாகிய செல்வத்தினையும் உடைய, இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல - நூலணிதற்கு முன்னர் ஒரு பிறப்பும் பின்னர் ஒரு பிறப்புமாகிய இருபிறப்பினையுமுடைய அந்தணர் தாங்கள் வழிபடுங் காலமறிந்து வாழ்த்துக்கூறா நிற்ப, ஒன்பதுகொண்ட மூன்று புரி நுண் ஞாண் - முந்நூல் கொண்டு முப்புரியாக்குதலின் ஒன்பதாகிய நூலைத் தன்னிடத்தே கொண்ட ஒரு புரி மூன்றாகிய நுண்ணிய பூணூலையும் உடைய, புலராக் காழகம் புலர உடீஇ - நீராடுங்காற் றோய்க்கப்பட்ட கலிங்கம் உடம்பிலே கிடந்து புலரவுடுத்து, உச்சிக் கூப்பிய கையினர் - தலைமேலே குவித்த கையை உடையராய், தற்புகழ்ந்து - தன்னைத் துதித்து ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி - ஆறெழுத்தினைத் தன்னிடத்தே அடக்கி இருக்கின்ற கேட்டற்கரிய மறைய ஓதப்படும் மந்திரத்தை, நா இயல் மருங்கின் நவிலப் பாடி - நாப் புடை பெயரும் அளவானே பயில ஓதி, விரை உறு நறுமலர் ஏந்தி - மணமிக்க நறிய பூவை எடுத்துத் தூவாநிற்ப, பெரிது உவந்து ஏரகத்து உறைதலும் உரியன் - அச் செயற்குப் பெரிதும் மகிழ்ந்து திருவேரகம் என்கின்ற ஊரிலே இருத்தலும் உரியன்.*

***கருத்துரை :*** *ஓதல் முதலிய தமக்குரிய அறுவகைத் தொழில்களைச் செய்தலிலே வழுவாமல், தாயும் தந்தையும் என்னும் இருவர் குலமும் நன்றென்று உலகத்தார் மதித்தனவாகிய பல்வேறு பழங்குடிப் பிறப்பினராய் நாற்பத்தெட்டி யாண்டாகிய நல்ல இளமைக்கால முழுவதும் பிரமசரியங் காத்த பேராண்மையாளராய், அறங்கூறும் கோட்பாடுடையராய் நாற்சதுரம் முச்சதுரம்*

வில்வடிவம் என்னும் மூன்றுவகையாகக் கருதிய ஆகவனீயம் தக்கிணாக்கினி காருகபத்தியம் என்னும் மூன்று தீயானே உண்டாகிய செல்வத்தையும் இரு பிறப்பினையும் உடைய அந்தணர் தாங்கள் வழிபடுதற்குரிய காலமறிந்து பூணுநூலையும் புலராத ஆடையையும் அணிந்துகொண்டு தலைமேலே குவித்த கையினராய் (முருகனாகிய) தன்னைப் புகழ்ந்து ஆறெழுத்தடக்கிய கேட்டற்கரிய மந்திரத்தை நாப்புடை பெயருமளவானே ஓதி, மணமிக்க மலர்களைச் சிதறி, வாழ்த்துக்கூறப் பெரிதும் உவந்து திருவேரகம் என்னும் ஊரிலே இருத்தலும் உரியன் என்பதாம்.

***அகலவுரை :*** மெய்ந் நூலில் அந்தணர்க்கோதிய இயல்பு ஆறாகலின், 'இரு மூன்று எய்திய இயல்பு' என்றார். அவை, ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்பன. இதனை,

"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்"

(தொல். புறத். சூ - உ0)

என்னும் தொல்காப்பியத்தானறிக. இவ்வாறனுள், ஓதல் - இருக்கு முதலிய மறைகளையும் இலக்கணங்களையும் அறநூல்களையும் ஆறங்கங்களையும் பயிலுதல். ஓதுவித்தல் - கொள்வோன் உணர்வு வகையறிந்து அவன் கொள்வரக் கொடுக்கும் ஈவோன்றன்மையும், ஈதலியற்கையுமாம். வேட்டலாவது, ஐந்தீயாயினும் முத்தீயாயினும் உலகியற்றீயாயினும் ஒன்று பற்றி மங்கல மரபினாற் கொடைச்சிறப்புத் தோன்ற மந்திர விதியாற் கொடுக்குஞ் செய்தி. வேளாண்மை பற்றி வேள்வியாயிற்று. வேட்பித்தலாவது - வேள்வி யாசிரியர்க்கோதிய இலக்கணமெல்லாம் உடையனாய் மாணாக்கற்கு அவன் செய்த வேள்விகளால் பெரும்பயனைத் தலைப்படுத்துதல். ஈதலாவது - வேள்வியாசானும் அவற்குத் துணையாயினோரும் ஆண்டு வந்தோரும் இன்புறுமாற்றான் வேளாண்மை செய்தல். ஏற்றலாவது - கொள்ளத்தகும் பொருள்களை அறிந்து கொள்ளுதல் என்க.

"ஓதல் வேட்டல் அவைபிறர்ச் செய்தல்
ஈதல் ஏற்றல்என் றாதுபுரிந் தொழுகும்
அறம்புரி அந்தணர்" (பதிற்று - உசா)

என்றார் பிறரும்.

இருவர் - தாயும் தந்தையும், தாயும் தந்தையுமாகிய இருவர் குடியும் உயர்குடி என்று உலகத்தாராற் சுட்டிப் புகழப்பட்ட நற்குடிப் பிறப்பினர் என்றவாறு. அந்தணர்க்குரிய நல்லொழுக்கத்தே வழுவாமல் நிற்றற்குத் தலைசிறந்த ஏதுவாவது உயர்குடிப் பிறப்பேயாகலின் அதனை விதந்தெடுத்தோதினார். என்னை?

*"இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்*
*செப்பமும் நாணும் ஒருங்கு"* *(குறள் - 951)*

*என்றும்,*

*"ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்*
*இழுக்கார் குடிப்பிறந் தார்"* *(குறள் - 952)*

*என்றும்,*

*"நகையீகை இன்சொல் இகழாமை நான்கும்*
*வகையென்ப வாய்மைக் குடிக்கு"* *(குறள் - 953)*

*என்றும் மெய்க்காட்சியாளர் ஓதுபவாகலானும், குடிப்பிறப்பின் குணமாகிய ஒழுக்கமில்வழி, பார்ப்பான் பிறப்புக்கெடும் என்பவாகலானும் அறிக.*

*அறுநான் கிரட்டி - நாற்பத்தெட்டு. நாற்பத்தெட்டு யாண்டு பிரமசரியங்காத்தென்பார் ஆறினிற் கழிப்பி என்றார். ஆறு - நன்னெறி. கழித்தல் அருமை என்பது தோன்றக் கழிப்பி என்றார். உலகில் காம முதலிய நுகர்வார்க்குப் பதினாறாண்டு அகவை முதல் நாற்பத்தெட்டாண்டிறுதியாகவுள்ள பருவமே தகுதியான பருவம் ஆதலால், அத்தகைய பருவத்திலும் காம முதலியவற்றில் உளம் போக்காது அடக்கிய அருமை தோன்ற நல்லியாண்டு ஆறினிற் கழிப்பி என்றார் என்னை?*

*"மடங்கெழு நோக்கின் மதமுகந் திறப்புண்*
*டிடங்கழி நெஞ்சத் திளமை யானை*
*கல்விப் பாகன் கையகப் படாஅ*
*தொல்கா உள்ளத் தோடும்"* *(சிலப் உங : ஙசா-க)*

*என்பவாகலான் அப்பருவத்தே மனமடக்கிப் பிரமசரியத்தே நிற்றல் அருமையாகலான் என்க.*

*முத்தீ என்றதற்கு "மூன்றாவன ஒன்று வேதத்தை வழங்கவும் ஒன்று தேவர்கட்குத் தக்கிணை கொடுக்கவும், ஒன்று பூலோகத்தை இரட்சை பண்ணவும் இவ்வாறாய முத்தீ" என்பாருமுளர்.*

*பொழுதறிந்து நுவல என்பதற்கு, "உதயகாலத்தும் மத்தியான காலத்தும் அத்தமன காலத்தும் தாபனம், அநுட்டானம், பூசையாகிய மூன்று தொழிலையும் முயன்று செய்ய" என்பாருமுளர்.*

*நுவல - வாழ்த்துக்கூற (கஅஉ) நுவல என்பதனை (கஅஅ) ஏந்தி என்பதன் பின்னாக இயைத்துக்கொள்க.*

*ஒவ்வொரு நூலும் மூன்று புரி உடைத்தாய் மூன்றாகலின் ஒன்பது கொண்ட மூன்று புரி நுண்ஞாண் என்றார். ஞாண் - ஈண்டுப் பூணும் நூல் என்க.*

*நீராடிய ஆடை புலராதபடியிருந்து வழிபடுவார் என்பார், 'புலராக் காழகம் புலர உடீஇ' என்றார். புலர - தம்முடம்பிலிருந்தே புலரும்படி என்க. காழகம் - ஆடை. "களிறுமேற் கொள்ளவும் காழகம் நீப்பவும்" (புறம். சக : க) என்புழியும் அஃதப் பொருட்டாதல் அறிக.*

*உடீஇ - உடுத்து தன் - (முருகனாகிய) தன்னை. ஆறெழுத்தடக்கிய அருமறைக் கேள்வி என்றது, ஆறெழுத்து மறைமொழியை. அது* ***"சரவணபவ" என்பது; "நமோகுமாராய" என்பதுமாம்.***

> *"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த*
> *மறைமொழி தானே மந்திரம் என்ப"*

*ஆதலான் ஆறெழுத்தடக்கிய அருமறை என்றார் எனினுமாம். நல்லாசிரியன் ஆணையால் மறைவாக மாணாக்கனுக்கு அறிவுறுத்தலின் மறைமொழியாயிற்றென்க.*

*ஒலி, பிறர் செவியிற் படாதவாறு நாப்புடை பெயருமளவானே ஓதி என்பார் நாஇயல் மருங்கின் நவிலப் பாடி என்றார்.*

*இவ்வந்தணர் செயற்கு முருகக்கடவுள் பெரிதுவந்தார்* ***எனவே மக்கள் தத்தம் பிறப்பிற்கேற்ற ஒழுக்கத்தே நிற்றலை இறைவன் பெரிதும் விரும்புவன் என்பதும் பெறப்பட்டது.***

*ஏரகம் - திருவேரகம் என்னும் ஊர். இதனை "மலைநாட்டகத்தொரு திருப்பதி" என்றார் நச்சினார்க்கினியர். சிலப்பதிகார அரும்பத உரையாசிரியர் வெண்குன்றத்தைச் சுவாமிமலை எனலால் ஏரகம் மற்றொரு திருப்பதி என்று கருதினாராதல் வேண்டும். அருணகிரியார் சோழநாட்டிலுள்ள சுவாமிமலை என்னும் தலமே ஏரகம் என்று கொண்டனர். இதனை, "காவிரியாற்றுக்கு ளேவருவளமைச் சோழநன்னாட்டுக்கு ளேரக நகரிற் சீர்பெறுமோட்சத்தை யேதருகுமரப் பெருமாளே!" எனவும், "யாவுமவை கொண்டுகைத்த காவிரி புறம்பு சுற்று மேரகம் அமர்ந்த பச்சை, மயில் வீரா" எனவும் வரும் திருப்புகழானறிக.*

*இனி இருபிறப்பாளர் பொழுதறிந்து உடீஇ, புகழ்ந்து பாடி ஏந்தி நுவல உவந்து ஏரகத்து உறைதலும் உரியன் என்று முடிவு செய்க.*

*இனி 190 - பைங்கொடி என்பது முதல், 217 - குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே என்னுந்துணையும் ஒரு தொடர். இதன்கண் முருகக்கடவுள் குறிஞ்சித்*

*தெய்வமாதலான் எல்லா மலைகளினும் திருவிளையாடல் செய்வன் என்பதுபற்றிப் பொதுவிற் குன்றுதோறாடும் மாண்பு கூறப்படும்.*

## ஏரகம்

*இது மலை நாட்டகத்ததொரு திருப்பதி என்று நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். ஏரகத்து முருகன் கோவிலில் நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசரிய விரதம் காத்த வேதியர் மந்திரங்கள் கூற, ஈரவுடையை அணிந்த அருச்சகர் முருகனுக்குரிய ஆறெழுத்து மந்திரத்தைச் சொல்லி அருச்சனை செய்தனர் என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது. (அடி, 177-189) இனி ஏரகம் எதுவாய் இருத்தல் கூடும் என்பது இங்கு ஆராயத்தகும்.*

*பத்துப்பாட்டிற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர், கி.பி. 14ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர். அவர் திருப்பரங்குன்றம் முதலிய இடங்கள் இன்ன நாட்டின் என்று கூறாமல், ஏரகம் பற்றி வரும் இடத்தில் மட்டும் 'ஏரகம் மலை நாட்டகத்ததொரு திருப்பதி'[1] என்று கூறியிருத்தல் கவனத்திற்குரியது.*

*'திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவி நன்குடி என்னும் மூன்றும் தமிழ்நாட்டவை; அவை எங்கு உள்ளன என்று தமிழர்க்குக் கூறத் தேவை இல்லை. தமிழகத்திற்கு அப்பாற்பட்டது ஏரகம் ஆதலின், அஃது இன்ன நாட்டகத்தது என்று கூறுதல் நமது கடமை' என்று கருதியவர் போல நச்சினார்க்கினியர் 'ஏரகம்' மலைநாட்டகத்தொரு திருப்பதி' என்று கூறினர் போலும்!*

*சிலப்பதிகாரம் குன்றக்குரவையுள்,*

> *"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்*
> *ஏரகமும் நீங்கா இறைவன்"[2]*

*என முருகன் திருப்பதிகளுள் அக்காலச் சிறப்புப் பெற்றவை குறிக்கப்பட்டுள்ளன. சிலப்பதிகார அரும்பத உரையாளர் வெண்குன்றைச் 'சுவாமிமலை' எனக் கூறியுள்ளார். சிலப்பதிகாரத்துக்கு முதலில் அரும்பத உரையும் பின்பு அடியார்க்கு நல்லார் விரிவுரையும் தோன்றியிருத்தலே இயல்பு; எனவே, அடியார்க்கு நல்லார்க்கு அரும்பதவுரையாசிரியர் முற்பட்டவர் எனக் கொள்வதே பொருந்தும்[3]. அடியார்க்கு நல்லார் நச்சினார்க்கினியர்க்கு முற்பட்டவர். நச்சினார்க்கினியர் கி.பி. 14ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர். எனவே, அடியார்க்கு நல்லார் காலம், ஏறத்தாழக் கி.பி. 13 அல்லது 14 ஆம் நூற்றாண்டு எனலாம். அரும்பதவுரையாளர் அவர்க்கு முற்பட்டவராதலின், அவர் காலம்*

1. *பத்துப்பாட்டு, ஐந்தாம் பதிப்பு, பக். 62*
2. *தெய்வம் பராஅயது, அடி. 1-2.*

*2,3 சிலப்பதிகாரம் ஏழாம் பதிப்பு, பக். 17.*

ஏறத்தாழக் கி.பி. 12 அல்லது 13 ஆம் நூற்றாண்டு எனலாம். எனவே, கி.பி. 12 அல்லது 13 ஆம் நூற்றாண்டினரான அரும்பதவுரை ஆசிரியர் 'சுவாமிமலை வேறு, ஏரகம் வேறு' என்று தெளிவாகக் கூறியுள்ளார் என்பது இங்கு அறியத்தகும்.

ஆயினும், கி.பி. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் 'சுவாமி மலைதான் ஏரகம்' என்று பல பாக்களில் குறித்துள்ளார்[3].

இனி, நக்கீரர் ஏரகத்தைப்பற்றி யாது கூறியுள்ளார் என்பதைக் காண்போம். 'ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்' என்னும் அறுதொழிலின் வழுவாதவரும் நற்குடிப் பிறந்தவரும் நாற்பத்தெட்டாண்டு வரை பிரமசரிய விரதம் காத்தவரும், அறம் கூறும் கோட்பாட்டினையும் முத்தீச் செல்வத்தையும் உடையவருமாகிய அந்தணர் முருகப்பெருமானை வழிபடும் காலமறிந்து மந்திரங்களைக் கூற, (அருச்சகர்) நீராடுங்கால் தோய்க்கப்பட்ட ஆடை உடம்பிலே கிடந்து காயும்படி உடுத்து முருகனைத் தலைமேற்குவித்த கையினராய்த் துதித்து, ஆறெழுத்து மந்திரத்தை நாவில் உச்சரித்து, நறிய மலர்களை எடுத்து அருச்சனை புரிவர். முருகன் அந்நிலையில் மகிழ்ந்து ஏரகம் என்னும் ஊரில் இருப்பன்[4].

இது நச்சினார்க்கினியர் உரையின் கருத்து. இதிற் 'கூற' உச்சரித்து, என வரும் இரண்டு வினைகள் இருதிறத்தாரைக் குறிப்பவையாகக் கொள்வதே நேரிது. அங்ஙனம் கொள்ளின், மந்திரங்களைக் கூறுவோர் வேறு, ஆறெழுத்துச் சொல்லி மலர் தூவி அருச்சிப்பவர் வேறு என்பதை அறியலாம். பெரிய கோவில்களில் இங்ஙனம் இரு திறத்தினர் இருந்து வழிபாடு செய்தல் உண்டு.

இரு செயல்களையும் அருச்சகரே செய்தனர் எனக் கொள்ளின், 'கூற' என்பதைக் 'கூறி' என மாற்றிக் கொள்ள வேண்டும். இங்ஙனம் இரு செயல்களையும் ஒருவரே செய்தல் சிறிய கோவில்களிலும் உண்டு.

ஏரகத்தில் அருச்சனை புரிந்தவர் நீராடி ஈரத்துணியுடனே இருந்து அருச்சனை செய்தனர்[5] என்பதை,

---

3. "காவிரி யாற்றுக்கு ளேவரு,
வளமை சோழநன் னாட்டுக்குள் ஏரக
நகரிற் சீர்பெறு மோட்சத்தை யேதரு பெருமாளே"
"யாவும்அலை கொண்டு கைத்த காவிரி புறம்பு சுற்றும்
ஏரகம் அமர்ந்த பச்சை மயில்வீரா"
4. திருமுருகாற்றுப்படை, அடி, 177-189
5. கோவிலில் வழிபடும் பொதுமக்கள் ஈரத்துணியுடன் சென்று வழிபடுவதை ஆசிரியர் குறித்தார் எனக் கூறுவது பொருந்தாது. திருக்கோவில், மாலை 1, மணி 2, பக். 5 (1958).

*'புலராக் காழகம் புலர உடீஇ'*

*என்னும் நக்கீரர் வாக்கால் அறியலாம்.*

*இங்ஙனம் அருச்சகர் நீராடி ஈரத்துணியுடன் அருச்சனை புரிதல் மலை நாட்டில் இன்றும் இருந்து வரும் வழக்கமாகும். தமிழ் நாட்டில் இவ்வழக்கம் இல்லை. மலையாள நாட்டில் உள்ள பெரிய கோவில்களில் அருச்சனை செய்பவர், 'போற்றி' என்று வழங்கப்படும் துளு நாட்டுப் பிராமணராவர். இவர்கள் கன்னடமும் பேசுவார்கள். இவர்கள் தாங்கள் பணி புரியும் ஊர்களில் பெரும்பாலும் குடும்பத்துடன் இருப்பதில்லை; தங்கள் ஊரை விட்டுக் குறிப்பிட்ட காலம் வரையில் தாங்கள் பணிபுரியும் கோவில் உள்ள ஊரில் - கோவிலை அடுத்த சத்திரத்தில் தங்கியிருப்பார்கள். அப்பொழுது கடுமையான பிரமசரியம் காப்பார்கள். இவர்களை இன்றும் இந்நிலையில் நாகர்கோவிலில் உள்ள நாகராசர் கோவிலிலும், திருவனந்தபுரம் பதுமநாப சுவாமி கோவிலிலும், மலையாள - கன்னட நாடுகளில் உள்ள பிற கோவில்களிலும் காணலாம்.*

*இவ்வாறு ஈர ஆடையுடன் அருச்சனை புரியும் அருச்சகர் முருகனுக்குரிய ஆறெழுத்து மந்திரத்தை உச்சரித்து மலர் தூவி அருச்சிப்பர் என்று நக்கீரர் கூறியுள்ளார். ஆறெழுத்து மந்திரம் 'நமோ குமாராய' என்பது என்று நச்சினார்க்கினியர் குறித்துள்ளார். 'நமக்குமாராய' என்பதும் பாடமாகும். பின்னதே இலக்கணமுடையது. செய்யுளில் மெய்யெழுத்துக்கணக்கில் வாராது. எனவே, அஃது ஒழிந்த ஆறு எழுத்துக்களே கணக்கிடப்படும்.*

*மலை நாட்டில் உள்ளதும் நமக்குமாராய என்னும் மந்திரப் பெயருக்கு மிகப்பொருத்தமாயுள்ளதுமாகிய இடம் யாதெனக் கண்டறிதல் நல்லது.*

*தென்கன்னட மாவட்டத்தில் புத்தூர் வட்டத்துக் கிழக்குக் கோடியில் மேற்கு மலைத்தொடரில் மேற்குப் பக்கத்தில் சஹ்யாத்திரி மலைகளில் ஒன்றான குமார பருவதம் இருக்கின்றது. இப்பகுதி துளு நாட்டைச் சேர்ந்தது. இதனை அடுத்துக் குமாரக்ஷேத்திரம் அல்லது சுப்பிரமணியக்ஷேத்திரம் என்னும் சிற்றூர் உள்ளது. அதில் கோவில் கொண்டுள்ள பெருமானுக்குக் குமாரசாமி என்பதே பெயர். குமாரசாமி எழுந்தருளியுள்ள இடம் குமாரக்ஷேத்திரம் என்றும், அந்த இடத்தை அடுத்துள்ள மலை குமாரமலை என்றும், அம்மலையிலிருந்து வரும் சிற்றாறு குமாரதாரை என்றும் பெயர் பெற்றுள்ளன[6].*

*இங்ஙனம் கடவுள் பெயர் அவருள்ள இடத்திற்கும் அந்த இடத்தையடுத்த மலைக்கும் அம்மலையில் தோன்றிய ஆற்றுக்கும் பெயராய் அமைந்துள்ளமை பிற இடங்களில் காண்டல் அருமையிலும் அருமை.*

---

*6. ஸ்ரீ சுப்பிரமணிய க்ஷேத்திரம் (ஆங்கில நூல்) பக். 9, 11, 12.*

இங்குள்ள புற்றில் ஒரு சிவலிங்கம் உள்ளது. அது 'குக்கெலிங்கம்' எனப்படுகிறது. அதனால் இத்தலம் 'குக்கே' என்றும் வழங்கப்படுகின்றது. இப்புற்று ஆதிசேடனுக்கு உரியதென்று தலபுராணம் கூறுகிறது[7]. இத்தலத்தைப் பற்றிக் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கரர் தமது புஜங்க தோத்திரத்திற் பாடியுள்ளார்; இங்கு ஒரு மடத்தையும் நிறுவினார். உடுப்பிக்கு அருகில் 13ஆம் நூற்றாண்டில் பிறந்த மத்துவாசாரியாரும் இவ்விடத்தில் ஒரு மடத்தை நிறுவினார். ஹொய்சள மன்னருள் காலத்தாற் பழமையானவர் இத்தலத்தையே தமக்குத் தலைநகராய்க் கொண்டிருந்தனர்[8]. இத்தலத்தைப் பற்றிய விவரங்கள் வட மொழியிலுள்ள கந்தபுராணம் - கந்தகுமார சம்ஹிதை - சஹ்யாத்திரி காண்டத்தில் - தீர்த்த ஷேத்திர மஹிம நிரூபணம் என்னும் பகுதியில் கூறப்பட்டுள்ளது[9].

இத்தலத்தில் உள்ள முருகப்பெருமானுக்கு ஒரு நாளில் நடைபெறும் பூசைகள் பல. ஒவ்வொரு பூசையின் போதும் அருச்சகர் நீராடி ஈர ஆடையுடன் இருந்தே அருச்சனை புரிதல் வழக்கம். அவரும் அவருடைய உதவியாளரும் நீராடிய பின்பே ஈரவுடையுடன் கருவறையுள் நுழைவர். உதவியாளர் மந்திரங்களைக் கூற, அருச்சகர், அருச்சனை புரிவர்[10]. குமார மலையடிவாரத்தில் குமார தாரையின் பக்கத்தில் உள்ள குமாரசுவாமியை அருச்சிப்பவர் அப்பெருமானுக்கே உரிய 'நமக்கு மாராய' என்னும் மந்திரத்தை உச்சரித்து அருச்சனை புரிதல் இயல்பு தானே!

நக்கீரர், 'பிரமசரிய விரதம் காத்த நற்குடி மறையவர் மந்திரம் கூறி ஈர ஆடையுடன் (அருச்சகர்) ஆறெழுத்து மந்திரம் கூறி, மலர்தூவி அருச்சிப்பர்', எனக் கூறுதலைக் காண, மந்திரம் கூறுவோர் வேறு, அருச்சனை புரிவோர் வேறு என்பது தெளிவாகிறது. குமார க்ஷேத்திரத்தில் இந்த இரு திறத்தாரையும் இன்றும் காணலாம்.

கன்னடம், துளு, குடகு, மலையாள நாடுகளிலும் பெல்லாரி மாவட்டத்திலும் உள்ள மக்கள் இத்தலத்திற்கு வந்தவண்ணமிருக்கின்றார்கள். மைசூர், இந்தூர் மன்னர்கள் இக்கோவிலுக்குப் பல அறங்களைச் செய்துள்ளார்கள். இக்கோவில் கல்வெட்டுகள் விசயநகர வேந்தரான இரண்டாம் புக்கர் காலமுதல் (கி.பி. 1407) காணப்படுகின்றன. அவை 17ஆம் நூற்றாண்டோடு (கி.பி. 1681) முடிகின்றன[11].

---

7. குக்கெ - கூடை ய (கன்னடம்); கூடையில் வைக்கப் பெற்ற லிங்கம் 'குக்கெலிங்கம்' எனப்பட்டது. இடத்திற்கும் இப்பெயரே சுருங்கி வழங்குகிறது.
8. க்ஷ நூல் பக். 1-2
9. க்ஷ நூல் பக். 9.
10. க்ஷ நூல் பக். 5-8.
11. க்ஷ நூல். பக். 48.

இங்குக் கூறப்பட்ட குமாரக்ஷேத்திரம் மலை நாட்டகத்தது. ஆதலாலும், க்ஷேத்திரமும் மலையும் ஆறும் மூர்த்தியும் 'குமார' என்றே தொடங்கப்படுவதாலும், ஏரகத்து அருச்சகர் 'நமக்குமாராய' என்னும் மந்திரத்தை உச்சரித்து அருச்சனை புரிந்தனர் என்று நச்சினார்க்கினியர் கூறுதல் இத்தலத்திற்கு மிகவும் பொருத்தமாய் அமைந்துள்ளது என்பதாலும், அருச்சகர் ஈர ஆடையுடனே இருந்து அருச்சித்தல் இங்கு இன்றும் நடைபெறுதலாலும் இத்தலமே நக்கீரரால் குறிக்கப்பட்ட ஏரகமாய் இருக்கலாம் என்று கருதுதல் பொருத்தமாகும்[12].

'ஏரகம் - அழகிய அகம்', எனப் பொருள் கொள்வர் சிலர். ஏரகம் என்பது வடமொழியில் கோரைப் புல்லைக் குறிக்கும். காஞ்சி மரங்கள் நிறைந்த இடம் 'காஞ்சி' என்றாற்போலவும், காரைச் செடிகள் நிறைந்த இடம் 'காரைக்காடு' என வழக்குப் பெற்றாற்போலவும், ஏரகம் (கோரை) மிகுதியாய் இருந்த காரணத்தால் இத்தலம் 'ஏரகம்' என வழங்கப்பட்டிருக்கலாம்.

'தமிழராகிய நக்கீரர் துளுநாட்டிலுள்ள ஏரகம் பற்றிப் பாடியிருத்தல் கூடுமா?' என்று சிலர் ஐயுறலாம். சங்க காலத்திலும் பின் நூற்றாண்டுகளிலும் துளு நாடு தமிழர் அறிந்ததேயாகும். "தோகைக் காவிற் றுளுநா டன்ன" என அகநானூற்றில் (செய். 15) துளுநாடு கூறப்பட்டுள்ளது. 'தொண்டை நாட்டைக் கைப்பற்றிய கரிகாலன், காடு கெடுத்து நாடாக்கிய பின்பு அங்கு வேளாளரைக் குடியேற்றினான். அவ்வேளாளர் துளுநாட்டு வேளாளர். அவர்கள் தொண்டை மண்டலத்தில் தங்கிவிட்டதால், 'தொண்டை மண்டலத் துளுவ வேளாளர்' எனப் பட்டனர் என்று செவிவழிச் செய்தி செப்புகிறது. மேலும், பழந்தமிழ்ச் சொற்கள் துளு மொழியில் மிக்குள்ளன. இவை அனைத்தையும் நோக்க, நக்கீரர் போன்ற புலவர் பெருமக்களுக்குத் துளுநாடும் அதன்கண் இருந்த நல்லிடங்களும் நன்கு தெரியும் எனக் கோடலே பொருத்தமாகும்.

---

12. நாகர்கோவிலுக்கு அண்மையிலுள்ள வேழிமலை (வேள் மலை)யை ஏரகம் எனச் சிலர் கருதுவர். குமாரக்ஷேத்திரம் வேழி மலையினும் பன்மடங்கு சிறப்புற்றதாகும். நாளும் யாத்திரிகரை மிகப் பரவலாகவுடையது; நாளும் நடைபெறும் பூசைகளிலும் உயர்வுடையது; மந்திரம் ஓதுவோரையும் அருச்சகரையும் தனித்தனியாகப் பெற்றது. மேலும், குமாரக்ஷேத்திரம், குமாரமலை, குமாரதாரை என்னும் பெயர்கள் அமையப் பெற்ற (ஊரும், மலையும், சிற்றாறும் ஒரே ஊரில் அமைந்த) இடமே 'நமக்குமாராய என்னும் மந்திரத்திற்கு ஏற்ற தலமாகக் கருதுதல் பொருத்தமாகத் தோன்றுகிறது. மேலும், வேழி மலையில் உள்ள முருகன் சிலை பக்தர் அல்லது ஜினதேவர் உருவமாகக் காணப்படுகிறது என்பது இங்கு அறியத்தகும்.



**அருள்மிகு சுவாமிநாத சுவாமி, சுவாமிமலை.**

*பிரணவ மந்திரத்தினை தந்தைக்கு உபதேசித்த தஞ்சை தரணியாளும் தனயன் சுவாமி மலை குமரன் நம் மனதினையாள அடி பணிவோம்.*

# திருவேரகம் எனும் சுவாமிமலையும் ஸ்ரீ சுவாமிநாத சுவாமியும்

(நான்காம் படைவீடு)

நீரகத் தேதனை நினையும் அன்பினோ
பேரகத் தலமரும் பிறவி நீத்திடும்
தாரகத் துருவமாந் தலைமை எய்திய
ஏரகத் தறுமுகன் அடிகள் ஏத்துவாம்.

– கந்தபுராணம் (துதிப்பாடல்)

*திருமுருகனின் **அறுபடை வீடுகளில்** நான்காவது படைவீடாகத் திகழ்வது **திருவேரகம்** என்ற புராதனப் பெயர் கொண்ட இன்றைய **சுவாமிமலை**. இத்தலம் **கும்பகோணம்** மற்றும் **திருவையாறு** செல்லும் பேருந்து மார்க்கத்தில் கும்பகோணத்திற்கு மேற்கே சுமார் 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர் செல்லும் பேருந்து மார்க்கத்தில் **திருவலஞ்சுழி** என்ற பிள்ளையார் ஸ்தலத்தில் இறங்கி வடக்கே சுமார் 1 கி.மீ. தூரம் பயணித்தும் சுவாமிமலையை அடையலாம். அண்ணன் **விநாயகனை** தரிசித்து விட்டு தம்பி **சுவாமிநாதனை** சென்று தரிசிப்பதும் ஒரு சிறப்பான தரிசன முறைதானே, திருவலஞ்சுழி வெள்ளைப் பிள்ளையாரை தரிசித்த பிறகே சுவாமிநாதனை சென்று தரிசிக்க வேண்டும் என்பதும் அக்கால மரபு என்கிறார்கள்.*

**ஸ்தல சிறப்பு**

*சுவாமி மலையை புராணங்களும் இலக்கியங்களும் **திருவேரகம்** என்றே குறிப்பிடுகின்றன.*

*மேலும் இத்தலம் பழங்காலத்தில் **சிரகிரி** என்றும் **சிவகிரி** என்றும், சிவனுக்கு உபதேசம் செய்யும் "குருவடிவில்" முருகன் அருளாட்சி புரிவதால் **குருமலை, குருகிரி** என்றும், "அழகுத்தலம்" இது என்பதால் **சுந்தராசலம்** என்றும், நெல்லியை ஸ்தல விருக்ஷமாகக் கொண்ட காரணத்தால் **தாத்ரிகிரி** என்றும் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டுள்ளது.*

*சுவாமிமலை **ஸ்ரீ சுவாமிநாதர்** எனும் முருகன் ''சிவனுக்கு பிரணவோபதேசம் செய்யும் குரு'' மட்டுமல்ல, **அஜாரூடர்** எனும் **ஆட்டுவாகனராய்** அருள்புரிவதும், **பிரம்ம சிக்ஷகர்** என்ற **பிரம்மசாஸ்தாவாய்** நான்முகனைச் சிறை நாட்டிய நாதனும் இவர்தான். இக்கருத்தை **உ.வே.சா** தம் ஸ்தல வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார். சிவனுக்கு முருகன் உபதேசம் செய்த*

ஸ்தலம் இது என்பதால் இங்கு **யக்ஞோபவீதம்** எனும் பூணூல்போடும் வைபவமும் **பிரம்மோபதேசச்** சடங்கும் நடத்துவது மிகவும் சிறப்பு என்கிறார்கள்.

இயற்கையாக மலைகளே இல்லாத இப்பகுதியில் செயற்கையாக ஒரு கட்டு மலையை 60 அடி உயரத்தில் 60 படிகள் வைத்த மாடி வீடுபோலக் கட்டி (செய்குன்று) அதன் மீதுள்ள ஆலயத்தில் ஸ்ரீ சுவாமிநாதனை எழுந்தருளச் செய்திருக்கிறார்கள் நம் மஹான்கள். இவருக்கு **சுவாமி, சுவாமிநாதன், தகப்பன் சாமி, குருநாதன், புத்ரக குருக்கள்** என பல திருநாமங்கள் உண்டு. சமஸ்கிருதத்தில் **ஸ்ரீ ஞான ஸ்கந்தன்** என்று போற்றப்படும் ஸ்கந்த வடிவமும் இவர்தான்.

சுவாமிமலையை "கொடு முடியாய் வளர்ந்து புயல் நிலையாய் உயர்ந்த திருமலை" என்று குறிப்பிடும் அருணகிரிநாதர் இத்தலத்திற்கு 38 திருப்புகழ் பாடல்களைப் பாடியுள்ளார். சிலர் திருவேரகம் வேறு சுவாமிமலை வேறு என்பார்கள். இல்லை இரண்டும் இதேஸ்தலம்தான் என்பதற்கு **"ஏரக வெற்பெனும் அற்புதம் மிக்க சுவாமிமலைப் பதி"** என்ற அருணகிரியின் வாக்கே ஆதாரம்.

சிலப்பதிகாரத்தில் "சீர்கெழு செந்திலும் செங்கோடும், வெண்குன்றும், ஏரகமும் நீங்கா இறைவன்" என்று ஸ்ரீசுவாமிநாதப் பதியை புகழ்கிறார் இளங்கோவடிகள். நக்கீரர் தம் திருமுருகாற்றுப்படையில் 177 முதல் 190 வரை உள்ள பாடல்வரிகளில் சுவாமிமலையைப் போற்றி அருளியுள்ளார்.

இத்தலத் திருக்கோயிலில் காரணாகமம் எனும் "சைவாகமத்தின்" படியும், குமாரதந்திர முறைப்படியும் பூஜைகள் நடக்கின்றன. பூஜைகளை செய்பவர்கள் சிவாசாரியார்கள் என்ற ஆதிசைவப் பெருமக்களே ஆவர்.

### ஸ்ரீ பாகுலேய சுவாமி

மற்ற ஸ்தலங்களில் இல்லாத சிறப்பு இங்கு என்னவெனில் **ஸ்ரீ பாகுலேயர்** என்ற சுப்பிரமணிய சுவாமியின் ஒரு திருவுருவம் இங்குள்ள மஹாமண்டபத்தின் வடக்குச் சுவர் பக்கம் காட்சி தருகின்றது. இந்த முருகன் இங்கு ஸ்ரீ நடராஜர் போலவே அருட்கரங்கள் நான்கினையும் அபிநயம் பிடித்தபடி அருள்கிறார். ஸ்ரீ தெய்வானையுடன் இருக்கும் இவருக்கு **சிதம்பரம் நடராஜர்** போலவே **மார்கழி திருவாதிரையில்** உற்சவமும், திருவீதியுலாவும் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

### ஸ்ரீ சுவாமிநாத ஸ்வாமி

ஸ்ரீசுவாமி நாதஸ்வாமியின் சந்நிதி கிழக்கு நோக்கி உள்ளது. கருவறையில் **அகரம், உகரம், மகரம், நாதம், பிந்து** எனும் ஐவகை **ஓங்கார** உருவினனாக மெய் ஞானகுருவாக இருந்து அருள்பாலிக்கிறார் ஸ்ரீ சுவாமிநாத ஸ்வாமி. இவர்

இரண்டு திருக்கரங்கள் கொண்டு அவற்றில் வலக்கரத்தில் ஒரு திருத்தண்டம் ஏந்தி இடக்கரத்தை இடத்தொடையில் ஊன்றி ஊர்த்துவ சிகாமுடி (நீண்டு மேலுயர்ந்த கிரீடம்) அணிந்து முப்புரிநூல் மற்றும் ருத்திராக்ஷ மாலை அணிந்து சர்வாலங்கார பூஷிதராக சுமார் 6 அடி உயரத்தில் நின்றபடி காட்சி தருகிறார்.

இவர் எழுந்தருளிய பீடம் காணும் போது சிவலிங்கத்தில் உள்ள ஆவுடையார் போலவே உள்ளதால் இவர் பாணம் போலவும் இருக்கிறார். இதனால் சிவனே முருகன் முருகனே சிவன் என்ற தத்துவம் கூட இங்கே சுட்டப்படுவதை உணரலாம்.

செவ்வாய்க்கிழமை மாலை நேரத்தில் ஸ்ரீ சுவாமிநாத ஸ்வாமிக்கு நான்கு சரங்கள் கொண்ட **சஹஸ்ராக்ஷ மாலையும்** வைரத்தால் ஆன **ஷட்கோணப் பதக்கமும்** குருவாரமான வியாழக்கிழமைகளில் **தங்கக்கவசமும், வைரவேல்** மற்றும் பற்பல **தங்க வெள்ளி அணிகலன்களும்** அணிவிக்கப்படுகின்றன.

இங்கு ஆபரண அலங்காரங்கள் செய்யும் போது **ராஜாலங்கார ரூபனாகவும்**, சந்தனாபிஷேகத்தின் போது **பாலகுமாரனாகவும்**, விபூதி அபிஷேக சமயத்தில் **விருத்தனாக முதியவர் கோலத்திலும்** முருகன் காட்சியளிக்கிறான். இது பக்தர்களுக்கு கண்கொள்ளாக் காட்சியாகும்.

### சுவாமிமலையின் தொன்மை

ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய சுவாமிமலை தொன்மை மிக்க திருப்பதியாகும். சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்

> சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
> ஏரகமும் நீங்கா இறைவன்

என்று குறிப்பிடுகின்றார். திருவேரகமும் சுவாமிமலையும் ஒன்றே என்பதில் எந்த ஐயமும் வேண்டியதில்லை. அருணகிரியார்,

> ஏரக வெற்பெனும் அற்புதம் மிக்கசு
> வாமிம லைப்பதி மெச்சிய சித்தஇ
> ராஜத லட்சண லட்சுமி பெற்றருள் பெருமாளே

எனப்பாடுகின்றார். புராணகாலத்திற்கு முன்பிருந்தே புகழ்பெற்று விளங்குவது சுவாமிமலையாகும்.

### சுவாமிமலை - குருமலை

தொல்பழங்காலத்தில் சுவாமிமலை என்ற திருத்தலத்தில் இறைவன் கோயில் கொண்டதற்குரிய காரணத்தைக் கந்தபுராணம் நமக்கு இனிது உணர்த்துகின்றது. கயிலாயகிரியில் முருகப்பெருமான் ஆற்றலைச் சிவபெருமான்

பார்வதிக்கு எடுத்துரைத்தார். மலைமகளே! நம் நெற்றிக்கண்ணில் தோன்றிய நெருப்பு வடிவம் கங்கையில் தாங்கப்பட்டமையால் முருகன் எனும் நம் மகன் காங்கேயன் எனும் பெயர் பெறுவான். நாணற்புல் என்ற சரவணம் மிகுதியாகக் கிளைத்துள்ள பொய்கையில் தோன்றியபடியால் சரவணபவன் என்று அவன் துதிக்கப்படுவான். கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெற்றதனால் கார்த்திகேயன் என்று பெயர் கொள்வான். கந்தன் என்றும் அழைக்கப்படுவான். வழிபடுவோர்க்குப் பற்றுக்கோடாக அமைவதால் ஆறு உருவங்கள் திரண்ட நிலையில் இருப்பதால் ஆறுமுகன் என்று வழங்கப்பெறுவான். நாம் பெற்ற ஆறுமுகங்கள் அவனுக்கும் உரியன. தாரகப் பிரம்மமாய் அமைந்த நம் ஆறெழுத்து ஒன்றாகி முருகனுக்குரிய ஆறெழுத்து மந்திரமாகும். ஆறுமுகன் நம் சக்தியே ஆவான். உலகெங்கும் நிறைந்த போற்றுவதற்குரியவனாகத் திகழ்வான். அவன் குழந்தையாயினும், அனைத்தும் அறியும் அறிவாற்றல் கொண்டவனாக விளங்குவான். அவன் தன் அறிவால் ஆணவம் மிக்கவர்களை ஒடுக்குவான். நான்முகனை சிறையிலிட்டு அவன் படைப்புத் தொழிலையும் தானே ஏற்று நடத்துவான். அரக்கர்களை வென்று தேவர்களை அவன் சிறையிலிருந்தும் மீட்பான் என்று கூறினார்.

இறைவன் கூற்றுப்படியே படைப்புத் தொழிலில் ஆணவம் முற்றியிருந்த நான்முகன் முருகப்பெருமானைச் சந்திக்க நேர்ந்தது. அப்போது இருவருக்கும் கீழ்வருமாறு உரையாடல் நிகழ்ந்தது.

நான்முகனே! நீ எந்தத் தொழில் செய்கிறாய்?

சிவபெருமானின் ஆணைப்படி நான் படைத்தலாகிய
தொழிலைச் செய்கின்றேன்.
படைப்புத் தொழில் புரியும் உனக்கு பிரணவத்தின்
பொருள் இன்னதென்று விளங்குமா?

முருகனின் இந்த கேள்விக்கு நான்முகனால் விடையளிக்க முடியவில்லை.

தாமரை தலை யிருந்தவள் குடிலைமுன் சாற்றி
மாமறைத் தலை எடுத்தவன் பகர்தலும் வரம்பில்
காமர் பெற்றுடைக் குமரவேள் நிற்றி முன் கழறும்
ஓமெனப் படும் மொழிப்பொருள் இயம்புகென்றுரைத்தான்

ஆனால் நான்முகன் உரையாமல் நிற்கவே, அவனுடைய நான்கு தலைகளிலும் முருகப் பெருமான் குட்டினார். கீழே விழுமாறு தம் திருவடி கொண்டு உதைத்தார். தம் வீரர்களை விட்டு நான்முகனைச் சிறையிலே அடைக்கவும் செய்தார். பின்பு உயிர்க்குலங்களைத் தாமே படைக்கவும் செய்தார்.

*படைப்புத் தொழிலை ஏற்று முருகப்பெருமான் பல்லாண்டு காலம் அப்பணி புரிந்தார். நான்முகன் சிறையில் நைவது அறிந்து வருந்திய திருமால் சிவபெருமானிடம் நான்முகன் விடுதலைக்கு வழிவகுக்க வேண்டினார். சிவபெருமானும் நந்தியம் பெருமானை முருகனிடம் தூதனுப்பினார். ஆனால் நந்தியம் பெருமானை முருகன் கோபித்துக் கொள்ளவே அவரும் திரும்பி வந்து சேர்ந்தார். பின்பு சிவபெருமானே முருகனை வந்தடைந்தார். சிவபெருமான் முருகனிடம் நான்முகனை விடுவிக்குமாறு கூறினார். நான்முகனை விடுவிப்பதா? பிரணவ மந்திரத்தின் பொருள் அறியாதவர் படைப்புத் தொழிலை நிகழ்த்தலாமா? என்று முருகப்பெருமான் வினவினார். சிவபெருமான் இதனால் கோபம் கொண்டார். மகனே! உன் செயல் சரியன்று என மொழிந்தார். தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என்பதறிந்த முருகன் நான்முகனை விடுவிக்க வேண்டுமென்பது தங்கள் திருவுள்ளக் கருத்தானால் அப்படியே நடக்கட்டும் என்று கூறி நான்முகனை விடுவித்தார். நான்முகனும் இச்சிறைதண்டனை எனக்கு வேண்டியதே. என் ஆணவம் அடங்கியது. தீவினைகள் தொலைந்தன. உள்ளம் தூய்மையுற்றது எனக் கூறினான்.*

*அந்நிலையில் உளமகிழ்ந்த சிவபெருமான் தம் திருக்குமாரனாகிய முருகனைத் தம்மடிமீது இருத்தி மகிழ்ந்து குலாவி, நான்முகனும் அறியாத பிரணவத்தின் பொருளை நீ எனக்குக் கூறுக என்று கேட்டார். முருகன் எல்லாரும் அறியக் கூறாமல் மறைமுகமாக அன்றோ அதனைக் கூற வேண்டும் என்றார். உடனே சிவபெருமான் தம் காதினை முருகப் பெருமான் வாயருகே கொண்டு சென்று மறைவாகக் கூறுக என்றார். சிவபெருமான் திருச்செவியில் ஆறுமுகப் பெருமான் பிரணவத்தின் பொருளை உரைத்தார். இந்நிகழ்ச்சி காவிரிக் கரையில் சோழநாட்டில் ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய திருவேரகம் என்ற சுவாமிமலையில் நிகழ்ந்தது. இந்த நிகழ்ச்சியால் முருகப்பெருமான் சுவாமிநாதன் என்றும் குருநாதன் என்றும் பெயர் பெற்றார்.*

*குருவாய் அரற்கு உபதேசம் வைத்த*
*குகனே குறத்தி மணவாளா!*
*குளிர்கா மிகுந்த வளர்புக மெத்த*
*குடகா விரிக்கு வடபாலார்*
*திருவேரகத்தில் உறைவாய்! உமைக்கோர்*
*சிறுவா! கரிக்கும் இளையோனே!*

*என்று அருணகிரிப்பெருமான் இந்த வரலாற்றை அழகு தமிழில் பாடுகின்றார். குமரகுருபர சுவாமிகள் தம் கந்தர் கலிவெண்பாவில் இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாகப் பாடுகின்றார்.*

*சிட்டித் தொழிலதனைச் செய்வது எங்ஙன் என்றுமுனம்*
*குட்டிச் சிறையிருத்தும் கோமானே - மட்டவிழும்*
*பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப*
*முன்னம் பிரமம் மொழிந்தோனே!*

*என்பது அவர் வாக்கு. இந்தச் செய்தியைக் காட்சி வடிவில் காட்டும் சுதைப் படிமங்கள் இத்தலத்தில் உள்ளன. சந்நிதியின் வடக்குப்பகுதியிலும் கீழ்ப்பகுதியிலும் அமைந்த சுதைச் சிற்பக் காட்சிகள் புராண வரலாற்றை அழகுபடக் காட்டுகின்றன. தகப்பன்சாமி என்று புகழ்பெற்ற சுவாமிநாத சுவாமியின் பெருமையைக் கந்த புராணம் மனங்குளிரப் போற்றுகின்றது.*

*தலைமை எய்திய ஏரகத்து அறுமுகன் என்பது கந்த புராணத்தொடர். இந்த வரலாற்றால் பிரணவமந்திர சொரூபமே முருகப்பெருமான் தான் என்பது அறியப்படுகின்றது. பிரணவ மெய்மை முருகனே என்ற ஞானம் எய்தியபின் காலகாலருக்கு அஞ்சவேண்டியதில்லை என்றார் அருணகிரிநாதர்.*

*குருகடாட்ச கலா வேதாகம*
*பரமவாக்கிய ஞானாசாரிய*
*குறைவு தீர்த்தருள் சுவாமி!*

*என்பர் அம்முனிவர். ஓம் என்று சொல்லப்பெறும் அந்த ஒலியிலேயே ஆறெழுத்துகளும் அடங்கிவிடுகின்றன. ஓர் எழுத்தில் ஆறெழுத்து அடங்கியிருக்கும் சூட்சகம் அறிந்தவர்கள் ஞானமும் கல்வியும் வேண்டி இத்தலத்தில் வழிபட முருகன் அவற்றை அன்பர்களுக்கு அருள்கின்றான். வழிபடுவோர்க்கு வேண்டிய எல்லாம் தரும் வரப்பிரசாதியாகத் திகழ்கின்றார் சுவாமிநாத கடவுள்.*

*இத்தலத்திற்கு வந்த அருணகிரிநாதர் முருகனின் திருப்பாதங்களைத் தரிசிக்கும் பேறு பெற்றார்.*

*முதுமா மறைக்குள் ஒருமாபொருட்குள்*
*மொழியேயுரைத்த*
*தகையாது எனக்குள் அடிகாண வைத்த*
*தனி ஏரகத்தின் முருகோனே!*
*தருகாவிரிக்கு வடபாரிசத்தில்*
*சமர்வேல் எடுத்த பெருமாளே!*

*என்ற பாதகமலங்களைத் தரிசித்த பேறு போற்றுகின்றார். இத்தகைய திருத்தலத்தையும் திருமூர்த்தியையும் கண்டு வழிபடுவோர் காலன் வந்து வருத்தம் செய்யப் பெறாமல் யமபயம் நீங்குவர்.*

**திருக்கோயிலின் அமைப்பும் அழகும்**

*மனித உடம்பின் அமைப்பே ஆலயத்தின் தத்துவமாகக் கொள்ளப்பட்டது. வாயைக் கோபுரமாகவும், சீவனைச் சிவலிங்கமாகவும் திருமூலர் கூறுவார்.*

*சத்தியார் கோயில் இடவலம் சாதித்தான்*
*மத்தியானத்திலே வாத்தியம் கேட்கலாம்*
*தித்தித்த கூத்தும் சிவனும் வெளிப்படும்*
*சத்தியம் சொன்னோம் சதாநந்தி ஆணையே*

*என்றும் அவர் கூறுவார். சுவாமிமலை ஒரு செய்குன்றின் மேல் அமைந்த கோயிலாகும். இயற்கையான மலை இல்லாத இடத்தில் கட்டுமலை ஒன்று அமைக்கப்பெற்று அதன்மேல் கோயில் கட்டப்பட்டுள்ளது. தெற்குப் பார்த்ததாக அமைந்த ராஜகோபுரம் ஐந்து மாடங்களுடன் அமைந்துள்ளது. இக்கோபுரத்தில் சுதை உருவில் கந்தபுராண நிகழ்ச்சிகள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன.*

# திரு. ப. முத்துக்குமாரசுவாமி அவர்களின் "செந்தமிழ் முருகன்" என்னும் நூலிலிருந்து கட்டுரை

### சிவபெருமானுக்கு முருகன் உபதேசிக்கவில்லை

*ஏறக்குறைய 1600 பாடல்கள் பாடியுள்ள அருணகிரியார் ஏறக்குறைய 200 பாடல்களில் சிவபெருமான் ஒன்றும் அறியாதவர் என்றும் அவருக்கு முருகன் தான் எல்லாவற்றையும் போதித்தார் என்றும் திரும்பத் திரும்பச் சொல்லி வைத்திருக்கிறார்.*

*அருணகிரியாருக்கு முற்பட்ட திருமுருகாற்றுப்படை 315 வரிகள் கொண்டது. அப்பாட்டில் முருகன் உபதேசித்ததாகக் காணப்படவில்லை. பன்னிரு திருமுறைகளில் உள்ள முருகனைப் பற்றிய பாடல்களிலும் சிவபெருமானுக்கு உபதேசித்தார் என்ற குறிப்பில்லை.*

*உள்ளபடியே முருகன் சிவபெருமானுக்கு உபதேசித்திருந்தால், 10000க்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்ட கந்தபுராணத்தில் 1000 பாடல்களில் அருணகிரியார் விரித்துப் பாடியபடி ஒரு காண்டமே இயற்றி இருக்கலாம். அல்லது குறைந்தது ஒரு படலமாவது இயற்றியிருக்கலாம். இல்லையே.*

***கந்தபுராணப்படி முருகன் சிவபெருமானிடம் ஓங்காரத்தின் பொருள் தனக்குத் தெரியும் என்பதை அடக்கத்தோடு ஒப்புவித்தான் என்பதுதான் உண்மை.** இந்தச் செய்தி கந்தபுராணத்தில் "அயனை சிறை நீக்கு படல"த்தில் மூன்றே பாடல்களில் அடங்கிவிட்டது. அந்தப் பாடல்களில் சிவபெருமானுடைய பெருமிதமே வெளிப்படுகிறது.*

### கச்சியப்ப சிவாசாரியாரின் கந்தபுராணப் பாடல்கள்

*காமரு குமரன் சென்னிக் கதுமென உயிர்த்துச் செக்கர்*
*தாமரை புரையும் கையால் தழுவியே "அயனும் தேற்றா*
*ஓமென உரைக்கும் சொல்லின் உறுபொருள் உனக்குப் போமே*
*போமெனில் அதனை இன்னே புகல்" என இறைவன் சொற்றான்.*

*- 1260*

*(பொருள் : அழகுள்ள முருகனது உச்சியை சிவபெருமான் விரைவாக மோந்தார். தாமரை போன்ற தன்னுடைய கையால் சிவபெருமான் குழந்தை முருகனைத் தழுவிக் கொண்டு கேட்டார். "பிரமன் தெளியாத ஓங்காரத்தின் உட்பொருள் உனக்குத் தெரியுமா? தெரிந்தால் இப்போதே சொல் பார்க்கலாம்", முருகன் அளித்த பதில்)*

*முற்று ஒருங்கு உணர்ந்த ஆதி முதல் வகேள் உலகமெல்லாம்*
*பெற்றிடும் அவட்கு நீ முன் பிறர் உணராத ஆற்றால்*
*சொற்றதோர் இனைய மூலத்தொல்பொருள் யாரும் கேட்ப*
*இற்று என இயம்பலாமோ மறையினால் இசைப்பது அல்லால்.*

*- 1261*

*(பொருள் : சிவபெருமானாகிய நீங்கள் முற்றும் உணர்ந்தவர். ஒரே நேரத்தில் முற்றும் உணர்ந்தவர் (ஆன்மாக்கள் ஒரு நேரத்தில் ஒன்றைத்தான் அறியும்) ஆதியிலிருந்தே எல்லாருக்கும் முதல்வராக இருப்பவர். உலகங்களையெல்லாம் பெற்றவரான அம்பிகைக்கு ஓங்காரத்தை, பிறர் யாரும் இல்லாத தனிமையில் உபதேசித்தீர். அப்படிப்பட்ட மறைபொருளை நான் இங்கே இவ்வளவு பேர் கூடியிருக்கிற இடத்தில் இப்படிப்பட்டது ஓங்காரப் பொருள் என்று சொல்லலாமா? மறைவாகத்தானே சொல்லவேண்டும் என்றார்).*

*என்றலும் நகைத்து மைந்த எமக்கு அருள் மறையினால் என்னாத்*
*தன் திருச்செவியை நல்க சண்முகன் குடிலை என்னும்*
*ஒன்றொரு பதத்தின் உண்மை உரைத்தனன் உரைத்தல் கேளா*
*நன்று அருள்புரிந்தனன் என்ப ஞான நாயகனாம் அண்ணல்.*

*- 1262*

*(பொருள் : முருகன் அப்படிச் சொன்னதும் சிவபெருமான் புன்னகை செய்தார். "சரி எனக்கு மட்டும் கேட்கும்படியாக மறைவாகச் சொல்" என்று தன் காது கொடுத்துக் கேட்டார். ஆறுமுகன் குடிலை என்ற ஓங்காரத்தின் உட்பொருளைச் சொன்னார். கேட்ட சிவனார் ''நன்றாகச் சொல்லியிருக்கிறான்'' என்று பாராட்டினார். சிவபெருமான் ஞான நாயகர். ஞானத்துக்கே தலைவர்).*

*இந்த மூன்று பாடல்களில் அடங்கிய செய்தியைத் தன்னுடைய கற்பனைத் திறத்தால், புலமை வளத்தால் அடியோடு மாற்றம் செய்து பல படியாகப் பெருக்கி முருகனுக்கு ஏற்றமும் சிவபெருமானுக்கு இழுக்கும் கற்பித்துவிட்டார் அருணகிரியார்.*

*அருணகிரியார் கந்தபுராண ஆசிரியருக்கு முற்பட்டவர் என்றும் பிற்பட்டவர் என்றும் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. அருணகிரியார் முற்பட்டவரானால் அவரைக் கச்சியப்பர் மறுத்தார் என்றும், பிற்பட்டவரானால் அவர் கச்சியப்பரை மறுத்தார் என்றும் கொள்ளலாம்.*

*சிவபெருமான் முழுமுதல் இறைவன் என்று நால்வர் மற்றும் சேக்கிழார் வழி உணர்ந்து கொண்ட சிவனடியார்கள் திருப்புகழை, அருணகிரியாரை எப்படிப் பாராட்ட முடியும். முருகனை குருவாகவும் சிவபெருமானைச் சீடராகவும் ஏற்றுக் கொள்ள முடியுமா?*

*திருப்புகழை மதிப்பவர்கள் சிவபெருமானை எளியவராகத் தானே கொள்ளுவார்கள். சீடரை விட குருதானே உயர்ந்தவர். இப்படி முருகனடியார்களுக்குள்ளும் சிவனடியார்களுக்குள்ளும் ஒரு பெரும் பிரிவை ஏற்படுத்திவிட்டாரே அருணகிரியார்'' என்று ''திருமுருகன்'' இதழில் தொகுத்தளித்துள்ளார் ஆறுமுக அடிகளார்.*

## திருவேரகத்தைப் பற்றி அருளப்பட்ட நூல்கள்

| வ.எண் | நூலின் பெயர் | நூலாசிரியர் பெயர் |
|---|---|---|
| 1. | திருப்புகழ் (38 பாடல்கள்) | அருணகிரிநாதர் |
| 2. | திருஎழுகூற்றிருக்கை | அருணகிரிநாதர் |
| 3. | கந்தர் சஷ்டிக்கவசம் | தேவராய சுவாமிகள் |
| 4. | திருஏரக நவரத்தின மாலை | கடுக்கண் தியாகராசதேசிகர் |
| 5. | துதிமஞ்சரி | |
| 6. | திருவேரகச் சதகம் | |
| 7. | சுவாமிநாதன் பிள்ளைத்தமிழ் | கோவை நடேசகவுண்டர் |
| 8. | திருவேரக நான்மணிமாலை | திரிசிராபுரம் சுப்பராயபிள்ளை |
| 9. | திரு ஏரக யமக அந்தாதி | கபித்தலம் வேலையர் |
| 10. | திரு ஏரக வெண்பா அந்தாதி | |
| 11. | திரு ஏரக முருகன் பதிகம் | |
| 12. | படைவீட்டுப் பதிகம் | |
| 13. | கந்த புராணம் | கச்சியப்ப சிவாசாரியர் |
| 14. | சுவாமி நாதர் நவமணி மாலை | |
| 15. | சுவாமிநாத பஞ்சரத்னம் | வடமொழி நூல் |
| 16. | தனி வெண்பா | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் |

## நான்காவது படைவீடு-சுவாமி மலை (திருஏரகம்)

*சுவாமிமலை கும்பகோணத்திற்கு மேற்கே சுமார் ஐந்து மைல் தொலைவில் அமைந்துள்ளது. இலக்கியத்தில் திருமுருகாற்றுப்படையிலும், சிலம்பிலும் ஏரகம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.*

*ஏரகத்து முருகன் கோவிலில், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றம் என்னும் ஆறு தொழில் வழுவாதவரும், நற்குடியில் பிறந்தவரும், நாற்பத்தெட்டு ஆண்டுகள் பிரமசரிய விரதம் காத்த வேதியர் மந்திரங்கள் கூற ஈரவுடையை அணிந்த அருச்சகர் முருகனுக்குரிய ஆறெழுத்து மந்திரத்தைச் சொல்லி அர்ச்சனை செய்தார் எனத் திருமுருகாற்றுப்படை கூறுகிறது. இந்நூலுக்கு உரைகண்ட நச்சர் திருவேரகத்தை மலைநாட்டிலுள்ள திருப்பதி எனக் கூறியிருப்பதால் திருவேரகம் என்பது சுவாமிமலையைக் குறிக்காது என்பர்.*

*சிலம்பில் குன்றக் குரவையுள்,*

*"சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்*
*ஏரகமும் நீங்கா இறைவன்"*

*என முருகன் திருப்பதிகளுள் அக்காலச் சிறப்புப் பெற்றவை குறிக்கப்பட்டுள்ளன. சிலம்பின் அரும்பத உரையாளர் வெண்குன்றைச் சுவாமிமலை எனக் கூறியுள்ளார். அருணகிரியாரும், சுவாமிமலைதான் ஏரகம் என்று பல பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்.*

### சுவாமிமலை முருகனின் தோற்றமும் சிறப்பும்

*மூலத்தானத்தில் சுவாமிநாதப்பெருமான் சுமார் ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாக வலத்திருக்கரத்தில் தண்டம் பிடித்தும், இடத்திருக்கரத்தை தொடையில் அமைத்தும் கருணை வழியும் திருமுகத்துடன் பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் வகையில் யோககுருவாகத் தரிசனம் அருளுகின்றார்.*

*சுவாமிமலையின் மலையுச்சியை அடைவதற்கு அறுபது படிக்கட்டுகள் உள்ளன. இப் படிக்கட்டுகள் தமிழ் வருடங்கள் அறுபதின் அதி தேவதைகளைக் குறிக்கின்றன. இதனை குடந்தைப் புராணம்,*

*வருபிரபவ முதல் வருட தேவர்கள்*
*திருவளர் அம்மலைச் செறிந்த பல்படி*

*என வருணிக்கிறது.*

*சிவபெருமான் ஞானோபதேசம் பெற்ற தலமாகத் திகழ்வதால்* ***இங்கு பூணூல் அணியும் சடங்கு நிகழ்த்துதல் மிகவும் சிறப்பாகக் கருதப்படுகிறது. திருக்கார்த்திகையும் சைத்ரோத்சவமும் பெருவிழாவாகக் கொண்டாடப் படுகின்றன.***

## அருணகிரி சுவாமிகள் அருள்வாக்கில் சுவாமிமலை

*சுவாமிமலையில் ஆண்டவரைத் தரிசித்து அன்று சம்பந்தாண்டானொடு செய்த வாதில் கந்தப் பொழில்திகழ் குருமலை மருவிய பெருமாளே! சந்தச் சபை தனில் எனதுளம் உருகவும் வருவாயே' (210) என அடியேன் அழைத்த பொழுது வந்து உதவி வெற்றியளித்தவர் இந்தக் குருபரமூர்த்தி தானே என்னும் மனமகிழ்ச்சியுடன் சில நாள் அந்தத் தலத்தில் தங்கி முருக வேளைப் பாடிப் பரவினார். சுவாமிகளுடைய திருவாக்கால் தான் திருவேரகம் என்னும் படை வீட்டுத் தலம் சுவாமிமலை எனத் தெளிவு பெற விளங்கலாயிற்று. ஐயப்பாடே இல்லாது "ஏரக வெற் பெனும் அற்புத மிக்க சுவாமி மலைப்பதி" என 197, 198 எண்ணுள்ள பதிகங்களில் விளக்கியுள்ளார்.*

### சுவாமிமலையில் பாத தரிசனப் பேறு

*இத்தலத்தில் அருணகிரியார்க்கு முருக வேளின் பாத தரிசனம் கிடைத்தது. இது,*

*தகையா தெனக்குள் அடிகாண வைத்த*
*தனியேரகத்தின் முருகோனே (199)*

*என்னும் பதிக அடியால் விளக்குகின்றது.*

*ஆண்டவனைப் (பரமாத்மாவை) நாயகனாகவும் தன்னை (ஜீவாத்மாவை) நாயகியாகவும் பாவித்துப் பரமாத்மாவின் மேலுள்ள காதலை வெளிப்படுத்தும் முறையிற் பாடுகின்ற நூல் "உலா" எனப்படும். பரமாத்மாவை நாயகியாகவும் ஜீவாத்மாவை நாயகனாகவும் பாவித்துப் பரமாத்மாவின் மீதுள்ள காதலைப் புலப்படுத்தும் வகையிற் பாடுகின்ற நூல் ''கோவை'' எனப்படும். பரமாத்மாவைக் குழந்தையாகப் பாவித்து அதன் மீதுள்ள காதலைத் தெரிவிக்கின்ற நூல் 'பிள்ளைத்தமிழ்' என்னும் நூலின் பாற்படும். திருவேரகத்துத் திருப்புகழில் ''செகமாயை'' என்னும் 199-ஆம் பதிகம் முருகரைப் பிள்ளைக் குழந்தையாகப் பாவித்துப் 'பிள்ளை முருகா! முத்தம் தா! என வேண்டும் பிள்ளைத் தமிழ் - முத்தப் பருவ இயல்பிற் கடவுளைப் பரவினதாகும். உலா வகையில் தன்னை நாயகியாக வைத்துப் பாடிப் பரவியது "தெருவினில் நடவா" என்னும் 218-ஆம் பதிகம். 207 ஆம் பாட்டிற் சுராதிபதி, மால், அயன்.....சலாமிடு பெருமாள்' என வருவதில் 'சலாம்' என்னும் ஹிந்துஸ்தானி மொழியுள்ளதால் முன் 35-ஆம் தலமாகிய திருநள்ளாற்றுப் பதிகத்தில் "சபாஷ்" என்பதைக் குறித்ததுபோல முஹம்மதிய அரசாட்சி ஏற்பட்ட பின் சுவாமிகள் காலம் என்பது தெரியக் கிடக்கின்றது. காவேரிக்கு நேர் வடக்கில் உள்ள தலம் திருவேரகம் (சுவாமி மலை) (200, 205, 209, 220)*

என்பதும், அது ஞான தபோதனர்கள் சேரும் தலம் (201, 202) என்பதும், இந்திரன், திருமால், பிரமன் வணங்கிய தலம் (195, 207, 219) - என்பதும், சதகோடி உதய சூரியர்களின் உருவொளி கொண்டது வேலாயுதம் என்பதும் (207), சிவபிரான் நின்று உபதேசங் கேட்க முருகவேள் குருவா யமர்ந்து யோகத்திருந்து உபதேசித்த தலம் (199, 200, 215, 219, 224, 226) என்பதும், (கயிலை மலையின்) கொடு முடி சுவாமி மலை (221) என்பதும், பஞ்சாக்ஷர தியானத்தின் அவசியமும் (207), வள்ளியம்மை பொருட்டு முருகர் காதல் காட்டிய ஆடலும் (209), அவர் செட்டி வடிவுடன் வள்ளியம்மை பால் வந்த லீலையும் (215), ராமரின் பாணம் யார் யாரை அட்டது என்பதும் (231) சுவாமிமலைப் பதிகங்களால் அறியக் கிடக்கின்றன. பின்னும் நக்கீரரை மிகப் பாராட்டியுள்ள பதிகம் "கடிமா மலர்க்குள்" (203) என்பது. நக்கீரரது பாட்டின் வளப்பமும், அவரது வாய்மைச் சொல்லும், அவருக்கு முருகபிரான் இலக்கணங்கள் போதித்த விஷயமும், 'உலகம் உவப்ப' என்று அடி மோனையுடன் அவருக்கு முருகவேள் அடி எடுத்துக் கொடுத்த அருட் ப்ரசாதமும் இப் பதிகத்திற் போற்றப்பட்டுள. காகத்துக்கு ஒருவிழி வந்த கதை "பாதிமதி நதி" என்னும் 225ஆம் பாடலிற் குறிப்பிக்கப்பட்டுள்ளது. நோய் வகைகளைக் கூறிக் காம நோயால் பரத்தையர் சம்பந்தத்தால் வரும் நோய்களை 'மாதர் தரு பூஷணங்கள்' எனப் பரிகசித்துள்ள பதிகம் 'வாதமொடு' என்னும் 228 ஆம் பதிகம். சமயத்துக்குத் தக்கபடி வேசையர் காலைப் பிடித்து வணங்கினும் வணங்குவர்; மயிரைப் பிடித்துப் பிணங்கினும் பிணங்குவர் என்பதைக் 'காலு மயிரும்பிடித்து' என 216 ஆம் பாடலில் விளக்கினர். 232ஆம் பாடலில் நூறு (அசுவமேத) யாகம் முடித்தவர்களுக்கு இந்திர பதவி கிடைக்கும் என்னும் விஷயம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இத்தலத்துப் பதிகங்களில் மனப்பாடஞ் செய்யத்தக்க அருமை அடிகள்:-

1. பதினா லுலகத்தினில் உற்றுறு பத்தர்கள்
   ஏது நினைத்து மெத்த அளித்தருள் இளையோனே (197)
2. சுராதிபதி மாலயனு மாலொடு சலாமிடு
   சுவாமிமலை வாழும் பெருமாளே (207)
3. 'நீ வேறெனா திருக்க நான்வே றெனாதிருக்க
   நேராக வாழ்வதற்கு உன் அருள் கூர' (220)

சுவாமி மலையில் இருந்தபொழுது அருணகிரியார் ஸ்ரீசம்பந்தப் பெருமான் அருளியுள்ள திருவெழு கூற்றிருக்கை போல ஒர் அருமைத் திருவெழு கூற்றிருக்கைச் செய்யுளும் பாடினார்.

அறுபடை வீடுகளுள் இத்தலம் குருஸ்தானமாக விளங்குவதால் குருகிரி, குருமலை என்று போற்றினார். இத்தலத்தில் அருணகிரிநாதருக்கு முருகவேளின் பாததரிசனம் கிடைத்தது.

''செகமாயை'' என்று தொடங்கும் இத்திருப்புகழில் கந்தனைக் குழந்தையாகப் பாவித்து முத்தம் தர வேண்டுகிறார் முத்தமிழ் சந்தக் கவிராஜர். இப்பாடல் பிள்ளைத்தமிழின் முத்தப்பருவத்தை நினைவுபடுத்துகின்றது. மகப்பேறு பெற இத்திருப்புகழைப் பாராயணம் செய்தல் வேண்டும் என்பார் ஸ்ரீசச்சிதானந்த வள்ளிமலை சுவாமிகள்.

செகமாயை உற்றென் அகவாழ்வில் வைத்த
திருமாது கெர்ப்பம் உடல்ஊறித்
தெசமாத முற்றி வடிவாய்நி லத்தில்
திரமாய ளித்த பொருளாகி
மகவாவின் உச்சி விழியாந நத்தில்
மலைநேர்பு யத்தில் உறவாடி
மடிமீத டுத்து விளையாடி நித்த
மணிவாயின் முத்தி தரவேணும்
முகமாய மிட்ட குறமாதி னுக்கு
முலைமேல் அணைக்க வருநீதா
முதுமாம றைக்குள் ஒருமாபொ ருட்குள்
மொழியேஉ ரைத்த குருநாதா
தகையாதெ னக்குன் அடிகாண வைத்த
தனிஏர கத்தின் முருகோனே
தருகாவி ரிக்கு வடபாரி சத்தில்
சமர்வேல்எ டுத்த பெருமாளே.

இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் பாவித்து இறைவன் மேலுள்ள காதலை வெளிப்படுத்தும் முறையில் பாடும் நூல் அகப்பொருள் பாடலாக "தெருவினில் நடவர்" என்னும் இத்தலத்திருப்புகழ் அமைகின்றது.

சுவாமிமலையில் முருகன் எப்படி அடியார்களுக்கு அருள் வல்லார் என்பதை,

"பதினாலுகத்தினில் உற்றுறு பத்தர்கள்
ஏதுநினைத்து மெத்த அளித்தருள் இளையோனே"

(கோமனவெற்பினை...)

என்று அருணகிரிநாதர் அற்புதமாகக் காட்டுவார்.

அருணகிரிநாதர் 40 திருப்புகழ்ப் பாக்களால் இங்கே சுவாமிமலைநாதனைப் பரவியுள்ளார். அப்பாடல்கள் சுவை மிகுந்தவை.

காவிரியின் வடகரையிலுள்ளது இத்தலம் என்பதை "காவேரி வடகரைச் சுவாமிமலை", "காவேரி நேர் வடக்கிலே வாவி பூமணத்த காமார் சுவாமி வெற்பு", ''ஏரகத்தின் முருகோனே, தருகாவிரிக்கு வடபாரிசத்தில் சமர்வேலெடுத்த பெருமாளே'', ''குடகாவிரிக்கு வடபாலார் திருவேரகத்தில் உறைவாய்'', ''காவிரியின் வடபுறஞ் சுவாமிமலை மிசை விளங்குதேவர் பெருமாளே'' என்னும் இத்தலத் திருப்புகழ் பகுதிகள் உறுதி செய்கின்றன. இத்தலம் ஞான தபோதனர்கள் சேரும் சிறப்புடையது என்பதை "ஞானத் தபோதனர்கள் சேரும் சுவாமிமலை வாழும் பெருமாளே" என்று பாடுகிறார். இந்திரன், திருமால், பிரமன், வணங்கிய தலம் இது என்றும், வேலாயுதம் சதகோடி உதய சூரியர்களின் உருவொளி கொண்டது என்றும் சிவபிரான் நின்று உபதேசம் கேட்க முருகவேள் குருவாயமர்ந்து யோகத்திலிருந்து உபதேசித்த தலம் இது என்றும், கயிலை மலையின் கொடுமுடியே சுவாமிமலை என்றும், பஞ்சாட்சர தியானம் அவசியம் என்றும், இராமர் பாணம் யார் யாரைக் கொன்றது என்றும் இத்தலத்தில் திருப்புகழ்ப் பகுதிகள் காட்டுகின்றன.

நோய்வகைகளைக் கூறிக் காமநோயால் பரத்தையர் தொடர்பால் வரும் நோய்களை "மாதர்தரு பூஷணங்கள்" எனப் பரிகாசமாக "வாதமொடு" எனத் தொடங்கும் திருப்புகழில் அருணைவள்ளல் பேசுவார். கீழ்க்கண்ட பாடல் வரிகள் அருமையானவை.

"நீ வேறெனாதிருக்க நான் வேறெனாதிருக்க
நேராக வாழ்வதற்கு உன் அருள்கூர
நீடார் சடாதரத்தின் மீதே பராபரத்தை
நீகாண் எனாவனைச் சொல் அருள்வாயே"

(- நாவேறு...)

"தருணமிதையா மிகுத்த கனமதுறுநீள் சவுக்ய
சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமை சிவஞான முத்தி பரகதியும் நீகொடுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமுமே துதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம் அநேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழக திருவேரகத்தின் முருகோனே!

(- சரணகமலாயத்தை..)

*துவாதச புயாசல சடாநந வராசிவ*
*சுதா எயினர் மானன் புடையோனே*
*சுராதிப திமாலய னுமாலொடு சலாமிடு*
*சுவாமிமலை வாழும் பெருமாளே*

*(- அவாமருவினா...)*

*சுவாமிமலையில் இருந்த பொழுது அருணகிரிநாதர் திருஎழுகூற்றிருக்கை (இரதபந்தம் - சித்திரக்கவி) ஒன்றும் பாடியுள்ளார். கும்பகோணம் திருப்புகழில் சித்திரத் தமிழால் உந்தன் செம்பொன் ஆர்வத்தைப் பகர்வேனோ என்று கேட்ட அருணகிரி நாதர் அடுத்துள்ள சுவாமிமலையில் திருஎழுகூற்றிருக்கையாம் சித்திரக்கவி பாடி தன் எண்ணம் நிறைவேறும் பேறு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. திருப்புகழ் சாரமாக விளங்கும் இக்கவி இத்தலத்தில் இரதபந்தமாக சென்னை திருவல்லிக்கேணி முருகன் திருவருட்சங்கத்தினர் முயற்சியால் சலவைக் கல்லில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது மற்றொரு சிறப்பாகும். ஒவ்வொரு ஆண்டும் சென்னை பெரம்பூர் சண்முகாநந்த சபையினர் மேமாதம் முதல் தேதியன்று சிறப்பு அபிஷேகம், சண்முகார்ச்சனை முதலிய வைபவங்களுடன் சிறுவாபுரி முருகன் அபிஷேகக் குழுவினரால் (சென்னை) திருப்புகழ்த் திருப்படிவிழா விசேஷமாக நடைபெற்று வருகின்றது.*

உ

சிவமயம்

# திருஎழுகூற்றிருக்கை

தொன்மையாம் நம் தமிழ்மொழியில் நான்கு கவி வகைகள் உள்ளன. அவை ஆசுகவி, மதுரகவி, விஸ்தாரக்கவி, சித்திரகவி என்பனவாகும். சித்ரக்கோடுகள் வரைந்து அவற்றில் எழுத்தையோ சொல்லையோ எழுதி உருவாக்கப்படும் பாட்டு சித்திரக்கவியாகும்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று தமிழ் இலக்கணங்கள் ஐந்து. அவற்றுள் அணி இயலை சமஸ்கிருதத்தில் "அலங்கார சாஸ்திரம்" என்பர். அலங்கார சாஸ்திரத்தைப் பற்றி அக்னி புராணம் சிறப்பாகப் புகழ்ந்து பேசுகிறது. இந்த அலங்கார சாஸ்திர பெயர் பற்றியே தமிழ்மொழியில் எழுந்த அணி இலக்கண நூல்கள் தண்டி அலங்காரமும் மாறன் அலங்காரமும் ஆகும். இந்த அலங்கார நூலுள் ஒரு பகுதியில் சித்ரகவிகள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளன.

"ஏக பாதமும் எழுகூற்றிருக்கையும்
காதை கரப்பும் கரந்துறை செய்யுளும்
கூட சதுக்கமும் கோமூத்திரியும்
இவை முதலான சித்திரக் கவியே"

பொருள் அமைதியும், யாப்பு அமைதியும் கொண்டனவாய் சித்திரங்களுள் அமைக்கப்படுமாறு பாடப்பெறும் கவிகள் "சித்திரக் கவிகள்" எனப்படும். இவைகளைப் பாட, பெரும் புலமை மிக்கவர்களால்தான் இயலும். சித்திரங் களுடன், பாடல்களுக்குரிய பொருள்களுடன், விளக்கங்களுடன், தண்டியலங்காரத்திலும், மாறன் அலங்காரத்திலும், மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய திருநாகைக் காரோண புராணத்திலும் இத்தகைய சித்திரகவிகள் காணப்படுகின்றன.

சித்திரகவிகள் வகையில் ஏகபாதம், மாலைமாற்று, சதுரபந்தம், சக்கரமாற்று, சுழிகுளம், நாகபந்தம், மத்தளபந்தம், முரசபந்தம், சருப்பதோபத்திரம், கோமூத்திரி, எழுகூற்றிருக்கை முதலியன பல உள்ளன. ஏழாம் நூற்றாண்டில் அவதரித்த திருஞானசம்பந்தசுவாமிகள் அம்பிகையின் ஞானப்பால் உண்டு அருளிச்செய்துள்ள ஏகபாதம், மாலைமாற்று, திருச்சக்கரமாற்று, ஆவின் பாய்ச்சல் (கோமூத்திரி), திருஎழுகூற்றிருக்கை முதலிய சித்ரகவிகள் மூல இலக்கியங்களாகத் திகழ்கின்றன.

***திருஎழுகூற்றிருக்கை :*** *சித்திர கவிகளுள் ஒன்றான திருஎழுகூற்றிருக்கையில் திரு என்பது சிறப்புப் பற்றி வரும் அடைமொழி. ஏழுகூறு* (Seven Divisions) *அமைந்திருத்தலின் எழுகூற்றிருக்கை எனப்பட்டது. இது 96 வகை பிரபந்தங்களில் ஒன்றாகும். இதனை ரதபந்தத்தில் (தேர்வடிவில்) அமைப்பது கவிமரபு ஆகும். இந்த வகையில் திருஞானசம்பந்தர் அருளியது சீகாழிக்குரியதும், திருமங்கையாழ்வார் அருளியது திருக்குடந்தைக் (கும்பகோணம்)குரியதும், நக்கீரர் அருளியது திருஆலவாய்க் (மதுரை) குரியதும், அருணகிரிநாதர் அருளியது சுவாமிமலைக்குரியதும் ஆக இந்த நான்கு திருஎழுகூற்றிருக்கைகள் மிகப்பழமையானதும் முதன்மையானவையும் ஆகும்.*

*நக்கீரர் அருளியதை மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலிலும், திருமங்கையாழ்வார் அருளியதைக் கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி திருக்கோயிலிலும், திருஞானசம்பந்தர் அருளியதைக் கும்பகோணம் ஸ்ரீ ஆதிகும்பேசுவரர் திருக்கோயிலிலும், அருணகிரிநாதர் அருளியதைச் சுவாமிமலை, திருவண்ணாமலை ஆகிய இரு கோயில்களிலும் சலவைக்கல்லில் தேர்வடிவில் அமைத்துள்ளது கண்டு இன்புறத்தக்கதாகும்.*

***ரதபந்தம் :*** *மாறன் அலங்கார நூல் எழுகூற்றிருக்கைப் பாடும் இலக்கணத்தை குறிப்பிடுகிறது.*

> *"ஒன்று முதலா ஓரேழ் ஈறாச்*
> *சென்ற எண் ஈரேழ் நிலந்தொறும் திரிதா*
> *எண்ணுவ தொன்றாம் எழுகூற்றிருக்கை"*

*தேரின் உருவம் தோன்றும்படி நேர்க்கோடிட்டுக் கட்டங்கள் போட்டு அவற்றின் எண் முறையைப் பின்பற்றி வரும் பாடல் பகுதிகளை அடக்க வேண்டும். தேருக்கு மேற்பாகம் கீழ்ப்பாகம் இருப்பனபோல் இந்த ரதபந்தத்திலும் இருபாகம் கொள்ளவேண்டும். ஒவ்வொரு பாகத்திலும் ஏழுகூறுகள் இருக்குமாறு கோலவேண்டும். அப்படி அமைக்கும்போது முதற்கூறு மூன்று அறையும், இரண்டாம் கூறு ஐந்து அறையும், மூன்றாம் கூறு ஏழு அறையும், நான்காம் கூறு ஒன்பது அறையும், ஐந்தாம் கூறு பதினோரு அறையும், ஆறு, ஏழாம் கூறுகள் பதின்மூன்று அறையும் உடையதாய் இருக்கும். இப்படி நோக்க ஒன்றுக்கொன்று இரண்டிரண்டு அறைகள் மேற்படக் காணப்படும். (எண்களின் நிரப்புப்படம் கீழே காண்க). (இவை நக்கீரர், திருஞானசம்பந்தர், திருமங்கையாழ்வார் ஆகியோர் அருளிச்செய்துள்ள திருவெழுகூற்றிருக்கைகளில் அமைந்துள்ள அமைப்பாகும். ஆனால் அருணகிரிநாதர் அருளிய திருவெழு கூற்றிருக்கையில் சிறிது மாற்றம் உள்ளது.*

*கீழே தனியாகக் காட்டப்பட்டுள்ளது).*

*மேற்கூறிய அடைவினைப் பின்பற்றி கீழ்ப்பாகத்திலும் கோலவேண்டும். அப்போது மேற்பாகத்தில் உச்சி* (Top)*யிலிருந்தும், கீழ்ப்பாகத்தில் அடி* (Base)*லிருந்தும் இந்தக்கிரமம் அமைந்திருப்பதைக் காணலாம்.*

*இந்த நிரப்புப் படத்தில் மேற்பாகத்தில் எண்களை அந்தந்தக்கூறு அறைகளில் நிரப்பப்பட்டுள்ளதை உற்று நோக்கின் $1^2$, $11^2$, $111^2$, $1111^2$, $11111^2$, $111111^2$, $1111111^2$ என்ற கணித நுண்மையை* (Square of the numbers) *ஏறி இறங்கும் (ஆரோஹண அவரோஹண) முறை வைப்பினில் காணலாம். மற்றும் ஒவ்வொரு கூறிலுள்ள அறையின் எண்கள் மொத்தத்தையும் கூட்டினால் 1, 4, 9, 16, 25, 36, 49 என ஆகும். அவை முறையே $1^2$, $2^2$, $3^2$, $4^2$, $5^2$, $6^2$, $7^2$ என அமையும் நுண்மையும் சுவைக்கலாம். மேலும் இந்த எண்கள் தேரைச் சூழநின்று தொங்கல் மாலைகள் போலத் தூக்கி நிற்கின்ற பாங்கினையும் ரசிக்கலாம்.*

*எண்களின் நிரப்பு - மேற்பாகம், கீழ்ப்பாகம் இரண்டிலும் (சம்பந்தர், நக்கீரர், திருமங்கையாழ்வார் அருளியவை)*

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 | 1 | | | | | |
| | | | | 1 | 2 | 3 | 2 | 1 | | | | |
| | | | 1 | 2 | 3 | 4 | 3 | 2 | 1 | | | |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 4 | 3 | 2 | 1 | | |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| | | | | | | | | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 4 | 3 | 2 | 1 | | |
| | | | 1 | 2 | 3 | 4 | 3 | 2 | 1 | | | |
| | | | | 1 | 2 | 3 | 2 | 1 | | | | |
| | | | | | 1 | 2 | 1 | | | | | |

*எண்களின் நிரப்பு - அருணகிரிநாதர் எழுகூற்றிருக்கையில் உள்ளபடி மேற்பாகம் மட்டும்*

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 | | | | | | |
| | | | | | 1 | 2 | 1 | | | | | |
| | | | | 1 | 2 | 3 | 2 | 1 | | | | |
| | | | 1 | 2 | 3 | 4 | 3 | 2 | 1 | | | |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 4 | 3 | 2 | 1 | | |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |

*திரு எழுகூற்றிருக்கை பாடியுள்ள அனைவரும் மேற்காட்டிய எண்முறையிலேயே தத்தம் பாடலில் சொற்கள் அமையும் படியும் பொருள் சிறக்கும்படியும் யாத்திருக்கும் சாமர்த்தியம் மிகவும் பாராட்டுதற்குரியது. இதனில் வரும் சொற்கள் தமது சப்த ஆற்றலால் ஆயினும், அர்த்த ஆற்றலால் ஆயினும் எண்களைக் குறிக்குமாறு தொகுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இது எல்லா எழுகூற்றிருக்கைகளுக்கும் பொருந்தும்.*

*இனி திரு எழுகூற்றிருக்கை வகையில் சிறப்புறக் கவிபாடியவர்கள் திருஞானசம்பந்தர், திருமங்கையாழ்வார், நக்கீரர், அருணகிரிநாதர், திருக்குருகைப் பெருமாள் கவிராயர் ஆகியோர். இவை ஆசிரியப்பாவில் அமைக்கப்பட்டவை.*

*சென்ற 19ஆம் நுற்றாண்டில் வாழ்ந்த வண்ணச்சரபம் ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் திருஎழுகூற்றிருக்கை தவிர எண்கூற்றிருக்கை, ஒன்பது கூற்றிருக்கை, ஒருபது (தசாங்கக்) கூற்றிருக்கை என பன்னிரண்டு பாடல்களை அறுவகைச் சமயங்களுக்கும் அருளியுள்ளார். எட்டு, ஒன்பது, ஒருபது கூற்றிருக்கை ஆகிய வகைகள் இதுவரை வண்ணச்சரபம் தவிர வேறு ஒருவராலும் இயற்றப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

- வலையப்பேட்டை ***ரா. கிருஷ்ணன்***

## சுவாமிமலையில் அருணகிரி நாதசுவாமிகள் அருளிய திருஎழுகூற்றிருக்கை

ஓர்உரு(வு) ஆகிய தாரகப் பிரமத்(து)
ஒருவகைத் தோற்றத்(து) இருமர(பு) எய்தி
ஒன்றாய் ஒன்றி இருவரில் தோன்றி
மூவா(து) ஆயினை!
இருபிறப் பாளரின் ஒருவன் ஆயினை!
ஓராச் செய்கையின் இருமையின் முன்னாள்
நான்முகன் குடுமி இமைப்பினில் பெயர்த்து
மூவரும் போந்து இருதாள் வேண்ட
ஒரு சிறை விடுத்தனை!
ஒரு நொடி அதனில் இருசிறை மயிலின்
முந்நீர் உடுத்த நானிலம் அஞ்ச
நீவலம் செய்தனை!
நால்வகை மருப்பின் மும்மதத்(து) இருசெவி
ஒருகைப் பொருப்பன் மகளை வேட்டனை!
ஒருவகை வடிவினில் இருவகைத்(து) ஆகிய
மும்மதன் தனக்கு மூத்தோன் ஆகி
நால்வாய் முகத்தோன் ஐந்துகைக் கடவுள்
அறுகு சூடிக்(கு) இளையோன் ஆயினை!
ஐந்தெழுத்(து) அதனில் நான்மறை உணர்த்தும்
முக்கட் சுடரின்ஐ இருவினைக்கு மருந்துக்(கு)
ஒரு குரு ஆயினை!
ஒருநாள் உமைஇரு முலைப்பால் அருந்தி
முத்தமிழ் விரகன் நாற்கவி ராஜன்
ஐம்புலக் கிழவன் அறுமுகன் இவன்என
எழில்தரும் அழகுடன் கழுமலத்(து) உதித்தனை!
அறுமீன் பயந்தனை! ஐந்தரு வேந்தன்
நான்மறைத் தோற்றத்து முத்தலைச் செஞ்சூட்(டு)
அன்றில் அம்கிரி இருபிள வாக
ஒரு வேல் விடுத்தனை!
காவிரி வடகரை மேவிய குருகிரி இருந்த
ஆ(று) எழுத்(து) அந்தணர் அடியினை போற்ற
ஏரகத்(து) இறைவன் என இருந் தனையே.

## *திருஎழுகூற்றிருக்கை - விளக்கம்*

*"திரு - எழு - கூற்று - இருக்கை எனப் பிரிவதாகித் திரு - முத்தித் திரு - முத்தியின்பம், எழு - எழுகின்ற - முத்தியின்பத்தை எழுப்புகின்ற, கூற்று - சொற்களின், இருக்கை - இருப்பிடம் எனவும் பொருள் தருவதாகி, லக்ஷ்மீகரமும் வீட்டின்பமும் தருதற்கு இருப்பிடமான திருப்பாடல் இது என்பது இப்பாடலின் பெயரளவிலேயே விளங்கா நிற்கும்".*

*- திருப்புகழ் பாராயணத் தவநெறி திருமுறை*
*ஆறாம் பதிப்பு - 1997 பக்க 92*

## *தெளிவுரை*

**ஓர் உருவு ஆகிய ................. ஒருவன் ஆயினை!**

*ஓம் என்னும் பிரணவ சொரூபமாகிய பரப்பிரம்மத்தினிடத்து ஒப்பற்ற வகையில் தோன்றித் தாய்மரபு, தந்தை மரபு இரண்டையும் விளக்கும் வண்ணம். (இரு மரபையும் ஒன்றாக்கியது போல) (ஆறு தனித்தனி சேய்களாகிப் பின்) ஒரு சேயாக ஒன்றி மூப்பு என்பதின்றி (என்றும் இளையோனாக) விளங்குகின்றாய்! அந்தணர்களில் ஒப்பற்றவனாக இருக்கின்றாய்!)*

*(பரமேஸ்வரன் 'ஸத்', அம்பாள், 'சித்' அவர்களது அன்பு தான், அருள்தான் நம்மைக் கடைத்தேற்றப் போவது இருவரது அன்பும் பொங்கிப் பெருகிக் கலந்த இடம்தான் அவர்களுடைய செல்லப் பிள்ளையான சுப்பிரமண்யன். உள்ளே ஒன்றாக இருந்த அன்பு இரண்டாகப் பிரிந்து மறுபடியும் ஒன்றாகக் கலந்து நாம் உபாசிப்பதற்குச் சுலபமாக சுப்ரமண்யமாக மூர்த்திகரித்திருக்கிறது. ஸத் - சித் - ஆனந்தம் என்பார்கள். அதுதான் பரம்பொருள். இந்த ஆனந்தமே சுப்ரமண்யர். சிவம் என்னும் மங்களமும் அம்பாள் என்கிற காருண்யமும் கலந்த பரம உத்கிருஷ்டமான ஸ்தானம் அவர். சச்சிதானந்தத்தையே 'சோமாஸ்கந்தர்' என்று தமிழ்நாட்டுச் சிவாலயங்களிலெல்லாம் வைத்து உத்சவம் நடத்துகிறோம். இவ்வாறு காஞ்சி மஹா பெரியவாள் "முருகப்பெருமான்" என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளமை இங்குச் சிந்திக்கத்தகும்).*

*(ஓர் உருவு - பரம்பொருள் ஒன்று என்னும் ஏகத்துவம் இதனால் உணர்த்தப்பட்டது. தாரகம் - தாண்டச்செய்வது, தாரகப் பிரமம் - ஓம் என்னும் பிரணவம். "தாரக எழுத்தும் சார்பெழுத்தும் அஞ்சும்" என்பது சிற்றம்பல நாடிகள். முருகன் தாரகப் பிரமம். ஓங்காரத்துள்ளொளிக்குள்ளே முருகன் உருவம் கண்டு" - கந்தரலங்காரம் - 55. இருவரில் தோன்றி - சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து வெளிப்பட்ட ஞானாக்கினியில் உதித்தவன் முருகன். இருவரில் தோன்றி என்றது உபசாரத்திற்காக இருபிறப்பாளர் - அந்தணர் - ஒருவன் - ஒப்பற்றவன்).*

**ஓராச் செய்கையின் ................. விடுத்தனை**

*பிரணவத்தின் பொருளை அறியாத பிரமனை, அவன் செருக்கை அடக்கும் வகையில் தலை முடியைக் களையச் செய்து (சிறையிட்டு), சிவனும் திருமாலும் இந்திரனும் உன்னிடம் வந்து உன் திருவடிகளைத் தொழுது வேண்ட, நீ பிரமனை விடுவித்தாய்.*

*(சிவனும் திருமாலும் இந்திரனும் திருவடி பணிந்து வேண்டினர் என்பதால் "யாவரும் தொழ நின்ற இறைவன்" முருகன் என்பது உணர்த்தப்பட்டது. "அயனென ஆகி, அரியென ஆகி, அரனென ஆகி, அவர் மேலாய் அவைகளுமாகி" என்பது பழமுதிர்சோலைத் திருப்புகழ்).*

*(ஓராய் செய்கை - அறியாமை, இமைப்பினில் - கண்ணிமைப் போதில்).*

**ஒரு நொடி யதனில் ................. நீ வலம் செய்தனை!**

*கண் இமைக்கும் நேரத்தில் பெரிய சிறகுகளையுடைய மயில் மீது ஆரோகணித்துக் கடலை ஆடையாக உடுத்தியுள்ள, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலங்களைக் கொண்ட உலகம் அஞ்சும்படி நீ வலம் வந்தாய்.*

*(முந்நீர் - கடல், உலகின் நாற்புறமும் கடல் சூழ்ந்துள்ள தால் கடலை ஆடையாக உடுத்திய உலகம் என்பர். நானிலம் - நால் நிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நால்வகை நிலம் - இங்கு நால்வகை நிலத்தையுடைய உலகத்தைக் குறித்தது).*

**நால்வகை மருப்பின் ................. மகளை வேட்டனை!**

*நான்கு வகையான தந்தங்களையும், மூவகை மதநீரையும் இரு செவிகளையும் ஒரு துதிக்கையையும் கொண்ட மலை போன்ற ஐராவதம் என்னும் யானையை யுடைய இந்திரன் மகள் தெய்வயானையை மணம்புரிந்தாய்.*

*(முருகனின் அருளாணையின்படி அமிர்தவல்லி சேயாக இந்திரன் முன் இருக்க அவன் தன் வாகனமாகிய ஐராவதம் என்னும் யானையிடம் கொடுத்து வளர்க்கச் சொன்னான். அதனால் தேவ குஞ்சரி என்னும் தெய்வ யானை என்றும் அழைக்கப்பட்டாள். ஐராவதத்தை "நால்வகை மருப்பின்.... ஒரு வகைப் பொருப்பன்" என்றது நயம்.*

*(மருப்பு - தந்தம்; மும்மதம் - கர்ணமதம்; கபோலமதம், பீஜமதம்; பொருப்பு - மலை, பொருப்பன் - மலை போன்ற ஐராவதத்தை உடையவன் (இந்திரன்).*

**ஒருவகை வடிவினில் ................. இளையோன் ஆயினை!**

*இங்கே வள்ளியம்மை திருமணத்தைத் தொனியாகக் குறிக்கும் வகையில் விநாயகப் பெருமானை முன்னிட்டுக் கொண்டுள்ளார்.*

*ஒருவகையான யானை வடிவத்தில், யானை வடிவமும் மானிட வடிவமும் தாங்கி மூவகை மதங்களைக் கொண்ட விநாயகர், குமரனாம் தனக்கு மூத்தோன் ஆகும்படி தொங்கும் வாயை (துதிக்கையை) உடைய யானை முகத்தவரும் ஐந்து கரங்களைக் கொண்ட கடவுளும், அறுகம் புல்லைச் சூடியுள்ளவரும் ஆகிய விநாயகருக்கு இளையவனாகத் தோன்றினாய்.*

*('தனக்கு மூத்தோன் ஆகி' - என்பதில் 'ஆகி' என்பதை 'ஆக' என்று எச்சத் திரிபாகக் கொள்ள வேண்டும். நால்வாய் - துதிக்கை, நாலுதல் - தொங்குதல், அறுகுசூடி - அறுகைச் சூடியுள்ளவர். சூடி - என்பது இகர ஈற்று ஆண்பாற் பெயராம். 'அறுகு' என்பது ஆறு என்பதைக் குறிப்பால் உணர்த்திற்று).*

**ஐந்தெழுத்ததனில் ................. ஒரு குரு ஆயினை!**

*ஐந்தெழுத்தின் மூலம் நான்கு வேதங்களையும் உணர்த்தும் பரம்பொருளும், சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று சுடர்களையும் மூன்று கண்களாகக் கொண்டவரும், இருவினைகளையும் அழிக்கும் மருந்தாக விளங்குகின்றவரும் ஆகிய சிவபெருமானுக்கு ஒப்பற்ற குருநாதனாக விளங்கினாய்!*

*('வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே' என்பது சம்பந்தர் வாக்கு).*

**ஒருநாள் உமைஇரு ................. கழுமலத்து உதித்தனை!**

*முன்னம் ஒரு நாள் உமையவளின் ஞானப் பாலைப் பருகி முத்தமிழிலும் வல்லவனாய், நால்வகைக் கவிகளிலும் வேந்தனாய், ஐம்புல அறிவையும் அடக்கி வெல்பவனாய், அறுமுகச் செவ்வேள் இவன் என அனைவரும் போற்றிப் புகழும் வண்ணம் மேலும் மேலும் எழுச்சியூட்டும் அழகுடன் கழுமலம் என்னும் பதியில் (சீர்காழிப்பதியில்) திருஞானசம்பந்தப் பெருமானாக அவதரித்தாய்.*

*(திருஞானசம்பந்தர் தம்மைத் தமிழ்விரகன் என்று குறிப்பிட்டுக் கொண்டார். அருணகிரியார் அதே தொடரை முத்தமிழ் விரகன் என்று கையாண்டுள்ளார். நாற்கவி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். கிழவன் - உரிமையுள்ளவன். எழில்தரும் என்பதற்கு எழுதரும் என்று பாடபேதம் கொள்வர் சிலர். அது சிறவாது என்று தமிழறிஞர் சி. ஜகந்நாதாசாரியார் குறிப்பிட்டுள்ளார். முருகனே சம்பந்தராக அவதரித்தமை பற்றி அருணகிரியார் திருப்புகழிலும், கந்தரந்தாதியிலும், திருஎழுகூற்றிருக்கையிலும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இச்செய்தி கந்தரலங்காரத்திலோ, கந்தரநுபூதியிலோ, திருவகுப்புகளிலோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. முருகசாரூபம் பெற்ற அபர சுப்பிரமணியர் ஒருவரே தம்பந்தராகத் தோன்றினார் என்பது ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளின் துணிவு).*

**அறுமீன் பயந்தனை ................. ஒரு வேல் விடுத்தனை!**

*ஆறு நட்சத்திரங்களாகிய கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெற்றாய், வேண்டியதைத் தரும் தெய்வீக மரங்களாகிய கற்பகம், பாரிஜாதம், மந்தாரம், சந்தானம் / அரிசந்தனம் என்னும் ஐந்து மரங்களைக் கொண்ட இந்திரனுக்காக நான்கு வேதங்களின் அம்சமாகவும், மூன்று தலைகளையும் சிவந்த உச்சிக் கொண்டையும் உடைய ஒப்பற்ற வேலாயுதத்தைக் கிரௌஞ்சமலை இரண்டாகப் பிளந்து விழும்படி ஏவினாய்.*

*('அறுமீன் பயந்தனை' - செய்வினையாக உள்ள இதனைச் செயப்பாட்டு வினையாகக் கொண்டு, ஆறு நட்சத்திரங்களால் (கார்த்திகை மாதர்) வளர்க்கப்பட்டாய் என்று பொருள் காண்க. பயத்தல் - வளர்க்கப்படுதல். ஐந்தரு - ஐந்து மரங்கள்; அன்றில் அம்கிரி - கிரௌஞ்சமலை).*

**காவிரி வடகரை ................. இருந்தனையே!**

*காவிரி யாற்றின் வடகரையில் உள்ள குருமலை எனப்படும் சுவாமி மலையில் வாழும் அந்தணர்கள் நம:குமாராய என்னும் ஆறெழுத்து மந்திரத்தை இடையறாது உச்சரித்து உன் இரண்டு திருவடிகளையும் போற்றித் துதித்திருக்க நீ திருஏரகத்தில் ஒப்பற்ற இறைவனாக எழுந்தருளியிருந்து அருள்புரிகின்றாய்.*

*(குருமலை - சுவாமி மலை, ஆறெழுத்து - நம:குமாராய, ஆறெழுத்தடக்கிய அருமறைக் கேள்வி நாவியல் மருங்கில் நவிலப் பாடி என்பது திருமுருகாற்றுப்படை திருஏரகம் - சுவாமிமலை) திருஏர் + அகம் - சிறந்த அழகிய தூய உள்ளம் என்றும் பொருள். மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் மரகத மயூரப் பெருமாள் என்பது கதிர்காமத் திருப்புகழ்.*




ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிச் செய்த

**திருஎழுகூற்றிருக்கை**

அருள்மிகு சுவாமிநாத சுவாமி திருக்கோயில், சுவாமிமலை.

## தேவராய சுவாமிகள் அருளிய சுவாமிமலை கந்த சஷ்டிக் கவசம்

**கவச பலன்**

*கல்வியில் உயர்ந்த நிலையை அடையச் செய்யும். பெரும் பதவி, புகழ் ஆகியவற்றைப் பெற்று மேன்மை நிலையினை அடைந்து குலப்பெருமையடைவர். அருளும், பொருளும் நிகரன்றிக் கிடைக்கும். ஞானமும், ஞாபக சக்தியும் வளர்ச்சியடையும். முருகனின் அருள் எளிதில் கிடைக்கும்.*

**காப்பு**

குறள் வெண்பா

அமர ரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை.

**கவசப் பாடல்**

ஓமெனும் பிரணவம் உரைத்திடச் சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்கார மாக உதயத் தெழுந்தே
ஆங்கார மான அரக்கர் குலத்தை
வேரறக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரரைக் கண்டதுண் டங்களாய்
வேலாயுத த்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழநியின் கோவே
நான்கு மறைகள் நாடியே தேடும்
மான் மரு கோனே வள்ளி மணாளனே
நானெனும் ஆணவம் நண்ணிடாது என்னைக்
காண நீ வந்து காப்பதுன் கடனே
காளி கூளி கங்காளி ஓங்காரி
சூலி கபாலி துர்க்கை யேமாளி

போற்றும் முதல்வா புனித குமாரா
சித்தர்கள் போற்றும் தேசிகா போற்றி
"ஏகாட்சரமாய்" எங்கும் தானாகி
வாகாய் நின்ற மறைமுதற் பொருளே
துதியட் சரத்தால் தொல்லுல(கு) எல்லாம்
அதிசய மாக அமைந்தவா போற்றி
திரியட் சரத்தால் சிவனயன் மாலும்
விரிபா ருலகில் மேன்மையுற்றவனே
"சதுர"ட்சரத்தால் சாற்றுதல் யோகம்
மதுரமாய் அளிக்கும் மயில்வா கனனே
பஞ்சாட் சரத்தால் பரமன் உருவத்தால்
தஞ்சமென் றோரைத் தழைத்திடச் செய்தென்
நெஞ்சகத்(து) இருக்கும் நித்தனே சரணம்
அஞ்சலி செய்த அமரரைக் காக்கும்
ஆறுகோணமாய் ஆறெழுத் தாகி
ஆறுசிரமும் அழகிய முகமும்
ஆறிரு செவியும் அமர்ந்த மார்பும்
ஆறிரு கண்ணும் அற்புத வடிவும்
சரவனை வந்த சடாட்சரப் பொருளே
அரணயன் வாழ்த்தும் அப்பனே கந்தா
கரங்கள்பன் னிரண்டில் கதிரும் ஆயுதத்தால்
தரங்குலைந்(து) ஓடத் தாரகா சுரன் முதல்
வேரறச் சூர்க்குலம் முடித்து மகிழ்தோய்
சீர்திருச்செந்தூர் தேவசேனாதிப
அஷ்டா குலாசலம் யாவையும் ஆகி
இஷ்டசித்திகஅருள் ஈசன் புதல்வா
துட்டசம்காரா சுப்பிரமணியா
மட்டிலா வடிவே வையாபுரித் துரையே
எண்கோ ணத்துள் இயங்கிய நாரணன்
கண்கொளாக் காட்சி காட்டிய சடாட்சர
சைவம் வைணவம் சமரச மாக
தெய்வமாய் விளங்கும் சரவண பவனே
சரியை கிரியை சார்ந்த நல் யோகம்
இரவர்க்(கு) அருளும் ஈசா இரங்கி

கோதுகள் இல்லாக் குணமெனக் கருளி
தரிசனம் கண்ட சாதுவோ(டு) உடன்யான்
அருச்சனை செய்ய அனுக்கரகம் அருள்வாய்
பில்லிவல் வினையும் பீனிச மேகம்
வல்ல பூதங்கள் மாயமாயப் பறக்க
அல்லலைப் போக்கிநின் அன்பரோடு என்னை
சல்லாபமாகச் சகலரும் போற்ற
கண்டு களிப்புறக் கருணை அருள்வாய்
அண்டர் நாயகனே அருமறைப் பொருளே
குட்டிச் சாத்தான் குணமிலா மாடன்
தட்டிலா இருளன் சண்டிவேதாளம்
சண்டா முனியும் தக்கராக் கதரும்
மண்டை வலியோடு வாதமும் குன்மமும்
சூலைகா மாலை சொக்கலும் சயமும்
மூலரோகங்கள் முடக்குள் வலிப்பு
திட்டு முறைகள் தெய்வச் சாபம்
குட்டம் சோம்பல் கொடிய வாந்தியும்
கட்டிலாக் கண்ணோய் கண்ணேறு முதலா
வெட்டுக் காயம் வெவ்விடம் அனைத்தும்
உன்னுடைய நாமம் ஓதியே நீரிடக்
கன்னலொன் றதனில் களைந்திடக் கருணை
செய்வதுன் கடனே செந்தில் நாயக
தெய்வநாயகனே தீரனே சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

## திருஏரக நவரத்தினமாலை

*சென்ற நூற்றாண்டில் சுவாமிமலையில் வாழ்ந்த கடுக்கண் தியாகராஜதேசிகர் அவர்களால் இயற்றப்பெற்ற இந்நூல் ஒன்பது பாடல்களைக் கொண்ட ஒப்பற்ற துதி நூலாகும். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் வண்ணமயில் வாகனா! பொன்னேரகப்பதியில் வளர் சாமிநாத குருவே என்று முடியுமாறு அமைந்துள்ளன. திருக்கோயில் வெளியீடாகவும், வேறுபலராலும் இந்நூல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இப்புத்தகத்திலும் 9 பாடல்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.*

சடாட்சர சுபா கர கடாட்சமது செய்ய இது
சமயம் நல்ல சமயம் ஐயா!
உன்னுருவம் உலகுயிர்கள் யாவும் என்றால் எந்தன்
உள்மெலிவை நீ அறியையோ
ஓம் நமோ சரவணோற் பவகுமர! முருக! என்
உறுதி நிறைவேற்றி வைத்(து) ஆள்
மன்னும் உரு சொன்ன மொழிகன்னலெழில்
மின்னரசி வள்ளி மணவாள சரணம்
வண்ணமயில் வாகனா! பொன் ஏரகப் பதியில்
வளர் சாமி நாத குருவே; 1

நின் பக்கல் அன்பில்லாப்பாவியர் படுந்துயரம்
நின்னடியார் தாம் உறுவதும்
நினையென்றும் மறவாத புண்ணியர் பெருஞ் செல்வம்
நிர்மூடர் தான் பெறுவதும்
அன்புடன் நல்லறம் செய் தரும சாலிகள்
அல்லலால் மனம் நோவதும்
அறந்தனை மறந்திடும் அசத்தியப் பேயர்கள்
அகமகிழ்ந்தே வாழ்வதும்
உன்மகிமையோ ? அலது கலியுகப் பெருமையோ!
உனையன்றி அணு அசையுமோ!
உலகினில் கண் கண்ட மெய்யான தெய்வமே
உயர் பரங் குன்றில் உறைவாய்!
வன்பகைச் சூர் வேர்களைந்தது போல் என் பகையை
மாற்றிடும் வடி வேலவா!

வண்ணமயில் வாகனா! பொன் ஏரகப் பதியில்
வளர் சாமி நாத குருவே! 2

ஒரு தரஞ் சரவணபவா என்று சொல்பவர்
உளத்தினில் நினைத்த எல்லாம்
உடனே கைகூடுமென வேதங்கள் மொழியுதே
உண்மை அறிவான பொருளே!
பரிவாகவே அநந்தந்தரஞ் சரவண
பவா! என்று நான் சொல்லியும்
பாங்கு மிக காங்கேயா! அடியேனேன் எண்ணியது
பலியாது இருப்பதேனோ?
குருபரா! முருகையா! கந்தா! கடம்பா! சொல்
குமரா! குகா! சண்முகா!
கோலா கலா! வெற்றிவேலா! எனக்(கு) அருள்
கொடுத்(து) ஆள்வை முத்தையனே!
மரு மலர்க் குழலழக தேவகுஞ்சரி வள்ளி
மணவனே! என் துணைவனே!
வண்ணமயில் வாகனா! பொன் ஏரகப் பதியில்
வளர் சாமி நாத குருவே; 3

கந்தா குழந்தை வடிவேலா! குகா! சண்முகா!
பரமகுரு தேசிகா!
கனம் பெற உனக்கே ஜெயம் தருவம்; நீ உன்
கருத்தில் பயப் படேல் என்(று)
எந்தாய வேளையிலும் அசரீரி மொழியாலும்
எண்ணில் சகுனங்களாலும்
இயல்பும் உன் உத்தரவு பொய்க்குமோ? உனை நம்பி
என் மனம் மயங்கலாமோ?
சிந்தா குலம் தவிர் (கு) இந்தா எனக் கருணை
செய் (து) என் அபீஷ்டம் யாவும்
சித்திக்கவே அருள் செய் பக்தர்க்கு இரங்கும் என்
தெய்வமே! உனை நம்பினேன்
மந்தாகினிக் (கு) இனியமைந்தா! முகுந்தற்கு
மருகா! சிறந்த முருகா!

வன்னமயில் வாகனா! பொன் ஏரகப் பதியில்
        வளர் சாமி நாத குருவே: 4

நெஞ்சினிற் கவலையும் சஞ்சல கிலேசமும்
        நீ என்ன அறியாததோ?
நீரினில் தன்மை போல் உயிரினுக்குயிராகி
        நிறைகின்ற பரிபூரணா!
தஞ்சம் புகுந்தவன் கொத்தடிமை என்றெனைத்
        தற்காக்க வேணும் அல்லால்
தள்ளிவிடல் நீதியோ? சமயம் இது வல்லவோ?
        சரணம் புகுந்த பின்னர்
அஞ்சல் என ஆதரவு செய்வது போல் செய்துஒன்ன
        லார் இடம் விடுக்கலாமோ?
ஐயனே! உனது திருவிளையாடலோ? உன்
        அடைக்கலம் அடைக்கலம் காண்
மஞ்சு ஓதிமத் தேவகுஞ்சரி மனோகரா
        வள்ளி நாயகத் தெய்வமே!
வண்ணமயில் வாகனா! பொன் ஏரகப் பதியில்
        வளர் சாமி நாத குருவே; 5

ஆறுதலையர் அருள் செய் ஆறுதலையாய்! எனக்(கு)
        ஆறுதலையார்? உனை அலால்
ஐயனே! ஈராறு கையனே! மெய்யனே!
        அனைத்தினும் நீ ஒருவனே
தேறு பொருள் என வேத வேதாந்தம் அதனிலும்
        தீர்க்க மா வாக்கியம் எலாம்
திவ்ய தேஜோ மயா நந்த பரிபூரணத்
        தேவ சிவ குருவே! உனை
வீறுள்ளதே வென்று கூறுவதலால் எங்கும்
        வேறு மொரு தெய்வம் உளதோ?
விண்ணவர்கள் சிறை மீள ஆயிரம் கண்ணுளான்
        மேலுலகு தன்னையாள
மாறிட்ட சூரனைக் கூறிட்ட வேலால்
        மனத்திருள் ஒழித்(து) அருள் செய்வாய்
வண்ணமயில் வாகனா! பொன் ஏரகப் பதியில்
        வளர் சாமி நாத குருவே; 6

உண்டு என் இடத்தினில் பல குற்றம் ஆகிலும்
உனை அடைந்தேன் ஆதலால்
உவந்தே பொறுத்திடல் உன் கடமையல்லவோ
உண்மையாய் ஒரு விண்ணப்பம்
பண்(டு) உதிரமது சிதறவில்லால் அடித்திட்ட
பார்த்தனைக் கோபியாமல்
பாசுபதம் அருள் செய்த சிவ குமரா! நிற்
பயந்தவர் செய் பாங்கு போலும்
திண்டு முண்டு உரை செய்த நக்கீரனைக் காத்த
செய்கைபோல், உன் கிருபையால்
சிறியன் மீதே பூரண கருணா கடாட்சமது
செயவேணும் இது சமயமே
வண்டு குடி கொண்ட குழல் கெண்டை விழி கண்டு
மொழி வள்ளி மணவாள சரணம்
வண்ணமயில் வாகனா! பொன் ஏரகப் பதியில்
வளர் சாமி நாத குருவே; 7

கொஞ்ச நஞ்சம் பயமின்றி அற அதனைக்
குலைத்திடல் சிவத்துரோகம்
குருநிந்தையொடு சகோதரத் துரோகம், அனம்
கொடுத் தவர்க்குத் துரோகம்
வஞ்சகம் பொய் சூது அசத்தியம் ஈரிக்ஷை
மாச்சரியம், மிக்க நன்றி
மறத்தல்; புறங்கூறல்; இன்னம் இப்படிவெகு
மாபாவம் செய்த கொடிய
பஞ்சமா பாவிகள் எண்ணமோ முடியும்? இப்
பார் மீதில் உனைநம்பி வாழ்
பக்தர்கள் நினைப்(பு) ஒன்றும் முற்றாது இருக்குமோ?
பரமகுருநாத சுவாமி!
வஞ்சகச் சூரர் எனும் மாசினை அகற்றியே
வானுலகு வாழ வைத்தோய்!
வண்ணமயில் வாகனா! பொன் ஏரகப் பதியில்
வளர் சாமி நாத குருவே; 8

மைந்தர் மேல்மோடியாது தாய் தந்தை செய்வதென
மாயமோ ? இது நியாயமோ ?
பாலசுப்பிரமணியன் என்ற பேர் நிசமென
வகுத்த (து) உன் வேடிக்கையோ ?
எந்தனுடல் உயிர் பொருள் யாவுமே நீயென
இருப்போர்க்கும் இரங்காவிடில்
என்னையும் நகைத்(து) ஐய! உன்னையும் நகைப்பதற்கு
இடன் அல்லவோ! கருணையாய்ச்
சுந்தர மிகுந்திலகு சண்முகமும் ஈராறு
தோளும் கடம்பும் எங்கள்
தோகை தெய்வானை குறமங்கையொடு தோகைமேல்
தொண்டனேன் கண்டு மகிழ
வந்(து) எழுந்தருளி எனை ஆண்டு கொள்வாய் உன்
மலர்ப் பதம் சரணம் ஐயா!
வண்ணமயில் வாகனா! பொன் ஏரகப் பதியில்
வளர் சாமி நாத குருவே; 9

**துதிமஞ்சரி**

திருமணி விளங்கும் கிரீட மணிவா னவர்
தினந்துதி செய் சிந்தாமணி
செப்பரு மனோன்மணி விருப்பொடுஞ்செம்மணி
செழுஞ்சுடகக் கரத்தேந்து
ஒருமணி வளம்பெருஞ்சைவமணி மான்பால்
உதித்த பெண்மணி வள்ளியாம்
ஒண்மயி வயங்கத்தி னைப்புனைத்தே வந்(து)
உலாவுமணி கடலுண்மணி
குருமணி என்சொல்லும் சுப்பிரமணியப்பெருங்
குணமணி என் இருகண் மணி
கோதிலாத் தெய்வமணி அருணகிரிநாதர் வாக்குக்கு
உள்ளம் மகிழ்ந்து கதியும்
தருமணி நீ ஆதலால் அடியேன் மனத்து இருள்
தவிர்த்து நல்வாழ்வு தருவாய்
தாமநிலை யேழ்மருவு மாடமலி நீடெழில்கொள்
சாமிமலை வாழ் முருகனே!

**திருவேரகச் சதகம்**

கண்டிகதிர் காமம்திருச் செந்தூ ர்பரங்கிரி
காசினியில் புகழ் படைத்த
கனமான திருவாவினன்குடி திருத்தணி
கனங்கொண்ட எட்டுக்குடியாம்
மண்டியே கோடானகோடி ஜனம் சூழ்கின்ற
தில் லையாம் அருணகிரி சிக்கல் வேளூரு
மகிலந்தன்னிலே பெருமை சேர் ஏரகம்
இவ்வுலகில் மதிக்க முடியாத் தலங்கள்
தெண்டி சாமுண்டி மகாதேவி சங்கரி
திரிபுரை ஈன்ற பாலன் செகமதில்
புகழ்பெற்ற முருகன் கார்த்திகேயன் தலங்களின்
பெருமையைப் செப்பவும் முடியாது காண்
தண்டிக்க வேலாயுதங்கொண்ட மூர்த்தியே
தமியே னை ஆதரிப்பாய்
சதுர்மறைகள் புகழ்கின்ற ஏரகத்தன்னில்வாழ்
சாமிநாதக் கடவுளே!

**சுவாமிநாதன் பிள்ளைத்தமிழ் (அச்சுக்கு வராதது)**

முன்பெலாம் உனைப்பணிந்து மாதவம் பல
முயன்றிடு மயிலோடு முன்னி
நின்னையே துதித்திட நீயவன்
முறைமையை அறிந்தே நல்
இன்பமாம் படியாங் கவன் கருத்தினில்
எண்ணிய குறையெல்லாம்
இயல்பினால் முடித்தருளிணையப்படி
எங்கறு க்கவன் போல்
நின்பராபர மலரடி வணங்கிலோம்
நித்தலும் யாங்களும் துதித்தேத்தோம்
நீறுபூசவும் அறிகிலோம் உன்னையே
நினைத்திட மாட்டோம் உன்
அன்பிலால் எமக்கெப்படியாகிலும் ஆகுக
ஆடுக செங்கீரை!

ஆரமார் பொழில் ஏரக முருகனோ (டு)
ஆடுக செங்கீரை!

**சுவாமிநாதன் பிள்ளைத்தமிழ் (கோவை நடேசக்கவுண்டர்)**

எப்பாடை கற்றவரும் எத்தேயம் உற்றவரும்
எக்கோலம் இட்டவருமே
இச்சாவழிச்சுழலல் அற்றே தவத்தின் வழி
நிற்பார்தமக்கு அருள்பவா!
மைப்பானல் ஒத்தொளிர் மிடற்றார்களிக்கும் அரு
மைப்போதகைக் குருபரா
வற்றாமுழுக்கருணை வைத்தாள்உமைக்கு விழி
யைப்போலும்ந ற்புதல்வனே!
கைப்போதகத்தையர் பிற்பாடு உதித்த ஒளிர்
கட்டாணி முத்து முருகா!
கைக்கு, ஆழி, நத்து, கதை, வில், கூர், அசிப்படை
தரித்தார் உவக்கும் முருகா!
தப்பேதும் அற்றவர் உளக்கோயில் உற்றகுக!
சப்பாணி கொட்டியருளே!
தற்போதம் அற்றவர் வழுத்து ஏரகக்குமர!
சப்பாணி கொட்டியருளே!

**திருஏரகநான்மணிமாலை**

பெருக்கார் கருணைப் பேரின்பு மூழ்கி
தருக்கார் மனத்தூறு தமமதை யொரீஇச்
சாதன மூதலினற் சமரதியி லிருந்துதற்
போத வொழிவாம்பூரண மார்ந்து
தரணியிலி ணையிலா நினதருள் பொருந்திய
அருண கிரியெங் குருபரன் அறைந்த
கருப்பிர தஞ்சுதை கண்டுதே னிகர்க்குந்
திருப்புகழ் தன்னை விருப்பொடு செவி மடுத்து
அழியா இன்பம் அவர்க்கருள் ஏரக!
இழிவாம் பவக்கடன் இழிந்தஞ் ஞானம்
ஒருவா தென் னை யுணரா துனதருள்
மருவா தேனுரை மாலுகங் காஞ்சிர
நிகர்புன் சொல்லையும் நேயமோ டீன்றோம்
மகவின் குத லைக்கேட்ட கமகிழ் வுறல்போல்
அன்பொடுங் கேட்டருள் புரிவாய்
இன்பொடும் உலகோர்க் கின்னுயிர்த்து ணையே

**திருஏரகயமக அந்தாதி**

வந்தனை யானந்த ஏரகற்
கே செய்வேன் மற்றொரு தெய்
வந்தனை யானஞ் சலிக்கேன்
எனைத்தொடர் வல்வி னைப்ப
வந்தனை யானந்தன் வானோர்
முனிவர்கள் வாழ்த்த என்முன்
வந்தனை யானந்தகண் வீசு
பாசத்தை மாற்றுவேனே.

**திருஏரக வெண்பா அந்தாதி**

குருநாதா என்று தினம் கூப்பிமென்சத்தம்
ஒருநாளும் கேட்டிலையோ உன்றன் திருநாமம்
வேறோவே றன்றால் விளம்பாய் விளங்கு பொன்னி
ஆறோங்கும் ஏரகத்தப்பா.

**திருஏரக முருகன் பதிகம்**

அன்னையும் தந்தையும் குரவனும் தேவும்
அனைத்தும் நீ என அறிந்தவர் தமக்கும்
வினையின் வாதனை உண்டுகொல் என்ன
வெருண்டுளேன் எனை வெருட்டிடத் துணியேல்!
பனையை நேர்க்கர்த்து இபமுகற் கிளையாய்
பவள் வெற்புறழ் பன்னிரு தோளோ
இனைய தன்மையன் எனக்கணிக்கிரியாய்
ஏரகத்துறை எந்தை பிரானே!

**படைவீட்டுப் பதிகம்**

கலங்க பாழ்மனக் கற்கிணற் றருட்புனல் கண்டு
துலங்கு மெய்புகழ் அடையும் நாள் என்று கொல்? சொல்லாய்
அலங்கல் நீபமும் செச்சையும் குரவமும் அணிந்தாய்
இலங்க பொன் மதில் உடைத்திரு ஏரகத்திறையே.



திருக்கோயிலின் எழில்மிகு தோற்றம்

## இருபத்தொன்றாம் நூற்றாண்டில் திருவேரகம்

*இக்கோயிலில் மூன்று திருச்சுற்றுகள் உள்ளன. முதல் திருச்சுற்று மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. இந்தத் திருச்சுற்றின் வழியாகவே செய்தளித்த தங்கரதம் பவனி வருகின்றது. இரண்டாம் திருச்சுற்று மலையின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. முதல் திருச்சுற்றிலிருந்து 32 படிகள் கடந்து சென்றால் நடுச்சுற்றை அடையலாம். மூன்றாவது சுற்று சுவாமிநாதப் பெருமானின் சந்நிதியை ஒட்டி அமைந்துள்ளது. நடுச்சுற்றிலிருந்து 28 படிகள் ஏறினால் மேற்சுற்றை அடையலாம். 300 அடி நீளமும், 295 அடி அகலமும் உடைய இத்திருக்கோயிலில் கீழே இருந்து மேலே செல்வதற்கு அறுபது படிகளைக் கடக்க வேண்டும். மனித வாழ்வில் அறுபது ஆண்டுகள் நிறைவு மணிவிழாவைக் குறிப்பிடுவதாகும். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடியுள்ள கும்பகோணத் தலபுராணத்தில் சுவாமிமலையைக் குறிக்கும் போது*

*வரும் பிரபவ முதல் வருடதேவர்கள்*
*திருவளர் அம்மலைச் செறிந்தபடி*

*என்று குறிக்கின்றார். அறுபது ஆண்டுகளின் பெயர்கள் இப்படிகளாக அமைந்துள்ளன என்பது ஐதீகமாகும். வருடதேவர்கள் இங்குபடிகளாக அமைந்து அன்பர்கள் மேலேறிச் செல்ல வழி அமைத்துள்ளனர் என்று கூறுவர். முதற்படியில் தேங்காய் உடைத்தபின் மேலேறுதல் வழிபாட்டு நெறியாகும். மகாவித்துவான் அவர்கள்*

*திருவளர் அடிபடி தெங்கங்காய் தகர்த்து*
*உருவளர் மலை இவர்ந்து*

*என்று இவ்வழக்கத்தைப் போற்றுகின்றார்.*

*இராஜகோபுர வாசலைக் கடந்தபின் முதலாம் திருச்சுற்றின் படியேறினால், எதிரே காட்சி தருவது தெற்கு நோக்கிய அருள்மிகு மீனாட்சியம்மை சன்னதியாகும்.*

*தொடுக்கும் கடவுட் பழம்பாடல்*
*தொடையின் பயனே நறைபழுத்த*
*துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்*
*சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து*
*எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு*
*ஏற்றும் விளக்கே வளர்சிமய*

*இமயப் பொருப்பில் விளையாடும்*
*இளமென் பிடியே எறிதரங்கம்*
*உடுக்கும் புவனம் கடந்துநின்ற*
*ஒருவன் திருவுள்ளத்தில் அழகு*
*ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்*
*உயிரோவியமே மதுகரம்வாய்*
*மடுக்கும் குழற்காடு ஏந்துமிள*
*வஞ்சிக் கொடியே வருகவே!*
*மலயத் துவசன் பெற்றபெரு*
*வாழ்வே வருக வருகவே!*

*என்று குமரகுருபர சுவாமிகள் பாடியிருக்கும் தோற்றத்தின் வருணனை இங்கு இருக்கும் மீனாட்சியம்மைக்கும் முற்றிலும் பொருந்தும். இச்சந்நிதிக்கு அருகில் கிழக்கு முகமாக மீனாட்சிசுந்தரேசுவரர் சந்நிதி உள்ளது. திருப்பரங்குன்றத்தில் மீனாட்சி அம்மனுக்கும் சுந்தரேசுவரருக்கும் சந்நிதி வீதியில் திருக்கோயில் உள்ளது. திருப்பரங்கிரிப் புராணம் தைப்பூச நன்னாளில் பரங்கிரிநாதராகிய மீனாட்சி சுந்தரேசுவரரையும் மீனாட்சி அம்மனையும் வழிபடுவோர்க்கு எல்லா நன்மைகளையும் கூட்டுவிப்பார் என்று கூறுகின்றது. இந்தத் தைப்பூச திருவிழா சுவாமிமலைத் தலத்திலும் சிறப்பாக நடைபெறுகின்றது. அன்பர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு வழிபாடு செய்வது இன்றும் வழக்கமாக உள்ளது.*

*மீனாட்சி, சுந்தரேசுவரர் சந்நிதிகளுக்குப் பக்கத்தில் விநாயகர், சோமாஸ்கந்தர், காசி விஸ்வநாதர், விசாலாட்சி, தெட்சணாமூர்த்தி, நால்வர், துர்க்கை, வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், சண்டிகேசுவரர் மற்றும் நவக்கிரகங்களும் பைரவரும் அருள்பாலிக்கின்றனர். தரைத்தளத்தில் அமைந்த முதல் திருச்சுற்றில் தெற்குவாயிலின் அருகில் இருபுறமும் அகன்று நீண்ட திருமண மண்டபங்கள் உள்ளன. மீனாட்சி அம்மன் சந்நிதிக்குக் கிழக்கில் வசந்த மண்டபம் உள்ளது. கிழக்கு வாயிலில் வல்லப விநாயகர் சந்நிதியும் அமைந்துள்ளது. மேற்கே தங்கரத மண்டபம் உள்ளது. தென்கிழக்குப் பகுதியில் தலவிருட்சமான நெல்லிமரம் உள்ளது. பூமாதேவி பார்வதியின் சாபத்திற்கு ஆட்பட்டு இத்தலத்திற்கு வந்து தங்கிச் சுவாமிநாதப் பெருமானை வழிபட்டுச் சாபம் தீர்த்தாள். அதன்பின்னும் இத்தலத்தை விட்டுப்போக விருப்பமின்றி நெல்லிமரமாக நிற்பதாக புராணச் செய்தி சொல்லப்படுகிறது. மீனாட்சியம்மை சந்நிதியின் கிழக்கே அமைந்திருக்கின்ற வச்சிர தீர்த்தமென்ற கிணறு பல நோய்களைத் தீர்க்கும் தீர்த்தத்தைக் கொண்டது. அம்மன் சந்நிதிக்குக் கிழக்கே அமைந்துள்ள விசாலமான வசந்த மண்டபம் உற்சவங்கள் நடப்பதற்குரிய இடமாகத் திகழ்கின்றது.*

மலைக்குச் செல்வதற்காக அமைந்த படிக்கட்டுகளில் ஏறுமுன்பு முதல் படியில் தேங்காய் உடைத்து தீபமேற்றி பின்புமேலே செல்வது வழிபாட்டு மரபாகும். ஆண்டுதோறும் ஆங்கில புத்தாண்டு மற்றும் தமிழ்ப் புத்தாண்டுகளில் நிகழும் படித்திருவிழா மிகச்சிறப்புடையது. இருபத்தெட்டுப் படிகள் ஏறிச் செல்லும்போது கந்தபுராணக் காட்சிகள் மாட்சியுற ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளமையினையும், மாடத்தில் அமைந்த படிக்கட்டு விநாயகரையும் கண்டு களிக்கலாம். முப்பத்திரண்டு படிகளைக் கடந்தபின் இரண்டாவது திருச்சுற்றை அடையலாம். அங்கு கீழ்ப்புறம் உள்ள திறந்த மண்டபத்தில் முருகப்பெருமான் சுவாமிநாதனாக அமர்ந்து தந்தைக்கு உபதேசம் செய்த காட்சியைக் காணலாம். இத்திருச்சுற்றை வலம் வருகையில் கோயில் விமானத்தையும், திருத்தலத்தில் பல்வேறு தெருக்களையும் ஊரமைப்பையும் காணமுடியும். மேலும் இருபத்தெட்டுப் படிகளைக் கடந்து மேலே சென்றால் கிழக்கு நோக்கிய சுவாமிநாத சுவாமியின் சந்நிதியின் மகா மண்டபத்தில் யானை வாகனமாக நிற்கக் காணலாம். மயிலுக்குப் பதிலாக இங்கு யானை வாகனமாக நிறுத்தப்பட்டிருப்பது குறித்து ஓர் ஐதீகம் உள்ளது. இந்திரன் ஹரிகேசன் என்ற அசுரனால் மிகவும் நலிவடைந்த நிலையில் இத்தலத்திற்கு வந்து சுவாமிநாதப் பெருமானைப் பூசித்து வலிமைபெற்றபின் அவ்வசுரனை வென்றதாகவும் அதற்குக் காணிக்கையாகத் தன் ஐராவதத்தை அங்கேயே நிறுத்திச் சென்றதாகவும் புராணநூல்கள் கூறுகின்றன.

மலையின் மேலேயுள்ள மகாமண்டபத்தின் கருங்கல் தூண்கள் வேலைப்பாடு மிக்கவை. வளைவான கொடுங்கைகளும் யாளிகளின் உருவங்களும் கண்ணைக் கவரும் வகையில் அமைந்துள்ளன. இம்மலைக் கோயிலுக்குக் கேகய நாட்டு வேந்தனாக இருந்த கார்த்த வீரியார்ச்சுனன் என்ற ஆயிரம் கைகளுடைய அசுரன் திருப்பணி செய்ததாகப் புராண நூல்கள் கூறுகின்றன. கார்த்தவீரியனின் தந்தை கிருத வீரியார்ச்சுனன் செய்த சிவநிந்தையால் குலம் நைந்து போவதைத் தடுக்கக் கார்த்த வீரியன் சுவாமிநாதப் பெருமானை வழிபட்டு இன்னல் தீர்த்து இக்கோயில் திருப்பணிகளைப் புரிந்ததாக அறிகிறோம். மகாமண்டபத்தில் தங்கக் கொடி மரம் திகழ்கின்றது. இம்மண்டபத்தின் நடுவில் திருத்தல விநாயகர் சன்னதி உள்ளது. இவ்விநாயகர் கண்கொடுத்த விநாயகர், நேத்திர விநாயகர் என்று கூறப் பெறுகின்றார். கொங்குநாட்டிலிருந்து இத்தலத்தை அடைந்த பிறவிக் குருடன் உணவில்லாமல் இக்கோயிலில் பட்டினி கிடந்து இவ்விநாயகரை வழிபட்டமையால் கண்பெற்றான். அதனால் இப்பிள்ளையார் இப்பெயர் பெற்றதாகக் கூறப்படுகின்றது. மேலும் இத்திருக்கோயிலின் கிழக்கே கீழவீதியில் தலத்துக்குரிய தீர்த்தம் நேத்திர புஷ்கரணி அமைந்துள்ளது. விழியிழந்த அந்த இறையன்பர் இக்குளத்தில் மூழ்கி வழிபட்டதாகவும் கூறப்படுகின்றது. மிகத் தொலைவிலிருந்து வந்த சுமந்தன் என்ற குருடன் பரத்துவாச மாமுனிவர் கூறியபடி நேத்திரபுஷ்கரணியில் நீராடி விழிபெற்றதாகவும் அறிகிறோம்.

*மகாமண்டப வாயிலின் வலப்புறத்தில் இடும்பனின் உருவமும் இடப்புறத்தில் அகத்தியர், நக்கீரர், நவவீரர்கள், பிரம்மா வடிவங்களும் காணப்படுகின்றன. சுவாமிநாதப் பெருமானின் சந்நிதியை ஒட்டிய திருச்சுற்றில் விநாயகர், வள்ளி தெய்வானை உடனுறை சுப்பிரமணியர், காசி விஸ்வநாதர், சந்திரசேகரர், அருணகிரிநாதர், கெஜலெட்சுமி, கலைமகள், துர்க்கை, வேடனாகி வந்த முருகன், வள்ளி, வேடர்களாகிய நம்பிராஜன், நாரதர், வீரபாகுதேவர், சண்முகர் வள்ளி தெய்வானை, அருணகிரிநாதர் உற்சவ திருமேனி, சூரியன், சந்திரன், ஐயனார் மற்றும் பைரவர் ஆகியோருடைய திருவுருவங்கள் காணப்பெறுகின்றன.*

*இத்திருச்சுற்றில் இடம்பெற்றுள்ள சபாபதி, சந்திரசேகரர் வடிவங்கள் உண்மையில் சிவபெருமானின் வடிவங்களாக இல்லாமல் முருகப்பெருமானின் அருள்வடிவங்களாகவே உள்ளமை சிந்திப்பதற்குரியது. முருகப்பெருமானே சபாபதியாகவும் சந்திரசேகரராகவும் தோற்றமளிப்பதால் சிவனும் முருகனும் வேறு வேறு அல்ல என்ற மெய்ம்மை விளங்கும். சபாபதி ஆகிய தோற்றத்தில், நடராசப் பெருமான் போன்று இரண்டு திருக்கைகளை வளைத்துக் கீழ்நோக்கிய அபிநயத்துடனும் மற்றைய இரண்டு திருக்கரங்களை உரிய முத்திரைகளோடு நீட்டியும் நர்த்தன கோலத்தில் காட்சி தருகிறார் இறைவன். இறைவனோடு தெய்வானையும் உடனாக உள்ளார். சூரனை வென்ற நிலையில் தெய்வானையைத் திருமணம் கொண்டு சபாபதி கோலம் பூண்டு விளங்குகின்ற இக்காட்சியை வேறெங்கும் காண இயலாது.*

*மூன்றாவது திருச்சுற்றை வலம் வந்து திருநிலையறை என்னும் கர்ப்பக்கிருகத்தின் முன்னால் சென்றால் ஆயிரம் காமர் அழகெலாம் திரண்ட வடிவில் முருகப்பெருமான் சுவாமிநாதனாக காட்சிதரக் காணலாம். வலக்கரத்தில் தண்டாயுதத்தோடும், இடக்கரத்தை தொடையில் இருத்தியும் யோகநிலையிலுள்ள குருவாக நின்ற திருக்கோலத்தில் ஆறடி உயரமாக சுவாமிநாதப் பெருமான் காட்சியளிக்கிறார். இப்பெருமான் திருக்கரத்தில் தாங்கிய வேல்தான் ஆலயத்தின் கீழ்வீதியில் உள்ள நேத்திர தீர்த்தத்தை உருவாக்கியது. வர மூர்த்தியாக விளங்கும் சுவாமிநாதப் பெருமான் வழிபடுவோர்க்குத் திருவும், கல்வியும், ஞானமும், நல்வாழ்வும் அருளும் யோக மூர்த்தியாக நின்றருள் செய்கிறார். வலது பக்கம் பாலசுப்பிரமணியர் உற்சவர் சந்நிதியும் இடது பக்கம் தாரகாபரமேஸ்வரர் சந்நிதியும் அமையப்பெற்றுள்ளது. வியாழக்கிழமை தோறும் பெருமாளுக்கு நடக்கும் அலங்காரம் கண்கொள்ளாக் காட்சியாகும். வைரவேலும் தங்கக்கவசமும் கொண்டு அரசலட்சணங்களோடு வியாழக்கிழமை காட்சி தருவார். கார்த்திகை மாதம் முழுவதும் விழாக்கோலம் கொண்டிருக்கும் இவ்வாலயத்தில் திருக்கார்த்திகை விழாவின்போது பல இலட்சம் மக்கள் திரண்டு வந்து வழிபாடு செய்கின்றனர். சித்திரைத் திருவிழாவும் பெரிய திருவிழாவாக நடைபெறுகின்றது.*

## தலச்சிறப்பு

*ஏர் என்பதற்கு அழகு என்பது பொருள். அழகுமிக்க பதியாதலால் இத்தலம் திருவேரகம் எனப்பெற்றது. குருவாக இருந்து முருகன் அருளியமையால் குருமலை, குருகிரி எனப்பெற்றது. கட்டுமலை அழகிய காட்சி தருவதால் சுந்தராலயம் எனப்பட்டது. நெல்லிமரத்தைத் தலமரமாகப் பெற்றமையால் தாத்ரிகிரி எனப் போற்றப்பட்டது. சிரகிரி என்றும் சிவகிரி என்றும் இத்தலத்திற்கு பெயர்களுண்டு. எல்லாவற்றுக்கும் மேலாகச் சுவாமிநாத சுவாமி குடிகொண்டிருப்பதால் சுவாமிமலை எனப்பெற்று அப்பெயரே நிலைபெற்றது.*

### ஆறுபடை வீடுகளில் ஒன்று சுவாமிமலை

*திருமுருகாற்றுப்படையில் நக்கீரப் பெருமான் ஆறுபடை வீடுகளை முருகப்பெருமானின் உறைவிடங்களாகக் குறித்துள்ளார். அவற்றுள்*

1. *திருப்பரங்குன்றம்*
2. *திருச்சீரலைவாய் - திருச்செந்தூர்*
3. *திரு ஆவினன்குடி - பழனி*
4. *திருவேரகம் - சுவாமிமலை*

*என்பன நான்கு தலங்கள். குன்றுகளிலெல்லாம் குமரன் இருப்பான். ஆதலால் எல்லாக் குன்றுகளையும் சேர்த்துக் குன்றுதோறாடல் என்று ஐந்தாவது இடமாகவும், பழமுதிர்ச்சோலைகளையெல்லாம் ஆறாவது திருத்தலமாகவும் குறித்தார். திருப்பரங்குன்றத்தில் முருகப்பெருமான் தெய்வானையைத் திருமணம் கொண்டு திருமணக் கோலத்தில் காட்சி தருகின்றார். திருச்செந்தூர் சூரனை வென்று தேவர்களுக்குக் காட்சியளித்த தலமாகும். பழனியில் முருகன் உலகெலாம் சுற்றி வந்தபின் சிவபெருமானிடமிருந்து பழம் கிடைக்காத நிலையில் சினந்து வந்து ஞானப்பழமாய் நின்றார் என்பது புராண வரலாறு. சுவாமிமலை சிவபெருமானுக்குத் திருமுருகன் பிரணவப்பொருளை உபதேசித்த தலமாகும். திருத்தணி, குன்றக்குடி, விராலிமலை, வள்ளிமலை, மயிலம், திருச்செங்கோடு, கதிர்காமம் ஆகியனவெல்லாம் குன்றுதோறாடலில் சேரும். மதுரைக்குப் பக்கத்திலுள்ள பழமுதிர்ச்சோலையும் வேறு பல சோலை சூழ்ந்த தலங்களும் பழமுதிர்ச்சோலையுள் அடங்கும். இவற்றைத் தவிரவும் முருகன் குடிகொண்ட தலங்கள் பலப்பல.*

*வைத்தீசுவரன் கோயில் என வழங்கும் புள்ளிருக்குவேளூர், போரூர், குமாரவயலூர், இலஞ்சி, எண்கண், எட்டுக்குடி, திருவிடைக்கழி, வடபழனி, விரிஞ்சிபுரம், திருமுருகன் பூண்டி, சிக்கல், கந்தக்கோட்டம் ஆகிய தலங்களில்*

எல்லாம் முருகன் அன்பர்க்கு அகமகிழக்காட்சி தருகின்றான். மலேஷியா, சிங்கப்பூர், மொரிஷியஸ் போன்ற நாடுகளிலும் முருகப்பெருமான் ஆலயங்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் அமெரிக்க மண்ணில் வாழும் முருகபக்தர்கள் அங்கு ஒரு சுவாமிமலையை உருவாக்கியுள்ளனர் என்பதிலிருந்தும், புது டெல்லியாம் நம் நாட்டின் தலைமையிடத்தில் உத்தரசுவாமிமலையை உருவாக்கியுள்ளனர் என்பதிலிருந்து சுவாமிநாத சுவாமியின் பெருமை விளங்கும்.

மனித உடம்பு ஆலயம் ஆக்கத்தக்கது என முன்னர் குறித்தோம்.

மெய்யுளே விளக்கினை ஏற்றி வேண்டளவு உயரத் தூண்டி
உய்வதோர் உபாயம் பற்றி உகக்கின்றேன்.

என்று திருநாவுக்கரசர் கூறுகின்றார். அத்தகைய உடம்பில் மூலாதாரம் எனக் கருதத்தக்கது திருப்பரங்குன்றம். வழிபடு லிங்கமாக சுவாதிட்டானமாக விளங்குவது திருச்சீரலைவாய். மணிபூரகமாகிய நாபியாக அமைவது பழனி. அநாகதமாகிய இதயமாகத் திகழ்வது திருவேரகமாம் சுவாமிமலை; விசுத்தியாகிய கழுத்தாக இருப்பது குன்று நாடாற்குரிய தலங்கள்; ஆக்ஞையாகிய புருவ நடுப்பகுதியாகப் பொருந்துவது பழமுதிர்ச்சோலை. திருப்பரங்குன்றில் முருகன் ஒளிவடிவினன்; செந்தூரில் அருள்வடிவினன்; பழனியில் தவவடிவினன்; ஏரகத்தில் ஓம் என்ற மந்திரவடிவினன்; குன்றங்களிலெல்லாம் அவன் எளிமைக் கோலம் பூண்ட இறைவன். பழமுதிர்ச்சோலையில் பரந்து தோன்றும் வியாபக உருவினன். சுவாமிநாதன் வழிபடும் அன்பர்க்கெல்லாம் வேண்டியது அருளும் வரகுணன்.

முருகா என உனை ஓதும் தவத்தினர் மூவுலகில்
அருகாத செல்வம் அடைவர்; வியாதி அடைந்து நையார்;
ஒருகாலமும் துன்பம் எய்தார்; பரகதி உற்றிடுவார்;
பொருகாலன் நாடு புகார் சமராபுரிப் புண்ணியனே.

என்று சிதம்பர சுவாமிகள் முருகப் பெருமானைப் போற்றுகின்றார்.

சுவாமிமலையைச் சுற்றிலும் நான்கு திக்குகளில் அருமையான திருத்தலங்கள் அமைந்து இதனை உடம்பின் இதயமாகக் காட்டுகின்ற நிலையை இத்தலத்திற்கு வருவோர் அறியலாம். தெற்கில் திருவலஞ்சுழி, தென்கிழக்கில் கும்பகோணம், வடமேற்கில் புள்ளப்பூதங்குடி, வடகிழக்கில் ஏரகரம், இவற்றின் நடுவே நாயகத்தலமாகத் திகழ்கிறது சுவாமிமலைப்பதி.

**மூர்த்தி சிறப்பு**

சுவாமிநாத சுவாமியின் அலங்காரச்சிறப்பு பலராலும் கண்டு வியப்பெய்திக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வைப்பது. விபூதி அபிஷேகம்

செய்யப் பெற்ற நிலையில் அருள்பழுத்த ஞானியாக முருகப்பெருமான் காட்சி தருவான். சந்தன அபிஷேகம் செய்யப்பட்ட நிலையில் அழகு ஒழுக பாலசுப்பிரமணியனாக காட்சி நல்குவான். கிரீடமும், பதக்கமும் கவசமும் மாலையும் அணிந்த கம்பீர ராஜ அலங்காரத்தில் போகும் பக்தர்களின் உள்ளத்தை பெருமிதம் தோன்றும் திருவடிவோடு பதிந்து நிற்பான்.

திருநிலையறையை நன்கு கூர்ந்து கவனிப்பவர்களுக்கு இந்த ஞான பூமியில் ஒரு பேருண்மை புலனாகும். சுவாமிநாத சுவாமியின் நின்றிருக்கும் பீடம் சிவலிங்கத்தின் ஆவுடையாராகவும் அதன்மேல் எழுந்தருளியுள்ள சுவாமிநாத மூர்த்தி பாணலிங்கமாகவும் காட்சி தருவதைக் காணும்போது, உணர்வால் சிவனும் முருகனும் வேறு வேறு அல்ல என்பதை அறியலாம்.

சிவபெருமான் ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் பஞ்சமூர்த்திகளாக கணபதி, முருகன், சுவாமி, அம்பாள், சண்டிகேசுவரர் எழுந்தருளுவர். சுவாமிமலையில் உற்சவ காலங்களில் கணபதி, வள்ளி தெய்வானையோடு சண்முகர், வள்ளி தெய்வானையோடு சுப்பிரமணியர், பாலசுப்பிரமணியர், சண்டிகேசரோடு பஞ்சமூர்த்தி புறப்பாடு நடைபெறும்.

**தீர்த்தச் சிறப்பு**

**1. வஜ்ர தீர்த்தம்**

கீழ்க்கோயிலில் மீனாட்சி சந்நிதிக்குக் கீழ்ப்புறம் கிணறாக இது விளங்குகின்றது. சுவாமிநாதசுவாமி மற்றும் அனைத்து மூர்த்திகளுக்கும் அபிஷேகப் புனலாகப் பயன்படுவது இதுவேயாகும். இதனை, சுவாமிகூபம், க்ஷேத்திர கூபம் என்று தலபுராணம் கூறுகிறது. சிவபெருமானின் சூலாயுதத்தால் இது உண்டாக்கப் பெற்றது. இரவிமித்திரன் என்னும் அந்தணன் இப்புனலில் நீராடி, பித்ருகடன்கள் செய்து தன் முன்னோரை ஈடேற்றினான். புஷ்பவனம் என்ற ஊரில் வசித்த வசு என்பவன் மகப்பேறு வேண்டி தன் மனைவி காந்திமதியுடன் தீர்த்தயாத்திரை புரிந்து வந்தான். ஒருநாள் காட்டில் உள்ள தாடகத்தில் அவன் நீராடியவுடன் அவன் பெண் வடிவமாகிவிட்டான். காந்திமதி மிக வருந்தி இறைவனைத் தொழுது அழுதாள். அப்பொழுது நாரதர் அங்கே தோன்றி, சுவாமிமலை சென்று வஜ்ர தீர்த்தத்தில் நீராடுமாறு கூறினார். காந்திமதி தன் கணவனுடன் சுவாமிமலை அடைந்தாள். வஜ்ர தீர்த்தத்தில் நீராடியவுடன் வசு ஆண் உருவம் பெற்றான். இருவரும் சுவாமிநாதப் பெருமானை வணங்கி வழிபட்டு மகப்பேற்றையும் அடைந்தனர். வஜ்ரதீர்த்தம் உடற்பிணி போக்கும். மகப்பேறு அளிக்கும்.

**2. குமாரதாரை**

சுவாமிமலை காவிரிநதி குமாரதாரை எனப் போற்றப்படும்.

*தலபுராணத்தின்படி கங்கை நதி, தன் பாவம் நீங்கவேண்டிச் சிவபிரானை பணிந்து இத்தலத்தில் காவிரியோடு கலந்து எப்போதும் உறைகின்றாள். மக்கள் தன்மீது கழுவி விடும் பாபத்தை நீக்கக் குமாரக்கடவுளான சுவாமிநாதப் பெருமானை வணங்கி அருள் பெற்றாள். குமரவேளை வழிபட வந்த கங்கை இப்பெருமானை விட்டு நீங்கப் பிரியமில்லாது தீர்த்த உருவில் காவிரியில் ஒன்றிப் பெருகினாள். குமரனை வழிபடுவதற்காகத் தாரையாய் (நீர்ப்பெருக்காய்) காவிரியில் கங்கை கலந்து விட்டதால் இத்தலத்தில் காவிரிக்கும் குமாரதாரை என்ற சிறப்புப் பெயர் உண்டாயிற்று.*

**3. சரவண தீர்த்தம்**

*திருக்கோயிலுக்கு வடகிழக்கில் உள்ள குளம் இது. ஜமதக்னி முனிவரின் சாபத்தால் கரடியுருக்கொண்ட தன்தந்தை உய்வதற்காகச் சரவணன் என்ற சிறுவனால் இது உண்டாக்கப்பட்டதால் இதற்குச் சரவண தீர்த்தம் என்று பெயர் ஏற்பட்டதாகத் தலபுராணம் கூறுகிறது. சரவணனின் தந்தை இக்குளத்தில் நீராடி கரடி உருநீங்கி சுவாமிநாதப் பெருமானை வழிபட்டு நலம் பல பெற்றார்.*

**4. நேத்திர புஷ்கரணி**

*திருக்கோயிலின் கிழக்கே உள்ள திருக்குளம் இது. கந்தவேளின் திருக் கையில் விளங்கும் ஞானசக்தியான வேலாயுதத்தால் உண்டாக்கப்பெற்றது. இதை சுவாமி புஷ்கரணி எனவும் அழைப்பர். பார்க்கத் தகாதவற்றைப் பார்க்கக்கூடாது என்ற பெரியோர் ஆணையை மீறிய சுமதி என்பவள் தன் இரு கண்களையும் இழந்தாள். தன் பிழைக்கு வருந்தி, பரத்வாஜ முனிவரை வணங்கிக் குறை நீங்க வழி வேண்டினாள். பரத்வாஜ முனிவரும் சுவாமிமலை புஷ்கரணியில் நீராடிப் பெருமானை வழிபடுமாறு சுமதிக்கு நல்வழி காட்டினர். சுமதியும் இக்குளத்தில் நீராடித் தனது இரு கண்களையும் மீண்டும் பெற்றாள். இதனால் இதற்கு நேத்திர (கண்) புஷ்கரணி என்ற சிறப்புப் பெயரும் ஏற்பட்டது. கார்த்திகை மாதம் இக்குளத்தில் சுவாமிநாதப் பெருமான் தீர்த்தவாரி கொண்டருளுகின்றார். சப்த ரிஷிவாக்கியம் என்னும் சோதிட நூலின் பரிகார காண்டத்தில் இத்திருக்குளத்தின் மாண்பு மிகச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.*

**5. பிரம்ம தீர்த்தம்**

*பழைய தலபுராணத்தில் இப்புண்ணிய புனல் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. திருக்கயிலையில் முருகனால் சிறைப்படுத்தப்பட்டு சிவபெருமான் கருணையால் விடுதலைப் பெற்ற நான்முகன் பிரணவப் பொருளை அறிய ஆவல் கொண்டு சுவாமிமலையை அடைந்து, பிரம்ம தீர்த்தம் என்ற தடாகத்தை அமைத்து அதன் கரையில் ஒரு சிவலிங்கத்தையும் நிறுவி அதற்குப் பிரம்மலிங்கம் என்று பெயர் சூட்டி வழிபட்டு வரலானான். அவனது பூஜைக்கு*

மகிழ்ந்த சிவபெருமான் அவனெதிரில் காட்சி தந்து நான்முகனே! சுவாமிநாதனை வழிபட்டு பிரணவப் பொருளைக் கேட்டு உணர்க! என்றருளினார். சிவபெருமான் ஆணைப்படியே பிரம்மதேவனும் சுவாமிநாதப் பெருமானை முறைப்படி வழிபட்டு வந்தான். கந்தவேள் அவனுக்கு அருட்காட்சி நல்கி, நான்முகன் வேண்டியவாறே அவனுக்குப் பிரணவப் பொருளை உபதேசித்தருளினார்.

இந்த பிரம்மதீர்த்தம் சுவாமிமலைக்கு ஈசான்ய திக்கில் உள்ளது. தற்போது இது பெரமாட்டான் குளம் என மருவி அழைக்கப்படுகிறது. அங்கு பிரம்மா பூஜை செய்த பிரம்மபுரீஸ்வரர் என்ற சிவலிங்கமும் அங்கிருந்த ஆலயத்தில் இருந்ததாக கூறப்படுகிறது.

**தலபுராணச் செய்திகள்**

சுவாமிமலைத் தலபுராணத்தில் இத்தலத்தில் நிகழ்ந்த பல அற்புத வரலாறுகள் பேசப்படுகின்றன.

இத்தல பெருமை மஹாபுராணம் என்ற பிர்மகைவந்த புராணத்தால் நந்தியம் பெருமானால் அகத்தியருக்குக் கூறுவதாக அமைந்துள்ளது. பின்னர் நைமிசாரண்யத்தில் வாழ்ந்த ரிஷிகளுக்கு இந்த சுவாமிகிரிமஹாத்மியத்தை விரிவாக கூறியதாக சொல்லப்படுகிறது.

பிருகு ரிஷி, தான் ஜீவன் முக்தனாக விரும்பி தபஸ் செய்யுங்கால் தனது தவத்திற்கு இடையூறு ஏற்படாது இருக்க தன் தவத்தை தடுப்பவர்கள் பிரம்மஞானத்தை மறக்கக்கடவது என சாபமிட்டுத் தவம் செய்யலானார். அவருடைய தவாக்னி தேவர்களை பீடிக்க அவர்கள் மஹாவிஷ்ணுவுடன் பரமேஸ்வரனை அணுகி பிரார்த்திக்க சிவபெருமான் தன் திருக்கரத்தை முனிவரின் சிரசில் வைத்து அவருடைய தவாக்னியை அடக்குகிறார். பிருகு முனிவர் பிரக்ஞை அடைந்து கண்விழிக்கிறார். சிவபெருமானைக் கண்டு வணங்கி மகிழ்கிறார். சிவனும் உன் தவத்தை மெச்சி உன் விருப்பத்தை அருளுகிறேன் என ஆசீர்வதித்தார். பிருகு முனிவர் சிவன் தன் தவத்தைக் கலைத்ததால் தன்னுடைய சாபம் சிவனை பாதிக்குமே என வருந்தி சிவனிடம் மன்னித்தருளும்படி கேட்கிறார். அவரும் வேண்டியதைப் பெறுகிறார்.

**வழிபாடுகள்**

இத்திருக்கோயிலில் வழிபாடு காரண ஆகம முறைப்படியும் குமாரதந்திர முறைப்படியும் நடைபெறுகிறது. சிவாகம வல்லுநர்களான ஆதிசைவ மரபினரே இக்கோயிலில் பூஜை செய்து வருகிறார்கள்.

*தினந்தோறும் ஆறுகால வழிபாடுகள் இங்கே உலக நன்மைக்காக நடைபெறுகின்றன.*

| | | | | |
|---|---|---|---|---|
| *பால் நிவேதனம்* | - | *விசுவரூபதரிசனம் காலை* | *6.00* | *மணி* |
| *உஷக்காலம்* | - | *காலை* | *7.00* | *மணி* |
| *காலைசந்தி* | - | *காலை* | *9.00* | *மணி* |
| *உச்சிகாலம்* | - | *நடுபகல்* | *12.00* | *மணி* |
| *சந்தியாகாலம்* | - | *மாலை* | *5.30* | *மணி* |
| *இரண்டாம்காலம்* | - | *இரவு* | *7.00* | *மணி* |
| *அர்த்தயாமம்* | - | *இரவு* | *9.00* | *மணி* |

*திருவிழாக்காலங்களில் மாறுதலுக்குட்பட்டது.*

**டிக்கெட் விற்பனை நிலையம்**

| | | | |
|---|---|---|---|
| *பாதகாணிக்கை* | *ரூ. 1001* | *துலாபாரம்* | *ரூ. 10* |
| *திருமண பதிவு* | *ரூ. 2000* | *சேவல் உபயம்* | *ரூ. 10* |
| *மாப்பிள்ளை அழைப்பு* | *ரூ. 501* | *மாவிளக்கு* | *ரூ. 5* |
| *வீடியோ கேமிரா* | *ரூ. 500* | *எலுமிச்சை விளக்கு* | *ரூ. 5* |
| *அழைப்பிதழ்* | *ரூ. 101* | *காணிக்கை* | *ரூ. 5* |
| *கேமிரா* | *ரூ. 100* | *அஷ்டோத்திர அர்ச்சனை* | *ரூ. 5* |
| *கனரக வாகனம்* | *ரூ. 100* | *பாலாபிஷேகம்* | *ரூ. 5* |
| *நான்கு சக்கர வாகனம்* | *ரூ. 50* | *புஷ்பம் சாத்த* | *ரூ. 5* |
| *குழந்தை தத்து கொடுக்க* | *ரூ. 50* | *நுழைவு* | *ரூ. 50* |
| *காதணி* | *ரூ. 50* | *சிறப்பு நுழைவு* | *ரூ. 100* |
| *காவடி* | *ரூ. 25* | *சண்முகர் அர்ச்சனை* | *ரூ. 1000* |
| *ஜெபக்குடம்* | *ரூ. 25* | *சண்முகர் சிறப்பு அபிஷேகம்* | *ரூ. 500* |
| *உபய அபிஷேகம்* | *ரூ. 25* | *உற்சவர் திருக்கல்யாணம்* | *ரூ. 1000* |
| *சகஸ்ரநாமம்* | *ரூ. 25* | *உற்சவர் சிறப்பு அபிஷேகம்* | *ரூ. 500* |
| *இரு சக்கர வாகனம்* | *ரூ. 20* | *நெய் காணிக்கை* | *ரூ. 400* |
| *செல்போன் கேமிரா* | *ரூ. 20* | *யானை உணவு (ஒருவேளைக்கு)* | *ரூ. 600* |
| *பால்குடம்* | *ரூ. 10* | *அன்னதானம் (125 நபர்கள்)* | *ரூ. 2000* |
| *ஐயப்பமாலை* | *ரூ. 10* | *தங்கரதம்* | *ரூ. 2000* |
| *திரிசடை* | *ரூ. 10* | *தங்கவேல் அபிஷேகம்* | *ரூ. 2000* |

## திருவிழாக்கள்

### மாதத் திருவிழாக்கள்

*ஒவ்வொரு மாதத்திலும் பஞ்சபருவங்கள் என ஐந்து சிறப்பு நாட்கள் கொண்டாடப்பெறும். மாதப்பிறப்பு, அமாவாசை, பௌர்ணமி, சுக்கிரவாரம், பிரதோஷம் என்பன அவை. இவற்றையன்றி மாத ஷஷ்டி, கார்த்திகை, விசாகம் ஆகிய நாட்களும் இங்கே சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.*

**இத்திருக்கோயிலில் நிகழும் முக்கியத் திருவிழாக்கள் வருமாறு:**

| ***ஆங்கில மாதம்*** | ***தமிழ்மாதம்*** | ***திருவிழா*** |
|---|---|---|
| *ஏப்ரல் - மே* | *சித்திரை* | *பிரம்மோற்சவம் (10 நாட்கள்)* |
| *மே - ஜுன்* | *வைகாசி* | *வைகாசி விசாகப் பெருவிழா* |
| *ஆகஸ்ட் - செப்டம்பர்* | *ஆவணி* | *பவித்ரோற்சவம் (10 நாட்கள்)* |
| *செப்டம்பர்-அக்டோபர்* | *புரட்டாசி* | *நவராத்திரி விழா (10 நாட்கள்)* |
| *அக்டோபர்-நவம்பர்* | *ஐப்பசி* | *கந்தசஷ்டிப் பெருவிழா (10 நாட்கள்)* |
| *நவம்பர்-டிசம்பர்* | *கார்த்திகை* | *திருக்கார்த்திகைப் பெருவிழா (10 நாட்கள்)* |
| *டிசம்பர்-ஜனவரி* | *மார்கழி* | *திருவாதிரைத் திருநாள் தனுர்மாத பூஜை (10 நாட்கள்)* |
| *ஜனவரி-பிப்ரவரி* | *தை* | *பூசப்பெருவிழா, தை கிருத்திகை* |
| *மார்ச் - ஏப்ரல்* | *பங்குனி* | *வள்ளி திருக்கல்யாண விழா, பங்குனி உத்திரம்* |

*இவற்றுள் சித்திரை, கார்த்திகை, தை மாதங்களில் நடைபெறும் திருவிழாக்கள் துவஜா ரோஹணத்துடன் (கொடியேறுதல்) நடைபெறும் பெருவிழாக்களாகும். மூன்று பிரமோற்சவம் நடைபெறுவது சிறப்பம்சமாகும்.*

*ஒவ்வோர் ஆண்டும் ஆங்கில வருடப்பிறப்பு நாள் (ஜனவரி 1) மற்றும் தமிழ் வருடப் பிறப்பு சித்திரை முதல் நாள் ஆகிய இருதினங்கள் திருப்படி விழாச் சிறப்பாக நடைபெறுகிறது. இது தவிர விழாக் காலங்களில் முருகன் அடியார் திருக்கூட்டங்கள் இங்கே வந்து திருப்படி விழாக்களையும் நடத்தி வழிபடுகின்றனர். தங்க ரதப் பிரார்த்தனை உள்ளவர்கள் உரிய தொகை செலுத்தி தங்க ரதவிழா நடத்தி மகிழ்கின்றார்கள்.*

### திருக்கோயில் நிர்வாகம்

*சுவாமிமலைத் திருக்கோயில் தமிழக அரசின் அறநிலையத்துறையின் நிர்வாகத்தில் அமைந்துள்ளது. தமிழ்நெறியும் பண்பாடுகளும் ஆலய வழிபாட்டோடு தொடர்புடையனவாயிருத்தலைப் போல் தமிழ்வளர்ச்சியும், பண்பாட்டுத் துறையும், அறநிலையத்துறையும் சீரும் சிறப்புமுற நிருவகிக்கப் படுகின்றன. அரசாங்கத்தால் நியமிக்கப்படும் தக்கார் / இணை ஆணையர் மற்றும் துணை ஆணையர் நிலையில் செயல் அலுவலராலும் கோயிலின் நிர்வாகச் செயலாண்மைகளை ஆற்றிவருகின்றது. கண்காணிப்பாளர் இருவரும் பணியாளர்களும் இத்திருக்கோயிலின் நிர்வாகத்தைச் செவ்வனே புரிந்து வருகின்றனர்.*

### ஆண்டு வருவாய்

ஆண்டொன்றுக்கு இத்திருக்கோயில் ஏறத்தாழ ஏழு கோடி ரூபாய்களை வருவாயாகப் பெற்றுவருகிறது. துணை ஆணையர் நிலையில் உள்ள முதுநிலை திருக்கோயில்களில் ஒன்றாகும். இக்கோயிலுக்கு 117 ஏக்கர் 69 சென்ட நன்செய் நிலமும், 156 ஏக்கர் 81 சென்ட் புன்செய் நிலமும் உள்ளன.

### திருப்பணிகள்

புராண காலத்தில் கிருதவீரிய மகாராசனின் திருமகன் கார்த்த வீரியார்சுனன் என்பவர் தன் தந்தை புரிந்த சிவத்துரோகக் குற்றம் நீங்க இக்கோயிலின் கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவற்றின் திருப்பணிகளைப் புரிந்தான் என்று கூறப்படுகின்றது. அருள்மிகு மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயம், உற்வச மண்டபமும் மேல்கோயில் மகாமண்டபமும், படிகள் ஆகியவற்றை கானாடு காத்தான் அமரர் வெ. அருணாசலம் செட்டியார் அவர்கள் திருப்பணி புரிந்தார்கள். ஆலய நிர்வாகத்தினர் அவ்வப்போது பல திருப்பணிகளைச் செய்து வந்திருக்கின்றனர். திருமண மண்டபங்கள், விருந்து மண்டபம், பயணியர் விடுதிகள் ஆகியன தொடர்ந்து கட்டடப்பட்டுள்ளன. கொடைக்குணம் படைத்தோரும் இறையன்பர்களும் இத்தகைய முயற்சிகளில் பேரார்வம் காட்டி வருகின்றனர். திருக்கோயிலின் திருப்பணிகள் செய்யப்பட்டு 06.09.1971 மற்றும் 08.04.1984 மற்றும் 10.11.2000 ஆகிய தினங்களில் திருக்குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. மேலும் 09.09.2015 அன்று திருக்குடமுழுக்கு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

### சமயப்பணி

இத்திருக்கோயிலில் நாளும் பக்தர்கள் வழிபட வசதிகள் பலவும் செய்து தரப்படுகின்றன. ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு திருமுறை ஓதலும், சிறப்புவிழா நாட்களில் சமய சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பெறுகின்றன.

### வழிபடுவோர்க்கு வசதிகள்

பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்குக் குல தெய்வமாகத் திகழ்கிறார் நம் சுவாமிநாதப் பெருமான். கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாகத் திகழும் கந்தவேள் இங்கே குமரகுருபரனாகத் திகழ்வதால் இகபரசுகம் வேண்டி ஏராளமான அன்பர்கள் நாளும் இங்கே வழிபட்டு இன்பம் அடைந்து வருகின்றனர். காவடி எடுத்தல், முடிகாணிக்கை செலுத்துதல், அபிஷேகம் செய்தல், சண்முகார்ச்சனை, திரிசதை அர்ச்சனை செய்தல் மற்றும் தங்கத்தேர் இழுத்தல் முதலிய பிரார்த்தனைகளை நிறைவேற்ற பக்தர்கள் வந்தவண்ணம் இருக்கின்றனர். ஆதலால் இங்கே ஒவ்வொரு வியாழக்கிழமையன்றும் தங்கக்கவசம், வைரவேல் சாற்றுதலும், ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையிலும் முத்தங்கி, சொர்ணபுஷ்பமாலை சாற்றுதலும் பொது மக்கள் தரிசன வசதிக்காகச் செய்யப்படுகின்றன. கட்டணம் செலுத்தித் தங்க ரதப்புறப்பாடு நடத்தலாம். 3 திருமண மண்டபங்கள் உள்ளன.

## குன்றுதோறாடல் பொருளடக்கம்



| வ.எண் | பாடல் அடிகள் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 1. | 190–217 | நச்சினார்க்கினியர் உரை | 643 |
| 2. | ,, | உரையாசிரியர் உரை | 647 |
| 3. | ,, | பரிமேலழகர் உரை | 650 |
| 4. | ,, | கவிப்பெருமாள் உரை | 652 |
| 5. | ,, | பரிதியார் உரை | 653 |
| 6. | ,, | கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 654 |
| 7. | ,, | கி.வா. ஜகன்னாதன் உரை | 655 |
| 8. | ,, | பெருமழைப்புலவர்<br>பொ.வே. சோமசுந்தரனார் உரை | 668 |
| 9. | ,, | திருத்தணிகை பற்றி<br>அருளப்பட்ட நூல்கள் | 676 |
| 10. | ,, | இருபத்தொன்றாம் நூற்றாண்டில்<br>குன்றுதோறாடல் (திருத்தணி) | 713 |

உ
*சிவமயம்*

# 5. குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண் கூதாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடுஅமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல்உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வால்இணர் இடைஇடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண்டு அன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகர்இல் சேவல்அம்
கொடியன் நெடியன் தொடிஅணி தோளன்
நரம்புஆர்த்து அன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறும்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணைத் தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே, அதா அன்று;

---

**1. நச்சினார்க்கினியர்**

*பைங்கொடி - பச்சிலைக் கொடியாலே.*

எல்லாவற்றினும் பசுத்திருத்தலிற் பச்சிலையென்று பெயர் பெற்றது. பச்சிலை என்னாது சினை வினை முதன் மேலேற்றிப் பைங்கொடி என்றார்.

நறைக்காய் - நறுநாற்றத்தையுடைய காயை.

அது சாதிக்காய்.

இடைஇடுபு - நடுவேயிட்டு.

வேலன் - படிமத்தான்.

அம்பொதிப் புட்டில் - அழகினையுடைத்தாகிய பொதிதலையுடைய தக்கோலமென்னும் முதலின் காய்,

அது புட்டில் போறலிற் புட்டிலென்றார்.

விரைஇ - கலந்து.

குளவியொடு - காட்டு மல்லிகையுடனே,

வெண் கூதாளம் தொடுத்த கண்ணியன் - வெண்டாளியையும் கட்டின கண்ணியையுடையனாய்.

நறுஞ் சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின் - நறிய சந்தனத்தைப் பூசிய நிறம் விளங்கும் மார்பினையுடைய வேலன் (190).

வேலன் பைங்கொடியாலே (190) புட்டில் விரைஇ (191) நறைக்காய் இடையிடுபு (190) குளவியொடு (191) தாளத்தையுங் கட்டிய கண்ணியனாய் (192).

கண்ணியன் - வினையெச்ச வினைக் குறிப்பு முற்று.

கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர் - கொடிய தொழிலையுடைய வலிய வில்லாற் கொல்லுதலைச் செய்த குறவர்.

"குலைஇய" என்ற பாடத்திற்கு வில்லை வளைத்த கானவரென்க. எனவே கோறற் பெற்றாம்.

நீடு அமை விளைந்த தேக்கள் தேறல் -நெடுகிய மூங்கிலிலேயிருந்து முற்றின தேனாற்செய்த கள் தெளிவை.

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து - மலையிடத்துச் சிறியவூரிலே இருக்கின்ற சுற்றத்தோடே உண்டு மகிழ்ந்து,

தொண்டகச் சிறுபறைக் குரவை அயர - அந்நிலத்துக்குரிய தொண்டகமாகிய சிறுபறையினது தாளத்திற் குரவையாட,

கானவர் (194) தேறலை மகிழ்ந்து குரவையாட வென்க,

*(விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற் குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி:)*

*விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கான் கண்ணி - விரல் தலப்பாலே வலிய அலர்த்த அலர்ந்த பூவாகலின் வேறுபடுகின்ற நறிய மணத்தினையுடைய தலையிற் சூடும் மாலையினையும்,*

*குண்டு சுனை பூத்த வண்டு படு கண்ணி - அதுதான் ஆழ்ந்த சுனையிற் பூத்த பூவாற் செய்த வண்டு வீழ்கின்ற கண்ணி,*

*இஃது ஒற்றுமை நயம்பற்றிச் செயப்படு பொருண்மேல் நின்றது. கார்க்குண்டுசுனை யென்று பாடமாயின் கரிய ஆழ்ந்த சுனையென்க.*

*இணைத்த கோதை - இதழ் பறித்துக் கட்டின மாலையினையும்,*

*அணைத்த கூந்தல் - சேர்த்தின கூந்தலினையும்,*

*முடித்த குல்லை - இலையைத் தலையிலே யணிந்த கஞ்சங் குல்லையினையும்,*

*இலை உடை நறும்பூ - இலையையுடைய நறிய பூங்கொத்துக்களையும்,*

*செங்கால் மராஅத்த வால்இணர் இடை இடுபு சுரும்பு உணத்தொடுத்த பெருந்தண் மாத் தழை - செவ்விய காலினையுடைய மராத்திடத்தனவாகிய வெள்ளிய கொத்துக்களை நடுவே வைத்துச் சுரும்பு தேனையுண்ணும்படி தொடுத்த பெரிய குளிர்ந்த அழகினையுடைய தழையை.*

*குல்லையையும் பூவையும் வாலிணர் இடையிட்டுத் தொடுத்த தழையென்க.*

*(திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ:) காழ்திருந்து அல்குல் திளைப்ப உடீஇ - வடங்கள் திருந்தும் அல்குலிடத்தே அசையும்படி உடுத்து.*

*அல்குற்றிளைப்ப வென்னும் வல்லொற்று விகாரமாயிற்று.*

*(மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு:)*

*மயில்கண்டு அன்ன மகளிரொடு - சாயலுடை மையான் மயிலைக் கண்டாற் போன்ற மகளிரொடு,*

*மடநடை மகளிர் - மடப்பம் பொருந்திய ஒழுக்கத்தினையுடைய மகளிர்,*

*தழையை யுடுத்து மயில்கண்டன்ன மகளிரென்க,*

*உடுத்தென்னும் வினையெச்சம் அன்னவென்னும் பெயரெச்சமாகிய உவமவுருபோடு முடிந்தது.*

*கண்ணியினையும் கோதையினையுஞ் சேர்த்தின கூந்தலினையும், மடநடையினையுமுடைய மகளிரென்க.*

*இம்மகளிர் தன்னைச் சேவிக்கு மகளிர்.*

*செய்யன் - சிவந்தவன்.*

*சிவந்த ஆடையன் செவ்வரைச் செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன் - சிவந்த ஆடையுடுத்துச் சிவந்த அரையினையுடைய அசோகிற் குளிர்ந்த தளிர் அசையுங் காது பொருந்தி.*

*கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன் - கச்சைக் கட்டிக் கழலையணிந்து வெட்சிமாலையைச் சூடி,*

*குழலன் கோட்டன் குறும் பல்லியத்தன் - குழலை யூதிக் கொம்பைக் குறித்துச் சிறிய பல்லியங்களை எழுப்பி,*

*தகரன் மஞ்ஞையன் புகர் இல் சேவலங் கொடியன் - கிடாயைப் பின்னிட்டு மயிலையேறிக் குற்றமில்லாத கோழிக் கொடியை உயர்த்து,*

*நெடியன் - தான் வேண்டிய வடிவுகோடலின் பிள்ளையாய் இராது நெடுக வளர்ந்து.*

*தொடி அணி தோளன் - தோளிலே தொடியை யணிந்து.*

*நரம்பு ஆர்த்து அன்ன இன் குரல் தொகுதியொடு - நரம்பு ஆரவாரித்தாலொத்த இனிய மிடற்றையுடைய பாடு மகளிரோடே,*

*இவர்கள் தன்னைச் சேவித்துப் பாடுமகளிர்.*

*(குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயன் மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்:)*

*மருங்கிற் கட்டிய குறும்பொறிக் கொண்ட - இடையிலே இறுகக்கட்டிய உதரபந்தத்தின் மேலே உடுப்பதாக வுட்கொண்ட.*

*நிலன் நேர்பு நறுந் தண் சாயல் துகிலினன் - நாலவிட்டமையால் நிலத்தைப் பொருந்தி நறிய குளிர்ந்த மென்மையை உடைத்தாகிய துகிலினையுடுத்து,*

*(முழவுறழ் தடக்கையினியல வேந்தி, மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து:) மென்றோட் பல்பிணை இயல - மெல்லிய தோளினையுடைய பல வாகிய மான்பிணை போலும் மகளிர் குரவையோடு அசைய.*

*இவர்கள் மெய்தீண்டி விளையாடுதற்குரிய மகளிர்.*

*முழவு உறழ் தடக்கையின் தழீஇ ஏந்தித் தலைத் தந்து - தன்னுடைய முழவையொத்த பெருமையையுடைய கையினாலே அவர்கள் கையினைத் தழீஇ எடுத்துக்கொண்டு முதற் கை கொடுத்து.*

*(குன்றுதோ றாடலு நின்றதன் பண்பே:) குன்று தோறு ஆடலும் நின்ற அதன் பண்பு - மலைகள் தோறுஞ் சென்று விளையாடுதலும் தனக்கு நிலை நின்ற குணம்;*

*கண்ணியன் ஆடையன் முதலியன வினையெச்ச வினைக்குறிப்பு முற்று. "முன்னத்தி னுணருங் கிளவியு முளவே" என்னுஞ் சூத்திர விதியால், செய்தெனெச்சப் பொருளை யுணர்த்தின.*

*கானவர் (194) குரவையயர (197) அதனைக் கண்டு மென்றோட் பல்பிணை (216) குரவையாடி யசைய (215) அதனைப் பொறாதே செய்யன் (206) வேலன் (190) தொடுத்த கண்ணியைச் சூடி (192) உடுத்துப் (206) பொருந்திக் (207) கட்டி அணிந்து சூடி (208) ஊதிக் குறித்து எழுப்பிப் (209) பின்னிட்டு ஏறி (210) உயர்த்து வளர்ந்து தொடியை யணிந்து (211) துகிலையுடுத்துத் (214) தொகுதியுடனே (212) மகளிரோடே (205) மலைகடோறுஞ் சென்று (217) தழீஇ (216) ஏந்தித் (215) தலைத்தந்து (216) ஆடலும் நின்றதன் பண்பென வினைமுடிக்க.*

*"குரவை யென்பது கூறுங்காலைச் செய்தோர் செய்த காமமும் வென்றியு மெய்தக் கூறு மியல்பிற் றாகும்" எனவரும்.*

*அதாஅன்று - அதுவன்றி.*

**2. உரையாசிரியர்**

*பைங்கொடி - நறைக்காய் இடையிடுபு வேலன் - பச்சிலைக் கொடியாலே சாதிக்காயை நடுவேயிட்டு வெறியாட்டாளன்,*

*அம் பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு - அழகு பொதிந்த புட்டில் போன்ற தக்கோலக்காயும் காட்டு மல்லிகையுடனே கலந்து,*

*வெண் கூதாளம் தொடுத்த கண்ணியன் - வெண்டாளியையும் தொடுத்துக் கட்டின வெற்றிமாலையையுமுடையனாய்,*

*நறும் சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பில் - நறிய சந்தனம் பூசப்பட்ட நிறம் விளங்கித் தோன்றப்பட்ட மார்பினை யுடையனாய்,*

*கொடும் தொழில் வல்வில் கொலைஇய கானவர் - கொடிய தொழிலையுடைய வல்லின வில்லாலே கொலைத் தொழிலைச் செய்த மலைக்குறவரும்,*

*நீடு அமை விளைந்த தேக்கள் தேறல் - நீண்ட மூங்கிலிலேயிருந்து முற்றின தேனாற் செய்த கள்ளினது தெளிவை.*

*குன்று அகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து - மலையிடத்துச் சிற்றூரில் தம் சுற்றத்துடனே உண்டு மகிழ்ந்து,*

*தொண்டகச் சிறு பறைக் குரவை அயர - குறிஞ்சி நிலத்துக்குரிய தொண்டகமென்னும் பெயரையுடைய சிறுபறையொலியுடனே ஒருவர்க்கொருவர் கைகோத்தாடலைச் செய்ய,*

*விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறும் கால் - விரல் நுனியால் தடவ வாய் நெகிழ்ந்து வேறுபட்ட நறுவிய மணத்தினை யுடைத்தாகி,*

*குண்டு சுனைப் பூத்த வண்டு படு கண்ணி - ஆழ்ந்த சுனைகளிலே பூத்த வண்டு வீழ்கின்ற நெற்றி மாலையையும்,*

*இணைத்த கோதை அனைத்த கூந்தல் - பலவாக இணைத்த மாலையுடனே சேர்த்த மயிரையும்,*

*முடித்த குல்லை யிலையுடை நறும்பூ - மயிரின் மேலே முடிக்கப்பட்ட கஞ்சங் குல்லையினையும் இலைகளுடனே நறிய பூக்களையும்; துளப மெனினும் அமையும்;*

*செங்கால் மராஅத்த வால் இணர் இடையிடுபு - செவ்விய காலையுடைய கடம்பினிடத் துளவாகிய வெள்ளிய பூங்கொத்துக்களை நடுவே வைத்து,*

*சுரும்பு உணத் தொடுத்த பெரும் தண் மாத்தழை - வண்டுகள் தேனுண்ணும்படி தொடுத்த மிகவும் குளிர்ந்த பெரிய தழையை,*

*திருந்து காழ் அல்குல் திளைப்ப உடீஇ - திருந்திய மணிவடமுடைய மேகலை பொருந்திய அல்குல் தடத்திலே பயில உடுத்து,*

*மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு - சாயலுடைமையாலே மயிலைக் கண்டாற் போன்ற அறியாமை பொருந்திய ஒழுக்கத்தினை யுடைய மகளிரொடு; குரவைக் கூத்தையாட (197) வென முடிக்க. அவ்வெல்லையில்;*

*செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரை - சிவந்த திருமேனி யுடையனாகிச் சிவந்தஅரையினையுடையனாகி,*

*செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன் - அசோகினது குளிர்ந்த தளிர் பொருந்தி அசையப்பட்ட காதை யுடையனாகி, கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன் - கட்டின கச்சை யுடைய னாகி வீரக்கழலை யுடையனாகி வெட்சி மாலையை யுடையனாகி,*

குழலன் கோட்டன் குறும் பல்லியத்தன் - குழலோசை யுடையனாகிக் குறிக்கப்பட்ட கொம்பினையுடையனாகிச் சிறிதாகிய பலவான தோற்கருவி துளைக் கருவிகளுடைய ஓசைகளுடையனாகி,

தகரன் மஞ்ஞையன் - வளர்கிடாயை யுடையனாகி மயில் வாகனத்தை யுடையனாகி,

புகர் இல் சேவலங் கொடியன் நெடியன் தொடியணி தோளன் - குற்றமில்லாத கோழியாகிய அழகிய கொடியை யுடையனாகி நெடுகியிருப்பானாகி வளையணிந்த தோளை யுடையனாகி,

நரம்பு ஆர்த்தன்ன இன்குரல் தொகுதியொடு - நரம்பு ஆரவாரித்தாற் போன்ற இனிய குரல்களையுடைய கந்திருவ மகளிர் கூட்டத்தோடு.

குறும் பொறிக் கொண்ட நறும் தண் சாயல் மருங்கில் கட்டிய நிலன் நேர்பு துகிலன் - நுண்ணிதாகிய எழுத்துத் தொழில் பொருந்திய நறிய குளிர்ந்த மென்மையுடையதாகிக் கச்சைகட்டிய மருங்குலிலே சிக்கென வுடுத்த தொங்கல் நிலத்திலே பொருந்திய துகிலையுடையனாகி,

முழவுஉறழ் தடக்கையின் இகல் வேல் ஏந்தி - முழந்தாளைப் பொருந்திய கையிலே போர்வேலேந்தப்பட்டவன்,

மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து - மெல்லிய தோள்களையுடைய பலவாகிய மான் பிணைகள் போலும் மெய்தீண்டி விளையாடுதற்குரிய தெய்வ மகளிரோடு தழுவிக் கொண்டு அவர்கள் களவறிந்து அவர்கட்கு இருப்பிடம் கொடுத்து,

குன்றுதொறு ஆடலும் நின்றதன் பண்பே - மலைகடோறும் சென்று விளையாடுதலும் தனக்கு நிலைமைபெற்ற குணம்;

வெறியாட்டாளனும் (190) நெற்றி மாலையுடையனாகி (192) மலைக்குறவரும் (194) தம் சுற்றத்தோடு கள்ளுண்டு மகிழ்ந்து (196) தொண்டக மென்னும் பறையொலிக்கும் குரவைக் கூத்தை (197) மயில் கண்டன்ன மடநடை மகளிரோடும் (205) ஆட (197) அவ்வெல்லையில் சிவந்த மேனியும் சிவந்த ஆடையும் (206) முதலாகிய அங்கப் பிறத்தியங்களை யுடையோனாகி வேலை யேந்தப்பட்டவன் (215) தெய்வ மகளிரோடு தழுவிக் கொண்டு (212) மலைகடோறும் சென்று விளையாடுதலும் நிலைபெற்ற குணம் (217);

அதாஅன்று - அதுவன்றி.

### 3. பரிமேலழகர்

*"பைங்கொடி" என்பது முதல் "பண்பே" என்பது வரையிலும் ஒரு தொடர்;*

*பைங்கொடி நறைக்காய் இடை இடுபு வேலன் - பச்சிலைக் கொடியும் சாதிக்காயும் இடையிட்டு வெறியாடுவான்.*

*அம்பொதி புட்டில் விரைஇக் குளவியொடு, வெண்கூதாளம் தொடுத்த கண்ணியன் - அழகிய தக்கோலப் புட்டில் இலை விரவிய தாளிப் பூவோடு வெள்ளைக் கூதாளம்பூ பிணைத்த மாலையன்.*

*நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின் - நறு நாற்றத்தையுடைய சந்தனத்தைப் பூசி நிறமிக்க மார்பினையுடையராய்.*

*கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர் - கொடிய தொழிலினை யுடைய வில்லாற் கொலை பொருந்திய வேடுவர்.*

*நீடமை விளைந்த தேம்கள் தேறல், குன்றகச் சிறுகுடி கிளையுடன் மகிழ்ந்து - நெடிய மூங்கிலரிசியிலுண்டாகச் சமைத்திட்டு இனிமைக் கிடமாகிய மதுவை மலையிடத்துச் சிறுகுடிச் சுற்றத்துடனே கூடவுண்டு களித்து.*

*தொண்டகச் சிறுபறை குரவை அயர - குறிஞ்சி நிலத்துக்குரித்தாயதாய்ச் சிறிய பறையையும் கொட்டிக் குரவைக் கூத்தை யாடி,*

*குரவை என்றது கைகோத்தாடுங் கூத்து. இப்பெற்றி நோக்கி, 'குரவை யாய்ச்சிய ரோடு கோத்ததும்' எனப் பெரியாரும் பணித்தமையானுமறிக,*

*விரலுளர்ப்ப அவிழ்ந்த வேறுபடு நறுங்கால் - விரலாலே அலர்த்த அலர்ந்த பலவகைப்பட்ட நறுநாற்றத்தைப் பொருந்திய தாளினையுடைய,*

*குண்டுசுனை பூத்த... அணைத்த கூந்தல் (199-200) - ஆழமாகிய சுனையிலே அலர்ந்த வண்டு தங்குகின்ற பூக்களைத் தொடுத்த மாலை சேர்த்தின கூந்தலினை யுடைய,*

*முடித்தகுல்லை.... மாத்தழை (201-3) - முடித்தாற் போன்ற கஞ்சங் குல்லையுடனே நறுநாற்றத்தையுடைய சிவந்த காம்பினையுடைய கடம்பின் வெள்ளைக் கொத்துப்பூ இடையிட்டு வண்டு படியத் தொடுத்த மிகவும் தட்பம் பொருந்திய தழையை,*

*திருந்து காழ் அல்குல் திளைப்ப உடீஇ - அழகிய புடவை பொருந்திய அல்குலிலே அசைய உடுத்து,*

*மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு* - சாயலுடைமையால் மயில் கண்டாற் போன்ற மடப்பம் பொருந்திய ஒழுக்கத்தையுடைய மகளிர் தழையை யுடுத்து,

*செய்யன் சிவந்த ஆடையன்* - செந்நிறத்தை உடையவனாய்ச் சிவந்த பரிவட்டத்தினை யுடையவன்,

*செவ்வரைச், செயலைத் தண்தளிர் துயல் வரும் காதினன்* - சிவந்த மலைக்கண் அசோகினது குளிர்ந்த தளிர் அசைதரும் காதினை யுடையான்.

*கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்* - கச்சைக் கட்டினவன், திருக்கழலினையுடையான், வெட்சி மாலையை யுடையான்,

*குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்* - ஊதுகுழலினையுடையான், குறிக்கும் கொம்பினையுடையான், சிறியவாய் பல வாச்சியங்களை யுடையான்.

*தகரன், மஞ்ஞையன் புகரில் சேவலங் கொடியன்* - தகரக் கடாவினை யுடையான், மயிலினையுடையவன், குற்றமில்லாத கோழிக் கொடியினை யுடையான்,

*நெடியன் தொடியணி தோளன்* - உயர்ந்துள்ளோன்; வளையணிந்த கையினை யுடையவன்,

*நரம்பார்த்தன்ன இன்குரல் தொகுதியொடு, குறும்பொறிக் கொண்ட நறுந் தண் சாயல், மருங்கில் கட்டிய நிலன் நேர்பு துகிலினன்* - யாழ் வாசித்தாற் போன்ற இனிதாகப் பாடுகின்ற கூட்டத்தோடே சிறிய பொறி பொருந்திய நாற்றம் குளிர்ச்சி நிறம் திருமருங்குலிலே சேர்த்திய இந்திர நீலத் திருப்பரி வட்டத்தினை யுடையவன்.

*முழவுறழ் தடக்கையின் இகல் வேல் ஏந்தி* - மத்தள மொத்த பெரிய கையில் மாறுபாட்டைச் செய்கின்ற வேலை ஏந்திக் கொண்டு,

*மென் தோள் பல்பிணை தழீஇ* - மெத்தென்ற தோளினை யுடைய குறமகளிரை அணைத்துக்கொண்டு,

*தலைத்தந்து குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே* - அவ்விடத்து வந்து மலையிடங்கடோறும் முற்கூறிய குரவை யாடுகின்ற இடங்களினும் நிற்றலும் அவனியல்பான பண்பு என்றவாறு.

*அதாஅன்று* - அதுவன்றியும்,

*குன்றுதோறாடல் சிறப்பு* - கானவர் குரவைக் கூத்தாட அவர் மகளிர் குரவையாடி அசைய, அவற்றைக் கண்டு ஸ்ரீ முருகக் கடவுள் தொடுத்த கண்ணியைச் சூடிச் சிவந்த ஆடையை யுடுத்து, அசோகின் குளிர்ந்த தளிர்

*அமைந்த காதைப் பொருந்திக் கச்சுக்கட்டிக் கழலையணிந்து, வெட்சி மாலை சூடிக் குழலையூதிக் கொம்பைக் குறித்துப் பல்லியங்களை எழுப்பி, மயிலேறிக் கோழிக் கொடியையுயர்த்து, நெடுக வளர்ந்து தொடி யணிந்து துகிலையுடுத்துத் தம் கையினால் அவர்கள் கையினைத் தழுவி ஏந்தி, முதற்கை கொடுத்துப் பாடு மகளிருடன் மலைதோறுஞ் சென்று விளையாடுதலும் அவர் தமக்கு நிலைநின்ற குணமாம்.*

**4. கவிப்பெருமாள்**

*பச்சென்ற வெற்றிலைக் கொடியையும் நல்ல பழுக் காயையும் இடையிடையே இட்டுப் படிமத்தோன் அழகிதாகத் தழைத்த சாதிக்காய்ப் புட்டிலையும் குளவிப் பூவுடனே கலந்து வெள்ளிய கூதளம் பூவையும் இடையிடையே தொடுத்த தலைமாலையை யுடையவனாயும்; நல்ல சந்தனத்தைப் பூசிய நிறங் கிளர்ந்த மார்பினை யுடையவனாயும்; படிமத்தோன் - பூசாரி; குளவி - காட்டு மல்லிகை.*

*கொடிய தொழிலைச் செய்கின்ற வலிய வில்லினாலே கொலைத் தொழிலைத் தமக்கியல்பாக வுடைய குறவர் நீண்ட மூங்கிலிலே விளைந்த இனிய கள்ளின் தெளிவை மலையிடத்தில் சிற்றூர்களில் தங்கள் உறவின் முறையார்களுடனே குடித்து மகிழ்ந்து தொண்டக மென்னும் பெயரையுடைய சிறு பறையைக் கொட்டிக் குரவைக் கூத்தை ஆடுவதாக;*

*விரலையொத்த விரிந்த வேறுபட்ட நறு நாற்றத்தினையுடைத்தாய் ஆழ்ந்த சுனையிலே பூத்த நீலப் பூவாற்றொடுத்த வண்டுகள் வந்து படிகிற மாலையினையும் இதர மலர்களால் கட்டிய மாலையினையும் செருகப் பெற்ற மயிரினையும் உடையவராய் முடித்தாற் போன்ற கஞ்சங் குல்லையினையும் முடித்த பச்சிலையுடனே நறுநாற்ற முடைத்தாகிய பூவையும் சிவந்த தாளினை யுடைத்தாகிய கடம்பினது வெள்ளிக் கொத்துக்களையும் இடையிலே யிட்டு வண்டுச்சாதிகள் மதுவுண்ணும்படி தொடுக்கப்பட்ட மிகவுங் குளிர்ந்த நிறைந்த தழையைத் திருந்திய மேகலாபரணமணிந்த அல்குலிலே அலையவுடுத்து மயிலைக் கண்டாலொத்த சாயலினையுடைய மடப்பத்தாற் சிறந்த மகளிருடனே;*

*சிவந்த நிறமுடையவனும் சிவந்த பரிவட்டமென்னும் ஆடை யணிந்தவனும் செவ்விய மலையிலே தளிர்த்த அசோகினது குளிர்ந்த தளிர் அசைகின்ற காதினையுடையவனும் பூங்கச்சை யுடுத்தவனும் வீரக் கழலினையுடையவனும் வெட்சிமாலை யணிந்தவனும் வேய்ங்குழலினை யூதுகின்றவனும் குறிக்கப்பட்ட கருங் கொம்பினை யுடையவனும் சிறிய*

*பலவான வாச்சியங்களை யுடையவனும் கைக்கிடாயையுடையவனும் மயிலை யுடையவனும் குற்றமில்லாத சேவலங் கொடியை யுடையவனும் எல்லாரினும் நெடியவனும் வாகுவலயஞ் செறிந்த தோள்களை யுடையவனும் யாழ் ஆரவாரித்தாலொத்த கந்தருவ மகளிர் திரளுடனே மார்பிலே சந்தனம் குங்குமங்களாலே நுண்ணிய வரியாக வெழுதப்பட்ட நறுநாற்றமுந் தட்பமு முடைத்தாகிய திருமேனியை யுடையவனும் இடையிலே கட்டின நிலத்திற் பொருந்திய திருவுடையாடையை யுடையவனும் ஆகி;*

*குடமுழாவை யொத்த பெரிய தடக் கையிலே மாற்சரியமுடைத்தாகிய பெரிய வேலினையெடுத்து மெல்லிய தோள்களையுடையராய் நோக்கத்தால் பல வாகிய மான் பிணைகளைப் போன்ற தீண்டி விளையாடற்குரிய தெய்வப் பெண்களைத் தழுவிக் கொண்டு அவர்களுடன் தானுமொருதலையிலே கைகோத்து மலையிடங்கள்தோறு மாடுகின்ற குரவைக் கூத்திலே நிலை நின்று வந்த பண்பினையுடையவன்; அங்கே செல்க; அங்கன்றாயின்னம் பிள்ளையாரைக் காணலாமிடஞ் சொல்லப் புகுகின்றார்.*

**5. பரிதியார்**

*பைங்கொடி - பசுமை பொருந்திய கொடி. நறைக்காய் - சாதிக்காய். புட்டில் - புட்டிற்காய். கண்ணியன் - தலையிலே கட்டியவன். 'நறுஞ்சாந்.... மார்பின்' எனப் பாடபேதங் கொண்டு சந்தனத்தை மார்பிலே யுலரும்படி பூசிய.... (குறவர்) எனக் கூறுவர்.*

*நீடமை.... தேறல் - ஆகாயத்தை யளாவிய வளர்ந்த காட்டிலே நீண்ட மூங்கில் மரங்களிலே கட்டின தேனையழித்து. மகிழ்ந்து - இதங்களித்து, குரவையயர - ஆணும் பெண்ணுங் கூத்தாட,*

*விரலுளர்ப் பவிழ்ந்த விரலினாலே அலரப்பண்ணி அலர்ந்த; கண்ணி - செங்கழுநீர்ப்பூ மாலை; மரர்அத்த - செங்கடம் பினுடைய; மடநடை மகளிர் - அன்னநடைப் பெண்கள்.*

*கழலினன் - வீரக் கிண்கிணியையுடையன்; குழலன் கோட்டன் - சிறிய குழலும் பெரிய குழலும் ஊதிக் கொண்டிருப்பவன்; குறும்பல்லியத்தன் - சிறிய தப்பும் கொட்டிக் கொண்டிருப்பவன்; நரம்பார்த்தன்ன... தொகுதி - நரம்புத் தொனிபோல் இசைகளையுடைய பெண்கள் கூட்டம்; குறும்பொறி - உத்தம ரேகைகள்; மருங்கிற்... துகிலினன் - அரையிலே நிலவு போன்ற வெண்மைத் தூவட்டம் பூமியைத் தொடும்படி தரித்தவன்.*

*இயல் வேலேந்தி (பி-ம்) இயல வேந்தி (பி-ம்) அந்தப் பெண்களை யெடுத்தேந்தி; தலைத் தந்து - ஒருத்தியை யெடுத்து ஒருத்தி மேல் போட்டு; ஆடல் - விளையாடல்.*

### 6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்

*பைங்கொடி - பச்சிலைக் கொடி என அனைவரும் உரைகாணக் கவிப்பெருமாள் மட்டும் பச்சென்ற வெற்றிலைக் கொடி என உரைகாண்பர்.*

*கேழ் - நிறம்; 'உருவும் கெழுவும் நிறனாகும்மே' என்னும் தொல்காப்பியம்.*

*நீடமை விளைந்த தேக்கள் - நெடுகின மூங்கிலிலே இருந்து முற்றின தேனால் செய்த கள்தெளிவு என அனைவரும் உரை காணப் பரிமேலழகர் மட்டும் நெடிய மூங்கிலரிசியிலுண்டாகச் சமைத்திட்டு இனிமைக் கிடமாகிய மது என உரை காண்பர்.*

*குரவை - இச்சொற்பொருளை விளக்கிய தோடமையாது, 'குரவை யாய்ச்சியரோடு கோத்தும்' என வரும் நம்மாழ்வார்ப் பாடலை மேற்கோள் காட்டுதலின் இவர் சமய உணர்வு வெளிப்படும். 'திருவுடை மன்னரைக் - காணின் திருமாலைக் கண்டேனே என்றார் பெரியாரும்' எனத் திருக்குறளில் இவர் எழுதியிருப்பதும் ஈண்டு நினைவுகூரத்தக்கதாம்.*

*நறுங்கால் என்ற பாடத்திற்கு மாறாக நறுங்கார் என்பதொரு பாடமும் உள்ளமை நச்சினார்க்கினியர் உரையால் தெரிய வருகிறது.*

*கோட்டன் - குறிக்கப்பட்ட கொம்பினன் என உரையாசிரியர் அனைவரும் உரைகாணப் பரிதியார் மட்டும் பெரிய குழல் என உரை காணுகிறார்.*

*நரம்பு ஆர்த்தன்ன இன்குரல் தொகுதியொடு - நரம்பை ஆரவாரித்தலை ஒப்ப இனிய மிடற்றையுடைய பாட மகளிர் என உரை கண்டனர் நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும். உரையாசிரியர் இன் குரல் தொழுதியொடு எனப் பாடங்கொண்டு இனிய குரல்களையுடைய கந்தருவ மகளிர் கூட்டத்தோடு என உரை காண்பர்.*

*முழவுறழ் தடக்கை என்பதற்கு மாறாக உரையாசிரியர் முழவுறு தடக்கை எனப் பாடங் கொண்டிருப்பர் போலும். தலைத்தந்து - இருப்பிடந் தந்து என உரை காண்பர் உரையாசிரியர். நச்சினார்க்கினியர் முதற்கைக்கொடுத்து என உரைகாண்பர். அவ்விடத்து வந்து என உரைகாண்பர் பரிமேலழகர். தானும் ஒரு தலையிலே கைகோத்து என உரைகாண்பர் கவிப்பெருமாள். ஒருத்தியை எடுத்து ஒருத்தி மேல் போட்டு என உரைகாண்பர் பரிதியார். இவற்றுள் கவிப்பெருமாள் உரை சிறக்கும்.*

## கி.வா. ஜகன்னாதன்
## குன்றக் குரவை

*நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் முதலில் திருப்பரங்குன்றத்தைப் பற்றிச் சொன்னார். அவர் மதுரையில் வாழ்ந்தவர். அதன் அருகில் உள்ள திருப்பரங்குன்றத்திலே தொடங்கிக் கீழே திருச்சீரலைவாய்க்கு வந்து, மீண்டும் வடமேற்காகச் சென்று திருவாவினன்குடியைக் காட்டி, அப்பால் வடகிழக்காக வந்து திருவேரகத்தைப் பாடினார். கடைசியில் மதுரைக்கு அருகில் உள்ள பழமுதிர் சோலையில் வந்து முடிக்கப் போகிறார்.*

*முருகன் உள்ள இடங்கள் இவ்வளவுதானா? அவன் குறிஞ்சி நிலத்தலைவன், எல்லா மலைகளுக்கும் அவனே உரிமையாளன். பல மலைகளில் அவன் கோயில் கொண்டிருக்கிறான் பக்தர்கள் வந்து வணங்கும் வண்ணம் அங்கங்கே முருகனுக்கு வழிபாடுகள் நடைபெறுகின்றன.* ***முருகனுக்குக் கோயில் இல்லாமல் வெறும் மலையாக இருந்தாலும் அங்கும் முருகனுடைய அருளாட்சி நிலவுகிறது. வேறு மூர்த்திகளின் கோயில்கள் இருந்தாலும் முருகனுடைய உரிமை போகாது. அந்த மூர்த்திகள் அங்கே குடிவந்தவர்கள். திணைக்குச் சொந்தக்காரன் என்ற உரிமையுடையவன் முருகன்தான்.***

*நான்கு படை வீடுகளைச் சொல்லிய நக்கீரர் இன்னும் ஒவ்வொரு மலையாக வருணித்துக் கொண்டே போகலாம். அதற்கு முடிவே இராது. கேட்கிற புலவனுக்குப் பொறுமை இருக்க வேண்டும். நூலுக்கும் ஓர் அளவு வேண்டும் அல்லவா? ஆகவே, முருகன் எழுந்தருளியிருக்கும் பிற இடங்களில் பழமுதிர் சோலையை மட்டும் தனியே சொல்வதாகப் பிரித்துக் கொண்டார். மற்ற இடங்களில் மலைகள் எல்லாவற்றையும் ஒரு தொகுதியாகத் தொகுத்து, "முருகன் ஒவ்வொரு குன்றிலும் தன் அருள் விளையாடலை நடத்துகிறான்" என்றார். மற்ற இடங்களைப் பழமுதிர்சோலை மலையைப் பற்றிக் கூறி முடிப்பதற்குள் வரிசையாகவும் விரைவாகவும் அடுக்கிக் கூறுகிறார்.*

*மலைகளையெல்லாம் தொகையாகக் கூறி, ''குன்று தோறாடலும் நின்றதன் பண்பே'' என்று முடிக்கிறார். நக்கீரர் காலத்துக்குப் பின் திருமுருகாற்றுப்படையை ஆதாரமாகக் கொண்டு முருகனுக்கு உரிய படை வீடுகள் ஆறு என்று ஒரு வழக்கு உண்டாயிற்று. ஐந்து படை வீடுகள் தனித்தனியே அமைந்த தலங்கள். ஆனால் ஏனைய படை வீடோ தலங்களின் தொகுதி; எல்லாக் குன்றுகளும் சேர்ந்த தொகுதி அது.*

*குன்றுகளுக்குத் தலைவனாகிய முருகன் அவற்றில் தன்னுடைய வழிபாட்டை நடத்திவரும் பூசாரியாகிய வேலனுடைய பூசையை ஏற்றுக்*

கொண்டு அருள்பாலிக்கிறான். குன்றில் வாழும் குறவர்கள் களிகூத்தாடிப் போற்ற, அவர்களுக்கு நலம் செய்தருளிகிறான். இவற்றை நக்கீரர் குன்றுதோறாடல் என்னும் பகுதியில் சொல்லுகிறார்; அவற்றை இனிப் பார்ப்போம்.

## வேலன்

முருகனுக்குப் பூசைபோடும் பூசாரி தன் கையில் வேலை வைத்துக் கொண்டு ஆவேசம் வந்து ஆடுவான். அதனால் அவனுக்கு வேலன் என்று பெயர் உண்டாயிற்று. உரையாசிரியர்கள் படிமத்தான் என்று எழுதுவார்கள். படிமம் என்பது பிரதிமை அல்லது விக்கிரகத்தைக் குறிக்கும் சொல். முருகனுடைய திருவுருவத்தைப் பாதுகாத்துப் பூசை செய்வதால் பூசாரிக்கு அப்பெயர் வந்தது. ஆட்டைப் பலி கொடுத்து அவன் ஆடும் ஆட்டத்தை வெறியாட்டு என்று கூறுவார்கள். குறிஞ்சி நில மக்கள் தங்கள் வீட்டில் யாருக்காவது நோய் வந்தால் வேலனை அழைத்து முருகனுக்குப் பூசை போட்டு வெறியாட்டு எடுக்கச் சொல்வார்கள். அந்தப் பூசாரி வருந்தி அழைத்தால் முருகன் ஆவேச உருவத்தில் வந்து தங்களுக்கு நன்மை செய்வான் என்று குறிஞ்சி நில மக்கள் நம்பினர்.

வேலனாகிய பூசாரி முருகனுக்கு மாலை தொடுத்து வைக்கிறான். இக்காலத்தில் சில இடங்களில் கிராம தேவதைகளுக்குப் பூசை செய்யும் பூசாரிக்குப் பண்டாரம் என்று பெயர் வழங்குகிறது. பூத்தொடுக்கும் தொழிலுடையவர்களுக்கும் அப்பெயர் வழங்கும். இரண்டையும் செய்யும் பண்டாரங்களும் உண்டு. வேலன் மரபில் வந்தவர்கள் இவர்கள்.

குறிஞ்சி நிலத்து வேலன் அந்நிலத்தில் கிடைக்கும் மலர்களைப் பறித்து மாலையாகத் தொடுக்கிறான். பச்சிலைக்கொடி என்றே ஒரு கொடி உண்டு. அது ஒரே பசுந்தழையாக மண்டிக் கிடக்கும். அந்தக் கொடியினால் பூசாரி மாலை கட்டுகிறான். நடுவில் சாதிக்காயை வைத்துக் கட்டுகிறான். அது நல்ல மணத்தை வீசுகிறது. தக்கோலம் என்பது ஒரு மரம். அதன் காய் பண்டங்களைப் பொதிந்து வைக்கும் புட்டிலைப்போல இருக்கும். அதனால் அதனை அம்பொதிப்புட்டில் என்று புலவர்கள் சொல்வார்கள். சாதிக்காயை இடையிட்டுக் கட்டியதைப் போலத் தக்கோலக் காயையும் இடையிடையே வைத்துக் கட்டுகிறான். இது என்ன காய் மாலையா என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? பூமாலைதான்.

இனிமேல் மலர்களைச் சொல்கிறார். காட்டு மல்லிகையை வைத்துக் கட்டுகிறான். வெள்ளை வெளேரென்றிருக்கும் கூதாளம் பூவையும் பிணைத்துக் கட்டுகிறான். இப்படித் தொடுத்த சிறுமாலை முருகன் தலையிலே அணிவதற்கு ஏற்ற கண்ணியாக இருக்கிறது.

*கொடியிலே காய்களையும் மலர்களையும் வைத்துக் கட்டிய கண்ணியை அந்த மலைப்பக்கத்திலேதான் காணமுடியும். பூசாரி அன்புடன் கட்டும் இதை முருகன் விருப்புடன் ஏற்று அணிந்து கொள்கிறான்.*

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண் கூதாளம் தொடுத்த கண்ணியன்

*(பச்சிலைக் கொடியில் நறுமணத்தையுடைய சாதிக் காயை நடுவிலே வைத்து, பூசாரியானவன், அழகிய பண்டங்களைப் பொதித்தலையுடைய புட்டிலைப்போல விளங்கும் தக்கோலக் காயையும் விரவ வைத்து, காட்டு மல்லிகையோடு வெள்ளை நிறம்பெற்ற கூதாள மலரையும் வைத்துக் கட்டிய கண்ணியை அணிந்தவனாகி - எழுந்தருளுகிறான் முருகன் என்று சொல்ல வருகிறார்.*

*பைங்கொடி - பச்சிலைக்கொடி, நறைக்காய் - சாதிக்காய், இடுபு - இட்டு வைத்து. வேலன் - பூசாரி. அம் - அழகிய, பொதி - பொதிதல், புட்டில் - புட்டிலைப்போன்ற தக்கோலக்காய், விரைஇ - விரவி; கலந்து. குளவி - காட்டு மல்லிகை. கண்ணி - தலையில் அணியும் மாலை).*

## குன்றவாணர்

*முருகன் எழுந்தருளப்போகிறான் என்ற பேரன்புடன் குறிஞ்சி நிலத்திலுள்ள குறவர்கள் மகிழ்ச்சி மீதூர ஆடுகிறார்கள். அவர்கள் எப்போதும் விலங்குகளைக் கொல்லும் கொடிய தொழிலை உடையவர்கள். வில்லும் அம்புமே அவர்களுடைய படைகள். வில் ஒரே சமயத்தில் பல பொருள்களைத் துளைத்துச் செல்லும்படி அம்பை விடும் தன்மையுடையது. அத்தகைய வில்லை வல்வில் என்று சொல்வது மரபு, பழங்காலத்தில் வல்வில் ஓரி என்ற வீரன் ஒருவன் இருந்தான். அவன் அம்பை ஒரு விலங்கின் மேல் விட்டால் அது அந்த விலங்கை வீழ்த்துவதோடன்றித் தொடர்ந்து பல விலங்குகளின் உடம்பில் ஊடுருவிச் சென்று அவற்றையெல்லாம் மாய்த்துவிடுமாம். அதனால்தான் வல்வில் ஓரி என்ற சிறப்புப் பெயர் வந்ததாம். இராமனைக் கூட வல்வில் இராமன் என்று சொல்வார்கள்.*

*கொடுந்தொழிலையும் வல்வில்லையும் கொலையே புரிகின்ற தன்மையையும் உடைய வேடர்கள் இப்போது முருகனுடைய அன்பு மேலிட்டு அந்தக் கொடிய இயல்பு மாறிக் களிக்கூத்தாடுகிறார்கள்.*

*அவர்கள் மார்பில் சந்தனக் குழம்பு மணக்கிறது. அந்த மார்பு சந்தன நிறத்தால் பளபளவென்று இருக்கிறது. மலைக் காட்டில் சந்தன மரத்துக்குப் பஞ்சமா? நல்ல இனிய தேனைப் புளிக்க வைத்துக் கள்ளாக மாற்ற அதை*

*நீண்ட மூங்கிற் குழாயில் இட்டு வைத்திருப்பார்கள். நாளாக ஆக அது நன்றாகப் புளித்து, உண்டவர்களுக்கு அதிகமான மயக்கத்தை உண்டாக்கும். அத்தகைய கள்ளைக் குறவர்கள் உண்டு மகிழ்ந்து ஆடுகிறார்கள்.*

*மலைகளில் சின்னச் சின்ன ஊர்கள் இருக்கின்றன. அங்குள்ள குறவர்கள் தம் சுற்றத்தாரோடு கள்ளைக் குடித்து மகிழ்கிறார்கள். தொண்டகம் என்னும் பறையை அடித்துக் குரவையென்னும் கூத்தை ஆடுகிறார்கள். கைகளைக் கோத்துப் பாடி ஆடுவதைக் 'குரவைக் கூத்து' என்பார்கள். முருகனுடைய வரவை எண்ணிக் குறவர்கள் ஒரே ஆனந்தத்தில் மிதக்கிறார்கள். அவனுக்கு உரிய தொண்டகப் பறையை அடித்து அவன் புகழைப் பாடிக் குரவைக் கூத்து ஆடுகிறார்கள். அப்போது முருகன் எழுந்தருளுகிறான்.*

நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடு அமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர

*(நல்ல மணம் வீசும் சந்தனத்தை அணிந்த, நிறம் கிளர்ந்து தோன்றும் மார்பையும் கொடுமையான செயலையும் வலிய வில்லையும் உடைய கொலை செய்யும் வேடர்கள், உயர்ந்த மூங்கிற் குழாயில் பல நாள் இருந்து முற்றி விளைந்ததும் தேனாலாயத்துமாகிய கள்ளின் தெளிவை, மலையிலுள்ள சிற்றூர்களில் வாழும் தம் சுற்றத்தாருடன் உண்டு மகிழ்ந்து, தொண்டகம் என்ற சிறிய பறைக்கு ஏற்றபடி குன்றக் குரவையாகிய கூத்தை ஆட,*

*சாந்து - சந்தனம். கேழ் - நிறம். அகலம் - மார்பு. கொலைஇய - கொலை புரிகின்ற. கானவர் - வேடம். அமை - மூங்கில். தேக்கள் - தேனால் ஆன கள். தேறல் - தெளிவு. சிறுகுடி - குறிஞ்சி நிலத்து ஊர். கிளை - குற்றம். தொண்டகம் - குறிஞ்சி நிலப்பறை. அயர - ஆட).*

*குறவர்கள் குரவைக் கூத்தாட, வேலன் கட்டிய கண்ணியை அணிந்து கொண்டு பல மகளிரோடு முருகன் எழுந்தருளுகிறான். அவன் வரும் அந்தக் கோலத்தை இனிச் சொல்கிறார் நக்கீரர்.*

## உடன் வரும் மகளிர்

*முருகனுடன் அழகிய மகளிர் கூட்டம் ஒன்று வருகிறது. குறிஞ்சி நிலத்துக்குப் போவதென்றால் அந்த அணங்குகளுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி. மயிலைப் போன்ற சாயலும் நடையும் உடைய அவர்கள் தங்களை*

அலங்கரித்துக் கொண்டு வருகிறார்கள். முருகனோடு பல மயில்கள் வருவதுபோல இருக்கிறது அந்தக் காட்சி. அவர்கள் திருமேனி முழுவதும் மலர்களால் அமைந்த அலங்காரம் ஒளிர்கிறது; தலையிலே பூ. மார்பிலே பூ, இடையிலே பூ.

தலையில் கண்ணியாகச் சில மலர்களைச் செருகியிருக்கிறார்கள். நீர்ப் பூக்கள் அழகு செய்கின்றன. வண்டுகள் மொய்க்கும் மணத்தை உடையவை அவை. பேரரும்பாக இருக்கும்போதே பறித்து விரல்களாலே வலிய அலர்த்திக் கட்டித் தலையில் அணிந்திருக்கிறார்கள். ஒரே மாதிரியான பூக்கள் அல்ல; வெவ்வேறு வகையான மலர்களைக் கண்ணியாகத் தொடுத்து அணிந்திருக் கிறார்கள். கண்ணி கட்டுவதற்கு ஏற்றபடி காம்புகள் இருக்கின்றன அந்த மலர்களில்.

விரல்உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி

(விரலாலே வலிய மலர்த்துதலால் மலர்ந்தவை. வெவ்வேறு வகையாக இருப்பவை. வாசனையும் காம்பும் உடையவை. ஆழமான சுனைகளிலே மலர்ந்தவை. வண்டுகள் படிந்து மொய்க்கும் தன்மையவை ஆகிய மலர்களால் தொடுத்த கண்ணியையும் - பிறவற்றையும் உடைய மகளிர் என்று சொல்ல வருகிறார்.

உளர்ப்பு - கோதுதல்; வலிய மலர்த்துதல். கால் - காம்பு. குண்டு - ஆழம்)

பேரரும்புகளை இவ்வாறு விரலால் பிரித்து மாலையாகக் கட்டி அணிவது வழக்கம்; “தண்கயத்து அமன்ற ஒண்பூங்குவளை. அரும்பலைத்து இயற்றிய சுரும்பார் கண்ணி, பின்னுப்புறந்தாழக் கொன்னே சூட்டி” (180;5-7) என்று அகநானூற்றில் வருகிறது.

இணைத்த கோதை அணைத்த கூந்தல்

(இரட்டையாகக் கட்டிய மாலையினால் கட்டிய கூந்தலையும் - உடைய மகளிர். கோதை மாலை.)

குறிஞ்சி நிலத்துப் பெண்கள் தழை என்று கூறப்படும் ஒருவகை ஆடையை அணிவார்கள். பலவகை மலர்களும் தளிர்களும் தழைகளும் இணைத்துக் கட்டியது அது. தழைகளை மிகுதியாக வைத்துக் கட்டுவதனால் அதற்குத் தழை என்று பெயர் உண்டாயிற்று. முருகனுடன் வரும் மகளிரும் தழையாடையை இடையில் கட்டியிருக்கிறார்கள். கஞ்சாச் செடியின் பூவும்

*இலையும் அந்தத் தழையில் இருக்கின்றன. அவற்றை ஒன்றோடு ஒன்று இணைத்து முடிந்திருக்கிறார்கள். வெண் கடப்பம் பூவையும் சேர்த்துக் கட்டியிருக்கிறார்கள், மலர்களில் வண்டுகள் மொய்க்கின்றன; அவற்றில் உள்ள தாதை உண்ணுகின்றன. மலரும் தழையும் இணைந்து அமைந்த இந்தத் தழையாடை அவர்கள் இடையைச் சுற்றி உடுத்தும்படி பெரியதாக இருக்கிறது; குளிர்ச்சியுடையதாகவும் இருக்கிறது. பெருந்தண் மாத்தழை அது.*

முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மராஅந்த வால்இணர் இடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை

*(முடிந்திருக்கும் கஞ்சாவின் இலையையுடைய மணமுடைய பூவையும், சிவந்த அடியையுடைய வெண் கடம்பின் வெள்ளையான பூங்கொத்துக்களையும் இடையிடையே இட்டு, வண்டுகள் வந்து மொய்த்துத் தாதுகளை உண்ணும்படி தொடுத்து அமைத்த பெரிய குளிர்ந்த தழையென்னும் ஆடையை - உடுத்துக் கொண்டு வரும் மகளிர் என்று சொல்ல வருகிறார்.*

*குல்லை - கஞ்சா. கால் - அடிமரம். மராம் - வெண் கடம்பு. வால்இணர் - வெள்ளையான பூங்கொத்து. இடையிடுபு - நடுவில் வைத்து. சுரும்பு - வண்டு. தழை - தழையென்னும் ஆடை)*

*பல மணிகளைக் கோத்த மேகலையை அழகாகத் தம்முடைய இரகசிய உறுப்பு மறையும்படி உள்ளே அணிந்திருக்கிறார்கள் இவர்கள். அதன் மேலே இந்தத் தழையாடையை உடுத்துக்கொண்டு மயிலைப்போல நடந்து வருகிறார்கள்.*

திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு

*(திருத்தமாக அமைந்த மணிகளாலான வடங்களையுடைய மேகலையை அணிந்த இரகசிய உறுப்பில் அசையும் படி (தழையை) உடுத்து, மயிலைக் கண்டாற்போன்று வருகின்ற மெத்தென்ற நடையையுடைய பெண்களோடு - முருகன் எழுந்தருளுகிறானாம்.*

*காழ் - வடம்; இங்கே மேகலைக்கு ஆயிற்று. திளைப்ப - அசைய, பெருந்த, உடீஇ - உடுத்து, மடநடை - மெத்தென்ற நடை).*

*கண்ணியையும் கூந்தலையும் தழையாடையையும் உடைய அழகிய மகளிரோடு முருகன் குறிஞ்சி நில மக்களுக்கு அருள்புரியும் பொருட்டு எழுந்தருளுகிறான்.*

## முருகன் வருகை

*அவன் பேரழகன். வெவ்வேறு கோலம் கொண்டு அன்பர்களுக்கு அருள் புரிகிறவன். அவன் திருமேனி வண்ணம் முதலியவற்றையும் அவன் கொள்ளும் கோலங்களையும் சொல்லுகிறார் நக்கீரர்.*

*முருகன் செந்நிற முடையவன். ''குங்கும ரக்த வர்ணம்'' என்று அவனுடைய தியான சுலோகம் சொல்லும். ''பவழத் தன்ன மேனி'' (குறுந்தொகை) என்று அந்தச் செம்மேனிக்குப் பவளத்தை உவமை கூறுவர் ஒரு புலவர். அவன் உடுத்திருக்கும் ஆடையும் சிவப்பானது. "குன்றியேய்க்கும் உடுக்கை" (குறுந்தொகை) என்று அதற்குக் குன்றிமணியின் சிவப்பை உவமை கூறுவர்.*

*அவனுடைய காதில் அசோகந்தளிர் தொங்குகிறது. காதில் அசோகந் தளிரைச் செருகிக்கொள்ளும் வழக்கத்தை முன்பே பார்த்தோம். அதுவும் சிவப்பாகவே இருக்கும்.*

செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வருங் காதினன்

*(சிவந்த திருமேனியை உடையவன், செந்நிறம் பெற்ற ஆடையை அணிந்தவன், செம்மையான அடிமரத்தையுடைய அசோகினது குளிர்ச்சியான தளிர் அசையும் காதுகளை உடையவன் - ஆக எழுந்தருளுகிறான்.)*

*அரை - அடிமரம். செயலை - அசோகு. துயல்வரும் - அசையும்.)*

*இடையில் கச்சைக் கட்டிக் கொண்டிருக்கிறான். காலில் வீரக்கழண் அணிந்திருக்கிறான். வெட்சியினால் ஆகிய சிறிய கண்ணியைத் தலையிலே சூடியிருக்கிறான்.*

கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்

*(கச்சை யுடையவனாகி, கழலை அணிந்தவனாகி, வெட்சிக் கண்ணியைச் சூடியவனாகி, வருகிறான், செச்சை - வெட்கி)*

*அவன் இசையை விரும்புபவன்; இசையை எழுப்புபவன். பலவகை இன்னிசைக் கருவிகளை அவன் வாசிக்கிறான். கண்ணனைப்போல அவனும் புல்லாங்குழலை வாசிக்கிறான். கொம்பை ஊதுகிறான். இப்படியே பல சிறிய வாத்தியங்களை அவன் வாசிக்கிறான். கீத வாத்திய விநோதனாக எழுந்தருளுகிறான்.*

குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்

*(புல்லாங்குழலை வாசிக்கிறவன். கொம்பை ஊதுகிறவன். சிறிய பல வாத்தியங்களை வாசிக்கிறவனாய் - வருகிறான். கோடு - ஊது கொம்பு. பல்லியம் - பல இசைக் கருவிகள்)*

*முருகனுக்குப் பலவகை வாகனங்கள் உண்டு. முன்பு அவன் யானையின்மேல் எழுந்தருளி வந்த காட்சியைக் கண்டோம், இப்போது ஆட்டுக்கிடாய் வாகனத்தில் வருகிறான்; மயில் வாகனத்தில் எழுந்தருளுகிறான்.*

*நாரதர் இயற்றிய யாகத்திலிருந்து வந்த ஆடு அது. அது உலகையே நிலை கலங்கும்படி செய்தது. முருகன் வீரவாகுதேவரை விடுத்து அதை அடக்கிக் கொண்டு வரும்படி செய்து அதன்மேல் ஊர்த்தருளுகிறான்.*

*முருகனுக்கு இயல்பாகவே மயில் வாகனம் உண்டு.* ***எல்லா மந்திரங்களுக்கும் மூலமாகிய பிரணவமே மயிலாக நின்று முருகனுக்கு வாகனமாயிற்று****. இதுவே முதல் மயில் வாகனம்.*

***ஆன தனிமந்த்ர ரூப நிலைகொண்ட***
***தாடு மயில்***

*என்பது திருப்புகழ். சூரனோடு முருகன் போர் செய்தபோது ஆயிரங் கண்ணுடைய இந்திரன் மயிலாக மாறி முருகனுக்கு வாகனமாகிய அவனைத் தாங்கினான். அந்தப் போரின் இறுதியில் வேலால் இருகூறாகிய சூரன் மயிலும் சேவலுமானான். அந்த மயிலை வாகனமாகக் கொண்டு ஊர்ந்தருளினான் முருகன்.*

*முருகனுடைய திருக்கரத்தில் நாத தத்துவமே கோழியாக இருக்கிறது. சூரசங்காரத்தின்போது சூரனுடைய ஒரு கூறு சேவலாக மாற, அதையும் வெற்றிக் கொடியாக முருகன் ஏந்தினான்.*

*முருகன் நெட்டையான வடிவமுடையவன். நெடுவேள் என்று சொல்வார்கள். தோள்வளைகளை அணிந்து கொண்டிருக்கிறான். இந்த அழகிய கோலத்தோடு அவன் வருகிறான்.*

தகரன் மஞ்ஞையன் புகர்இல் சேவல்அம்
கொடியன் நெடியன் தொடிஅணி தோளன்

*(ஆட்டின்மேல் ஏறுபவனாய், மயில் ஊர்ந்தவனாய், குற்றமற்ற சேவற் கொடியை ஏந்தியவனாய் நெடிய திருவுருவமுடையவனாய், வாகுவலயங்களை அணிந்த தோள்களையுடையவனாய் - எழுந்தருளுகிறான்.*

*தகர் - ஆடு. புகர் - குற்றம். கொடி - வளை).*

*சேவல் என்பது மயிற் சேவலையும் குறிப்பதாகக் கொள்ளலாம். முருகனுக்கு மயிற்கொடியும் உண்டு.*

*மலைகளிலும் அவற்றைச் சார்ந்த இடங்களிலும் குறிஞ்சி நில மக்கள் வழிபட்டு நடத்தும் பூசையை ஏற்றுக்கொண்டு, முருகன் எழுந்தருளும் அழகைச் சொல்லிக்கொண்டு வருகிறார் நக்கீரர். அவனுடன் பல அழகிய மகளிர் வருகிறார்கள். சிலர் இனிய குரலெழுப்பிப் பாடுகிறார்கள். சிலர் கூடி ஆடுகிறார்கள்.*

*பாடுகிறவர்களின் குரலின் இனிமையை எப்படி வருணிப்பது. ஒரு பெண் பாடியதைச் சீவக சிந்தாமணி ஆசிரியர் கூறுகிறார். இவள் பாடினாளோ, அல்லது வீணைதான் நாவைப் பெற்றுப் பாடியதோ என்று யாவரும் உருக அவள் பாடினாளாம்.*

*இருங்கடற் பவளச் செவ்வாய்*
*திறந்திவள் பாடினாளோ*
*நரம்பொடு வீணை நாவின்*
*நவின்றதோ என்று நைந்தார்*

*அவள் குரலுக்கும் வீணையின் இசைக்கும் வேறுபாடு தெரியாமல் அவ்வளவு இனிமையும் கார்வையும் உடையதாக இருந்ததாம். இங்கே முருகனுடன் வருகிறவர்களும் அப்படித் தான் பாடுகிறார்கள். வீணையின் நரம்பிலிருந்து இசை தொகுதியாக எழுந்தால் எப்படி இருக்கும். அவ்வளவு இனிமையாக இருக்கிறது அந்த மகளிரின் இசை. அவர்கள் கூட்டமாக இருந்து பாடுகிறார்கள். முருகனுக்கு இசையென்றால் விருப்பம் அதிகம்.*

நரம்புஆர்த்து அன்ன இன்குரல் தொகுதியொடு

*(யாழின் நரம்பு ஒலித்தாற் போன்ற இனிய குரலை எழுப்பிப் பாடும் மகளிர் கூட்டத்தோடு - முருகன் எழுந்தருளுகிறான். ஆர்த்தன்ன - ஆர்த்தாலன்ன; ஒலித்தாற் போன்ற தொழுதி - தொகுதி; கூட்டம்).*

*'இவர்கள் தன்னைச் சேவித்துப் பாடும் மகளிர்', என்று இனம் காட்டுவர் நச்சினார்க்கினியர்.*

*முருகன் இடையிலே கட்டிய ஆடை நல்ல நிறமும் நயமும் மணமும் உடையதாக இருக்கிறது. சிறிய சிறிய புள்ளிகளை உடையதாய், வாசம் ஊட்டியதாய், மிகவும் மெல்லியதாய் இருக்கும். அது நிலத்திலே கிடந்து புரளுகிறது.*

*வணக்கமுள்ளவர்கள் ஆடைகளை மடக்கிக் கொண்டு தலைவர்கள் முன் நிற்பார்கள். தலைவர்களோ தம் ஆடை நிலத்தில் புரளும்படி உடுப்பார்கள். மேல் நாட்டு அரசர்கள் அரசிகள் இவ்வாறு தம் ஆடை நிலத்தில் புரளும்படி உடுத்திருப்பதைப் படங்களில் காணலாம். அவர்கள் நடக்கும்போது ஆடை நுனிகளை எடுத்துச் செல்லச் சில ஏவலர்கள் அருகில் இருப்பார்கள்.*

*"நிலந்தோய்பு உடுத்த நெடுநுண் ணாடையர்"*

*என்று இத்தகைய பெருமக்களைப் பற்றிய பெருங்கதை என்னும் பழங்காவியம் கூறும்.*

*முருகன் பெருமதிப்புடைய பெரிய தலைவனாகையால் அவன் இடையிலே கட்டிய துகில் நிலத்திலே பொருந்திப் புரளுகிறது.*

குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலன்நேர்பு துகிலனன்

*(சிறிய புள்ளிகளை உடையதாய் மணமும் தண்மையும் மென்மையும் உடையதாய் இடுப்பிலே கட்டிய, நிலத்திலே புரளுதலையுடைய துகிலை உடையவன்.*

*பொறி - புள்ளி. சாயல்- மென்மை. மருங்கு - இடை. நேர்பு - பொருந்திப் புரளுதல்).*

*குறும்பொறி என்பதற்கு உதரபந்தம் என்று பொருள் கொள்வர் நச்சினார்க்கினியர். 'இடையிலே இறுகக் கட்டிய உதர பந்தத்தின் மேலே உடுப்பதாக உட்கொண்ட, நாலவிட்டமையால் நிலத்தைப் பொருந்தி நறிய குளிர்ந்த மென்மையை உடைத்தாகிய துகிலினையுடுத்து' என்று அவர் பொருள் எழுதுவர்.*

## தலைக்கை தருதல்

*முருகன் அழகும் வீரமும் உடையவன். அவனுடைய புயங்கள் விசாலமானவை; முழவைப்போலப் பருத்தவை. பல மகளிர் கூடி ஆடும்போது அவர்களுக்குத் தோள் கொடுத்து முருகனும் ஆடுகிறான். அவன் தோளும் கையும் வண்மையை உடையவை. மகளிர் தோள்கள் மென்மையுடையவை. மெல்லியலாராகிய அவர்கள் பெண்மான்களைப் போல இருக்கிறார்கள். அவர்கள் ஒருவர் கையை ஒருவர் கோத்துக் கொண்டு குரவைக்கூத்து ஆடுகிறார்கள். அப்படிப் பல, மகளிர் ஆடும்போது ஓர் ஆடவன் அவர்களுக்கு*

முதல்வனாக நின்று அவர்களுடன் கை கோத்து ஆடுவான். அவன் முதலில் நின்று கை தருவதைத் தலைக்கை தருதல் என்று கூறுவார்கள்.

முருகன் குரவைக் கூத்தாடும் மகளிருக்குத் தலைக்கை தந்து ஆடிக்கொண்டே வருகிறான். ஆடலிலும் பாடலிலும் மகிழும் பெருமான் அவன்.

முழவுஉறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து

(முழவைப் போலப் பெருத்த விசாலமான கைகளால் ஏற்ற வண்ணம் ஏந்திக் கொண்டு, மெல்லிய தோளையுடைய மான்போன்ற பல மகளிரைத் தழுவி, அவர்களுக்குத் தலைக்கை கொடுத்து.

முழவு - மத்தளம். தடக்கை - விசாலமான கை; குரவைக் கூத்துக்கு ஏற்ப வளைந்த கை என்றும் சொல்லலாம். இயல - பொருந்த குரவைக் கூத்து நன்கு நடைபெற என்றும் பொருள் கொள்ளலாம். ஏந்தி - மகளிர் கையைத் தாங்கி. பிணை - பெண்மான்; இங்கே ஆகுபெயராய்க் குரவைக் கூத்தாடும் மகளிரைக் குறித்தது, தழீஇ-தழுவி. தலைத்தந்து - தலைக் கையைத் தந்து).

மென்றோள் பல்பினை இயல முழவுறழ் தடக்கையின் தழிஇ ஏந்தித் தலைத்தந்து, என்று கூட்டி, 'மெல்லிய தோளினையுடைய பலவாகிய மான்பிணை போலும் மகளிர் குரவை ஆடி அசைய, தன்னுடைய முழவையொத்த பெருமையையுடைய கையினாலே அவர்கள் கையினைத் தழீஇ எடுத்துக் கொண்டு முற்கை கொடுத்து' என்று உரை எழுதுவர் நச்சினார்க்கினியர்.

இவர்கள் 'மெய்தீண்டி விளையாடுவதற்குரிய மகளிர்' என்று அவர் விளக்குவார்.

பல மகளிர் கையைக் கோத்துக் கொண்டு ஆடுவதைக் 'குரவைக் கூத்து' என்பர். குறிஞ்சி நிலத்தில் ஆடுவதைக் குன்றக் குரவையென்றும், முல்லை நிலத்தில் ஆடுவதை ஆய்ச்சியர் குரவையென்றும் கூறுவர். ஆடலும் பாடலும் கந்தனுக்கும் கண்ணனுக்கும் மிகவும் உகந்தவை. ஆதலின் அவர்களைத் தெய்வமாக உடைய குறிஞ்சியிலும் முல்லையிலும் குரவைக் கூத்தை மிகுதியாகக் காணலாம். சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவையும், ஆய்ச்சியர் குரவையும் வருகின்றன.

குரவை என்பது கூறுங்காலைச்
செய்ததோர் செய்த காமமும் வென்றியும்
எய்தக் கூறும் இயல்பிற் றாகும்.

*என்பது பழைய சூத்திரம். குரவையாடுபவர்கள் காதலையும் வீரத்தையும் பாராட்டிப் பாடுவார்கள் என்று இதனால் தெரிகிறது.*

*குரவை என்பது எழுவர் மங்கையர்*
*செந்நிலை மண்டலக் கடக் கைகோத்து*
*அந்நிலைக் கொப்பநின் றாடலாகும்*

*என்பது மற்றொரு பழைய சூத்திரம்.*

*குரவைக் கூத்தே கைகோத் தாடல்*

*என்பது திவாகரம்.*

*கலித்தொகையில் மகளிர் ஆடும் கூத்தில் ஆடவன் தலைக்கை தந்து ஆடும் காட்சியைக் காணலாம்.*

*நிரைதொடி நல்லவர்*
*துணங்கையுள் தலைகொள்ளக்*
*கரையிடைக் கிழிந்தநின்*
*காழகம்* *(கலித்தொகை, 73)*

*பெருவீரனாகிய முருகன், குரவைக் கூத்தாடும் மகளிருக்குத் தலைக்கை தந்து அவர்களுடைய கூத்து நன்கு நடைபெற உதவுகிறான்.*

*இவ்வாறு பலவகைக் கோலம் கொண்டு, பல இசைக்கருவிகளை இசைத்து, பாடும் மகளிருடனும் ஆடும் மகளிருடனும் சேர்ந்து முருகன் மலைகள் எல்லாவற்றிலும் திருவிளையாடல் புரிகிறான்.*

**குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே; அதாஅன்று.**

*(ஒவ்வொரு மலையிலும் திருவிளையாடல் புரிவதும் நிலைபெற்ற அவனுடைய இயல்பாகும்; அதுமட்டும் அன்று. நின்ற தன் பண்பே என்று பிரிக்க வேண்டும். தன் என்றது அவனுடைய என்ற பொருளையுடையது).*

*மலைகள் பல; அவை குறிஞ்சித் திணையின் பாற்படும். அவற்றையெல்லாம் தனக்குரியனவாகக் கொண்டு ஆட்சி புரிபவன் முருகன். ஆதலின் அந்தக் குன்றுகளில் அவன் பலபல கோலத்துடன் வருகிறான். பல விளையாடல்களை நிகழ்த்துகிறான். அதனால் அவனுடைய அழகும், அலங்காரமும், வீரமும், காதலும், இசைவன்மையும், ஆடல் விருப்பமும், அன்பர்களுக்கு அருள் செய்யும் பேரருளும் புலனாகின்றன.*

## பல குன்று

*இப்படிப் பல மலைகளிலும் அவன் ஆடும் இயல்பைப் புலப்படுத்திய நக்கீரர் திருவாக்கை அடிப்படையாகக் கொண்டு எல்லா மலைகளையும் ஒரு தொகுதியாக்கி, குன்றுதோறாடல் என்ற தொகுதிப் படைவீடாக அன்பர்கள் போற்றலாயினர்.*

*குன்றுதோறாடல் என்பதற்கு ஒவ்வொரு குன்றிலும் விளையாடுதல் என்றே பொருள்கொள்ள வேண்டும். ஆடல் என்பது தொழிற்பெயர். அருணகிரிப் பெருமான்,*

*"குன்றுதொ றாடல் மேவு பெருமாளே*
*குன்றுதோ றாடல் மேவிய பெருமாளே"*

*என்று பாடிய இடங்களிலும் ஆடலை மேவியவன் என்றே பொருள் கொள்ளும்படி வைத்தார். ஆறுபடை வீடுகளையும் பாடவந்த கச்சியப்ப சிவாசாரியார்,*

*"குன்றுதோ றாடிய குமரற் போற்றுவோம்"*

*என்று பாடினார்.*

*தனியே பெயராகச் சொல்லும்போது இந்தப் படைவீட்டைப் 'பலகுன்று' என்று சொல்வதே பொருத்தம் என்று தோன்றுகிறது. அருணகிரிநாத முனிவர்,*

*"பலகுன்றிலும் அமர்ந்த பெருமாளே*
*பலமலை யுடைய பெருமாளே"*

*என்று பாடியிருப்பதும் இங்கே நினைவிற்கொள்ளுவதற்குரியது.*

# பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார்

## குன்றுதோறாடல்

### *வெறியாட்டயரும் வேல்மகனியல்பு*

*189 - 197 :* அதாஅன்று ................. அயர

***பொருளுரை :*** *அதாஅன்று - அதுவேயன்றி, வேலன் பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு - படிமத்தான் பச்சிலைக்கொடியாலே நறுநாற்றத்தை யுடைய காயை நடுவே இட்டு, அப்பொதிப் புட்டில் விரைஇ - அழகினை யுடைத்தாகிய தக்கோலக் காயைக் கலந்து, குளவியோடு வெண்கூதாளம் தொடுத்த கண்ணியன் - காட்டுமல்லிகையுடனே வெண்டாளியையும் கட்டின கண்ணியை உடையவனாய், நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின் - நறிய சந்தனத்தைப் பூசிய நிறம் விளங்கும் மார்பினையுடைய, கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர் - கொடிய தொழிலையுடைய வலிய வில்லாற் கொல்லுதலைச் செய்த குறவர். நீடு அமை விளைந்த தேம் கள் தேறல் - நெடிய மூங்கிலிலே யிருந்து முற்றின தேனாற் செய்த கட்டெளிவை, குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து - மலையிடத்தேயுள்ள சிறிய ஊரிலே இருக்கின்ற தம் சுற்றத்தோடே உண்டு மகிழ்ந்து, தொண்டகச் சிறுபறை குரவை அயர - அந்நிலத்துக்குரிய தொண்டகமாகிய சிறுபறையினது தாளத்திற்குக் குரவைக் கூத்தை யாடாநிற்ப;*

***கருத்துரை :*** *அத்திருவேரகமும் அல்லாமல் படிமத்தான் பச்சிலைக் கொடியாலே நறிய நாற்றத்தையுடைய காயை இடையே இட்டுத் தக்கோலக் காயையும் கலந்து காட்டுமல்லிகையுடனே வெண்டாளியையும் கட்டின கண்ணியை உடையனாய் நறிய சந்தனத்தைப் பூசிய மார்பினையுடைய கொடிய தொழிலையுடைய வில்லாலே கொல்லுதலைச் செய்த குறவர்கள் மூங்கிற் குழாயிலே தேனைப் பெய்து முற்றச் செய்து கள்ளை மலைநிலத்துச் சிறிய ஊரிலுள்ள தம் சுற்றத்தாரோடே உண்டு மகிழ்ந்து தொண்டகப்பறையை முழக்கி அதன் தாளத்திற்கியைய ஆடா நிற்பர் என்பதாம்.*

***அகலவுரை :*** வேலன் என்னும் எழுவாய் ஆடலும் (உகஎ) பண்பு என்று *முடியும். பைங்கொடி - பச்சிலைக் கொடி "எல்லாவற்றிலும் பசுத்திருத்தலிற் பச்சிலை என்று பெயர் பெற்றது" என்பர் நச்சினார்க்கினியர். நறைக்காய் - சாதிக்காய். இடைஇடுபு - நடுவேஇட்டு - தக்கோலக்காய் புட்டில் போறலின் புட்டில் எனப்பட்டது. விரைஇ - கலந்து. குளவி - காட்டுமல்லிகை. வெண்கூதாளம் - வெண்டாளி. சாந்து - சந்தனம். கேழ் - நிறம். கிளர்தல் - விளங்குதல். மார்பினையுடைய குறவர் எனக் குறவர்க்குச் சொற்கிடந்தவாறே அடையாக்குக. வேலனுக்கு ஏற்றி மொழிவர் நச்சினார்க்கினியர்.*

கொடிய தொழிலையுடைய வலிய வில்லாலே கொலைசெய்த கானவர் என்க. இவர் குறிஞ்சி நிலமாக்கள். அவர் செய்தியும் தெரிந்தோதினர் என்க.

மூங்கிற் குழாயிற் தேனைப் பெய்து முதிர்வித்துக் கள் சமைத்தலை, "வேய்ப்பெயல் விளையுட் டேக்கட் டேறல்" எனவும், "திருந்தமை விளைந்த தேக்கட் டேறல்" (மலைபடு களக - ருஉஉ) எனவும் மலைபடு கடாத்தினும், "தூம்பகம் பழுநிய தீம்பிழி" எனப் பதிற்றுப்பத்தினும் "நெடுங்கணாடமைப் பழுநிக் கடுந்திறற் பாப்புக்கடுப்பன்ன தோப்பி" எனவும், "அம்பணை விளைந்த தேக்கட்டேறல்" (ஙசஅ; சா-எ. ஙநுஅ: கச) எனவும் அகத்தினும் பிற சான்றோர் கூறுதலானும் உணர்க. அமை - மூங்கில். இக் கள் மிக இனிதாதல் பற்றித் தேக்கட்டேறல் என்றார். தேம் - இனிமை. கட்டேறல் - கள்ளின் தெளிவென்க.

குன்றகச் சிறுகுடி - மலையகத்தே உள்ள சிறிய ஊரிலுள்ள குடி என்ப. 'சிறுகுடியீரே! சிறு குடியீரே! (குன்றக் குரவை) என்றார் சிலப்பதிகாரத்தும், முருகனுக்கு மலைநிலத்தார் விழாவெடுக்கும்போது தம் சுற்றத்தாராகிய அயலூரில் வாழ்வோரையும் அழைத்து அவரோடு கள்ளுண்டு மகிழ்ந்து குரவை ஆடுதல் வழக்கம் ஆதலை உணர்க. குறவர் இங்ஙனம் கூத்தாடுதலை,

"அருங்குறும் பெறிந்த கானவ ருவகை
திருந்துவேல் அண்ணற்கு விருந்திறை சான்மென
நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு
மன்றோல் சிறுபறை கறங்கக் கல்லென
வான்றோய் மீமிசை யயருங் குரவை" (மலைபடு. - ஙகஅ-உஉ)

எனவரும் மலைபடு கடாஅத்தானும் உணர்க.

தொண்டகம் - குறிஞ்சிப்பறை. "தொண்டகந் தொடுமின் சிறு பறை தொடுமின்" (குன்றக்குரவை) என்றார் இளங்கோவும்,

குரவை - ஒருவகைக் கூத்து. இஃது எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்தாடும் கூத்தென்பர். வரிக்கூத்துள் ஒருறுப்பென்றும், விநோதக்கூத்து ஆறனுள் ஒன்றென்றும் உரைப்ப. விநோதக்கூத்து குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என்னும் ஆறுமாம். குறவர்கள் குரவையாடி முருகவேளைப் பரவுதலைச் சிலப்பதிகாரத்தில் குன்றக் குரவையானே அறிக. அயர்தல் - ஆடுதல்.

### மலைநிலத்து மகளிர் மாண்பு

**198 - 205 : விரல் ................ மகளிரொடு**

**பொருளுரை :** விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங் கான் - விரலது

அலைப்பாலே மலர்ந்தமையாலே வேறுபடுகின்ற நறிய மணத்தையுடைய, குண்டு சுனைபூத்த வண்டுபடு கண்ணி - ஆழ்ந்த சுனையிற் பூத்த மலராலே புனையப்பட்ட வண்டு வீழ்கின்ற மாலையினையும், இணைத்த கோதை - பிணைக்கப்பட்ட மாலையினையும், அணைத்த கூந்தல் - சேர்த்தின கூந்தலையும் உடையராய், முடித்த குல்லை - இலையைத் தலையிலே அணிந்த கஞ்சங்குல்லை யினையும், இலைஉடை நறும்பூச் செங்கால் மரா அத்த வால் இணர் இடை இடுபு சுரும்பு உணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை - நறிய பூங்கொத்துக்களையும் செவ்விய காலினையுமுடைய மராத்திடத்தனவாகிய வெள்ளிய கொத்துக்களை நடுவே வைத்துச் சுரும்பு தேன் உண்ணும்படி தொடுத்த பெரிய குளிர்ந்த அழகினையுடைய தழையை, திருந்து காழ் அல்குல் திளைப்ப உடீஇ - திருந்திய வடங்களையுடைய அல்குலிடத்தே அசையும்படி உடுத்து, மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு - சாயலுடைமையான மயிலைக் கண்டாற்போன்ற மடப்பம் பொருந்திய நடையையுடைய மகளிரோடேயும்;

***கருத்துரை :*** *விரலாலே வலிந்து அலர்த்தப்பட்டமையானே மணம் வேறுபடுகின்ற சுனையிற்பூத்த மலராலே புனையப்பட்ட வண்டுகள் மொய்க்கும் கண்ணியையும், பிணைக்கப்பட்ட பிற மாலைகளையும், சேர்த்தின கூந்தலையும் உடையராய், கஞ்சங்குல்லையினையும், நறிய பூங்கொத்துக்களையும், மராமரத்து மலர்க்கொத்துக்களை இடையே இட்டுத் தொடுக்கப்பட்ட பெரிய குளிர்ந்த அழகிய தழையை, வடங்கள் திருந்திய அல்குலிடத்தே ஆடையாக உடுத்து மயிலைக் கண்டாற் போன்ற சாயலையுடைய மகளிரோடேயும் என்பதாம்.*

***அகலவுரை :*** *அலரும் பருவமுடைய அரும்பைப் பறித்து இயல்பாக அது மலர்வதன்முன் விரலால் அலைத்து அலர்த்தித் தொடுத்த கண்ணி என்க. இக் கண்ணி இயல்பாக மலர்ந்த மலர் நாற்றத்திற் சிறிது வேறுபட்ட நாற்றமுடைத்தென்பார் வேறுபடு நறுங்கான் என்றார். "திரிந்து மோந்தன்ன சிறந்துகமழ் நாற்றம்" (567) என்றார் மதுரைக்காஞ்சியினும். கான் - மணம். "கான்பயந்த கண்ணி", (பெரும் பாண். இறுதிவெண்பா) என்புழியும், அஃதப் பொருட்டாதல் காண்க. "தண்கயத்தமன்ற வொண்பூங்குவளை அரும்பலைத் தியற்றிய சுரும்பார் கண்ணி பின்னிப்புறந்தாழக் கொன்னே சூட்டி" (அகம். 180 : 5-7) என்றும், "கூருகிர் விடுத்ததோர் கோல மாலை" (சீவக - 1496) என்றும் பிறரும் ஓதுதல் காண்க.*

*இணைத்த கோதை என்றது, வேறுவேறு மாலைகளை இணைத்த மாலை என்றவாறு. அணைத்த - சேர்த்திய. அணைத்த கூந்தலாவது, இடுமயிர் என்க.*

*இனி, அக் குறிஞ்சிநில மகளிர் உடுத்துள்ள தாழையாடையின் இயல்பு ஓதுகின்றார். குல்லை - கஞ்சங் குல்லை, இதனைக் கஞ்சா என்றும் கூறுப.*

"கஞ்சங் குல்லை கஞ்சா வாகும்" என்பது திவாகரம். இலையுடை நறும்பூ என்றது, இலையோடு கூடிய நறிய பூங்கொத்து என்றவாறு. செங்கால் - சிவந்த அடிப்பகுதி. மராம் - கடம்பு. வாலிணர் - வெள்ளிய பூங்கொத்து. இடையிடுபு - நடுநடுவே இட்டு, குல்லைப் பூவையும் கடம்பம்பூவையும் பெரிய அழகிய தழையிடையே இட்டு ஆடைபோலப் புலைந்து உடுத்தி என்க.

பண்டைக்காலத்தே மகளிர் இங்ஙனம் தழையாலே ஆடை இயற்றி உடுத்தும் வழக்கமுடையர் என்பதை, "பல்பூம் பகைத் தழை நுடங்கும் அல்குல்" (நற்றிணை, 8-2) என்றும்,

> "தண்ணறும் பிடவமும் தவழ்கொடித் தளவமும்
> வண்ணவண் டோன்றியும் வயங்கிணர்க் கொன்றையும்
> அன்னவை பிறவும் பன்மலர் துதையத்
> தழையும் கோதையும் இழையும் என்றிவை
> தையினர் மகிழ்ந்து திளைஇ விளையாடு
> மடமொழி யாயத் தவர்" (கலி. 102 : 2-7)

என்றும்,

> "அம்பூந் தொடலை அணித்தழை அல்குல்
> செம்பொறிச் சிலம்பின் இளையோள்" (புறம். 341 : 2-6)

என்றும்,

> "............................ மென்றளிர்க்
> கொழுங்கொம்பு கொழுதி நீர்நனை மேவர
> நெடுந்தொடர்க் குவளை வடிம்புற அடைச்சி"
> (மதுரைக். 586 - 8)

என்றும்,

> "................................ கிளையிதழ் பறியாப்
> பைவிரி யல்குல் கொய்தழை தைஇ" (குறிஞ்சி. 101-2)

என்றும் பிறசான்றோர் ஓதுமாற்றானும் உணர்க. இம் மகளிர் "முருகனைச் சேவிக்கும் மகளிர்" என்பர் நச்சினார்க்கினியர்.

## இதுவுமது

### 206 - 217 : செய்யன் ................ பண்பே

**பொருளுரை : செய்யன் - சிவந்த திருமேனியுடையனாய், சிவந்த ஆடையன் - சிவந்த ஆடையை உடையனாய், செவ்வரைச் செயலைத் தண் தளிர் துயல்வரும் காதினன் - சிவந்த அரையினையுடைய அசோகின் குளிர்ந்த**

*தளிர் அசையாநின்ற செவியை உடையனாய், கச்சினன் - கச்சைக் கட்டியவனாய், கழலினன் - வீரக்கழல் கட்டியவனாய், செச்சைக் கண்ணியன் - வெட்சிமாலை சூடியவனாய், குழலன் - குழலை ஊதுபவனாய், கோட்டன் - கொம்பைக் குறிப்பவனாய், குறும்பல்லியத்தன் - சிறிய இசைக்கருவிகளை ஒலிப்பவனாய், தகரன் மஞ்ஞையன் புகர் இல் சேவலங் கொடியன் - கிடாவையும் மயிலையும் உடையனாய்க் குற்றமில்லாத கோழிக்கொடியை உயர்த்து, நெடியன் - தான் வேண்டிய வடிவு கோடலில் பிள்ளையாயிராது நெடுக வளர்ந்து, தொடியணி தோளன் - தொடியை அணிந்த தோளையுடையனாய், நரம்பு ஆர்த்தன்ன இன்குரல் தொகுதியொடு - நரம்பு ஆரவாரித்தாலொத்த இனிய மிடற்றையுடைய அம் மகளிர் கூட்டத்தோடேயும், குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல் - உதரபந்தனத்தின் மேலே உடுப்பதாகக் கொண்டதும் நறிய குளிர்ந்த மென்மை யுடையதுமாகிய, மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன் - இடையிலே கட்டப்பட்ட நிலத்தினளவும் தூங்காநின்ற துகிலையுடையவனாய், முழவு உறழ் தடக்கையின் இயல் ஏந்தி - முழவையொத்த பெருமையுடைய கைகளாலே பொருந்தத் தாங்கி, மென்தோள் பல்பிணை தழீஇ - மெல்லிய தோளையுடைய மான்பிணைபோலும் பல மகளிரைத் தழுவிக்கொண்டு, தலைத்தந்து - அவர்கட்கு ஏற்ற இருக்கை கொடுத்து, குன்று தோறு ஆடலும் - மலைகள்தோறும் சென்று விளையாடுதலும், நிலைஇய பண்பே - தனக்கு நிலைநின்ற குணமாக.*

***கருத்துரை :*** ***சிவந்த திருமேனியையுடையனாய்ச், சிவந்த ஆடையை யுடையனாய், அசோகினது குளிர்ந்த தளிர் அசையாநின்ற செவியை உடையனாய்க் கச்சணிந்தவனாய்க் கழல்கட்டியவனாய், வெட்சிமாலை சூடியவனாய்க் குழலை ஊதிக் கொம்பைக் குறித்துச் சிறிய இசைக்கருவிகளை ஒலித்துக் கிடாயையும் மயிலையும் உடையவனாய்க் கோழிக் கொடியை உயர்த்தவனாய், நெடியனாய்த் தொடியை அணிந்த தோளுடையனாய், யாழ்நரம்பு போன்ற இனிய குரலுடைய மகளிர் கூட்டத்தோடேயும்; உதரபந்தனத்தின் மேலே உடுப்பதாகக்கொண்ட நறிய குளிர்ந்த மேன்மைமிக்கதாகிய இடையிற் கட்டிய ஆடை நிலத்தளவும் தூங்கப் பெற்றவனாய் முழவை ஒத்த பெரிய கைகளாலே பொருந்த ஏந்தி மெல்லிய தோளையுடைய மான்பிணைபோன்ற பல மகளிரைத் தழுவிக்கொண்டு அவர்க்கு இடமளித்து மலைகள்தோறும் சென்று விளையாடுதலும் அம் முருகக்கடவுள் ஆண்டு நிலைநின்றதனால் உண்டாய குணமாம் என்பதாம்.***

***அகலவுரை :*** ***வேலன் கண்ணியனாய்க் கானவர் குரவை அயரக் கண்ணியையும் கூந்தலையும் உடையராய்க் கழையை உடீஇ மயில் கண்டன்ன***

மகளிரொடும் செய்யனாய்க் காதினனாய்க் கச்சு முதலியவற்றை உடையவனாய்த் தொகுதியொடும் கையினேந்திப் பிணை தழுவிக் குன்றுதோறும் ஆடுதலும் அம் முருகக்கடவுள் ஆண்டு நிலைத்து நிற்றலால் உண்டாகிய பண்பே எனக் கூட்டிக் கொள்க. ஆதலால், ஆண்டும் அவ்விறைவனைக் காணலாம் என ஆற்றுப்படுத்தவாறு;

இதனை இவ்வாறு பொருட் பொருத்தமுறப் பொருள் காணமாட்டாது தத்தம் மனம்போனவாறே பிறரெல்லாம் வெவ்வேறாக உரைத்தனர். அவருள் நச்சியார்க்கினியர்,

"கானவர் குரவை யயர அதனைக் கண்டு மென்றோட் பல்பிணை குரவையாடி, அசைய அதனைப் பொறாதே செய்யன் வேலன் தொடுத்த கண்ணியைச் சூடி உடுத்துப் பொருந்திக் கட்டி யணிந்து சூடி ஊதிக்குறித்து எழுப்பிப் பின்னிட்டு ஏறி உயர்த்து வளர்ந்து தொடியை அணிந்து துகிலையுடுத்துத் தொகுதியுடனே மகளிரோடே மலைகடோறும் சென்று தழீஇ ஏந்தித் தலைத்தந்து ஆடலும் நின்ற தன் பண்"பென வினைமுடிவு செய்வர்.

ஈண்டுச் செய்யன் முதலியவற்றை முருகனுக்கேற்றி நச்சினார்க்கினியர் கூறுதல் வெளிப்படை.

ஆசிரியர் நக்கீரர், இப்பகுதியால் உணர்த்துவது "குறிஞ்சிநிலத்தின்கண் வேன்மகன், முருகக்கடவுளுக்குரிய ஆடை, ஊர்தி, கொடி முதலியவற்றை உடையனாய்க் குரவைக் குத்தாடும் கானவரோடும், மகளிரொடும், பாடும் மகளிரொடும் குன்றுகளிலே முருகனுக்கு விழவெடுத்து ஆடுகின்றானன்றோ (அவ்வாடலினும் முருகன் அவ்வேன் மகன்மேற் றோன்றி நிற்கும் ஆதலின்) அவ்வாடலும் அக்கடவுள் ஆண்டு அவர் விழவினை ஏற்று வெளிப்பட்டு நின்ற குணத்தாலேயாகும். ஆதலால், ஆண்டும் முருகனைக் காணுதல் கூடும்" என்பதாம்.

தெய்வமேறி யாடுவோர் அத்தெய்வத்திற்குரிய வேடங்கொண்டு ஆடுதலும் அங்ஙனம் ஆடுவார்மேல் அத்தெய்வமேறி மக்கட்கு அளித்தலுமான உண்மையைச் சிலப்பதிகாரத்துள் வேட்டுவவரியில் சாலினி (தேவராட்டி) தெய்வமுற்று மெய்ம்மயிர் நிறுத்துக் கையெடுத்தோச்சி ஆடி நின்றாளை,

"சிறுவெள் ளரவின் குருளைநாண் சுற்றிக்
குறுநெறிக் கூந்தல் நெடுமுடி கட்டி
இளைசூழ் படப்பை இழுக்கிய ஏனத்து

*வளைவெண் கோடு பறித்து மற்றது*
*முளைவெண் டிங்கள் என்னச் சாத்தி*
*மறங்கொள் வயப்புலி வாய்பிளந்து பெற்ற*
*மாலை வெண்பற் றாலிநிரை பூட்டி*
*வரியும் புள்ளியும் மயங்கு வான்றபுத்*
*துரிவை மேகலை யுடீஇப் பரிவொடு*
*கருவில் வாங்கிக் கையகத்துக் கொடுத்துத்*
*திரிதரு கோட்டுக் கலைமே லேற்றிப்*
*பாவையுங் கிளியும் தந்தனர் பரசி"*

*அவளைக் கொற்றவையாகக் கொண்டு வழிபடுதலும், அங்ஙனம் வழிபடும் அவர்க்கு அக்கொற்றவைதானும் அருள் கூர்ந்து அச்சாலினியின் மேல் எழுந்தருளி, அவள் நாவைத் தன்னாவாகக் கொண்டு அவர்க்கு அருள் வழங்குதலும், ஆண்டு ஒருசார் நின்ற கண்ணகியாரை அச்சாலினி முதலிய யாரும் முன்னர் அறியாராகவும், அவரை நோக்கியவுடன் உவந்து,*

*"இவளோ, கொங்கச் செவ்வி குடமலை யாட்டி*
*தென்றமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து*
*ஒருமா மணியா யுலகிற் கோங்கிய*
*திருமாமணி"*

*என அப் பத்தினித் தெய்வத்தின் எதிர்கால நிலைமையினையும் மாண்பினையும் வாய்மையாக எடுத்தோதிப் புகழ்தலும் ஆகிய நிகழ்ச்சிகளால் தெற்றெனத் தெளிக. ஈண்டுச் சாலினிபாற் கொற்றவை நிலைநின்ற பண்பினை இளங்கோ கூறுமாறு போன்றே, நக்கீரனாரும் முருகக் கடவுள் குன்றுதொறும் ஆடும் வேலன் மேனின்ற பண்பினை யுரைக்கின்றார் என்க.*

*செய்யன் என்றது, சிவந்த மேனியுடையன்போன்று வேடங் கொண்டவனாய் என்றவாறு, செவ்வரைச் செயலை - சிவந்த அடிப்பகுதியையுடைய அசோகமரம். அசோகந் தளிரைச் செவியிலே அணிந்து கொள்ளும் வழக்கத்தை, "வண்காது நிறைந்த பிண்டியொண்டளிர் நுண்பூ ணாகந் திளைப்ப" (முருகு - 31-2) என இவரே முன் கூறியமையானும் "சாய் குழைப் பிண்டி தளிர் காதிற் றைஇயினாள்" எனவும், "கடிமலர்ப் பிண்டி தன் காதிற் செரீஇ" (பரி-11-95, 12-88) எனவும், "ஒண்பூம் பிண்டி யொருகாது செரீஇ" (குறிஞ்சி-119) எனவும் பிற சான்றோர் கூறுமாற்றானும் உணர்க, செச்சைக் கண்ணி - வெட்சிமாலை. கண்ணி - தலையிற் சூடுமாலை. தகர் - ஆட்டுக்கிடாய். மஞ்ஞை - மயில். நாரதமுனிவன் செய்த வேள்வியினின்று தோன்றிய ஆட்டுக்கிடாய் மூன்றுலகத்தையும் துன்புறுத்திய தென்றும், தேவர்கள்*

முறையிட்டமையால் முருகக் கடவுள் அதனை அடக்கித் தம் ஊர்தியாகக் கொண்டனர் என்றும் கூறுப. கடலிடத்தே மாமரமாய் நின்ற அசுரனைத் தடிந்தபொழுது இருகூறுபட்ட உடலில் ஒன்று மயிலாகவும் மற்றொன்று கோழியாகவும் வர, அவற்றை நிரலே ஊர்தியாகவும் கொடியாகவும் முருகப் பெருமான் கொண்டருளினர் என்ப.

இதனை,

"....................நெருப்பிலுதித்து
அங்கட் புவனம் அனைத்தும் அழித்துலவும்
செங்கட் கிடாயதனைச் சென்று கொணர்ந்து - எங்கோன்
விடுக்குதியென் றுய்ப்பவதன் மீதிவர்ந் தெண்டிக்கும்
நடத்தி விளையாடு நாதா" (கந்தர்கலி - 89)

என்றும்,

".................... போரவுணன்
அங்கமிரு கூறாய் அடல்மயிலும் சேவலுமாய்த்
துங்கமுடன் ஆர்த்தெழுந்து தோன்றுதலும் - அங்கவற்றுள்
சீறும்அர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும் இளையோனே - மாறிவரு
சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேலத் தனித்துயர்த்த மேலோனே" (கந்தர்கலி - 100)

என்றும் வரும் குமரகுருபர அடிகளார் மொழியானும் உணர்க.

நரம்பு ஆர்த்தன்ன இன்குரற் றொகுதி என்றது, வேன்மகன் ஆட்டத்திற்கு இயையப் பாடுகின்ற மகளிர் கூட்டத்தை என்க. யாழ் நரம்பின் இசைபோன்ற இனிய குரலையுடைய மகளிர்குழாம் என்றவாறு.

குறும்பொறி - உதரபந்தனம். இயல ஏந்தி - பொருந்த ஏந்தி. பல்பிணை - பலவாகிய மான்பிணை போன்ற மகளிர். தலைத்தந்து என்றற்கு, "முற்கை கொடுத்தென்பர்" நச்சினார்க்கினியர். தலைத்தந்து என்பதற்கு, ஆடுதலிற் றலைப்பட்டென்றுமாம். ஆடலும் நின்ற தன் பண்பே என்றது, இவ்வாறு வேன்மகன் ஆடுகின்ற ஆடலும் அப்பெருமான் ஆண்டு நின்றதனால் உண்டாய பண்பே என்றவாறு.

**குன்றுதோறாடல் - திருத்தணிகை பற்றி அருளப்பட்ட நூல்கள்**

| வ.எண் | நூலின் பெயர் | நூலாசிரியர் |
|---|---|---|
| 1. | கந்தபுராணம் | கச்சியப்ப சிவாசாரியார் |
| 2. | திருப்புகழ் | அருணகிரிநாத சுவாமிகள் |
| 3. | தணிகைப் புராணம் | கச்சியப்ப முனிவர் |
| 4. | திருத்தணிகையாற்றுப்படை | கச்சியப்ப முனிவர் |
| 5. | தணிகை பதிற்றுப்பத்து அந்தாதி | கச்சியப்ப முனிவர் |
| 6. | திருத்தணிகை முருகன் பிள்ளைத்தமிழ் | கந்தப்பர் (கச்சியப்ப முனிவரின் மாணவர்) |
| 7. | தணிகாசல அநுபூதி, தணிகாசல புராணம் உட்பட 13 பிரபந்தங்கள் கொண்ட தணிகைச் சந்நிதி முறை | கந்தப்பர் (கச்சியப்ப முனிவரின் மாணவர்) |
| 8. | திருத்தணிகை திருவிருத்தம் | சுப்பிரமணியவர், விருத்தம்பாடி கண்ணில்லாதவரை கண்பெறச் செய்தவர் |
| 9. | தணிகை சஷ்டிக் கவசம் | தேவராய சுவாமிகள் |
| 10. | முருகன் துதிப்பாடல்கள் திருவருட்பா – 5ஆம் திருமுறை | வள்ளலார் ராமலிங்க அடிகள் |
| 11. | முருகன் துதிப்பாடல்கள் | பாம்பன் சுவாமிகள் |
| 12. | இசைச்சுருதிகள் | முத்துசாமி தீட்சிதர் |

## ஐந்தாவது படைவீடு - குன்றுதோறாடல் திருத்தணி

*குன்றுதோறாடல் என்பது ஏனைய படைவீடுகளைப் போன்று ஒரு தனி இடமாக இல்லாமல், மலைகளையும் மலைசார்ந்த பகுதியாகிய குறிஞ்சி நிலத்தையும் குறிக்கின்றது. தொல்காப்பியம்,*

> *"சேயோன் மேய மைவரை உலகம்" என்றும்*

*திருமுருகாற்றுப்படை,*

> *"குன்று தோறாடலும் நின்றதன் பண்பே" என்றும்*

*திருப்புகழ்,*

> *"பருவரை துணிய பொருகணை தெரிவ*
> *பலமலை யுடைய பெருமாளே"*

*என்றும் குன்றுதோறும் இருக்கும் குமரனைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன.*

*"குன்றுதோறாடல் என்னும் தலைப்பில் அருணகிரிநாதர், கயிலைமலை, திருவேங்கடம், திருத்தணிகை, வள்ளிமலை, திருக்கழுக்குன்றம், திருசிராப்பள்ளி, திருக்கற்குடி, இரத்னகிரி, விராலிமலை, ஊதிமலை, குருடிமலை, தென்சேரிகிரி, கொங்கணகிரி, தீர்த்தமலை, கனகமலை, புகழிமலை, பூம்பாறை, கொடுங்குன்றம், குன்றக்குடி, பொதியமலை, கழுகுமலை, வள்ளியூர், கதிர்காமம், அருக்கொணாமலை ஆகிய மலைகளின் மீது எழுந்தருளியுள்ள பெருமானைப் பாடியுள்ள போதிலும், திருத்தணியாம் தணிகை மலைக்குத்தான் 64 பாடல்களைப் பாடியுள்ளார். நம் முன்னோர்கள் நாம் அறுபடை வீட்டையும் வகுத்துக் காண்பித்தால் தான் வழிபாட்டிலும் ஒரு ஒழுக்கம் நிலைபெறும் என நினைத்து குன்றுதோறாடலுக்குத் திருத்தணியை வழிபட்டொழுகும் மாண்பினை உணர்த்தினார்கள். திருத்தணியில் கோவில் கொண்டுள்ள முருகனைப் பற்றி குன்றுதோறாடலில் நாம் காணலாம்.*

*திருத்தணி, அரக்கோணத்திலிருந்து வடக்கே எட்டு மைல் தூரத்தில் அமைந்துள்ளது. ஆறுமுக வள்ளல் அமர்ந்துள்ள குன்றுதோறாடல் தலங்களில் திருத்தணியே சிறந்தது என்பதை,*

"வரையிடங்களிற் சிறந்ததநித் தணிகை மால்வரையே"

எனக் கந்தபுராணம் சிறப்பிக்கிறது.

"புவிமீதே பிரபலமுள்ள சுத்தத் தணிமலை"

"இமையவர் பணி திருத்தணி பொற்பதி"

"எத்திக்குமுற்ற புகழ் பெற்றித் திருத்தணி"

"திரைகடல் சூழும் புவிக் குயிராகுந் திருத்தணி"

என்று இம்மலையின் சிறப்பினை திருப்புகழில் அருணகிரியார் பாடியுள்ளார்.

இம்முருகன் மீது வேல் வகுப்பு, போர்க்களத்தலகை வகுப்பு, திருஞானவேழ வகுப்பு, திருக்கையில் வழக்க வகுப்பு, சித்து வகுப்பு, கந்தரந்தாதி வகுப்பு, மயில் விருத்தம் போன்ற பாடல்களையும் அருணகிரியார் பாடியுள்ளார்.

**திருத்தணிகை முருகனின் தோற்றமும் சிறப்பும்**

இங்கு பெருமான் அழகு வடிவம் கொண்டு இடக்கரத்தைத் தொடையில் அமைத்து வலக்கரத்தில் வேலைத் தாங்கி மயில், வள்ளி, தேவசேனாதேவியர் இன்றி தனித்து தரிசனம் தருகிறார். சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள முருகனின் 16வகைத் திருவுருவங்களில் இப்பெருமானின் வடிவம் 'ஞானசக்திதரா' என்னும் திருவுருவம் எனக் கூறுகின்றனர்.

இங்கு ஆடிக் கிருத்திகை விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. பால்காவடியையும், புஷ்பக் காவடியையும் பக்தர்கள் அதிகமாக எடுக்கின்றனர்.

**தணிகையில் இணையிலி**

விரையிடங் கொளும் போதினுள் மிக்க பங்கயம் போல்
திரையிடங் கொளும் நதிகளிற் சிறந்த கங்கையைப்போல்
தரையிடங் கொளும் பதிகளிற் காஞ்சி யந்தலம் போல்
வரையிடங்களிற் சிறந்த(து) இத் தணிகை மால் வரையே.

- கந்தபுராணம் 213

“மலர்களிலே சிறந்தது தாமரை; ஆறுகள் பல வற்றிலும் பெருமை வாய்ந்தது கங்கை; இப்பூமியிலுள்ள நகரங்களிலே மிக அழகானது காஞ்சி மாநகரம்; அதுபோல் மலைகளாகிய இடங்கள் பலவற்றுள்ளும் மிகச்சிறந்தது இத்தணிகைமலையே. இச்சிறப்பு மிக்க மலையினைத் தொழுது வணங்குபவரின் பாவமெல்லாம் அவரைவிட்டு அகன்றுவிடும்; உள்ளன்புடன் இம்மலைக்கு வந்து முன்னே இருக்கும் சரவணப் பொய்கையில் முறைப்படி மூழ்கி நம்முள் எம்மைத்தொழும் அடியார்கள், எனது திருவடிப்பேற்றினைப் பெற்று இன்புற்று வாழ்வார்”. இவ்வாறு முருகப் பெருமான் வள்ளியம்மைக்குத் திருத்தணிகையின் பெருமைகளைக் கூறுவதாக கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணத்தில் போற்றுகிறார்.

கயிலைப் போன்ற திருத்தணிகையில் முருகப்பெருமான், சூரபன்மன் முதலிய அவுணர்களைப் பொருது வெற்றி கொண்டு செருத்தணியுமாறு வந்து தங்கினார். “செருத்தணிகை”யே திருத்தணிகை யாயிற்று என்பர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்த சிறந்த குன்று தோறாடல் பதியான திருத்தணிகையைச் சென்னை, அரக்கோணம், திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய நகரங்களிலிருந்து பேருந்து, மகிழ்வுந்து மூலம் அடையலாம். சென்னை ரேணிகுண்டா, இரயில் வழியில் திருத்தணிகை அமைந்துள்ளது. திருத்தணி இரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீட்டர் தொலைவில் கோயில் உள்ளது.

ஊரின் நடுவில் 400 அடி உயரத் தணிகைமலைமீது நான்கு பிரகாரங்களுடன் அழகுமிகுந்த ஆறுமுகன் அருட்கோயில் அமைந்துள்ளது. மலையின் மீது கார் செல்ல நல்ல சாலையுள்ளது. தணிகைமலைக்கு வடக்கில் பச்சரிசிமலையும், தெற்கில் பிண்ணாக்கு மலையும் உள்ளன.

மலையடிவாரத்தில் அமைந்துள்ள சரவணப் பொய்கையைச் சிவவழிபாட்டிற்காக முருகவேள் வரவழைத்த கங்கை என்பர். குமாரதீர்த்தம் எனவும் தலபுராணம் இதனைக் காட்டுகின்றது. மலையில் 365 படிகள் ஏறி மலைக்கோயிலை அடைகிறோம்.

அடிவாரத்தினின்றும் மலை ஏறும் பாதையில் வடபுறம் பிரம்மசுனையும் (பிரம்ம தீர்த்தம்) அதனருகே விநாயகர், பிரம்மலிங்கக் கோயிலும் உள்ளன. பிரணவத்திற்குப் பொருள்தெரியாது, முருகனால் குட்டுப்பெற்றுச் சிறைப்பட்டிருந்த பிரமன், முருகப்பெருமானை வழிபட்டு மீண்டும் படைப்புத் தொழில் இங்கே பெற்றதாகத் தலபுராணம் கூறுகின்றது.

மலையின் உச்சியினை அடைகிறோம். நான்காவது பிரகாரமான இரதவீதியினை அடைகிறோம். இங்கே கார்த்திகை நாட்களில் எரியும் கற்பூரக் கொப்பரையும் நாள்தோறும் வழிபாட்டுக் காலங்களில் இஸ்லாமியர் வாத்தியம் வாசிக்கும் நவாப்வாத்திய மண்டபமும் அமைந்து உள்ளன. காதர் என்ற நவாப்பின் துன்பத்தைப் பெருமான் போக்கியதற்கு அடையாளமாக அவன் அமைத்த இவ்வாத்திய மண்டபமும், அவன் வழிபட்டு நிறுவிய பிரசன்ன காதர் ஈஸ்வரர் என்ற சிவன் கோயிலும் விளங்குகின்றன. இங்குள்ள முருகப்பெருமான் வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளுக்கு ஓர் அந்தணர் உருவில் காட்சியருளியதாகக் கூறுவர். நான்காவது பிராகாரத்தில் இந்திர நீலச்சுனை, விஷ்ணு தீர்த்தம், நாகதீர்த்தம் ஆகியனவும் உள்ளன.

நான்காவது பிராகாரத்திலிருந்து கிழக்குவாயில் வழியே சில படிகளைக் கடந்து மூன்றாவது பிராகாரம் அடைந்தவுடன் துவஜஸ்தம்ப விநாயகரையும் ஐராவதத்தையும், தெற்குப் பாகத்தில் உமாமகேசுவரர் சந்நிதியையும், மேற்குப் பாகத்தில் உச்சிப்பிள்ளையார் சந்நிதியையும் வழிபடுகிறோம்.

அடுத்து இரண்டாவது பிராகாரத்தை அடைந்து ஏகாம்பரேசர், ஆறுமுகசுவாமி, குமரேசலிங்கம், தேவயானைக்கு இந்திரன் சீதனமாகத் தந்த சந்தனக்கல், மற்றும் உருத்திராக்க விமானத்தில் வீற்றிருக்கும் பெரிய உற்சவமூர்த்தி ஆகியோரைத் தரிசிக்கிறோம்.

பஞ்சாக்கரப் (ஐந்து) படிகள் நம்மை முதற்பிராகாரத்திற்கு அழைத்துச் செல்கின்றன. இங்கே வள்ளி, தெய்வானை, பாலசுப்பிரமணியர், சண்டேசர், பைரவர் சந்நிதிகள் உள்ளன.

உள்ளே கருவறையில் திருத்தணிகேசன் - சுந்தரவடிவுடன் இடக்கரத்தைத் தொடையில்வைத்து, வலக்கரத்தில் சக்தி வேல் தாங்கி அருட்காட்சி நல்குகின்றார். இங்கே முருகப்பெருமான் ஞான சக்திதரராகத் திகழ்கிறார்.

அழகான தணிகைமலை, அழகான தணிகை ஆண்டவர், எங்கும் அழகு, எதிலும் அழகு, வள்ளிமலையை வழிபட்டு நேரே திருத்தணிகையை அடைந்த அருணகிரிநாதர், இதுகாறும் இப்பெருமானை வந்து வணங்காது போயினேனே என்று வருந்துகிறார். "கோடாத வேதனுக்கு யான் என்ன குற்றம் செய்தேன். உனது தண்டையத் தாள்களை சூடாத சென்னியையும், நாடாத கண்ணையும், பாடாத நாவையும் எனக்கென்றே தெரிந்து அமைத்தனனே" என்று புலம்புகிறார். (கந்தரலங்காரம் 76) பலநாள் இத்தலத்தில் தங்கித் தணிகேசனைப் பலவாறு புகழ்ந்து அற்புதமான 66 திருப்புகழ்ப் பாக்களால் பரவினார்.

*"தணிகைமலை அப்பனென அழகிய பெருமாளே" தணிகை மாமலை மணிமுடி ஆகிய பெருமாளே'' ''தணிகையில் இணையிலி'' எனவரும் அருணகிரிநாதர் வாக்குகள் கருதத்தக்கன. பலதிசையிலுள்ளோரும் நாடிநெருங்கி வரும் சரவணப் பொய்கை என்னும் திருக்குளத்தை உடையது; தமிழ்மொழி வழங்கும் நாட்டின் வட எல்லையாக விளங்குவது; முருகவேளின் திருப்புகழை ஓதும் கருத்தினர் சேரும்பதி; உத்தம சிவனடியார்கள், முனிகணத்தவர், இமையவர், ஐந்துதலைநாகம் வழிபடும் பதி, தூரத்தொழுவார் வினைசிந்திடும் பெருந்தலம்; வள்ளியம்மையை மயக்கி அணைத்து பின் முருகவேள் அவ்வம்மையுடன் மகிழ்ந்து என்றும் அகலாது வீற்றிருந்தருளும் மங்கலநகரம்; தமது தந்தையாகிய சிவபிரான் தமது கழலைத் தியானிக்க அவருக்கு (சுவாமி மலையிற்போல்) சுவாமிநாதனாய் முருகப்பிரான் உபதேசித்த உயர்பதி; திரைக்கடல் சூழும் புவிக்கு உயிராகும் திருத்தணி, பூவின் நடுவினில் வீறு தணிமலை; பவரோக வயித்தியநாதப்பெருமாள் விளங்கும் பதி என்றெல்லாம் அருணகிரிநாத சுவாமிகள் போற்றுகின்றார் இப்பதியை!*

*சிவபெருமான் திரிபுரத்தைச் சிரித்து எரித்தனர்; மன்மதனை விழித்து எரித்தனர் என்பது புராணம். இத்தலத் திருப்புகழில் திரிபுரத்தைச் சிவபெருமான் விழித்து எரித்தார்; மன்மதனைச் சிரித்து எரித்தார் என்று அருணகிரிநாதர் சுவாமிகள் அழகாகப் போற்றுகின்றார். இங்கே அருணகிரிநாதருக்குக் கந்தவேள் தமது தேவிமார்களுடன் மயில் மீதமர்ந்து நிர்த்தத் தரிசனத்தைத் தந்தருளியதை,*

> *"விண் அமரர் கொடுத்திடும் அரிவை குறத்தியொ(டு)*
> *அழகு திருத்தணி மலையில் நடித்தருள் பெருமாளே"*
>
> *"தணிகை மலைதனில் மயிலின் நிர்த்தத்தில் நிற்கவல பெருமாளே"*

*எனவரும் திருப்புகழ் வரிகள் சான்று பகருகின்றன. அறிவை அறியும் தத்துவத்தையும் அபரிமிதவித்தைகளையும் அருணகிரிநாதருக்கு ஆறுமுகப் பரமன் அருளிய ஐந்து தலங்களுள் திருத்தணிகையும் ஒன்று ஆகும். இத்தலத்தில் அருணகிரிநாதர் பாடிய* ***"இருமலுரோக" என்னும் திருப்புகழ் எவ்வித நோயையும் போக்கும் மகாமந்திரமாகும். நினைத்த காரியம் அனுகூலமாக வெற்றிபெற வேண்டுமானால் "சினத்தவர் முடிக்கும்" என்ற திருப்புகழ் சிறந்த மந்திரமாகும்.***

***வள்ளிநாயகியை மணங்கொண்டு தணிகைமலையில் வந்து தங்கித் தம்மை நாடிவரும் அன்பர்கட்குத் திருவருள் புரிகின்றான் ஆறுமுகப்பெருமான். 'தணிகைமலையைச் சாரேனோ! அதன் சாமி அழகைப் பாரேனோ!' என்று வடலூர் வள்ளல் இராமலிங்கசுவாமிகள் வியந்து பரவிய தலம் இது. முத்துசுவாமி தீட்சிதருக்கு முருகன் அருளிய தலம் இது.***

இக்கோயிலில் நடைபெறும் கந்தசஷ்டிப் பெருவிழாவில் சூரசம்ஹாரம் கிடையாது. ஆடிக்கிருத்திகையன்று இலட்சக்கணக்கான மலர்க்காவடிகள் வரும். ஏனைய ஊர்க்காவடிகட்கும் இம்மலர்க் காவடிகட்கும் வேறுபாடு உண்டு. குச்சியின் இருபுற நுனிகளில் ஒன்றில் மலர்களும் மற்றொன்றில் அர்ச்சனைக்குரிய பொருள்களும் இருக்கும். ஏனைய காவடிகள் போன்று குச்சிக்கு மேல் பட்டுத்துணி அரைவட்டத்தில் இராது.

தணிகைநாதனுக்கு முன்னே மயிலுக்குப் பதிலாக யானை உள்ளது. இங்கு மற்றொரு சிறப்பு. இந்த யானை இந்திரனால் முருகனுக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்ட ஐராவதம்.

கணிகவெற்பு, கல்லாரவெற்பு, சீபரிபூரணம், செருத்தணி, தணிகாசலம், நீலகிரி, காவியங்கிரி என்றெல்லாம் இத்தலம் போற்றப்படுகிறது. நான்முகனும், அகத்தியரும், நாரதரும் முத்தி பெற்ற தலம்.

தணிகேசனுக்குச் செங்கல்வராயன் என்ற சிறப்புப் பெயர் உள்ளது. மூலவர் நவபாஷாணத்தினால் ஆனவர். கிழக்குநோக்கி ஒரு திருமுகத்துடன் விளங்குகின்றார். உற்சவமூர்த்தி உருத்திராக்க மண்டபத்தில் ஒருமுகம் நான்கு கரங்களுடன் வள்ளி தேவயானையுடன் விளங்குகிறார். முன்னே நவவீரர்கள் விளங்குகின்றனர். மற்றொரு உற்சவர் ஆறுமுகம் பன்னிரு கரங்களுடன், இரு தேவிமாருடன் மயில்மீது விளங்குகிறார். தல விநாயகர் உச்சி விநாயகர் மற்றும் உமாமகேசுவரர், ஏகாம்பரநாதர், காமாட்சி, பாலசுப்பிரமணியர், அருணகிரிநாதர் சந்நிதிகளும் உள்ளன.

நாள்தோறும் நான்கு கால வழிபாடுகள் நிகழ்கின்றன. காமிகாகம முறையில் பூசை நிகழ்கின்றது. புஷ்பக்காவடி, பால்காவடி, அங்கப் பிரதட்சிணம் முதலிய பிரார்த்தனைகள் இங்கு உண்டு. சித்திரையிலும் மாசியிலும் பிரம்மோற்சவம் கொண்டாடப் பெறுகின்றது. மாசிமகம் தீர்த்தவாரி, வள்ளி கல்யாணம், சித்திரையில் தேவயானை கல்யாணம் சிறப்பாகும். மாதக் கார்த்திகையும் ஆடிக்கார்த்திகைத் தெப்ப விழாவும் வழிபடுவோர்களை ஏராளமாக ஈர்க்கின்றன.

ஏராளமான வழிபடுவோர் விடுதிகள் உள்ளன. தொன்மையான இத்தலத்தில் பல கல்வெட்டுகள் உள்ளன. அறநிலைய ஆட்சித் துறையின் நிர்வாகத்தில் உள்ள இக்கோயிலுக்கு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் உள்ளது. இத்தலத்திற்கு அருகே வெள்ளிகரம், புத்தூர், நெடியமலை, பொதட்டூர், வீராணம், உத்தரமேரூர், காளஹஸ்தி முதலிய தலங்கள் உள்ளன.

திருமால் கோயிலில் சடகோபம் சாதிப்பது போன்று இத்தலத்தில் முருகன் திருவடி அடியவர்களுக்கு சாத்தப்படுகிறது. இத்தலத்தில்

அரைக்கப்படும் சந்தனம் சர்வரோக நிவாரணியாகும். தணிகேசனின் மார்பில் ஒரு குழி உள்ளது. அதில் சார்த்தப்பெரும் சந்தனம் எல்லா வியாதிகளையும் போக்க வல்லது. சப்தரிஷிகள் முருகனை இங்கு வழிபட்டதன் நினைவாக ஏழு சுனைகள் இங்கு உள்ளன.

ஆண்டுதோறும் ஆங்கில ஆண்டின் இறுதிநாள் திருப்புகழ் திருப்படித் திருவிழா தொடங்கி, மறுநாளான ஆங்கிலப்புத்தாண்டு முதல் நாள் வரை சிறப்பாக நடைபெறுகின்றது. இதனை 31.12.1917 இல் தொடங்கி வைத்தவர் வள்ளிமலைத் திருப்புகழ் ஸச்சிதாநந்த சுவாமிகள் என்பது குறிப்பிடத்தக்கது. முருகப் பெருமானின் சந்தனக் காப்பு விபூதி அபிஷேகங்கள் கண்கொள்ளாக் காட்சியாகும்.

இரண்டாம் இந்திய ஜனாதிபதியாக விளங்கிய சர்வபள்ளி டாக்டர். இராதாகிருஷ்ணன் இத்தலத்தில் பிறந்தவரே என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர் நினைவாக இங்கு ஒரு நூலகம் உள்ளது. உணவு விடுதிகள் உள்ளன.

இத்தலம் பற்றிய பல நூல்கள் உள்ளன. அவற்றுள் திருத்தணிச் சந்நிதி முறை என்ற நூலில் பல பிரபந்தங்கள் உள்ளன.

தணிகை முருகனை வழிபட நோய்கள் எந்தப் பிறவியிலும் நம்மை அணுகாத வரத்தைப் பெறலாம்.

"இருமலு ரோகம் முயலகன் வாதம்
எரிகுண நாடி விடமே நீ
ரிழிவுவி டாத தலைவலி சோகை
எழுகள மாலை இவையோடே;
பெருவயி றீளை எரிகுலை சூலை
பெருவலி வேறும் உளநோய்கள்
பிறவிகள் தோறும் எனைநலி யாத
படிஉன தாள்கள் அருள்வாயே
.......... .......... .......... .......... .......... ..........
சலமிடை பூவின் நடுவினில் வீறு
தணிமலை மேவு பெருமாளே

"அருக்கி மெத்தன" என்று தொடங்கும் திருப்புகழில் "திருப்படிக்கரைப் பெருமாளே" என்றவரி "திருத்தணிப் பதிப் பெருமாளே" என்ற பாடபேதம் உள்ளது. "தகைமைத் தனியிற்" என்று தொடங்கும் பழநித் திருப்புகழில் "பழனப் பொழில்சுற் றுறுபொற் றணிகைப் பதியிற் குமரப் பெருமாளே" என்ற பாடபேதம் உள்ளதாகவும் குறிப்பிடுகிறார் தணிகை மணியவர்கள்.

## திருத்தணிகை

சந்தத்துக்குச் சொந்தக்காரரான அருணகிரி சுவாமிகள் திருத்தணிகைக்குச் செல்லும் முன் வள்ளிமலைக்குச் சென்று அங்கு தரிசனம் கண்டார். அம்மலையில் முருகபிரான் வள்ளிநாயகியிடம் பல விளையாடல்கள் செய்து திருமணம் புரிந்தருளி, வலப்பாகத்தே வைத்துக் கொண்டமையையும் நினைத்து உருகினார். இந்தச் செய்தியை,

> "கின்னங் குறித்தடியேன் செவி நீயன்று கேட்கச் சொன்ன
> குன்னங் குறிச்சி........................................................."

என்னும் பாடலில் தெளிவுபடுத்துகின்றார்.

மேலும் அருணகிரிநாத சுவாமிகள், முருகன் சிவபிரானுக்கு உபதேசித்த செய்தியினையும் குறிப்பிடுகின்றார்.

> "வள்ளிச் சன்மார்க்கம் விள்ளைக்கு நோக்க"

எனும் பாடலில் சிவபிரானுக்கு முருகபிரான் உபதேசித்த உபதேசம் வள்ளிச் சன்மார்க்கமே என்று கூறுகின்றார். அந்த உபதேசம் மிகக் குறுகிய நேரமான கண்ணிமை நேரத்தில் உபதேசிக்கப்பட்டது. அத்தகு சிறப்புக்குரிய தலம் திருத்தணி.

முருகபிரானிடம் உபதேசம் பெற்ற சிவபிரான் 'வீரட்டகாசர்' எனும் திருப்பெயருடன் திருத்தணியில் நந்தியாற்றுக்கு வடக்கிலும், உபதேசித்த சாமிநாதர் நந்தியாற்றுக்குத் தெற்கிலும் இருப்பிடம் கொண்டுள்ளனர். இத்தகு செய்திகளை தெளிவுபடுத்தியமையால் 'கருணைக்கு அருணகிரி' என்னும் வழக்கு உள்ளது. தாயுமானவர்,

> "ஐயா அருணகிரி அப்பா உன்னைப்போல்
> மெய்யாக ஓர் சொல் விளம்பினார் யார்"

என்று வியந்துரைத்துள்ளார்.

வள்ளி மணவாளப் பெருமாளே (313, 314) என்றும், வள்ளிக்கு மேடை கொண்ட பெருமாளே (315, 316) என்றும், வள்ளிக்கு வாய்த்த பெருமாளே (317, 318) என்றும், வள்ளிமலை சென்று வள்ளியை மணந்த பெருமாளே (320) என்றும் வள்ளி மலையில் எழுந்தருளியுள்ள முருகபிரானைப் போற்றுகின்றார்.

*320-ஆவது பாடலில்,*

> *"கல்லசல மங்கை எல்லையில் விரிந்த*
> *கல்வி கரைகண்ட புலவோனே"*

*என்று ஒரு தொன்மச் செய்தியைக் குறிப்பிடுகின்றார். ஒருமுறை தேவர்களுக்கும் முனிவர்களுக்கும், அனைத்துக் கலைகளிலும் வல்லவர் யார்? என்று ஒரு வினா எழுந்தது. அப்போது சிலர் ஔவைப் பிராட்டி என்று கூறி வித்யா தாம்பூலத்தைக் கொடுக்க ஔவை, இதற்குத் தகுதியானவர், 'நான் அல்ல, இந்திரனே' என்றார்.*

*அப்போது அனைவரும் இந்திரனிடம் வித்யா தாம்பூலத்தைக் கொண்டு செல்ல இந்திரன் அது அகத்திய முனிவருக்குத்தான் தகுதியுடையது என்று கூற, அனைவரும் அகத்தியரிடம் செல்ல, அவர் கலைமகளைக் கூற, கலைமகள் மலைமகள் தான் தகுதியுடையவள் எனக்கூற, மலைமகளான உமாதேவி இந்த வித்யா தாம்பூலத்துக்குத் தகுதியுடையவன் 'முத்துக்குமரனே' என்று கூறி முருகபிரானிடம் கொடுத்தனர். இதனால் 'கல்வி கரைகண்ட புலவோன்' என்னும் பெரும்பட்டம் வாய்க்கப்பெற்ற புலவோனே என்று அருணகிரியார் போற்றுகின்றார். ஆக, சகல கலா வல்லப மூர்த்தி என முருகவேளுக்கு ஒரு திருப்பெயர் உள்ளது. இந்த வகையில் சுவாமிகள் வள்ளிமலையைத் தரிசித்துப் பின் தணிகைக்குச் சென்றுள்ளார்.*

*சிதம்பரத்துக்கு (65) அடுத்தபடியாக 64 பாடல்களில் திருத்தணிகை முருகனைப் போற்றியுள்ளார். தணிகை மலையின் சிறப்பினை வேடிச்சி காவலன் வகுப்பு, வேலைக்காரன் வகுப்பு என்று சிறப்பித்துள்ளார். முருகபிரானின் செயல்களைப் பார்த்து 'திருத்தணி மலையில் நடித்தருள் பெருமாளே' (285) என்றும், 'தணிகைமலை அப்பனே அழகிய பெருமாளே' (279) என்றும், 'தணிகை மாமலை மணி முடிய அழகியல் பெருமாளே' (282) என்றும் பாடிச் சிறப்பிக்கின்றார். மேலும் "கேடாத வேதனுக்கியான் செய்த குற்றமென் குன்றெறிந்த" என்று தொடங்கும் பாடலில் இதுநாள் வரையில் முருகனது திருவடிகளைச் சூடாத சென்னியும், பார்க்காத கண்ணும், பாடாத நாவும் கொண்டு என்னை பிரமன் படைத்துவிட்டான் என்று வருந்துகின்றார். 127, 791 ஆகிய பாடல்களில் உள்ள பாட பேதங்களைத் திருத்தணிகைக்கு உரியதாகக் கொண்டால் தணிகைக்கு 66 பாடல்கள் உள்ளன.*

**தலச் சிறப்புக்கள்**

1. *கழுநீர், நீலோற்பலம் என்று சிறப்புக்குரிய மலர்கள் மலரும் தன்மை வாய்ந்த தலம் தணிகை (252, 269, 272, 274, 283, 291, 309, 1181).*
2. *பல திசைகளிலிருந்தும் மக்கள் விரும்பி வரும் சரவணப் பொய்கை என்னும் தீர்த்தத்தை உடைய தலம் தணிகை (258).*
3. *தமிழ் கூறு நல்லுலகு (தமிழகத்தின்) வட எல்லையாக விளங்குவது (255, 257, 301).*
4. *முருகப்பிரானின் திருப்புகழை ஓதுவார் சென்றடையும் சிறப்புடைய தலம் (259).*
5. *சிவனடியார்கள், முனிவர்கள், இமையவர், ஐந்து தலை நாகம் முதலியோர் வழிபடும் சிறப்புடையது (266, 303, 307).*
6. *நல்ல தவ ஒழுக்கத்தில் சிறந்தவர்கள் வாழும் தன்மையுடையது (277).*
7. *மறை முழங்குகின்ற நகரம் (291).*
8. *சிவலோகம் என்று வழங்கப்படுவது (293).*
9. *எண்திசைகளிலும் புகழப்படுவது (298, 308).*
10. *எங்கிருந்தேனும் நினைப்போரின் வினையைப் போக்கிடும் சிறப்புடைத் தலம் தணிகை (311).*
11. *முருகபிரான் என்றும் நீங்காமல் நிற்கும் சிறப்புடைத் தலம் (312).*
12. *வள்ளி நாயகியை மணமுடித்து மகிழ்ச்சியுடன் வந்தமர்ந்த தலம் (268, 296).*
13. *வள்ளியம்மை வீற்றிருக்கும் இடம் (267, 270, 285, 293).*
14. *தனது தந்தையான சிவபிரானுக்கு, சுவாமிநாதனாய் நின்று உபதேசித்த பெருமை கொண்டது (251, 300).*

**தீர்த்தச் சிறப்புக்கள்**

1. *சரவணப் பொய்கை என்னும் தீர்த்தம் பல திசையிலுள்ளோரையும் வரவழைக்கும் தன்மையுடையது (258).*
2. *தணிகை நகரின் சுனைகளில் செங்கழுநீர் மலரும், நீலோற்பல மலரும் மலர்ந்திருக்கும் சிறப்புடையது (252, 269, 272, 274, 283, 291, 309).*

**முருக மூர்த்தியின் சிறப்புக்கள்**

1. *தமிழ்ப் பாவினால் பாடி ஏத்தும் அடியார்களுக்கு எளியவர் (264, 265).*
2. *மூவரும் வந்து வணங்குகின்ற சிறப்புடையவர் (261).*

*மேற்கண்டவாறு திருத்தணிகையின் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்று மூன்றடுக்குச் சிறப்புடையது முருகப்பிரானின் தணிகை நகரம்.*

*285-ஆவது பாடலில் முப்புரங்களையும் விழித்து எரித்தார் சிவபிரான் என்றும், 288 ஆவது பாடலில் மன்மதனைச் சிரித்து அழித்தார் என்றும் அருணகிரியார் கூறியுள்ளார். 271-ஆம் பாடலில் இருப்ப எனக் கொண்டு இருப்பு போன்ற உரம் பொருந்தியது என்றும், இருக்கன எனப் பாடபேதமாகக் கொண்டால் 'ரிக்' வேதம் போன்றது என்றும் கொள்ளலாம்.*

*285, 308 ஆகிய பாடல்களில் முருகப்பிரான் தனது தேவியர்களுடன் அருணகிரியாருக்குக் காட்சி கொடுத்த செய்தி கூறப்பட்டுள்ளது.*

*சினத்தவர் முடிக்கும் என்னும் 263 ஆவது பாடலில் உண்மை அடியார்களுக்கு இடர் செய்வோருக்குத் திருப்புகழ் தழலாகவும், அடியார்களுக்கு நிழலாகவும் இருந்து காக்கும் தன்மையுடையது என்பதைத் திண்ணிதின் உணரலாம். ஆக, இது ஒரு சிறந்த பாராயணப் பாடல் என்று அறிய முடிகின்றது.*

## அருணகிரிநாதர் திருப்புகழில் போற்றிய திருத்தணிகை

1. திருத்த ணிப் பதியிற் பெருமாளே
2. பனைக்க ரக்கயத் தண்டர் போற்றிய மங்கைபாகா படைத்த ளித்தழிக் குந்த்ரி மூர்த்திகள் தம்பிரானே
3. பகர்தரு குறமகள் திருவமை வநிதையும் இருபுடை யுறவரு பெருமாளே
4. சடுபத்மமுகக்குக புக் ககனற் தணியிற் குமரப் பெருமாளே
5. சிவத்திகுக் குடக்கொடிச் செருக்க உற் பலச்சுனைச் சிறப்புடைத் திருத்தணிப் பெருமாளே
6. புயற் பொழில் வயற்பதி நயப்படு திருத்தணி பொருப்பினில் விருப்புறு பெருமாளே.
7. சலமிடை பூவின் நடுவினில் வீறு தணிமலை மேவு பெருமாளே.
8. கடவுள் நீல மாறாத தணிகை காவலாவீர கருணை மேருவே தேவர் பெருமாளே
9. தவமலரு நீல மலர்சுனை அநாதி தணிமலை உலாவு பெருமாளே
10. தெய்வயானைக் கிளைய வெள்ளையானைத் தலைவ தெய்வயானைக் கினிய பெருமாளே
11. செக்கணரி மாகனைக்குஞ் சித்தணிகை வாழ்சிவப்பின் செக்கர்நிறமாயிருக்கும் பெருமாளே
12. தினைப்புன மேவும் குறக்கொடி யோடும் திருத்தணி மேவும் பெருமாளே
13. அப்பணி சடை அரன் மெச்சிய தணிமலை அப்பனெ அழகிய பெருமாளே
14. பிறப்பிலிக் குணர்த்து சித்தவுற்ற நெற்பெருக்குவைப் பெருக்கு மெய்த் திருத்தணிப் பெருமாளே
15. சிறப்பொடு குறப்பெண் களிக்கும் விசயத்தென் திருத்தணி இருக்கும் பெருமாளே
16. தனியவர் கூருந் தனிகெட நாளும் தனிமயிலேறும் பெருமாளே
17. தொழுதெத்து முத்தபொற் புரிசைச்செ ருத்தணிச் சுருதித்த மிழ்க்கவிப் பெருமாளே
18. திருப்புரப் புறத்தியற் றிருத்தகுத்து நித்திலத் திருத்தசைத் திருத்தணிப் பெருமாளே

19. தனிமணக் குவளை நித்தமுமலர்த் தகுசெருத் தணியினிற் சரவணப் பெருமாளே

20. பரமன் பணியப் பொருளன் றருளிற் பகர் செங்கழநிப் பெருமாளே

21. பணிலத் திரள் மொய்த்த திருத்தணிகைப் பதியிற் குமரப் பெருமாளே

22. மாலோன் அளித்தவளியார் மால் களிப்பவெகுமாலோ டனைத்து மகிழ் பெருமாளே

23. தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தென் திருத்தணி யிருக்கும் பெருமாளே

24. உமையின் மகளைத் தழுவ மயலுற் றுருகு முருகப் பெருமாளே

25. அத்தா நித்தா முத்தா சித்தா அப்பா குமரப் பெருமாளே

26. எத்திடார்க் கரிய முத்தபாத் தமிழ்கொ டெத்தினார்க் கெளிய பெருமாளே

27. பதியான திருத்தணிமேவு சிவலோகம் எனப்பரி வேறு பவரோக வயித்திய நாத பெருமாளே

28. திமிர சாகரம் கதற மாமரம் சிதற வேல்விடும் பெருமாளே

29. சிறப்புறப் பிரித்தறத் திறத்தமிழ்க் குயர்த்திசைச் சிறப்புடைத் திருத்தணிப் பெருமாளே

30. ப்ரபலமுள் சுத்தத் தணிமலை யுற்றுப் ப்ரியமிகு சொக்கப் பெருமாளே

31. வேலெடுத் துக்க ரத்தின் நீலவெற்பிற்றழைத்த வேளெனச் சொற்கருத்தர் பெருமாளே

32. சிறப்பெரு ஞானந் தமிழ்த்ரய நீடும் திருத்தணி மேவும் பெருமாளே

33. தணிகைக் குமரப் பெருமாளே

34. தரளச் சங்குவயற்றிரளிற்றங்கு திருத்தணிகைச் செங்கழநிப் பெருமாளே

35. கைக்குமனத்த சமர்த்த அரக்கர் தலைக்குலை கொத்திய வேளே

36. கைத்த ரக்கா கொர்து கச்சினத்து வஜ்ரனுக்க மைத்த கைத் தெழுத்தறித்து விட்ட பெருமாளே

37. திரைக்கடல் சூழும் புவிக்குயிராகும் திருத்தணி மேவும் பெருமாளே

38. தருநிரைத் தெழு பொழில் மிகுத்திடு தனிமலைக்குயர் பெருமாளே

39. தருக்கும் எழிலுறு திருத்தணிகையினில் தழைத்த சரவண பெருமாளே

40. வட்டத் திரைக் கடலில் மட்டித் தெதிர்த்தவரை வெட்டித் துணித்த பெருமாளே

41. தணிமலையில் உறைகின்ற பெருமாளே

42. பொன்றென்றணிகையில் நின்றங் கெழு புவி யென்றுஞ் செயவல பெருமாளே

43. எத்திடார்க் கரிய முத்தபாத் தமிழ் கொடெத்தினார்க் கெளிய பெருமாளே

44. திருக்குலவும் ஒரு நீல மலர்ச்சுனையில் அழகான திருத்தணிகை மலை மேவு பெருமாளே

45. திருப்புகழ் ஓதுங் கருத்தினர் சேரும் திருத்தணி மேவும் பெருமாளே

46. எட்டசல மெட்டநில முட்ட முடி நெட்டசுரர் இட்டசிறை விட்ட பெருமாளே

47. குறத்தி யாரை மயக்கிய னைத்துள மகிழ்ச்சி யோடு திருத்தணிய பற்றிய பெருமாளே

48. மாரன் வெற்றிகொள் பூமுடிக்குழ லார்வி யப்புற நீடு மெய்த்தவர் வாழ்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே

49. நீற திட்டுதி னைப்பவர் புத்தியில் நேர மெத்த அளித்தருள் சற்குரு நீல முற்றதிருத்தணி வெற்புறை பெருமாளே

50. சகல லோகமும் உடையவர் நினைபவர் புரவு தாமரை மலரடி இனிதுற தணிகை மாமலை மணிமுடி அழகியல் பெருமாளே

51. அமணர் உடற்கெட வசியில் அழுத்திவிண் அமரர் கொடுத்திடும் அரிவை குறத்தியொ டமுகு திருத்தணி மலையில் நடித்தருள் பெருமாளே

52. தினைப்பு னமிற் குறத்தி மகட் டனத்தின் மயற் குளித்து மகிழ்த் திருத்த ணியிற் றரித்த புகழ்ப் பெருமாளே

53. தீண்டுக ழைத்திர ளூற்றது துற்றிடு வேங்கைத னிற்குவ ளைச்சுனை சுற்றலர் சேர்ந்ததி ருத்தணி கைப்பதி வெற்புறை பெருமாளே

54. இந்த்ர கோபமும் மரகத வடிவமும் இந்த்ர சாபமும் இருகுழை யொடுபொரும் இந்த்ர நீலமும் மடலிடை எழுதிய பெருமாளே

55. செழிக்கும் உத்தம சிவசர ணார்கள்தவ முநிக்க ணத்தவர் மதுமலர் கொடுபணி திருத்த ணிப்பதி மருவிய குறமகள் பெருமாளே

56. வாச்சிய மத்தள பேரிசை போல்மறை வாழ்த்தம லர்க்கழு நீர்தரு நீள்சுனை வாய்த்ததி ருத்தணி மாமலை மேவிய பெருமாளே

57. திருத்தணி பிறக்க மேவுற அத்தலம் உற்றுறை பெருமாளே

58. தினைப்பு னத்திரு தனகிரி குமரிநல் குறத்தி முத்தொடு சசிமக ளொடுபுகழ் திருத்த ணிப்பதி மலைமிசை நிலைபெறு பெருமாளே

59. தரள பொற்பணி கச்சுவி சித்திரு குழைதிருத்திய ருத்திமி குத்திடு தணிம லைச்சிக ரத்திடை உற்றருள் பெருமாளே

60. செருக்கும் அரக்கர்கள் பொடிபட வடிவுள கரத்தில் அயிற்கொடு பொருதிமை யவர்பணி திருத்தணி பொற்பதி தனில்மயில் நடவிய பெருமாளே

61. சிகர கிரிநெரி படபடை பொருதருள் திமிர தினகர குருபர இளமயில் சிவணி வருமொரு தணிகையில் நிலைதிகழ் பெருமாளே

62. சதிமுழவு பலவும் இரு பக்கத்தி சைப்பமுது சமையபரவி இதய முட்கிப்ர மிக்கஉயர் தணிகைமலை தனின்மயிலின் நிர்த்தத்தின் நிற்கவல பெருமாளே

63. தார்மெத்திய தோரண மென்தரு தேர்சுற்றிய வார்பதி அண்டர்கள் தாமெச்சிய நீள்தணி யம்பதி பெருமாளே

# தணிகைப் புராணத்தில் முருகனது தோற்றமும் அருட்செயல்களும்

முனைவர் **சோ.கி. கல்யாணி**
தஞ்சாவூர்

*பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய கச்சியப்ப முனிவரால் இயற்றப்பட்டது தணிகைப்புராணம். சூரபதுமனோடு செய்த போரினால் உண்டாகிய சினமும் வேடர்களோடு செய்த போரினால் உண்டாகிய சினமும் தணியப்பெற்ற இடமே திருத்தணிகை ஆகும். இப்புராணத்தில் பத்தொன்பது படலங்களில் 'சீபரிபூரணப் படலம்' எனப் பெயரியது 614 பாக்களில் முருகனது தோற்றம், திருவிளையாடல்கள், சூரன், பதுமன், தாரகன், சிங்கன் என்ற நால்வரது தோற்றம், அழிவுபற்றிக் கூறுகிறது. பிற படலங்களில் பிரமன், நந்தி, அகத்தியன், நாரணன், இந்திரன், நாகமாகிய வாசுகி, இராமன், நாரதன் ஆகியோர்க்கு முருகன் திருத்தணிகை மலையில் வீற்றிருந்து அருள்புரிந்தமை கூறப்பெறுகிறது. இறுதியில் வள்ளி, தெய்வயானையை முருகன் மணம் செய்தமையும் கூறப்பெறுகிறது. இக்கருத்துக்களைத் தமிழின் தொன்முருகு இலக்கியமான திருமுருகாற்றுப்படை, பரிபாடல், கந்தர்கலிவெண்பா என்பவற்றின் கருத்துக்களோடு ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.*

### முருகனது தோற்றம்

*முருகனது பிறப்புக்குக் காரணமாக 'அவுணர்களை அழித்தல்' என்பது முருக இலக்கியங்களில் கூறப்பெறுகிறது. தணிகைப் புராணமானது இறைவன் இந்திரனிடம், ''தேவர்களோடுகூட உனக்கு நன்மையை மிகச்செய்து உங்களுடைய துன்பத்தினை ஓட்டுகின்ற ஒப்பற்ற தலைவனைத் தருவேன்" (16 ஆம் பா.) என்றதால் முருகன் தோன்றினான் என்று முருகனது பிறப்பின் காரணத்தைக் கூறுகிறது. திருமுருகாற்றுப்படை இதுகுறித்துக் கூறவில்லை. பரிபாடலும், கந்தர் கலிவெண்பா, "வெந்தகுவர்க்கு ஆற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி" (76ஆம் வரி) இறைவன் முருகனைத் தோற்றுவித்தான் என்று கூறுகிறது. முருகனது தோற்றம் குறித்து தணிகைப்புராணம், "இந்திரன் முதலிய தேவர்கள் குறையிரப்பச் சிவபெருமான் அதோமுகத்தோடு கூடிய ஆறுமுகங்களுடன் பொருந்தி அவற்றிலுள்ள நெற்றிக்கண்ணின்று தனித்தனியே அழற்பொறி சிந்தும்படி செய்தான். அத்தீப்பொறிகள் ஆகாயமெங்கும் பரவின. அதைக்கண்டு தேவர்கள் அச்சமுற்றனர். பரந்த அந்த தீப்பொறிகளைக் காற்றுத்தேவன் சுமந்து அக்கினியிடம் கொடுக்க, அக்கினி அவற்றைக் கங்கையிலிட்டான். கங்கை அதனைத் தகுதியமைந்த சரவணப்*

பொய்கையிற் சேர்க்க, முருகப்பெருமான் மகிழ்ச்சியுற்றுக் கார்த்திகைக் பெண்களிடம் பாலுண்டு இருந்தான்". (920, 21 ஆம் பா.) பல வாத்தியங்களும் முழங்கப் பிரமன் முதலிய யாவரும் பரந்துசூழ உமையம்மையோடு சரவணப் பொய்கையை அணுகிய இறைவன் 'இங்கே அக்குழவிகளை நீ விரைவிற் கொண்டுவருக' எனக் கூறினார். அதனால் உமை மகிழ்ந்து அக்குழவிகளைத் தழுவி ஓருருவாகச் செய்து கொங்கையினின்றும் சொரிந்த இனிய பாலினை ஊட்டினாள். (25ஆம் பா) ஆறுமுகத்தோடும் பன்னிரு கைகளோடும் கூடிய கந்தக் கடவுளைத் தான் ஏறிவந்த இடபத்திலே இருக்கச்செய்து உமையம்மையார் இடப்பக்கமிருப்ப இறைவன் தேவர்களின் துன்பத்தினைத் துடைக்கும் பொருட்டு எழுந்தருளியிருந்தான் (26 ஆம் பா). இக்கோலமே "சோமாஸ்கந்த திருக்கோலம்" என்று சுட்டப்பெறுகிறது. தணிகைப் புராணக் கருத்தினை மிகச் சுருக்கமாகத் திருமுருகாற்றுப்படை,

"நெடும்பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ" (253-255 வரி)

என்று கூறுகிறது. இங்கு அக்கினி நேரே அப்பொறிகளைக் கையில் ஏற்றதாகக் கூறப்படுகிறது. பரிபாடல் இதனைச் சற்றே வேறுபட்ட வகையில் விளக்குகிறது. "சிவபெருமான் உமையொடு கூடி மகிழ்ந்தபோது உண்டான கருவை இந்திரன், 'சிதைக்க வேண்டும்' என்று தான் முன்னர் வரம் பெற்றவாறே மழு கொண்டு சிவபெருமான் சிதைத்துத் தந்தான். இந்தச் சிதையுண்ட கருவை ஏழு முனிவர்கள் பெற்று யாகத்தீ வளர்த்து, அதில் அவியுடன் இட்டனர். அதனை ஆறு கார்த்திகைப் பெண்கள் உண்டனர். இமயமலையில் நீலநிறமான தருப்பைப் புற்கள் வளர்ந்து காணப்படுகின்ற சரவணப் பொய்கையில் முருகனை ஈன்றனர். பிறந்த அன்றே, இந்திரன், வச்சிரப்படையுடன் வந்து தாக்கினான். வெவ்வேறாக 6 பிரிவுகளாக இருந்த முருகன் ஒருவனாக மாறிப் போரிட்டு இந்திரனை வென்றான்" (5:22-24) என்று கூறுகிறது. இந்திரன் ஏன் கருவைக் சிதைக்கின்ற வரம் பெறவேண்டும்? ஏழு முனிவர்கள் பெற்றது அறுவர் உண்ண மீதி என்னவானது? இந்திரனுக்கும் முருகன் தோற்றத்திற்கும் என்ன தொடர்பு? என்றெல்லாம் பரிபாடல் கூறவில்லை. கந்தர் கலிவெண்பா, இறைவன் வெளிப்படுத்திய தீப்பொறிகளைக் கண்டு தேவர்கள் அச்சங் கொள்ளவும், இறைவன் அவற்றைத் தம் கையில் எடுத்து அமைதி கொள்ளச் செய்து காற்றின் கடவுளை நோக்கி, 'நீ இதைச் சிறிதுநேரம் எடுத்துச்செல்' எனக்கூற, அக்கடவுளும் சிறிதுதூரம் சுமந்து சென்று குளிர்ந்த கங்கையிலிட அக்கங்கை சற்றேனும் அவ்வழலின் வெம்மையைத் தாங்காளாகி நாணல் மிகுந்த சரவணப் பொய்கையில் தம்

அலைகளாகிய தலையில் தாங்கிச் சென்று சேர்த்தலும், அவ்வழற்பொறிகள் ஆறும் ஆறு இளங்குழவிகளாய், கார்த்திகைப் பெண்களின் திருமுலைப்பாலை உண்டு விளையாடின. பிற செய்திகள் தணிகைப்புராணத்தில் போன்றே உள்ளன. (வரிகள் 76-86).

**சூரபதுமனின் தோற்றமும் அழிவும்**

சூரன், பதுமன் என்பாரின் தோற்றத்தைக் குறித்துத் தணிகைப்புராணம் விரிவாகக் கூறுகிறது. சாகம் என்னும் தீவையாண்ட பிரபாகரன் என்பவனுக்குச் சூரன், பதுமன் என்றிரு குழந்தைகள் ஒருசேரத் தோன்றினர். பின்னர் இரு குழந்தைகள் (சிங்கன், தாரகன்) வெவ்வேறாகத் தோன்றின. அகத்திய முனிவர் சூரன், பதுமன் என்னும் இருவர்க்கும் முருகக்கடவுள் பெருமையை எடுத்துக் கூறினார். 'கிரணவிந்து' என்ற முனிவன் சிங்கன், தாரகன் என்போர்க்கு முறையே துர்க்கை, சாத்தன் என்பார் கதையினைக் கூறினான். சூரனும், பதுமனும் முறையே முருகற்கும், சிங்கனும் தாரகனும் துர்க்கைக்கும் சாத்தற்கும் ஊர்தியாகும் விருப்பம் கொண்டனர். அதனால் கயிலாய மலைக்குச் சென்று 40,000 ஆண்டுகள் தவமியற்றினர். அதனைக்கண்ட மயில், சேவல், சிங்கம், யானை முதலிய தெய்வ ஊர்திகள் அவர்களால் இடையூறு நிகழும் என்றெண்ணிச் சபிக்க அவர்கள் மயில், சேவல், சிங்கம், யானை என்ற முகங்களையுடைய பூதங்கள் ஆயினர். அந்நால்வரும் அண்டாபரணர் என்னும் முனிவரிடம் சென்று, குற்றேவல் செய்து வருகின்றபோது தேவர்களைச் சார்ந்து அவுணர்களைக் கொன்றனர். அதனைக் கேட்ட அவுணர் குலத்தலைவர், நீங்கள் அவுணர்களாய் இருந்தும் அவுணகுலத்தையே வேரறுக்க முற்பட்டதால் கொடிய அவுணகுலத்திலே பிறப்பீராக என்று சாபமிட்டார். அதன் காரணமாகக் காசிபர் என்னும் முனிவர்க்கு மாயை என்பவளிடம் சூரன், பதுமன் எனுமிருவரும் ஒருடலாகப் பிறந்தனர். சிங்கன், தாரகன் எனுமிருவரும் ஒருடலாகத் தோன்றினர். அப்பிறப்பில் சிவபெருமானை வேண்டி விரும்பிய வரங்கள் பெற்றுப் பிரமனின் சத்தியலோகத்தையும், வைகுந்தத்தையும் பாதலத்தினையும் கைப்பற்றி எல்லாச் செல்வங்களையும் பெற்று வாழ்ந்தனர். அசுரர்கள் மகிழ்ச்சியடையும்படி கடலில் நகரை அமைத்து, தேவர்களையும் இந்திரன் மகனாகிய சயந்தனையும் சிறைப்பிடித்து வாழ்ந்தனர். (5-3 ஆம் பாக்கள்) எனக் சூரபன்மனின் தோற்றம் கூறப்படுகிறது.

"சக்ரவாகப்பறவை வடிவுகொண்டும் பிற வடிவங்கொண்டும் போர் செய்த சூரபதுமன் மேல் வேற்படையை விட்ட அளவிலேயே மாயை விலகியது. சூரபதுமன் மாமரத்தின் வடிவமெடுத்து நீரையுடைய கடலிலே வேர்களும் நெருங்கிய கிளைகளும் ஆகிய உறுப்புக்களானே கீழும் மேலுமுள்ள

உலகங்களை எல்லாம் அழித்துச் சினந்து தேவர்களைப் புடைத்து நிற்புழி, தீக்கான்று சென்ற வேற்படை அம்மாமரமாகிய சூரபதுமனைக் கொன்றது. மாமரவுருவத்தை வேற்படை அழித்தளவில் சூரபன்மன் தன் இயற்கை வடிவத்தைக் கொண்டு தகுதியுடைய தனது உடைமேற் கிடந்த கூரிய வாளினை உருவிப் போரிடத் தொடங்கினான். அதுகண்ட வேற்படை அவனுடலிற் பாய்ந்து அதனை இரண்டு கூறாகப் பிளந்து கரிய கடலிலே போட்டுவிட்டு மீண்டும் முருகனின் கையில் வந்து தங்கியது. முற்பிறப்பில் செய்த தவம் கைகூடுதலால் இரண்டு கூறான உடல், கோழியும் மயிலுமாக உருவம் கொண்டு தேவர்கள் வியப்பெய்த ஆரவாரத்துடன் கடல்மேல் எழுந்தன. அவற்றின்மேல் திருக்கண் சாத்திய முருகன், அவற்றைத் தம்முடைய கொடியாகுக என்று பணித்தார் (594-598 ஆம் பாக்கள்) என்று தணிகைப்புராணம் சூரபதுமனின் அழிவுபற்றிக் கூறுகிறது. திருமுருகாற்றுப்படை,

> "பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
> சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்" (45-46 வரி)

என்றும்,

> "இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
> அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
> அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
> மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து
> எய்யா நல்லிசைச் செவ்வேள் சேஎய்" (55-61 வரி)

என்றும் கூறுகிறது. முருகனது கோழிக்கொடி என்று சுட்டுகிறது (38 வரி). சூரபன்மனின் பிறப்பு பற்றிய குறிப்பில்லை. பரிபாடலும் சூரபன்மனின் பிறப்புப் பற்றிய குறிப்புக்களைத் தராமல், அழிவுபற்றி மட்டுமே கூறுகிறது. 'சூரபதுமனைக் கொல்லப் பிணிமுகம் என்ற யானையின் மீதேறிக் குளிர்ச்சியும் இருளும் கொண்ட கடலினுள் பாறைகள் எல்லாம் பொடியாகும்படி சென்று போர்செய்து, வேலினால் அந்த அசுரனாகிய மாமரத்தை அடியோடு அழித்தான். மேலும் ஆறுதலைகளுடனும் பன்னிரு தோள்களுடனும் சூரபன்மனையும் அவன் இனத்தையும் அடியோடு அழித்து, கிரௌஞ்சகிரி என்னும் மலையை உடைத்து வழியை உண்டுபண்ணினாய்; "உதயசூரியன் போன்ற நிறத்தைக்கொண்டு தாமரை மலரில் தோன்றிய பிறப்பினைக் கொண்டவனே!" (5:1-12) என்று கூறுகிறது. சூரபன்மனை வேலால் முருகன் வெட்டிக் கொன்றான் என்று பரிபாடல் கூறுகிறதேயொழிய, சூரபன்மன் கோழியும் மயிலுமாக மாறி உருவம் கொண்டு கொடியானது பற்றிய குறிப்பில்லை. ஆனால் பரிபாடல் அவுணர் யார் என்ற குறிப்பினைத் தருகிறது. "வெற்றியுடைமையாலே புண்ணிய சனம், பாவ சனம் என்னும் ஒருவகையாலே

*பெயர்பெற்ற, பிற உயிர்களைக்கொன்று தின்னலாகிய தீவினைக்கு அஞ்சாதவரும் கொல்லப்படும் தன்மையினையுடையாரும் மாயஞ்செய்தலில் வல்லவரும் ஆகிய அவுணர்களுடைய குலம்'' என்கிறது (5:5-7). இத்தன்மையால்தான் முருகன் அவுணர் தலைவனாக விளங்கிய சூரபன்மனைக் கொன்றான் என்று பரிபாடல் விளக்கம் கூறுகிறது. பிறந்தவுடனேயே தன்னையழிக்க வந்த இந்திரனை வெல்லும் பொருட்டு ஆறு வடிவமாய் இருந்த இறைவன் ஒரே உருவம் ஆயினான். (5:54) என்று கூறுகிறது. கந்தர் கலிவெண்பாவோ, "உலகிற்கு ஆடையென விளங்கும் கடலில் புதிய மாமரமாய் நின்ற நெடிய சூரபதுமனின் உடலைப்பிளந்த ஒளி பொருந்திய வேலை உடையோனே! போர் புரிதலிலேயே விருப்புடைய அச்சூரபதுமனின் உடல் இருகூறாய் ஒருகூறு மயிலும் பிறிதொரு கூறு சேவலுமாகிச் சிறப்புடன் ஆரவாரித்துத் தோன்றுதலும், அவ்விடத்து அவ்விரண்டனுள் சீறுகின்ற பாம்பை அழிக்கும் அழகிய மயிலை ஊர்தியாகக் கொண்டு அதன்மீதேறிச் செலுத்தும் இளையோனே! உடற்கூற்றினின்றும் மாறிவந்த சேவலாகிய அப்பகையை வலிமை பொருந்திய கொடியாக உயர்த்தியருளிய பெரியோனே!" (100-103 வரிகள்) எனப் புகழ்கிறது. சூரபதுமனின் தோற்றம் பற்றிய குறிப்பில்லை.*

**முருகனது அருட்செயல்கள்**

*செருக்குடைமையாலே தன் பெருமையிழந்து சிறையும் புகுந்த நான்முகன் தான் இழந்துவிட்ட படைப்பாற்றலை மீண்டும் எய்தக்கருதிக் குற்றால வனத்திலிருந்து தவஞ்செய்தலும் பின்னர்த் திருவூர் சிலவற்றிற் சென்று வழிபாடு செய்தலும் திருத்தணிகையிற் சென்று முருகனை வணங்கி மீண்டும் தனக்குரிய படைப்பாற்றலைப் பெற்றுய்தல் பத்தொன்பது பாடல்களில் பிரமன் சிருட்டிபெறு படலத்தில் கூறப்பெறுகிறது. நந்திதேவர்க்கு மெய்ப்பொருளை உணர்த்தியது, 'நந்தியுபதேசப் படலம்' என்ற பாடலாக 26 பாடல்களில் கூறப்பெறுகிறது. அகத்திய முனிவர்க்கு மெய்ப்பொருளை உணர்த்தித் திருத்தணிகை மலையின் சிறப்பைச் சிவபெருமான் உணர்த்தியது 'அகத்தியனருள் பெறுபடலமாகும்'. தாமிழந்த சங்கு, சக்கரப் படைகளைத் திருமால் திருத்தணி சென்று வழிபட்டு மீண்டும் பெற்றது 'நாரணனருள் பெறுபடலம்' என்றும், இந்திரன் தானிழந்த செல்வங்களை எல்லாம் மீண்டும் பெற்றுக்கொள்ளத் திருத்தணிகை வந்து வழிபட்டமை 'இந்திரனருள் பெறுபடலம்' என்று கூறப்பெறுகிறது. வாசுகி என்ற பாம்பும் இராமனும் நாரதனும் தனித்தனியே தணிகைமலைச் சிறப்பு உணர்ந்து வழிபாடு இயற்றிச் சிறப்புப்பெற்றது தனித்தனி படலங்களாக உள்ளது. இறுதியில் 'வள்ளிநாயகி திருமணப்படலம்' இடம்பெற்றுள்ளது. தணிகைப்புராணம் காட்டும் இந்த*

ஒன்பது அருட்செயல்களும் தொன்முருகு இலக்கியமான திருமுருகாற்றுப்படையில் கூறப்பெறவில்லை. 'மாறுஇல் கற்பில் வாள்நுதல் கணவ' என்று கூறுகிறதேயொழிய அவள் வள்ளியா, தெய்வானையா என்ற குறிப்பு திருமுருகாற்றுப்படையில் இல்லை. பரிபாடல் (9ஆம் பா) வள்ளியையும் தெய்வயானையையும் முருகனது மனைவியராகக் கூறுகிறது. (9.8). ஆனால் அவர்தம் களவு வாழ்க்கை, மணந்தமுறை, பிறப்புப் பற்றி ஏதும் கூறவில்லை. கந்தர் கலிவெண்பா வள்ளி, தெய்வயானையை மணந்தமை பற்றிக் கூறுகிறது. பிற குறிப்பில்லை.

முருகனது பிறப்புக்குக் காரணம் 'அவுணர்களை அழித்தல்' என்பது திருமுருகாற்றுப்படையிலே கூறப்பெற்றாலும், பரிபாடல் 'புண்ணியசனம்' எனப் பெயர்பெற்ற அவுணர் குலத்தையே முருகன் அழித்தான் என்கிறது. பரிபாடலும் தணிகைப்புராணமும், கந்தர் கலிவெண்பாவும் அவுணர்களின் தலைவனாகச் சூரபன்மனைக்கூற, திருமுருகாற்றுப்படை 'சூரன்' ஒருவனையே கூறுகிறது.

அக்னி என்று மட்டுமே திருமுருகாற்றுப்படை கூறப் பரிபாடல் 'யாகத்தீ' என்று கூறிப் பிராமணீயத்தை முன்வைக்கிறது. மேலும் 'கற்பு' என்பதைக் காரணம் காட்டி விளக்குகிறது.

இந்திரனுக்கும் முருகனுக்கும் இடையிலான எத்தொடர்பும் திருமுருகாற்றுப்படையில் இல்லை. ஆனால் பரிபாடல், தணிகைப்புராணம், கந்தர் கலிவெண்பா அனைத்தும் முருகன், இந்திரன் மீது ஆளுமை செலுத்தினமையைப் பல்வேறு கதைகளால் விளக்குகின்றன.

முதன்முதலாகப் பரிபாடல்தான் 'உமையொடு புணர்ந்த காமநுகர்ச்சி' என்கிறது. 'கரு' என்றும் கூறுகிறது. பிற இலக்கியங்கள் நெற்றிக்கண்ணிலிருந்து தோன்றிய தீப்பொறிகளே முருகனது பிறப்புக்கு மூலம் என்று கூறுகின்றன. இவ்வகையில் பரிபாடல் சற்று வேறுபடுகிறது.

முனிவர் மனைவியராகிய கார்த்திகை மீன்கள் (மகளிர்) அறுவர் முருகனை வளர்த்தது அனைத்து முருக இலக்கியங்களிலும் ஒருமித்துக் கூறப்பெறுகிறது.

அறுவராகித் தோன்றிய முருகன், முற்பட்ட இலக்கியங்களில் தானே தன் வலிமையால் சேர்ந்து ஒன்றாகி ஆறுமுகமாகிறான். உமை, சிவன் வரவில்லை. ஆனால் வேல் பற்றிய குறிப்புளது. பிற்கால இலக்கியங்கள்தான். உமை, சிவன் வரவு பற்றிக்கூறி 'சோமாஸ்கந்த கோலத்தையும்' கூறுகின்றன.

முருகனது அருட்செயல்களைப் பொறுத்தவரை சூரனைக் கொன்றது, கிரௌஞ்ச மலையைப் பிளந்தது, வள்ளி, தெய்வானையை மணந்தது என்ற மூன்றே பெரும்பாலும் குறிப்பிடப்பெறுகின்றன. பிற பிற்கால வளர்ச்சிக் கூறுகளாகின்றன.

## தணிகாசல அநுபூதி

*திருத்தணிகைப் புராணம் நூலைப் பாடிய கச்சியப்ப முனிவரின் மாணவரான கந்தப்பதேசிகர் (18 ஆம் நூற்றாண்டு) திருத்தணிகையில் பிறந்து வாழ்ந்தவர். வீர சைவ சமயத்தைச் சார்ந்தவர். இவருக்கு வள்ளி, தெய்வயானை என்ற இரு மனைவியர். நீண்டகாலம் குழந்தைப்பேறு இன்றிருந்து, தணிகை முருகன் அருளால் இவர்கள் பெற்ற இருபுதல்வர்கள் விசாகப்பெருமாள், சரவணப்பெருமாள் என்று அழைக்கப்பட்டனர்.*

*கந்தப்பதேசிகர் பாடிய திருத்தணிகைச் சந்நிதிமுறை என்ற நூலில் பதின்மூன்று பிரபந்தங்கள் உள்ளன. அவை 1. தணிகை ஐங்கரமாலை 2. தயாநிதி மாலை 3. வேலாயுத சதகம் 4. மயில் பத்து 5. சேவல் பத்து 6. வேல்பத்து 7. சீர்பாதப் பத்து 8. தணிகைமலைப் பத்து 9. திருத்தணிகை அந்தாதி 10. திருத்தணிகைப் பிள்ளைத்தமிழ் 11. தணிகாசல அநுபூதி 12. திருத்தணிகை உலா 13. திருத்தணிகைக் கலம்பகம் ஆகியவை.*

*கந்தப்பதேசிகர் பாடிய நூல்களுள் ஒன்றான தணிகாசல அனுபூதி 1865க்கு முன்பே அச்சில் வெளிவந்துள்ளது. இது குறித்து ஜான் மரடாக் தம் தமிழ் அச்சுப்புத்தகத் தொகுப்பு நூலில் 94 ஆம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். 1980 ஆம் ஆண்டில் கடலூர் திரு. தி.கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் பதிப்பித்த திருத்தணிகைச் சந்நிதிமுறை நூலில் மேற்படி குறிப்பைக் காட்டி பலவகையாகத் தேடியும் தணிகாசல அனுபூதி நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை என்றும் கிடைத்த மூன்று (1,4,50) அனுபூதிப் பாடல்களை மட்டும் தமது பதிப்பில் சேர்த்துள்ளார்.*

*முருகன் இலக்கியங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு அவைகளைச் சேகரித்துவரும் அன்பர் திரு பாலாஜி அவர்கள் தணிகாசல அநுபதி பிரதியொன்று தரமணியிலுள்ள ரோஜா முத்தையா நூலகத்தில் கிடைத்தது என்றும் அதனைப் பிரதி செய்து எனக்கு அனுப்பியிருந்தார். தணிகை முருகன் திருவருளால் தணிகாசல அநுபூதி மீண்டும் அச்சாகும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அன்பர்கள் இதனை ஓதி தணிகைமுருகன் தண்அருளைப் பெற வேண்டுகிறோம்.*

வலையப்பேட்டை *ரா.* **கிருஷ்ணன்**

## தணிகாசல அநுபூதி

### காப்பு

(நேரிசை வெண்பா)

பேரன்புறும் அடியார் பேசுபுகழ் தணிகை
யூரன் அனுபூதிக்குறு துணையாம் – மாரன்
பொர மைந்துடையான் புதல்வன் முதல்வன்
கரமைந்துடையான் கழல்.

### நூல்

சிந்தாமணியே திருமால் மருகா
வந்தார்க்குயர் வாழ்வு கொடுத்தருள்வாய்
நொந்தாழ் வினையேன் முகம்நோக்கி வரம்
தந்தாள் முருகா தணிகாசலனே. 1

காயாய் மரமாய்க் கனியாய் உலகில்
தோயாத மரும் சுருதிப் பொருளே
மாயா வினையேன் மலநீங்கவரம்
தாயாய் அருள்வாய் தணிகாசலனே. 2

மண்ணாசை மணிப் பணியாசை வளர்
பெண்ணாசை தவிர்ந்திடு பெற்றி சொலாய்
விண்ணார் சிறை தீர்த்தருள் வேலவனே
தண்ணார் பொழில் சூழ் தணிகாசலனே. 3

நாயாய் நரியாய் நரர் தேவர்களாய்
ஓயாது பிறந்துழலா தருள்வாய்
சேயாய் வரு செந்நெறி யோர்க்கருள் கூர்
தாயாய் அமரும் தணிகாசலனே. 4

கருமம்புரி யோகியர் காணரிதாம்
அருமந்த மலர்க் கழலன் பருள்வாய்
திருமைந்தனை முன் சிறை செய்துலகைத்
தருமைந்த செருத் தணிகாசலனே. 5

எங்குற்றம் இயாவு மறக்கருணை
பொங்குற்ற கடைக்கண் பொருத்தியிடாய்
கொங்குற்ற மலர்க் குவளைக் கிரியாய்த்
தங்குற்ற திருத் தணிகாசலனே. 6

வேதம் பரம் என்று விளம்பிடுமுன்
பாதம் தனில் அன்பு பதித்திடுவாய்
காதம் கமழும் கழுநீர் மலரின்
தாதொன்று புயத் தணிகாசலனே. 7

கரணம் பொறியாதி கலங்கவரும்
மரணம் தவிரும் வகைநீ புகல்வாய்
அரணம் கணகைத் தழிவாக்கும் இறை
சரணம் பணியும் தணிகாசலனே. 8

வையத்துறு மன்னவர் வாழ்வு வெறும்
பொய்யைத் தருமென்றிது போக்கறியேன்
வையத்தவர் வானவர் போற்று பெரும்
சையத் தலைவா தணிகாசலனே. 9

பூதம் பொறி ஐம் புலனாற் கரணம்
தீ தொன்று கலாதி சிவாதி பர
நாதம் முடிவாகிய நாயகனே
தாதொன்று பொழில் தணிகாசலனே. 10

போராதிய தீமை புகாது மனம்
நீராய் உருகும் படி நீ அருள்வாய்
ஈராறு புயங்களில் என் கவியும்
தாரா வணியும் தணிகாசலனே. 11

காயத்தொடும் என்மனமுன் கழல்சேர்
நேயத்தொடு தாழ்ந்து நினைக்க வருள்
மாயத்தொடு வந்தெதிர் தாருகனைச்
சாயத்தொடு வேல் தணிகாசலனே. 12

கல மேவிய காகமெனச் சுழலும்
மல மேவு பவக் கடன் மாற்றியிடாய்

நல மேவிய நான் முகனைச் சிறைசெய்
சல மேவிய தென் தணிகாசலனே. 13

வேறக் கர மோதல் விடுத்து நின
தாறக் கர மோத வகுத்தருள் வாய்
நீறக்கர வென் பணி வோன நிகருஞ்
சாறக்கர வேல் தணிகாசலனே. 14

இனங்காத் துழல் வேட்கை யிகந் துனை என்
மனங்காத்திடு வாழ்வு கொடுத்திடுவாய்
புனங் காத்துழல் பூவை குறத்தி இரு
தனங் காத்துழலும் தணிகாசலனே. 15

கற்போத விராத கருங் குழலார்
சொற்போ தனை நீங்கு சுகந்தருவாய்
பொற்போதனடித் தளை பூட்டியிருந்
தற்போத மிலாத் தணிகாசலனே. 16

எதிராவி துவந்து பகற்பொழுதென்(று)
எதிராத விடத்தி லிருந்திடுவாய்
மதுராபுரி யாண்டவன் மைந்தன் எனுஞ்
சதுரா விதுரா தணிகாசலனே. 17

கலசாகரன் காணு மலர்ப்பாதம் என்
மல சாகர நீங்க வழங்கிடுவாய்
நல சாகர யோகியர் நாடிதய
சல சாகர வேள் தணிகாசலனே. 18

மயிர் தோ றசை சுக்கில மச்சை புணீர்
செயிர் மூளை கொடேக மொழிந்திடுவாய்
உயிர் மூவகை யுள்ளும் உறைந்திடு நெய்
தயிர் பால் என வாழ் தணிகாசலனே. 19

அடங்கா உலகாசையினால் விளையும்
மடங்காத பவப்பிணி மாற்றியிடாய்
விடங்காதல் செயும் விமலன் புதல்வா
தடங்கா எழில் கூர் தணிகாசலனே. 20

கை வைத்த சிரத் தொடு பணியா
மெய் வைத்த உளத்துனை மேவுவனோ
தெய்வத் தலைவா சிவனைப்பிரியாச்
சைவத்தவர் சூழ் தணிகாசலனே. 21

மானைப் பொருவேல் விழியார் மயலால்
பூனைக் கெதிர் பூங்கிளி போல் அயர்வேன்
யானைக் கிறை யோடிமையோர் பரவும்
தானைக் கிறைவா தணிகாசலனே. 22

உமியே குறல் போலுல காசை யெலாம்
துமியேனதிலே சுழல் வேன் விதியோ
வழியேந்திர மாயற நூறியுயத்
தமியேற் கருள்வாய் தணிகாசலனே. 23

குழலோங்கு மொழிச்சியர் கோளற நின்
கழலோங்கு கருத்தினை என்றருள்வாய்
நிழலோங்கிய வேதியர் நித்திய முத்
தழலோங்கி எழும் தணிகாசலனே. 24

குழையார் செவியார் குளிர் வாயமுதம்
விழையார் விழையும் பதமேவுவனோ
கழையார் மணிவெண் கதிராலிருடீர்
தழையார் பொழில்சூழ் தணிகாசலனே. 25

சுழலா வினையுந் துறவா அறமும்
கழலா மனமும் கடையேற் கருள்வாய்
உழலார் தினையோம்பு மினார் கிளியைத்
தழலால் எறியும் தணிகாசலனே. 26

ஆகாமிய மாக்கும் அரும் பிறவி
போகா வகை யென் புகலாய் புகலாய்
யோகாதி பருண்மகிழ் கூர்தரவே
சாகாவரம் ஈ தணிகாசலனே. 27

கனகா பரணம் கரிதேர் பரிமா
உனையே நினைவாருறு மாறருள்வாய்

வன வேடர் மடப்பிடி காதலனே
கனகாதிபர் சூழ் தணிகாசலனே. 28

தேடா நலமும் திகையா உளமும்
படார் பதமும் பெறு நாளுளதோ
காடார் வன வள்ளி கையால் வருடும்
தாடார் முருகா தணிகாசலனே. 29

வாழைத் துடையார் மயலே மருவிப்
பாழுக் கிறையாது பதம் தருவாய்
வேழத்தின் மருப் பென வெண் பிறைபோய்த
தாழத்திகழ் சீர்த் தணிகாசலனே. 30

ஈரற் குடரென் புறு தோலுடலிற்
சேரற்கு விதித் தனை தீவினையோ
வேரற்கதிர் வெண் மணியால் விரியும்
சாரற் குவளைத் தணிகாசலனே. 31

கலவைத் தன மங்கை யரைக் கருதி
மலவைப் பிடைநான் மருவத்தகுமோ
நிலவைப் புனைவோன் நிமிர்புன் சடைபோல்
சலவைச் சுனைசூழ் தணிகாசலனே. 32

முரணிக்கு மொழிச்சியர் மோக விருட்(டு)
இரணிற்கும் உள தெதிர் சேர்குவையோ
அரணிக்குள டங்கழல் போலுயிர் வாழ்
தரணிக் கிறைவா தணிகாசலனே. 33

பொய்யிற் படு மாக்கை பொறுக்கிலேன்
மெய்யிற் படுநின் கழல் வீடருள்வாய்
வையிற் படுவேல் இறைவா மகவான்
ஐயற் கிசையுந் தணிகாசலனே. 34

அரசன் மனுநீதி அழித்திட இந்
நரசன்ம நடுங்கு தனன் றலவேய்த்
திரசன் மதரன் சிறுவா புனித
சரசன் மன்எனுந் தணிகாசலனே. 35

ஏனத் தனைத் தனிறைஞ்சு கழல்
மோனத் தினையென்று மொழிந்திடுவை
கானத் தவளீந்த கருத்தினை மாத்
தானத்தை விடாத் தணிகாசலனே. 36

இலமேதும் எமக்கருளென்பவர் பான்
நில மீது வரம்பல நீ அருள்வாய்
நல மேது மினல் குரவைத் தவிராய்
சல மோசலமே தணிகாசலனே. 37

மாம் பூவடுவேல் விழியார் மயலால்
யாம் பூதலமேல் இறவா தருள்வாய்
காம் பூதிய கண்ணன் மகட்கிறைவா
சாம் பூநதமார் தணிகாசலனே. 38

பொய்க்கே முதலாம் புலையேன் உனது
மெய்க் கோது மலர்க்கழல் மேவுவனோ
திக்கோர் திருமாலயன் சேடன் முதல்
தக்கோர் புகழும் தணிகாசலனே. 39

அவ்வானவர் வாழ்வு மகன் புவியோர்
இவ்வாழ்வும் எனக்கினி வேண்டுகிலேன்
ஒவ்வாத சினத்தை ஒழிந்து வரந்
தவ்வா துதவுந் தணிகாசலனே. 40

தெவ்வாகிய மும்மல சேட்டை யறுத்(து)
எவ்வாறுன் அருட் கடலிற் படிவேன்
செவ்வான் உருவிற் றிகழ் தண் புழுகு
சவ்வாதணியும் தணிகாசலனே. 41

ஏழாகிய தோற்ற மெடுத் துலவா
ஊழாலடியேன் உழலத் தகுமோ
காழாகிய மும்மலமுங் களையத்
தாழாதுரையாய் தணிகாசலனே. 42

அவப்பேறு தவாணவ நீக்கறியேன்
சிவப் பேறடையுந் திறமேதுரையாய்
நவப் பேறுலகத்தவர் நண்ணலுமே
தவப் பேறுதவுந் தணிகாசலனே. 43

போகம் புவனம் புணருந்துயர் கூர்
தேகம் விழையா தருள் செய்திடுவாய்
பூகஞ் சுர புன்னை நிழற் பொழிலிற்
சாகந் திரியுந் தணிகாசலனே. 44

அகலாத மனத்துன தன் பெனு நெய்
மிகலா விளக்கருண் மேவுவனோ
பகலாய் இரவாய்ப் பலகால முமாய்த்
தகலா தொளிருந் தணிகாசலனே. 45

அது நீயது வாயினை யென்னுமறை
முதுமா மொழி தேற மொழிந்திடுவாய்
மதுவார் பொழி நீழல் மகிழ்ந்தரி சந்
ததம் வான்வழி போந் தணிகாசலனே. 46

பவளம் புரை வாயமுதம் பருகிக்
கவிழ் மங்கையர் காதலை யென்றொழிவேன்
அவிழ் செங்கழுநீர் மலர் தாதளவித்
தவிழுஞ் சிறுகாற் றணிகாசலனே. 47

குமனப்படு கூட்டரவைக் குமையாச்
சுமனந்தனை யென்று துணிந்தருள்வாய்
கமனம் படவோடு கடாவி வரும்
சமனஞ் சுறுதென் தணிகாசலனே. 48

மலசத்தியின் நீள் வலியைத் தொலையா
நல சத்திநிபாத நயந்தருள்வாய்
பலசத்திகளும் படிவார்க்குதவுஞ்
சலசத்தடமார் தணிகாசலனே. 49

கதிர்சூழ் நினதாள் கருதா வடியேன்
முதிர் தீவினை தீர்முறை வாழ் வருள்வாய்
எதிர்பூவையு மின் கிளியும் புகலச்
சதுர்வேத முமார் தணிகாசலனே. 50

**தணிகாசல அநுபூதி முற்றிற்று.**

## தேவராய சுவாமிகள் அருளிய சஷ்டிக்கவசம்

**கவச பலன்**

*சகலவிதமான நற்காரியங்களுக்கும் வெற்றி தரும் கவசம் இது. புலமை வளரும்.*

*விசாக நாளில் குடும்பத்தினர் அனைவரும் பலமுறை பாராயணம் செய்ய, குடும்பத் தோஷம் நீங்கி அனைவருக்கும் நலம் உண்டாகும். செல்வம் கொழிக்கும். பெரும் புகழ், பெரும் பொருள் முதலியன கிடைக்கும்.*

**காப்பு**

குறள் வெண்பா

அமரரிடம் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை.

**கவசப் பாடல்**

கணபதி துணைவா கங்காதரன் புதல்வா
குணவதி உமையாள் குமரா குருபரா
வள்ளி தெய்வானை மருவிய நாயகா
துள்ளிமயி லேறும் சுப்பிர மணியா
அழகொளிப் பிரபை அருள்வடி வேலா
பழநி நகரில் பதியநு கூலா
திருவா வினன்குடி சிறக்கும் முருகா
அருள்சேர் சிவகிரி ஆறு முகவா
சண்முக நதியும் சார்பன்றி மலையும்
பழநிக்கு இறைவா பன்முகம் நிறைந்த
ஆராறு நூற்று அட்டமங் களமும்

வீரவை யாபுரி விளங்கும் தயாபரா
ஈராறு பழநி எங்கும் தழைக்கப்
பாராறு சண்முகம் பகரும் முதல்வா
ஆறு சிரமும் ஆறு முகமும்
ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகரகுண் டலமும்
தடித்த பிரபைபோல் சார்ந்த செந்தூரமும்
திருவெண் ணீரணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண்ணான்கு மூன்றும்
குனிந்த புருவமும் கூரிய மூக்கும்
கணித்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப் பிரபைபோல் விளங்கிய நகையும்
எண்ணிலா அழகாய் இலங்கு பல் வரிசையும்
காரிகை உமையாள் களித்தே இனிதெனச்
சீர்தரும் வள்ளி தெய்வநா யகியாள்
பார்த்தழ கென்னப்பரிந்த கபாலமும்
வார்த்த கனகம்போல் வடிவேல் ஒளியும்
முறுக்குமேல் மீசையும் மூர்க்கம் சிறக்க
மறுக்கும் சூரர்மேல் வாதுகள் ஆட
ஈஸ்வரன் பார்வதி எடுத்துமுத்தாடி
ஈஸ்வரன் வடிவை மிகக் கண் டனுதினம்
கையால் எடுத்துக் கனமார்(பு) அணைத்தே
ஐயா குமரா அப்பனே என்று
மார்பினும் தோளினும் மடியினும் வைத்துக்
கார்த்திகே யாஎனக் கருணையால் கொஞ்சி
முன்னே கொட்டி முருகா வருவென்(று)
அந்நேரம் வட்டமிட் டாடி விளையாடித்
தேவியும் சிவனும் திருக்கண் களிகூரக்
கூவிய மயிலேறும் குருபரா வருக
தாவிய தகரேறும் சண்முகா வருக
ஏவிய வேலேந்தும் இறைவா வருக

கூவிய சேவற் கொடியோய் வருக
பாவலர்க் கருள்சிவ பாலனே வருக
அன்பர்க் கருள்புரி ஆறுமுகா வருக
பொன்போல் சரவணப் புண்ணியா வருக
அழகிற் சிவனொளி அய்யனே வருக
களபம் அணியுமென் கந்தனே வருக
மருமலர்க் கடம்பணி மார்பா வருக
மருவுவோர் மலரணி மணியே வருக
திரிபுர பவனெனும் தேவே வருக
பரிபுர பவனெனும் பவனே வருக
சிவகிரி வாழ்தெய்வ சிகாமணி வருக
காலில் தண்டை கலீர் கலீரென
சேலிற் சதங்கை சிலம்பு கலீரென
இடும்பனை மிதித்ததோர் இலங்கிய பாதமும்
அடும்பல வினைகளை அகற்றிய பாதமும்
நவகிரி அரைமேல் இரத்தினப் பிரபையும்
தங்கரை ஞாணும் சாதிரை மாமணி
பொங்குமாந் தளிர்சேர் பொற்பீதாம் பரமும்
சந்திர காந்தச் சரிகை தொங்கலும்
மந்திர வாளும் வங்கிச் சரிகையும்
அருணோ தயம்போல் அவிர்வன் கச்சையும்
ஒரு கோடி சூரியன் உதித்த பிரபைபோல்
கருணையால் அன்பரைக் காத்திடும் அழகும்
இருகோடி சந்திரன் எழிலொட்டி யாணமும்
ஆயிரம் பணாமணி அணியுமா பரணமும்
வாயில்நன் மொழியாய் வழங்கிய சொல்லும்
நாபிக் கமலமும் நவரோம பந்தியும்
மார்பில் சவ்வாது வாடை குபீரென
புனுகு பரிமளம் பொருந்திய புயமும்
ஒழுகிய சந்தனம் உயர் கஸ்தூரியும்
வலம்புரிச் சங்கொளி மணியணி மிடறும்

நலம்சேர் உருத்திர அக்க மாலையும்
மாணிக்கம் முத்து மரகதம் நீலம்
அணிவை டூரியம் அணிவைரம் பச்சை
பவளகோ மேதகம் பதித்தவச் ராங்கியும்
நவமணிப் பிரபைபோல் நாற்கோடி சூரியன்
அருணோ தயமெனச் சிவந்த மேனியும்
கருணை பொழியும் கடாட்சவீட் சணமும்
கவசம் தரித்தருள் காரண வடிவும்
நலவீரர் தம்முடன் நற்காட்சி யான
ஒருகை வேலாயுதம் ஒருகை சூலாயுதம்
ஒருகை நிறைசங்கு ஒருகை சக்ராயுதம்
ஒருகை நிறைவில்லு ஒருகை நிறையம்பு
ஒருகை மந்திரவாள் ஒருகை மாமழு
ஒருகை மேற்குடை ஒருகை தண்டாயுதம்
ஒருகை சந்திராயுதம் ஒருகை வேலாயுதம்
அங்கையில் பிடித்த ஆயுதம் அளவிலாப்
பங்கயக் கமலப் பன்னிரு தோளும்
முருக்கம் சிறக்கும் முருகா சரவணை
இருக்கும் குருபரா ஏழைப்பங் காளா
வானவர் முனிவர் மகிழ்ந்து கொண் டாடத்
தானவர் அடியவர் சகலரும் பணியப்
பத்திர காளி பரிவது செய்யச்
சக்திகள் எல்லாம் தாண்டவ மாட
அஷ்ட பைரவர் ஆனந்த மாட
துஷ்டமிகுஞ் சூளிகள் சூழ்திசை காக்க
சத்த ரிஷிகள் சாந்தக மென்னத்
சித்தர்கள் நின்று சிவசிவா என்ன
தும்புரு நாரதர் சூரியர் சந்திரர்
கும்பமா முனியும் குளிர்ந்த தாரகையும்
அயன்மால் உருத்திரன் அஷ்ட கணங்கள்
நயமுடன் நின்று நாவால் துதிக்க

அஷ்ட லட்சுமி அம்பிகை பார்வதி
கட்டழகன் என்று கண்டுனை வாழ்த்த
இடும்பா யுதன்நின் இணையடி பணிய
ஆடும் தேவகன்னி ஆரத்தி யெடுக்க
தேவ கணங்கள் ஜெய ஜெய என்ன
ஏவற் கணங்கள் இந்திரர் போற்ற
கந்தருவர் பாடிக் கவரிகள் வீசி
சார்ந்தனம் என்னச் சார்வரும் அநேக
பூதம் அடிபணிந் தேத்தவே தாளம்
பாதத்தில் வீழ்ந்து பணிந்து கொண் டாட
அரகர என்றடியார் ஆலவட்டம் பிடிக்க
குருபரன் என்றன்பர் கொண்டாடி நிற்க
குடையும் சேவலின் கொடியும் சூழ
இடைவிடாமல் உன் ஏவலர் போற்றச்
சிவனடி யார்கள் திருப்பாத மேத்த
நவமெனும் நால்வரை ஏற்ற சரமண்டலம்
உருத்திர வீணை நாதசுர மேளம்
தித்திமி என்று தேவர்கள் ஆடச்
சங்கீத மேளம் தாளம் துலங்க
மங்கள மாக வைபவம் இலங்க
தேவ முரசடிக்கத் தினமேள வாத்தியம்
சேவல் கொடியும் சிறப்புடன் இலங்க
நந்திகே சுவரன் மீது ஏறிய நயமும்
வந்தனம் செய்ய வானவர் முனிவர்
எங்கள் பார்வதியும் ஈசனும் முன்வர
ஐங்கரன் முன்வர ஆறுமா முகவன்
வீரமயிலேறி வெற்றிவேல் எடுத்து
சூரன்மேல் ஏவத் துடித்தவன் மடியச்
சிங்காமுகா சுரன் சிரமது உருளத்
துங்கக் கயமுகன் சூரனும் மாள
அடலற்ற குழந்தை அறுத்துச் சயித்து

விட்டவே லாயுதம் வீசிக்கொக் கரித்துத்
தம்ப மெனும் சயத் தம்பம் நாட்டி
அன்பர்கள் தம்மை அனுதினம் காத்துத்
திருப்பரங் குன்றம் சீர்பதிச் செந்தூர்
திருவாவி னன்குடி திருவே ரகமும்
துய்ய பழநி சுப்பிர மண்யன்
மெய்யாய் விளங்கு விராலி மலைமுதல்
அண்ணா மலையும் அருள் மேவும் கயிலை
கண்ணிய மாவூற்று கழுகுமா மலையும்
முன்னிலை யோர்கள் முனிவர் மனத்திலும்
நன்னய மாய்ப்பணி நண்பர் மனத்திலும்
கதிர் காமம் செங்கோடு கதிர் வேங்கடமும்
பதினா லுலகத்திலும் பக்தர் மனத்திலும்
எங்கும் தானவ னாயிருந்(து) அடியார் தம்
பங்கிலிருந்து பாங்குடன் வாழ்க
கேட்ட வரமும் கிருபைப் படியே
தேட்டமுடன் அருள் சிவகிரி முருகா
நாட்டு சிவயோகம் நாடிய பொருளும்
தாட்டிக மாய் எனக்(கு) அருள் சண்முகனே
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்.



அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி, திருத்தணி

சூர வத சின தணிந்த திருத்தணி குமரன் கையில் சக்திவேல் ஏந்தி அருளும் அற்புதத் திருக்கோலம். ஆடித் தெப்பத்தில் உற்சவம் வரும் முருகன் நமது மனம் எனும் தேரில் அல்லவா பவனி வருகிறான்.

## இருபத்தொன்றாம் நூற்றாண்டில் திருத்தணிகை

### இருப்பிடம்

*முருகப்பெருமான் கோயில்கொண்டு அருள்பாலிக்கும் அறுபடை வீடுகளில் ஐந்தாவது படைவீடாகத் திகழ்வது திருத்தணி திருத்தலமாகும்.*

*திருத்தணி என்னும் புகழ்மிக்க திருமுருகனின் தலம், திருவள்ளூர் மாவட்டத்தில் சென்னையிலிருந்து மும்பை செல்லும் இருப்புப்பாதை வழியில், அரக்கோணத்திற்கு வடக்கே 13 கிலோ மீட்டர் தொலைவிலும், சென்னையில் இருந்து வடமேற்கே 84 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. இத்தலம் தொண்டை நாடு என்று வழங்கும் பகுதியில் உள்ளதாகத் தமிழ் நூல்கள் கூறுகின்றன.*

*தொண்டை நாட்டிற்குத் தலைநகரமாகிய காஞ்சிபுரம் தெற்கிலும், விரிஞ்சிபுரம், வள்ளிமலை சோளிங்கபுரம் ஆகியவை மேற்கிலும், திருவாலங்காடு கிழக்கிலும், திருக்காளத்தி - திருப்பதி வடக்கிலும் சூழ்ந்திருக்க, அவற்றிற்கு மத்தியில் நடுநாயகமாகத் திருத்தணிகைத் தலம் அமைந்து விளங்குகின்றது.*

*பழைய தமிழ் நூல்கள் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்று திருவேங்கடம் என்னும் திருப்பதியைத் தமிழ்நாட்டின் வடக்கு எல்லையாகக் கூறியிருக்கின்றன. ஆனால் இப்போது தமிழ்நாட்டின் வடக்கு எல்லைத் தலமாகத் திருத்தணிகையே விளங்குகின்றது.*

### தணிகை

*முருகப் பெருமான் தேவர்களின் துயரம் நீங்கும் பொருட்டு சூரபதுமனுடன் செய்த பெரும் போரும் வள்ளியம்மையை மணந்து கொள்ள வேடர்களுடன் விளையாட்டாக நிகழ்த்திய சிறுகோபமும் தணிந்து, அமர்ந்த தலம் ஆதலின் இதற்குத் தணிகை எனப் பெயரமைந்தது. தேவர்களின் அச்சம் தணிந்த இடம், முனிவர்களின் காம வெகுளி மயக்கங்களாகிய பகைகள் தணியும் இடம், அடியார்களின் துன்பம், கவலை, பிணி, வறுமை ஆகியவற்றைத் தணிக்கும் இடம் ஆதலாலும் இதற்குத் தணிகை என்று பெயரமைந்தது.*

"திருத்தணிகை மலைமேலே குமார தேவன்
திருக்கொலுவீற்றிருக்கும் அதன் பொருளைக் கேளீர்;
திருத்தணிகை என்பதிங்குப் பொறுமையின் பேர்;
செந்தமிழ்கண்டீர்பகுதி, தணிகை எனும்சொல்;

பொருத்தமுறும் தணிகையினால் புலமை சேரும்
பொறுத்தவரே பூமியினை ஆள்வார் என்னும்;
அருத்தம்மிகு பழுமொழியும் தமிழில் உண்டாம்;
அவனியிலே பொறையுடயான் அவனே தேவன்!"

*என்று தேசிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பாடியிருப்பதும் இங்கு நாம் உணர்ந்து இன்புறுதற்குரியது. தணிகை என்னும் சொல்லுக்கு பொறுத்தல் (பொறை) என்பதும் ஒரு பொருளாகலின், அடியார்களின் பிழைகளையும் பாவங்களையும், பொறுத்து அருள்புரியும் தலம், திருத்தணிகை என்று கொள்ளுதலும் பொருந்தும்.*

**திருத்தணி நகராட்சி**

*திருத்தணி நகராட்சி சிறந்த நகராட்சி ஆகும். நகருக்கு மிக அருகிலேயே திருத்தணிகை இருப்புப்பாதை நிலையம் உள்ளது. இங்கு இருப்புப் பாதை தெற்கு வடக்காக அமைந்திருக்கின்றது. நகருக்கு வடக்கே நந்தியாறு என்னும் சிற்றாறு ஓடுகின்றது. இருப்புப்பாதைக்கு மேற்கிலும், கிழக்கிலும், நகரம் பரவியுள்ளது. இருப்புப்பாதைக்கு கிழக்கே அரசு அலுவலகங்களும், அஞ்சலகமும், மேல்நிலைப் பள்ளியும் உள்ளன.*

*நகரின் கிழக்குப் பகுதியாகிய இதற்கு யுழ்த் திருத்தணிகை என்று பெயர். இருப்புப் பாதையின் மேற்கு பக்கத்தில் அங்காடித் தெரு முதலியன உள்ளன.*

*நகருக்கு வடக்கே திருப்பதிக்குப் போகும் பாதையில் வடமேற்கே சோளிங்கபுரம் - திருவள்ளூர் - சென்னை போகும் பாதையும், தெற்கே அரக்கோணமும் - காஞ்சிபுரம் போகும் பாதையும் உள்ளன. சோளிங்கபுரம் போகும் பாதைக்கு வடக்கேயும் இருப்புப்பாதைக்கு மேற்கேயும் ஏரி ஒன்று இருக்கின்றது. நகருக்குத் தெற்கே அரக்கோணம் போகும் பாதைக்கு மேற்கில் தாமரைக்குளம் என்னும் நல்ல தண்ணீர்க் குளம் ஒன்று உள்ளது. திருத்தணிகை வட்டத்திற்கு திருத்தணிகையே தலைநகரம். திருத்தணிகை மடம் கிராமம் நல்லான் குளம், அமிர்தபுரம் (மேற்கு திருத்தணிகை) என்னும் சிற்றூர்கள் உள்ளன.*

*திருத்தணிகையில் அந்தந்த வகுப்பினர் தங்குவதற்கு வசதிமிக்க சத்திரங்கள் சுமார் 150 உள்ளன. கிருத்திகை முதலான சிறப்பு நாட்களில் சத்திரங்கள் நிரம்பியிருக்கும். திருமணம், உபநயனம், ஏழைகளுக்கு உணவிடுதல் முதலிய நிகழ்ச்சிகள், இச்சத்திரங்களில் நடைபெறும். விழாக்கள் இல்லாத நாட்களில், இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு இடம் தாராளமாகக் கிடைக்கும். மலைநிலமாதலின் திருத்தணிகை சிறிது வெப்பம் மிக்க இடமாகும். ஆயினும் நல்ல காய்கறி, பால், தயிர், நெய் முதலிய பொருட்கள் இங்கு தாராளமாகக் கிடைக்கும். ஆதலால், மக்கள் வசிப்பதற்குத் தகுந்த வசதிகள் உள்ள ஊர் திருத்தணிகை என்று சொல்லலாம். இங்குள்ள திருமுருகன் திருக்கோயிலின் சிறப்பே, இவ்வூருக்கு பல்லாற்றானும் பெருமை தருகின்றது.*

### திருத்தணிகை மலை

*இத்தலத்தில் முருகப்பெருமான் மலைமீது எழுந்தருளி வீற்றிருக்கின்றார். ஒரு தனி மலையின் சிகரத்து உச்சியில் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. முருகன் எழுந்தருளி விளங்கும் மலையின் இருபுறங்களிலும், மலை தொடர்ச்சிகள் பரவிப் படர்ந்துள்ளன. வடக்கே உள்ள மலை சிறிது வெண்ணிறமாக இருப்பதனால் **"பச்சரிசி மலை"** என்றும் தெற்கே உள்ள மலை கருநிறம் வாய்ந்திருப்பதனால் **"பிண்ணாக்கு மலை"** என்றும் கூறப்படுகின்றன.*

*இரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கே சுமார் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் மலையடிவாரம் உள்ளது. **"சரவணப்பொய்கை"** என வழங்கும் புகழ்மிக்க **"குமார தீர்த்தம்"** என்றும் பெரிய திருக்குளம் மலையடிவாரத்தில் உள்ளது. யாத்திரீகர்களும் பக்தர்களும் இதிலேயே பெரும்பாலும் நீராடுவது வழக்கம். இத்தீர்த்தத்தைச் சுற்றிப் பல மடங்கள் உள்ளன. ஆதலால் இப்பகுதிக்கு மடம் கிராமம் என்று பெயர் வழங்குகிறது. திருக்குளத்தின் தென்மேற்கு மூலையில் மலையடிவாரம் இருக்கின்றது.*

*திருக்குளத்தில் கிழக்குக் கரையினின்று மலையைப் பார்த்தால் வளைவாக இடம் பெற்ற ஒரு மலை போலவும், மூவுருவம் எடுத்த ஒரு பரம்பொருள் போலவும், மூன்று மலைகள் விளங்கும். அவற்றின் மத்தியில் திருமுருகன் திருக்கோயில் நடுநாயகமாகச் சிறந்தோங்கி விளங்குகின்றது. அதனால் அருணகிரிநாதர் இதனை அழுகு திருத்தணிமலை என்று புகழ்ந்து போற்றியிருக்கின்றார். திருமுருகனுக்கு இணையான தெய்வங்கள் எதுவும் இல்லாமை போலவே திருத்தணிகைக்குச் சமமான தலமும் வேறெதுவும் இல்லை எனலாம்.*

"திருவிளங்கிய வனப்பினில்
  அறிவினில் திறத்தினில் அருள்தன்னில்
ஒருவர் தங்களை உயர்த்த முன்
  முருகனை உவமையாக்குவர், அன்னான்
பெருவில் வள்ளியோடு ஆடிடம்
  ஆகிய புகழ்த் தணிகையும், யாங்கும்
ஒருந கர்க்கு அணி உயர்ந்த முன்
  உவமையா உரைப்பதால் எவராலும்! – தணிகைப்புராணம்

### தணிகைக் கோயிலின் தொன்மைச் சிறப்பு

*திருத்தணி முருகன் திருக்கோயில் மிகவும் தொன்மை வாய்ந்தது. முருகனின் அடியார்களுள் தலைசிறந்தவரும் விஜய நகர அரசர்களுள் ஒருவராக விளங்கியிருந்த பிரபுடதேவராஜன் (கி.பி.450) என்ற அரசனின் காலத்தவரும் ஆகிய அருணகிரிநாதர், 63 திருப்புகழ்ப் பாடல்களால்*

*இத்தலத்தினைப் பெரிதும் போற்றித் துதித்துள்ளார். அதனால் 600 ஆண்டுகளுக்கு முன்னரேயே இத்தலமும் கோயிலும் புகழோங்கித் திகழ்ந்திருந்தன என்பது திண்ணம்.*

*அன்றியும் இன்றைக்குச் சுமார் 900 ஆண்டுகளுக்கும் முன்னர் வாழ்ந்திருந்த கச்சியப்ப சிவாச்சாரியார் தமது கந்தபுராணத்தில் மலர்களில் தாமரை மலர் போலவும் நதிகளில் கங்கை நதி போலவும், தலங்களில் காஞ்சிபுரம் போலவும், மலைகளிலெல்லாம் சிறந்தோங்கித் திகழ்வது திருத்தணிகையே எனவும் உலகில் மலைகள் பல இருப்பினும் சிவபெருமான் கயிலாய மலையினை காதலித்தது போல, முருகன் திருத்தணிகை மலையினைப் பெரிதும் விரும்பி அங்கு மகிழ்ச்சியுடன் வீற்றிருக்கின்றவன் எனவும் இதனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.*

"விரை இடங்கொளும் போதினுள்
மிக்கபங் கயம் போல,
திரை இடங்கொளும் நதிகளிற்
சிறந்தகங் கையைப் போல்
தரை இடங்கொளும் பதிகளில்
காஞ்சியந் தலம் போல்,
வரை இடங்களிற் சிறந்தது
இத்தணிகைமால் வரையே"

"மந்த ரத்தினும், மேருமால்
வரையிலும் மணிதோய்
கந்த ரத்தவன் கயிலையே
காதலித்தது போல்,
சுந்தரக்கரி தொல்புவி
தனிற்பல எனினும்
இந்த வெற்பினில் ஆற்றவும்
மகிழ்ச்சியுண்டு எமக்கே"

– கந்தபுராணம்

*மேலும், இங்கே அபராஜிதவர்மன் (கி.பி. 875-893) என்னும் பல்லவ மன்னனின் கல்வெட்டும் முதலாம் பராந்தகச் சோழன் (கி.பி. 907-953) காலத்துக் கல்வெட்டும் காணப்படுவதனால் இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, இத்தலம் பல்லவர் சோழர் முதலிய தமிழ்நாட்டுப் பேரரசர்களால் போற்றப்படும் பெருமை பெற்றிருந்த செய்தி தெளிவுறத் தெரிகின்றது.*

இன்றைக்குச் சுமார் 1300 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்திருந்த திருநாவுக்கரசர் திருப்புறம் பயம் தலத்துத் திருத்தாண்டகத்தில் **கல்மலிந்தோங்கும் கழுநீர்க்குன்றம்** என்று திருத்தணிகையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தேவேந்திரன் இங்கு முருகப்பெருமானை நீலோற் பலம் என்னும் கழுநீர் மலர் கொண்டு பூசித்தான் என்று தலபுராணம் ஆதலின் கல் மலிந்தோங்கும் கழுநீர்க் குன்றம் என்று திருநாவுக்கரசர் இத்தலத்தையும் இத்தலத்தின் வரலாற்றையும் குறிப்பிட்டிருப்பது, பெரிதும் போற்றி உணர்ந்து மகிழ்தற்குரியது. இதனால் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்னரே திருநாவுக்கரசருக்கும் முற்பட்ட மிகப் பழைய காலத்திலேயே திருத்தணிகை புகழ்மிக்க பெருந்தலமாக விளங்கியிருத்தல் வேண்டும் என்னும் உண்மை புலனாகின்றது.

முருகப் பெருமான் தன் கிரியா சக்தியாகிய தெய்வானையைத் திருப்பரங் குன்றத்தில் திருமணம் செய்து கொண்டாற்போல் திருத்தணிகையில் தன் இச்சா சக்தியாக வள்ளியம்மையைத் திருமணம் செய்து கொண்டு மகிழ்ந்து இனிது வீற்றிருந்தருள்கின்றார். திருத்தணிகையின் சிறப்பிற்கு இதுவே சிறந்த பெருங் காரணமாகும். பாம்பன் குமாரகுருதாச சுவாமிகள், வடலூர் இராமலிங்க அடிகள், கந்தப்ப தேசிகர், கச்சியப்ப முனிவர், கச்சியப்ப சிவாசாரியார், அருணகிரிநாதர் முதலிய அருட்பெருஞ் சான்றோர்கள் பலரும் திருத்தணி முருகனைப் பெரிதும் புகழ்ந்து துதித்துள்ளனர்.

பல இலட்சக்கணக்கான மக்கள், திருத்தணிகை முருகனைத் தம் குல தெய்வமாகக் கொண்டு வழிபட்டு நலம் பெற்று வருகின்றனர். ஆடிக்கிருத்திகை, தைக்கிருத்திகை, மாசி கிருத்திகை முதலிய சிறப்பு நாட்களில் பல இலட்சக்கணக்கான பக்தர்கள், பூக்காவடி, பால்காவடி, முடிகாணிக்கை ஆகிய பிரார்த்தனைகளை இங்கு முருகனுக்குச் செலுத்துகின்றனர்.

நம் நாட்டை ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் ஜனவரி 1-ம் நாள் ஆங்கிலப் புத்தாண்டு தினத்தன்று அந்நியர்களை புகழ்ந்து ஆசி வாங்கும் பழக்கத்தினை மாற்ற ஆண்டவனை துதித்து அவன் புகழ் பாடுதலை நிறைவேற்ற வேண்டும் என்ற உயரிய நோக்கோடு தமிழ் அறிஞர்கள் அந்நாளில் ஒன்றுகூடி ஆங்கிலப் புத்தாண்டு தினத்தன்று முருகன் துதிப்பாடல்களை படிதோறும் குழுக்களாகச் சென்று பாடி வழிபட்டனர். நாளடைவில் இந்நிகழ்வு திருப்படி திருவிழா என்ற அளவில் பெரிய திருவிழாவாக மாற்றமடைந்தது. பிரதி ஆண்டு டிசம்பர் 31-ம் நாள் இரவு தொடங்கி விடிய விடிய பக்தர்களின் தரிசனத்திற்காக நடை திறந்திருக்கும்.

தமிழ்நாட்டில் ஆங்கிலப் புத்தாண்டு தினத்தன்று ஆலய தரிசனம் என்பது முதலில் திருத்தணியில் உருவானது. தற்போது அனைத்துக் கோயில்களிலும் பின்பற்றப்படுகிறது.

"திருப்புகழ் ஓதும்
கருத்தினர் சேரும்
திருத்தணி மேவும் பெருமானே"

என்று அருணகிரிநாதர் பாடியதற்கு ஏற்ப நூற்றுக்கணக்கான திருப்புகழ்ச் சபையினர் திருப்புகழ் பாடல்களைப் பாடிக் கொண்டும், முருகனின் திருநாமங்களை முழங்கிக் கொண்டும் வர பல இலட்சக் கணக்கான பக்தர்கள் மலைமீது ஏறிச்சென்று முருகனை வழிபட்டு மகிழும் காட்சி பக்தியில்லாதவர்க்கும் பக்தியை விளைவித்து பரவசம் உண்டாக்கும். அவரவர்களும் முருகன் அருளால் தங்கள் வாழ்க்கையில் பல நலங்களை அனுபவித்துக் கண்டு உயர்ந்திருக்கிறார்கள்.

அங்ஙனம் முருகனின் அருளால் தம் பிணிகள் தீர்ந்தும் கவலைகள் ஒழிந்தும் துன்பங்கள் நீங்கியும் பற்பல நன்மைகளை எய்தியும் முருகனின் அருளை உண்மையாகவே உணர்ந்து கொள்ளப் பெற்றிருப்பதனால் தான் நாட்டில் வெவ்வேறு பகுதிகளிலிருந்து நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இத்திருக்கோயிலுக்கு வந்து முருகனை வழிபட்டு மகிழ்ந்து செல்லுகின்றனர். நம் தமிழ்நாட்டிலுள்ள பல்லாயிரக்கணக்கான கோயில்களில் மிகவும் புகழோங்கி முதல் வரிசையில் முன்னிலையில் சிறப்புற்று நிற்கும் திருக்கோயில்களில், திருத்தணிகையும் தலைசிறந்த ஒன்றாகத் திகழ்ந்து ஓங்கி வளர்ந்து வருகின்றது.

திருத்தணிகையின் சிறப்பினைப் புகழ்ந்து கச்சியப்ப சிவாசாரியர் தமது கந்த புராணத்திலும் கச்சியப்ப முனிவர் தமது தணிகைப் புராணத்திலும் கந்தப்ப தேசிகர் தணிகாசலப் புராணத்திலும் சிறப்பாகப் பாடியுள்ளனர். அருணகிரிநாதர், இத்தலத்திற்கு 63 திருப்புகழ்ப் பாடல்கள் அருளிச் செய்துள்ளார். வடலூர் இராமலிங்க அடிகளார், தமது திருஅருட்பாவின் ஐந்தாம் திருமுறையிலும் தணிகையைப் பற்றிப் பல பாடல்கள் பாடியுள்ளார்.

கந்தப்ப தேசிகர் தமது திருத்தணிகை சந்நிதி முறையில் பிள்ளைத்தமிழ் கலம்பகம், உலா அநுபூதி முதலிய பல பிரபந்தங்களைப் பாடியுள்ளார். கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முத்துசுவாமி தீட்சிதர், பல அரிய இசைச் சுருதி களைத் தணிகை முருகன் மீது இயற்றியிருக்கின்றார். தணிகையாற்றுப்படை தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதி என்பனவும் கச்சியப்ப முனிவரால் இயற்றப்பட்டுள்ளன.

அருணகிரிநாதரின் கந்தலங்காரம், கந்தரந்தாதி திருவகுப்பு முதலிய நூல்களிலும், திருத்தணிகையின் சிறப்பு போற்றித் துதிக்கப்பட்டுள்ளது.

### வழிபட்டோர்

சிவபெருமான் திருத்தணிகையில் முருகப் பெருமானைத் தியானித்துச் சிவ பெருமான் பிரணவப் பொருள் உபதேசிக்கப் பெற்றார். முருகனாகிய குழந்தை பிரணவப் பொருளை விளக்கிய திறனைக் கேட்டு,

மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம், மற்றவர்
சொற் கேட்டல் இன்பம் செவிக்கு.

என்றபடி தந்தையாகி சிவபெருமான் பெருமுழக்கம் செய்து சிரித்து மகிழ்ந்தருளினார். அதனால் அவருக்கு இங்கு வீர அட்டகாசர் என்று பெயராயிற்று. மந்தகாசம், புன்முறுவல் அட்டகாசம், ஒலிமிக்க பெருமுறுவல், சிவபெருமான் பிரணவ உபதேசம் பெற்று வீர அட்டகாசம் புரிந்தருளிய கோயில் ஊருக்கு வடகிழக்கே நந்தியாற்றுக்கு வடகரையில் உள்ளது. அக்கோயில் வீரட்டகாசம் என்றும் **வீரட்டகாச ஈசுவரர்** கோயில் என்றும் வழங்கும் பொதுமக்கள் இதனை வீரட்டானேசுவரர் கோயில் என்று வழங்குகின்றனர். அது தவறு, வீரட்டானம் என்பது சிவபெருமான் வீரச் செயல்கள் நிகழ்த்திய அட்ட வீரட்டத்தலங்கள் என்னும் எட்டுத் திருக்கோயில்களையே குறிக்கும். சிவபிரானுக்கு உபதேசம் செய்த முருகனின் திருக்கோயில், வீரட்டகாசர் கோயிலுக்கு எதிரில் நந்தியாற்றின் தென்கரையில் உள்ளது. இது ஆறுமுகசுவாமி கோயில் என வழங்குகின்றது. இங்கிருந்த ஆறுமுகசுவாமியே இப்போது மலை மீதுள்ள உற்சவ மூர்த்தி என்று செவிவழிச் செய்தி கூறுகின்றது.

### திருமால்

திருத்தணிகையில் முருகனை வழிபட்டு தாரகாசூரனால் கவரப்பட்ட தமது சக்கரம் சங்கு முதலியவற்றைத் திருமால் மீண்டும் பெற்றார். அவர் உண்டாக்கிய விஷ்ணு தீர்த்தம், மலையின்மேல், கோயிலுக்கு மேற்கே உள்ளது.

### இராமபிரான்

இங்கு முருகனை வழிபட்டு இராவணனைக் கொல்லும் ஆற்றலையும் அருட்படைகளையும் பெற்றதுடன் இராவணனை வென்ற பிறகு வந்து, மீண்டும் முருகனைப் பூசித்துச் சிவஞானம் பெற்றார். இராவணனை வென்று விஜயம் பெற்று வந்ததால் இங்குள்ள இராமபிரானுக்கு விஜயராகவப் பெருமாள் என பெயர் வழங்கலாயிற்று. விஜயராகவப் பெருமாள் கோயில் ஆறுமுகசுவாமி கோயிலுக்குத் தெற்கில் உள்ளது.

### பிரம்மதேவர்

திருத்தணிகையில் பிரம்மதேவர் முருகப்பெருமாளைப் பூசித்துப் படைப்புத் தொழில் செய்யும் ஆற்றலைப் பெற்றார். மற்றும் சூரபதுமனால்

கவரப்பட்ட தமது செல்வங்களையும் முருகன் அருளால் திரும்பப்பெற்றார். கலைமகளும் இத்தலத்தில் முருகனைப் பூசித்தாள். கிழக்கே மலையடிவாரத்திலிருந்து மலைமேல் ஏறிச் செல்லும் வழியில், பாதித் தொலைவில் மலைப்படிகளை அடுத்த வடபக்கத்தில் பிரம்மதேவர் உண்டாக்கிய பிரம்மதீர்த்தம் இருக்கின்றது. இது பிரம்மசுனை என வழங்கப்படுகிறது. இதன் தென்கரையில் பிரம்மேசுவரர் கோயில் அமைந்துள்ளது.

இங்ஙனம் இத்தலத்தில் சிவபிரான் - திருமால் - பிரம்மதேவன் என்னும் மும்மூர்த்திகளும் வழிபட்டு உயர்ந்த வரலாற்றுக் குறிப்பினை

"சிலைமகள் நாயன்
கலைமகள் நாயன்,
திருமகள் நாயன்
தொழும் வேலா"

என அருணகிரிநாதர், தம் திருப்புகழில் (261) சிறப்புற எடுத்துப்பாடிப் போற்றியுள்ளார்.

**இந்திரன்**

சூரபதுமனால் தேவலோகத்திலிருந்து கவர்ந்து கொண்டு செல்லப்பெற்ற, சங்கநிதி, பதுமநிதி, காமதேனு, சிந்தாமணி, கற்பகத்தரு முதலிய செல்வங்களை மீண்டும் பெறுவதற்காக இந்திரன் முருகனை இங்கு பூசித்தான். திருத்தணிகை மலைக்குத் தென்புறத்தில் உள்ள ஒரு சுனையில் நீலோற்பல மலர்க்கொடியை நட்டு வளர்த்து அதன் பூக்களைக் கொண்டு, காலை, மாலை, நண்பகல் என்னும் மூன்று வேளைகளிலும் இந்திரன் முருகனை பூசித்தான். அதுபோது அவன் நிறுவி வணங்கிய விநாயகருக்குச் செங்கழுநீர் விநாயகர் என்று பெயர். அவனால் உண்டாக்கப் பெற்ற நீலோற்பல மலர்ச்சுனை **இந்திர நீலச்சுனை என்றும் பெயர் பெற்ற தீர்த்தமாக மலைக்கோயிலின் தெற்கு வாயிலுக்கு நேராக இருக்கின்றது. இது கல்கார தீர்த்தம் எனவும் வழங்குகின்றது. இத்தீர்த்தத்தின் நீர்தான் சுவாமியின் திருமுழுக்கிற்கும், திருமடைப்பள்ளிக்கும் பூசை செய்வதற்கும் தனிச் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது. அதனால் இத்தீர்த்தத்தைத் தொலைவிலிருந்து தொழுதல் வேண்டுமேயன்றி வேறு எவ்வகையிலும் நாம் பயன்படுத்துதல் ஆகாது. இந்திரனுடன் தேவர்கள் யாவரும் வந்து வழிபட்ட செய்தியை,**

**"இமயவர் பணி
திருத்தணிப் பொற்பதி" (303)**

**"அண்டர்கள் தாம் மெச்சிய
நீள் தணிகையம்பதி" (311)**

**எனவரும் திருப்புகழ் பாடல் பகுதிகளால் யாவரும் இனிதறியலாம்.**

### திருநந்திதேவர்

பதி, பசு, பாசம் என்னும் இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள் இயல்புகளைக் கூறும் சைவ சித்தாந்த நுட்பங்களை, இங்கு முருகனை வழிபட்டுத் திருநந்தி தேவர் அறிவுறுத்தப் பெற்றார். அவர் பொருட்டு முருகப் பெருமான் வரவழைத்த **"சிவதத்துவ அமிர்தம்"** என்னும் நதியே இப்பொழுது நந்தியாறு என வழங்குகின்றது. முருகனின் அருளைப்பெற நந்தி தேவர் யோகம் புரிந்த குகை நந்திகுகை என வழங்கப்பெறுகின்றது.

### வாசுகி நாகம்

தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்த போது மந்தார மலையை மத்தாகவும், வாசுகி என்னும் நாகத்தனை நாணாகவும் கொண்டு கடைந்தனர். அங்ஙனம் கடைந்த போது வாசுகி நாகத்தின் உடலில் பல வடுக்களும், புண்களும், தழும்புகளும் ஏற்பட்டு பெரிதும் துயர் விளைவித்தன. ஒரு சுனையில் நாடோறும் முறையாக நீராடி முருகனை வழிபட்டு, வாசுகி நாகம் அத்துயரங்களினின்று நீங்கி உய்ந்தது. அது நீராடிய சுனை **நாகசுனை** என வழங்கி வருகின்றது. ஆதிசேடனும் இவ்வாறு வழிபட்டு அருள் பெற்றான். ஆதிசேட தீர்த்தம் விஷ்ணு தீர்த்தத்திற்கு மேற்கே மலைப் பாதைக்குத் தென்புறம் இருக்கின்றது.

### அகத்திய முனிவர்

இங்கு முருகனை வழிபட்டு, அகத்திய முனிவர் முத்தமிழ்ப் புலமையும், சிவஞானத் தெளிவும் பெற்றார். அவர் உண்டாக்கிவித்த அகத்திய தீர்த்தம், ஆதிசேட தீர்த்தத்திற்குத் தென்கிழக்கில் உள்ளது.

### நாரத முனிவர்

நாரத முனிவர் ஞானத்திலும் பக்தியிலும் சிறந்து விளங்குபவராயினும் அவருக்குச் சில ஐயப்பாடுகள் இருந்துவந்தன. அவ்ஐயப்பாடுகள் நீங்கி மெய்யுணர்வு பெறுவதற்காக நாரதர் இங்கு முருகனை வழிபட்டு அருள் பெற்றார். அவர் ஏற்படுத்திய நாரததீர்த்தம் அகத்திய தீர்த்தத்திற்கு கிழக்கேயுள்ளது.

### ஏழு முனிவர்கள்

சப்தரிஷிகள் என்று கூறப்பெறும் வசிட்டர் முதலான ஏழு முனிவர்கள் இங்கு முருகனைப் பூசித்தனர். அவர்கள் பூசித்த இடம் மலையின் தென்கீழ்த் திசையில் உள்ளது. அவர்கள் அமைத்த ஏழு சுனைகளும், கன்னியர் கோயிலும் இங்கு உள்ளன. இந்த இடம் இப்போது **ஏழு சுனை கன்னியர் கோயில்** என்று

வழங்குகின்றது. அடர்ந்த சோலைகளால் சூழப்பெற்று பசுமை தன்மையும் நிறைந்த, வெயில் நுழையாமல் அமைதி மிகுந்த இடமாகத் திகழ்கின்ற இந்த இடம் தவத்திற்கும் தியானத்திற்கும் ஏற்ற இடமாக விளங்குகின்றது.

"தவ முனிக் கணத்தவர்
மது மலர் கொடு பணி
திருத்தணிப் பதி"

என்று அருணகிரிநாதர் தம் திருப்புகழில் (266) ஏழு முனிவர்கள் பூசித்ததைக் குறித்துப் புகழ்ந்து பாடியுள்ளார்.

### குமாரக்கடவுள்

குமாரக் கடவுள் என்னும் முருகப் பெருமானே இங்குத் தம் தந்தையாகிய சிவ பெருமானைப் பூசிக்க விரும்பினார். அதனால் தணிகைமலையின் மீது தாம் இருக்கும் இடத்திற்கு வடகிழக்குப் பக்கத்தில், ஆபத்சகாய விநாயகர் என்னும் மூர்த்தத்தை நிறுவி, முதற்கண் வழிபட்டு, பின்னர் சிவலிங்கத் திருமேனியை அமைத்து முறையே வழிபட்டார். அப்போது சிவபெருமான் சூரபதுமனை வெல்வதற்கு **"ஞானசக்தி"** என்னும் சிறந்த வேற்படையை முருகனுக்கு வழங்கியருளினார். அதனால் இங்குள்ள முருகனுக்கு **ஞானசக்திதரன்** என்றும் சிவபெருமானுக்கு **குமாரேசுவரர் குமாரலிங்கம்** என்னும் பெயர்கள் ஏற்பட்டன. குமாரலிங்கேசுவரர் சந்நிதி, இரண்டாவதாக உட்பிரகாரத்தில் வடக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. குமாரரேசுவரர் ஆகிய சிவபெருமானுக்கு அபிடேகம் செய்ய குமாரக் கடவுள் வரவழைத்த கங்கா தீர்த்தமே **"குமார தீர்த்தம்"** அல்லது சரவணப் பொய்கை என்ற மலையடி வாரத்திலுள்ள பெரிய திருக்குளமாகும். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த கச்சியப்ப முனிவர் காலத்தில் கூட சரவணப் பொய்கை என்னும் இத்திருக்குளம், மிகச் சிறப்பாகப் போற்றப் பெற்றிருந்தது. இந்த உண்மை

"எத்துயர்த் திரளும்
அத்தினத்து அகற்றும்
சரவணப் பொய்கைத்
தடம்புனல் துளைக"

என்று அவர் பாடியருளிய தணிகையாற்றுப் படையில் சரவணப் பொய்கை என்னும் இந்த குமாரதீர்த்தம் ஆகிய திருக்குளத்தைப் புகழ்ந்திருக்கக காணலாம்.

### வழிபடும் முறை

திருத்தணிகைக்குச் செல்லும் பக்த கோடிகள், மலையடிவாரத்தில் உள்ள

*குமார தீர்த்தம் என்னும் சரவணப் பொய்கைத் திருக்குளத்தில் முதற்கண் நீராடி தூய்மை செய்து கொண்டு தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, திருநீறு உருத்திராட்சம் முதலிய சிவச் சின்னங்களை அணிந்து கொண்டு பக்தியுடன் மலைமீது ஏறுதல் வேண்டும். மலையேறும் போது திருப்புகழ்ப் பாடல்களை இயன்ற அளவு இசையுடன் உருக்கமாகப் பாடிக் கொண்டு படியேறுதல் வேண்டும். மலை உச்சியை அடைந்ததும் கிழக்குப் பிரகாரத்தில் உள்ள கொடிக்கம்ப விநாயகரையும், ஐராவத யானையும் தரிசித்து அதன்பின் கோயிலின் உள்ளே சென்று ஆபத்சகாய விநாயகரையும், அருகில் உள்ள வீரவாகு முதலிய நவ வீரர்களையும் குமாரலிங்கேசுவரரையும் வணங்கிக்கொண்டு பின்னர் மூலத்தானத்திலுள்ள, ஞானசக்கிதரர் என்னும் தணிகை முருகனையும், வள்ளி தெய்வானை அம்மையாரையும் முறையே வழிபடுதல் வேண்டும். சந்நிதிகளிலுள்ள தெய்வத் திருவுருவங்களை நன்றாக தரிசித்து, மனத்தில் பதித்துக் கொண்டு மகிழ்தல் வேண்டும். சந்நிதிகளில் திருநீறு குங்குமம் பிரசாதங்கள் வழங்கப்படுவதுடன் இங்கு திருமேனிப் பூச்சு என்னும் சந்தனம், முருகன் சந்நிதியில் சிறப்பாக வழங்கப்படும். தணிகை முருகனின் திருவுருவத்தை ஊன்றி நோக்கினால் மார்பில் சிறிது பள்ளமாக இருக்கும். தாரகாசூரன் திருமாலிடமிருந்து பறித்துக்கொண்ட சக்கரத்தை, முருகன், அவனை வென்றபோது தாம் எடுத்து, திருமாலுக்கு பின்னர் வழங்குவதற்காக அதனைச் சிறிதுகாலம் தம் மார்பில் அணிந்து கொண்டார். அதன் அடையாளமாகவே, தணிகை முருகனின் திருமார்பில் ஒரு சிறு பள்ளம் ஏற்பட்டுள்ளது. அதன் மீது அணிவிக்கப்பெறும். சந்தனமே அடியவர்களுக்கு அருட்கொடையாக வழங்கப் பெறுகின்றது. இது திருமேனிப் பூச்சு (ஶ்ரீ பாத ரேணு) எனப்படும் இச்சந்தனத்தை உட்கொள்ளும் பக்தர்கள் நோய்கள் பலவும் தீரப்பெறுவர்.*

"தாரகன் விடுப்பத் தனதூரம் பதிந்த
சக்கரம் தனை அகழ்ந்து அரிக்குச்
சீர்பெற அளித்த நாள் முதலாகச்
செருத்தணி காசலற்கு இன்னும்
மார்பகம் குழிந்த திருவடையாளம்
வழங்கியது, இவ்வுலகத்தில்
ஏர்பெற அதனைத் தெரிசனம் செய்தோர்
இடர் ஒழிந்த இன்ப வீடு அடைவார்!"

– தணிகாசலபுராணம்,
கந்தப்பதேசிகர்

## கல்வெட்டுகள்

*திருத்தணிகையில் மலை மேல் முருகன் கோயிலும், நந்தி ஆற்றின் வடகரையில் வீரட்டீஸ்வரர் கோயில், ஆறுமுகசுவாமி கோயில், விஜயராகவ சுவாமி கோயிலும் உள்ளன. இவற்றில் இராஜகேசரிவர்மன் என்னும் முதலாம் இராஜராஜசோழன் (கி.பி. 985-1014) பரகேசரிவர்மன் என்னும் இராஜேந்திர சோழதேவன் (கி.பி. 1012-1046) விக்கிரமசோழன் (கி.பி.1118-1133) மதுரை கண்ட கோப்ரத கேசரிவர்மன் (கி.பி.907-955) விஜய அபராஜித் விக்கிரவர்ம பல்லவன் (கிபி 875-893) வீரகம்பண உடையார் (சகம் 1288) வீரபிரதாப சதாசிவ தேவராயர் (சதம் 1471) என்னும் அரசர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. 1905 ஆம் ஆண்டில் தொல்பொருள் துறையினர் இக்கல்வெட்டை படியெடுத்திருக் கின்றனர். திருவேங்கடம் என்னும் மேல்திருப்பதிக்கு செல்வோர், சென்று திரும்புவோராகிய யாத்திரிகர்களுக்கு, இங்கு உணவு அளிப்பதற்காக நில தானங்கள் வழங்கப்பெற்றுள்ளன. வீரட்டீஸ்வரர் கோயிலை நம்பியப்பி என்பவர் ஒருவர் கட்டுவித்தார் என்று*

"திருந்து திருத்தணியில் செஞ்சடை ஈசர்க்கு
கருங்கலாஞ் கற்றளியா நிற்க – விரும்பியே
நற்கலைகள் எல்லாம் நவின்ற சீர் நம்பியப்பி
பொற்பமையைச் செய்தான் புரிந்து"

*என்னும் கல்வெட்டு வெண்பா உணர்த்துகின்றது. இப்பாடலை* ***"பெருமானடிகள்"*** *என்னும் பெயருடைய அபராஜிதவர்ம பல்லவன் (கி.பி.875-893) பாடியுள்ளார் என்று தெரியவருகின்றது. இதனால் வீரட்டீஸ்வரர் கோயில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டது என்று தெரியவருகிறது. திருத்தணிகை மலைமேல் உள்ள கோயில் ஜெயம் கொண்ட சோழ மண்டலத்து மேன்மலை நாட்டுத் திருத்தணியில் என்றும், அது குன்றவர்த்தனக் கோட்டத்தை சார்ந்தது என்றும், இக்கல்வெட்டுக்களால் அறிகின்றோம். கோயிலில் திருவிளக்கு எரிக்க ஒருவர் 12 ஆடுகள் வழங்கியுள்ளார். மற்றொருவர் 30 பசுக்கள் நன்கொடையளித்துள்ளார். மற்றுமொருவர் 90 ஆடுகள் கொடுத்திருக்கின்றனர். முருகன் கோயிலுக்கு நில தானங்கள் வழங்கியிருக்கின்ற நம்பியப்பி என்பவர், வீரட்டீசர் கோயிலுக்கும் 1000 குழி நிலம் நன்கொடை வழங்கியுள்ளார் என்பன போன்ற செய்திகள் இக்கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றன.*

## கோயிலின் அமைப்பு

*கோயிலின் அமைப்பு சரவணப் பொய்கையில் இருந்து துவங்குகிறது. மலைக்குமேல் செல்ல 365 படிக்கட்டுகளைக் கடந்து செல்லவேண்டும். மலைமீது பேருந்துகள் செல்லும் அளவுக்கு சாலைவசதி செய்யப்பட்டுள்ளது. இதுதவிர துணை நடைபாதை ஒன்றும் படிக்கட்டுகளின் பாதையை ஒட்டிச் செல்கிறது. கோயில் நான்கு திருச்சுற்றுக்களுடன் கட்டப்பட்டுள்ளது. முதல்*

*திருச்சுற்றில் நடுவில்தான் சுப்பிரமணியசுவாமி கோயில் வள்ளி, தெய்வானையின் கோயில்களுக்கு மேல் விமானங்கள் அமைந்துள்ளன. இரண்டாம் பிரகாரத்தின் கிழக்கிலும், மேற்கிலும், முதல்வெளிப் பிரகாரத்தின் கிழக்கிலும், கோபுரங்கள் சிறிய அளவில் கட்டப்பட்டுள்ளன.*

### முதல் திருச்சுற்று

*மூலவர் சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை சன்னதிகள் அமைந்துள்ள முதல் திருச்சுற்றின் மேற்கு சுவரில் பாலசுப்பிரமணியர், சண்டிகேசுவரர், சிற்பங்கள் முதற் திருச்சுற்றில் உள்ளன. திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் பைரவர் சன்னதி ஒன்றும் உள்ளது.*

### சுப்பிரமணியர்

*கருவறையிலுள்ள திருவுருவத்திற்கு சுப்பிரமண்யர் அல்லது ஞானசக்திதரன் என்று பெயர். முருகன் இரண்டு திருக்கைகளுடன், ஒரு கையில் வேலேந்தி, மற்றொரு கையைத் தொடையில் வைத்துக் கொண்டு மயில் இன்றித் தனியே நின்றிருக்கும் தோற்றமே ஞானசக்திதரர் என்னும் திருவுருவமாகும். திருத்தணிகை முருகன் ஞானசக்திதரர் என்னும் நிலையிலேயே எழுந்தருளி விளங்குகிறார். இத்திருவுருவத்தின் இயல்பையும் சிறப்பையும் பின்வரும் தணிகைப் புராணம் பாடல் விரிவாகக் கூறுகின்றது.*

"செங்கமல மலர் ஏய்க்கும் ஒரு திருக்கை
தொடையமைத்துச், செம்பொன் மேருத்
துங்க வரிச் சிலைக்கடவுள் அருள்ஞான
சக்திஒரு தொடிக்கை ஏந்திப்,
பொங்கும் அருட் கருணைவிழிக் கடைஒழுக
மலர்ந்தமுகப் பொலிவி னோடும்,
அங்கண் அமர் ஞானசக்திதிரனை, அகத்
துறநினைப்போர் அவனே ஆவர்"

*இச்செய்யுள் கூறியுள்ளதற்கு ஏற்ப, தணிகை முருகனின் வலத் திருக்கரத்தில் மூவிதழ்ச் சக்தியாகிய ஞானவேல் அமைந்திருக்கின்றது. அவர்தம் தொடையில் இடக்கரம் படிந்துள்ளது. முருகன் மயில் இன்றித் தனித்த நிலையில் நின்றிருக்கும் அழகிய சிறந்த திருவுருவம் இது. இவ்வழகிய சிறந்த திருவுருவத்தினை வியந்தே, தந்த பொருளைத் திரும்பப்*

"தணிகை மலையப்பனே!
அழகிய பெருமானே!
தணிகையில் இணையிலி

*என்று அருணகிரிநாதர் (திருப்புகழ், அருணகிரிநாதர் பாடல் 273, 289) பாடியுள்ளார்.*

## வள்ளி

*சுப்பிரமணியர் சன்னதிக்கு வலப்புறம் வள்ளியம்மன் ஆலயம் உள்ளது. இதுவும் கருவறை, அர்த்தமண்டபம், முன்மண்டபங்களை பெற்றிருக்கிறது. கருவறையிலுள்ள வள்ளியின் உயரம் சுமார் 3 அடி உயரமுடையதாகும். இரு கரங்களில் வலது கரம் தொங்கிய நிலையிலும், இடது கரத்தில் பத்மமும் கொண்டு விளங்குகிறது. தலையில் கரண்ட மகுடம், ஆடைகள் பாதம் வரை அழகு செய்கின்றன.*

## தெய்வானை

*சுப்பிரமணியரின் சன்னதிக்கு இடப்புறத்தில் தெய்வானைக்கென்று தனி சன்னதி உள்ளது. இச்சன்னதியில் பத்மபீடத்தில் நின்றுள்ள தெய்வானையின் இடக்கை தொங்கிய நிலையிலும், வலக்கையில் நீலோற்பல மலர் ஏந்தியும் காணப்படுகிறது. காதுகளில் தொங்கல் அணிகலன், தலையில் கரண்ட மகுடம், ஆடைகள் பாதம் வரை அலங்கரிக்கின்றன.*

## பாலசுப்பிரமணியர் (பல்லவர் காலம்)

*முதல் திருச்சுற்றின் மேற்குப் பகுதியில் பாலசுப்பிரமணியர் சன்னதி ஒன்றுள்ளது. இச்சிற்பம் உயரம் சுமார் 11/2 அடி உயரமுடையது. மேல் கைகளில் அக்கமாலை, கமண்டலம், கீழிரு கைகள் அபயம், கடிகஹஸ்தம் முத்திரையில் உள்ளன. உதரபந்தம் சற்று பெரியதாக உள்ளது. தலையில் கரண்ட மகுடம், நெற்றியில் கன்னிமாலை காணப்படுகிறது. காதுகளில் குண்டலங்கள் காட்சியளிக்கின்றன. இந்த சிற்பத்தின் காலம் பல்லவர் காலமாகும் வடக்கில் தற்போது பள்ளியறை அமைந்துள்ளது.*

## இரண்டாம் திருச்சுற்று

*இரண்டாம் திருச்சுற்றின் கிழக்கு மேற்கு திருச்சுற்றின் மூலைகளில் தூண்களால் ஆகிய மண்டபம் உள்ளது. தெற்கு சுவரின் மத்தியில் காமாட்சியம்மை உடனுறை ஏகாம்பர ஈசுவரர் சன்னதி இருக்கின்றது. அடுத்து பள்ளியறையும் உள்ளன. அர்த்தநாரீஸ்வரர் ஆலயமும் மூலையிலுள்ளன. திருச்சுற்றின் மேற்குச் சுவரில் அருணாசலீஸ்வரர் சிதம்பரேஸ்வரர் சன்னதிகள் உள்ளன.*

## சந்தனக்கல்

*முருகனுக்கு பயன்படுத்தப் பெறுகின்ற சந்தனக் கலவை அரைப்பதற்கு வேண்டிய அற்புதமான பெரிய சந்தனக்கல் ஒன்றுள்ளது. இதுவும் தெய்வ யானைக்குச் சீதனமாக தேவேந்திரன் கொடுத்தது என்பது புராணச்*

*செய்தியாகும். இதில் அரைக்கும் சந்தனம்தான், சுவாமிக்கு திருமேனிப்பூச்சாகப் பயன்படுத்தப்பெற்று பின்பு அடியார்களுக்கு ஸ்ரீபாதரேணு என்னும் அருட்பிரசாதமாகக் கொடுக்கப்படுகின்றது. இது எல்லா நோய்களையும் தீர்க்கும் மருந்தாக கருதி நாள்தோறும் மிளகு அளவு உட்கொண்டு வருவதாக சில அடியார்கள் கூறுகின்றனர்.*

*இத்திருச்சுற்றின் வடக்குப் பகுதியில் குமாரேசுவர் சன்னதி உள்ளது. இதனை அடுத்து ஆறுமுகங்களுடன் தனிச் சன்னதி ஒன்று சண்முகருக்கு உள்ளது.*

**ஆறுமுகர் சன்னதி**

*முருகன் தனது தேவியர்களுடன் மயில்வாகனத்துடன் காட்சியளிக்கிறார். பன்னிரு கைகள் உடைய இந்த ஆறுமுகர் சிற்பம்தான் கீழ்த்திருத்தணிகை யிலுள்ள ஆறுமுக சுவாமி கோயிலின் கருவறையில் இருந்ததாக கூறுகின்றனர். தற்போது ஆறுமுக சுவாமி கோயிலில் உள்ள சிற்பம் ஒரு தலையுடன் காணப்படுகிறது. ஆறுமுகங்களுடன் விளங்கியதால்தான் ஆறுமுக சுவாமி கோயில் என்று பெயர் வந்தது.*

**ஆபத்சகாய வினாயகர்**

*தனது தம்பி முருகனுக்கு வள்ளியை மணமுடிக்க யானை வடிவங் கொண்டு வள்ளியை பயமுறுத்தினார். பிறகு வள்ளி முருகனைத் திருமணம் புரிந்து கொண்டாள். இதனால் இவருக்கு ஆபத்சகாய விநாயகர் என்ற பெயர் ஏற்பட்டது என்கின்றனர். இத்திருச்சுற்றின் கிழக்கில் அருணகிரிநாதருக்கென்று தனிச் சன்னதி அமைந்துள்ளது. இதனையடுத்து நவவீரர்கள் சிற்பங்கள் காணப்படுகின்றன. இதனருகே வீரபத்திரர் சிற்பம் ஒன்றும் உள்ளது.*

**நவவீரர்கள்**

*1. வீரதீரன் 2. வீராந்தகன் 3. வீரமார்த்தாண்டன் 4. வீரராக்கதன் 5. வீரபுரந்தரன் 6. வீரமகேஸ்வரன் 7. வீரமகேந்திரன் 8. வீரகேசரி 9. வீரபாகு ஆகிய நவவீரர்களின் சிற்பங்கள் விஜயநகர காலத்தவையாகும்.*

*நவவீரர்களை அடுத்து சூரியன் சிற்பம் உள்ளது. தனது இரு கரங்களிலும் தாமரை மலர்களைப் பிடித்துக்கொண்டு நின்ற நிலையில் உள்ளார்.*

**மூன்றாம் திருச்சுற்று**

*மூன்றாம் திருச்சுற்றின் கிழக்கில் ஸ்ரீகுந்தம் செங்கல்வராயரால் புதுப்பிக்கப்பட்ட கோபுரம் ஒன்றுள்ளது. கொடிக் கம்ப விநாயகர் சன்னதியும், ஐராவத யானை உருவமும் உள்ளது.*

## ஐராவதம்

*ஐராவத யானை முருகனை நோக்கிக் கொண்டு நிற்காமல், கிழக்குத் திசையை நோக்கிக் கொண்டு நிற்கின்றது. அதற்குக் காரணம் இந்திரனுக்குரிய வாகனமான ஐராவதம் என்னும் யானை, தெய்வயானையம்மையின் திருமணத்தின் போது சீதனப் பொருளாக இந்திரனால் கொடுக்கப் பெற்றது. ஐராவத யானைத் தன்னை விட்டுப் பிரியவே, இந்திரனுடைய செல்வம் குறைந்தது. அக்குறை நீங்க, இந்திரன் இத்தலத்தில் செங்கழுநீர்ப்பூவால் முருகக் கடவுளை வழிபட்டான். வழிபாட்டிற்கு இரங்கி, ஐராவதத்தைக் கொண்டு செல்ல இந்திரனுக்கு முருகன் இசைவு தந்தார். ஆயினும், சீதனமாகத் தந்த பொருளை பெற்றுக்கொள்வது முறையன்று என்று, இந்திரன் தயங்கினான். ஐராவதமும் முருகனுக்கு ஊர்தியாக இருத்தலையே பெரிதும் விரும்பியது. அப்பொழுது இந்திரன் ஐராவதம் இங்கு தங்கள் சன்னதியிலேயே தங்கியிருக்கட்டும். ஆனால் கிழக்கே உள்ள என் உலகை நோக்கிக்கொண்டு இருந்தால் போதும். என்னுடைய நாடும், செல்வமும் வளங்குன்றாமல் இருக்கும் என்று விண்ணப்பித்தான். முருகப்பெருமான் அவ்வாறே அருள்புரிந்தான்.*

*அதனாலேயே, ஐராவதம் கிழக்குத் திசை நோக்கி நின்று கொண்டு, முருகன் தன் மீது அமர்ந்து உலாவர சித்தமாக இருக்கும் நிலையில் விளங்குகின்றது.*

*இந்த யானையை*

**"ஓடாப் பூட்கைப் பிணிமுகம்" வாழ்த்தி**

*என நக்கீரர் பாடியுள்ளார்.*

## பிரசன்னகாதர் ஈஸ்வரர் சன்னதி

*நுழைவாயிலின் தென்புறத்தில் இவ்வாலயம் உள்ளது. தனக்கு ஏற்பட்ட இன்னல் ஒன்றை நீக்கி அருள்செய்த காரணத்தால், காதர் என்னும் பெயருள்ள நவாப் ஒருவர் இங்கு இலிங்கத்தை நிறுவினர். இதற்கு தென்புறம் சர்வ வாத்திய மண்டபமும் உள்ளது. இந்து-முஸ்லீம் சமய ஒற்றுமைக்கு இக்கோயில் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.*

## உமாமகேஸ்வரர் கோயில்

*இத்திருச்சுற்றின் மேற்கு மூலையில் உமாமகேஸ்வரர் கோயில் தனியாகக் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், முன் மண்டபம் ஆகிய பகுதிகளைக் கொண்டுள்ளது. இருதளமுள்ள விமானம். நாகர சிகரத்தை உடையதாகும். இதன்மேல் ஒரு ஸ்தூபி உள்ளது. இக்கோயிலை அடுத்து விஜய நகர கால மண்டபம் ஒன்றுள்ளது. மேற்கு புறத்தில் அ/மி உச்சிவிநாயகர் கோயில் உள்ளது.*

## நான்காம் திருச்சுற்று

*நான்காம் திருச்சுற்று நுழைவாயிலின் மேல் சிறிய கோபுரம் உள்ளது. இத்திருச்சுற்று இருபதாம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகும்.*

## பூசை விவரங்கள்

*இத்திருக்கோயில் அதிகாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை பக்தர்கள் தரிசனத்திற்காக இடைவிடாது திறந்திருக்கிறது.*

*இத்திருக்கோயிலில் நடைபெறும் பூசைகள் காமிகாகமம், காரணகாகமம், சுப்ரவேதகாகமம் மற்றும் குமாரதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் நடைபெறுகின்றன.*

## கால பூசைகள்

| | | |
|---|---|---|
| 1. | விஸ்வரூப தரிசனம் | காலை 6.00 மணி |
| 2. | காலசந்தி அபிடேகம் | காலை 8.00 மணி |
| 3. | உச்சிகால அபிடேகம் | நண்பகல் 12.00 மணி |
| 4. | சாயரட்சை அபிடேகம் | மாலை 5.00 மணி |
| 5. | அர்த்தசாம பூசை | இரவு 8.00 மணி |
| 6. | பள்ளியறை பூசை | இரவு 8.45 மணி |

## சேவை காணிக்கை விவரம்

| வ.எண் | பூசை விவரம் | காணிக்கை ரூ. |
|---|---|---|
| 1. | பஞ்சாமிர்த அபிடேகம் | 1000/- |
| 2. | தங்க கவசம் | 500/- |
| 3. | சஹஸ்ரநாம அர்ச்சனை | 400/- |
| 4. | சந்தன காப்பு கட்டணம் | 4000/- |
| 5. | விபூதி, பன்னீர், பால், தயிர், சந்தனம், இளநீர் ஒவ்வொன்றுக்கும் அபிடேக கட்டணம் | 100/- |
| 6. | தங்கத்தேர் | 2000/- |
| 7. | வெள்ளித்தேர் | 3500/- |
| 8. | வெள்ளி மயில் வாகனம் மற்றும் இதர வாகன உற்சவம் | 3500/- |
| 9. | கேடய உற்சவம் | 1000/- |
| 10. | கல்யாண உற்சவம் | 2000/- |

*11. கிருத்திகா அர்ச்சனை ஒரு வருடம் 500/-*

*பிரார்த்தனை, நேர்த்திக் கடன் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காக பக்தர்கள் உற்சவங்களை செய்து அருள் பெறலாம்.*

*(விழாக் காலங்களில் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அபிடேக நேரங்கள் மாறுதலுக்குட்பட்டவை)*

**முக்கிய திருவிழாக்கள் விவரங்கள்**

1. *தமிழ்ப் புத்தாண்டு*
2. *மாசிப்பெருவிழா*
3. *சித்திரைப் பெருவிழா*
4. *வசந்த உற்சவம்*
5. *ஆடிக்கிருத்திகைப் பெருவிழா*
6. *நவராத்திரி திருவிழா*
7. *கந்தர் சஷ்டி திருவிழா*
8. *திருப்புகழ் திருப்படித் திருவிழா*

**குறிப்பு :** *இதில் ஆடிக்கிருத்திகைப் பெருவிழா அறிவிக்கப்பட்ட திருவிழாவாகும். இது பல இலட்சம் பக்தர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கும் பெருவிழாவாகும்.*

**திருக்கோயிலில் தங்கும் வசதிகள்**

*இத்திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக திருத்தணி நகரில் தணிகை இல்லம், கார்த்திகேயன் இல்லம், சரவணப் பொய்கை இல்லம் ஆகிய வளாகங்களில் குடில்கள் மற்றும் அறைகள் உள்ளன.*

*மேற்கண்ட இடங்களில் குடில்கள் மற்றும் அறைகள் பதிவு செய்ய வசதிகள் உள்ளன.*

**குடில்கள் மற்றும் அறைகளுக்கான காணிக்கை விவரம்**

*தங்கும் நாளுக்கு, முன் நாளிலிருந்து 7 நாட்களுக்குள் முன்பதிவு செய்யப்படும்.*

*ஆடிக்கிருத்திகை திருவிழாவின் போது மூன்று நாட்களுக்கு ஒட்டுமொத்த பதிவு செய்யப்படும். ஒரு நாள் தங்குவதாயினும் மூன்று நாட்களுக்குரிய காணிக்கை தொகை செலுத்த வேண்டும். திருப்படி திருவிழாவின் போது ஒரு நாள் தங்குவதாயினும் இரண்டு நாட்களுக்குரிய காணிக்கை தொகை செலுத்த வேண்டும்.*

### குடில்கள் மற்றும் அறைகள் விவரம்

| வ.எண் | குடில்/அறை விவரம் | குடில்கள் / அறைகள் | காணிக்கை நாள் ஒன்றுக்கு | முன்பதிவுக்கான காணிக்கைத் தொகை | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | குளிர்சாதன குடில் (முழுக் குடில்) | 57 | 1000/– | 1500/– | 1000/– |
| 2. | குளிர்சாதன குடில் (பகுதி மட்டும்) | | 500/– | 750/– | 500/– |
| 3. | சாதாரணக் குடில் (முழுக் குடில்) | 34 | 600/– | 900/– | 600/– |
| 4. | சாதாரணக் குடில் (பகுதி மட்டும்) | | 300/– | 450/– | 300/– |
| 5. | அறை (மூன்று கட்டில்) | 6 | 300/– | 450– | 300/– |
| 6. | அறை (இரண்டு கட்டில்) | 146 | 200/– | 300– | 200/– |
| 7. | கடை அறைகள் (ஒரு கட்டில்) | 8 | 200/– | 300– | 200/– |


10/-
SPECIAL ENTRANCE

### தொலைபேசி எண்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நிர்வாக அலுவலகம் | - | 044-27885247 |
| 2. | மலைக்கோயில் | - | 044-27885201, 044-27885243 |
| 3. | தணிகை இல்லம் | - | 044-27885387 |
| 4. | கார்த்திகேயன் இல்லம் | - | 044-27885396 |
| 5. | சரவணபொய்கை | - | 044-27881243 |
| 6. | மத்தூர் / திருக்கோயில் | - | 044-27868419 |
| 7. | திருவாலங்காடு / திருக்கோயில் | - | 044-27872074 |
| 8. | கரிம்பேடு / திருக்கோயில் | - | 044-27896333 |
| 9. | பெரிய நாகபூண்டி / திருக்கோயில் | - | 044-27895072 |
| 10. | நெடும்பரம் / திருக்கோயில் | - | 044-27894859 |

### மூலவர் தங்க விமானம்

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் திருத்தணிகை மூலவர் விமானத்திற்கு 14 அடி நீளத்தில் 14 அடி அகலத்தில் 19 அடி உயரத்தில் செப்புத் தகடுகளை கொண்டு நகாஸ் வேலைகள் செய்து அதன் மீது தங்க ரேக்குகள் பதிக்கும் பணி ரூ.33 கோடி மதிப்பீட்டில் 63 கிலோ தங்கத்தில் தங்க விமானம் நிறுவப்பட்டுள்ளது. மேற்படி தங்க விமானம் அனைத்து பணிகள் முடிவுற்ற நிலையில் 07.02.2011-ல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

### ஆன்மீக வகுப்பு

அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணியில் கருணை இல்லத்தில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமையில் மாலை 4 மணி முதல் 5 மணி வரை கருணை இல்ல மாணவர்களுக்கு ஆன்மீக வகுப்பு மற்றும் யோகா பயிற்சி வகுப்புகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதன் உபகோயில்களான அருள்மிகு மகிஷாசூரமர்த்தினி அம்மன் திருக்கோயில், மத்தூர் மற்றும் அருள்மிகு வடாரண்யேஸ்வர சுவாமி திருக்கோயில், திருவாலங்காடு, பெரிய நாகபூண்டி அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயிலில் நடைபெற்று வருகிறது.

### திருக்கோயில் சார்பில் நடைபெறும் சமூக நலப்பணிகள்

### 1. நூல் நிலையம்

முன்னாள் குடியரசுத் தலைவர் மாண்புமிகு டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த வீட்டில் அவரது பெயரில் திருக்கோயிலில் நூல் நிலையம்

*அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பெறும் வகையில் நடத்தப்பட்டு வரப்படுகிறது.*

*இந்நூலகத்தில் 3885 நூல்கள் உள்ளன. சங்க இலக்கிய நூல்கள், பக்தி சமய நூல்கள், டாக்டர் இராதாகிருஷ்ணன் தத்துவ நூல்கள், நாவல், சிறுகதை கட்டுரைகள், ஆங்கிலம், தெலுங்கு மொழி நூல்கள், இந்தி மொழி நூல்கள் போன்ற பல்வேறு வகையான நூல்கள் உள்ளன. அனைத்து ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளும், வார மாத இதழ்களும் வாங்கப்பட்டு பொதுமக்கள் படித்துப் பயன்பெற்று வருகிறார்கள்.*

**2. கருணை இல்லம்**

*இத்திருக்கோயிலால் ஆதரவற்ற மாணவ, மாணவியர்களுக்கு கருணை இல்லம் தனித்தனியே நடத்தப்படுகிறது. இக்கருணை இல்லங்களில் சிறுவர்கள், சிறுமியர்களும் தங்கி பயின்று வருகின்றனர். இவர்களுக்கு இருப்பிடம், உடை, கல்விக்கான அனைத்து கட்டணங்களும் திருக்கோயிலால் வழங்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர்.*

**3. இலவசத் திருமணம்**

*இத்திருக்கோயில் நிதியிலிருந்து ஏழை எளியோருக்கு இலவச திருமண திட்டம் நடத்தப்பட்டு வருகிறது.*

**4. அரசு கலைக்கல்லூரிக்கு நன்கொடை**

*திருத்தணியில் அரசு கலைக் கல்லூரி ஆரம்பித்து நடத்த திருக்கோயில் மூலம் ரூபாய் ஐந்து இலட்சம் நன்கொடையாக வழங்கப்பட்டு அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் அரசு கலைக்கல்லூரி என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது.*

**5. சித்த வைத்திய சாலை**

*இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு உதவிட சித்த வைத்தியசாலை 1971-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து பக்தர்களுக்கு சித்த வைத்தியம் இலவசமாக சித்த மருத்துவத் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவரைக் கொண்டு சிறந்த முறையில் செய்யப்பட்டு வருகிறது.*

## 1. அன்னதானத் திட்டம்

| வ.எண் | திருக்கோயில் பெயர் | வைப்புத் தொகை | பயன்பெறுபவர்கள் எண்ணிக்கை | காணிக்கை நாள் 1க்கு |
|---|---|---|---|---|
| 1. | அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி | 75,000 | 300 | 6000 |
| 2. | அருள்மிகு மகிஷாசூரமர்த்தினியம்மன் திருக்கோயில், மத்தூர் | 25,000 | 100 | 2000 |
| 3. | அருள்மிகு வடாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயில், திருவாலங்காடு | 15,000 | 50 | 1000 |
| 4. | அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில், பெரியநாகபூண்டி | 25,000 | 100 | 2000 |
| 5. | அருள்மிகு வாசீஸ்வரசுவாமி திருக்கோயில், திருப்பாச்சூர் | 15,000 | 50 | 1000 |

## 6. திருப்பணி

*இத்திருக்கோயிலின் மலைக்கோயிலில் 9 நிலை இராஜகோபுரம் கட்டும் பணி ரூ. 1.65 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலுக்கு இரண்டாவது மாற்று மலைப்பாதை ரூ.6 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திருக்கோயில் மலைக்கோயில் மற்றும் குடில்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் சப்ளை செய்ய பைப் லைன் அமைக்கும் பணி ரூ.1.85 கோடி மதிப்பீட்டில் துவங்கப்பட்டு நிறைவடைந்துள்ளது.*

*திருப்பணிகள் தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு திருக்கோயில் இணை ஆணையர் / செயல் அலுவலரைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

*இத்தெய்வத் திருப்பணியில் தாங்களும் பங்கு கொள்ளும் வகையில் விரும்பியதைத் தங்களது உபயத் திருப்பணியாகச் செய்து கொடுத்து திருத்தணிகை அருள்மிகு வள்ளி, அருள்மிகு தெய்வானை உடனமர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருவருள் பெறுவீர்களாக.*

*அனைத்து திருப்பணி நன்கொடைகளுக்கும் வருமான வரிச்சட்டம் 1961 பிரிவு 80-ஜியின் கீழ் வருமான வரிச்சலுகை உண்டு.*

***நன்கொடைகள் அனுப்பவேண்டிய முகவரி***

***இணை ஆணையர் / செயல் அலுவலர்***
***அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணி.***
***தொலைபேசி எண் : 044-27885247***
***(தலைமை அலுவலகம்)***
***தொலை நகல் (பேக்ஸ்) 044-27885303***
***044-27885243 (மலைக்கோயில்)***
***044-27885201 (மலைக்கோயில் பேஷ்கார் அலுவலகம்)***

*சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்*
*செகுத்தவர் உயிர்க்கும் சினமாகச்*
*சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்*
*திருப்புகழ் நெருப்பென்(று( அறிவோம்யாம்*
*நினைத்ததும் அளிக்கும் மனத்தையும் உருக்கும்*
*நிசிக் கரு வறுக்கும் பிறவாமல்*
*நெருப்பையும் எரிக்கும் பொருப்பையும் இடிக்கும்*
*நிறை புகழ் உரைக்கும் செயல்தாராய்*
*தனத்தன தனத்தந் திமித்திமி தமித்திந்*
*தகுத்தகு தகுத்தந் தனபேரி*
*தடுட்டுடு டுடுட்டுண்டு எனத்துடி முழக்கும்*
*தளத்துடன் நடக்கும் கொடுசூரர்*
*சினத்தையும் உடற்சங் கரித்தமலை முற்று(ம்)*
*சிரித்தெரி கொள்ளுத்தும் கதிர்வேலா*
*தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் கதித்தென்*
*திருத்தணி இருக்கும் பெருமாளே*

**துணைக்கோயில்கள் விவரம்**

*தொன்மைச் சிறப்பும், இலக்கிய பெருமையும் வாய்ந்த திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், 18 சைவத் திருக்கோயில்களையும், 6 வைணவ திருக்கோயில்களையும், 4 சக்தி திருத்தலங்களையும், 1 மடாலயத்தையும் தனது அரவணைப்பின் கீழ் கொணர்ந்து திறம்பட நிர்வகித்து வருகிறது. இத்திருக்கோயில்கள் அனைத்தும் பழம்பெருமையும், புனிதமும் மிக்கவை.*

## பழமுதிர்சோலைப் பொருளடக்கம்


| வ.எண் | பாடல் அடிகள் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 1. | 218–226 | நச்சினார்க்கினியர் உரை | 740 |
| 2. | ,, | உரையாசிரியர் உரை | 741 |
| 3. | ,, | பரிமேலழகர் உரை | 741 |
| 4. | ,, | கவிப்பெருமாள் உரை | 742 |
| 5. | ,, | பரிதியார் உரை | 743 |
| 6. | ,, | கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 743 |
| 7. | 227–249 | நச்சினார்க்கினியர் உரை | 744 |
| 8. | ,, | உரையாசிரியர் உரை | 747 |
| 9. | ,, | பரிமேலழகர் உரை | 749 |
| 10. | ,, | கவிப்பெருமாள் உரை | 751 |
| 11. | ,, | பரிதியார் உரை | 751 |
| 12. | ,, | கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 752 |
| 13. | 250–281 | நச்சினார்க்கினியர் உரை | 755 |
| 14. | ,, | உரையாசிரியர் உரை | 759 |
| 15. | ,, | பரிமேலழகர் உரை | 762 |
| 16. | ,, | கவிப்பெருமாள் உரை | 764 |
| 17. | ,, | பரிதியார் உரை | 765 |
| 18. | ,, | கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 766 |
| 19. | 282–286 | நச்சினார்க்கினியர் உரை | 769 |
| 20. | ,, | உரையாசிரியர் உரை | 770 |
| 21. | ,, | பரிமேலழகர் உரை | 770 |
| 22. | ,, | கவிப்பெருமாள் உரை | 771 |
| 23. | ,, | பரிதியார் உரை | 771 |
| 24. | ,, | கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 771 |
| 25. | 287–295 | நச்சினார்க்கினியர் உரை | 772 |

| வ.எண் | பாடல் அடிகள் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 26. | ,, | உரையாசிரியர் உரை | 773 |
| 27. | ,, | பரிமேலழகர் உரை | 773 |
| 28. | ,, | கவிப்பெருமாள் உரை | 774 |
| 29. | ,, | பரிதியார் உரை | 775 |
| 30. | ,, | கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 775 |
| 31. | 296–317 | நச்சினார்க்கினியர் உரை | 776 |
| 32. | ,, | உரையாசிரியர் உரை | 779 |
| 33. | ,, | பரிமேலழகர் உரை | 781 |
| 34. | ,, | கவிப்பெருமாள் உரை | 783 |
| 35. | ,, | பரிதியார் உரை | 784 |
| 36. | ,, | கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன் | 784 |
| 37. | 218–317 | கி.வா. ஜகன்னாதன் உரை | 785 |
| 38. | ,, | பெருமழைப் புலவர்<br>பொ.வே. சோமசுந்தரனார் உரை | 866 |
| 39. | | பழமுதிர்சோலை மலை | 896 |
| 40. | | பழமுதிர்சோலை மேல் அருளப்பட்ட<br>நூல்கள் | 900 |
| 41. | | இருபத்தொன்றாம் நூற்றாண்டில்<br>பழமுதிர்சோலை | 918 |

உ
*சிவமயம்*

## 6. பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்

---

**1. நச்சினார்க்கினியர்**

*சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து - சிறிய தினை யரிசியைப் பூக்களோடே கலந்து பிரப்பரிசியாக வைத்து ஆட்டை அறுத்து,*

*வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ - கோழிக் கொடியோடே தான் அவ்விடத்தே நிற்கும்படி நிறுத்தி,*

*ஊர் ஊர் கொண்ட சீர் கெழு விழவினும் - ஊர்தோறும் ஊர்தோறும் எடுத்துக்கொண்ட தலைமை பொருந்தின விழாவின் கண்ணும்,*

*ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும் - தன்மேல் அன்புடையார் ஏத்துதலாலே தன்மனம் - பொருந்துதல் வருகின்ற இடத்திலும்,*

*வேலன் தைஇய வெறி அயர் களனும் - படிமத் தான் இழைத்த வெறியாடு களத்தினும்,*

*பிள்ளையார் வேலைத் தனக்கு அடையாளமாகக் கொண்டு திரிதலின், வேலன் என்றார்; இது “வெறி யறி சிறப்பின் வெவ்வாய் வேலன்” எனப் புறத் திற்குங் கூறியது.*

*காடும் காவும் கவின் பெறு துருத்தியும் - காட்டினும் பொழிலினும் அழகு பெறுகின்ற ஆற்றிடைக் குறையினும்,*

*யாறும் குளனும் - ஆறுகளினும் குளங்களினும்,*

*வேறு பல் வைப்பும் - முற்கூறிய ஊர்களன்றி வேறுபட்ட பலவாகிய ஊர்களினும்,*

*சதுக்கமும் - நாற்சந்தியினும்,*

*சந்தியும் - முச்சந்தியினும் ஐஞ்சந்தியினும்,*

*புதுப் பூங் கடம்பும் - புதிய பூக்களையுடைய கடம்பினும்,*

*மன்றமும் - ஊர்க்கு நடுவாய் எல்லாருமிருக்கும் மரத்தடியினும்,*

*பொதியிலும் - அம்பலத்தினும்,*

*கந்து உடை நிலையினும் - ஆதீண்டு குற்றியையுடைய இடத்தினும்,*

**2. உரையாசிரியர்**

*சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து - சிறிய தினையரிசியைப் பூக்களோடே கலந்து இடப்பட்ட ஆட்டை அறுத்து,*

*வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ - கோழிக் கொடியுடனே அவ்விடத்தில் தான் உண்டாகும் வண்ணம் நிறுத்தி,*

*ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும் - ஊர்தோறும் ஊர்தொறும் எடுத்துக்கொண்ட சீர்மை பொருந்திய விழாவினிடத்தும்,*

*ஆர்வலர் ஏத்த மேவரும் நிலையினும் - தன்மேல் ஆர்வமுடையார் துதிக்க அதற்குப் பொருந்துதல் வருகிற இடத்தினும்,*

*வேலன் தைஇய வெறி அயர் களனும் - வெறியாட்டாளன் அலங்கரித்து வெறியாட்டைச் செய்யுமிடத்தும்,*

*காடும் காவும் கவின்பெறு துருத்தியும் - காட்டிடத்தும் சோலையிடத்தும் அழகு பெறப்பட்ட ஆற்றிடைக் குறையிலும்,*

*யாறும் குளனும் வேறு பல் வைப்பும் - ஆற்றங்கரையினும் குளங்கரையினும் வேறுபட்டுப் பலவாகிய முற்கூறிய திருப்பதிகளை யொழிந்த ஊர்களினும்,*

*சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும் - நாற்சந்தியிலும் முச்சந்தியிலும் ஐஞ்சந்திகளிலும் புதிய பூக்களையுடைய கடம்பின் அடியிலும்,*

*மன்றமும் பொதியினும் கந்துஉடை நிலையினும் - ஊர் நடுவாகி யெல்லாருமிருக்கும் மரத்தடியினும் அம்பலத்தினும் ஆதீண்டு குற்றி முதலான தறிகள் நின்ற இடத்தினும்,*

**3. பரிமேலழகர்**

*சிறுதினை என்பது முதல் கந்துடை நிலையினும் என்பது வரையில் ஒரு தொடர் (218-226).*

*சிறு தினை மலரொடு விரைஇ மறியறுத்து - நுண்ணிய தினை யரிசியைப் பூவுடனே கலந்து வைத்து ஆட்டின் மறியைக் கொன்று,*

*வாரணக் கொடியொடு வயிர்ப்புடன் நிறீஇ - கோழிக் கொடியுடனே கொம்புடன் குறிக்க நிறுத்தி,*

*'வயிர்ப்பட' எனப்பாடம் உரைத்து உரை விரிப்பாருமுளர்.*

*ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும் - ஊர்கடோறும் தான் நினைத்த காரிய முடிப்பதற்கு அப்பிள்ளை யாரை நோக்கி அழகு பொருந்திய திருநாள் நடக்குமிடத்திலும்,*

*ஆர்வல ரேத்த மேவரு நிலையினும் - ஒன்றாற் குறைவுடையார் ஏத்த மேவி நிற்கும் இடங்களிலும்,*

*'ஆர்வத்தைச் செய்யும் மக்கள்' எனினும் அமையும்.*

*வேலன் தைஇய வெறி அயர்களனும் - வேலன் இழைத்த வெறியாடும் இடங்களிலும்,*

*பிள்ளையார் வேலைத் தனக்கு அடையாளமாக உடையனாகலின் இங்ஙனம் கூறினர். இது "வெறியறி சிறப்பின் வேலன்" எனப்புறத்திற் கூறியது.*

*காடும் காவும் கவின்பெறு துருத்தியும், ஆறுங்குளனும் வேறுபல் வைப்பும் - காட்டிடத்தும், பொழில்களிடங்களினும் அழகு பொருந்திய ஆற்றிடைக் குறைகளினும், ஆறுகளினும், குளங்களினும் வேறுபட்டுப் பலவாயிருந்துள்ள ஊர்களினும்.*

*சதுக்கமும் சந்தியும் புதுப்பூங்கடம்பும், மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும் - நாற்சந்திகளினும், புதிதாகப் பூக்கப்பட்ட கடம்புகளிடத்தினும், ஊர்க்கு நடுவே இருக்கும் மரத்தடியினும், அம்பலங்களினும், யானைத் தறியிடத்தினும்,*

*பொதியிலும் - பொதியமலை என்பாருமுளர்; கந்துடை நிலையினும் - பசு முதலான மிருகம் உறிஞ்சு தறி எனினும் அமையும்.*

**4. கவிப்பெருமாள்**

*சிறிய தினையினையும் பூவையும் கலந்து இடப்பட்ட வெள்ளாட்டுக் கிடாயை அறுத்துக் கோழிக்கொடியுடனே தான் உண்டாகும் வண்ணம் இடம் வாய்க்க நிறுத்திக் குறவரிருக்கும் ஊர்தோறு மெடுத்த சிறப்புப் பொருந்திய திருநாள் கொண்ட இடங்களினும் தன்மேல் அன்பு கொண்ட அடியார்கள்*

துதிக்கத்தான் விரும்பி வீற்றிருக்கின்ற இடத்திலும் படிமத்தான் பணிமைத் தொழிலினாலே அழகிதாக அலங்கரிக்கப்பட்ட வெறியாட்டுக் களத்திலும் காடுகளிலும் சோலைகளிலும் அழகு பெற்ற ஆற்றிடைக் குறைகளிலும் ஆறுகளிலும் குளங்களிலும் பல்வேறு வகைப்பட்ட ஊர்களிலும் நாற்சந்தி கூடின இடங்களிலும் முச்சந்தி கூடின இடங்களிலும் புதிதாகப் பூத்த திருக்கடம்பிலும் ஊர் அம்பலங்களிலும் புறத்திண்ணை மரத்திலும் கம்பமுடைத்தாகிய ஆலைக் கொட்டில்களிலும்;

### 5. பரிதியார்

விரை இ - கலந்து வைத்து; ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும் - தன்மேல் அன்பு வைத்த அடியார்கள் கூடித் தோத்திரம் பண்ணுகிறவிடத்தும்; வேலன் - குறப்பிள்ளை; கா - பூங்கா; ஆறும்குளனும் - ஆற்றங்கரை குளக்கரைகளிலும்; வேறுபல் வைப்பு - மற்றும் குமாரர் எழுந்தருளியிருக்கும் பதிகள்; சதுக்கம் - நாலுவழி கூடின விடம்; மன்றம் - பத்துப் பேர் கூடின பேரவை செலுத்துகிற இடம்; பொதியில் - ஊருக்கு நடுவே ஒருமுகவாயிருக்கிற இடம்; கந்துடைநிலை - பசுக்கள் முதலானவை தேகம் உறிஞ்சிக் கொள்கிற மந்தைவெளிக் கற்கம்பத்திடம்.

### 6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்

வயிற்படநிறீஇ - அவ்விடத்தே நிற்கும்படி. நிறுத்தி என்பர் நச்சினார்க்கினியர். அவ்விடத்தில் தான் உண்டாகும் வண்ணம் நிறுத்தி என உரைகாண்பார் உரையாசிரியரும், கவிப்பெருமாளும்.

வயிர்ப்புடன் நிறீஇ எனப் பாடங்கொண்டு கொம்புடன் குறிக்க நிறுத்தி என உரை காண்பர் பரிமேலழகர்.

ஆர்வலர் - தன்மேல் அன்புடையார் என்று அனைவரும் கூறப் பரிமேலழகர் மட்டும் ஒன்றால் குறையுடையார் என உரைகண்டார். அவரே ஆர்வத்தைச் செய்யும் மக்கள் எனினும் அமையும் எனப் பிறர் உரையைத் தழுவுமாறு உரைகாண்பர். இப்பொருண்மையே சிறக்கும்,

பொதியில் - அம்பலம் என உரையாசிரியர் அனைவரும் உரை கண்டனர். பரிமேலழகர் உரையில் பொதியமலை என்பாரும் உளர் எனும் குறிப்பு உள்ளது. குன்றுதோறாடலும் அவன் உறைபவன். எனவே பொதியிலும் அதன்கண் அடங்கும் ஆதலின் அம்பலம் என்றலே சிறக்கும்.

நச்சினார்க்கினியர், உரையாசிரியர், பரிதியார் ஆகிய மூவரும் கந்துடைநிலை - ஆதீண்டு குற்றி என, உரை காண. யானைத் தறியினிடம்

*எனப் பரிமேலழகர் உரை காண்பர். கவிப்பெருமாள் கம்பம் உடைத்தாகிய ஆலைக் கொட்டில்கள் என உரைகாண்பர். இவற்றுள் நச்சினார்க்கினியர் முதலிய மூவர் கூறிய உரையே சிறக்கும்.*

மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவி அப்பி ஐதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணைஅற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்னியம் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகுஇயம் நிறுத்து முரணினர் உட்க
முருகுஆற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டுஆண்டு உறைதலும் அறிந்த ஆறே.

**1. நச்சினார்க்கினியர்**

*(மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர) மாண்தலைக் கொடியொடு உருகெழு வியனகர் (244) அமைவர மண்ணி - மாட்சிமைப்பட்ட தலைமையினையுடைய கோழிக் கொடியோடே உருகெழுவியனகரை அமைவரப் பண்ணி,*

*ஒடு - வேறுவினை யொடு,*

*இனி ஆண்டலைக் கொடி யென்று பாடமாயின், பேய் முதலியன பலியை நுகராமல் தலை ஆண் மகன் தலையும் உடல் புள்ளின் வடிவுமாக எழுதின கொடியென்க,*

நெய்யொடு ஐயவி அப்பி - நெய்யோடே வெண் சிறு கடுகையும் அப்பி,

ஐது உரைத்து - தான் வழிபடுதற்குரிய மந்திரத்தைத் தோன்றாமல் உச்சரித்து,

குடந்தம்பட்டு - வழிபட்டு,

வணக்கம்பட்டென்றும் உரைப்பர்; குடவென்பது தட வென்பதுபோல வளைவை யுணர்த்துவதோர் உரிச்சொல்லாதலின், அதனடியாகப் பிறந்த பெயருமாம்,

கொழு மலர் சிதறி - அழகிய மலர்களைத் தூவி,

முரண் கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ - தம்மிற் பகைத்தல் கொண்ட வடிவினையுடைய இரண்டறுவையை உள்ளொன்றும் புறம்பொன்றுமாக வுடுத்து,

செந்நூல் யாத்து - சிவந்த நூலைக் கையிலே காப்புக்கட்டி, நூலொழுக்கி எல்லைப்படுத்தென்றுமாம்.

கொழு மலர் சிதறி - அழகிய மலர்களைத் தூவி,

முரண் கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ - தம்மிற் பகைத்தல் கொண்ட வடிவினையுடைய இரண்டறுவையை உள்ளொன்றும் புறம்பொன்று மாக வுடுத்து,

செந்நூல் யாத்து - சிவந்த நூலைக் கையிலே காப்புக்கட்டி, நூலொழுக்கி எல்லைப்படுத்தென்றுமாம்.

வெண்பொரி சிதறி - வெள்ளிய பொரியைத் தூவி,

மத வலி நிலைஇய மரத் தாள் கொழு விடை - மிகுதியை யுடைய வலி நிலைபெற்ற பெருமையை யுடைத்தாகிய காலையுடைய கொழுவிய கிடாயினது,

குருதியொடு விரைஇய தூவெள் அரிசி - உதிரத்தோடே பிசைந்த தூய வெள்ளரிசியை,

சில் பலிச் செய்து - சிறுபலியாக இட்டு,

பல் பிரப்பு இழீஇ - பலபிரப்பும் வைத்து,

இனிப் பிரம்புக்கூடை என்பாரும் உளர். சிறுபசு மஞ்சளொடு நறு விரை தெளித்து - சிறிய பசுமஞ்சளோடே நறிய சந்தனம் முதலியவற்றைத் தெளித்து,

இனிச்சிறுபசு மஞ்சள், மஞ்சளில் ஒரு சாதி விசேடமுமாம். விரை - ஆகுபெயர்.

*(பெருந்தண் கணவீர ஈறுந்தண் மாலை துணையற அறுத்துத் தூங்க நாற்றி:)*

*பெருந் தண் கணவீர மாலை - பெரிய குளிர்ந்த செவ்வலரி மாலையையும்,*

*நறுந் தண் மாலை - ஒழிந்த நறிய குளிர்ந்த மாலைகளையும்,*

*அறுத்து - தலையொக்க அறுத்து,*

*துணை அறத் தூங்க நாற்றி - தமக்கு ஒப்பில்லாதபடி அசையத் தூக்கி,*

*இனித்தம்மில் இணையொத்த அறுப்பாக அறுத்து என்றுமாம்,*

*நளி மலைச் சிலம்பில் நல் நகர் வாழ்த்தி - செறிந்த மலைப் பக்கத்திலுள்ள நல்ல ஊர்களைப் பசியும் பிணியும் பகையும் நீங்குக என்று வாழ்த்தி,*

*நகர் - பிள்ளையார் கோயிலென் றுமாம்.*

*நறும்புகை எடுத்து - நறிய தூபங்கொடுத்து,*

*குறிஞ்சிபாடி - அந்நிலத்திற்கடைந்த குறிஞ்சிப் பண்ணைப் பாடி,*

*இமிழ் இசை அருவியோடு இன் இயம் கறங்க - முழங்குகின்ற ஓசையினை யுடைய அருவியோடே இனிய பல்லியங்களும் ஒலியாநிற்க,*

*உருவப் பல்பூத் தூஉய் வெருவரக் குருதிச் செந்தினை பரப்பி - சிவந்த நிறத்தினை யுடைய பல பூக்களையும் தூவி அச்சம் வரும்படி உதிரமளைந்த சிவந்த தினையினையும் பரப்பி,*

*குறமகள் முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க முருகு ஆற்றுப்படுத்த உருகெழு வியன் நகர் - குறச் சாதியாகிய மகள் முருகன் உவக்கும் வாச்சியங்களை வாசிக்கப்பண்ணித் தெய்வமின்றென்பார் அஞ்சும்படியாகப் பிள்ளையார் வரும்படி வழிப்படுத்தின அச்சம் பொருந்திய அகற்சியை யுடைய நகரின் கண்ணே,*

*“வேலன் வெறியாட்டயர்ந்த” என்புழிச் சிறுபான்மை ஏனையோரும் ஆடுவாரென்றலிற் குறமகள் வெறியாட்டுக் கூறினார்.*

*குறமகள் (242) மண்ணி (227) அப்பி உரைத்துப் (228) பட்டுச் சிதறி உடீஇ யாத்துச் சிதறிச் செய்து இரீஇத் தெளித்து நாற்றி வாழ்த்தி எடுத்துப் பாடிக் கறங்கா நிற்கத் தூஉய்ப் பரப்பி நிறுத்து ஆற்றுப் படுத்த நகரென வினைமுடிக்க. சாந்தி செய்ய ஆற்றுப்படுத்தாள்.*

*ஆடு களம் சிலம்பப் பாடி - அவ்வெறியாடுகின்ற களம் ஆரவாரிப்ப அதற்கேற்பனவற்றைப் பாடி,*

*(பலவுடன், கோடுவாய் வைத்து) கோடு பல உடன் வாய் வைத்து - கொம்புகள் பலவற்றையுஞ் சேரஊதி,*

*கொடு மணி இயக்கி - கொடிய மணியையும் ஒலிப்பித்து,*

*ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி - கெடாத வலியினையுடைய பிணிமுக மென்னும் பட்டத்தினையுடைய யானையை வாழ்த்தி,*

*பிணிமுகம் - மயிலுமாம்.*

*வேண்டுநர் வேண்டி யாங்கு எய்தினர் வழிபட - காரியங்களை விரும்புவோர் தாங்கள் விரும்பின காரியங்களை விரும்பினாற் போலப் பெற்று நின்று வழிபட,*

*நகரிலே (244) பாடி வைத்து இயக்கி வாழ்த்தி வழிபட உறைதலு முரியன் (189) என்க.*

*விழவின் கண்ணும் (220) நிலையின் கண்ணும் (221) கந்துடை நிலையின் கண்ணும் (226) உறைதலுமுரியன் (189) என்க.*

*ஆண்டாண்டுறைதலும் - களனும் (222) காடும் காவும் துருத்தியும் யாறும் குளனும் வைப்பும் சதுக்கமும் சந்தியும் கடம்பும் மன்றமும் பொதியிலுமாகிய அவ்வவ்விடங்களிலே உறைதலுமுரிய னென்க.*

*அறிந்தவாறே - யான் அறிந்தபடியே கூறினேன்.*

**உ. உரையாசிரியர்**

*மாண் தலைக் கொடியொடு மண்ணி அமைவர - அழகையும் தலைமையையுமுடைய கோழிக் கொடியுடனே அலங்கரித்து நன்றாக நிறைவுவர.*

*நெய்யொடு ஐயவி அப்பி ஐது உரைத்து - நெய்யுடனே சிறுகடுகைக் கலந்து பேய்கட்குப் பலியிட்டு அழகிய மந்திரங்களை உச்சரித்து,*

*குடந்தம்பட்டுக் கொழு மலர் சிதறி - வழிபட்டு நாள் மலர்களைத் தூவி,*

*முரண்கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ - பகைத்தலைப் பொருந்திய நிறத்தையுடைய இரண்டாடையை உள்ளொன்றும் புறம்பொன்றுமாக உடுத்து,*

*செந் நூல் யாத்து வெண்பொரிச் சிதறி - சிவந்த நூலாலே காப்புக்கட்டி வெள்ளிய பொரிகளைத் தூவி,*

*மத வலி நிலைஇய மாத் தாட் கொழு விடை - தருக்குதலையும் வலியையும் நிலைபெற்ற பெரிய கால்களையும் உடைய கொழுவிய கிடாயினது,*

*குருதியொடு விரைஇய தூவெள் அரிசி - உதிரத்துடனே கலந்த தூய வெள்ளரிசியை,*

*சில் பலிச் செய்து பல் பிரப்பு இரீஇ - சிறுபலியாக இட்டுப் பல தானிய வித்துக்களையுடைய கொள்கலங்களையும் வைத்து,*

*சிறு பசு மஞ்சளொடு நறுவிரை தெளித்து - அரைத்த சிறிய பசு மஞ்சளோடே நறிய சந்தனக் குழம்பைக் கலந்து தெளித்து,*

*பெருந்தண் கணவீர நறும் தண்மாலை - மிகவும் குளிர்ந்த அலரிப் பூவாற் கட்டிய மணவிய குளிர்ந்த மாலைகளை,*

*துணை அற அறுத்துத் தூங்க நாற்றி - தம்மில் ஒக்க அறும் வண்ணம் அறுத்து நாலும் வண்ணந் தூக்கி,*

*நளி மலைச் சிலம்பின் நல் நகர் வாழ்த்தி - செறிந்து பக்கவரைகளையுடைய மலையினிடத்து நல்ல ஊர்களைப் பகை பிணி பசி நீங்குகவென வாழ்த்தி,*

*நறும் புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி - நறுவிய தூபம் கொடுத்து அந்நிலத்திற்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடி,*

*இமிழ் இசை அருவியொடு இன்னியம் கறங்க - இம்மென்று இழியப்பட்ட ஓசையுடைய அருவியுடனே இனிய வாத்தியங்கள் முழங்க.*

*உருவப் பல் பூத் தூஉய் வெருவர - நிறுவிய பல பூக்களையும் தூவி அச்சம் வரும் வண்ணம்.*

*குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள் - உதிரத்தோடே கலந்த சிவந்த தினையரிசியையும் பரப்புதல் செய்து குறச்சாதியில் மகள்,*

*முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க - முருகன் உவக்கும் வாத்தியங்களை நின்று முழங்கப் பண்ணி மாறுபாடுடையார் அஞ்ச,*

*முருகு ஆற்றுப் படுத்த உரு கெழு வியன் நகர் - பிள்ளையார் வரும்படி வழிப்படுத்தின நெஞ்சுஉள் உருகுதல் பொருந்தின அகன்ற நகரின் கண்,*

*ஆடு களம் சிலம்பப் பாடி - வெறியாடும் இடம் ஆரவாரிக்கப் பிள்ளையாரைப் பாடி,*

*பலவுடன் கோடு வாய்வைத்துக் கொடுமணி இயக்கி - கொம்புகள் பலவும் சேர ஊதிக் கொடிய மணிகளையும் முழங்க அசைத்து,*

*ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி - அஞ்சியோடாது மேற்கோளையுடைய மயிலை வாழ்த்தி,*

*வேண்டுநர் வேண்டியாங்கு எய்தி வழிபட - வேண்டுவார்கள் வேண்டினாற் போலப் பெற்று வழிபட,*

*ஆண்டாண்டு உறைதலும் அறிந்தவாறே - யான் முற்கூறிய விழவின் கண்ணும் காடும் காவும் முதலிய அவ்வவ் விடங்களிலே அவன் உறைதலும் யான் அறிந்தவழி,*

### 3. பரிமேலழகர்

*“மாண்டலை” என்பது முதல் “அறிந்தவாறே” என்பது வரையில் ஒரு தொடர் : (227-249).*

*மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர - மாட்சிமை தலைப்பட்ட கோழிக் கொடியுடனே ஆறுஆடி அமைவும் வரவும் பட்டு,*

*‘ஆண்டலைக் கொடியொடு மண்ணியமைவர’ என்பது பாடமாயின், ‘மயிற்கொடியொடு விளங்கக் கண்டார்க்கு நிறைவர’ எனினும் அமையும்;*

*நெய்யோடு ஐயவி அப்பி, ஐதுரைத்து - நெய்யுடனே சிறுகடுகு நெற்றியிலே அப்பிச் சிறிது மந்திரங்களையும் ஓதி,*

*குடந்தம்பட்டுக் கொழுமலர் சிதறி - கைகூப்பி நெஞ்சிலே வைத்து அழகிய மலரைத் தூவி,*

*குடவென்பது குடந்தமென நின்றது எனவும், அது தடவென்பது போல வளைவை யுணர்த்தும் ஓருரிச்சொல் அடியாகப்பிறந்த பெயருமாம் எனவும், அது ‘நால்விரன் முடக்கிப் பெருவிரல் நிறுத்தி நெஞ்சிடை வைப்பது குடந்த மாகும்’ எனவும் விரிப்பாருமுளர்.*

*முரண்கொள் உருவின் இரண்டுடை உடீஇ - தம்முள் மாறு கொண்ட வடிவினையுடைய இரண்டு வெண் பட்டையும் உடுத்து,*

*செந்நூல் யாத்து, வெண் பொரி சிதறி - செந்நூலாலே காப்புக்கட்டி வெள்ளிய பொரியைத் தூவி,*

*மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக் குருதியொடு விரைஇத் தூவெள்ளரிசி சில் பலிச் செய்து - மதத்தையும் வலிவையும் நிலைபெற்றுப் பெரிய காலினை யுடைத்தாய் யானைத் திரளை யறுத்து உதிரத் துடனே தூயதாய வெள்ளை யரிசி கலந்து பலபலிகளையும் கொடுத்து,*

*பல்பிரப்பு இரீஇ - பலபிரப்பாக முலைப்பட்டம் எழுதி,*

*சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்து - சிறிய பசுமை யுடைத்தான காட்டுமஞ்சளுடன் நல்ல மும்மலர்களையும் தூவி,*

*பெறுந்தண் கணவீர நறுந்தண் மாலை, துணையுற அறுத்துத் தூங்க நாற்றி - பெரிய குளிர்ச்சியினையுடைய செவ்வலரிப் பூ நறுவிய தட்பம் பொருந்திய மாலையை இணை யொக்க நறுக்கி அசைதரப் பூங் கோயிலாகத் தூக்கி,*

*நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி - குளிர்ச்சி யுடைத்தாயிருந்துள்ள மலையிடத்து நல்ல ஊர்களை வாழ்த்தி,*

*நறும் புகை எடுத்துக் குறிஞ்சிபாடி - நறுநாற்றத்தையுடைய தூபத்தை எழுப்பி அந்நிலத்திற்குரிய குறிஞ்சி என்கிற பண்ணைப்பாடி,*

*இமிழிசை அருவியொடு இன்னியம் கறங்க - மலையினின்று விழுகின்ற மெத்தென்ற அருவி ஓசையுடனே இனிதாக வாச்சியங்கள் முழங்க,*

*உருவப் பல்பூத்தூஉய் - பல நிறங்களையுடைய பூக்களைச் சிதறி,*

*வெருவரக், குருதிச் செந்தினை பரப்பி - கண்டார் திடுக்கிட உதிரம் போன்ற செந்தினைகளைப் பரப்பி,*

*குறமகள், முருகியம் நிறுத்து - குறமகளிர் முருகனுக்கு உடைமை யாகிய முருகியம் என்ற துடியைக் கொட்டி;*

*முருகியம் - தொண்டகப் பறை எனினும் அமையும்.*

*முரணினர் உட்க, முருகாற்றுப்படுத்த உருகெழு வியனகர் - தங்களுடன் மாறுபட்டோர் அஞ்சும்படி பிள்ளையாரைத் தங்கள் வழிப்படுத்தின அழகமைந்துள்ள பெருமையாகிய ஊர்களிலே,*

*ஆடுகளம் சிலம்பப் பாடி - வெறியாட்டாளர்கள் ஆரவாரிக்கப் பாடி,*

*பலவுடன், கோடுவாய் வைத்து - பல முழக்கத்துடனே கொம்பு குறித்து; பல முழக்கத்துடனே சங்கு குறித்து எனினும் அமையும்;*

*கொடுமணி இயக்கி - ஓசை மிக்க மணிகளையும் எறிந்து, ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி - கெடாத வலிமை படைத்த பிணிமுகம் என்னும் பெயருடைய யானையைப் பரவி; 'பிணிமுகம்' என்பது பிள்ளையார் பவனிவரும் யானையின் பெயர்; இதனைச் 'சேயுயர் பிணிமுகமூர்ந்த' எனப் பரிபாடலிலும், 'பிணிமுக மஞ்ஞை செருமுகத்தேந்திய' எனக் கல்லாடத்தும் கூறலானும் அறிக. 'பிணிமுகம்' - மயில் என்பாருமுளர்.*

*வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட - வேண்டினார் வேண்டின வரங்களைப் பெறவேண்டுமென்று வழிபட,*

*ஆண்டாண்டுறைதலும் அறிந்தவாறே - முதற் கூறப்பட்ட அவ்வவ்விடங்களிலே தங்குதலும் அறிந்தவாறே;*

### 4. கவிப்பெருமாள்

மாட்சிமையும் தலைமையும் உடைத்தாகிய கோழிக் கொடியுடனே மயிலையும் அலங்கரித்துக் கையிலேந்தி நெய்யையும் கடுகையும் கலந்து உண்டை பண்ணிப் பேய்கட்குப் பலியாக அப்பி அழகிதாகிய மூலமந்திரம் உச்சரித்துக் கையெடுத்துக் கும்பிட்டு வளவிய பூக்களைச் சிதறி மாறுபாடு மிக்க வடிவினையுடைய நீலமும் சிவப்பு மாகிய இரண்டுடைகளையும் தரித்துச் சிவந்த வல்லிக் கயிற்றையுங் கட்டி வெள்ளிய பொரிகளை யிறைத்துச் செருக்கும் வலிவும் நிலை பெற்ற பெரிய காலினை யுடைத்தாய்க் கொழித்த செம்மறிக் கிடாயின் உதிரத்தோடே கலந்த தூய தாகிய வெள்ளிய அரிசியினைச் சிறுபலியாக இட்டுப் பல பிரம்புகளையும் வைத்து மலைச்சிறு பசு மஞ்சளுடனே நறுநாற்றத்தை யுடைத்தாகிய பலவித்தையும் தெளித்து மிகவும் குளிர்ந்த அலரிப் பூவாலே தொடுத்த நறு நாற்றமுடைத்தாகிய மாலையை இணை யொக்க மட்டஞ் செய்து அசையும்படி பூங்கோயிலாகத் தூக்கி;

குளிர்ச்சியாகிய பக்க வரைகளையுடைய மலையின்கண் உள்ள பிள்ளையார் வீற்றிருக்கும் நகரங்களை வாழ்க என வாழ்த்தி நல்ல நாற்றமுள்ள சீதாரிப் புகைகளையும் எடுத்து மலைநிலத்துக்குரிய குறிஞ்சியென்னும் பண்ணையும்பாடி இம்மென்ற மிக்க ஆரவாரத்தால் சிறந்த அருவியுடனே இனிய பலவாச்சியங்களும் முழங்க அழகிய பூக்களை எங்கும் தூவிக் கண்டார் அஞ்சும்படி உதிரத்தை யொத்த சிவந்த தினையையும் பரப்பிக் குறத்தியானவள் முருகை மேல் நிறுத்திய பிள்ளையாரை மெய்யிலே யேற்றிக் கொண்டு சத்துருக்கள் பயப்படும்படி முருகனை வழிபட்ட அழகு பொருந்திய பெரிய நகரியிலே;

வெறியாட்டுக்களந்தான் எதிரே ஆரவாரிக்கும்படி பிள்ளையாரைப் பாடிப் பலருமுடனே கருங்கொம்பை வாயிலே வைத்தூதி வட்டமணியுந் துலுக்கிச் சாபத (எப்பொழுதும்) மேற்கோளினை யுடைய மயிற் கொடியை வாழ்த்தி வேண்டிய பொருள்களை வேண்டினபடியே பெறுபவர்கள் வழிபாடு செய்ய விழாவிடம் முதல் நகர் ஈறாகச் சொல்லப்பட்ட அவ்வவ் விடங்களிலே தங்குதற்கும் உரியவன்; யான் அறிந்தபடி கூறினேன்.

### 5. பரிதியார்

மாண்டலை... அமைவர - நீளமும் உயரமுமுண்டாய அசைவு பொருந்திய டெக்கையான ஆட்டுக் கிடாயெழுதியதும் ..........எங்கும் நாட்டி; அப்பி, - உண்டை பண்ணி வைத்து; உரைத்து - குமார மூலமந்திரமுச்சரித்து; குடந்தம்பட்டு - இரண்டு கையையும் குவித்து நமஸ்கரித்து; முரண்கொள்.... உடீஇ - வர்ண

*பேதங்கள் பகையாயிருக்கிற கறுப்புச் சேலையுள்ளே யுடுத்திச் செகப்பு மேலே தரித்து, செந்நூல் யாத்து - (பிம்) மஞ்சள் தோய்த்த நூல் பரப்பி; மதவலி.... கொழுவிடை - அழகியதாகிய வலிமையுள்ள நாலுகாலுஞ் செவ்வியதாய்க் கொழுப்புண்டான ஆட்டின்; நறுவிரை - நவதானிய விரை; தூக்கி - பந்தலிலே தூக்கி,*

*நறும்புகை - அகிற் சாம்பிராணித் தூமங்கள். குறிஞ்சிபாடி - குறிஞ்சிப் பண்ணுடனே குறிஞ்சி நிலத்தையும் பாடி;*

*ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி - வெற்றி கொண்ட வாகனங்களில் யானையையும் மயிலையும் வாழ்த்தி, வேண்டுநர் (பா-ம்) - வரம் வேண்டின அடியார்கள். ஆண்டாண்டு உறைதலும் அறிந்தவாறே - வருடா வருடந்தோறும் நான் அறிந்தபடி கூறினேன்.*

### 6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்

*மாண்தலைக்கொடி - மாட்சிமைப்பட்ட தலைமையையுடைய கோழிக்கொடி என அனைவரும் உரை காணப் பரிதியார் மட்டும் ஆட்டுக் கடாயின் கொடி என உரை காணுகின்றார்.*

*ஆனால் நச்சினார்க்கினியர் பரிமேலழகர் ஆகிய இருவரும் ஆண்டலைக் கொடி என்னும் பாடமும் உளதெனக் குறிக்கின்றனர்.*

*ஐது உரைத்து - தான் வழிபடுதற்குரிய மந்திரத்தைத் தோன்றாமல் உச்சரித்து என்பர் நச்சினார்க்கினியர். அழகிய மந்திரங்களை என்பர் உரையாசிரியர். சிறிது மந்திரங்களையும் ஓதி என்பர் பரிமேலழகர். அழகியதாகிய மூலமந்திரம் உச்சரித்து என்பர் கவிப்பெருமாள். குமார மூல மந்திரம் உச்சரித்து என்பர் பரிதியார். இவற்றுள் தோன்றாமல் உச்சரித்து என்ற உரை சிறக்கும். மந்திரங்களை மனத்தகத்தே எண்ணுவதும் தம் செவி கேளாவாறு வாயளவில் எண்ணுவதும், பிறர் கேட்க ஒலித்து எண்ணுவதும் ஆகிய மரபுகளுள் மனத்தகத்து எண்ணுவதே சிறப்புடைத்தாம். தோன்றாமல் என்பது ஒலிவகையால் தன் காதிற்கும் எட்டாமல் என்பது பொருளாம். 'விதி எண்ணும் அஞ்செழுத்தே' எனவரும் சிவஞான போதத்தே மனத்தளவாக எண்ணுவதை விதந்தோதியவாறு காண்க. அம்மந்திரம் குமார மந்திரமாக இருத்தல் வேண்டும் எனப் பரிதியார் குறித்திருப்பது மேலும் சிறக்கும்.*

*குடந்தம் பட்டு - வழிபட்டு என உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் உரை கூறப் பரிமேலழகர் முதலிய மூவரும் இருகைகளையும் எடுத்துக் கும்பிட்டு என உரை கண்டமை சிறப்புடையது. பரிமேலழகர் உரையிலும் நச்சினார்க்கினியர் உரையிலும் பிறர் உரையாகக் காணும் பகுதி*

இச்சொல்லமைப்பை விளக்குகின்றது. 'கரங்குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க' எனத் திருவாசகத்தும், கை தொழூஉப் பரவிக் காலுற வணங்கி என இந்நூலகத்தும் வருமாறு காண்க.

முரண்கொள் உரவின் இரண்டுடன் உடீஇ - தம்மில் பகைத்தல் கொண்ட வடிவினையுடைய இரண்டு அறுவையை உள்ளொன்றும் புறம் ஒன்றுமாக உடுத்து என நச்சினார்க்கினியர் உரைகாண்பர். உரையாசிரியர் உரு - நிறம் எனக்கொண்டு இவ்வாறே உரைகாண்பர். பரிமேலழகர் உரு - வடிவெனக் கொண்டு இரண்டு வெண்பட்டையும் உடுத்து என உரை காண்பர். கவிப்பெருமாள் நீலமும் சிவப்புமாகிய இரண்டு உடைகளையும் தரித்து என்பர். பரிதியார் வர்ண பேதங்கள் பகையாயிருக்கிற கருப்புச்சேலை உள்ளே உடுத்தி செகப்பு மேலே தரித்து என்பர். 'உரு' நிறமாதல் சிறக்கும். வழிபடுங்கால் இரண்டுடையோடு இருத்தல் வேண்டுமென்பது இக்காலத்தும் கூறப்படுவதாம். அவ்வுடை இரண்டும் மாறுபட்ட நிறமுடையதாக இருத்தல் வேண்டுமென்பது அக்கால வழக்குப் போலும்.

விரை - மணம்; ஈண்டு அதனையுடைய சந்தனக் கட்டைக்கு ஆயினமையின் ஆகு பெயராயிற்று.

மாத்தாள் கொழுவிடை - ஆட்டுக்கிடாய் என்றே அனைவரும் உரைகாணப் பரிமேலழகர் மட்டும் யானைத்திரள் என உரை காண்பர். இது அத்துணைச் சிறப்பின்றாம். நறுவிரை - சந்தனக்கட்டை என அனைவரும் உரை காணப் பரிமேலழகர் மட்டும் நல்ல மும்மலர்கள் என உரைகாண்பர். நறுமணம் கமழும் பல வித்துக்கள் என்பர் கவிப்பெருமாள் - நவதான்ய விரை என்பர் பரிதியார்.

துணை அற அறுத்து - தம்மில் ஒக்க அறும் வண்ணம் அறுத்துஎன உரையாசிரியரும், பரிமேலழகரும், கவிப்பெருமாளும் கூறுவர். நச்சினார்க்கினியர் இக்கருத்தையும் ஏற்பரேனும் தமக்கு ஒப்பில்லாதபடி அசையத்தூக்கி என உரை கண்டனர்.

நல்நகர் வாழ்த்தி - நல்ல ஊர்களை வாழ்த்தி என அனைவரும் உரை காணக் கவிப்பெருமாள் மட்டும் பிள்ளையார் வீற்றிருக்கும் நகரங்கள் என உரை காண்பர். நச்சினார்க்கினியர் இரண்டாம் உரையாக இதனைத் தழுவுவர். பிள்ளையார் - முருகன்.

உருவப்பல்பூ - நிறம் பொருந்திய பல பூக்கள் எனப்பிறர் உரைகாண, நச்சினார்க்கினியர் மட்டும் சிவந்த நிறமுடைய பூக்கள் என உரை காண்பர். உரையாசிரியர் நிறுவிய பல பூக்கள் என உரை காண்பர். இப்பொருளுக்கு சொற்பொருள், இயைபு விளங்கிற்றிலது.

*முரணினர் உட்க - மாறுபாடுடையார் அஞ்ச என்று அனைவரும் உரை காணத் தெய்வம் இன்று என்பார் அஞ்ச என உரைகாண்பர் நச்சினார்க்கினியர். இவ்வுரை சிறக்கும்.*

*பிணி முகம் - மயில் என்பர் உரையாசிரியரும், கவிப்பெருமாளும். யானை என்பர் பரிமேலழகர். பிள்ளையார் பவனி வரும் யானை பிணிமுகம் எனப்படும் எனக் கூறிய இவர், அதற்குத் தக மேற்கோளும் காட்டுவர். யானை என உரைத்த நச்சினார்க்கினியர் பிணி முகம் - மயிலும் ஆம் எனத் தழுவினர். பரிதியார் யானையையும், மயிலையும் என உரை கூறி இரண்டையும் ஏற்பர். இவர் பூட்கை என்பதற்கு யானை என உரை காண்கின்றார்.*

*ஓடாப் பூட்கை - கெடாத வளமை என்பர் நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும், அஞ்சி ஓடாத மேற்கோள் என்பர் உரையாசிரியர், எப்பொழுதும் மேற்கோளினை உடைய என்பர் கவிப்பெருமாள். நச்சினார்க்கினியரும், பரிமேலழகரும் கண்ட உரை சிறக்கும்.*

ஆண்டுஆண்டு ஆயினும் ஆகக் காண்தக
முந்துநீ கண்டுழி முகன்அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் கால்உற வணங்கி
நெடும்பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறுஅமர் செல்வ
ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபே ராள

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டுஅமர் கடந்தநின் வென்று ஆடுஅகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின்அடிஉள்ளி வந்தனன் நின்னொடு
புரைகுநர் இல்லாப் புலமை யோய்எனக்
குறித்தது மொழியா அளவையின் குறித்துஉடன்

**1. நச்சினார்க்கினியர்**

*ஆண்டு ஆண்டு ஆயினும் ஆக - யான் முற்கூறிய அவ்வவ்விடங்களிலே யாயினுமாகப் பிறவிடங்களிலே யாயினுமாக,*

*உம்மை - ஐயவும்மை.*

*(காண்டக, முந்து நீ கண்டுழி முகன் அமர்ந்தேத்தி;) முந்து நீ கண்டுழிக் காண்தக முகன் அமர்ந்து ஏத்தி - முற்பட நீ கண்ட பொழுது அழகு தக்கிருக்கும்படி முகம் விரும்பித் துதித்து,*

*முகனமர்ந்தென்றார், அவன் தெய்வத் தன்மையைக் கண்டபொழுது அச்சம் பிறவாது நிற்க வேண்டுமென்றற்கு,*

*கை தொழூஉப் பரவி - முன்னர்க் கையைத் தலைமேலே வைத்து வாழ்த்தி,*

*கால் உற வணங்கி - பின்னர்த் திருவடி தலையிலேறும்படி தண்டனிட்டு,*

*நெடும் பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை - நெடிய பெரிய இமவான் உச்சியில் தருப்பை வளர்ந்த பசிய சுனையிடத்தே,*

*நீலமென்றார், அதினின்ற நீலநிறத்தையுடைய தருப்பையை. அஃது ஆகுபெயர்; என்றது; சரவணப் பொய்கை யென்றவாறு.*

*ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப - விசும்பும் வளியும் தீயும் நீரும் நிலனுமாகிய ஐவருள் தீத்தன் அங்கையிலே ஏற்ப.*

*சதாசிவனும் மயேச்சுரனும் உருத்திரனும் அரியும் அயனும் பூதங்கட்குத் தெய்வமாகலின், ஐவரென்றார்; ஐவரு ளொருவனென்றது உருத்திரன் தெய்வமாகிய தீயை,*

*அவன் அங்கை யேற்ப வென்றது; இறைவனிடத்தினின்றும் இந்திரன் வாங்கிய கருப்பத்தினை முனிவர் வாங்கித் தமக்குத் தரிக்கலாகாமையின் இறைவன் கூறாய முத்தீக் குண்டத்துஇட்டதனைக் கூறிற்று.*

*அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ - அருந்ததியொழிந்த அறுவராலே பெறப்பட்ட ஆறுவடிவு பொருந்திய செல்வ,*

*என்றது; அங்ஙனம் அங்கியின்கண்இட்டுச் சத்தி குறைந்த கருப்பத்தை முனிவரெழுவரும் வாங்கித் தம் மனையர்க்குக் கொடுப்ப அருந்ததி யொழிந்தோர் விழுங்கிச் சூல் முதிர்ந்து, சரவணப் பொய்கையில் பதுமப் பாயிலிலே பெற ஆறு வடிவாக வளர்ந்தமை கூறிற்று.*

*ஏற்கையினாலே அறுவராற் பைஞ்சுனையிலே பயக்கப்பட்ட செல்வனென்க; இது பரிபாடலிற் ''பாயிரும் பனிக் கடல்'' என்னும் பாட்டானுணர்க.*

*ஆல் கெழு கடவுட் புதல்வ - கல்லாலின் கீழிருந்த கடவுளினுடைய புதல்வ,*

*கடவுளரென உயர்திணையாய் நில்லாது கடவுளென்பது தெய்வமென்னும் பொருட்டாய் அஃறிணை முடிபு கொள்ளும் உயர்திணையாய் நிற்றலின் அஃறிணைப் பாற்பட்டு "உணரக்கூறிய" என்னும் புறனடையான் முடிந்தது.*

*மால் வரை மலை மகள் மகனே - பெருமையையுடைய மலையாகிய மலையரையன் மகளுடைய மகனே,*

*வரை - மூங்கிலுமாம்,*

*மாற்றோர் கூற்றே - பகைவர்க்குக் கூற்றுவனே,*

*(வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ;)*

*வெற்றிக் கொற்றவை சிறுவ - வெற்றியை உலகத்திற்குக் கொடுக்கும் வனதுர்க்கையினுடைய புதல்வ,*

*வெல் போர்க் கொற்றவை - தான் வெல்லும் போரைச் செய்யுங் கொற்றவை,*

*என்றது; மகிடனைச் செற்றதனை,*

*இழை அணி சிறப்பிற் பழையோள் குழவி - பூண்அணிந்த தலைமையினை யுடைய காடுகாளுடைய குழவி,*

*காடு கிழாளென்பது இக்காலத்துக் காடுகாளென மருவிற்று. அவளும் இறைவனுடைய சத்தியாகலின், அவளுடைய குழவியென்றார்.*

*(வானோர் வணங்குவிற் றானைத் தலைவ;)*

*வானோர் தானைத் தலைவ - தேவர்கள் படைத் தலைவ,*

*என்றது; தேவசேனாபதி என்றதாம்.*

*வணங்கு வில் - வளையும் வில்லையும்,*

*வில்லையும் தேவராகிய தானையையு முடைய தலைவ னென்க.*

*மாலை மார்ப - இன்பத்திற்குரிய மாலையணிந்த மார்ப,*

*நூல் அறி புலவ - எல்லா நூல்களையும் அறியும் புலவ,*

*புலவன் - அறிவுடையவன்,*

*செருவில் ஒருவ - போர்த்தொழிலில் ஒருவனாகி நிற்பாய்,*

*பொரு விறல் மள்ள - பொருகின்ற வெற்றியினையுடைய மள்ள,*

*மள்ளன் - இளமைப்பகுதித் திருநாமத்தோன்.*

*அந்தணர் வெறுக்கை - அந்தணருடைய செல்வமாயிருப்பாய்,*

*அறிந்தோர் சொல் மலை - சான்றோர் புகழ்ந்து சொல்லப்படும் சொற்களின் ஈட்டமாயிருப்பாய்,*

*மங்கையர் கணவ - தெய்வயானையாரும், வள்ளி நாச்சியாருமாகிய மகளிர்க்குக் கணவ,*

*மைந்தர் ஏறே - வீரர்க்கு இடபமே,*

*வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ - வேல் பொருந்தின பெருமையையுடைய கையான் அமைந்த பெரிய செல்வ,*

*என்றது; வேல் வெற்றியாற் பெற்ற அச்செல்வத்தை,*

*(குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து, விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ:)*

*குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்துக் கிழவ - குருகாற் பெயர் பெற்ற மலையைப் பிளந்த குறையாத வெற்றியையுடைய கிழவ,*

*விண் பொரு நெடு வரைக் குறிஞ்சிக் கிழவ - தேவருலகைத் தீண்டும் நெடிய வரைகளையுடைய குறிஞ்சி நிலத்துக்கு உரிமையுடையராய்,*

*அதற்குரியனாதல் ''சேயோன் மேய மைவரை யுலகமும்'' என்பதனானுணர்க.*

*பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே - பலரும் புகழ்ந்து சொல்லும் நன்றாகிய சொற்களையுடைய பரசமயத்தினுள்ளார்க்கு ஏற்றின் தன்மையை உடையவனே,*

*என்றது; கல்வி மதத்தையுடைய யானைபோல்வார்க்குச் சிங்கவேறு போல்வாயென்றதாம்.*

*(அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக;) பெறல் அரு மரபின் பெரும் பெயர் முருக - பிறர்க்குப் பெறலரிய முறைமையினையுடைய பெரும்பொருளை யுடைய முருக,*

*பெயர் - பொருள்: "பெற்ற பெரும்பெயர் பலர் கை யிரீஇய" எனவும், "சொற்பெயர் நாட்டம்" எனவும் வரும். பெரும் பொருளென்றது வீட்டினை.*

*(நசையுநர்க் கார்த்து மிசைபே ராள:) நசையுநர்க்கு ஆர்த்தும் பேர் இசை ஆள - அவ்வீட்டைப் பெறவேண்டுமென்று நச்சி வந்தார்க்கு அதனை நுகர்விக்கும் பெரிய புகழை ஆளுதலையுடையாய்,*

*பேரிசை யென்று மாறுக,*

*(அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய், மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்து:)*

*அலந்தோர்க்கு அளிக்கும் சேஎய் - பிறரால் இடுக்கட் பட்டு வந்தோர்க்கு அருள் பண்ணும் சேய்,*

*மண்டு அமர்கடந்த வென்று ஆடுநின் அகலத்துப் பொலம் பூண் சேஎய் - மிக்குச் செல்கின்ற போர்களை முடித்த வென்றடுகின்ற நினது மார்பிடத்தே பொன்னாற் செய்த பேரணிகலன்களை யணிந்த சேயென்க.*

*பரிசிலர்த் தாங்கும் உரு கெழு நெடு வேள் - இரந்து வந்தோரை வேண்டுவன கொடுத்துப் பாதுகாக்கும் உட்குதல் பொருந்திய நெடிய வேளே,*

*பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள் - தேவரும் முனிவரும் ஏத்தும் பெரிய திருநாமத்தையுடைய தலைவனே,*

*இயவுள் - கடவுளுமாம்.*

*(சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி, போர் மிகு:) போர் மிகு மொய்ம்பிற் சூர் மருங்கு அறுத்த மதவலி - போர்த்தொழிலிலே மிகுகின்ற மொய்ம்பாலே சூரபன்மாவின் குலத்தை இல்லை யாக்கின மதவலியென்னும் பெயரையுடையாய்,*

*பொருந - உவமிக்கப்படுவாய்,*

*பொருவப்படுமவன், பொருநனென நின்றது,*

*குரிசில் - தலைவன்,*

*(எனப்பல யானறி யளவையி னேத்தி யானாது:) என யான் அறி அளவையின் ஆனாது பல ஏத்தி - என்று யான் அறிந்து நினக்குக் கூறிய அளவாலே நீயும் அமையாதே பலவற்றையும் கூறிப் புகழ்ந்து,*

*நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின் - நின் தன்மையெல்லாம் முற்ற அளவிட்டறிதல் பல்லுயிர்க்கு அரிதாகையினாலே,*

*நின் அடி உள்ளி வந்தனென் - நின் திருவடியைப் பெற வேண்டு மென்று நினைத்து வந்தேன்;*

*நின்னொடு புரையுநர் இல்லாப் புலமையோய் - நின்னோடு ஒப்பாரில்லாத மெய்ஞ் ஞானத்தை உடையோய்,*

*எனக் குறித்ததுமொழியா அளவையில் - என்று சொல்லி நீ கருதிய வீடு பேற்றினை விண்ணப்பஞ் செய்வதற்கு முன்னே,*

*முந்து நீ கண்டுழி முகனமர்ந்து (251), மகனே, கூற்றே (257), குழவி (259), வெறுக்கை, சொன்மலையாயிருப்பாய் (263), மைந்தரேறே (264), புலவரேறே (268), சேயே (271), வேளே (273), இயவுளே (274), மதவலி (275), புலமையோய் (280) என்று முன்னர் எதிர் முகமாக்கி ஏத்தி (251)யென அண்மை விளியல்லாதனவற்றை முன்னர்க் கூட்டி முடிக்க, அங்ஙனம் எதிர்முகமாக்கி யேத்திப் பின்னர்ப் பரவி வணங்கிச் (253) செல்வ (255), புதல்வ (256), சிறுவ (258), தலைவ (260), மார்ப, புலவ (261), ஒருவ, மள்ள (262), கணவ (264), செல்வ (265), கிழவ (267), முருக (269), இசை பேராள (270), பொருந (276) வென்று அண்மையாக விளித்து, மன்னுயிர்க் கருமையின் (278) யானறியளவையினேத்தி (277) நின்னடியுள்ளி வந்தனென் (279) என்று நீ குறித்தது மொழியா வளவை யினென முடிக்க.*

**2. உரையாசிரியர்**

*ஆண்டாண்டு ஆயினும் ஆக காண்டக - அவ்விடங்களினுமாகப் பிற இடங்களிலுமாக உனது காட்சிக்குத் தக,*

*முந்து நீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்தி - முற்படக் கண்டவிடத்து முகமலர்ந்து துதித்து,*

*கைதொழுஉப் பரவிக் கால்உற வணங்கி - கைகளாலே தலை மேலே கூப்பித் தொழுது வாழ்த்தித் திருவடியிலே தலையுறும் வண்ணம் தெண்டம்பண்ணி,*

நெடும் பெரும் சிமயத்து நீலப் பைஞ்சுனை - மிகவும் பெரிய இமவான் உச்சியில் நீல நிறத்தையுடைய அழகிய சுனையிடத்து,

ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப - பிரமன் திருமால் உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்னப்பட்ட அஞ்சு பேரில் உருத்திரன் அக்கினியிடமாக நின்று தனது அங்கையையேற்க,

அறுவர் பயந்த ஆறமர் செல்வ - இருடிகள் அக்கினியில் இட்ட கருப்பத்தை உருத்திரன் கையிலும் வாங்கிப் பொறுக்கலான அளவிலே அருந்ததி யொழிந்து நின்ற ஆறு மனைவியர் கையிலும் கொடுத்து அவர்கள் வாங்கிக் கொண்டு சூல்முதிர்ந்த அவ்வறுவராலும் பெறப்பட்ட ஆறு வடிவைப் பொருந்திய செல்வனே,

ஆல்கெழு கடவுள் புதல்வ - கல்லாலின் கீழ்ப் பயின்றிருந்த கடவுளினது புதல்வனே,

மால்வரை மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே - உயர்ந்த மூங்கில்கள் நெருங்கின இமையப் பருவ தராசன் மகளாகிய பரமேசுவரி புத்திரனே, பகைவருக்குக் கூற்றுவனே,

வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ - வெற்றிப் பாட்டானே வெல்போரைச் செய்யும் துர்க்கை சிறுவனே,

இழையணி சிறப்பிற் பழையோள் குழவி - பூணினது அழகினால் சிறப்பையுடைய காடுகிழாளுடைய மைந்தனே,

வானோர் வணங்கு வில் தானைத் தலைவ - வணங்கும் வானவர்க்கும் வில்லையுடைய சேனைக்கும் தலைவனே

மாலை மார்ப நூல் அறி புலவ - மாலை செறியும் மார்பனே, எல்லா நூல்களையும் அறியும் புலவனே -

செருவில் ஒருவ பொரு விறல் மள்ள - போர்த் தொழிலில் ஒப்பிலாதவனே, பொருகின்ற வெற்றியை யுடைய வீரனே,

அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை - அந்தணர்களுடைய செல்வமாயிருப்பாய், அறிந்தோர்கள் வாக்குக்குச் சொன்மலையாயிருப்பாய்,

மங்கையர் கணவ மைந்தர் ஏறே - தேவயானையார்க்கும் வள்ளி நாச்சியார்க்கும் கணவனே, வலியோர்க்கு இடபமே,

வேல்கெழு தடக்கைச் சால் பெருஞ் செல்வ - வேல் பொருந்திய பெரிய கையா லுண்டான மிகவும் பெரிய வெற்றிச் செல்வனே,

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து - அசுரன் ஒதுங்கின கிரவுஞ்ச கிரியென்னும் மலையைப் பிளந்த குறைவுபடாத வெற்றியை யுடையவனே,

விண் பொரும் நெடு வரைக் குறிஞ்சிக் கிழவ - தேவருலகத்தை யொக்க வளர்ந்த மலைகளையுடைய குறிஞ்சி நிலத்துக்கு உரியவனே,

பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே - பலராலும் புகழப்பட்ட நல்ல சொற்களையுடைய கவிப் புலவோர்க்குச் சிங்கத்தின் முதன்மை யுடையாய்,

அரும் பெறல் மரபின் பெரும் பெயர் முருக - பெறுதற்கரிய முறைமையினை யுடைய பெரும் பொருளாகிய வீட்டினையுடைய முருகனே,

நசையுநர்க்கு ஆர்த்தும் இசை பேராள - வீட்டின்பத்தை விரும்பினோர்க்கு அதனை நுகர்விக்கும் பெரிய புகழையுடையாய்,

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம் பூட்சேய் மண்டு அமர் கடந்த நின் வென்று ஆடு அகலத்து - துன்பமுற்றோர்க்கு அருள் செய்வானாய்ப் பொன்னாற் செய்த பேரணிகலங்களை நெருங்கிய போர்களை முடித்த நின் மிகுந்த வெற்றியை யுடைய மார்பிலே அணியப்பட்ட சேயே,

பரிசிலர்த் தாங்கும் உருகு எழு நெடுவேள் - இரந்து வந்தோரை வேண்டியது கொடுத்துப் பாதுகாக்கும் கண்டார்க்கு உருகுதல் தோன்றப்பட்ட பெரியவனே,

பெரியோர் ஏத்தும் பெரும் பேர் இயவுள் - தேவர் முனிவர் துதிக்கப்பட்ட பெரிய திருநாமத்தையுடைய புகழாளனே,

சூர் மருங்கு அறுத்த மொய்ம்பின் மத வலி - சூரன் கிளையை வேரறுத்த தோளிடத்து மிக்க வலியாலே,

போர்மிகு பொருந குரிசில் எனப் பல - மிக்க போரிடங்களில் உவமித்தற் கானவனே, தலைவனே, என்று பலவாக,

யான் அறி அளவையின் ஏத்தி ஆனாது - யான் அறிந்து நினக்குக் கூறிய அளவினால் நீயும் ஒழியாது ஏத்தி,

நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின் - நின்னை அளவிட்டறிகிறது மிக்க உயிர்கட்கரிதாகையால்,

நின் அடி உள்ளி வந்தனன்; நின்னொடு புரையுநர் இல்லாப் புலமையோய், என - நின் திருவடியைப் பெறவேணுமென்று கருதி வந்தேன்; நின்னோடு உவமிப்பாரில்லாத மெய்ஞ்ஞானத்தை யுடையாய், என்று,

குறித்தது மொழியா அளவையில் - நீ கருதியது தன்னைச் சொல்லுவதன் முன்னே,

### 3. பரிமேலழகர்

*"ஆண்டாண்டு" என்பது முதல் "அளவையின்" என்பது வரையில் ஒரு தொடர் :*

*ஆண்டாண் டாயினும் ஆகக் காண்டக, முந்து நீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்தி - அங்கங்கே ஆயினும் ஆகிக் கண்ட விடத்திலே முற்பட நீ கண்டவிடத்தே முகமலர்ந்து வாழ்த்தி,*

*கை தொழூஉப் பரவிக் கால்உற வணங்கி - கை கூப்பித் துதித்துச் சீபாதத்திலே விழைவுற்று வணங்கி,*

*நெடும் பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை, ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப அறுவர் பயந்த ஆறமர் செல்வ - ஓங்கிய இமயவரையகத்து நீலோற்பல முதலாயுள்ள பூக்கள் மிடைந்து கிடக்கின்ற சரவணப் பொய்கையிலே பஞ்சபூதத் தொருவனாகிய அனற்கடவுள் அழகிய கையை ஏற்ப, அருந்ததி யொழிந்த அறுவராலும் பெறப்பட்ட நெறியமர்ந்த செல்வனே!*

*"இமயம் பூத்த சுனைமாண் தொட்டில்" என்றார் கல்லாடரும். "அறுவர் பயந்த" என்றதற்குக் கார்த்திகை முதலாயுள்ள அறுவரு முலைகொடுத்து வளர்த்தவனே எனினும் அமையும். 'நீலம்' என்றதை ஈண்டு ஆகுபெயராகக் கொண்டு 'தருப்பை' எனினும் ஆம். இதனைப் "பாயிரும் பனிக்கடல்" என்னும் பரிபாடலானுமறிக.*

*ஆல்கெழு கடவுட் புதல்வ - ஆலின் கீழே பொருந்திய இறைவனின் குமாரனே.*

*மால்வரை, மலைமகள் மகனே - மால்போலும் வரையினையுடைய மலையரையனின் திருமகளார்க்கு மகனே,*

*மாற்றோர் கூற்றே - சேரலர்க்குக் கூற்றுவனே*

*வெற்றி வேல் போர்க் கொற்றவை சிறுவ - வெற்றியுடைத்தான வேற் போர்க்குரிய துர்க்கையினுடைய புதல்வனே; "வென்ற வெற்றிப் போருக்குத் தெய்வமான செயமகளார் புதல்வனே" எனினும் அமையும்; அது மகிடனைச் செற்றமை உணர்த்திற்று,*

*இழையணி சிறப்பின் பழையோள் குழவி - பூணணிந்த சிறப்பினையுடைய காடுகிழாள் மகனே;*

*இதுவன்றிப் "பூமாதேவிக்குப் பிள்ளை" என்பாருமுளர்.*

*வானோர் வணங்கு வில் தானைத்தலைவ - தேவர்களால் வணங்கப்படும் சேனாபதியாயுள்ளவனே,*

இது "தேவர் சேனாதிபதி" என்னும் பெயர் பற்றிக் கூறின தெனினும் அமையும்.

மாலை மார்ப, நூல் அறிபுலவ - மாலையணிந்த திருமார்பனே வேதாகமங்கள் முதலிய பல சாத்திரங்களையும் ஓதாதுணர்த்தும் பண்டிதனே,

செருவில் ஒருவ பொருவிறல் மள்ள - போருக்கொருவனே, வீரராயிருப்போர்க்கு வீரனாயுள்ளோனே,

அந்தணர் வெறுக்கை - அந்தணர்க்குத் திரவியமே,

அறிந்தோர் சொல்மலை - அறிந்தோராலே சொல்லப்பட்ட சொல்லுக்கு மிகுதியாயுள்ளவனே,

மங்கையர் கணவ - மங்கையர் இருவருக்கும் கணவனே; மங்கையர்; வள்ளி நாயகியார், தெய்வ யானையாரென்க,

மைந்த ரேறே - வீரர்க்கு ஏறாயுள்ளவனே,

வேல் கெழுதடக்கைச் சால்பெருஞ் செல்வ - வேலேந்திய பெரிய கையினையுடைய மிகுதிப்பட்ட பெருஞ் செல்வனே,

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து - குருகு பெயர் புனைந்த மலையைப் பிளந்த குறையாத வெற்றியினையுடைய; இதனைப் "புள்ளியற் பொருப்பும்" என்றதனானும் உணர்க,

விண் பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ - ஆகாயத்தைத் தொடுவது போன்ற உயர்ந்த மூங்கிலடர்ந்த குறிஞ்சி நிலத்துக்குத் தலைவனே! "சேயோன் மேய மைவரை யுலகமும்" என்றது இப்பெற்றி நோக்கி,

பலர்புகழ் நன் மொழிப் புலவ ரேறே - பக்தர்களால் ஏத்தப்பட்ட நல்ல சொற்களையுடைய புலவர்க்கு ஏறாயுள்ளவனே;

அரும் பெறல் மரபின் பெரும் பெயர் முருக - பெறுதற்கரிய முறைமையினை யுடைய முருகன் என்னும் பெரும் பெயரினையுடையவனே;

நசையினர்க்கு ஆர்த்தும் இசை பேராள - நச்சி வந்தார்க்கு ஒன்றனை அதனை நுகர்விக்கும் புகழினையுடைய பேராளனே;

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய் - தரித்திரராயுள்ளோர்க்கு அருளும் பொற் பூணையுடைய சேயே;

மண்டமர் கடந்த நின் வென்றாடகலத்து - மண்டின போரினைவென்ற வெற்றியினையுடைய மார்பனே;

*பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள் - இரப்போரைத் திருக்கைகளாலே தாங்குகின்ற அழகிய தவமிக்கவனே;*

*பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள் - உயர்ந்தோரால் ஏத்தப்பட்ட பெரிய நாமத்தையுடைய கடவுள்;*

*சூர்மருங்கறுத்த மொய்ம்பின் மதவலி - சூர்பன்மனைச் சுற்றக்குழாத்துடனே வேரறுத்த வலியையும் உறுதியையும் உடையானே;*

*போர்மிகு பொருந குரிசிலும் எனப் பல யான் அறி அளவையின் ஏத்தி - போரை மிகப் பொர வல்லவனே, தலைவனே எனவும் பலவாக என்னால் அறிந்த எல்லைகளிலே வாழ்த்தி,*

*ஆனாது, நின்அளந்தறிதல் மன்னுயிர்க்கு அருமையின் - அமையாது நின் பெருமையை அளந்தறிதல் உலகங்களிலே மன்னப்பட்ட உயிர்களுக்கு அருமை யாதலாலே,*

*நின்னடி உள்ளி வந்தனன் - நின்னுடைய திருவடியை நினைந்து வந்தேன்,*

*நின்னொடு, புரைகுநர் இல்லாப் புலமையோய் என - நின்னோடு ஒப்பவர் இல்லாத புலமையுடையோய் என்று;*

*'புரையுநர்' என்றும் பாடமுண்டு.*

*குறித்தது மொழியா அளவையின் - நினைத்தது மொழிவதற்கு முன்னர்.*

### 4. கவிப்பெருமாள்

*அந்தந்த விடங்களிலே யாகிலும் பிறவிடங்களிலேயாகிலும் நீ காணத் தகும், முற்பட நீ கண்ட பொழுது முக மலர்ந்து வாழ்த்திக் கைகளாற்றொழுது புகழ்ந்து சீர்பாதங்களிலே பொருந்தும்படி தெண்டனிட்டு மிகவும் பெரிய மாமேருவினுச்சியிலே நீல நிறமுடைத்தாகிய அழகிய சுனையிலே ஐவருள் ஒருவனான அக்கினி தேவன் அவன்றன் கையாலேற்பக் கார்த்திகை மாதர் அறுவராலும் வளர்க்கப்பட்ட முறையை விரும்பின செல்வனே! ஆலின் கீழேயிருந்து அறமுரைத்த மகாதேவருடைய புத்திரனாயுள்ளவனே! உயர்ந்த மூங்கில்கள் உடைத்தாகிய மலைமகளாகிய தம் பிராட்டிக்குப் புத்திரனாய் உள்ளவனே! சத்துருக்களா யுள்ளவருக்குக் கூற்றுவனாயுள்ளவனே! வெற்றி செய்து கொல்லுகிற போரைச் செய்யும் வீரதுர்க்கைக்குப் பிள்ளையா யுள்ளவனே! ஆபரணமணிந்த சிறப்பினையுடைய எல்லோருக்கும் மூத்தாளாகிய காடுகிழாளுக்குப் பிள்ளையா யுள்ளவனே! தேவர்கள் வணங்குகின்ற விற்படைக்குத் தலைவனாயுள்ளவனே!*

*மாலையணிந்த மார்பினை யுடையவனே! நூல்களைக் கற்றறிந்த அறிவினை யுடையவனே! பூசலுக்கு ஒப்பில்லாதவனே! மிக்க வெற்றியையுடைய வீரனே! பிராமணருக்குப் பொருளாயுள்ளவனே! அறிந்தோர்க்கெல்லாம் சொன்மலையாய் யுள்ளவனே! வள்ளிநாச்சியாருக்கும் தெய்வயானை நாச்சியாருக்கும் பர்த்தாவா யுள்ளவனே! இளையோராயுள்ளவர்க் கெல்லாம் இடபத்தை ஒப்பானவனே! வேலைப் பொருந்தின பெரிய திருக்கையையுடைய அமைவுடைமை பொருந்தின பெருஞ் செல்வனே! கிரவுஞ்சமென்னும் மலையை யெறிந்த குறையாத வெற்றியினை யுடையவனே! விண்ணிலே பொருந்தின நெடிய மூங்கிலையுடைய குறிஞ்சி நிலத்துத் தலைவனே!*

*எல்லாச் சமயத்தாரும் புகழ்கின்ற நன்மையான மொழியறிவையறிந்த புலவர் என்னும் யானைகளுக்குச் சிங்கம் போன்ற முதன்மையுடையோனே! அருமையாகப் பெறுதற்கரிய முறையினையுடைய பெரும்பொருளாயுள்ள முருகனே! விரும்பினவர்க்கு இன்பத்தை நுகர்விக்கின்ற புகழமைந்த பெயரை ஆள்பவனே! பிறரால் இடுக்கண்பட்டு வந்தோர்க்கு அவர்க ளிடுக்கண் தீரும்படி வரங்கொடுக்கும் பொன்னணி யணிந்த சேயே! நெருங்கிய அமர்க்களத்திலே பகைவர்களை வென்ற நினது வென்று பெற்ற வெற்றி விளங்குகிற மார்பினை உடையவனே! இரப்போரைப் பாதுகாக்கின்ற அழகு பொருந்திய நெடிய வேளே! சான்றோர்கள் துதிக்கின்ற மிகவும் பெரிய பெயரையுடைய கடவுளே! சூரனை வழியுடன் அறுத்த தோளினது மிக்கவலிமையை யுடையவனே! போர்மிக்க வீரருக்குத் தலைவனாயுள்ளவனே! என்று பலவும்;*

*“நான் அறிந்து கூறிய அளவில் நீயும் புகழ்ந்து கூறி அவ்வளவில் அமையாமல் மேலும் உன்னுடைய புகழை முற்ற அளந்தறியுமது, நிலைபெற்ற பல உயிர்கட்கும் அரிதாகையினாலே உன்னுடைய சீர்பாதங்களையடைய வேண்டுமென்று நினைத்து வந்தேன். உன்னோடு ஒப்பா வோரில்லாத மெய்யறிவையுடையவனே! யென்று புகழ்ந்து நீ கருதிச் சென்ற பொருளினை விண்ணப்பஞ் செய்தற்கு முன்னே”,*

**5. பரிதியார்**

*ஆண்டான்... காண்டகு - வருடா வருடந்தோறு மாயினுமிருந்து திருவிழாவைக் கண்டு சேவித்து; முந்து நீ கண்டுழி - நீ சுவாமி முன்பாக நின்று. சிமயம் - இமய கிரிபருவதம். நீலப்பைஞ்சுனை - நீலம் பொருந்திய தருப்பைப் புல்லுச் சூழ்ந்த பசுமை காட்டிய சுனையிலே; அறுவர் பயந்த ஆறமர் செல்வ - ஆறுதீபமாய் அறுவர் பெண்களாலும் உற்பவித்த ஆறுமுகங்களையுடைய சேயே; பழையோள் - ஆதிபராபரை; தானைத்தலைவ - சேனாபதியே.*

*அறிந்தோர் சொன்மலை - அறிந்த பேர் தோத்தரிக்கும் மலையே. மைந்தர் ஏறே - குமார வர்க்கங்களுக் கெல்லாம் அதிகமான சிங்கமே, கிழவன் - பெரியவன்.*

*அலந்தோர் (பி-ம்) - இனிய சொற்கொண்டு தோத்திரம் பண்ணின பேரை,*

*யானறி... ஏத்தி - நான் சுவாமியைக் கண்டறிந்தபடி யெல்லாம் உனக்குச் சொன்னேனே அந்தப்படி அடையாளத்திலே நீயும் சுவாமியைக் கண்டு தோத்திரம் பண்ணி; நின்னளந்து அறிதல் - நீ இருக்கிறதலமறிந்து காண்பது; மன்னுயிர் - பூலோக மனிதர்; குறித்தது மொழியா - உன்மனத்திலே நினைத்து வந்த கருமத்தை அப்போது தானே சுவாமி சன்னதியிலே விண்ணப்பஞ் செய்யாமல்,*

## 6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்

*ஆண்டாண்டாயினும் ஆக - யான் முற்கூறிய அவ்வவ்விடங்களிலே ஆயினுமாக; பிற இடங்களிலே ஆயினுமாக என உரைகாண்பர் நச்சினார்க்கினியர். பிற உரையாசிரியர்கள் அவ்வவ்விடந்தொறும் என உரைகாண்பர். பரிதியார் மட்டும் வருடா வருடந்தோறும் ஆயினும் இருந்து திருவிழாவைக் கண்டு சேவித்து என உரைகண்டனர். இவற்றுள் நச்சினார்க்கினியர் உரை சிறக்கும்.*

*நீலப் பைஞ்சுனை - நீல நிறத்தையுடைய அழகிய சுனை என உரைகாண்பர். உரையாசிரியரும், கவிப்பெருமாளும், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் ஆகியோர் சரவணப் பொய்கை என்பர். நீலம் - இந்நிறப் பெயர் அதனையுடைய தருப்பைக்கு ஆகி ஆகுபெயராய்ச் சரவணப் பொய்கையைக் குறித்தது என்பர் நச்சினார்க்கினியர். பரிமேலழகரும் ஆகுபெயராதலை ஏற்பர். எனினும் நீலம் மலர்ந்து கிடக்கும் சரவணப் பொய்கை என்றே தாம் உரை கண்டனர்.*

*ஐவருள் ஒருவன் - நிலம், நீர், தீ, வளி, விசும்பு ஆகிய ஐந்தற்கும் தலைவராய சதாசிவன், மயேச்சுரன், உருத்திரன், அரி, அயன் ஆகிய தெய்வங்களுள் உருத்திரன் தெய்வமாகிய தீ என உரை கண்டார் நச்சினார்க்கினியர். பஞ்ச பூதத்து ஒருவனாகிய அனற் கடவுள் என்பர் பரிமேலழகர். இதுவே சிறக்கும்.*

*அங்கை ஏற்ப, அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ என்ற இப்பகுதிக்கு நச்சினார்க்கினியர் முன் 'அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி' எனும் தொடருக்குக் கண்ட உரையை யெடுத்துக் கூறியுள்ளார். உரையாசிரியர், பரிமேலழகர் ஆகிய இருவருக்கும் இக்கதையே உடன்பாடாயிருப்பினும் கச்சியப்பர் கூறியிருக்கும் கந்தபுராண வரலாற்றிற்கு வேறுபட்டு இருத்தலின் இது பொருத்தமின்றாம். இது முன்னரும் கூறப்பட்டது. கவிப்பெருமாளும்,*

பரிதியாரும் இத்தொடருக்குக் கண்டிருக்கும் உரை கச்சியப்பர் கண்ட வரலாற்றோடு ஒத்துச் சிறந்துள்ளது.

ஆல்கெழு கடவுள் - ஆல் எனப் பரிமேலழகரும், கவிப்பெருமாளும் கூறக் கல் ஆல் என உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் குறித்த திறம் சிறப்புடையது. கவிப்பெருமாள் ஆலென்றே உரை வகுப்பினும் ஆலின் கீழே யிருந்து அறம் உரைத்த மகாதேவர் என உரைத்திருக்கும் திறன் எண்ணற்குரியது.

நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடி
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் ஆயிடினுங்
கொன்றான் காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ

என வரும் திருச்சாழற் பகுதி ஈண்டு நினைவு கூரத்தக்கது.

மால்வரை - பெருமையை உடைய மலை என்பர் நச்சினார்க்கினியர். உயர்ந்த மூங்கில்கள் நெருங்கின இமையம் என்பர் உரையாசிரியரும் கவிப்பெருமாளும். மால் போலும் வரையினையுடைய மலையென்பர் பரிமேலழகர், நச்சினார்க்கினியர் வரை, மூங்கிலுமாம் என உரையாசிரியர் கருத்தையும் ஏற்றனர்.

வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ - இத்தொடருக்கு நச்சினார்க்கினியர் கொண்டுகூட்டிப் பொருள் செய்திருப்பது ஆசிரியர் கருத்தொடு பட்டதன்று. பரிமேலழகர் ஆற்றொழுக்காகப் பொருள் கூறி இருவகையாகப் பொருள் உரைத்தமை நச்சினார்க்கினியர் கருத்திற்கு அரணாயிருப்பினும் இரண்டாவது உரை அத்துணைச் சிறப்புடையதன்று. கவிப்பெருமாள் உரையாசிரியர் உரையைத் தழுவுவர். இவர்கள் உரையே சிறப்புடைத்தாம்.

பரிமேலழகர் பழையோள் என்பதற்குப் பூமாதேவி என்றுமாம் எனக்கூறும் உரை அத்துணைச் சிறவாது.

'வானோர் வணங்குவில் தானைத் தலைவ' - நச்சினார்க்கினியர் வணங்கு வானோர் என மொழிமாற்றிப் பொருள்கொள்வது அத்துணைச் சிறப்பதாயில்லை. பரிமேலழகர் தேவர்களால் வணங்கப்படும் சேனாபதியாய் உள்ளவனே என உரைக்கும் உரை சிறப்புடைத்தாம். கவிப்பெருமாள் தேவர்கள் வணங்குகின்ற விற்படைக்குத் தலைவனே என உரைத்திருப்பதும் சிறப்பாகக் கொள்ளத்தக்கதே. தேவர்கள் வணங்குகின்ற தலைவன், விற்படைக்குத் தலைவன் என இயைத்துக் காண்க. வணங்குதல் - வளைதல். 'வில் வணக்கம் தீங்கு குறித்தமையான்' (குறள்) என்ற விடத்தும் இப்பொருள்படுதல் காண்க.

இவ்வகையில் நச்சினார்க்கினியர் உரையும், ஓராற்றான் ஏற்புடையதே. நூலறி புலவ - எல்லா நூல்களையும் அறியும் புலவனே என நச்சினார்க்கினியர், உரையாசிரியர் ஆகிய இருவரும் கூறப், பரிமேலழகர் வேதாகமங்கள் முதலிய பல சாத்திரங்களையும் ஓதாது உணர்த்தும் பண்டிதனே என உரை காண்கின்றார். அறி என்பதற்கு அறிவிக்கும் என இவர் உரைகண்டது சொற்படு பொருளாயிருக்க அமையுமா என்பது ஆராயத்தக்கது.

மள்ள - வீரன் என்றே அனைவரும் உரைகாண நச்சினார்க்கினியர் மட்டும் இளமைப் பகுதித் திருநாமத்தோன் என உரைகண்டிருப்பது எண்ணற்குரியதாம்.

அந்தணர் - அந்தணர் என்றே அனைவரும் உரை காணக் கவிப்பெருமாள் மட்டும் பிராமணர் என உரை காணுகின்றார். அந்தணர் என்பது அழகிய தட்பத்தினை உடையாரென ஏதுப்பெயராதலின் அஃது அவ்வருளுடையார் மேலன்றிச் செல்லாது, ஆதலின் இனங்குறித்த இவ்வுரை பொருந்தாதாம்.

குருகால் பெயர் பெற்ற மலை - கிரௌஞ்ச மலை.

'குருகு பெயர்க்குன்றம் கொன்ற நெடுவேலே' என்னும் சிலம்பும்,

பலர்புகழ் நன்மொழிப் புலவர் - பலரும் புகழ்ந்து சொல்லும் நன்றாகிய சொற்களை உடைய பரசமயத்தின் உள்ளார் - என்றது கல்விமதத்தை உடைய யானை போல்வார்க்குச் சிங்கஏறு போல்வாய் என்பதாம் என்பர் நச்சினார்க்கினியர். பலராலும் புகழப்பட்ட நல்ல சொற்களை உடைய கவிப் புலவோர் என்பர் உரையாசிரியர். பக்தர்களால் ஏத்தப்பட்ட நல்ல சொற்களை உடைய புலவர் என்பர் பரிமேலழகர். எல்லாச் சமயத்தாரும் புகழ்கின்ற நன்மையான மொழியறிவை அறிந்த புலவர் என்பர் கவிப்பெருமாள். அகத்தி யர்க்குச் செந்தமிழ் அறிவுறுத்திய குரவன் முருகனாதலானும், பலர் புகழ் நன்மொழிப் புலவர் என்றே தொடர் அமைந்திருத்தலானும் உரையாசிரியர் உரையே ஆசிரியர் கருத்தொடுபட்ட உரையாகும்.

அரும்பெறல் மரபிற் பெரும் பெயர் முருக - இத்தொடரில் உள்ள பெயர் என்பது பொருளைக் குறிக்கும் என்றும், அப்பொருள் வீடாம் என்றும் நச்சினார்க்கினியர் குறிப்பர். உரையாசிரியரும் இக்கருத்தினராவர். பரிமேலழகர் முருகன் என்னும் பெரும் பெயரினையுடையோன் என்பர். கவிப்பெருமாள் பெரும் பொருளாயுள்ள முருகன் என்பர். முருகன் எனும் பெயர் மிகப்பெரும் சிறப்பிற்குரியது ஆதலால் முருகன் என்னும் பெரும் பெயரை உடையோன் எனச் சொற்பொருள் விரித்தல் சிறக்கும். அலந்தோர் - பிறரால் இடுக்கண்பட்டு வந்தோர் என்பர் நச்சினார்க்கினியரும் கவிப்பெருமாளும். உரையாசிரியர் துன்ப முற்றோர் என்பர். பரிமேலழகர் தரித்திரர் என்பர். இவற்றுள் உரையாசிரியர் உரை சிறக்கும்.

*உட்குதல் - அஞ்சுதல்,*

*பெரியோர் ஏத்தும் - தேவரும் முனிவரும் ஏத்தும் என்பர் நச்சினார்க்கினியரும் உரையாசிரியரும். உயர்ந்தோர் என்பர் பரிமேலழகர். சான்றோர் என்பர் கவிப்பெருமாள்.*

*சூர் மருங்கறுத்த மொய்ம்பின் மதவலி போர்மிகு.......... இத்தொடரில் போர்மிகு மொய்ம்பில் சூர் மருங்கறுத்த மதவலி எனக்கொண்டு கூட்டிப் பொருள் காண்பர் நச்சினார்க்கினியர். ஏனையோர் ஆற்றொழுக்காகவே கொண்டு பொருள் காண்பர்.*

*சூர்மருங்கு - சூரபன்மாவின் குலம் என்பர் நச்சினார்க்கினியர். சூரன்கிளை என்பர் உரையாசிரியரும், பரிமேலழகரும். சூரனை வழியுடன் அறுத்த என்பர் கவிப்பெருமாள். இவர்களுள் நச்சினார்க்கினியர் உரை சிறக்கும்.*

*மதவலி - மதவலி என்னும் பெயரை உடையாய் என்பர் நச்சினார்க்கினியர். மிக்க வலியால் என உரை காண்பர் உரையாசிரியர். உறுதி என உரைகாண்பர் பரிமேலழகர். மிக்க வலிமையுடையவனே என உரைகாண்பர் கவிப்பெருமாள். இத்தொடருக்கு முன்னும் பின்னும் உள்ளனவெல்லாம் முருகனை விளித்தற்காம் தொடர்களாய் உள்ளமையின் அவற்றிற்கேற்ப இதுவும் விளியாதல் சிறக்கும். அவற்றிலும் கவிப்பெருமாள் உரைசிறக்கும்.*

*நின்னொடு புரையுநர் இல்லாப் புலமையோய் - நின்னொடு ஒப்பார் இல்லாத மெய்ஞ்ஞானத்தை உடையோய் என நச்சினார்க்கினியரும் உரையாசிரியரும், கவிப்பெருமாளும் உரைகாண்பர். பரிமேலழகர், புலமையுடையாய் என்ற அளவிலேயே உரை காண்பர். இவரினும் அம்மூவர் உரையே சிறக்கும்.*

வேறுபல் உருவின் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென 285
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்

**1. நச்சினார்க்கினியர்**

*(குறித்துடன், வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்;) வேறு பல் உருவிற் குறும் பல் கூளியர் உடன் குறித்து - வேறு வேறாகிய பலவடிவினையுடைய சிறிய பலராகிய சேவித்து நிற்பார் சேரக்கருதி,*

*"நின் கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்" என்றார் பிறரும்,*

*சாறு அயர் களத்து வீறு பெறத் தோன்றி - விழாவெடுத்த களத்தே தாங்கள் பொலிவு பெறத் தோன்றி,*

*(அளியன் றானே முதுவா யிரவலன்;) முது வாய் இரவலன் தான் அளியன் - அறிவு முதிர்ந்த வாய்மையையுடைய புலவன்றான் அளிக்கத்தக்கான்,*

*(வந்தோன் பெரும நின் வண்புகழ் நயந்தென, வினியவு நல்லவு நனிபல வேத்தி:) பெரும நின் வண் புகழ் நடந்து இனியவும் நல்லவும் நனி பல ஏத்தி வந்தோன் என - பெரும, நினது வளவிய புகழினைக் கூற விரும்பிக் கேட்டோர்க்கு இனியனவும் உறுதி பயப்பனவுமாக மிக்க பலவற்றை வாழ்த்தி வந்தோனென்று கூற,*

*கூளியர் (282) குறித்துத் (281) தோன்றி (283) அளியன் (281) பெரும நின் வண்புகழைக் கூற நயந்து (285) இனியவும் நல்லவுமாக ஏத்தி (286) வந்தோன் (286) என்று கூறவென முடிக்க.*

### 2. உரையாசிரியர்

*குறித்து உடன் வேறு பல்உருவில் குறும் பல் கூளியர் - உடனே அறிந்து வேறுபட்ட பல வடிவினையும் சிறிய பல்லையு முடையராய்ப் பிள்ளையாரைச் சேவித்து நிற்பார்,*

*சாறு அயர் களத்து வீறு பெறத் தோன்றி - விழவு செய்யப்பட்ட களத்திலே தனிப்பெறத் தோன்றி,*

*அளியன் தானே முதுவாய் இரவலன் - அருள் செய்யத்தக்கான் தானாய் அறிவு முதிர்ந்த வாயை யுடையனாகிப் பரிசில் பெறத் தக்கான்,*

*வந்தோன் பெரும நின் வண் புகழ் நயந்து - வந்தான் பெருமானே நின் வளவிய புகழைக் கேட்டு விரும்பி,*

*இனியவும் நல்லவும் நனி பல ஏத்தி என - கேட்டோர்க்கு இனியனவும் உறுதி பயப்பனவும் ஆகிய மிகவும் பலவற்றை வாழ்த்தி யென்றுகூற, அவ்வெல்லையில்,*

### 3. பரிமேலழகர்

*'குறித்து' என்பது முதல் "ஏத்தி" என்பது வரையில் ஒரு தொடர்;*

*குறித்துடன், வேறுபல் உருவின் குறும்பல் கூளியர் - குறித்துக்கொண்டு (நினைத்தகாரியம் இன்ன தென்றறிந்து) வேறுபட்ட பல உருவினையுடைய வராய்க் குறியவாய் இருப்பன பல பூதங்கள்;*

*கூளிகள் என்று பேய்க்கும் பெயராம்.*

*சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி - விழாக்களத்தில் வீறுண்டாகத் தோன்றி,*

*அளியன்தானே முதுவாய் இரவலன், வந்தோன் பெரும நின் வண்புகழ் நயந்தென, இனியவும் நல்லவும் நனிபல ஏத்தி - நீ அனுக்கிரகிக்கத் தக்கவன் தானே நிரம்ப ஓதிய புலவன். பெருமானே, நினது வளவிய புகழை விரும்பிக் கேட்பார்க்கு இனிதாகவும் பயனுண்டாகவும் வரும் நன்மை பலவும் சொல்லி மிகவாழ்த்தி வந்தானென்று கூற;*

**4. கவிப்பெருமாள்**

*(281 குறித்து உடன்) நீ நினைத்து வந்ததைத் தானே திருவுள்ளம் பற்றியருளி அப்பொழுதே இளமையையுடையோராய்ப் பலராகப் பிள்ளையாரைச் சேவித்து நிற்போர் திருநாள் கொண்ட விடத்திலே அழகு பெறத் தோன்றி அளி செய்யத் தக்கான்தானே கற்றுவல்ல வாயினையுடைய பரிசில் பெறத்தக்க இரப்போன் வந்துள்ளான், பெருமானே, நினது வளவிய புகழைக் கூற விரும்பி, கேட்டோர்க்கு இனிமை பயப்பனவு நன்மை பயப்பனுவுமாக மிகவும் பலபடப் புகழ்ந்து, என்று கூறிய அப்பொழுதே; 'நனிபல ஏத்தி என' என்று கூட்டுக.*

**5. பரிதியார்**

*குறித்து - நின்று தோத்திரம் பண்ணி, வேறு பல்லுருவின்... நயந்தென - குறுகிய பல்வேறு உருவமுடைய பூதகணங்கள் திருவிழா செய்கின்ற வெறியாடு களத்திலே நீ போய்ச் சமீபத்திலே சிறப்புப் பெற விளங்கி நின்று 'அடியேன் முதிர்ந்த வாயினையுடைய பாணன் இரக்க வந்தேன், நும்முடைய பெருமையையும் நீண்ட புகழையும் பலபட விரும்பிக் கேட்டு' என வரம் விண்ணப்பஞ் செய்து; இனியவும்... ஏத்தி - சந்தோஷமானதுண்டாகிய அவருடைய நன்மையான தோத்திரங்களையெல்லாம் பலவாகத் தோத்திரம் பண்ணி; வந்தேன் பெரும - (பா-ம்).*

**6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்**

*குறித்துடன் - சேரக்கருதி என்பர் நச்சினார்க்கினியர். உடனே அறிந்து என்பர் உரையாசிரியர். குறித்துக்கொண்டு அதாவது நினைத்த காரியம் இன்ன தென்றறிந்து என உரை காண்பர் பரிமேலழகர். நீ நினைத்து வந்ததைத்தானே திருவுளம் பற்றியருளி என உரை காண்பர் கவிப்பெருமாள். நின்று தோத்திரம் பண்ணி என உரைகாண்பர் பரிதியார். இவற்றுள் பரிமேலழகரும் கவிப்பெருமாளும் கொண்ட உரை சிறக்கும்.*

*கூளியர் - வழிபட்டு நிற்போர் என நச்சினார்க்கினியர், உரையாசிரியர் கவிப்பெருமாள் ஆகிய மூவரும் உரை காண்பர். பூதங்கள் என்பர் பரிமேலழகர். ஞானசம்பந்தர் பட்டீச்சரத்துக்கு எழுந்தருளுங்கால் இறைவன் ஆணைவழி முத்துப்பந்தர் வழங்கியதும், திருவாவடுதுறையில் பொருள் வேண்டி விண்ணப்பித்துக் கொண்ட பொழுது இறைவன் ஆணைவழிப் பொற்காசுகள் வழங்கியதும் பூதகணங்களாதலின் இறைவனிடத்து அறிமுகப்படுத்தும் தகுதியும் தகவும் அவற்றிற்கு உண்டென்பது அறியத்தக்கது.*

தெய்வஞ் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந் துஎய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவுஎன
அன்புடை நன்மொழி அளைஇ விளிவுஇன்(று)
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்(து)
ஒருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்குமதி பலவுடன்

**1. நச்சினார்க்கினியர்**

*தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவின் - தெய்வத்தன்மையமைந்த வலி விளங்கும் வடிவினையும்,*

*வான் தோய் நிவப்பின் தான் வந்து எய்தி - வானைத் தீண்டும் வளர்ச்சியினையுமுடைய தான் அவையை வந்தணுகி,*

*அணங்கு சால் உயர் நிலை தழீஇ - வருத்தமமைந்த தெய்வத்தன்மையை உள்ளடக்கிக் கொண்டு,*

*(பண்டைத்தன், மணங்கமழ் தெய்வத் திளநலங்காட்டி;) மணம் கமழ் தெய்வத்துப் பண்டைத் தன் இள நலம் காட்டி - மணம் நாறுகின்ற தெய்வத் தன்மையையுடைய முன்புண்டாகிய தன் இளைய வடிவைக் காட்டி,*

*(அஞ்ச லோம்பு மதியறிவனின் வரவென:) நின் வரவு அறிவல் அஞ்சல் ஓம்பு மதி என - நீ வீடுபெற நினைத்து வந்த வரவை யான் முன்னேயறிவேன்; அது நினக்கு எய்துதலரிதென்று அஞ்சுதலைப்பரிகரியென்று.*

*அன்புடை நன்மொழி அளைஇ - நின்மேல் அன்புடைத்தாகிய நல்ல வார்த்தைகளைப் பலகாலும் அருளிச் செய்து,*

*(விளிவின்று, இருணிற முந்நீர் வளைஇய வுலகத் தொரு நீயாகித் தோன்ற) இருள் நிற முந்நீர் வளைஇய உலகத்து ஒரு நீயாகி விளிவு இன்று தோன்ற -*

*இருண்ட நிறத்தையுடைய கடல்சூழ்ந்த உலகத்திடத்தே நீ யொருவனுமே பிறர்க்கு வீடளித்தற்குரியையாய்க் கேடின்றித் தோன்றும்படி,*

*விழுமிய பெறல் அரும் பரிசில் நல்கும் மதி - சீரிய பிறராற் பெறுதற்கரிய வீடு பேற்றினைத் தருவன்;*

*"இகுமுஞ் சின்னு மேனையிடத்தொடுந், தகுநிலையுடைய வென்மனார் புலவர்'' என்றதனானாதல் ''அவ்வச் சொல்லிற்கு'' என்னும் புறனடையாதனாதன் மதி படர்க்கைக்கண் வருதல் கொள்க.*

*இனி மதிபலவுட னெனக் கூட்டி, அறிவுகள் பலவுடனே பரிசில் நல்குமென்று கூறுவாருமுளர்.*

### 2. உரையாசிரியர்

*தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவின் - தெய்வத்தன்மை அமைந்த வலிவிளங்கும் வடிவினையும்,*

*வான் தோய் நிவப்பில் தான் வந்து எய்தி - வானைத் தீண்டும் உயர்ச்சியை யுமுடைய தான் வந்து குறுகி,*

*அணங்கு சால் உயர் நிலை தழீஇ - அத் தெய்வத்தன்மை யமைந்த உயர்ந்த நிலைமையை உள்ளடக்கி,*

*பண்டைத் தன் மணம் கமழ் தெய்வத்து இளநலம் காட்டி - தனது முன்புண்டாகிய மணநாறுகின்ற தெய்வத் தன்மையையுடைய இளைய அழகைப் புலப்படுத்தி,*

*அஞ்சல் ஓம்புமதி அறிவல் நின் வரவென - உனது அஞ்சுதலைப் பரிகரி, நின்னுடைய வரவு யாமறிந்தோமென்று,*

*விளிவின்று இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து - அழிவின்றி யிருண்ட நிறத்தையுடைய கடல் சூழ்ந்த உலகத்தில்,*

*ஒரு நீ யாகத் தோன்றி விழுமிய பெறலரும் பரிசில் நல்கும் - நீ ஒப்பில்லாதவனாம் வண்ணம் வெளிப்பட்டுச் சீரிய பெறுதற்கரிய வீட்டின்பத்தைத் தருவன்.*

### 3. பரிமேலழகர்

*"தெய்வம்" என்பது முதல் "நல்குமதி" என்பது வரையில் ஒரு தொடர்; (287-295).*

*தெய்வஞ் சான்ற திறல் விளங்கு உருவின், வான் தோய் நிவப்பின் தான்வந் தெய்தி - தெய்வத்தன்மை அமைந்த வலி விளங்கப்பட்ட வடிவினையும் வானிலே தோன்றப் படுகின்ற ஒழுக்கத்தினையுமுடைய பிள்ளையாரும் முன்பு கிட்டி வந்து,*

*அணங்கு சால் உயர்நிலை தழீஇ - தெய்வத்தொழில் அமைந்து மிக்குயர்ந்த நிலை தன்னிடத்தேயடக்கிக் கொண்டு,*

*பண்டைத்தன் மணங்கமழ் தெய்வத்து இளநலங் காட்டி - பண்டைத்தனது மணங்கமழ்கின்ற முருகனாகிய தனது தெய்வ நலத்தைக் காட்டி; தெய்வத் தன்மை யடக்கி, மக்கள் யாக்கையுடையார் தெய்வ யாக்கையைக் கண்டால் நடுங்கு வாராதலால் மக்கள் யாக்கையைக் கொண்டு இளையனாகத் தோன்றி*

*அஞ்சல் ஓம்புமதி அறிவல் நின் வரவு என - அஞ்சாதே, அறிந்தேன் நீ கருதிவந்த பொருளெனத் திருவுள்ளமாய்,*

*அன்புடை நன்மொழி அளைஇ - அன்புடனே நல்ல பொருள்களை அவனுடனே கலந்து பேசி; அன்புடனே நல்ல மொழியாலே அவனுடனே அளவளாவி எனினுமமையும்,*

*விளிவின்று, இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து ஒரு நீ ஆகத்தோன்ற - கேடின்றி இருந்த கரிய நிறத்தினையுடைய முதுநீர் சூழ்ந்த பூமிக்கு நீ ஒருவனே தலைவனாகக் காணும்படி,*

*விழுமிய பெறலரும் பரிசில் நல்கும் மதி பலவுடன் - அறிவுகள் பலவுடனே மேம்பட்ட பெறுதற்கரிய பரிசில்கள் அளித்தருளுவன்.*

## 4. கவிப்பெருமாள்

*தெய்வத்தன்மை மிக்க வலிமை விளங்கும் வடிவினையும் விண்ணிலே தோய்கின்ற உயர்ச்சியையுமுடையதான் (பிள்ளையார் காணும்படி சாறயர்களத்தை) வந்து சேர்ந்து தெய்வத் தன்மை சான்ற தனது உயர்ந்த தன்மையை உள்ளடக்கிக் கொண்டு பண்டேயுண்டாகிய தன்னுடைய நறுநாற்றங் கமழா நின்ற தெய்வீகமான இளைய திருவழகைக் காட்டி 'நீ கருதிய பொருள் எய்துதல் அரிதன்று அஞ்சுதலைப் பரிகரிப்பாயாக; கருதியது பெறவந்த நின்வரவும் யான் அறிவே'னென்று அன்புடைய நல்ல வார்த்தைகளைப் பலதரமும் கலந்து சொல்லிக் கேடின்றி இருண்ட நிறமுடைத்தாகிய கடல் சூழ்ந்த இந்த உலகத்திலே நீ யொப்பில்லாதவனாகத் தோன்றும்படி சிறந்த பேரின்பமாகிய பெறுதற்கரிய பரிசிலைத் தருவன்;*

## 5. பரிதியார்

*அஞ்சல் ஓம்புமதி.... வரவென - 'நீ தோத்திரம் பண்ணிக் கொண்டு நிற்க உன்னைச் சுவாமி கண்டு நீ பயப்படவேண்டாம் நீ நினைந்து வந்த காரியம் யாம் அறிவோம் என்று; ஒரு நீ யாக.... நீ யொருவனே நிசதேவதையென்று புகழ்ந்து, பெறலரும் பரிசில் - பெறுதற் கரிதாகிய பொருள்; மதி பலவுடன் பரிசில் நல்கும்' எனக் கூட்டிப் பொருள் கோடலும் ஆம். (பலமதி - பலவகையான நல்லறிவு).*

## 6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்

*மக்கள் யாக்கையுடையார் தெய்வ யாக்கையைக் கண்டால் நடுங்குவர். ஆதலின் மக்கள் யாக்கையைக் கொண்டு இளையனாகத் தோன்றி எனப் பரிமேலழகர் உரைத்திருப்பது எண்ணத்தக்கது. அறிவல் நின் வரவு - நீ கருதி வந்தது நாம் அறிவோம் எனப் பலரும் உரை காண, நீ வீடுபெற நினைத்து வந்தவரவை யான் முன்னே அறிவேன் எனப் பொருள் காண்பர் நச்சினார்க்கினியர்.*

*விளிவின்றி - அழிவின்றி. இவ்வடைமொழி உள்ளவாறு உலகிற்கு ஏற்பின் உலகம் அழிவுடையது எனும் முடிந்த முடிவிற்கு இழுக்காகும் எனக்கருதிய நச்சினார்க்கினியர் அதனை வீடுபெற்றோனுக்கு உரித்தாக்கினார். பிறரெல்லாம் இதனை உலகிற்கே கொண்டு கூறினர். உலகம் மாயையில் தோன்றி ஒடுங்குதல் பற்றி அது அழிவுடையது எனக் கூறினும் ஒடுங்கிய நிலையிலும் மாயையுள் நுண்ணிதாய் இருத்தலின் உலகம் அழியாதது என்றலும் பொருந்துவதாகும்.*

*கருதுகா ரணமுண் டாகக் காரிய முள்ள தாகி*
*வருதலா லநாதி வைய மற்றொரு கடவு ளித்தைத்*
*தருதலா லாதி யாகச் சாற்றலு மாகு மாயைக்*
*கொருவனா ரென்னிங் கென்னி னுள்ளவா றுரைப்பக் கேணீ*

*எனவரும் சித்தியாரானும் இவ்வுண்மை உணரப்படும்.*

வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்(து)
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர ஊகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்

இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொ(டு)
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாஅடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்(டு)
ஆமா நல்லேறு சிலைப்பச் சேண்நின்(று)
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

**1. நச்சினார்க்கினியர்**

*(பலவுடன், வேறுபஃறுகிலி னுடங்கி) வேறு பல் துகிலிற் பல உடன் நுடங்கி - வேறுபட்ட பலவாகிய துகிற் கொடிகளைப் போலத் தாம் பலவுங் கூட வசைந்து,*

*அகில் சுமந்து ஆரம் முழுமுதல் உருட்டி அகிலை - மேற்கொண்டு சந்தனமாகிய பெரிய மரத்தைத் தள்ளி,*

*வேரற் பூ உடை அலங்கு சினை புலம்ப வேர் கீண்டு - சிறு மூங்கிலினது பூவுடைத்தான அசைகின்ற கொம்பு தனிப்ப வேரைப்பிளந்து,*

*விண் பொரு நெடு வரைப் பரிதியின் தொடுத்த தண் கமழ் அலர் இறால் சிதைய - தேவருலகத்தைத் தீண்டுகின்ற நெடிய மலையிடத்தே ஞாயிற்றின் மண்டிலத்தைப் போல ஈ வைக்கப்பட்ட தண்ணிய வாய் மணக்கின்ற விரிந்த தேன்கூடு கெட,*

*நன்பல ஆசினி முது சுளை கலாவ - நன்றாகிய பல ஆசினிகளுடைய முற்றியசுளை தன்னிடத்தே கலக்க,*

*மீமிசை நாக நறுமலர் உதிர - மலையினுச்சிலுண்டான சுரபுன்னையின் நறிய மலர்கள் உதிர,*

*யூகமொடு மா முக முசுக்கலை பனிப்ப - கருங்குரங்கோடே கரிய முகத்தையுடைய முசுக்கலைகளும் நடுங்க,*

*"கலையென் காட்சி யுழைக்கு முரித்தே"; "நிலையிற்றப்பெயர் முசுவின் கண்ணும்" என்றார்.*

*பூ நுதல் இரும்பிடி குளிர்ப்ப வீசி - புகரை யணிந்த மத்தகத்தையுடைய பெரிய பிடி குளிரும்படி வீசி,*

*பெருங் களிற்று முத்து உடை வான் கோடு தரீஇ - பெரிய யானையினுடைய முத்தையுடைத்தாகிய வெள்ளிய கொம்புகளை உள்ளடக்கி,*

*(தந்துற்று, நன்பொன் மணிநிறங் கிளர;) நன்பொன் மணி நிறம் கிளரத் தத்துற்று - நல்ல பொன்னும் மணியும் நிறம் விளங்கும்படி மேலே கொண்டு குதித்து,*

*தத்துற்று - தத்துதலையுற்று,*

*பொன் கொழியா - பொடியான பொன்னைத் தெள்ளி,*

*வாழை முழுமுதல் துமியத் தாழை இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கி - வாழையினது பெரிய முதல் துணியத் தெங்கினது இளநீரையுடைய சீரிய குலை உதிர அவ்விரண்டினையும் மோதி,*

*கறிக் கொடிக் கருந் துணர் சாய - மிளகினது கொடியின் கரிய கொத்துக்கள் சாய,*

*(பொறிப்புற, மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக் கோழி வயப்பெடை யிரிய;) பொறிப் புற மடநடை மஞ்ஞை கோழி வயப் பெடை வெரீஇப் பலவுடன் இரிய - பீலியையுடைத்தாகிய இடத்தினையும் மடப்பத்தை யுடைத்தாகிய ஒழுக்கத்தினையுமுடைய மயில்களோடே கோழியினுடைய வலியையுடைய பெடை வெருவிப் பலவுஞ் சேரக்கெட,*

*(கேழலோ, டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன, குரூஉமயிர் யாக்கைக் குடாவடி வுளியம், பெருங்கல் விடரளைச் செறிய) கேழலோடு வெளிற்றின் இரும் பனைப்புன் சாய் அன்ன குரூஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம் பெருங்கல் விடர் அளைச் செறிய - ஆண்பன்றியுடனே உள்ளே வெளிற்றினை யுடைத்தாகிய கரிய பனையினது புல்லிய செறும்பை யொத்த கரிய நிறத்தை யுடைத்தாகிய மயிரினை யுடைய உடம்பினையும், வளைந்த அடியினையுமுடைய கரடி பெரிய கல் விண்ட முழைஞ்சிலே சேர,*

*கருங் கோட்டு ஆமா நல் ஏறு சிலைப்ப - கரிய கொம்பினையுடைய ஆமாவினுடைய நன்றாகிய ஏறுகள் முழங்க,*

*சேண் நின்று இழுமென இழிதரும் அருவி - மலையின் உச்சியி னின்றும் இழுமென்னும் ஓசை படக் குதிக்கும் அருவியையுடைய,*

*பழம் முதிர் சோலை மலை கிழவோனே - பழம் முற்றின சோலைகளையுடைய மலைக்கு உரிமையையுடையோனே,*

*நுடங்கிச் சுமந்து உருட்டிக் கீண்டு சிதையக் கலாவ உதிரப் பணிப்ப வீசித் தழீ இத் தத்துற்றுக் கொழியாத் துமிய உதிரத்தாக்கிச் சாய இரியச் செறிய சிலைப்ப இழிதரும் அருவியென முடிக்க. கிழவோ னென்ற பெயர் உடம்பொடு புணர்த்தலாற் கொள்க.*

*கணவன் (6) மார்பினன் (11) சென்னியனாகிய (44) சேயுடைய (61) சேவடி படரும் உள்ளத்தோடே (62) செல்லுஞ் செலவை நீ நயந்தனையாயின் (64) நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப இன்னே பெறுதி (66); அது பெறுதற்கு அவன் யாண்டுறையு மென்னிற் குன்றமர்ந் துறைதலு முரியன்; அதுவன்றி (77) அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பு; அதுவன்றி (125) ஆவினன்குடி அசைதலு முரியன்; அதுவன்றி (176) ஏரகத் துறைதலு முரியன். அதுவன்றிக் (189) குன்றுதோறாடலும் நின்றதன் பண்பு; அதுவன்றி (217) விழவின் கண்ணும் (220) நிலையின் கண்ணும் (221) கந்துடை நிலையின் கண்ணும் (226) உறைதலு முரியன் (189) களனுங் (222) காடும் (223) முதலிய ஆண்டாண்டுறைதலும் (249) உரியன் (189); நகரிலே (244) பாடி (245) வைத்து இயக்கி (246) வாழ்த்தி (247) வழிபட (248) உறைதலுமுரியன்; (189) இஃதியானறிந்தபடியே கூறினேன் (249); இனி ஆண்டாண்டாயினுமாகப் பிறவிடங்களிலேயாயினுமாக (250) முந்து நீ கண்டுழி முகனமர்ந்து முன்னரெதிர் முகமாக்கி ஏத்திப் (251) பரவி வணங்கி (252) அண்மை யாக விளித்து யானறியளவையி னேத்தி (277) நின்னடி யுள்ளி வந்தேனென்று (279) நீ குறித்தது மொழிவதற்கு முன்னே (281) கூளியர் (282) குறித்துத் (281) தோன்றிப் (283) பெரும (285) இரவலன் நீ அளிக்கத்தக்கான் (284) வந்தோனென்று கூற (285) மலைகிழவோனாகிய (317) குரிசிலும் (276) தான் வந்தெய்தித் (288) தழீஇக் (289) காட்டி (290) அஞ்சலோம்புமதி யென்று (291) அன்புடை நன்மொழியளைஇ (292) ஒருநீயாகித் தோன்றும்படி (294) பெறலரும் பரிசில் நல்குவனென (295) வீடு பெறக்கருதிய இரவலனை நோக்கி வீடுபெற்றானொருவன் ஆற்றுப்படுத்ததாக வினைமுடிக்க.*

*இது, புறத்திணையியலுள் "தாவினல்லிசை" என்னுஞ் சூத்திரத்துள் "ஆற்றிடைக் காட்சியுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" என்பதனான் முற்கூறிய கந்தழியைப் பெற்றா னொருவன் அதனைப் பெறாதானொருவனுக்குப் பெறுமாறு கூறி அதனை வழிபடுத்துக் கூறுவா னென்பது பற்றிச் செய்யுள் செய்தாராயிற்று.*

***கந்தழியாவது ஒருபற்றுமற்று அருவாய்த் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள்: அது "சார்பினாற் றோன்றாது தானருவாய்.... மைதீர் சுடர்" என்பதாம்;***

*இதனை "உற்ற வாக்கையினுறுபொரு ணறுமல ரெழுதரு நாற்றம் போற் - பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்" என அதனை உணர்ந்தோர் கூறிய வாற்றானுணர்க.*

*முருகாற்றுப்படை யென்றதற்கு வீடு பெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடுபெற்றானொருவன் முருகன் இடத்தே ஆற்றுப்படுத்ததென்று பொருள் கூறுக.*

**௨. உரையாசிரியர்**

*பலவுடன் வேறு பல் துகிலின் நுடங்கி - பல வாய்ச் சேர்ந்து வேறுபட்டிருக்கிற கொடிகள் போலசைந்து,*

*அகில் சுமந்து ஆர முழு முதல் உருட்டி - அகில் மரத்தை மேல்கொண்டு சந்தன முழுமரத்தைத் தள்ளி,*

*வேரல் பூவுடை யிலங்கு சினை புலம்ப வேர் கீண்டு - மூங்கில்களும் பூக்களை யுடைய விளங்கா நின்ற மரக்கோடுகளும் நடுங்க வேரைப் பிளந்து.*

*விண் பொரு நெடு வரைப் பருதியின் தொடுத்த தேவருலகத்தைத் தீண்டப்பட்ட நெடிய மலையிடத்து ஆதித்த மண்டலம் போலத் தொடுத்து வைக்கப்பட்ட,*

*தண்கமழ் அலர் இறால் சிதைய - குளிர்ந்து மணக்கின்ற விரிந்த பெருந் தேன்கூடு கெட,*

*நன் பல வாசனை முது சுளை கலாவ - நல்ல பலாவினது வாசனைகளை யுடைய முற்றிய சுளைகள் விரவ,*

*மீமிசை நாக நறுமலர் உதிர - மிகவும் உயர்ந்த சுரபுன்னையினது நறுமலர்கள் உதிர,*

*ஊகமொடு மாமுக முசுக்கலை பனிப்ப - கருங்குரங்கோடே கரிய முகத்தையுடைய ஆண் முசுக்களும் நடுங்க;*

*பூ நுதல் இரும்பிடி குளிர்ப்ப வீசி - புகரழகையுடைத்தாகிய மத்தகத்தையுடைய பெரிய பிடியானை குளிரும் வண்ணம் மோதி,*

*பெருங்களிற்று முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று - பெரிய களிற்றானையினது முத்துடைய பெரிய கொம்புகளை உள்ளடக்கிக் குதித்தலைப் பொருந்தி,*

*நன் பொன் மணி நிறம் கிளரப்பொன் கொழியா - விளை பொன்னும் நிறத்தையுடைய மணிகளும் மேற்றோன்றாப் பொடிப் பொன்னைக் கொழித்து,*

வாழை முழு முதல் துமியத் தாழை இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கி - வாழையினது பெரிய முதல் துணியவும் தெங்கிள நீரையுடைய சிறிய குலைகள் உதிரவும் ஏற்றி,

கறிக்கொடிக் கருந்துணர் சாய - மிளகுக் கொடிகளினது கரிய கொத்துக்கள் சாய்ந்து போக,

பொறிப் புற மட நடை மஞ்ஞை பல உடன் வெரீஇ - பீலியுடைய புறம்பையும் மடப்பம் பொருந்திய ஒழுக்கத்தையும் உடைய மயில்கள் பலவும் சேர வெருவி,

கோழி வயப்பெடை இரிய - காட்டுக் கோழிகளுடைய வலிய பெடைகள் இரிய,

கேழலொடு இரும் பனை வெளிற்றின் புன்சாய் அன்ன குரூஉ மயிர் யாக்கைக் குடாவடி உளியம் - காட்டுப் பன்றியொடு வெளிற்றினை யுடைய பெரிய பனையினது புல்லிய செறும்பைப் போன்ற கரிய மயிரினையுடைய உடம்பினையும் வளைந்த அடியையுமுடைய கரடி,

பெரும் கல் விடர் அளைச் செறிய - பெரிய கல்லு நீங்கிய முழையிலே சேர,

கருங்கோட்டு ஆமா நல் ஏறு சிலைப்ப - கரிய கொம்பினையுடைய காட்டாவினது நல்ல ஏறுகள் முழங்க.

சேண் நின்று இழுமென இழிதரும் அருவி - தூரமாகிய மலையி னுச்சியினின்று இழுமென்னும் ஓசையுடனே விழும் அருவியை யுடைத்தாய்,

பழம் உதிர் சோலை மலை கிழவோனே - நற்கனிகள் உதிரப்பட்ட சோலைகளையும் உடைய மலைக்கு உரிமையுடையோன்,

இவற்றைத் தொகுத்துப் பொருண்முடிவு தோன்ற முடிக்கு மிடத்து, இடைப்பிறந்தனவற்றையொழித்து, அத்தன்மையாகச் சொல்லப்பட்ட ஒளியையும் (3), தாளையும் (4) கையையும் (5) உடையனாகித் தெய்வயானைக்குக் கணவனாகி (6) மாலை அசையும் மார்பனாகிக் (11) காந்தள்மாலை சூடிய திருமுடியை யுடையனாகிய (44) சேயினது திருவடியிலே செல்ல வேணுமென்கிற மனத்தோடு (62) அவன் தங்குமிடத்துக்கு (63) வழியை விரும்பினையாகில் (64) உன்னுடைய ஆசைப்படியே (65) இப்பொழுதே பெறுவை நீ நினை கருமம் (66) இதற்கு அவன் உறையும் இடம் திருப்பரங்குன்றிலே அமர்ந்திருத்தலும் உரியன் (77), அதுவன்றி அலைவாயென்னும் திருச்செந்தூரிலே எழுந்தருளுதலும் நிலையுடைய குணம் (125), அதுவன்றி, ஆவினன்குடியிலே தங்குதலும் உரியன் (176), அதுவன்றி

ஏரகத்துறைதலும் உரியன் (189), அதுவன்றி, மலைகடோறுஞ் சென்று விளையாடுதலும் நிலைபெற்ற குணம் (217). அதுவன்றி விழாவின் கண்ணும் (220), அன்பர் ஏத்தப் பொருந்து மிடங்களிலும் (221) வெறியாடும் இடங்களிலும் (222), காடும் சோலையும் முதலாகச் சொல்லப்பட்ட அவ்விடங்களிலும் உறைதற்குரியன் (249), இம்முறையாகி யான் அறிந்த வழி; அவ்விடங்களிலே யாயினுமாக, பிற இடங்களிலே யாயினுமாக (250), முற்படக் கண்ட பொழுதே முகமலர்ந்து துதித்துப் பரவி வாழ்த்தி வணங்கி (252), ஆறு வடிவைப் பொருந்திய செல்வனே! (255), கல்லாலின் கீழிருந்த கடவுட் புதல்வனே! (256) என்று தொடங்கிக் குரிசிலளவாக (276), நினக்குக் கூறிய அளவால் ஏத்தியொழியாதே துதித்து (277), நின் திருவடியைப் பெறவேணுமென்று கருதி வந்தேன் என்று நீ கருதிய அதனைச் சொல்லுவதன் முன்னே (281), பிள்ளையாரைச் சேவித்து நிற்பார் தோன்றி (283), அறிவு முதிர்ந்த வாயையுடைய புலவன் வந்தான் நின் புகழைக் கேட்டேனென்று கூற (285) அவ்வெல்லையில் தான் வந்து அணுகித் (288) தெய்வத்தன்மையால் நின்ற நிலைமையுள்ளடக்கித் தனது இளைய அழகைக் காட்டி (290), 'அஞ்சுதலைப் பரிகரி (291), நின் வரவு யாம் அறிந்தோம்' என்று அன்புடனே நல்ல வார்த்தை அருளிச் செய்து (292). உலகத்தில் நீ ஒப்பில்லாதவனாம் வண்ணம் வீட்டின்பத்தைத் தருவன் (295), அருவியையும் சோலைகளையும் உடைய மலைக்குரியோன் (317); என்று எதிர் கண்ட பாணனுக்குப் பரிசில் பெற்று வந்த பாணன் கூறியதாகப் பொருள் முடிக்க.

முருகாற்றுப்படை யென்றது முருகனிடத்திலே செல்ல வழிப்படுத்தல்.

### 3. பரிமேலழகர்

''வேறுபஃறுகிலின்'' என்பது முதல் ''மலைகிழவோனே'' என்பது வரையில் ஒருதொடர்; (296-317)

வேறுபல் துகிலின் நுடங்கி - வேறுபட உடுத்த துகிலின் நுடங்கல் போன்று,

அகில் சுமந்து - அகில் மரத்தை எடுத்துக் கொண்டு,

ஆர முழுமுதல் உருட்டி வேரற - வேரோடே சந்தன மரங்களை எடுத்து உருட்டி,

பூவுடை யலங்கு சுனை புலம்ப வேர் கீண்டு - அழகிய நீலோற்பலம் முதலாகிய பூக்களும் மிடைந்து கிடக்கின்ற சுனைகளின் மரங்களெல்லாம் வேர் கிழித்துக் கொண்டு,

விண்பொரு நெடுவரை பருதியிற் றொடுத்த தண்கமழ் மலரிறால் சிதைய - ஆகாயத்தைத் தொடுவது போன்றிருந்துள்ள பெரிய மலைகளில் ஆதித்தன்

*தோன்றினாற் போலக் குளிர்ச்சியையும் நறு நாற்றத்தையும் உடைய தேன் கூடுகள் எல்லாம் அழிய,*

*நன்பல, ஆசினி முதுகளை கலாவ - நல்ல பலாவின் குற்றமற்ற சுளையும் விரவிக் கொண்டு*

*மீமிசை, நாக நறுமலர் உதிர - மேன்மேலே புன்னையினுடைய நறுவிய மலர்களை உதிர,*

*யூகமொடு, மாமுக முசுக்கலை பனிப்ப - கருங்குரங்குகளுடனே பெரிய முகத்தினையுடைய முசுக்களும் கலைகளும் தளர,*

*பூநுதல் இரும்பிடி குளிர்ப்ப வீசி - பொலிவு பெற்ற மத்தகத்தையுடைய பிடிகள் உள்ளங் குளிரும்படி தள்ளி,*

*பெருங்களிற்று முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று - பெரிய கடா யானைகளின் முத்துச் சொரியும் கோடுகளையும் அணைத்துக் கொண்டு குதி பாய்ந்து,*

*நன் பொன் மணி நிறம் கிளர - நல்ல பொன்னும் மாணிக்கமும் ஒக்க ஒளி எழ,*

*பொன் கிழியா - பொன்னைக் கிழித்து,*

*வாழை முழுமுதல் துமிய - வாழைகளை வேருடனே முறித்து,*

*தாழை, இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கி - தென்னமரங்களின் நல்ல இளநீரின் சிறந்த குலை உதிரச்சாடி,*

*கறிக்கொடிக் கருந்துணர் சாய - மிளகுக் கொடிகள் பூவுடனே சரிய,*

*பொறிப்புற மட நடை மஞ்ஞை பலவுடன் - பலவரிகளையும் மடப்பத்தினையும் நடையினையுமுடைய மயில்கள் பலவுடன்,*

*வெரீஇக், கோழி வயப்பெடை இரிய - கோழியின் வலியையுடைய பெடைகளும் ஓட,*

*கேழலோடு, இரும்பனை வெளிற்றின் புன்சாயன்ன, குரூஉ மயிர் யாக்கைக் குடாவடி உளியும் பெருங்கல் விடர் அளைச் செறிய - ஆண் பன்றியுடனே பெரிய இளம் பனையின் வலிய செறும்பு போன்ற கருநிற மயிரினையுடைய உடம்பினையும் குடமுழவு போன்ற அடியினையும் உடைய கரடி பெருங்கல் விண்ட முழையில் சேர,*

*கருங்கோட்டு, ஆமா நல்லேறு சிலைப்ப - கரிய கொம்பினை யுடைய ஆமாவினுடைய நன்றாகிய ஏறுகள் முழங்க,*

*சேணின்று, இழுமென இழிதரும் அருவிப் பழமுதிர் சோலை மலை கிழவோனே - மலையின் உச்சியினின்று இழும் என்னும் ஓசையுடன் குதித்து வரும் அருவியாற்றையுடைய பழமுதிரும் சோலை மலைக்கு உரிமையுடையோனே என்றவாறு.*

*முருகாற்றுப்படை என்பதற்குச் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாய அந்தமில் இன்பத்து அழிவில் வீடு பெறுவான் சமைந்தான் ஓர் இரவலனை அவ்வாறு வீடு பெற்றான் ஒருவன் முருகனுழை ஆற்றுப்படுத்தல் எனப் பொருள் விரிக்க.*

**4. கவிப்பெருமாள்**

*பலவுடன் சேர்ந்து வேறு பல வகைப்பட்ட விரிந்த துகிற் கொடிகள்போல் அசைந்து அகில் மரங்களை மேலே சுமந்து கொண்டு சந்தனப் பெரிய மரத்தை வேரோடே பிடுங்கி யுருட்டி மூங்கிலினது பூக்களையுடைய அசையாநின்ற கொம்புகள் தனிப்ப வேரைக் கிழித்து ஆகாயத்தைத் தீண்டிய நெடிய மலையிடத்து ஆதித்தனைப் போல வட்டமாகத் தொடுக்கப்பட்ட தட்பத்தையும் நறுநாற்றத்தையும் உடைத்தாகிய விரிந்த தேன்கூடு கெட, நல்ல பலவாகிய;*

*ஈரப் பலாக்களின் முற்றிய சுளைகள் கலக்க மிகவும் உயர்ந்த விடத்திலுண்டான சுரபுன்னையினது நறு நாற்ற மிக்க பூக்களுதிரக் கருங்குரங்குடனே இருள்நிறம் பொருந்திய முகத்தையுடைய முசுக்களின் கடுவன்களும் நடுங்கப் பொலிவு பெற்ற நெற்றியினையுடைய பெரும் பிடியானைகள் நடுங்கும்படி திரையை வீசிப் பெரிய களிற்றானையின் முத்தினையுடைய வெள்ளிய கொம்புகளை யுட்கொண்டு குதித்து;*

*நல்ல அழகு மிக்க மாணிக்கமணிகள் ஒளி விளங்கும்படி பொற் கொடிகளைத் தெள்ளி வாழையினது பெருத்த முதல் துணியவும் தெங்கினது இளநீரின் சீறிய குலைகள் உதிரவும் மோதி மிளகுக் கொடியின் கரிய கொத்துக்கள் சாயப் புள்ளிகளையுடைய மேற்புறத்தையும் மடப்பம் பொருந்திய நடையினையுமுடைய மயில்கள் பலவும் ஒரு சேரப் பயந்து காட்டும் கோழியின் வலிமையுள்ள பெடையானது கெட்டோடும்படி பன்றியுடனே;*

*உள்ளில் வெளிற்றினையுடைய பெரிய பனையின் புன்மையாகிய செறும்பினைப் போன்ற கருநிற மயிரால் மிக்க உடம்பினையும் வளைவாகிய அடியினையுமுடைய கரடி பெரிய கற்பிளப்பின் முழைகளிலே செறியும்படி நீரை வீசிக் கரிய கொம்புகளையுடைய காட்டுப் பசுக்களின் நல்ல ஏறுகள் சிலைத்துக் கொண்டு நிற்ப (முழங்க) மலையின் உச்சியிலே இருந்து இழுமென்னும் ஓசையுண்டாக ஒழுகுகின்ற அருவியை உடையதாய்ப் பழங்கள் முற்றுப் பெற்ற சோலைமலைக்குரியவனாய் உள்ளவனே!*

**5. பரிதியார்**

*அலங்குசுனை - (பா-ம்) பல்துகிலின் - பலவாகிய பூங்கொடிகளை யெல்லாம்.*

*பொன் - பொன்னினது ரவை. தாழை மரங்கள் மடல் சிதறி விழ. இளநீர் விழுக்குலை - இளநீர்க் கொத்து. மடநடை - அன்னங்கள். தாக்கி - தென்னை மரங்களைத் தாக்கி. கோழி வயப்பெடை இரிய - சேவலும் பெடையும் பயந்தோட.*

*பெருங்கல் விடரளை - பெருங்கல்லுப் பிளந்த குகையிடுக்கில்; செறிய - போய்க் கிடக்கும்படி; சேண் - ஆகாயத்தை அளாவி இருக்கும் மலையுச்சி, இழிதரும் அருவி - தாழ வழிந்தொழுகிப் பெருகிய அருவி, பழமுதிர் - கிழவோனே - முதிர்ந்த பழங்கள் பொருந்திய சோலைகளையுடைய பழமுதிர் சோலை வரையிலே எழுந்தருளிய பெரியவனே என்றவாறு.*

**6. கு. சுந்தரமூர்த்தி உரைத்திறன்**

*சினைபுலம்ப - சினைதனிமையுற என உரை காண்பர் நச்சினார்க்கினியரும், கவிப்பெருமாளும். 'புலம்பே தனிமை' என்னும் தொல்காப்பியமும் உரையாசிரியர் நடுங்க என உரை காண்பர்.*

*மடநடை - இதனை மயிலுக்கு அடைமொழியாகவே பலரும் காணப் பரிதியார் மட்டும் அன்னம் என உரை காண்பர்.*

*பரிசில் நல்கும் மதி - இங்கு மதி என்பது அசை நிலையாய் வந்தது என்பர் நச்சினார்க்கினியர். உரையாசிரியரும் கவிப்பெருமாளும் இக்கருத்தினரே. பரிமேலழகர் பரிசில் நல்கும் மதிபலவுடன் என்பது வரை பொருள் அமைவு பெறும் தொடராகக் கொண்டு அறிவுகளை பலவுடனே மேம்பட்ட பெறுதற்கரிய பரிசில்களை அளித்தருள்வன் என உரைகாண்பர். பரிதியாரும் இக்கருத்தினராவர்.*

*பழமுதிர் சோலை - பழங்கள் முற்றின சோலை என உரைகாண்பர் நச்சினார்க்கினியர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் அனைவரும். உரையாசிரியர் மட்டும் பழம் உதிர் சோலை எனப்பிரித்து நற்கனிகள் உதிரப்பட்ட சோலை எனக் கூறுவர்.*

## கி.வா. ஜகன்னாதன்

### முருகன் உறையும் இடங்கள்

*திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம் என்னும் நான்கு படைவீடுகளைப் பற்றிச் சொல்லிப் பிறகு எல்லாக் குன்றுகளையும் ஒரு தொகையாகக் கூறிய நக்கீரர் கடைசிப் படைவீடாகிய பழமுதிர் சோலையைப் பற்றிச் சொல்ல வருகிறார் எந்த நூலுக்கும் ஒரு தொடக்கம், நடு, முடிவு என்று மூன்று பகுதிகள் இருக்கும். ஒரு புலவனுக்கு மற்றொரு புலவன் வழி காட்டுவதாக அமைந்தது திருமுருகாற்றுப்படை. அந்தப் புலவனை விளித்து, "நீ முருகன் திருவடியை அடையவேண்டும் என்ற ஆர்வத்தோடு புறப்பட்டிருக்கிறாயே; நல்ல காரியம் அப்பா. நீ உறுதியாக அவன் திருவருளைப் பெறுவாய்" என்று முன்னே கூறிப் பிறகு அவன் இருக்கும் இடங்களைச் சொலலத் தொடங்கினார் நக்கீரர். இந்த முன்னுரையையும் முதற்படை வீடாகிய திருப்பரங்குன்றத்தையும் இணைத்துச் சொன்னார் இடையில் மற்றப் படைவீடுகளையும் சொன்னார்.*

*இறுதியில் நூலை முடிக்க வேண்டும் அல்லவா? "நான் சொன்ன இந்தத் தலங்களோடு வேறு பல இடங்களிலும் முருகன் எழுந்தருளியிருக்கிறான். நீ எங்கே உன் அன்பின் திறத்தால் அவனைக் காண முடிகிறதோ அங்கே உள்ளம் உருகி அவனைத் துதிப்பாயாக. உன்னுடைய உண்மை அன்பு நிலையை அவன் உணர்ந்து உனக்குக் காட்சி தந்து யாரும் பெறுதற்கரிய பரிசாகிய பேரின்பத்தைத் தருவான்" என்று கூறி நிறைவேற்ற வேண்டும். அதை ஆறாவது படைவீடாகிய பழமுதிர்சோலையைப் பற்றிச் சொல்லும் இறுதிப் பகுதியில் அமைக்கிறார். முன்பு இன்ன தலத்தில் இருப்பதற்குரியவன் என்று சொன்னவர், அதே வாய்ப்பாட்டில் பழமுதிர்ச் சோலையைச் சொல்லவில்லை. பழமுதிர் சோலை மலையில் எழுந்தருளியிருக்கும் முருகன் உனக்குப் பெறலரும் பரிசாகிய இன்பத்தைத் தருவான், என்ற முறையில் கூறி, நூலை முற்றுவிக்கிறார்.*

*இந்த இறுதிப் பகுதியில் முருகன் உறையும் பல்வேறு இடங்களையும், அவனை ஏத்தும் முறையையும், அவன் காட்சிதரும் சிறப்பையும் கூறிவிட்டுப் பழமுதிர்ச்சோலை மலையின் இயற்கை வளத்தை வருணிக்கிறார்.*

### திருவிழா நடைபெறும் இடம்

*முருகன் தனக்கென்று கோயில் கட்டி வழிபடும் இடங்களில் உறைந்து அன்பர்களுக்கு நன்மை செய்கிறான். அந்த இடங்களில் மட்டுந்தானா அவன் இருக்கிறான்? அவன் பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தன். அவன் கண்ணைக் கவரும் அழகுருவம் படைத்தவன். அழகு*

ததும்பும் இடங்களிலெல்லாம் அழகனாகிய முருகனுடைய மணம் கமழும், மலர்களையும் மற்றப் பண்டங்களையும் வைத்து நடத்தும் விழாக்களில் அவன் சாந்நியத்தியத்தைக் காணலாம்.

தமிழ்நாட்டில் பொதுவாக விழா என்றாலே தெய்வத்துக்குச் செய்யும் திருவிழாவைத்தான் குறிக்கும். விழாவில் நறுமணப் பொருள்களுக்கு மலரும் எங்கும் பரவிச் சிதறிக் கிடக்கும், மக்கள் இனிய உணவுகளை உண்டு விருந்து அயர்வார்கள். அழகாக இருக்கும் இடத்தை 'இது விழாக்களத்தைப் போல இருக்கிறது' என்று கூறுவது புலவர்கள் வழக்கம். மகிழ்ச்சியையும் வளப்பத்தையும் தெய்வ உணர்ச்சிகளையும் கொண்டு விளங்குவது விழா.

ஒவ்வோர் ஊரிலும் விழா நடக்கும். அந்தத் தெய்வத்திற்கு ஏற்பத் தனித்தனியே சில முறைகள் உண்டு. சிறிய சிறிய ஊர்களில் முருகனுக்கு விழா எடுக்கிறார்கள். குறிஞ்சி நிலக் கடவுளாகிய அவனுக்கு அந்நிலத்தில் விளையும் தினையரிசியில் விருப்பம் அதிகம். தேனும் தினைமாவும் வள்ளிநாயகி தர உண்டவன் அல்லவா? ஆதலால் அவனை வழிபடும்போது தினையரிசியைக் கொண்டு வழிபடுகிறார்கள். நாம் அட்சதையையும் மலரையும் கலந்து வைத்து வழிபடுகிறோம். மலை நாட்டினர் தினையரிசியையும் பூவையும் விரவி வைத்துப் பூசிக்கிறார்கள். அந்த நிலத்து வழக்கப்படி ஆடுவெட்டிப் பூசைப் போடுகிறார்கள். விழா ஆரம்பிக்கும் முன்பே கொடியேற்றம் நடக்கிறது. எங்கே விழா நடைபெறுகிறதோ அங்கே முதலில் கோழிக் கொடியை நட்டு விழாவுக்குரிய அமைப்பை உண்டாக்குகிறார்கள். இப்படி ஒவ்வோர் ஊரிலும் நடைபெறுகிறது. அந்த விழாக்களை நடத்துவோருடைய அன்பை உணர்ந்து முருகன் அவ்விடங்களில் எழுந்தருளி நலம் செய்கிறான். அங்கே அவனைக் காணலாம்.

சிறுதினை மலரொடு விரைஇ, மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்

(சிறிய தினையரிசியைப் பூக்களோடு கலந்து வைத்து, ஆட்டை அறுத்து, கோழிக்கொடியோடு விழாவுக்குரிய களத்தை நிறுவி ஒவ்வோர் ஊரிலும் நடத்த மேற்கொண்ட சிறப்புப் பொருந்திய விழாக்களிலும் - முருகன் உறைவான் என்று சொல்ல வருகிறார்.

விரைஇ - விரவி; கலந்து. மறி - ஆடு, வாரணக்கொடி - கோழிக்கொடி. வயின்பட இடம் உண்டாக. நிறீஇ - நிறுவி; அமைத்து).

தினை என்பதற்குப் பிரப்பரிசி என்று உரை கூறுவர் நச்சினார்க்கினியர்.

இது ஊரார் எல்லாம் சேர்ந்து நடத்துகிற விழா. பல காலமாக ஆண்டு தோறும் வழக்கமாக இந்த விழா நடந்து வருகிறது. மக்கள் திரள் திரளாகக்

கூடி விழாவைக் கண்டு களிக்கிறார்கள்; முருகனை வழிபடுகிறார்கள். இவர்கள் பக்தி ஓரளவுதான்.

## பக்தர்கள் ஏத்தும் இடம்

ஆனால் விழாவை எதிர்பாராமல் எப்போது முருகனை நினைந்து உருகி வாழ்த்தும் பக்தர்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய அன்பு உயர்ந்தது. அவர்கள் முருகனுடைய அருளுக்காக ஏங்கி நிற்பவர்கள். அவன் அருளைப் பெற வேண்டும் என்ற பேரார்வம் உடையவர்கள் மற்றப்பொருள்களிடத்தில் விருப்பம் கொள்ளாமல் அவன் அருளொன்றையே பெறும்பொருட்டு ஏசற்று நிற்பவர்கள். அவர்கள் அன்பு சாமானியமானது அன்று. அது முறுகிய அன்பு ஆர்வம் என்பது அன்பு முறுகிய நிலை.

"அன்பீனும் ஆர்வமுடைமை"

என்று திருவள்ளுவர் ஆர்வம் அன்பு கனிந்த பிறகு உண்டாவது என்று சொல்கிறார்.

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக" என்பது ஆழ்வார் திருவாக்கு. அன்பு பொதுவானது. ஆர்வம் சிறப்பானது. அன்பு இலையானால் ஆர்வம் மலராகும். அன்பு மலரானால் ஆர்வம் காயாகும். அன்பு காயானால் ஆர்வம் கனியாகும், விழாவில் இறைவனைத் தரிசிக்கும் அன்பர்கள் பலர் கூடுகிறார்கள். ஆனால் ஆர்வமுடையவர்கள் எல்லாக் காலத்திலும் அவனை நினைந்து உருகி அவன் அருளைப்பெறுவதே குறிக்கோளாக நிற்பார்கள். அன்புடையவரை அன்பர் என்றும், ஆர்வம் உடையவர்களை ஆர்வலர் என்றும் சொல்வர். அன்பர்கள் பக்தர்கள்; ஆர்வலரோ முறுகிய பக்தர்கள். திருச்சீரலை வாயைச் சொல்லும் பகுதியில் முருகனுடைய ஆறு திருமுகங்களைச் சிறப்பிக்கும் இடத்தில், அவனுடைய முகம் ஒன்று ஆர்வலர்களுக்கு வரம் கொடுப்பது என்று முன்பே சொன்னார்.

"ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரங்கொடுத் தன்றே"

அங்கே ஆர்வலர் என்ற சொல்லைக் கண்டோம். மறுபடியும் இப்போது ஆர்வலர்களை நினைக்கிறார் நக்கீரர். முறுகிய பக்தர்களாகிய ஆர்வலர்கள் எங்கெங்கே எவ்வெப்போது துதித்து வழிபடுகிறார்களோ, அந்த அந்த இடங்களில் முருகன் சென்று அருள்தர முந்துவான்.

செங்கேழ் அடுத்த சினவடி வேலும் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்

*கொங்கே தரளம் சொரியும்செங் கோடைக் குமரனென*
*எங்கே நினைக்கினும் அங்கேவந் தென்முன் எதிர்நிற்பேனே*

*என்று அருணகிரியார் கந்தர் அலங்காரத்தில் பாடுகிறார்.*

*விழா எடுக்கும் களங்களில் பொதுவான நிலையில் எழுந்தருளும் முருகன். தன் அருளன்றி வேறு நோக்கமின்றி ஏங்கும் ஆர்வலர்கள் வழிபடும் இடங்களிலும் இருப்பான்.*

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்

*(அன்பு முறுகி ஆர்வமாகிய ஆர்வலர்கள் துதித்து வழிபட விரும்பிச் செல்லும் இடங்களிலும்).*

## வெறி அயர் களன்

*முருகனைப் பூசிப்பதே தொழிலாக உடையவன் வேலன். அவன் தன் கையில் வேலை வைத்துக்கொண்டு ஆடுவதனால் வேலன் என்று பெயர் பெற்றான். அந்தப் பூசாரி கோயிலில் பூசை செய்வான். யாருக்கேனும் தீங்கு வந்ததானால் அதை மாற்றுவதற்கு அவர்கள் வீட்டுக்கே சென்று பூசை போடுவான். அவன் ஆட்டுக்கிடாயை வெட்டிச் செய்யும் பூசைக்கு வெறியாட்டு என்று பெயர். அவன் எங்கே பூசை போட்டாலும் அங்கேயும் முருகன் எழுந்தருளுவான்.*

வேலன் தைஇய வெறிஅயர் களனும்

*(பூசாரி அமைத்த வெறியாடுகின்ற இடத்திலும், தைஇய - அலங்கரித்து அமைத்த, வெறி - ஆட்டை அறுத்துச் செய்யும் பூசை, களம் - இடம்).*

*"வேலன் புனைந்த வெறியயர் களம்" (குறுந்தொகை, 53)*

*"வேலன் வெறியயர் வியன்களம்" (அகநானூறு, 98)*

*"வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து" (சிலப்பதிகாரம்)*

*என்று பழைய நூல்கள் இந்த வெறியயர் களத்தைப் பற்றிக் கூறுகின்றன.*

*'பிள்ளையார் வேலைத் தனக்கு அடையாளமாகக் கொண்டு திரிதலின் வேலன்' என்றார் என்று நச்சினார்க்கினியர் விளக்குவார்.*

*பலமக்கள் கூடி விழா எடுக்கும் இடம், அன்பிற் சிறந்தவர்கள் தனியே இருந்து வழிபடும் இடம்,*

*பூசையையே தொழிலாகக் கொண்ட பூசாரி பூசை போடும் இடம்*

*என்ற மூன்றும் முருகனை நினைப்பூட்டுவதற்குரிய செயற்கை வடிவங்களையோ, படிமங்களையோ உடையவை. இவற்றைச் சொல்லிவிட்டு, அழகுள்ள இயற்கையான இடங்களிலும், மக்கள் செயற்கையாக அமைத்த அழகிய இடங்களிலும் முருகன் எழுந்தருளியிருக்கிறான் என்று சொல்ல வருகிறார் நக்கீரர்.*

## இயற்கையிலும் செயற்கையிலும்

*இயற்கை யெழில் நிரம்பியது காடு; அடர்ந்த மரச் செறிவும், மலரும் காயும் கனியும் குலுங்கும் வளமும் உடையது. அது மழையின் உதவியால் இயற்கையாக வளர்வது மலைக் காடானாலும், முல்லை நிலத்துக் காடானாலும் முருகன் அங்கே எழுந்தருளியிருப்பான்.*

*மக்கள் தங்கள் ஊரைச் சார வளர்ப்பது சோலை - தாங்கள் விரும்பிய மரங்களை நட்டு வளர்த்து, வேண்டும் போது அங்கே சென்று இளைப்பாறுவார்கள். ஊர்கள் தோறும் சோலைகள் இருப்பதும், அங்கே சென்று தங்கி மாதரும் ஆடவரும் இன்புறுவதும் சிறந்த நாகரிக வாழ்வுக்கு அடையாளங்கள். பொழிலாட்டு என்பது சிறந்து சமுதாயத்துக்குரிய விளையாட்டு. காவியங்களில், மக்கள் சோலையில் சென்று மனம் போனபடி மகிழ்ச்சியுடன் விளையாடுவதைப் புலவர்கள் வருணிப்பார்கள். கம்பரும் பொழிலாட்டுப் படலத்தை அமைத்திருக்கிறார். காப்பியங்களுக்குரிய இலக்கணங்களில் ஒன்று அது. ஆகவே, வளவாழ்வு பெற்றவர்கள் மகிழ்ந்து தங்குவதற்காகத் தாமே விரும்பி அழகுபெற அமைப்பது சோலை; அதைக் கா என்று சொல்வர்.*

*இயற்கையில் அமைந்த காட்டிலும், மக்கள் விரும்பிச் செயற்கையாக அமைத்துக்கொண்ட காவிலும் முருகன் எழுந்தருளியிருக்கிறான்.*

*ஆற்றின் நடுவிலே சில திட்டுகள் நிரந்தரமாக அமைந்திருக்கும். அவை மிகவும் வளப்பமாக இருக்கும். கடலுக்கு நடுவிலே இருப்பதைத் தீவென்றும் ஆற்றுக்கு நடுவிலே இருப்பதைத் துருத்தி என்றும் கூறுவது மரபு. இன்றும் மலையாளத்தில் கழிகளுக்கு நடுவே உள்ள இடங்களைத் துருத்தி என்று சொல்கிறார்கள். துருத்தியும் மரங்கள் அடர்ந்து வளம் பெற்று நிலவும். அங்கும் முருகன் எழுந்தருளியிருப்பான். காடு, சோலை, ஆற்றிடைக் குறையாகிய துருத்தி என்ற மூன்றும் அழகு தவழும் இடங்கள். அங்கே முருகன் எழுந்தருளியிருக்கிறான்.*

காடும் காவும் கவின்பெறு துருத்தியும்

*(இயற்கையாக வளர்ந்த காடுகளிலும், மக்கள் வளர்க்கும் சோலைகளிலும், அழகுபெற்ற ஆற்றுக்கு நடுவில் உள்ள இடங்களிலும்),*

*இன்னும் முருகன் எங்கே இருக்கிறான்?*

*மரங்கள் அடர்ந்த இடங்களைச் சொன்னார். அவை வளர்வது புனலாலே அல்லவா? காடும் காவும் துருத்தியும் நீர் வளத்தால் அழகு பெறுகின்றன. அந்த நீரையுடைய நீர் நிலைகளிலும் இயற்கையானவையும் செயற்கையானவையும் உண்டு. ஆறுகள் இயற்கையாக அமைந்தவை. குளங்கள் மக்கள் வேண்டும் இடங்களில் வெட்டிக் கொண்டவை. இயற்கையானாலும் செயற்கையானாலும் அவ்விடங்களில் வெம்மையைப் போக்கித் தண்மை தந்த தாகம் தீர்த்துப் பயிரை வளர்க்கும் நீர் நிரம்பி இருக்கிறது. அங்கே அருள் தண்மை நிரம்பிய முருகன் மறைந்து உறைகிறான்.*

*இயற்கையும் செயற்கையுமாக அழகு மலிந்து விளங்கும் இடங்கள் எத்தனை எத்தனையோ உண்டு. அவற்றை எல்லாம் தனித்தனியே சொல்லிக்கொண்டு செல்ல நேரம் இல்லை. இப்போது சொன்னவற்றைப் போன்ற வேறு பல இடங்களிலும் முருகன் தெய்வீகம் தோற்ற இருந்து விளங்குகிறான்.*

யாறும் குளனும் வேறுபல் வைப்பும்

*(இயற்கையான ஆற்றிலும், மக்கள் வெட்டிய குளத்திலும், இவை போன்ற வேறு பல இடங்களிலும்)*

*இனி மக்கள் செறிந்து வாழும் இடங்களுக்கு வருவோம். பெரிய ஊர்களில் பல தெருக்கள் இருக்கின்றன. அவை கூடுகின்ற இடங்கள் உண்டு. அவற்றைச் சந்தி என்று சொல்வது வழக்கம். தெருக்கள் சந்திக்கின்ற இடம் ஆதலின் சந்தி யென்ற பெயர் வந்தது. மூன்று தெருக்கள் கூடும் இடம் முச்சந்தி. நான்கு தெருக்கள் கூடும் இடம் நாற்சந்தி; அதைச் சதுக்கம் என்று தனியே பெயரிட்டு அழைப்பர்; சதுக்கம் என்ற வட சொல்லே அப்படியாயிற்று. ஐந்து தெருக்கள் கூடும் இடம் ஐஞ்சந்தி. பெரிய நகரங்களில் இவ்வாறு பல தெருக்கள் கூடும் இடங்கள் உண்டு. சில சந்திகளில் தெய்வங்களை நிறுவியிருப்பதும் உண்டு. காவிரிப்பூம்பட்டினத்தில் நான்கு தெருக்கள் கூடும் ஓரிடத்தில் ஒரு பூதத்தை நிறுவியிருந்தார்கள். அதற்குச் சதுக்கப் பூதம் என்று பெயர். சீகாளத்தியில் ஐஞ்சந்தி விநாயகர் என்று ஒரு மூர்த்தி இருக்கிறார். ஐந்து தெருக்கள் கூடிய இடத்தில் இருந்தவராதலின் அந்தப் பெயரை பெற்றிருக்க வேண்டும்.*

*இப்பொழுதெல்லாம் நகரங்களில் இத்தகைய சந்திகளில் நிற்பவர்கள் போலீஸ்காரர்கள், வண்டிகளின் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்காக அவர்கள் நிற்கிறார்கள்.*

*இந்த எல்லாச் சந்திகளிலும் முருகனுடைய அருளோட்டம் இருக்கிறது. அவன் அவ்விடத்தில் இருக்கிறான். அவனும் பெரிய காவற்காரன்தானே?*

*முருகன் கடம்ப மலர்மாலையை அணிபவன்; ஆதலின் கடம்பன் என்ற திருநாமம் அவனுக்கு அமைந்தது. புதிய பூவை உடைய கடம்ப மரமே முருகனுக்கு உகந்த இடந்தான். அதில் அவன் எழுந்தருளியிருப்பான்.*

**சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்**

*(நான்கு தெருக்கள் கூடும் சதுக்கத்திலும், மூன்று தெருக்கள் ஐந்து தெருக்கள் முதலியவை கூடும் சந்தியிலும், புதிய பூவையுடைய கடம்ப மரத்திலும்),*

*முருகன் கடம்ப மரத்தில் உறைபவன் என்பதை வேறு நூல்களும் சொல்கின்றன.*

*"கடம்பமர் நெடுவேள்"*

*என்பது* ***பெரும்பாணாற்றுப்படை,***

***"கடம்பமர்ந்து"***

***"கடம்பமர் அணிநிலை"***

***என்பன பரிபாடலில்** வரும் பகுதிகள்.*

***"செல்வக் கடம்பமர்ந்தான்"***

***என்று ஐந்திணை ஐம்பதும்,***

***"கடம்பமர் மன்றற் றொங்கற் கந்தன்"***

***என்று பழைய திருவிளையாடற் புராணமும்,***

***"கடம்பமர் காளை"***

***என்று தேவாரமும், கந்த புராணமும்** கூறுகின்றன.*

*நடந்து செல்லும் மக்கள் கூடும் சந்திகளைச் சொன்னவர். மக்கள் கூடும் வேறு இடங்களையும் சொல்ல வருகிறார். சிறிய ஊர்களில் ஊருக்கு நடுவே ஒரு மரமும் அதைச் சுற்றி மேடையும் இருக்கும். அங்கே ஊர்க்காரர்கள் கூடி நியாயம் பேசுவார்கள். உண்மையையே பேசுவார்கள்; பொய் பேச அஞ்சுவார்கள். அந்த இடம் தெய்வத்தன்மை உடையது என்று அஞ்சியே பொய் பேசமாட்டார்கள். அத்தகைய இடத்துக்கு மன்றம் என்று பெயர். மக்கள் கூடும் அந்த இடமும் முருகனுடைய ஆட்சி சிறப்பாக நிலவும் இடம்.*

*அது போலவே நகரங்களில் பலரும் கூடும் இல்லங்கள் உண்டு. அவற்றை அம்பலம் என்றும் பொதியில் சொல்வார்கள், எல்லோரும் பொதுவாகக் கூடிப் பேசும் இல்லாதலின் பொதியில் என்ற பெயர் வந்தது; பொது இல் என்ற இரண்டு சொற்கள் இணைந்த வடிவமே பொதியில் என்பது. அங்கும் முருகன் திருவருள் மணக்கும்.*

*பழங்காலத்தில் சிறு கம்பங்களையும், முளைகளையும் நட்டு அவற்றையே தெய்வமாக வழிபட்டு வந்தார்கள். அவற்றைக் கந்து அல்லது கந்தம் என்று சொல்வார்கள். கந்து என்பதற்கு நடுதறியென்றும் பற்றுக் கோடென்றும் பொருள். சிவலிங்கம் எப்படி அருவம், உருவம் என்ற இரண்டையும் இணைத்த அருவுருவமோ அது போன்றதே அந்தக் கந்து. கன்றாப்பூர் என்ற திருத்தலத்தில் இறைவன் நடுதறியாகவே காட்சியளிக்கிறான்.*

*"கன்றாப்பூர் நடுதறியைக் காண லாமே"*

*என்பது தேவாரம்.*

*இவ்வாறு கந்தை நட்டு வழிபடும் இடம் கந்துடை நிலை. அங்கேயும் கந்தன் எழுந்தருளியிருப்பான்.*

மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையிலும்

*(மரத்தடியிலுள்ள மன்றத்திலும், பொதுவாகப் பலர் கூடும் சபையிலும், கந்தை வழிபடும் இடத்திலும்).*

*கந்து என்பதற்கு ஆதீண்டு குற்றி என்று நச்சினார்க்கினியர் பொருள் உரைத்தார்.*

*இவ்வாறு முருகன் இயற்கை யெழில் தவழும் இடங்களிலும், செயற்கை யழகுடைய இடங்களிலும், மக்கள் நடக்கும் இடங்களிலும், ஒன்று கூடித் தங்கும் இடங்களிலும், கந்து நட்டு வழிபடும் இடங்களிலும் எழுந்தருளியிருக்கிறான். அழகு, ஒற்றுமை, இயக்கம், நியாயம், வழிபாடு, மணம் ஆகியவை உள்ள இடங்களிலெல்லாம் முருகன் இருந்து அவற்றை இலங்கச் செய்கிறான்.*

*முன்னே கூறிய இடங்களில் சிலவற்றைப் பிற நூல்களும் சொல்கின்றன.*

*"ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்<br>கால்வழக் கறுநிலைக் குன்றமும் பிறவும்<br>அவ்வவை மேய வேறுவேறு பெயரோடு<br>எவ்வயினோயும் நீயே"*

*என்று பரிபாடல் பாராட்டுகிறது.*

*"துறையும் ஆலமும் தொல்வலி மரா அமும்<br>முறையுளிப் பராஅய்ப் பாய்ந்தனர்"*

*என்பது கலித்தொகை.*

*மேலே சொன்ன இடங்களில் முருகன் எழுந்தருளியிருப்பதாகக் கருதி அன்பர்கள் வழிபடுவது உண்டு.*

*இவற்றைக் கூறிவிட்டு மேலே குறமகள் செய்யும் வழிபாட்டை விரிவாகச் சொல்லப் புகுகிறார் நக்கீரர்.*

## குறமகள் செய்யும் பூசை

*முருகனுக்கு மிகவும் விருப்பமான இடம் குறிஞ்சி நிலம். மலைகளிலும் அவற்றைச் சார்ந்த இடங்களிலும் அவனை வழிபடுபவர்கள் மிகுதி. குறிஞ்சி நிலத்து ஊர்களில் உள்ள பூசாரியாகிய வேலன் அவனை வழிபடுவதை நக்கீரர் முன்பு சொன்னார். இப்போது பூசாரிச்சியாகிய குறமகள் பூசை போடுவதை வருணிக்க வருகிறார்.*

*பூசாரிச்சியைத் தேவராட்டி என்றும் சொல்வதுண்டு. தெய்வம் ஆவேச உருவத்தில் அவள்மேல் வந்து அருள் செய்யுமாம். அதனால் அந்தப் பெயர் உண்டாயிற்று. அவள் மிகவும் பக்தியுடனும் விரத ஒழுக்கத்துடனும் இருந்து முருகனை வழிபட்டுப் பிரத்தியட்சமாக அவனை வருவிக்கிறாள்; தன் மேல் ஆவேசிக்கும்படி செய்கிறாள். அவள் செய்யும் வழிபாட்டையும் வெறியாட்டு என்று சொல்வார்கள்.*

### கொடியேற்றம்

*இதோ, குறமகள் முருகனை வரும்படி செய்யப் போகிறாள். அதைக் கண்டு தம் தம் குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகக் குறிஞ்சி நில மக்கள் அத்தனை பேரும் கூட்டமாகக் கூடியிருக்கிறார்கள். முருகனுக்குப் பெரிய திருவிழாவே நடைபெறுகிறது.*

*திருவிழாவில் முதலில் செய்ய வேண்டுவது கொடியேற்றம். இங்கும் முதலில் கொடியேற்றம் நடைபெறுகிறது. முருகனுடைய கொடி கோழி. சேவலுக்கு கொண்டை அழகாக இருக்கும். கொண்டை அசைய அசையச் சேவற்கோழி நடந்து வருவதே ஒரு சிறப்பாக இருக்கும். கொண்டையினால் மாட்சி பெற்ற தலையையுடையது சேவல். அந்தக் கொடியை இப்போது ஏற்றுகிறார்கள். வெறும் கொடியை மட்டும் ஏற்றினால் போதுமா? திருவிழாவுக்கு ஏற்ற வகையில் அலங்காரம் செய்கிறார்கள். தோரணம், பூ மாலை எல்லாவற்றையும் கட்டுகிறார்கள். முருகன் திருக்கோயிலுக்கு முன் வெறுவெளியாக இருந்த இடம் இப்போது விழாக் கோலத்துடன் பொலிகிறது. விழாவுக்குப் பொருத்தமானபடி எல்லாவற்றையும் செய்திருக்கிறார்கள்.*

**மண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர.**

*(மாட்சிமைப்பட்ட தலையையுடைய கோழிக் கொடியோடு மற்ற அலங்காரங்களையும் செய்து பொருத்தமாக அமையும்படி.*

*மண்ணி - அலங்கரித்து. 'ஆண்டலைக்கொடி' என்று பிரித்து, பேய் முதலியவை வராமல் பாதுகாப்பாக இருக்கும்படி ஆடவனது தலையும்*

பறவையின் உடம்பும் உடைய உருவத்தை எழுதிய கொடி என்றும் பொருள் கொள்வது உண்டு. ஆண்டலைக் கொடி என்பதற்கு மயிற்கொடி என்று ஓர் உரையாசிரியர் உரை எழுதியிருக்கிறார்).

### ஆராதனை

தெய்வங்களுக்கு உகந்தது வெள்ளைக்கடுகு. கடவுளை வழிபடும் இடங்களில் அதை அரைத்துப் பூசுவது வழக்கமென்று பழைய நூல்கள் சொல்லுகின்றன. வெள்ளைக் கடுகை அரைத்து நெய்யோடு குழப்பி அங்கங்கே பூசுவார்களாம். தெய்வம் இருப்பதாக எண்ணும் வாசல் நிலை முதலிய இடங்களில் அதை அப்புவார்கள். இப்போது மஞ்சளும் குங்குமமும் இடும் வழக்கம் இருப்பது போன்றது அது.

"ஐயவி அப்பிய நெய்யணி நெடுநிலை" (86)

என்று நக்கீரர் தாம் இயற்றிய **நெடுநல்வாடை** என்ற நூலில் கதவுநிலையைச் சொல்கிறார். ஐயவி என்பது வெள்ளைக் கடுகு.

இங்கும் வாசற் கால்களிலும் மற்ற இடங்களிலும் தெய்வ சாந்நித்தியத்தின் பொருட்டு நெய்யையும் அரைத்த கடுகையும் அப்புகிறார்கள். அப்படி அப்பும்போது முருகனுடைய திருநாமங்களையும் மந்திரங்களையும் மெல்லச் சொல்கிறார்கள். பக்தியுடன் இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள். இவ்வாறு செய்யும் இடங்களுக்கெல்லாம் ஒரு கும்பிடு போடுகிறார்கள். அழகிய மலர்களைத் தூவுகிறார்கள்.

இப்போதும் திருக்கோயில்களில் அங்கங்கே உள்ள பலிபீடங்களுக்கும் மற்ற இடங்களுக்கும் சுவரில் உள்ள திருவுருவங்களுக்கும் எண்ணெய் தடவி அபிஷேகம் செய்து கும்பிட்டுப் பூசிக்கிறார்கள். அப்படியே மலை நாட்டுக் கோயிலிலும் எங்கெங்கே கடவுள் உறைவதாக வழிவழியே நம்பி வருகிறார்களோ அங்கெல்லாம் இந்த நெய்யும் ஐயவியும் பூசிப் பூசிக்கிறார்கள்.

இக்காலத்தில் சில தலங்களில் உள்ள மூர்த்திகளுக்கு நீரால் அபிஷேகம் செய்வதில்லை. பூனுகு பூசுவார்கள். அதுபோல அந்தக் காலத்தில் சுவர்களிலும் தூண்களிலும் உள்ள உருவங்களுக்கு ஐயவியும் நெய்யும் கலந்து பூசிப் பூத்தூவி வழிபடுவார்கள் என்று தோன்றுகிறது. இந்தக் கலவையினால் அந்த உருவங்களுக்குக் காற்றாலும், வெயிலாலும், மழையாலும் ஊறுபாடு நேராமல் இருக்கும் போலும்!

**நெய்யொடு ஐயவி அப்பி ஐதுஉரைத்துக்**
**குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி**

(நெய் அல்லது எண்ணெயோடு வெண்சிறு கடுகையும் அப்பி,

*மெல்லியதாக மந்திரத்தைச் சொல்லிக் கை கூப்பி வணங்கி வளப்பமிக்க மலர்களைத் தூவி அருச்சித்து*

*நெய் என்பது எண்ணெய்க்குப் பெயர். ஐயவி - வெண் சிறு கடுகு. ஐது - மெல்லிதாக. குடந்தம்படுதல் - கும்பிடுதல்)*

*ஐது உரைத்து என்பதற்கு, 'தான் வழிபடுவதற்குரிய மந்திரத்தைத் தோன்றாமல் உச்சரித்து' என்று உரை எழுதுவர் நச்சினார்க்கினியர். 'சிறிது மந்திரங்களையும் ஓதி' என்பது வேறு ஓர் உரை. மந்திரங்களை வெளிப்படையாகச் சொல்லுதல் கூடாது.*

*குடந்தம்படுதல் - கையைக் குவித்து வணங்குதல், அஞ்சலி செய்தல். "நால்விரல் முடக்கிப் பெருவிரல் நிறுத்தி, நெஞ்சிடை வைப்பது குடந்த மாகும்" என்பது ஒரு பழைய சூத்திரம். குட என்பது வளைவை உணர்த்தும் உரிச்சொல். கையை வளைத்துச் செய்யும் வழிபாட்டுக்குக் குடந்தம் என்னும் பெயர் வந்தது. இது மிகவும் அருமையாக வழங்கும் சொல்.*

*"குடந்தம் பட்டுச் சூழ்போந்து குழைந்து வழுத்தி"*

*என்று **கூர்ம புராணக்காரர்** இந்தச் சொல்லை ஆளுகிறார்.*

***திருவிழாவில் இனிமேல்தான் தேவராட்டி வந்து பூசை செய்யப் போகிறாள். அதற்கு முன்ஏற்பாடாக இவை யாவும் நடக்கின்றன. எங்கே பார்த்தாலும் தெய்வத்தை நினைக்கச் செய்யும் காட்சிகள்; மணம்.***

## குறமகள் வருகை

***முருகனுடைய பூசையை நடத்தும் குறமகள் இதோ வருகிறாள். முருகன் ஆவேச உருவத்தில் வந்து விளையாடுவதற்கு இடமாகிய பண்புடையவள் அவள். அவளைக் கண்டாலே குறிஞ்சி நில மக்களுக்கெல்லாம் ஒரு தனி மதிப்பு. அவள் விரதம் காக்கும் கடுமையைக் கண்டு அவளிடத்தில் யாவரும் அச்சமும் அன்பும் ஒருங்கே கொண்டு பழகுவார்கள்.***

***முருகனுடைய திருக்கோயிலுக்கு முன் அவள் வருகிறாள். முருகனைத் தன்மீது வருவித்து அருள் காட்டப் போகிறாள். ஆடியும் பாடியும் தொழுதும் அழுதும் முருகனை வருவிக்கும் கலையில் வல்லவள் அவள். இந்தப் பெருவிழாவில் எந்தச் சமயத்தில் முருகன் அவள் வாயிலாக வந்து அருள் புரிவானோ என்று எல்லா மக்களும் காத்து நிற்கிறார்கள்.***

***தெய்வம் வந்து குடிகொள்ளும் நடமாடும் கோயிலாக அவள் இருக்கிறாள். உள்ளே ஒரு சேலையைக் கட்டி அதன்மேலே நிறத்தால்***

வேறுபட்ட வேறு ஓர் ஆடையை உடுத்தியிருக்கிறாள். நீராடித் தூய்மையுடன் இருக்கும் அவள் தன் கையில் சிவந்த நூலைக் காப்பாகக் கட்டியிருக்கிறாள்.

விரதம் இருப்பவர்கள் கையில் காப்புக் கட்டிக் கொள்வதுண்டு. விழா நடைபெறும்போது முக்கியமான பூசகர் காப்புக் கட்டிக் கொள்வதை நாம் பார்த்திருக்கிறோம். விழாத் தொடங்குவதற்குமுன் இந்தக் காப்புக்கட்டு நடைபெறும். காப்புக் கட்டிக்கொண்டவர்கள் விரதம் காத்து, வேறு எந்தச் செயலிலும் ஈடுபடாமல், குறிப்பிட்ட எல்லையை விட்டுப் போகாமல் விழா முடியுமளவும் இருப்பார்கள். காப்புக் களையுமட்டும் மிகவும் கடுமையான வரையறைகளோடு விரதம் காப்பார்கள்.

இந்தக் காலத்தில் மஞ்சட் சரட்டைக் காப்பாகக் கட்டிக் கொள்வதைப் பார்க்கிறோம். முருகனுடைய திருவிழாவில் எல்லாம் சிவப்புமயமாக இருக்கிறது. முருகன் செந்நிறமுடையவன். அதனால் அவனுடைய திருவிழாவில் சிவப்புக்கு அதிகச் சிறப்பு இருக்கும் போலும். பூசாரிச்சியாகிய குறமகள் தன் கையில் செந்நிறமுள்ள நூலையே காப்பாகக் கட்டிக் கொண்டிருக்கிறாள்.

### குறமகள் செயல்

அவள் கையில் வெண்பொரியை வைத்துக் கொண்டு அதை எங்கும் சிதறிக் கொண்டே வருகிறாள். சிறு தெய்வங்கள் பல அவ்விடத்தில் இருப்பதாக அவர்கள் நம்பினார்கள். அவர்களுக்கெல்லாம் நிறைவு உண்டாகும் பொருட்டுப் பொரியைத் தூவுகிறாள். பெரிய மனிதரைப் பார்க்கப் போகும்போது அவர் வீட்டு ஏவலாளர்களுக்கு ஏதேனும் சிறிது பணம் தருகிறோம் அல்லவா? அதுபோலக் குறிஞ்சி நிலத்தின் தனித் தெய்வமாகிய முருகன் எழுந்தருளப் போகிறான்; அதற்கு முன் அங்குள்ள குட்டித் தெய்வங்களுக்கு நிறைவு உண்டாகப் பொரியைத் தூவுகிறாள் குறமகள்.

அதோடு அரிசியையும் இட்டுப் பூசிக்கிறாள். மஞ்சள் கலந்த அட்சதையைக் கொண்டு பூசிக்கும் வழக்கத்தை நாம் அறிவோம். இங்கேயோ நல்ல வெள்ளையான அரிசியில் சிவப்புக் கலந்து செவ்வரிசியாக்கி அங்கங்கே இடுகிறாள். அதைச் சில்பலி அல்லது சிறுபலி என்று சொல்வார்கள். அந்தச் சிவப்பு எதனால் வருகிறது தெரியுமா? மிக்க பலமுள்ள ஆட்டுக்கிடாய்களை வெட்டிப் பலியிடுகிறார்கள். அவற்றின் இரத்தத்தை அரிசியோடு கலந்து பூசிக்கிறாள். பல கூடைகளில் பிரப்பரிசி வைத்து நிவேதனம் செய்கிறாள்.

முரண்கொள் உருவின் இரண்டு உடன்உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்

குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇ.

*(ஒன்றோடு ஒன்று மாறுபட்ட நிறத்தையுடைய இரண்டு ஆடைகளை ஒன்றன்மேல் ஒன்றாகச் சேர்த்து உடுத்து, செந்நிற நூலைக் காப்பாகக் கட்டி, வெண்ணிறமான பொரியைத் தூவி, மிக்க வலிமை நிலை பெற்ற பெரிய காலையுடைய கொழுத்த ஆட்டுக்கிடாயை வெட்டிய இரத்தத்தோடு கலந்த மிக்க வெண்மையான அரிசியைச் சிறு பலியாக வைத்து, பல பிரப்பரிசி நிரம்பிய கூடைகளை இருத்தி.*

*முரண் - மாறுபாடு. உரு - நிறம். யாத்து - கட்டி. மதவலி - மிக்க வலிமை. நிலை இய குறையாமல் நிலைபெற்ற. விடை - ஆட்டுக்கிடாய். விரைஇய-கலந்த. பலி - பூசைக்குரிய பொருள், பிரப்பு - கூடை நிறைய இட்டு வைக்கும் நிவேதனப் பொருள். இரீஇ - வைத்து)*

*இவ்வாறு குருதி கலந்த அரிசியும் பிரப்பும் வைத்து வழிபடும் வழக்கத்தை வேறு புலவர்களும் சொல்லியிருக்கிறார்கள்.*

*"கொழுவிடைக்கறை விராவிய பலிக்குறை நிரப்பி*
*வழுவில் பல்பிரப் பிரீஇவெறி யாட்டயர் மன்றத்து"*

*என்பது தணிகைப் புராணம்.*

### அலங்காரம்

*சிறிய பசு மஞ்சளை அரைத்து நீரில் கலந்து அங்கங்கே தெளித்திருக்கிறார்கள். வேறு பல வாசனைப் பண்டங்களையும் இடந்தோறும் தூவியிருக்கிறார்கள். மனிதர்கள் கூடும் இடத்தில் அழுக்குப் படிதல் இயல்பு; நாற்றமும் உண்டாகும். அவற்றை மாற்றுவதற்கு இப்படியெல்லாம் செய்கிறார்கள்; இந்தச் சூழல் முழுவதும் நறுமணம் கமழ்கிறது. செவ்வரளி மாலையை ஒரே அளவாக நறுக்கித் தொங்கவிட்டிருக்கிறார்கள். எங்கே பார்த்தாலும் செம்மைதான். செய்யனாகிய முருகனுக்கு ஏற்ற இடமாக அது பொலிகிறது. ஒவ்வோர் இடமும் ஒவ்வொரு பொருளும் முருகனுடைய நினைவை ஊட்டுகின்றன.*

சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற அறுத்துத் தூங்க நாற்றி

*(சிறிய பசு மஞ்சளோடு மணமுடைய பொருள்களைத் தெளித்து, பெரிய குளிர்ந்த செவ்வரளியால் ஆன மணம் மிக்க குளிர்ந்த மாலையை அளவு*

ஒத்து அறும்படியாக அறுத்து, அங்கங்கே தொங்கும்படி கட்டி.

விரை - வாசனைப் பொருள். கணவீரம் - செவ்வரளி. துணை அற - ஒரே அளவாக அறும்படி. தூங்க - தொங்கும் படி. நாற்றி - தொங்கவிட்டு).

சிறுபசு மஞ்சள் என்பது மஞ்சளில் ஒருவகை என்றும் சொல்வது உண்டு.

'பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை' என்பதற்கு, 'பெரிய குளிர்ந்த செவ்வரளி மாலையையும் ஒழிந்த நறிய குளிர்ந்த மாலைகளையும்' என்று பொருள் எழுதுவர் நச்சினார்க்கினியர். 'அறுத்துத் துணையறத் தூங்க நாற்றி' என்று கூட்டி, 'தலையொக்க அறுத்துத் தமக்கு ஒப்பு இல்லாதபடி அசையத் தூக்கி' என்று எழுதுவார். 'இணையொக்க நறுக்கி அசைதரப் பூங்கோயிலாகத் தூக்கி' என்பது வேறு ஒருவர் உரை.

இவ்வாறு எல்லா ஏற்பாடுகளும் நிறைவேறிவிட்டன. இனி முருகனை வா, வா என்று அழைக்க வேண்டியதுதான். எல்லோரும் ஒருமுகமாக முருகனுடைய வருகையை எதிர்பார்த்து ஆவலோடும் பக்தியோடும் காத்திருக்கின்றனர்.

## முருகனை வருவித்தல்

அந்த மலைச்சாரலில் பல ஊர்கள் இருக்கின்றன. அங்கிருந்தெல்லாம் மக்கள் திரண்டு வந்திருக்கின்றனர். பலர் தாமும் விரதம் இருந்து இந்த விழாவிலே கலந்து கொள்ள வந்திருக்கிறார்கள்.

அந்த ஊர்களெல்லாம் வாழ வேண்டும். முருகன் திருக்கோயில் வாழ வேண்டும் என்று குறமகள் வாழ்த்துகிறாள். 'பசி, பிணி, பகை ஆகிய துன்பங்கள் இல்லாமல் ஆண்டவனே! நீ எல்லோரையும் காப்பாற்ற வேண்டும்' என்று வேண்டிக் கொள்கிறான். நல்ல வாசனையுள்ள தூபத்தை எடுத்துக் காட்டுகிறார்கள். அவள் இப்போது பாடுகிறாள். முருகன் குறிஞ்சி நிலத்துக்குத் தெய்வம். அவனுக்கு விருப்பமானது குறிஞ்சிப்பண். அந்தப் பண்ணில் அவள் பாடுகிறாள். அவளுடைய பெண்மைக் குரல் தெளிவாகக் கேட்கிறது.

மலையில் சலசல என்று அருவி விழுந்துகொண்டே இருக்கிறது. அதன் இனிய ஓசை சுருதி போடுகிறது. ஓம் என்ற ஓசையே அதில் எழுகிறது. வேறு இனிய வாத்தியங்களைப் பலர் வாசிக்கிறார்கள். கண்ணில் காணும் காட்சியாவும் முருகனுடைய எண்ணத்தை உண்டாக்குகின்றன. காதில் விழும் ஒலிகள் யாவும் அவனுடைய நினைவை எழுப்புகின்றன. முருகுணர்ச்சி கண் வழியாகவும் காது வழியாகவும் புகுந்து மனத்தை நிரப்புகிறது. வாசனைப் பண்டங்களாலும் தூபத்தாலும் உண்டான நறுமணமும் ஒரு தெய்விகமான உணர்ச்சியை நாசி வழியே ஏற்றுகிறது.

அருவியின் ஓங்கார சுருதியும் இன்னியங்களின் இசை முழக்கமும் இணைந்து முழங்கும் அங்கே குறமகள் குறிஞ்சிப் பண்ணைப் பாடுகிறாள். அவளுடைய பாட்டு இந்தப் பேரொளியையும் கிழித்துக் கொண்டு தனியே காதில் விழுகிறது.

பாடியபடியே பல வண்ணங்களையுடைய பல பூக்களை அவள் தூவுகிறாள். முன்னலே இரத்தத்தோடு கலந்து சிவந்த தினையைப் பரப்பச் செய்திருக்கிறாள். முருகனுக்கே உரிய துடியும் தொண்டகமும் ஒலிக்கின்றன. இரத்தக் களரி போன்ற அந்த இடம் பொல்லாதவர்கள் உள்ளத்தில் அச்சத்தை உண்டாக்குகிறது.

தூப மணம் கமழ மலர் மணம் விரவ வாத்தியங்கள் ஒலிக்க அந்த இடம் முருகன் வருவதற்கு ஏற்ற, உணர்ச்சி பழுத்த நிலையமாக இருக்கிறது. துடியும் தொண்டகப் பறையும் இதோ சற்று வேகமாகவும் உரக்கவும் முழங்குகின்றன. இந்த உச்ச நிலையில் முருகன், “ஆ!” என்று முழங்கிக் கொண்டு வந்து விடுகிறான்; அந்தக் குறமகள் மேலே ஆவேச உருவத்தில் வந்து ஆடுகிறான். எல்லோரும் இப்போது கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்கள். கும்பிடுகிறார்கள். சிலர் அழுகிறார்கள். சிலர் நடுங்குகிறார்கள். சிலர் கீழே விழுந்து வணங்குகிறார்கள். சிலர் உணர்ச்சி விஞ்சி, “முருகா முருகா!” என்று கதறுகிறார்கள். சிலர் கூத்தாடுகிறார்கள், விசையைத் தூண்டி விட்டதுபோல எங்கும் ஒரே தெய்வ உணர்ச்சி; துடிதுடிப்பு; ஆட்டபாட்டம்.

இங்கே சில பேர்வழிகள் வந்திருக்கிறார்கள். அவர்களுக்குச் சாமி, பூதம் இவற்றிலெல்லாம் நம்பிக்கையே இல்லை. “ஏதோ பைத்தியகாரச் செயல்” என்று பூசை வழிபாடுகளைக் கண்டு பரிகாசம் செய்கிறவர்கள். அவர்கள் இங்கே இந்த ‘அறிவிலிகள்’ செய்யும் செய்கைகளை வேடிக்கை பார்க்க வந்திருக்கிறார்கள். இந்தக் கூட்டத்தோடு கலவாமல் தனியே நிற்கிறார்கள்.

ஆனால் என்ன ஆகிறது தெரியுமோ? இந்த இடத்தில் கொந்தளித்துப் பொங்கும் உணர்ச்சி அவர்களையும் ஆட்கொள்கிறது. எல்லாம் நிரம்பிக் குறமகள் திடீரென்று ஆவேசம் வந்து கூவும்போது, அவர்களும் அயர்ந்து போகிறார்கள். தம்மை அறியாமல் கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்கள். தெய்வம் தம்மை என்ன செய்துவிடுமோ என்ற எண்ணத்தால் அவர்களுடைய நெஞ்சு படபடக்கிறது.

இவ்வாறு தெய்வ நம்பிக்கை இல்லாதவர்களும் அஞ்சி நடுங்கும்படி அந்தக் குறமகள் முருகனை வரவழைத்திருக்கிறாள். முருகனை வரவேற்றுத் தெய்வமணம் பரப்பும் சூழல் அந்தத் திருக்கோயில். அங்கே மக்கள் திருவிழாக் கொண்டாடுகிறார்கள்.

*அந்த இடம் சிலையோடும்படி பலரும் பாடுகிறார்கள். ஆவேச உருவத்தில் முருகன் வந்திருக்கும்போது அவனை வரவேற்று உபசரிக்க வேண்டாமா? பல கொம்புகளை ஊதுகிறார்கள். பெரிய மணிகளை அடிக்கிறார்கள். முருகனுடைய யானையை வாழ்த்துகிறார்கள். அது புறங்காட்டி ஓடாத வலிமையை உடையது; பிணிமுகம் என்னும் பெயருடையது. முருகனை நாம் இருக்கும் இடத்துக்கு எழுந்தருளும்படி செய்வதற்கு உதவும் வாகனம் அல்லவா? அதனால் அதை வாயால் வாழ்த்துகிறார்கள்.*

*அங்கே முருகன் எழுந்தருளி யாவருக்கும் நலம் பாவித்துக் கருணை புரிகிறான். குறமகள் நேரிலே முருகனை வருவித்துப் பேச வைக்கும் அற்புதமான இடம் அது.*

நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்னியம் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகுஇயம் நிறுத்து முரணினர் உட்க
முருகுஆற்றுப் படுத்த உருகெழு வியன்நகர் –
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி.

*(செறிந்த மலைச் சாரலில் உள்ள நல்ல நகர்களை வாழ்த்தி, மணமுள்ள தூபத்தைக் காட்டி, குறிஞ்சிப் பண்ணைப் பாடி, இனிமையாக ஒலிக்கின்ற ஓசையையுடைய அருவியோடு இணைந்து இனிய வாத்தியங்கள் முழங்க, பல நிறங்களையுடைய மலர்களை அருச்சித்து, கண்டோர் அஞ்சும்படியாக இரத்தத்தோடு கலந்த சிவந்த தினையைப் பரப்பி, பூசை செய்யும் குறமகள் முருகனுக்கு உவப்பான வாத்தியங்களை வாசிக்கச் செய்து, தெய்வம் இல்லையென்ற முரண்பட்ட கொள்கையை உடையவர்களும் அஞ்சும்படியாக முருகனை வரும்படி செய்த அழகுமிக்க அகன்ற திருக்கோயிலில், வெறியாடுகின்ற இடத்தில் சிலையோடும்படியாகப் பாடி, பல கொம்புகளை ஒன்றாக ஊதி, ஒலியினால் கொடுமையையுடைய மணிகளை ஒலித்து, போரில் பின்வாங்கி ஓடாத வீரத்தை உடைய பிணிமுகம் என்னும் யானையை வாழ்த்தி - வழிபட, அவ்விடத்தில் முருகன் இருப்பான் என்று சொல்ல வருகிறார்.*

*நளிமலை - மரங்கள் அடர்ந்து செறிந்த மலை. சிலம்பு - மலைச்சாரல்,*

நகர்-ஊர்; திருக்கோயில் என்றும் கொள்ளலாம். இமிழ் - இனிதாய் ஒலிக்கின்ற. இன்னியம் - இனிய இசைக் கருவிகள், கறங்க - முழங்க, உருவம் - நிறம், தூஉய் - தூவி. வெருவர - அச்சம் உண்டாகும்படி, குருதி - இரத்தம். முருகு இயம் - முருகனுக்கு உவப்பான வாத்தியங்கள்; துடி, தொண்டகம் முதலியன, நிறுத்து - ஒலிக்கச்செய்து, முரணினர் - மாறுபட்ட எண்ணம் உடையவர்; இங்குள்ள பக்தர்களுக்கு மாறுபட்ட. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள். உட்க - அஞ்ச. முருகு ஆற்றுப்படுத்த - முருகனை வருவித்த. உரு - அழகு. வியனகர் - பரந்த கோயில்).

பிணிமுகம் என்பதற்கு மயில் என்றும் பொருள் கொள்ளலாம்.

தூபம் காட்டிக் குறிஞ்சிப் பண்ணைப் பாடி முருகனை வழிபடுதல் பழைய கால வழக்கம்.

"குறிஞ்சி பாடுமின், நறும்புகை எடுமின்" என்பது சிலப்பதிகாரம்.

"ஐயவி சிந்தி நறைபுகைத் தாய்மலர் தூஉய்க்
கொய்யாக் குறிஞ்சி பலபாடி"

என்ற புறப்பொருள் வெண்பாமாலைப் பாட்டில் இங்கே கண்ட பல செயல்களைச் சொல்லியிருக்கிறார் ஆசிரியர்.

இவ்வாறு பூசை போட்டு முருகனை ஆவேச ரூபத்தில் வருவிக்கும் வழக்கம் குறிஞ்சி நிலத்தில் உண்டென்பதை அகநானூற்றிலும் காணலாம்.

"களம்நன்கு இழைத்துக் கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்".

## முருகனைத் தரிசிக்கும் வழி

முருகன் எழுந்தருளிய தலங்களைக் கூறி, அங்கங்கே முனிவரும் தேவரும் பிறரும் வழிபடுவதைக் கூறி, கோயில் கட்டி வழிபடும் இடங்கள் அல்லாத வேறு பல இடங்களையும் கூறி, கடைசியில் குறமகள் செய்யும் வழிபாட்டையும் கூறி, முருகன் எவ்வாறு எல்லா வகையான மக்களாலும் வணங்கப் பெறுகிறான் என்பதைப் புலப்படுத்தினார் நக்கீரர். இடத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப மக்கள் வேறுபடுகின்றனர். அவர்களுடைய பழக்கவழக்கங்களும் வேறுபடுகின்றன. வாழ்க்கையின் வளமும் வேறுபட்டிருக்கின்றன. ஆயினும் யாவரும் முருகனையே தலைவனாக உணர்ந்து வழிபடுகிறார்கள். இவ்வுலக வாழ்க்கையில் எது வேண்டுமோ அதற்காக வழிபடுகிறார்கள். இந்த வாழ்க்கையை வெறுத்து நிற்பவர்களும் அவனுடைய திருவருளை விரும்பி வழிபடுகிறார்கள்.

முருகன் மலைமேல் இருக்கிறான்; சமவெளியில் இலங்குகிறான். காட்டில் ஒளிர்கிறான்; நாட்டில் திகழ்கிறான். ஆற்றில் இருக்கிறான்; குளத்தில் இருக்கிறான். மனிதர்கள் கூடுகின்ற இடத்தில் இருக்கிறான்; மனித சஞ்சாரமே இல்லாத இடத்திலும் விளங்குகிறான். அழகிய மலரிலும் அவன் அருள் ஒளிர்கிறது.

அவனை வழிபடுவோர்களில் தான் எத்தனை வேறுபாடுகள்; அழகிய தேவமகளிர் அவனுடைய ஆட்சிக்குரிய குறிஞ்சி நிலத்துக்கு வந்து தம்மை அழகு செய்து கொணடு அவனை வாழ்த்துகிறார்கள். போர்க்களத்தில் உணவு பெற்ற பயங்கரமான பேயும் அவனை வாழ்த்துகிறது. இந்திராதி தேவர்களும் தம்முடைய குறை முடிய வேண்டுமென்று அவனை வந்து பணிகிறார்கள்; கொலையே புரி வேடர்களும் அவனைப் பாடிக் கூத்தாடுகிறார்கள். எல்லாம் கற்று உயர்ந்த ஞானியரும் அவனை வணங்கி இன்புறுகிறார்கள்; ஒன்றும் வேலனும் வழிபட்டு மகிழ்கிறான். முனிவர்கள் போற்றுகின்றனர். அந்தணாளர் ஏத்துகின்றனர்.

இவ்வாறு முருகனுடைய பெருமை எங்கும் நிலவுவதைக் கூறினார். வெளிப்படையாக இறைவன் உறையும் இடம் என்று அடையாளங்களால் புலனாகும் தலங்களைக் கூறினார்; அல்லாத ஆறு குளம் முதலிய இடங்களையும் கூறினார்.

### ஐயம் தெளிய

இப்படிக் கூறிய பிறகு நக்கீரருக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. புலவனோ முருகனை அடைய வேண்டும் என்ற காதலோடு இருக்கிறான். வள்ளல் ஒருவனை அடைந்து பரிசு பெற வேண்டும் என்ற விருப்பத்தோடு இருக்கும் பரிசிலனைப் போல இந்தப் புலவன் இருக்கிறான். ‘அந்த வள்ளல் இந்த ஊரிலும் இருப்பார் அந்த ஊரிலும் இருப்பார் இன்னும் வேறு வேறு

*இடங்களிலும் இருப்பார்' என்று சொன்னால் புலவனுக்குச் சற்றே மயக்கம் வரலாம். 'எப்போதும் சுற்றிக் கொண்டே இருப்பார் போலும்! திட்டமாக இன்ன இடத்தில் இருப்பார் என்றால் அங்கே போய்க் காணலாம். பல இடங்களில் இருப்பவரானால் எந்தச் சமயத்தில் எங்கே இருப்பார் என்று தெரியாதே! நாம் ஒரு சமயம் ஓரிடத்துக்குப் போனால், அங்கே அவர் இல்லாமல் வேறு இடத்தில் இருந்தால் என்ன செய்வது? மறுபடியும் அந்த இடத்தை நாடிச் சென்றால், அதற்குள் மற்றோர் இடத்துக்குப் போய்விட்டால் எப்படிக் காணுவது?' என்ற எண்ணம் தோன்றலாம் அல்லவா? அந்த மயக்கத்தைப் போக்க முற்படுகிறார் நக்கீரர்.*

*'நான் சொல்லி வந்தேனே, இந்த இடங்களில் எல்லாம் முருகன் உறைகிறான். அன்போடு அவன் அருளை வேண்டி நிற்கும் அடியவர்கள் எப்படி யெல்லாம் தம் நிலைக்கு ஏற்ற வகையில் வழிபடுவதை விரும்புகிறார்களோ அப்படியெல்லாம் வழிபடுவார்கள். அப்படி வழிபடும் இடங்களிலெல்லாம் அவன் உறைகிறான். இதை நான் அநுபவத்தில் கண்டிருக்கிறேன்' என்கிறார்.*

வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டுஆண்டு உறைதலும் அறிந்த ஆறே.

*(தன்னை விரும்பும் அன்பர்கள் தாம் விரும்பியபடியே அடைந்து வணங்க அங்கங்கே உறைவதும் நான் அறிந்த வண்ணமாகும்).*

*'இவ்வாறு வழிபட்டவர்கள் தாம் வேண்டியவற்றை வேண்டியபடியே பெற்று, நன்றியறிவுடன் வழிபட, அங்கங்கே எழுந்தருளியிருக்கிறான்' என்று பொருள் கூறலாம்.*

*முன்னாலே வழிபடுகிறவர்களைப் பார்த்துப் பலர் வழிபடுகிறார்கள். அந்த வழிபாட்டின் பயனாக அவர்கள் எவற்றை விரும்புகிறார்களோ, அவற்றை அடைகிறார்கள். அடைந்த அவர்கள், தம் அனுபவத்தால் வழிபாட்டின் பயனை உணர்ந்து கொண்டவர்களாதலின் மேலும் வழிபடுகிறார்கள். "இதனை நானே அனுபவத்தில் உணர்ந்திருக்கிறேன்; ஏதோ பிறர் வாய்மொழியாகக் கேட்டதன்று என்று உறுதி கூறுவாரைப் போல, "அறிந்தவாறே!" என்கிறார்.*

*முருகன் எல்லா இடங்களிலும் எழுந்தருளியிருக்கிறான். அவன் இல்லாத இடம் ஒன்றும் இல்லை. அவன் உறையும் இடம் இதுதான் என்று தனியே சுட்டிக்காட்டிக் கணக்கிட முடியாது. அவன் இல்லாத இடமே இல்லை என்று முடிந்த முடிபாகச் சொல்லிவிடலாம். நக்கீரர் அப்படிச் சொல்லாமல், உலகில் உள்ள உபகாரி ஒருவனுடைய விலாசத்தைச் சொல்பவரைப் போலச் சொல்லத் தொடங்கிக் கடைசியில் வேகமாக ஒரு பட்டியலையே கொடுத்துவிட்டார். ஏன்?*

## மூவகை இடங்கள்

முருகனைக் காணவேண்டும் என்ற ஆர்வமுடைய புலவன் இன்னும் பக்குவம் முதிர்ந்த நிலை பெறவில்லை. அவனை அடைய வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் அவனிடம் தலைப்பட்டிருக்கிறது. இன்னது செய்ய வேண்டுமென்று தெரியாமல் இருக்கிறான். அவனுக்கு வழிகாட்ட வந்த நக்கீரர் மனிதனின் மன இயல்பு அறிந்தவராதலின் நயமாக உண்மையைப் படிப்படியாகச் சொல்லுகிறார். முதலில், "நீ இப்போதே நினைத்த காரியத்தில் வெற்றி அடைவாய்" என்று தட்டிக் கொடுத்தார். பிறகு எல்லோருக்கும் தெரிந்த திருப்பரங்குன்றம் முதலிய தலங்களைச் சொல்லி முருகனுடைய சிறப்பையும் இணைத்துக் கூறினார். எல்லா மலைகளிலும் இருக்கிறான் என்று பிறகு சொன்னார். கோயில் இல்லாத மலையிலும் அவன் ஆடல் புரிபவன் என்று ஊகிக்கும்படி சொன்னார். முன்னே கூறிய திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம் என்பவை வெளிப்படையாக முருகன் எழுந்தருளியிருக்கும் கோயில்களையுடைய தலங்கள். பின்னாலே கூறிய பல குன்றுகளிலும் சிலவற்றில்தான் முருகனுக்கு கோயில்கள் உள்ளன. பலவற்றில் கோயில் இல்லை. அடையாளமுள்ள இடங்களும் அடையாளம் இல்லாத இடங்களுமாக உள்ள தொகைத்தலம் குன்றுதோறாடல். பிறகு காடு, கா, ஆறு, குளம் என்ற வரிசையாக அடுக்கிக் கூறிய இடங்கள் அடையாளமே இல்லாத இடங்கள். அடையாளம் சிறந்து நிற்கும் தலங்களை முன்னர்க் கூறி, அடையாளம் உள்ளனவும் இல்லனவுமாகிய இடங்களை இடையிற் கூறி, அப்பால் அடையாளமே இல்லாத இடங்களை இறுதியிற் கூறினார். திட்பத்திலிருந்து திட்பமும் நுட்பமும் கலந்த நிலைக்கும், இறுதியில் நுட்பமான நிலைக்கும் அழைத்துச் செல்லும் பாங்கில் இருக்கிறது இந்த முறை; ஆண்டவனைச் சகளமாகிய உருவத்திலே கண்டு வழிபட்டுப்பின்பு உருவமும் அருவமும் இணைந்த இலிங்க உருவிலே வழிபட்டுப் பின்பு அருவாகிய நிஷ்கள உருவத்திலே வழிபடும் முறையைப் போலவும் தோன்றுகின்றது.

முருகன் எங்கும் பரவி இருக்கிறான். ஆனால், அவனை வழிபடும் இடங்களில் அவனுடைய அருள் சுரக்கிறது, நிலத்துக்கு அடியில் எங்கும் நீர் இருக்கிறது. ஆயினும் நமக்குப் பயன்படுவதில்லை. நிலத்தை அகழ்ந்து கிணறு தோண்டினால் நீரைக் காண்கிறோம். முயற்சி இல்லாமல் எளிதில் நீரை அடைய முடியாது. எங்கும் நம் காலுக்குக் கிழே இருந்தாலும் கண்ணுக்குத் தெரிவதில்லை. இறைவன் சர்வ வியாபியாக இருப்பினும் வழிபடும் இடங்களில் வெளிப்படுகிறான். அன்புடன் உருகித் தியானித்து வணங்கினால் வெளிப்படுகிறான்

நம்முடைய உள்ளத்தில் அன்பு முதிர்வதற்குச் சில சூழ்நிலைகள் வேண்டியிருக்கின்றன. மடைப் பள்ளியைக் கண்டவுடன் உணவு நினைவு

*வருவது போலக் கோயிலைக் கண்டவுடன் யாவருக்கும் இறைவன் நினைவு வருகிறது. ஆனால், பசியுடையவனுக்கு எப்போதுமே உணவின் நினைவுதான் இருக்கும்.*

*நாம் தீவிரமான பக்தி உடையவர்கள் அல்ல. ஆதலின் நம் உள்ளத்தில் பக்தியைத் தூண்டுவதற்கு ஏற்ற சூழ்நிலை இன்றியமையாததாக இருக்கிறது. பக்குவம் முதிர்ந்தவர்களுக்கு எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் இறையுணர்வு இருக்கும்.*

*"எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்*
*முத்தர் மனமிருக்கும் மோனத்தே"*

*என்று பெரியோர் கூறுவர்.*

*ஆதலின், இருக்கும் சூழ்நிலையின் பலத்தால் கோயில்களில் வழிபட்டு, அங்கே இறைவன் அருளால் அன்பர்கள் நலம் பெறுகிறார்கள். தம்முடைய உள்ளத்தில் உள்ள அன்புச் சிறப்பினால் காட்டிலும், காவிலும், ஆற்றிலும், குளத்திலும், அவனை வழிபடுபவர்களும் அவன் அருளைப் பெறுகிறார்கள். எந்தக் காலத்தில் எந்த இடத்தில் எவ்வாறு வழிபட்டாலும் அங்கே முருகன் எழுந்தருளுகிறான்.*

*நான் சொன்ன இடங்களிலும் அல்லாத வேறு இடங்களிலும் நீ அவனைக் காணலாம். எந்த இடமானாலும் நீ அன்பு முதிர்ந்து, எங்கே காணமுடியும் என்ற உணர்ச்சி பெறுகிறாயோ அங்கே அவனை வணங்குவாயாக" என்று நக்கீரர் கூறுகிறார்.*

*மற்றவர்கள் வணங்கும் இடங்களில் ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அந்த இடங்களிலெல்லாம் எல்லாருக்கும் ஒரே மாதிரி உணர்ச்சி உண்டாகாது. சிலருக்குத் திருச்செந்தூரில் மனம் கனிந்து பக்தி உணர்ச்சி மேலிடலாம். சிலருக்குத் திருவாவினன்குடியில் உணர்ச்சி விஞ்சி நிற்கலாம். சிலருக்கு ஏதேனும் சிறிய மலைக் கோயிலில் இறையுணர்வு எழலாம். வேறு சிலருக்குக் கோயிலே இல்லாத எங்கேனும் அந்த நிலை வரலாம். எந்த இடத்தில் உணர்வு எழுமோ அந்த இடத்தில் மேலும் முயன்று விரும்பி வணங்கி அருளின்பம் பெற வேண்டும்.*

**ஆண்டுஆண்டு ஆயினும் ஆக; காண்தக**
**முந்துநீ கண்டுழி.**

*(நான் கூறிய அவ்வவ்விடங்களானாலும், பிற இடங்களானாலும் அவனை நினைந்து வழிபடுவதற்குரிய உணர்வைத் தூண்டுவதற்கு ஏற்றதாக முந்தி நீ கண்ட இடத்தில் இன்னவாறு வழிபடுவாயாக என்று சொல்ல வருகிறார்).*

உணர்ச்சி கிளர்ந்து எழும்போது முருகனைத் தியானித்துப் பாராட்டினால் நல்ல அநுபவம் கிட்டும். நக்கீரர் இன்ன இடத்தில்தான் முருகனைக் காண முடியும் என்று வரையறை செய்து கூறவில்லை. "உன் மனம் எங்கே நெகிழ்கிறதோ, எந்த இடத்தில் அவனைக் காணற்கு ஏற்ற இடம் இது என்ற கனிவு உண்டாகிறதோ, அங்கே நில். அவனை வணங்க முற்படு" என்று உபதேசிக்கிறார்.

அந்த இடத்தில் உன்னுடைய விருப்பம் முகத்திலே மலர்ச்சியை உண்டாக்கும். அவனை ஏத்துவாயாக. கையினால் தொழுது புகழ்வாயாக. அவன் காலில் விழுந்து வணங்கு என்கிறார்.

.............................................................. காண்தக
முந்துநீ கண்டுழி முகன்அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் கால்உற வணங்கி

(காண்பதற்குத் தக்க வண்ணம் முதலில் நீ அநுபவத்தால் உணர்ந்த இடத்தில் முகம் மலரத் துதித்துக் கையால் கும்பிட்டு வாழ்த்தித் திருவடிகளில் விழுந்து வணங்கி ஏத்துவாயாக என்று சொல்ல வருகிறார்).

பிறகு முருகனை வாயாரப் பாட வேண்டும் அவனுடைய திருநாமங்களைச் சொல்லி உருக வேண்டும். நாமங்களைச் சொல்லி இறைவன் திருத்தாளில் பூத்தூவுவதையே அருச்சனை என்று சொல்வார்கள். அருச்சனை செய்வதனால் உள்ளம் குளிர்கிறது நெகிழ்கிறது.

அருச்சனை வயலுள் அன்புவித்
திட்டுத் தொண்ட உழவர் ஆர

என்பது திருவாசகம். தொண்டர்களாகிய உழவர்கள் அருச்சனை என்னும் வயலுக்குள் அன்பு என்னும் விதையை விதைத்துப் பயிர் செய்து சிவபோகத்தை நுகர்கிறார்கள். அன்போடு அருச்சனை செய்தால் எல்லாப் பொறிகளும் ஒருமுகப்படுகின்றன.

## திருநாமங்கள்

நக்கீரர் முருகன் திருநாமங்களை அருச்சனை செய்வதற்கு ஏற்றபடி அடுக்கிக் கூறுகிறார். 'முருகனை இந்த நாமங்களைச் சொல்லி நீ வாயாரத் துதிப்பாயாக' என்று முருகனுக்குரிய நாமங்கள் இருபத்தாறைச் சொல்லுகிறார்.

முதலில் முருகனுடைய திருவவதாரத்தை உணர்த்தும் திருப்பெயரைச் சொல்கிறார்.

## கார்த்திகேயன்

*முருகனுடைய திருவவதாரக் கதை இராமாயணத்திலும் பாரதத்திலும் கந்தபுராணத்திலும் வருகிறது. பரிபாடலில் வருகிறது. தமிழ்க் கந்தபுராணமும் அதை விரிவாகச் சொல்கிறது. அந்தக் கதைகளில் வேறுபாடு இருக்கிறது.*

*முருகன் சரவணப் பூம்பொய்கையில் தோன்றியவன், மிக மிக உயரமான இமயமலையின்மேல் இருப்பது அப்பொய்கை. மக்களுடைய மூச்சுக் காற்றே படாத சிகரத்தில் இருப்பது அது. அங்கே தருப்பை அடர்ந்த பொய்கையில் முருகன் உதித்தான். சரம் என்பது தருப்பையின் பெயர். அது அடர்ந்த காரணத்தால் சரவணம் என்ற பெயர் அந்தப் பொய்கைக்கு வந்தது.*

*தருப்பை, தூய்மைக்கும், விரதத்துக்கும், கூரிய அறிவுக்கும் அடையாளம். இம்மூன்றும் உள்ளவர்களுக்கு இனியவன் முருகன். அதனால் தருப்பைக் குளத்திலே அவதாரம் செய்தான், நீலம் என்பது தருப்பைக்கு ஆகுபெயர். நீலப் பைஞ்சுனையாகிய சரவணப் பொய்கையில் தோன்றியமையால் முருகனுக்குச் சரவணப் பெருமாள், சரவணபவன் என்று திருநாமங்கள் உண்டாயின. ஷடக்ஷர மந்திரமே அந்தத் திருநாமந்தானே?*

*சிவபெருமானுடைய வெளிப்படையான முகங்கள் ஐந்து. இவை நான்கு திசைகளில் நான்கும், மேல்நோக்கி ஒன்றும் உள்ளவை. இவற்றையன்றி மறைவாகக் கீழ்நோக்கிய அதோமுகம் ஒன்று உண்டு. மற்ற முகங்களே வெளிப்படையாக இருப்பதனால் சிவபெருமானுக்கு ஐம்முகன் என்ற திருநாமம் உண்டாயிற்று. முருகன் திருவவதாரம் உலகுக்கு இன்றியமையாதது என்பதை அறிந்த சிவபெருமான் அதோமுகத்தையும் வெளிப்படுத்தி ஆறுமுகநாதனாக இருந்து ஒவ்வொரு முகத்திலும் உள்ள நடுக்கண்ணாகிய ஞானக்கண்ணிலிருந்து ஒவ்வொரு பொறியை விட்டான். அந்தப் பொறிகளை உலகம் தாங்காது என்று அஞ்சித் தேவர் நடுங்க, இறைவன் ஏவலால் அக்கினி பொறிகளை ஏற்று வாயுவிடம் கொடுக்க, அவன் கொண்டு போய்க் கங்கையிடம் சேர்த்தான். கங்கை, ஆறு பொறிகளையும் சுமந்துசென்று சரவணப் பொய்கையில் உள்ள திட்டில் சேர்த்தது. அங்கே முருகன் திருவவதாரம் செய்தான்.*

*முதலில் ஐந்து பூதங்களில் ஒருவனாகிய அக்கினி ஏற்று வந்தான்; இறுதியில் சரவணப் பொய்கையை அடைந்தன. பொறிகள் முருகனான பிறகு கார்த்திகைப் பெண்கள் ஆறுபேர் அங்கே வந்தார்கள். முருகனுக்கு அவர்கள் பாலூட்டி அன்பு செய்தார்கள். அக்கினி கொண்டு வந்தமையால் அக்கினி குமாரன் என்றும், கார்த்திகை மாதர் வளர்த்தமையால் கார்த்திகேயன் என்றும் முருகன் பெயர் பெற்றான். கார்த்திகை மாதர்கள் தனித்தனியே சீராட்டும்*

பொருட்டு முருகன் ஆறு திருமேனி கொண்டான். இவற்றையெல்லாம் நக்கீரர் சொல்லும் முதல் திருநாமம் கூறுகின்றது.

நெடும்பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப,
அறுவர் பயந்த ஆறமர் செல்வ!

(உயர்ந்த பெரிய இமயமலைச் சிகரத்தில் நீலநிறமுடைய தருப்பை வளர்ந்த பசிய சுனையாகிய சரவணப் பூம்பொய்கையில் ஐந்து பூதங்களின் அதி தெய்வங்களில் ஒருவனாகிய அக்கினி தேவன் முதலில் ஏற்றுச் சென்று கொடுக்க, முறையே சென்று தங்கி, ஆறு கார்த்திகை மாதர் பெற்று வளர்த்தவரைப் போலச் சீராட்ட, ஆறாகத் தங்கிய அருட்செல்வனே!)

இந்திரனுடைய வேண்டுகோளின்படி இறைவன் தன் தேசை அவனிடம் கொடுக்க அதனை அக்கினிதேவனிடம் ஈந்து அவன் வாயிலாக முனிபத்தினிமார் ஆறு பேர்களாகிய கார்த்திகை மாதர் உட்கொண்டு ஆறு குழந்தைகளைப் பெற்றுச் சரவணப் பொய்கையில் விட்டனர் என்று ஒரு பழங்கதை உண்டு. அந்தக் கதையை எண்ணி 'அறுவர் பயந்த' என்று சொன்னதாகக் கொள்வது ஒரு முறை.

முருகன் கார்த்திகை மாதரால் வளர்க்கப்பட்டவனாதலின் கார்த்திகேயன் என்ற திருநாமம் உடையவன், கார்த்திகை என்பது ஆறு நட்சத்திரங்களின் கூட்டம். ஏழு முனிவர்களின் மனைவிமார் ஏழு நட்சத்திரங்களாயினர். வசிஷ்டருடைய பத்தினியாகிய அருந்ததி சப்தரிஷி நட்சத்திரக் கூட்டத்தில் வசிஷ்டருக்கு அருகே நட்சத்திர வடிவில் இருக்கிறாள். மற்ற ஆறு முனிவர்களின் மனைவிமாரும் ஒன்றாகிக் கார்த்திகை நட்சத்திரமாக விளங்குகின்றனர். அந்த ஆறு பேரும் முருகனுக்குப் பாலூட்டும் பேறு பெற்றனர்.

முருகனுக்குப் பாலூட்டிய சிறப்பினால் அவர்கள் பெருமை அடைந்தார்கள். முருகனுடைய திருவவதார நட்சத்திரம் விசாகம். அந்த நட்சத்திரத்தில் முருகனுக்குச் சிறப்பான ஆராதனை நடக்கும். ஆயினும் கார்த்திகை நட்சத்திரம் முருகன் அடியார்களுக்கு மிகச் சிறந்த நாளாக விளங்குகிறது. அன்று விரதம் இருந்து முருகனை வணங்குகிறார்கள். தான் தோன்றிய நாளாகிய விசாக நட்சத்திரத்தை விடத் தன்னை வளர்த்த கார்த்திகை நட்சத்திரத்திற்கு மிகுதியான சிறப்பு உண்டாகும்படி செய்தான் முருகன். இது நன்றியறிவினால் உண்டான காரியம். கார்த்திகை மைந்தன் என்ற திருநாமம் மனிதன் நன்றியறிவுடன் இருக்க வேண்டும் என்பதை நிறைவூட்டுகிறது.

## சிவகுமாரன்

*'சரவணபவா, கார்த்திகேயா' என்ற முருகன் திருநாமத்திற்குக் காரணமான செய்திகளை நினைப்பூட்டிய நக்கீரர் அடுத்தபடி அவன் சிவகுமாரன் என்பதைச் சொல்ல வருகிறார்.*

*சிவபெருமான் கல்லால மரத்தின் கீழ்த் தென்முகம் நோக்கி யோகியாக அமர்ந்திருந்தான். அப்போது உலகம் யாவும் காம உணர்ச்சியின்றி நின்றது. தேவர்கள் காமனை ஏவி இறைவன் மீது மலரம்புகளை விடும்படி செய்தார்கள். தென்முகக் கடவுள் தன் நெற்றிக்கண்ணினால் காமனை எரித்தான். பிறகு பார்வதியம்மையை மணந்து கொண்டான். பிறகுதான் முருகனுடைய திருவவதாரம் நிகழ்ந்தது. கந்தபுராணத்தில் இந்த வரிசையில் முருகன் திருவவதார வரலாறு வருகிறது.*

*முருகனுடைய திருவவதாரத்தை எண்ணிய நக்கீரர், அதற்கு முன் நிகழ்ந்த இரண்டையும் உடன் நினைத்தார். அவை இறைவன் தென்முகக் கடவுளாக இருந்ததும் இறைவி மலைமகளாகத் தோன்றியதும், அந்த இரண்டையும் முருகனோடு தொடர்புபடுத்துகின்றார், தட்சிணாமூர்த்திக்குப் புதல்வனே, பார்வதியின் குமாரனே, என்று.*

*ஆலின் அடியில் அமர்ந்திருந்த கடவுள் தட்சிணாமூர்த்தி. அவன் ஞானோபதேச மூர்த்தி. அவனுடைய ஞானக் கண்ணிலிருந்து குமாரன் அவதரித்தான். அதற்குமுன் அந்த ஞானக்கண் ஒளியிலே மாரன் ஒழிந்தான். மாரன் என்னும் இருள் அழியக் குமாரன் என்னும் சுடர் தோன்றியது. அது ஞானச்சுடர்; ஞான குருமூர்த்தியாகிய ஆல்கெழு கடவுளின் புதல்வன்.*

ஆல்கெழு கடவுள் புதல்வ!

*(கல்லால மரத்தின் அடியிலே எழுந்தருளிய தென்முகக் கடவுளாகிய சிவபெருமானுடைய புதல்வனே!)*

## மலைமகள் மகன்!

*தென்முகக் கடவுளின் புதல்வனாகிய முருகன் ஆறு சுடராகச் சென்று, சரவணப் பூம் பொய்கையில் விளையாடினான். ஆறு திருவுருவங்கொண்டு திருவிளையாடல் புரிந்தான். அவன் ஒருருவில் இணைந்து தேவர்களுக்கும் உலகினருக்கும் பயன்படவேண்டும். அருளே வடிவாகிய சக்தியின் தொடர்பு இருந்தால்தான் உலகுக்குப் பயன்பட முடியும். ஆகவே சிவபெருமான் உமா தேவியாரை அழைத்துக் கொண்டு சரவணப் பொய்கைக் கரைக்கு வந்தான். அத்தேவியார் ஆர்வத்துடன் ஆறு குழந்தைகளையும் ஒருசேர அணைத்தார். அப்போது முருகன் ஒருருவாக இணைந்து ஆறு முகமும் பன்னிரண்டு*

திருக்கரங்களும் உடைய மூர்த்தி ஆனான். உமாதேவியார் தம் பாலைக்கறந்து ஊட்டினார். அப்படி இணைந்தபோது முருகனுக்குக் கந்தன் என்னும் திருநாமம் அமைந்தது.

"எந்தை சக்திகள் உயிரெலாம் ஒடுங்குறும் எல்லை
முந்து போலஒன் றாகியே கூடிய முறைபோல்
அந்தம் இல்லதோர் மூவிரு வடிவும்ஒன் றாகிக்
கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்"

என்று கந்தபுராணம் கூறுகிறது.

இவ்வாறு முருகன் பார்வதியம்மையாரின் புதல்வனாக விளங்கினான்.

## மால்வரை மலைமகள் மகனே!

(பெருமையையுடைய பக்கங்களையுடைய இமயமலையின் மகளாகிய பார்வதியின் புதல்வனே! வரை - மலைப் பக்கம்; மூங்கில் வளர்ந்த என்றும் பொருள் கொள்ளலாம்).

'பெருமையையுடைய மலையாகிய மலையரையன் மகளுடைய மகனே' என்று பொருள் எழுதுவர் நச்சினார்க்கினியர்.

## கொற்றவை சிறுவன்

திருவவதாரத்தோடு தொடர்புடைய மூன்று திருநாமங்களைச் சொன்னார். மேலே முருகனுடைய வீரத்தை விளக்கும் திருநாமங்கள் இரண்டைக் கூறுகிறார்.

அவனுடைய வீரம் மிகச் சிறந்தது. அவனை எதிர்க்கும் பகைவர்கள் உயிர் பிழைப்பதில்லை. அவர்களுக்கு அவன் யமனைப் போல இருக்கிறான்.

"நிருதரார்க்கொரு காலா ஜயஜய"

என்று திருப்புகழில் பாடுவார் அருணாகிரியார். நக்கீரர் அவனை,

**மாற்றோர் கூற்றே!**

என்று ஏத்தும்படி சொல்கிறார். 'பகைவர்களுக்கு யமனைப் போன்றவனே' என்பது அதன் பொருள்.

முருகன் புகுந்த போரில் அவனுக்குத்தான் வெற்றி என்பதைச் சொல்லவும் வேண்டுமா? அந்தப் பெருமானுடைய அன்னையே வெற்றியைத் தருபவள். அசுரர்களோடு போரிட்டு வெல்லும் இயல்பினள். அந்த நிலையில் அப்பிராட்டியைக் கொற்றவை என்று கூறுவது மரபு. அவளுடைய பிள்ளை முருகன் என்றால், தனியே அவனுக்கு வெற்றி உண்டு என்று கூறவேண்டுவதில்லை.

*வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ!*

*(வெற்றியையும் வெல்லும் போரையும் உடைய கொற்றவையின் திருமகனே!)*

*கொற்றவையைத் துர்க்கை என்று வடமொழியில் கூறுவர். வீரர்கள் போர்க்களத்தில் கொற்றவையை வழிபடுவார்கள். அந்தப் பெருமாட்டி தமக்கு வெற்றியை வழங்குவாள் என்பது அவர்களுடைய நம்பிக்கை. 'வெல்போர்க் கொற்றவை' - தான் வெல்லும் போரைச் செய்யும் கொற்றவை; என்றது மகிடனைச் செற்றதனை' என்று கூறி, கொற்றவை என்பதற்கு வனதுர்க்கை என்று பொருள் எழுதுவர் நச்சினார்க்கினியர்.*

## பழையோள் குழவி

*உமாதேவியார் சாந்தமான வடிவும் இயல்பும் உடையவர். துர்க்கையோ இராட்சசமும், வீரமும் கொண்ட இயல்பு உடையவள். இருவேறு நிலையில் விளங்கும் அவ்விருவரும் பராசக்தியின் அம்சங்களே. முருகன் இவ்விருவருக்கும் புதல்வன். இவர்களுக் கெல்லாம் மூலமான பராசக்திக்கே அவன் திருமுகன். அவளே எல்லாச் சக்தி உருவங்களுக்கும் மூலமான பழைய சக்தி, மிகமிகப் பழைய பராபரை; இராஜராஜசுவரி, திரிபுர சுந்தரி என்று தேவியின் பக்தர்கள் கூறும் பராசக்தி அவள். அவள் இழைகளை அணிந்து பேரழகியாகத் திகழ்கிறாள். அவ்வாபரணங்கள் தெய்விகம் பொருந்தியவை. இயல்பாகவே அமைந்தவை.*

*முருகன் அந்தப் பேரழகியின் புதல்வன். ஆதலின் அவளுடைய அம்சமாகிய எல்லோருக்கும் புதல்வனாகிறான்.*

இழையணி சிறப்பிற் பழையோள் குழவி

*(அணிகலன்களை அணிந்த சிறப்புடைய பழையவளாகிய பராசக்தியின் குழந்தையே!)*

*அம்பிகையின் திருநாமங்களில் புராதநா என்பதும் ஒன்று. ஸ்ரீ லலிதா சகசிர நாமத்தில் 802-ஆவது திருநாமமாக ஒளிர்வது அது; பழையவள் என்பது அதற்குப் பொருள்.*

*மலைமகள் மகன், கொற்றவை சிறுவன், பழையோள் குழவி என்னும் மூன்றும் ஒரே கருத்தை மூன்று வகையில் கூறியவை.*

## தேவசேனாபதி

*முருகனுடைய வீரத்துக்கு எடுத்துக்காட்டாக இருப்பது அவன் சூரனோடு செய்த போர், தேவர்கள் தம் நிலையை இழந்து திண்டாட,*

அவர்கள் மீட்டும் தங்களுடைய வாழ்வைப் பெறும் பொருட்டு முருகன் போர் செய்தான். அந்தப் போர் எல்லாப் போர்களிலும் பெரிய போர். ஆதலின் அதில் வெற்றி பெற்ற வீரன் எல்லோரிலும் பெரிய வீரன். ஆகையால் முருகன் யாவரினும் சிறந்த வீரன் என்பது தெளிவாகும். இதை முன்பும் பார்த்தோம்.

தேவர் படைகளுக்கெல்லாம் தலைவனாக இருந்தமையால் அவனுக்குத் தேவசேனாபதி என்ற திருநாமம் உண்டாயிற்று. தேவர்களெல்லாம் வணங்கிப் போற்றும் படைத் தலைவன் அவன். அப்போது அவன் வேலாயுதத்தோடு வேறு பல படைக்கலங்களையும் ஏந்தினான். கோதண்டம் ஏந்தும்குமரனாகவும் விளங்கினான்.

வானோர் வணங்குவில் தானைத் தலைவ!

(தேவர்கள் வணங்கிய, வில்லை ஏந்திய, படைத்தலைவனே)

இதற்கு, 'வானோராகிய தானையையும் வணங்கு வில்லையும் உடைய தலைவ' என்று பொருள் கொள்வர் நச்சினார்க்கினியர். அப்போது வணங்கு வில் என்பதற்கு வளைந்த வில் என்று பொருள் கொள்ள வேண்டும்.

முருகன் திருக்கரத்தில் வில்லும் உண்டு என்பதை,

"சூலம்வாள் தண்டுசெஞ் சேவல்கோ தண்டமும்
சூடுதோளும்"

என்னும் திருப்புகழால் உணரலாம். தனுர்த்தர சுப்பிரமணிய மூர்த்தியின் திருவுருவத்தைச் சாய்க்காடு முதலிய தலங்களில் காணலாம்.

## மாலை மார்பன்

முருகன் வீரவிளையாடலை எப்போதும் செய்து கொண்டிருப்பதில்லை. தீய சக்திகளைப் போக்கும் பொருட்டு வீரம் காட்டுவானேயன்றி அவன் எப்போதும் ஈரம் உடையவன். அருளுடையவன். அவன் அணியும் மாலைகளில் வெற்றிக்குரியது வேறு. போகத்துக்குரியது வேறு. அவன் எப்போதும் போகத்துக்குரிய மாலையாகிய கடப்பந்தாரை மார்பில் அணிந்திருக்கிறவன். ஆகையால், 'அவனை மாலை மார்ப என்று ஏத்தவாயாக' என்று நக்கீரர் சொல்கிறார்.

மாலை மார்ப!

சரவணபவனே, கார்த்திகேயனே, சிவகுமாரா, பார்வதி நந்தனா, துர்க்கா சுதா, பராசக்தி மகனே, தேவசேனாபதி, இன்பமாலை யணிவோய் என்று முருகனை ஏத்திப் புகழும்படி இதுவரையில் சொல்லி, மேலும் சில திருநாமங்களைச் சொல்ல வருகிறார் நக்கீரர்.

# நூலறி புலவன்

*தமிழ்நாட்டில் புலவர்களுக்குப் பழங்காலத்தில் மிகுதியான மதிப்பு இருந்தது. அதற்கு ஏற்ற வகையில் அவர்கள் பண்பிலும் அறிவிலும் சிறந்து நின்றார்கள். அவர்களுக்கு அறிவின் பெருமையினால் புலவர் என்று பெயர் அமைந்தது; பண்பின் சிறப்பினால் சான்றோர் என்ற பெயர் அமைந்தது. சங்க காலத்துப் புலவர்களை நல்லிசைச் சான்றோர் என்று குறிப்பது வழக்கம். மக்களுக்கு அவர்களிடத்தில் அத்தனை மதிப்பு நிலவியது.*

*சேர சோழ பாண்டியராகிய முடியுடை மன்னர் மூவருடைய ஆட்சியின் கீழ்த் தமிழ்நாடு இருந்து வந்த பழங்காலத்தில், சில சமயங்களில் அவர்களுக்குள்ளே போர் நிகழும். அப்போது ஒரு நாட்டில் உள்ளோர் மற்றோர் நாட்டுக்குப் போகமாட்டார்கள். போனால் ஒற்றரென்று பற்றிக் கொள்வார்கள். ஆயினும் புலவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களானாலும், எந்த ஊர்க்காரர்களானாலும் எங்கும் போகலாம். அவர்கள் பிறந்தது ஒரு நாடானாலும் ஓர் ஊரானாலும் எல்லா நாடுகளும் எல்லா ஊர்களும் அவர்களுக்கு உரியனவே ஆகும். இந்தக் காலத்தில் ஒரு நாட்டார் வேற்று நாடுகளுக்குப் போக வேண்டுமானால் அதற்கு அநுமதிச்சீட்டு வாங்க வேண்டும். புறப்படும் நாட்டு அரசியலாரும் அநுமதி வழங்க வேண்டும். போய்ச் சேரும் நாட்டு அரசியலாரும் அநுமதி தர வேண்டும். இல்லையானால் போக இயலாது. அந்த இரண்டு அனுமதிகளும் எல்லோருக்கும் எளிதில் கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும் இடம், காலம் என்ற வரையறை இருக்கும். இன்ன நாட்டுக்குத்தான் போகலாம். இவ்வளவு காலமே தங்கலாம் என்று வரையறுத்து அநுமதி அளிப்பார்கள். எல்லா நாடுகளுக்கும் எப்போதும் போகும் அநுமதி எவருக்கும் கிடைப்பது இல்லை.*

*பழங்காலத்தில் இந்த நாட்டில் எல்லா இடங்களுக்கும் எல்லாக் காலங்களிலும் செல்வதற்குரிய தகுதியை ஒருவன் முயன்று பெறலாம். அது அரசியலாரிடம் பெறுவதன்று; தானே முயன்று அமைத்துக் கொள்வது. அதுவே புலமை. ஒருவன் கல்வியிற் சிறந்தவனானால் எந்த நாட்டுக்கும் போகலாம்; எந்த ஊருக்கும் போகலாம். அந்த நாட்டினிலே தங்கிவிடலாம்; அந்த ஊர்க்காரனே ஆகிவிடலாம். இதையே வள்ளுவர் சொல்லுகிறார்.*

> *"யாதானும் நாடாமல்; ஊராமால்; என்ஒருவன்*
> *சாந்துணையும் கல்லாத வாறு"*

*என்பது இந்தக் கருத்தைச் சொல்கிறது.*

புலவர்கள் தம்முடைய கல்வி, கேள்வி, அறிவு ஒழுக்கங்களால் சென்ற இடங்களிலெல்லாம் சிறப்பு அடைவார்கள். புலவர்களைத் தெய்வம் போலவே எண்ணி மக்கள் வழிபட்டார்கள். கடைச் சங்கத்தில் இருந்த புலவர்களைக் கலைமகளின் அவதாரமாகவே கருதினர். அப்படியே புராணம் கூறுகிறது.

அதுமட்டும் அன்று. சங்கப் புலவர்களில் தெய்வங்களும் இருந்து தமிழுக்குச் சிறப்பை அளித்ததாக **இறையனாரகப்பொருள்** உரையில் வருகிறது. திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும், குன்றமெறிந்த குமர வேளும், வாசுதேவனும் தலைச்சங்கத்தில் புலவர்களாக விளங்கினார்களாம். குமரகுருபரர் முருகனை,

"சங்கத் தமிழின் தலைமைப் புலவர்"

என்று பாடுகிறார். கடவுளரையும் புலவர்களாகச் சொல்வதில் பெருமை காணுபவர்கள் இந்நாட்டினர் என்பதை இவை காட்டுகின்றன.

முருகன் ஞான பண்டிதன்; எல்லாம் அறிந்த சர்வக்ஞன், எல்லா மொழிகளும் அவன் அருளால் தோன்றியவை. வேதத்தை அருளியவன். பிரணவப் பொருளை உபதேசித்தவன். அகத்திய முனிவருக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களை அறிவுறுத்தியவன்.

"சிவனைநிகர் பொதியவரை முனிவனக மகிழஇரு
பகர்வோனே!
செவிகுளிர இனியதமிழ்"

என்று அருணகிரியார் பாடுகிறார். தென்னாட்டுக்கு வந்தபோது சிவபிரானிடம் தமிழைக் கற்றுத் தமிழ் பேசும் ஆற்றலும் தமிழறிவும் வன்மையும் உடையவரான அகத்தியர், இங்கே வந்த பிறகு முருகனிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைச் சிக்கற ஓதிப் பெரும் புலவரானார்; பன்னிரண்டு மாணாக்கர்களுக்குத் தமிழ் கற்பிக்கவல்ல பேராசிரியரானார். அகத்தியம் என்னும் முத்தமிழ் இலக்கணத்தை இயற்றும் அறிவாற்றல் அவருக்கு உண்டாயிற்று.

"குறுமுனிக்கும் தமிழுரைக்கும் குமரமுத்தம் தருகவே"

என்பதையும் காண்க.

இவ்வாறு பெரும் புலவர்களை உண்டாக்கும் அரும்பெரும் புலவனாகிய முருகனை வெவ்வேறு திருநாமங்களால் பாராட்ட வந்த நக்கீரர், அவனைப் புலவனாகவும் வைத்துப் போற்றுகிறார். தமிழ்நூற் புலவன் என்று குறிப்பிட்டுச் சொல்லாமல், எல்லா மொழிகளிலும் உள்ள நூல்களையும் அறியும் ஞானச் செல்வன் என்று பொருள் கொள்ளும்படி ஒரு திருநாமத்தைச் சொல்கிறார்.

நூல்அறி புலவ!

என்பதே அது 'எல்லா நூல்களையும் அறிந்த பேரறிவாளனே' என்பது இத்தொடரின் பொருள். நச்சினார்க்கினியர், 'எல்லா நூல்களையும் அறியும் அறிவுடையவனே' என்றே பொருள் எழுதியிருக்கிறார். வேறு உரையொன்று. 'வேதாகமங்கள் முதலிய சாத்திரங்களை ஓதாதுணர்த்தும் பண்டிதனே' என்று விளக்குகிறது. புலவரிற் சிறந்த நக்கீரர் முருகனையும் புலவனாகப் போற்றிப் பெருமிதம் அடைவதில் வாய்ப்பு ஏதும் இல்லை.

## இலக்கண உரையை அறிந்தவன்

நூலறி புலவ என்பதை நக்கீரர் தம் வாழ்க்கையில் பெற்ற அநுபவம் ஒன்றை உளங்கொண்டு சொன்னதாகச் சொல்லவும் இடம் உண்டு. நூல் என்பதற்கு இலக்கணம் என்று பொருள் கொள்வது பழைய வழக்கம். "முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி" என்ற **தொல்காப்பியப் பாயிரத்தில்,** நூல் என்ற சொல் இலக்கணத்தையே குறிக்கிறது. "நூலே உரையே" என்று வரும் **தொல்காப்பியச் சூத்திரத்திலும்** அந்தப் பொருளில் நூல் என்ற சொல் அமைந்திருக்கிறது. இலக்கணத்தில் உள்ள சூத்திரங்களுக்கு நூற்பா என்ற பெயர் வந்ததற்கும் இதுவே காரணம்.

இலக்கணம் அறிந்த புலவன் மற்றவர்களிலும் சிறந்தவன். இலக்கணத்தாற் செப்பம் அமைந்த மொழி சீரிய மொழி.

"மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?"

என்று **திருவிளையாடற் புராணம்** தமிழின் சிறப்பை எடுத்துரைக்கிறது.

கடவுளரே இலக்கண நூல்களை இயற்றியதாகவும் அறிவுறுத்தியதாகவும் வரலாறுகள் வழங்குகின்றன. இறைவனுடைய உடுக்கையிலிருந்து பிறந்த ஒலிகளே மாகேசுவர சூத்திரங்களாயின என்பர். வடமொழியில் முருகன் அருளிய **கௌமார வியாகரணம்** என்ற நூல் ஒன்று உண்டு என்று கூறுவர். தமிழில் ஆலவாய் இறைவன் அருளிய அகப்பொருள் இலக்கணம் **இறையனார் அகப்பொருள்** என்ற பெயரோடு இன்றும் நிலவுகிறது. முருகன் தமிழ் இலக்கண நூல் ஏதும் இயற்றியதாகத் தெரியவில்லை. ஆயினும் இலக்கண உரையை மதிப்பிட்டவன் என்று ஒரு வரலாறு உண்டு. அது வருமாறு.

ஒரு சமயம் பாண்டி நாட்டில் பஞ்சம் உண்டாகிப் பன்னிரண்டு ஆண்டுகள் இருந்தது. பஞ்சம் உண்டானவுடன் பாண்டியன் மிக வருந்தினான்; குடிமக்கள் அல்லலுற நேருமே என்று அஞ்சினான். அவர்களுக்கு வேறு வழி இல்லை. ஆனால் சங்கப் புலவர்கள் பஞ்சத்தில் துன்புறக் கூடாது என்பது

அவன் எண்ணம். அவர்கள் எந்த நாட்டுக்குச் சென்றாலும் மதிப்பும் வாழ்வும் கிடைக்கும். ஆதலால் அவர்களை வணங்கி, ''இந்தப் பஞ்சகாலத்தில் எங்களோடு இருந்து இன்னலைப் பகிர்ந்து கொள்ளும் அவசியம் உங்களுக்கு இல்லை. வளப்பமுள்ள நாடுகளுக்குச் சென்று சிலகாலம் வாழுங்கள். இந்த நாட்டில் பஞ்சம் தீர்ந்து மீண்டும் வளம் உண்டாகும் போது உங்களை அழைத்துக் கொள்கிறேன்'' என்று வேண்டிக் கொண்டான். அவர்கள் அப்படியே வெவ்வேறு நாடுகளுக்குச் சென்றனர்.

பன்னிரண்டு ஆண்டுகள் ஆனபிறகு பஞ்சம் நீங்கியது. மீண்டும் பாண்டி நாட்டில் வளம் பெருகியது. மறுபடியும் புலவர்களை அழைத்துச் சங்கம் கூட்டி வளர்த்து வரவேண்டும் என்ற ஆர்வம் பாண்டியனுக்கு எழுந்தது. பல நாடுகளுக்கும் ஓலை போக்கிப் புலவர்களை வருவித்தான். போன இடங்களில் உள்ளவர்களுடன் பழகி அங்கேயே விருப்பம் கொண்டு சிலர் தங்கி விட்டனர். பலர் திரும்பி வந்தனர். மீண்டும் சங்கத்தை நடத்தத் தொடங்கினான் பாண்டியன்.

அவனுக்கு நெடுநாட்களாக ஒரு விருப்பம் இருந்து வந்தது. இடையிலே பஞ்சம் வந்தமையால் அதை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. தமிழில் உள்ள இலக்கணம் மூன்று பிரிவாக உள்ளது. எழுத்து, சொல், பொருள் என்ற இந்த மூன்றையும் **தொல்காப்பியம் கூறுகிறது இவற்றில் பொருளிலக்கணம் சிறப்பானது என்று கூறுவர். பொருளின் வகையாகிய அகப்பொருள், புறப்பொருள் என்ற இரண்டில் அகப்பொருள் என்பது சிறந்தது. அதற்குத் தனியே ஓர் இலக்கண நூல் யாரேனும் தக்க புலவர் ஒருவரைக் கொண்டு இயற்றச் செய்ய வேண்டும் என்ற ஆசை அரசனுக்கு இருந்தது. மீண்டும் சங்கம் உருவாக, இப்போது அதைச் செய்விக்க முயன்றான். மீண்டு வந்த புலவர்கள் மூன்று இலக்கணங்களிலும் வல்லவர்களே. ஆயினும், தனியே புதிய இலக்கணம் எழுதச் சிறப்பான தகுதி வேண்டும். அப்படி உள்ள புலவர் ஒருவரும் அப்போது வந்து சேரவில்லை. அதனால் பாண்டினுடைய விருப்பம் நிறைவேறாமல் குறையாகவே இருந்தது.**

**தன் குறைகளை ஆலவாயில் எழுந்தருளியிருக்கும் இறைவனிடம் விண்ணப்பித்துக் கொள்வது பாண்டியன் வழக்கம். அப்படியே இந்தக் குறையையும் கூறி வேண்டினான். "எம்பெருமானே! தமிழின் உயிராக உள்ளது அகப்பொருள் என்பார்கள். அதில் புதிய நூல் ஒன்று எழ வேண்டும் என்ற என் விருப்பம் நிறைவேறவில்லையே! நின்னுடைய அருள் இருந்தால் எளிதில் அது நிறைவேறும். திருவருள் புரிய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.**

**பல காலம் கழித்து அவன் விருப்பம் நிறைவேறியது. திருக்கோயிலில் பூசை புரியும் சிவசாரியார் இறைவன் எழுந்தருளியிருக்கும் பீடத்தின் கீழே**

*ஒரு நாள் திருவலகிடும்பொழுது ஏதோ கணகணவென்று ஒலி எழுந்தது. என்ன என்று பார்க்கும்போது சில செப்புத் தகடுகள் இருப்பதை அறிந்தார். அவற்றை எடுத்துப் பார்க்கும்போது, அவற்றில் எழுத்துக்கள் இருந்தன. உடனே பாண்டியனிடம் அனுப்பினார். அவன் படித்துப் பார்த்தான் சூத்திர வடிவில் அமைந்த அகப்பொருள் இலக்கணமாக இருந்தது. அவனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. இறைவன் தான் தன் வேண்டுகோளுக்கு இணங்கி அந்த நூலை அருளினான் என்று நம்பிக் கூத்தாடினான், அறுபது சூத்திரங்கள் அதில் இருந்தன.*

*இலக்கண சூத்திரங்களுக்கு உரை எழுதினால்தான் பொருள் புலப்படும். ஆகவே அந்த நூலுக்கு உரை எழுதச் செய்ய வேண்டுமென்று நினைத்த அரசன் தமிழ்ச் சங்க புலவர்களிடம் அளித்து உரை வகுக்கச் சொன்னான். சங்கத்தில் இருந்த நாற்பத்தொன்பது புலவர்களும் தனித்தனியே ஆராய்ந்து உரை எழுதி முடித்தார்கள். நாற்பத்தொன்பது உரைகள் வந்து விட்டன. அவற்றில் எதைக் கொள்வது. எதைத் தள்ளுவது? நாற்பத்தொன்பதையும் வைத்துக் கொண்டால் பெரிய போராட்டம் அல்லவா எழுந்துவிடும்?*

*தமிழ் நாட்டில் தலைசிறந்த புலவர்களாகிய நாற்பத்தொன்பது பேர் எழுதியவற்றின் தரத்தைத் தீர்மானித்து இதுதான் சிறந்தது என்று சொல்லும் தகுதி யாருக்கு இருக்கிறது? யார் சொல்லத் துணிவார்கள்? நூல் இல்லையே என்று கவலைப்பட்ட பாண்டியனுக்கு இப்போது உரைகள் இத்தனை வந்து விட்டனவே என்ற கவலை உண்டாகி விட்டது. இந்தச் சிக்கலை எப்படித் தீர்ப்பது?*

*மறுபடியும் ஆலவாய் இறைவனையே புகலடைந்தான் பாண்டியன். ''எம்பெருமானே! இவ்வளவு உரைகளில் யாருடையது சிறந்தது என்று தேர்ந்தெடுக்கும் திறம் தெரியாமல் கலங்குகிறேன். நீயே ஒரு வழியை அருளிச் செய்ய வேண்டும்" என்று கூறிப் போற்றினான். அப்போது அசரீரி வழக்கு ஒன்று எழுந்தது. "இவ்வூரில் வணிகர் தெருவில் உப்பூரிகுடிகிழார் மரபில் உருத்திர ஜன்மன் என்ற பிள்ளை தோன்றியிருக்கிறான். ஐந்தாண்டு நிரம்பியவன். அவன் ஊமைப்பிள்ளை. முருகனுடைய அம்சம் உடையவன். அவனை அழைத்து வந்து ஆடையணி புனைந்து உயரிய ஆசனத்தில் இருத்திப் புலவர்களுடைய உரைகளை வாசிக்கச் சொல். யாருடைய உரையைக் கேட்டு அவன் ஆனந்தமடைந்து களிக் கூத்தாடுகிறானோ அதுவே சிறந்த உரை என்று கொள்க'' என்று அது கூறியது. அது கேட்டு இறைவனை வணங்கி அரண்மனையை அடைந்தான் பாண்டியன்".*

*அப்பால் வணிகர் தெருவில் இருந்த உருத்திர ஜன்மனை அழைத்து வந்து உயர்ந்த பீடத்தில் ஏற்றிப் புலவர்களையும் அழைத்து அவர்களுடைய உரைகளை வாசிக்கச் செய்தான். புலவர்கள் சிலர் வாசித்தபோது அந்தப்*

பிள்ளை அசையவே இல்லை; கோயில் விக்கிரகம் போல அமர்ந்திருந்தான். பாண்டியன் அதைக் கண்டு மனத்தில் கலக்கம் அடைந்தான்; 'இந்தப் பிள்ளையோ ஊமை; இவன் இதைக் கேட்கிறானோ, இல்லையோ? என்று ஐயுற்றான். புலவர்கள் ஒருவர் பின் ஒருவராக உரையை வாசித்துக் கொண்டே போனார்கள். மருதன் இளநாகனார் என்னும் புலவர் தம் உரையை வாசித்த போது உருத்திர ஜன்மன் சிறிதே உடல் குலுங்கி முறுவல் பூத்தான். அப்போது பாண்டியனுக்கு நம்பிக்கை உண்டாயிற்று. 'நக்கீரர் தம் உரையைப் படித்த பொழுது அடுத்தடுத்துப் புளகம் போர்க்க மகிழ்ச்சியைப் புலப்படுத்தினான்; அசைந்து ஆடினான். கடைசியில் அவர் உரையே சிறந்தது' என்று யாவரும் முடிவு பண்ணினார்கள்.

அதுமுதல் இறையனாரகப் பொருளுக்கு நக்கீரர் எழுதிய உரையே வழங்கி வரலாயிற்று. அவ்வுரையில், '<u>மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரை கண்டு, குமார சுவாமியாற் கேட்கப்பட்டதென்க</u>' என்று வருகிறது.

நூல் இயற்றியவர் தந்தை. அவருடைய இதயம் நன்கு அறிந்தவன் அவருடைய திருமகன். ஆதலால் இந்த உரைதான் நூலுக்கு ஏற்புடையது என்பதை அறிந்து புலப்படுத்தினான். இவ்வாறு இலக்கணத்தை அறிந்து தெளிவுறுத்தியதை எண்ணியே திருமுருகாற்றுப்படையில்,

நூலறிவு புலவ!

என்று அமைத்ததாகச் சொல்வதும் பொருந்தனமாக இருக்கும்.

## பெரு வீரன்

உலகில் நமக்கு வரும் இடர்ப்பாடுகளைக் களைய வேண்டுமானால் நமக்குத் துணிவு இருக்க வேண்டும். இடர்களை எதிர்த்து நின்று வெல்வதற்கு அடிப்படையானது வீர உணர்ச்சி. உள்ளத்தில் வீரம் இல்லாதவன் எவ்வளவு பக்க பலம் உடையவனாக இருந்தாலும் செயலில் வெற்றி பெறமாட்டான். புறப்பகையை வெல்வதற்கு மிடலாகிய வீரமும், அகப் பகையை வெல்வதற்கு அறிவாகிய வீரமும் வேண்டும்.

முருகன் தன் அன்பர்களுக்கு வரும் இடையூறுகளைப் போக்கி அவர்களைப் பாதுகாப்பவன். இயற்கையாகவே நோயில்லா யாக்கையும் வலிமையும் உள்ள தேவர்கள் மகா வீரர்கள். அவர்களே அஞ்சும்படி அவர்களிலும் மிக்க வலிமையோடு இருந்தன் சூரபன்மன். அவனை எதிர்த்து வெல்லும் துணிவு அவர்களுக்கு உண்டாகவில்லை. முருகனிடம் புகலடைந்தபோது அவன் ஒருவனே அவர்களுக்குத் தலைமை தாங்கிப்

போரை நடத்தினான். போரில் அமரர்களும் கலந்து கொண்டார்கள். முருகன் ஒருவன்தான் அத்தனை பேருக்கும் ஊக்கம் அளித்தான். தேவாசுர யுத்தம் மூண்டது. அதில் முருகன் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி நின்று வீரம் காட்டினான். அவனுடைய சிறப்பான வீரம் அந்தச் செருவில் நன்றாகப் புலப்பட்டது. வேறு யாரும் உவமை கூறமுடியாமல் ஒரு தனி வீரனாக நின்றான். ஆதலால் அவனை,

**செருவில் ஒருவ!**

என்று பாராட்டச் சொல்கிறார் நக்கீரர்.

அவன் புகுந்த போரின் முடிவு வெற்றிதான், அவன் பேரைச் சொல்லிப் புகுந்தவருக்கே வெற்றி கிடைக்கும் என்றால் அவன் வெற்றி பெறுவதில் என்ன வியப்பு இருக்கிறது? வெற்றி பெறுவதற்கு ஏற்ற வீரமும், பெரும் செயல் திறமையும், இளமையும் உடைவன் அவன். ஆகவே,

**பொருவிறல் மள்ள!**

என்று போற்றப்படுவாயாக என்கிறார் நக்கீரர். செருவில் ஒருவ என்பதற்கு போரில் யாவரும் ஒப்பு இல்லாதபடி நிற்பவனே என்று பொருள், பொருவிறல் மள்ள என்பதற்கு பொருகின்ற வெற்றியினையுடைய இளைய வீரனே என்பது பொருள். மள்ளன் என்பது பொருள். மள்ளன் என்பது வீரமும் இளமையும் உடையவன் என்பதைக் குறிக்கும். 'பொருவிறல் மள்ள' என்பதற்கு 'வீரராயிருப்பார்க்கு வீராயிருப்பவனே' என்று ஒரு பழைய உரையாசிரியர் பொருள் கூறுகிறார்.

"பொருமறையார் கழல்வீரர் வீரன்"

என்பது சிவஞான சித்தியாரில் உள்ள முருகக் கடவுள் வாழ்த்து.

## அந்தணர் செல்வம்

வேதமும் வேள்வியும் ஆகிய இரண்டையும் பாதுகாக்கும் கடப்பாடு உடையவர்கள் அந்தணாளர்கள். அவ்விரண்டையும் காப்பாற்றி வருவதனால் யாவருமே நன்மை அடைகிறார்கள். கருவூலத்தைப் பாதுகாக்கும் காவலன் அந்தக் கருவூலம் தனக்கே உரியது என்று எண்ணமாட்டான். அதைக் காவல் புரிவதனால் பலருக்கும் பயன்படும் பொருள். தக்கபடி பயன் அளிக்க வகை உண்டாகிறது. வேதத்தை அடிப்படை நூலாகக் கொண்டது இந்து சமயம். இந்து மதம் என்பது புதிய பெயர். இதன் பழம் பெயர் வைதிக சமயம் என்பது. சைவம், வைணவம், சாக்தம், கௌ மாரம், காணபத்தியம், சௌரம் என்ற வழிபாடுகளும், அத்வைதம், துவைதம், விசிஷ்டாவைதம், சைவ சித்தாந்தம்

*முதலிய சமய நெறிகளும் வேறு வேறாக இருந்தாலும் எல்லாவற்றிற்கும் பொதுவான நூலாக நிலவுவது வேதம். ஆதலால் சமய நெறிகள் குறைபாடின்றி நிலவ வேண்டுமானால் வேதத்தைக் காப்பாற்றல் அவசியம். அப்படியே வேள்வியினால் உலகத்துக்கே வளவாழ்வு உண்டாகிறது.*

*ஆதலின் வேதத்தையும், வேள்வியையும் இந்து மதத்தைச் சார்ந்த பல சமயத்தினரும் போற்றி வந்தனர். வேதநெறிக்குப் புறம்பான அவைதிகர்கள் அவற்றை ஏற்பதில்லை. ஞானசம்பந்தர் சைனர்களோடு வாது செய்யப்போகும் பொழுது ஆலவாய் இறைவனிடம் இசைவு வேண்டிப் பாடுகிறார்.*

*"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்*
*ஆத மில்லி அமணொடு தேரரை*
*வாது செய்தழிக் கத்திரு வுள்ளமே*
*பாதி மாதுடன் ஆய பரமனே"*

*என்று கேட்கிறார். வேதமும் வேள்வியும் நமக்கு இன்றியமையாதவை. அவற்றை மறுத்து நிந்தனை செய்து உழன்றனர், அக்காலத்தில் பாண்டி நாட்டில் இருந்த சைனர்கள். அந்த நிலையை மாற்றப் புகுந்தார் ஞானசம்பந்தப் பெருமான்.*

*எனவே, அந்த இரண்டையும் காப்பாற்றும் அந்தணர்களைச் சமுதாயம் முழுவதும் மதித்துப் போற்றி வந்தது. அந்தத் தொழிலைச் செய்வதற்கு அவர்களுக்கு வலிமை வேண்டுமே! பணக்காரன் தன்னிடம் உள்ள பணத்தைக் கொண்டு பலரைக் காப்பாற்றுகிறான். அந்தணர்களும் ஒரு செல்வத்தைக் கொண்டே வேகத்தையும் வேள்வியையும் பாதுகாக்கிறார்கள். அந்தச் செல்வம் எது? முருகனே அவர்களுக்குச் செல்வமாக இருக்கிறான். ஆகவே,*

அந்தணர் வெறுக்கை

*என்று போற்றி வாழ்த்தச் சொல்கிறார் நக்கீரர். வெறுக்கை - செல்வம். இந்தத் தொடரை நினைந்தே அருணகிரிநாதரும் திருவகுப்பில்,*

*"வேதியர் வெறுக்கையும் அநாதிபர வஸ்துவும்"*

*என்று பாடியிருக்கிறார். அந்தணாளர்களிடம் முருகன் அன்புடையவன் என்பதை, அவனுடைய திருநாமங்களில் ஒன்றாகிய, "ப்ராஉமணப்ரிய" என்பது விளங்கும்.*

## அறிஞர் போற்றுபவன்

*உலகத்தில் பணம் படைத்தவரினும், பலம் படைத்தவரினும், பதவி படைத்தவரினும், அறிவு படைத்தவரே சிறந்தவர்கள். பொருள்களின் தகுதியை*

*அறிந்து மதிக்கும் ஆற்றல் அறிவுடையவர்களுக்கே உண்டு. அறிஞர்களிலும் பல வகையினர் உண்டு. ஒரு துறையில் வல்ல அறிஞர்கள் மற்றத் துறைகளில் உள்ளவற்றை அறியமாட்டார்கள். அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் பற்றி அறிந்தவர்கள் இருக்கிறார்கள். இன்பம் அறிந்தவர்களினும் பொருள் அறிந்தவர்கள் சிறந்தவர்கள். அவர்களினும் அறத்துறை அறிந்தோர் சிறந்தோர். வீட்டுநெறி அறிந்தவர்கள் எல்லாரினும் சிறந்தவர்கள். உண்மை அறிஞர் அவர்களே. அவர்களையே ஞானியர் என்றும் கூறுவர். அவர்கள் பரம்பொருளை அறிந்தவர்கள். எல்லாப் பொருள்களிலும் மேற்பட்டது பரம்பொருள். ஆகவே அதனை அறிந்தவர்கள் பிற பொருள்களை அறிந்தவர் யாவரையும்விட மேலானவர்கள் அவர்களிடம் இருப்பது பரஞானம்.*

*அத்தகைய பேரறிவாளர்கள் முருகனை அறிந்து புகழ்கிறார்கள். அவர்கள் புகழ்கின்ற சொற்கள் மலைமலையாகக் குவிகின்றன. அந்தக் குவியல்மயமாக இருக்கிறான் முருகன்.*

அறிந்தோர் சொல்மலை

*(மெய்யுணர்ந்தவர்களுடைய சொற்களெல்லாம் தொக்க தொகுதியாக விளங்குபவனே!)*

*சொற்கள் சிறிதும் தளராமல், தம் பொருளில் மாறாமல் ஈட்டமாக இருப்பதால் மலையென்றார். 'அறிந்தோர் சொற்களால் புகழ்பெறும் மலைபோன்றவனே' என்றும் பொருள் கொள்ளலாம். சான்றோர் புகழ்ந்து சொல்லப்படும் சொற்களின் ஈட்டமாயிருப்பாய் என்பது நச்சினார்க்கினியர் உரை.*

## ஆடவரிற் சிறந்தோன்

*ஆடவர்கள் வீரம் பொருந்தியவர்களாக இருந்தால் அவர்களை மகளிர் விரும்புவார்கள். தோளாண்மையினால் மங்கையர் மனத்தைக் கவர்ந்தது வீரர் திறம்.*

*"மங்கையர் தம்மனத்தை வாங்கும்*
*தடந்தோளான்"*

*என்பது நளவெண்பா. ஆண் மக்களுக்கு இன்றியமையாதது வீரம்; ஆண்களின் தன்மை என்னும் சொற்பொருளுடைய ஆண்மை என்ற சொல் வீரத்தைக் குறிப்பதனால் இது பெறப்படும். பெண்மை என்பது விருப்பம் என்ற பொருளுடையது. பெட்பு, மாதர் என்ற சொற்களுக்கு விருப்பம் அல்லது காதல் என்று பொருள். ஆண்மையை விரும்புவது பெண்மை; வீரத்தை*

விரும்புவது பெண்மை. வீர உருவமாக இருப்பவன் ஆடவன். அந்த வீரத்தை விரும்பும் வேட்கையின் உருவமாக இருப்பவள் பெண். முருகன் மகளிர் விரும்பும் கணவனாக இருக்கிறான்; காரணம் அவன் சிறந்த ஆண்மையை உடையவர்களில் சிறந்தவனாக இருத்தல்.

தெய்வானை, வள்ளிநாயகி என்னும் இருவருக்கும் கணவனாக விளங்கும் முருகன், வலியுடைய மைந்தர்களுக்குள் சிங்கம்போல விளங்குகிறான்.

**மங்கையர் கணவ மைந்தர் ஏறே!**

மைந்தை உடையவர் மைந்தர். மைந்து - வலிமை. ஏறு என்பதற்கு இடபம் என்று பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர்.

ஆண்மகன் சமுதாயத்தில் பீடு நடை போட்டு உலவ வேண்டுமானால் அவனுடைய மனைவி கற்பிற் சிறந்தவளாக இருக்கவேண்டும்.

"புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை, இகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை"

என்பது திருக்குறள். சிறந்த மங்கையர் இருவருக்கும் கணவனாக இருக்கும் சிறப்பினால், ஏனைய மைந்தர்களை விடச் சிறப்பாக மிடுக்கு நடை போடும் ஏறு போல இருக்கிறான் முருகன். அதனைக் கருதி இவ்விரண்டையும் இணைத்துச் சொன்னார் என்றும் கூறலாம்.

## வேலாயுதன்

முருகனுடைய வீரத்தை நினைப்பூட்டும் பல திருநாமங்களைச் சொன்ன நக்கீரர், அந்த வீரனுக்குரிய பேராயுதத்தை எண்ணுகிறார். முருகன் திருக்கரத்தில் வேற்படையை ஏந்தியிருக்கிறான் படைக்கலங்கள் பல உண்டு. அவற்றில் வில், வாள், வேல் என்பவை சிறந்தன. ஆயுதங்களில் அஸ்திரம், சாஸ்திரம் என்று இரண்டு வகை உண்டு. கையை விட்டுப் பிரயோகிக்கும் கருவிகள் அஸ்திரங்கள்; அம்பு போன்றவை. கையில் வைத்துக்கொண்டே தாக்குவன சாஸ்திரங்கள்; தண்டம், உலக்கை போன்றன. வேல் அஸ்திரமாகவும், சாஸ்திரமாகவும் பயன்படுவது. ஆதலால் அது வில், வாள், வேல் என்ற மூன்றில் சிறந்து நிற்கிறது. வெல் என்பதிலிருந்து பிறந்தது வேல் என்ற சொல். வெல்வதற்கு ஏற்ற கருவியாதலின் வேலாயிற்று. சிறந்த பெருவீரனாகிய முருகன் படைக்கலங்களில் சிறந்த வேலை ஏந்தியிருக்கிறான். ஞான சக்தியையே அவன் வேலாக ஏந்தியிருக்கிறான். ஆதலால் ஞானசக்திதரன் என்ற திருநாமம் அவனுக்கு உணடாயிற்று.

சிறந்த வேற்படையை முருகன் தன் பெரிய கையில் ஏந்தியிருக்கிறான்.

*அவன் புஜபல பராக்கிரமம் உடையவன். அதற்கு ஏற்ற படைக்கலமும் கிடைத்துவிட்டது என்றால் அவன் பெறும் வெற்றித் திருவுக்குக் கேட்க வேண்டுமா? வெற்றியே ஒரு செல்வம். அதனால் வரும் செல்வமும் பலபல. எந்தக் கையினால் வேலெடுத்து வெற்றி பெற்றானோ, அந்தக் கையினால் அவன் பிறருக்கு அச்செல்வத்தை ஈயவும் வல்லவன். வீரத்தால் வேலோச்சி வென்று பல செல்வத்தைக் கொண்டது அந்தக் கை; ஈரத்தால் பலருக்கு வழங்கும் பெருமை பெற்றதும் அந்தக் கையே. செல்வத்தை ஈட்டுவது மட்டும் செல்வருக்கு அழகு அன்று அதைப் பிறருக்கு வழங்கும்போதுதான் அவர் உண்மையான செல்வராகிறார்; பலரும் அறியும் செல்வராகிறார். முருகன் அத்தகைய செல்வன்*

**வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!**

*(வேல் பொருந்திய பெரிய கைகளால் அமைந்த பெரிய செல்வத்தை உடையவனே!)*

*'என்றது வேல் வெற்றியாற் பெற்ற அச்செல்வத்தை' என்று விளக்கம் எழுதுவார் நச்சினார்க்கினியர். சாலுதல் - நிறைதல்.*

**செருவில் ஒருவ! பொருவிறல் மள்ள!**
**அந்தணர் வெறுக்கை! அறிந்தோர் சொல்மலை!**
**மங்கையர் கணவ மைந்தர் ஏறே!**
**வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ!**

*என்று போற்றிப் பாராட்டும்படி எதிர்ப்பட்ட புலவனுக்கு உபதேசம் செய்கிறார் நக்கீரர்.*

## குன்றம் எறிந்தவன்

*பழைய காலத்து உரையாசிரியர்கள் சில தொடர்களை வழக்கமாகச் சொல்வார்கள். முருகனைக் குறிக்கும் போது 'குன்றம் எறிந்த குமரவேள்' என்று சொல்வார்கள். இறையனாராகப் பொருள் உரையில் தலைச்சங்கத்தில் இன்னார் இன்னார் புலவர்களாக இருந்து தமிழ் ஆராய்ந்தார்கள் என்று சொல்லுமிடத்தில் 'திரிபுரம் எரிந்த விரிசடைக் கடவுளும், குன்றம் எறிந்த குமரவேளும், என்று வருகிறது. குன்றம் என்றது மலை வடிவத்தில் நின்ற கிரவுஞ்சாசுரனை. முருகன் தன் வேலால் அந்த மலையைப் பொடிப்பொடி ஆக்கினான். அது அவனுடைய வெற்றிக்குச் சிறந்த அடையாளமாயிற்று. அது புலவர்கள் போற்றும் வகையில் என்றும் குன்றாக கொற்றமாக நிலவுகிறது.*

*கிரவுஞ்சம் என்பது அன்றிற் பறவையின் பெயர். ஆணும் பெண்ணும் பிரியாமல் எப்போதும் இரட்டையாகவே இருக்கும் இயல்புடையவை*

*அப்பறவைகள்; கிரவுஞ்ச மிதுனம் என்பார்கள், சிறந்த காதலர்களின் அன்புக்கு அன்றிலிணையை உவமை சொல்வது புலவர்களின் வழக்கம். அன்புக்கு அறிகுறியாக இருக்கும் அன்றிலின் உருவத்தில் இருந்த அசுரன் கொடுமை செய்தான். பொல்லாதவர்கள் நல்லவர்கள் போலத் தோற்றம் கொண்டு, பிறரை ஏமாற்றிக் கொடுமை செய்வார்கள். இந்த இயல்பை கிரவுஞ்சாசுரன் கொண்டிருந்தான். அன்றில் வடிவில் மலையாக இருந்த அவன் எங்கும் பறந்தான். திடீரென்று ஓரிடத்தில் வந்து படிவான். அடியில் இருந்த மக்களும் பிறரும் நசுங்கி மாய்வார்கள். சிவபெருமான் பறக்கும் மூன்று புரங்களை அட்டார். பறந்து சென்று படிந்து நின்று உலகுக்குத் துன்பத்தைத் தந்த கிரவுஞ்சமலையை முருகன் அட்டான்.*

*பழைய நூல்களில் கிரவுஞ்சமலையைப் பற்றிய செய்தி வேறு வகையாக இருக்கிறது. சூரன் கிரவுஞ்சமலைக்குள்ளே புகுந்து கொண்டு எங்கும் திரிந்தானாம். அம் மலை அவனுக்குக் கவசம் போல இருந்ததாம் அம்மலையையும் சூரனையும் ஒரே சமயத்தில் ஊடுருவிச் செல்லும்படி முருகன் தன் வேலை ஏவினானாம்.*

> *"ஒருதோகை மிசைஏறி உழல்சூரும் மலைமார்பும்*
> *உடன்ஊடறப் பொருதோகை சுரராச புறமேற விடுகாளை*
> *புகழ்பாடுவோம்"*

*என்று ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில் பாடுகிறார். அதற்கு உரை எழுதிய உரையாசிரியார். 'சூரபன்மாவுக்கு மறைவாய் ஓடி வரலான மலையினுடைய மார்பும் சூரபன்மாத்தானும் ஒக்க ஒரே காலத்தில் ஊடுருவும்படி வேலேறுடப் பொருதருளி, என்று எழுதுகிறார். "கிளைபட் டெழுசூ ருரமும் கிரியும், தொளைபட்டுருவத் தொடுவே லவனே" என்ற அநுபூதிப் பாட்டில், கிரவுஞ்ச மலையையும் சூரன் மார்பையும் ஒருங்கே தொளைத்து அழித்த வேலின் பெருமையை அருணகிரிநாதரும் கூறுகிறார்.*

*முருகன் மலைக்குத் தலைவன்; முதல் திணையாகிய குறிஞ்சிக்குத் தலைவன். அதற்கு அவனே உரிமையாளன். விண்ணைத் தொட்டு நிமிர்ந்துள்ள மலைகளிலெல்லாம் அவன் கோயில் கொண்டுள்ளான். கோயில் இருப்பினும் இல்லையாயினும் அவனுடைய உரிமை போகாது. இதைப் பற்றி முன்பே பார்த்தோம். குன்றங்களுக்குத் தலைவனாக இருந்தாலும் கிரவுஞ்சமாகிய குன்றத்தை அழித்தான், தவறு செய்தால் அவன் யாரானாலும், எப்படித் தோன்றினாலும் அவனை ஒறுப்பது தலைவன் கடமை. ஆகவே, மலைகளுக்கு உரியவனாக இருக்கும் முருகன், இது மலையாயிற்றே; இதை அழிக்கக் கூடாது என்று எண்ணவில்லை. உலகுக்குத் தீங்கு புரியும் கொடுமையையுடைய அதனை வேலால் எறிந்து அழித்தான்.*

*முருகன் கிரவுஞ்சத்தை அழித்த கொற்றத்தையும் குறிஞ்சி நிலத்துக்கு உரிமை பூண்டிருக்கும் சிறப்பையும் சொல்லிப் போற்றும்படி சொல்கிறார் நக்கீரர்.*

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!

*(கிரவுஞ்சமலையை அழித்த குறையாத வெற்றிச் சிறப்பையுடைய, வானை முட்டுகின்ற உயர்ந்த மலைகளையுடைய குறிஞ்சி நிலத்துக்கு உரிய தலைவனே!*

## குறிஞ்சிக் கிழவன்

*கிழமை என்பது உரிமை. அதை உடையவன் கிழவன். குறிஞ்சித் திணைக்கு உரிய தலைவனாக இருப்பவன் முருகன்.*

*"சேயோன் மேய மைவரை உலகமும்"*

*என்பது தொல்காப்பியம். இந்த உரிமையை யாரும் பறிக்க முடியாது. அகப்பொருள் இலக்கணத்தைக் கூறும் நூல்களில் எல்லாம் முருகனைக் குறிஞ்சிக்குரிய தெய்வம் என்று வரையறுத்துக் கூறியிருக்கிறார்கள் புலவர்கள். நூலை இயற்றியவர்கள் எந்தச் சமயத்தினராயினும் முருகனுக்குள்ள இந்த உரிமையைப் பறிப்பதில்லை. புத்தமித்ரர் என்ற பௌத்தர் தாம் இயற்றிய வீரசோழியம் என்ற நூலில் குறிஞ்சித்திணைக்குத் தெய்வம் முருகன் என்றே சொல்லுகிறார். அவர் விரும்பியிருந்தால், அதற்குப் புத்தன் தெய்வம் என்று சொல்லியிருக்கலாம், அகத்தியர் சிவபிரானிடம் தமிழ் கேட்டார் என்று நாம் சொல்வோம். பௌத்தராகிய புத்தமித்திரர் அவலோகிதன் என்னும் பௌத்த தெய்வத்தினிடம் கேட்டதாகப் பாடுகிறார். "ஆயுங் குணத்தவ லோகிதன் பால்நி றருந்தமிழ்கேட்டு" என்று கூறுகிறார். அது போலக் குறிஞ்சி முதலியவற்றுக்கு வெவ்வேறு தெய்வங்களைக் கூறியிருக்கலாம். அவர் அந்தப் பிழையைச் செய்யவில்லை. குறிஞ்சிக் கிழவன் முருகனே என்று இலக்கணம் வகுக்கிறார்.*

*புறச்சமயமாகிய சைன மதத்தைச் சேர்ந்தவர் நாற்கவிராச நம்பி என்பவர் அவர் இயற்றிய அ பாருள் விளக்கம் என்ற நூல் புலவர்கள் மிகுதியாகப் பயிலும் நூல். அதிலும் சைனராகிய ஆசிரியர் குறிஞ்சிக்கு உரியவன் முருகனென்றே பாடினார். இத்தாலியிலிருந்து வந்த கிறிஸ்துவப் பாதிரியாராகிய வீரமாமுனிவர் தாம் இயற்றிய தொன்னூலிலும் இந்த உரிமையை மாற்றவில்லை. யாரும் மாற்றத் துணியாத கிழமை முருகனுக்கும் குறிஞ்சிக்கும் அமைந்திருக்கிறது.*

## அருணகிரியார் கூறுவது

*கிழவன் என்ற சொல்லுக்குப் பழங்காலத்தில் உரிமையையுடையவன்*

*என்ற பொருள்தான் இருந்தது. பிற்காலத்தில் முதியவனையும் கிழவன் என்று வழங்கும் வழக்கம் உண்டாயிற்று. அருணகிரிநாதர் காலத்தில் அந்தப் பொருள் வந்துவிட்டது. "கிழவனாய்ப்புக்கு நின்று", "தொண்டு கிழவனிவன்ஆர்" என்று திருப்புகழில் முதியவன் என்ற பொருளில் அச்சொல்லை ஆளுகிறர்.*

*முருகனுடைய திருநாமமாகிய குறிஞ்சிக் கிழவன் என்பதை எண்ணி அருணகிரிநாதர் நயமாக ஒரு பாட்டுப் பாடுகிறார். கந்தர் அலங்காரத்தில் 'இந்த உலகம் என்ன பைத்தியக்கார உலகமாக இருக்கிறது! முருகன் மாறாத இளமையுடையவன்; குழந்தை; இளங்குருத்துப் போன்ற பச்சிளங்குழந்தை, அவனைக் கிழவன் என்று சொல்கிறதே! அவன் பால் குடிக்கும் பச்சைக் குழந்தை; தொட்டிலில் வளரும் பருவக் குழந்தை. பாலுக்காக அழும் குழந்தை. இப்படி இருக்க! அவனைக் குறிஞ்சிக் கிழவன் என்று சொல்லலாமா?' என்று வேடிக்கையாகப் பாடுகிறார்.*

*"திருந்தப் புவனங்கள் ஈன்றபொற் பாவை திருமுலைப்பால்*
*அருந்திச் சரவணப் பூந்தொட்டில் ஏறி அறுவர் கொங்கை*
*விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழும்*
*குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென்று ஓதும் குவலயமே"*

*என்பது கந்தர் அலங்காரம். திருமுருகாற்றுப்படையில் வரும், "விண்பொரு நெடுவரைக்* ***குறிஞ்சிக் கிழவ" என்ற தொடர் அருணகிரிநாதர் உள்ளத்தில் எழுப்பிய ஒளியே இந்தப் பாட்டு.***

## புலவர் ஏறு

***முருகன் அறிவுடையவர்களுக்கெல்லாம் தலைவன், புலமை யுடையவர்களில் தலைமை பூண்டவன். அகத்தியரென்னும் பெரும்புலவருக்குத் தமிழை அறிவுறுத்திய மாபெரும் புலவன், அவனை நல்ல மொழிகளால் எல்லோரும் புகழ்கிறார்கள்.***

**பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே!**

***(சாதி, சமயம், இனம், நாடு, மொழி ஆகியவற்றால் வெவ்வேறாக இருக்கும் பலவகையினரும் புகழ்கின்ற நல்ல மொழிகளுக்கு உரியவனாகிய புலவர்களுக்கு ஆண் சிங்கம் போன்றவனே)***

***'பலரும் புகழ்ந்து சொல்லும் நன்றாகிய சொற்களையுடைய பரசமயத்திலுள்ளார்க்கு ஏற்றின் தன்மையையுடையவனே' என்று நச்சினார்க்கினியர் உரை எழுதி, என்றது, கல்வி மதத்தையுடைய யானை போல்வார்க்குச் சிங்க ஏறு போல்வாய் என்றதாம் என்று விளக்குவார்.***

*'பரசமயத்தில் உள்ளார்க்கு ஏறு போல்வாய்' என்று சொன்னது, முருகனே ஞானசம்பந்தராக அவதரித்தார் என்ற கொள்கையை எண்ணிப் போலும். ஞானசம்பந்தரைப் பரசமய கோளாரி என்று கூறுவர்.*

*முருகன் எல்லா மொழியிலும் வல்லவனாதலின் பலரும் புகழ்ந்தனர். புலவர் என்பதற்கு ஞானிகள் என்று ஒரு பொருள் உண்டு. ஞானியர்களுக் கெல்லாம் தலைவனாகிய ஞானபண்டிதனே என்று பொருள் கொள்வதும் பொருந்தும். தேவர்களுக்கும் புலவன் என்று பெயர் உண்டு. அதனால், 'தேவர்களுக்கெல்லாம் ஏறுபோன்ற தலைவனே' என்றும் பொருள் கொள்ளலாம். "சுரலோக சிகாமணியே" என்பது அநுபூதி.*

## பெரும் பெயர் முருகன்

*இனி அப்பெருமானுடைய திருநாமமாகிய முருகன் என்பதன் சிறப்பைச் சொல்ல வருகிறார்.*

அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக

*மரபு என்பது இலக்கணம். 'பெறுவதற்கரிய இலக்கணங்களால் வந்த பெரிய திருநாமமாகிய முருகன் என்னும் திருநாமத்தை உடையவனே!' என்பது இதற்குப் பொருள்.*

*முருகை உடையவன் முருகன். அந்தத் திருநாமத்தைப் பெறுவதற்குரிய மரபு அல்லது தகுதி யாவருக்கும் இல்லை. அது பெறுவதற்கு அரியது. அதைப் பெற்றவன் முருகன், அவன் திருநாமம் பொருளாலும் கலையாலும் பயனாலும் மிகப் பெரியது; அது பெரும் பெயர்.*

*முருகனிடம் உள்ள அனந்த கல்யாண குணங்கள் ஒப்புச் சொல்லுதற்கு இயலாத நிலையில் உள்ளன. முருகு என்னும் சொல்லுக்குப் பல பொருள்கள் உண்டு. நிகண்டுகளில் அவற்றைக் காணலாம். எல்லாவற்றையும் தொகுத்துக் காட்டும் தமிழ்ப் பேரகராதியில், இளமை, மணம், அழகு, தெய்வத் தன்மை, வெறியாட்டு வேள்வி, திருவிழா, பூத்தட்டு, தேன், கள், எலுமிச்சை, அகில், எழுச்சி, விறகு, காதணிவகை என்ற பொருள்கள் உள்ளன.*

*இவற்றில் தலைமையானவை மணம், தெய்வத்தன்மை, இளமை, அழகு என்பவை. இந்த நான்கையும் குறிப்பாக நக்கீரரே பின்பு திருமுருகாற்றுப்படையில் கூறுகிறார். "மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி" என்று 290-ஆம் அடியில் சொல்கிறார்; மணமும், தெய்வத்தன்மையும், இளமையும், நலமாகிய அழகும் அவன் தன் திருவுருவத்தில் காட்டுவான் என்று கூறுகிறார்.*

*இந்த நான்கு மரபுகளும் கடவுள் திருவுருவங்களில் வேறு யாருக்கும்*

*அமையாத வகையில் முருகனிடம் சிறந்து நிற்கின்றன. அழியாத ஞான மணமும், அருளென்னும் தெய்வத்தன்மையும், என்றும் அழியாத இளமையும் என்றும் மாறாத பேரழகும் உடையவன் முருகன், அவன் ஞான ஸ்கந்தன். கருணைகூர் முருகங்களாறுடைய பேரருளாளன் என்றும் அழியாத இளமைக்காரன். ஆயிரம் கோடி காமர் அழகெலாம் திரண்டு ஒன்றாகி மேவினாலும் இணையாகாத வடிவழகன். ஆகவே அவன் இயல்புகள் பிறரால் பெறுவதற்கு அரியன. அத்தகைய முருகு அவனிடம் இருப்பதனால் அவன் திருநாமம் வேறு யாருக்கும் பெறற்கு அரியதாயிற்று. பரிபாடலும், 'பெரும் பெயர் முருக!' என்று அவனைப் பாராட்டும்.*

*முருகன் என்னும் திருநாமம் பல பொருள்களையும் தன்னுள் அடக்கி நிற்கிறது. ஞானபண்டிதா, அருளாளா, பாலசுப்பிரமணியா, சுந்தரமூர்த்தி, பக்தர்களுக்குத் தேனாகும் இறைவா, வேள்வி காவலா என்று பல திருநாமங்கள் கூறிப் பெறும் பயனை அந்தத் திருநாமம் ஒன்றை ஓதிப் பெறலாம். அதனால்தான் அருணகிரிநாதர் அது சொல்லால் ஒன்றாக நின்றாலும் அதைத் திருநாமங்கள் என்று சொல்கிறார்.*

"மொழிக்குத் துணைமுரு காஎனும் நாமங்கள்"

*(கந்தர் அலங்காரம்)*

*மரபு என்பதற்கு வரலாறு என்பது ஒரு பொருள். பிறரால் பெறுவதற்குரிய வரலாற்றையும் பெரிய பெயரையும் உடைய முருகனே என்றும் பொருள் கொள்ளலாம். பெயர் என்பதற்குப் பொருள் என்றும் ஒரு பொருள் உண்டு. நச்சினார்க்கினியர் அந்தப் பொருளை உரை கூறுகிறார். 'பிறருக்குப் பெறலரிய முறைமையினையுடைய பெரும் பொருளையுடைய முருக, என்று பொருளெழுதி, 'பெரும் பொருளென்றது வீட்டினை' என்று விளங்குவார். முத்திச் செல்வத்துக்குத் தலைவனாக நின்று அதனை அடியார்களுக்கு வழங்குபவன் முருகனாதலின் இவ்வாறு பொருளுரைத்தார்.*

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ!
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக!

## பேரிசையாளன்

*செல்வத்தைப் பெற்றவர்கள் அதனால் வரும் இன்பங்களை நுகர்வதோடு நின்றால் சிறப்பன்று. செல்வத்துப் பயனே ஈதல் (புறநானூறு) என்று*

சொல்வார்கள். எத்தனைக்கு எத்தனை செல்வம் இருக்கிறதோ, அத்தனைக்கு அத்தனை அறம் புரிய வேண்டும். அதனால் புகழ் பரவும். "ஈவார்மேல் நிற்கும் புகழ்" என்பது திருக்குறள்.

பெரிய செல்வர்கள் தம்முடைய செல்வத்தை நுகர்வதோடு நின்றிருந்தால் அந்தச் செல்வம் அழியும்; அவர்களும் மாய்ந்து போவார்கள்; அவர்கள் பெயரும் அவர்களுடன் மறைந்து போகும். ஆனால் அழிந்தொழியும் செல்வத்தைக் கொண்டு அறம் புரிபவர்கள், அந்தச் செல்வம் போனாலும் அவர்கள் மறைந்தாலும் அவர்கள் புகழ் மறையாமல் வாழும். உலகில் வாழும் போதும் அவர்களுக்கு இசை பெருகும். அப்பாலும் புகழ் நிற்கும்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்று திருவள்ளுவர் கூறுவது இங்கே நினைப்பதற்குரியது.

சிறிதளவு பொருளைக் கொண்டு அறம் செய்பவனுடைய புகழ் ஓரளவு பரவும். பல காலம் நிற்கும் அறங்களைப் புரிபவன் புகழ் நீடித்து நிற்கும். பலருக்குப் பயன்படும் அறங்களைப் புரிபவன் புகழ் பரந்து விரியும், மிகச் சிறந்த பொருளைப் பலருக்குப் பலகாலம் பயன்படும்படி வழங்குபவன் புகழ் நீண்டு பரந்து நிற்கும்.

முருகன் புகழ் அப்படிப் பரவியிருக்கிறது. அவன் தன்பால் அடியார் எது வேண்டி வந்தாலும் அதனை ஈயும் வள்ளல். அவனால் அளிக்க முடியாத பொருள் ஏதும் இல்லை. இந்த அளவுதான் அளிப்பான் என்ற எல்லையும் இல்லை. அவன் வரம்பிகந்த செல்வம் உடையவன். பிறரால் வழங்குதற்கு அரிய செல்வம் ஒன்று அவனிடம் உண்டு. அதுதான் முத்தி யென்னும் செல்வம். அதனை வேறு யாரிடமிருந்தும் பெறமுடியாது. அதைத் தருவதால் அவன் புகழ் மேன்மேலும் பரவிக் கொண்டே இருக்கிறது.

முருகனுடைய வள்ளன்மையையும் அதனால் விளையும் புகழையும் புலப்படுத்தும் திருநாமத்தை அடுத்தபடி கூறுகிறார் நக்கீரர்.

**நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபே ராள!**

(தன்பால் விரும்பி வந்தவர்களுக்கு அவர் விரும்பியதைத் தந்து நிரம்ப நுகரச் செய்யும். பெரிய புகழை உடையவனே).

நசை என்பது விருப்பம், முருகனை அணுகினால் வேறு யாராலும் வழங்க முடியாத பெருஞ் செல்வத்தைப் பெறலாம் என்ற விருப்பத்தோடு அவனை அணுகுகிறார்கள் அன்பர்கள். ஆகையால் அவர்களை நசையுநர்

என்றார். இந்த அடிக்கு, 'வீட்டைப் பெறவேண்டுமென்று நச்சி வந்தார்க்கு, அதனை நுகர்விக்கும் பெரிய புகழை ஆளுதலையுடையாய்' என்று உரை எழுதுவர், நச்சினார்க்கினியர்; பேரிசை என்று மாறுக என்றும் எழுதுவர்.

## ஆர்த்துதல்

ஆர்த்தும் என்பதற்கு ஆரச் செய்யும் என்பது பொருள்; ஆர்தல் - நிறைதல். நுகர்தல்; இங்கே அவ்விரண்டையும் இணைத்துப் பொருள் கொள்ளுதல் சிறப்பு. தன்னை அண்டி வந்தாருக்கு யாதொரு குறைவும் இன்றி நிரம்பி வழங்கி அதனை முற்றும் நுகரச் செய்பவன் முருகன், தன்பால் வந்து கேட்டவனுக்குப் பிறரிடம் மறுபடியும் சென்று கை நீட்டாமல் நிறையக் கொடுப்பது வண்மையாளர் இயல்பு.

"இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள"

என்ற குறளின் உரைகளில் ஒன்றாகிய, 'அதனைப்பின்னும் பிறன் ஒருவன்பாற் சென்று உரையா வகையால் கொடுத்தல்' என்பதை இங்கே நினைத்துப் பார்க்க.

"செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம்
பெருமான் முகம்பார்த்த பின்னர் - ஒருநாளும்
பூதலத்தோர் தம்மைப் பொருள்நசையாற் பாராவாம்
காதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்"

என்ற பழம் பாடலும் இக்கருத்தை உரைப்பது காண்க.

குறைவிலா நிறைவாக இருக்கும் இறைவன் ஒருவனே குறைவின்றி நிரம்பக் கொடுப்பவன், மற்றவர்கள் தாங்களே குறையுடையவர்களாதலின் பிறருக்குக் குறைவின்றிக் கொடுக்கும் ஆற்றல் அவர்களிடம் இராது. ஆதலின் ஆர்த்தும் பெருமையை உடையவனாகிய முருகனைப் போற்றச் சொல்கிறார் நக்கீரர்.

நுகரச் செய்யும் என்பது ஆர்த்தும் என்பதற்கு உரிய மற்றொரு பொருள், பொருளை வழங்கினாலும் அந்தப் பொருளினால் வரும் போகத்தைப் பொருளுடையவன் பெறுவான் என்று சொல்வதற்கில்லை. புலவனுக்கு யானையைக் கொடுத்தால் அவன் அதைக் கொண்டு என்ன செய்வான்? யானையைக் கட்டித் தீனி போடுவது எப்படி? அதனால் பழங்கால வள்ளல்கள் யானையை வழங்கும் போது அந்த நிலைக்கு ஏற்ற செல்வத்தையும் வழங்குவார்கள்.

ஒரு புலவனுக்குச் செல்வன் ஒருவன் தேரை ஈந்தான். அதில் எப்படி ஏறுவது என்று அந்தப் புலவனுக்குத் தெரியவில்லை. அவன் இப்படி ஏற வேண்டும் என்று சொல்லிக் கொடுத்தானாம். ஏறென்று ஏற்றி என்று கூறுகிறார் புலவர்.

*பொன்னும் மணியும் பிற பொருளும் இருந்தாலும் அவற்றால் வரும் இன்பத்தை நுகரும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. நுகர்வதற்கும் ஒரு புண்ணியம் வேண்டும்.*

*பொன்னானாய் மணியானாய் போகம் ஆனாய் என்று அப்பர் சுவாமிகள் பாடுவார். இறைவனே போகமாகவும் இருந்து அருள் செய்கின்றானாம்.*

*முருகன் தன்பால் வருகிறவர்களுக்கு நிரம்பக் கொடுப்பதோடு அதை அவர்கள் நன்கு நுகரவும் செய்வான். இந்தக் கருத்தை ஆர்த்தும் என்ற சொல் புலப்படுத்துகிறது.*

*உயர்ந்த செல்வத்தைக் குறைவறக் கொடுத்து அதனை நுகரும்படி செய்யும் வள்ளலுடைய புகழ் சிறியதாகவா இருக்கும்? அதனால்தான் முருகனை, 'இசை பேராள' என்றார்.*

## அலந்தாரைக் காப்பவன்

*முருகன் கருணைப் பெருங்கடல். துன்புறும் உயிர்களைக் காப்பாற்ற வேண்டும் என்னும் பேரருளாளன். பிறரால் துன்புற்று வேறு ஒரு துணையும் இன்றி ஆற்றலழிந்து நிற்கும் அநாதைகளை அருள் கூர்ந்து காப்பாற்றும் பெருமான். தேவர்கள் பலமுடையவர்கள். தம்மை நாடினவர்களுக்கு வரம் ஈயும் வண்மை உடையவர்கள். ஆயினும் அசுரேந்திரனாகிய சூரனால் அவர்களுடைய ஆற்றல்கள் அழிந்தன. நிர்க்கதியாக நின்றார்கள். அவர்களை முருகன் காப்பாற்றினான். இவ்வாறு இடுக்கண் அடைந்து கதியற்று வந்தவர்களைக் காக்கும் செயலைப் பல முறை முருகன் ஆற்றியிருக்கிறான். அவன் அலந்தோர்க்கு அளிப்பவன்.*

*அவன் செக்கச் சிவந்த நிறமுடையவன். அதனால் சேய் என்ற திருநாமம் அவனுக்கு வந்தது. அத்தகைய அழகுத் திருமேனியில் மதாணி முதலிய பொன்னணிகளை அணிந்திருக்கிறான், அன்பர்கள் அவனை அலங்கரித்துப் பார்க்க வேண்டும் என்னும் ஆர்வமுடையவர்கள். அவர்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்க அவன் அணிகலன்களை அணிகிறான்.*

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்!

*(துன்புற்று நிர்க்கதியாக வந்தவர்களுக்கு அருள் வழங்கிக் காப்பாற்றும், பொன் அணிகலன்களை அணிந்த, செவ்வண்ண மேனிப் பெருமானே!)*

*கைபுனைந்து இயற்றாத அணிகலன்களைத் தேவரும் கடவுளும் அணிந்திருப்பதாகச் சொல்லுவது மரபு, 'நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழை''யைத் தேவமகளிர் அணிந்திருப்பதாக முதலில் நக்கீரர்*

*சொல்லியிருக்கிறார். அம்பிகையை, "இழையணி சிறப்பிற் பழையோள்" என்று கூறியதையும் பார்த்தோம்.*

**பரிசிலரைத் தாங்குபவன்**

*இனி முருகனுடைய வீரத்தையும் அதனால் விளையும் கொடைத் திறத்தையும் சொல்ல வருகிறார்.*

*வீரமுடையவர்களுடைய தோள், திண்ணியதாக இருக்கும். மார்பு அகன்றிருக்கும்; அதனால் மார்புக்கே அகலம் என்று பெயர் வந்தது. பரந்த மார்பு வீரத்துக்கு அறிகுறி. முருகன் பெரு வீரமும் அகன்ற மார்பும் உடையவன். எத்தனையோ போர்களில் வெற்றி கண்ட மார்பு அது. போரில் அஞ்சி ஒதுங்காமல் பகைவர்களின் முன் நின்று மார்பு நிமிர, விழுப்புண் பட்டாலும் தளராமல் பொருதல் வீரர்களுக்கு அழகு 'நான் என்று மார்தட்டும் பெருமாள்' முருகன். ஆகவே அந்தத் திருமார்பை, 'மண்டு அமர்க்கடந்த வென்றாடு அகலம்' என்று சிறப்பிக்கின்றார் ஆசிரியர். வஞ்சியாமல் எதிர் நின்று கொல்வதைக் கடத்தல் என்பர். முருகன் அவ்வாறு போர் புரிகிறவன்.*

*இவ்வாறு பகைவரோடு போர் செய்வதனால் முருகன் வெற்றியை அடைகிறான். அந்த வெற்றியினால் கிடைக்கும் பொருள்களை அவன் தன்னை வேண்டி நிற்பவர்களுக்கு வழங்கி விடுகிறான். தனக்கென்று பாதுகாத்து வைத்துக் கொள்வதில்லை. சூரனிடமிருந்து மீட்ட தேவலோகத்தை அவன் இந்திரனுக்கே வழங்கிவிட்டான்.*

*வள்ளல்கள் தம்முடைய பெரு வீரத்தால் பெற்றவற்றைத் தம்மிடம் வந்து இருக்கும் புலவருக்கும் பாணருக்கும் அளித்து விடுவார்களா. முருகன் தன் மார்பின் வீரத்தால் பெற்றவற்றைத் தன்னை நாடி வரும் பரிசிலருக்கு வழங்கி விடுகிறான். அவன் இத்தகைய செயல்களால் ஓங்கி நிற்கிறான். உருவத்தாலும் உயர்ந்து நெடியவனாக இருக்கிறான்.*

மண்டுஅமர்க் கடந்தநின் வென்றுஆடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்!

*(மேல் நெருங்கி வருகின்ற போர்களை வஞ்சியாமல் எதிர் நின்று முடித்து நின்னுடைய வென்று அடுகின்ற மார்பினால் (வரும் செல்வத்தைக் கொண்டு) பரிசிலர்களைப் பாதுகாக்கும், அழகையுடைய நெடிய வேளே! மண்டு - நெருங்கும். கடந்த - வஞ்சியாமல் எதிர்நின்று கொன்ற, வென்று ஆடு - வெற்றி பெற்று அடுதலையுடைய. அகலம் - மார்பு. பரிசிலர் - பரிசில் பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு வரும் இரவலர். தாங்கும் - பாதுகாக்கும். உரு - அழகு).*

*இவ்வாறு மார்பின் வலிமையால் பெற்ற செல்வத்தைப் பரிசிலருக்கு ஈவதாகச் சொல்வது ஒரு மரபு. கொண்கானங்கிழான் என்ற வள்ளலை மோசிகீரனார் என்பவர் புகழும் போது,*

*"இலம்படு புலவர் மண்டை விளங்குபுகழ்க்*
*கொண்பெருங் கானத்துக் கிழவன்*
*தண்டார் அகலம் நோக்கின மலர்ந்தே" (புறநானூறு, 153)*

*என்று பாடுகிறார். 'மண்டை அகலம் நோக்கி மலர்ந்த என்ற கருத்து; கொடுக்கும் பொருள் மார்பின் வலியான் உளதாமாகலின், அகலம் நோக்கின என்றதாகக் கொள்க' என்று அதன் பழைய உரையாசிரியர் விளக்குகிறார்.*

*போரிலே பெற்ற செல்வத்தைப் பரிசிலருக்கு வழங்கிப் பாதுகாக்கும் பண்பை உடையவன் முருகன். இதனால் அவன் வீரமும் கொடைத்திறமும் ஒருங்கே புலனாகின்றன.*

*'மண்டமர் கடந்த வென்றாடு நின் அகலத்துப் பொலம் பூண் சேஎய் என்று கூட்டி, 'மிக்குச் செல்கின்ற போர்களை முடித்த வென்றடுகின்ற நினது மார்பிடத்தே பொன்னாற் செய்த பேரணிகலங்களை அணிந்த சேய்' என்று பொருளரைப்பர் நச்சினார்க்கினியர்.*

*உருகெழு என்பதற்கு, பகைவர்களுக்கு அச்சத்தை உண்டாக்குகின்ற என்றும் பொருள் கொள்ளலாம்.*

## மிகப் பெரியவன்

*முருகனை யாவரும் துதிக்கிறார்கள். அவனுடைய பெயர் எங்கும் பரவுகிறது. மிகப் பெரியவர்களெல்லாம் அவனை ஏத்துகிறார்கள். அவன் எல்லோரையும் விடப் பெரியவன் அல்லவா? அவன் பெயர் பெரியது; புகழ் பெரியது. அவனை ஏத்துபவர்களும் பெரியவர்கள். பதவியால் பெரிய பிரமன் முதலியோர் அவனை ஏத்துகிறார்கள்; ஆற்றலால் பெரிய இந்திரன் அவனை ஏத்துகிறான். தவத்தால் பெரிய முனிவர்கள் அவனை ஏத்துகிறார்கள். அழகால் பெரிய மன்மதன் ஏத்துகிறான். கல்வியால் பெரிய அகத்தியரும் பிறரும் ஏத்துகின்றனர். இப்படிப் பல துறைகளிலும் பெரியவர்கள் ஏத்தும்பெரிய புகழையும் பெயரையும் உடைய கடவுள் முருகன்.*

பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்!

*(தேவரும் முனிவரும் பிறருமாகிய பெரியவர்கள் துதிக்கின்ற பெரிய திருநாமத்தையுடைய கடவுளே!)*

*இயவுள் என்பது மிக அரிய சொல். அதற்குத் தலைவன் என்றும் கடவுள் என்றும் பொருள் உரைப்பர்.*

## சூர சங்காரன்

*முருகன் வீரன் என்பதை அடிக்கடி நினைப்பூட்டுகிறார் நக்கீரர். உலகத்திலுள்ள மக்கள் அச்சத்தில் அழுந்தித் துயருறுகிறார்கள். பசிக்கும், பகைக்கும், வறுமைக்கும், பிணிக்கும் அஞ்சி அஞ்சிச் சாகிறார்கள். தமக்குப் பெருந்துணை ஒன்று இருக்கிறது என்ற நினைவு வந்தால் அந்த அச்சம் போகும். வீரம் மிக்க ஒருவனுடைய துணை இருக்கிறது என்பதை உறுதியாக எண்ணி நம்பினால் நம் அச்சம் போய்விடும். அதனால் முருகனுடைய வீரத்தையும், அதனால் அவன் பெரிய பகைகளை வென்ற தீரத்தையும், அதனால் மற்றவர்கள் பெற்ற நன்மையையும் பன்முறை வெவ்வேறு வகையில் எடுத்துச் சொல்கிறார் ஆசிரியர். இப்போது சூரனை வென்ற வீரத்தை நினைப்பூட்டுகிறார். முன்பும் சொன்னாலும் மீண்டும் மீண்டும் வற்புறுத்தினால்தான் நம் உள்ளத்தில் பதியும் என்று கருதிச் சொல்கிறார்.*

*சூரன் தனக்குள்ளே வரம் முதலிய பலத்தினாலும், தன்னுடைய தம்பிமார் தனயன் ஆகியோர் துணை உண்டென்ற மிடுக்கினாலும், அறுபத்தாறு கோடி அசுரர் படையாக வருகிறார்கள் என்ற செருக்கினாலும் முருகனை எதிர்த்து வந்தான். முருகன் அவனுடைய செருக்குக்குக் காரணமானவற்றை ஒவ்வொன்றாகக் குலைத்து அழித்தான். பெரிய மரத்தில் முதலில் கிளைகளையெல்லாம் வெட்டிவிட்டுப் பிறகு அடிமரத்தை வெட்டுவது போல, அவனுடைய தம்பிமாரையும் படைகளையும் அழித்துப் பிறகு அவனைக் கொன்றான். அவனுடைய குலத்தை வேரோடு களைந்தான். அவனுடைய சுற்றத்தார் அனைவரும் அழிந்தனர். அவ்வாறு அழித்த பெரிய வலிமையை உடையவன் முருகன்.*

சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி

*(சூரனது குலத்தை அடியோடு அழித்த மார்பையுடைய மிக்க வலிமையைப் பெற்றவனே! மருங்கு - குலம். மொய்ம்பு - மார்பு).*

*இங்கும் வீரத்தின் சிறப்பைப் புலப்படுத்த மார்பைச் சொன்னார். மொய்ம்பு என்பதற்கு வலிமை என்ற பொருளும் உண்டு. போரிலே புக்கு வெல்லும் வீரத்தை மொய்ம்பென்றும், பிற வலிமைகளை மதவலி என்றும் கூறினார் என்றும் கொள்ளலாம்.*

*பின்னால் வரும் 'போர் மிகு' என்ற தொடரை முன்னாலே கூட்டி, 'போர்மிகு மொய்ம்பின் சூர்மருங்கு. அறுத்த மதவலி' என்று கொண்டு, போர்த் தொழிலிலே மிகுகின்ற மொய்ம்பாலே சூரபன்மாவின் குலத்தை இல்லையாக்கின மதவலி என்னும் பெயரை உடையாய் என்று உரை எழுதுவர், நச்சினார்க்கினியர்.*

## போர்மிகு பொருநன்

*இவ்வாறு நிகழும் போர் எதுவாயினும் அதில் மிக்குத் தோன்றும் பெருவீரன் முருகன். வீரனுடைய வலிமையைப் போரில்தான் பார்க்க முடியும். போர் என்று சொன்னாலே வீரர்களுடைய தோள் பூரிக்குமாம்.*

*"போரென்ன வீங்கு பொருப்பன்ன*
*திரள்கொள் திண்டோள்" (பூக்கொய் படலம்)*

*என்று கம்பர் கூறுவர்.*

*இத்தகைய பெருவீரன் தலைவனாகிய முருகன்.*

போர்மிகு பொருந குரிசில்!

*(போரிலே சிறந்து விளங்கும் வீரனே! தலைவனே! பொருபவன், பொருநன், குரிசில் என்பதற்கு உபகாரி என்றும் பொருள் கொள்ளலாம்).*

*'போரை மிகப் பொர வல்லவனே' என்பது ஒரு பழைய உரை.*

*பொருநன் என்பதற்கு, 'உவமிக்கப்படுவாய்' என்று பொருள் எழுதுகிறார் நச்சினார்க்கினியர். 'பொருவப்படுமவன் பொருநன் என நின்றது' என்று விளக்குவார். தனக்குப் பிறர் ஒருவர் உவமையாகாது, தான் பிறருக்கு உவமையாகும் பெருமையுடையவன் என்றபடி.*

*அழகுக்கும் வீரத்துக்கும் முருகனை உவமை கூறுவது சான்றோர் மரபு.*

*"முருகொத் தீயே முன்னியது முடித்தலின்" (புறநானூறு, 56)*

*என்று நினைத்த காரியத்தை நிறைவேற்றும் பெருவலிமைக்கும்,*

*"முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ" (பெரியபுராணம்)*

*என்று அழகுக்கும்,*

*"கந்தனை யனையவர் கலைதெரி கழகம்" (கம்பராமாயணம்)*

*என்று இளமைக்கும் அறிவுக்கும் புலவர்கள் முருகனை உவமையாக எடுத்தாளுவதைக் காணலாம்.*

*இவற்றையெல்லாம் எண்ணியே நச்சினார்க்கினியர், 'உவமிக்கப்படுவாய்' என்று உரை கூறினார்.*

*'இவ்வாறு யான் அறிந்த அளவினாலே இருபத்தாறு திருநாமங்களைச் சொன்னேன். இவற்றோடு அவன் பெயர்களும் புகழும் நின்றுவிடவில்லை. இப்போது எனக்குத் தோன்றிய அளவுக்குச் சொன்னேன். இவற்றை நீ விடாமல் சொல்லி முருகனைத் துதிப்பாயாக' என்று கூறுகிறார் நக்கீரர்.*

*'நீ எங்கே அவனைக் கண்டாயோ அங்கே அவனைக் கையால் தொழுது காலில் விழுந்து வணங்கி இந்தத் திருநாமங்களைச் சொல்லி ஏத்துவாயாக!' என்று கூறி, மேலே இன்னது செய்ய வேண்டும் என்று அறிவுறுத்துகிறார்.*

.......................................................... எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது

*(என்று பலவகையாக நான் அறிந்த (உனக்குச் சொன்ன) இந்த அளவிலே சொல்ல வேண்டியவற்றை விடாமல் சொல்லித் துதித்து, ஆனாது - நில்லாமல்; அமையாமல்).*

*'என்று யான் அறிந்து நினக்குக் கூறிய அளவாலே நீயும் அமையாதே பலவற்றையும் கூறிப் புகழ்ந்து' என்பது நச்சினார்க்கினியர் உரை.*

## அளப்பரியவன்

*முருகனுடைய புகழையும் பெயர்களையும் சொல்லிக் கொண்டே போகலாம். அதற்கு முடிவே இல்லை. ஆனாலும் அவற்றை ஓரளவில் நிறுத்தி, மேற்கொண்டு பெற வேண்டிய பயனை அடைய வேண்டும் அல்லவா? ஒருவருடைய புகழையெல்லாம் சொல்லி அவரை விளிப்பதோடு அமையாமல், தான் வந்த காரியம் இன்னது என்று சொல்லி விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும். அழகிய அருச்சனை போல அமைந்த இருபத்தாறு நாமங்களைச் சொன்ன பிறகு, முருகனிடம் சமர்ப்பிக்கும் விண்ணபத்தையும் அறிவுறுத்த வருகிறார் நக்கீரர்.*

*முருகனுடைய திருநாமங்களைச் சொல்லி ஏத்திய பிறகு, வந்த காரியத்தைச் சொல்லி விண்ணப்பிக்கச் சொல்கிறார் நக்கீரர்.*

*"எம்பெருமானே, உன் புகழையும் ஆற்றலையும் கருணைச் சிறப்பையும் முற்றும் அறிந்து எல்லை காண்பவர் யார்? உலகில் உள்ள உயிர்கள் சிற்றறிவுடையன. அவை நின்பெருமையை எப்படி அறிய முடியும்? உன்னுடைய வடிவத்தைத்தான் முற்றும் அறிந்து கொள்ள முடியுமா? அந்தப் பேருருவத்துக்கு அளவு இன்னதென்று வரையறுக்க யார் இருக்கிறார்கள்? ஆகையால் உன்னை அளந்து முற்றும் தெரிந்துகொள்ள வந்தேன் என்று எளியேன் சொல்ல வரவில்லை. நின்னுடைய திருவடிக் காட்சி தந்தால் போதும். அதை எண்ணியே வந்தேன்" என்று அவனிடம் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.*

நின்அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தனென

*(நின்னை அளந்து அறிவது உலகில் நிலைபெற்ற உயிர்களுக்கு அருமையாதலால் நின்னுடைய திருவடியைத் தரிசனம் செய்ய எண்ணி*

வந்தேன். உள்ளி - எண்ணி).

"நின் திருவடியைப் பெறவேண்டு மென்று எண்ணி வந்தேன்" என்று நச்சினார்க்கினியர் உரை எழுதுவர்.

இறைவனுக்கு அப்பிரமேயன் என்பது ஒரு பெயர். எதனாலும் அளக்கப்படாதவன் என்பது பொருள். அளவைகளுக்கு முற்றும் உணர யாராலும் இயலாது. அதனால் நமக்கு ஒரு குறையும் இல்லை.

குடத்தில் நீர் எடுக்கச் செல்லும் பெண் ஆறு முழுவதையும் எடுத்து வருவதில்லை. தான் எடுத்துச் சென்ற குடத்தை நிரப்பிக் கொண்டு வருகிறாள். அதுபோல நாம் இறைவன் திருவுரு முழுவதையும் காண வேண்டுமென்பதில்லை. அவன் திருவடி தரிசனம் செய்தாலே போதுமானது. அது புறக்கண்ணால் பார்ப்பவருக்குத் தாமரையாகத் தோன்றிப் பிறகு அகக் கண்ணால் பார்க்கும் போது ஞானமாகத் தோன்றி இறுதியில் வீடாகவே இருக்கும்.

"தொண்டர்கண்டு அண்டிமொண்டு உண்டிருக்கும்
சுத்த ஞானம்என்னும்
தண்டையம் புண்டரிகம் தருவாய்"

என்று அருணகிரிநாதர் கூறுவர்.

அடியையே இலட்சியமாக உடைமையால் அன்பர்களுக்கு அடியார் என்ற பெயர் வந்தது.

## ஒப்பார் இல்லாதவன்

பிறகு முருகனைப் பார்த்து "எம்பெருமானே, நினக்கு ஒப்பார் யாரேனும் இருந்தால் அவரை அணுகலாம் என்று தோன்றும், நீயோ தனக்கு உவமை இல்லாதவனாக இருக்கிறாய். நீ ஞானபண்டித சாமி; ஞானமே வடிவானவன். நின் ஞானத்துக்கு ஒப்பான ஞானம் வேறு யாரிடத்தில் இருக்கிறது? ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஞானமூர்த்தி நீ ஆதலின் என் குறை இன்னதென்று நீ அறிந்திருப்பாயே" என்று சொல்லும்படி சொல்கிறார் நக்கீரர்.

**............................................ நின்னொடு**
**புரையுநர் இல்லாப் புலமையோய்!**

(நின்னோடு ஒப்பார் இல்லாத ஞானமுடையவனே!)

இறைவன் முற்றறிவுடையவன். அவனே ஞானம்; ஞானமே அவன்.

"நீயான ஞான விநோதம்"

என்பது கந்தர் அலங்காரம்.

"ஞானந் தான்உரு வாகிய நாயகன்"

என்பது கந்தபுராணம்.

'இவ்வாறு நீ அவனுடைய திருநாமங்களைச் சொல்லி, அவனுடைய திருவடி தரிசனத்துக்கு வந்ததாக விண்ணப்பித்துக் கொண்டிருக்கும்போதே அவன் கருணை புரிய வந்து விடுவான். நீ எண்ணிக்கொண்டு போனவற்றை யெல்லாம் சொல்லித் தீர்க்க என்ற ஆசை உனக்கு இருக்கலாம். ஆனால், அம்மா என்று கதறியவுடனே ஓடிவந்து அணைக்கும் அன்னையைப் போன்றவன் அவன். நீ சொல்வதற்கு முன்பே அருள்பாலிக்க வந்து விடுவான்'.

.............................................. எனக்

குறித்தது மொழியா அளவையின்

(என்று கூறி, நீ எண்ணியவை அனைத்தையும் சொல்லாமல் இருக்கும்போதே).

## உடன் இருப்போர் செயல்

எவ்வளவோ தூரம் நடந்து வந்த பக்தனுக்கு, முருகன் எங்கே இருப்பானோ, எப்படி இருப்பானோ, அவனைக் காண முடியுமோ என்று ஏங்கும் நிலை உண்டாகிறது. அந்த நிலை உண்டாக நியாயம் இல்லை. ஏனென்றால் முருகனுக்கு அருகில் இருக்கும் ஏவலாளர்கள், அந்த அன்பனுக்கு உதவி செய்ய முந்துகிறார்கள். 'இவன் நல்லவன்; அருள்புரிய வேண்டும்' என்று சொல்வார்களாம்.

முருகனைச் சுற்றியுள்ள தொழும்பர்கள் வெவ்வேறு வடிவத்துடன் இருப்பார்கள். அவர்களுக்கு முருகனுடைய பக்தர்களின் கூட்டம் மேலும் மேலும் வளரவேண்டுமென்று ஆசை. ஆகையால் எந்தப் பக்தன் வருகிறானோ என்று வழிமேல் விழி வைத்துப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

முருகனை முழுவதும் காணாத பக்தன், ஏதோ ஓரிடத்தில் முருகன் இருக்கும் இடம் இது என்ற உணர்வைப் பெறுகிறான். அப்போது அந்த இடத்திலேயே முருகனைத் துதித்து விண்ணப்பித்துக் கொள்கிறான். அதைக் கேட்ட முருகனுடைய அடித் தொண்டர்கள் வந்தவனுடைய இயல்பை ஊகித்து அறிந்துகொள்வார்கள்; விழாவெடுக்கும் இடத்தில் முருகன் எழுந்தருளி யிருப்பதை அறிந்து அவனை அணுகி, வந்த பக்தனைப் பற்றிச் சொல்வார்கள். "இவன் உன் கருணைக்குப் பாத்திரமானவன்; இரங்கத் தக்கவன்; அதில் சிறிதும் ஐயம் இல்லை. இவன் அறிவு வாய்ந்த புலவன்; உன்னிடம் ஒன்றைப் பெறும் பொருட்டு இங்கே இரவலனாக வந்திருக்கிறான்; நீ பெருவள்ளல். கேட்டவற்றை யெல்லாம் வழங்குபவன் என்பதை அறிந்து உன் புகழை விரும்பி இங்கே வந்திருக்கிறான், இனிமையான சொற்களைச்

*சொல்லிக்கொண்டு வந்துள்ளான்; நல்ல வார்த்தைகளைக் கூறுகின்றான். பல பல நல்ல பெயர்களை நன்றாகச் சொல்லித் துதிக்கிறான். இவனுக்கு அருள் புரிய வேண்டும்'' என்று அவர்கள் முருகனிடம் விண்ணப்பித்துக் கொள்வார்கள்.*

.............................................. குறித்துஉடன்
வேறுபல் உருவில் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி,
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தி.

*(நீ எண்ணியதை அறிந்த உடனே, வேறு வேறான பல வடிவங்களையுடைய கரிய பல ஏவலாளர்கள் விழா நிகழ்த்தும் இடத்தில் சிறப்புண்டாகும்படியாகத் தோன்றி, முருகனை நோக்கி. ''இவன் இரங்கத்தக்கவன்; அறிவு வாய்ந்த இரவலன்; ஈகையால் வந்த நின் புகழைக் கேட்டு விரும்பி இனியவையும் நல்லவையுமாகிய சொற்களையும் திருநாமங்களையும் நன்றாகப் பலபலவாகக் கூறித் துதித்து வந்தான் பெருமானே என்று சொல்ல. கூளியர் - ஏவலாளர். சாறு - விழா. முதுவாய் - இரவலன் - அறிவு வாய்ந்த புலவன்.)*

*'கூளியர் குறித்துத் தோன்றி, அளியன், பெரும, நின் வண்புகழைக் கூற நயந்து இனியவும் நல்லவுமாக ஏத்தி வந்தோன் என்று கூறவென முடிக்க' என்பது நச்சினிார்க்கினியர் காட்டும் முடிவு. கூளியர் என்பதற்குச் சேவித்து நிற்பார் என்று பொருள் கூறுவார் அவர்.*

*பெரிய மனிதர்கள் இரங்கக் கூடியவர்களாக இருந்தாலும் அவர்களைச் சார்ந்து சூழ்ந்திருப்பவர்கள் எளிதில் யாவரும் அப்பெரிய மனிதர்களை அணுக விடமாட்டார்கள். அதனால்தான் "சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வரங் கொடுக்க மாட்டான்" என்ற பழமொழி எழுந்தது. இது பெரும்பான்மையான உலகியல்.*

*ஆனால் முருகனுடன் இருக்கும் ஏவலர்களாகிய தொண்டர்கள் அப்படி இல்லை. யார் வந்தாலும் முருகனிடம் அழைத்துச் செல்வார்கள். "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற மனப்பாங்குடையவர்கள் அவர்கள்.*

*முருகனுடைய அருள் வெள்ளம் வழங்கி வற்றுவதன்று. எவ்வளவு பேர் வந்தாலும் வரட்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கிறார்கள், உடனிருக்கும் ஏவலர் குழாத்தினர். ஆகவே வந்த புலவனைக் கண்டவுடன் முருகனிடம் ஓடிச் சென்று விண்ணப்பித்துக் கொள்கிறார்கள்.*

*அதற்கு மேல் முருகன் தன் திருக்காட்சியைக் காட்ட வருகிறான்.*

## அணுக்கத் தொண்டர்கள்

முருகனிடம் இருந்து அவனுடைய குற்றேவல் செய்யும் தொண்டர்களுக்குத் தம் தலைவனாகிய முருகனுக்கு உலகு முழுவதுமே அடியாராக வேண்டும் என்ற ஆசை. சக்கரவர்த்தி ஒருவனுடன் இருக்கும் கூட்டத்தினர் உலகம் முழுவதும் தம்முடைய மாமன்னர் செங்கோல் ஒச்ச வேண்டுமென்று விரும்புவது இயல்பே. ஆனால் இந்தக் குறும்பல் கூளியரின் விருப்பத்தில் ஒரு வேறுபாடு உண்டு. மாமன்னரைச் சேர்ந்தவர்களுக்குத் தம் மன்னர் ஆணை எங்கு பரவ வேண்டும் என்பதே நோக்கம். இங்கே முருகனுடன் உள்ளவர்களுக்கோ, உயிர்க் கூட்டங்கள் யாவும் உய்ய வேண்டும் என்ற ஆவல். முன்னது அதிகார ஆசையின் விளைவு; பின்னது கருணையின் விளைவு.

முருகனுடன் இருந்து அணுக்கத் தொண்டு புரியும் பேறு எல்லோருக்கும் கிடைப்பது அன்று. இறைவன் திருவருளைப் பெற்று நுகர்வதில் நான்கு வேறு நிலைகள் உண்டு. அவன் அருட் செங்கோல் நடத்தும் இடத்தில் இருத்தல்; இது சாலோக பதவி, அவனுக்கு அண்மையில் இருந்து தொண்டு புரிதல்; இது சாமீபம். அவனுடைய உருவமே பெற்று விளங்குதல்; இரு சாரூபம். அவனுடன் இரண்டறக் கலத்தல்; இது சாயுஜ்ய பதவி. சாயுஜ்யம் என்பதே முத்தி நிலை. ஓரரசனுடைய குடிமகளாக இருத்தல், அவனுடைய அரண்மனையில் பணியாளாக இருத்தல், எப்போதும் சிறந்த அணிவகைகளோடு அவன் போகும் இடங்களுக்கு உடன் போய் உடன் உண்டு வாழ்தல், அவனுடன் ஒன்றிப் பட்டத்தரசியாக இருந்து இன்புறல் என்று வேறு நிலைகளுக்கு இவற்றை ஒப்பிடலாம்.

வேறு பல உருவில் குறும்பல் கூளியர் என்று நக்கீரர் குறிப்பிடும் தொண்டர்கள் முருகனுடைய அணுக்கத் தொண்டர்கள்; சாமீப்ய பதவி பெற்றவர்கள். அவர்கள் வரவர மேல்நிலையை அடைய நிற்பவர்கள்; சாரூப சாயுஜ்ய பதவி பெறப் போகிறவர்கள். அவர்கள் உயர் பதவியை அடைந்தால் அவர்களுக்கு இப்போது உள்ள பதவியை நிரப்ப ஆட்கள் வேண்டாமா? இனி வரும் அன்பர்கள் அந்த நிலையை அடைவார்கள். முருகனை அடைந்து பலர் வாழ்ந்து, வரவர மேல் நிலையை அடைய வேண்டுமென்பது இப்போது உள்ள அணுக்கத் தொண்டர்களின் ஆர்வம்.

## வந்தவன் தகுதி

அவர்கள் இறைவனிடம் சென்று, வந்த புலவனுடைய தகுதியை எடுத்துச் சொல்கிறார்கள். அவர்கள் எவ்வாறு வந்தவனுடைய தகுதியைச் சொல்கிறார்கள்? எடுத்தவுடன் "இவன் நின்னுடைய அருளுக்கு உரியவன்" என்கிறார்கள். "அளியன்தானே" என்பதற்கு இரங்குவதற்குரியவன் என்பது பொருள். முருகனுடைய கருணைக்குப் பாத்திரமாக வேண்டுமானால் அவனுக்கு உரிய இலக்கணம் என்ன? கண்டமாத்திரத்தில் பிறருடைய உள்ளத்தில் இரக்கத்தை உண்டாக்கும் பண்பு இருக்க வேண்டும், இறைவன் திருவருளுக்காக ஏங்கி நிற்க வேண்டும். அந்தத் தகுதி இந்த புலவனிடம் இருக்கிறது.

அடுத்தபடி அவன் 'முதுவாய் இரவலனாக' இருக்கிறான். முது என்பது பழுத்த அறிவு; அதைப் பெற்றவன் அவன். தான் பெறாத ஒன்றைப் பெறுவதற்காகத் தன் ஏழைமை தோற்றும்படி, தனக்கு இல்லாத பொருளைக் கொடுக்கும் வள்ளலை நோக்கி இரக்கும் பொருட்டு வந்திருக்கிறான். அறிவு வாய்ந்திருத்தல் ஒரு தகுதி; இரவலனாக இருத்தல் மற்றொரு தகுதி. நம் நிலையையும், நாம் அடைய வேண்டிய பொருள் இன்னதென்பதையும், அப்பொருள் இன்னாரிடம் உள்ளது என்பதையும், அதனை அடையும் வண்ணம் இன்னதென்பதையும் அறிந்து கொண்டவனே அதைப் பெறும் முயற்சியை மேற்கொள்வான். உலகின் இயல்பு உயிரின் இயல்பு, இறைவன் இயல்பு, ஆகியவற்றை நன்கு அறிந்தவனே, இப்போது உள்ள அவல நிலையினின்றும் விலகி மேல் நிலையை அடைய வேண்டும் என்று ஆர்வத்தைப் பெற முடியும், உண்மை இன்னதென்று தெளிவாக அறிந்தவனே மெய்ப்பொருளை அடைவதற்குரிய துறையில் இறங்குவான்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

என்பது குறள். கற்று மெய்ப்பொருள் காண்பதே அறிவு.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று கூறுவார் திருவள்ளுவர். அந்த மெய்யறிவை உடையவரே ஈண்டு மீண்டும் வாராத நெறியில் தலைப்படுவார்கள்.

புலவர், கூத்தர், பாணர் என்னும் கலைஞர்கள், தம்முடைய திறமையை உணர்ந்து பாராட்டிப் பரிசளிக்கும் வள்ளல்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தேடிச் சென்று அவர்களை அடைவார்கள். இரவலர் என்று அவர்களைச்

சொல்லுவது வழக்கம். அவர்களைப் போலவே இந்தப் புலவனும், 'இன்பம் எங்கே? அதை வழங்கும் வள்ளல் எங்கே?' என்று தேடி வந்திருக்கிறான்; வள்ளலிடம் பரிசு இரந்து வாழ வந்த புலவனைப்போல முருகனிடம் ஒன்றை இரக்க வந்திருக்கிறான். ஆகவே இவனும் இரவலன்தானே.

மற்றவர்கள் இரக்கும் பொருள்கள் எல்லாவற்றையும் விடச் சிறந்த பொருளை இரந்து பெற வேண்டும் என்று வந்தவன் இவன், அருள் என்னும் பொருளுக்கு ஈடாக வேறு ஏதும் இல்லை. அது கிடைத்தால் எல்லாம் பெறலாம். இறைவன் திருவருள் இருந்தால் சிறுதுரும்பும் அகிலாண்டங்களையும் படைக்கும் வன்மையைப் பெறும். அதைப் பெறும் பொருட்டு அறிவு வாய்ந்த புலவனாகிய இந்த இரவலன் வந்திருக்கிறான்.

இவன் தான் புலவன் என்ற மிடுக்கோடு வரவில்லை. புலமை, செருக்கு உண்டாவதற்கும் காரணமாகும். உடல் வலிமையினாலும் செல்வத்தினாலும் கல்வியினாலும் செருக்கு உண்டாகும். அவ்வாறு உண்டாகும் செருக்குகளுள் கல்விச் செருக்கு வலிமையுள்ளது. உடல் வலிமை அழிந்தாலும் செல்வம் அழிந்தாலும் அந்த இரண்டினாலும் உண்டாகும் செருக்குப் போய்விடும்; அவை விரைவில் அழியத்தக்கவை. ஆனால் கல்வியோ, பிறவி தோறும் தொடர்ந்து வருவது.

> "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
> கெழுமையும் ஏமாப் புடைத்து"

என்பது திருக்குறள். ஆகவே கல்வியினால் உண்டாகும் செருக்கு எளிதில் போகாது. நாய்க்கு வெறி பிடித்தால் அதை எளிதில் அடித்துக் கொன்று விடலாம். யானைக்கு மதம் பிடித்தால் அதை அடக்குவது எளிதல்லவே!

இங்கே வந்துள்ள புலவன் கல்விச் செருக்கு இல்லாமல் பணிவுடன் வந்திருக்கிறான். இரவலனாகத் தன் எளிய நிலை புலனாகும்படி வந்திருக்கிறான். 'உடையார் முன் இல்லார்' ஏக்கற்று நிற்பதுபோல் வந்து நிற்கிறான். முருகன் திருவருள் கிடைக்குமோ என்று ஏங்கி வந்திருக்கிறான்.

> "இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே"

என்றபடி, அவ்வாறு ஏங்குபவர்களுக்குத்தான் இறைவன் அருள்பாலிப்பான். இந்த ஏக்கம் தோன்றப் புலவன் நிற்பதனால் இவனை இரவலன் என்று முருகனுடன் உள்ள அணுக்கத் தொண்டர்கள் கூறுகிறார்கள்.

இரங்கத்தக்கவன், அறிவு வாய்ந்தவன், செருக்கின்றி நின் அருளுக்காக ஏங்கி நிற்பவன் என்ற கருத்தையெல்லாம் உள்ளடக்கி,

அளியன் தானே முதுவாய் இரவலன்

*என்று கூறுகிறார்கள்.*

*'இத்தகையவன் நீ பெறலரும் பரிசிலைத் தருவாயென்று பலரும் புகழ்வதைக் கேட்டுத் தானும் அதனைப் பெற வேண்டும் என்று வந்திருக்கிறான்' என்று புலவனுடைய உள்ளக் கிடக்கையை எடுத்துரைக்கிறார்கள்.*

*உங்களுக்கு அது எப்படித் தெரியும்? என்று முருகன் கேட்கலாம் அல்லவா?*

*"இவனுடைய நிலையும், இனியனவும் நல்லனவு மாகிய உன் புகழைப் பல படியாகச் சொல்லும் உரையும் இவன் இயல்புகளை உணர்த்துகின்றன" என்று அவர்கள் சொல்லாவிட்டாலும், அந்தக் கருத்துத் தோன்றும்படி பேசுகிறார்கள்.*

*வண்புகழ் என்பது வண்மையினால் வந்த புகழ். வள்ளல்கள் எங்கே இருக்கிறார்கள் என்று நாடும் இனத்தைச் சேர்ந்தவனாதலால் முருகனுடைய வண்புகழை அறிந்து நடந்து வந்திருக்கிறான். இவன் புலவனாதலால் இனியனவும் நல்லனவுமாகிய சொற்களைச் சொல்லித் துதிக்கத் தெரிகிறது. இவற்றைக் கண்டு கூளியர்,*

**வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென**
**இனியவும் நல்லவும் நனிபல ஏத்தி**

*(பெருமானே, இனியவையும் நல்லவையுமாகிய பல வார்த்தைகளைச் சொல்லித் துதித்து, நின் வல்லமையாலுண்டான புகழை விரும்பி வந்தான் என்று கூற) என்ற சிபாரிசு செய்கிறார்கள்.*

*வேறு எதையும் வேண்டாமல் இறைவனுடைய அருள் ஒன்றையே வேண்டி வந்தவர்களுக்கு எல்லா உதவிகளும் கிடைக்கும் என்ற உண்மையை இதனால் அறிகிறோம். புலவன் தன் விருப்பத்தை வெளிப்படையாகக் கூறுவதற்கு முன்பே அவனுடைய உள்ளக்கிடக்கையை உணரும் ஆற்றல் அணுக்கத் தொண்டர்களுக்கு இருக்கிறது. தலைவனாகிய முருகன் நல்லவன்; அவனுடன் இருக்கும் அணுக்கத் தொண்டர்களும் நல்லவர்கள்.*

*குருநாதன் பரம கருணையினால் தன்னை அடைந்த மாணாக்கன் தன்னைப்போல் சிறந்த அநுபூதியைப் பெற வேண்டுமென்று எண்ணி ஆவன செய்வான். அவனிடம் உள்ளதைப் போன்ற கருணை இந்தக் குறும்பல் கூளியர்களுக்கு இருக்கிறது.*

## பெறலரும் பரிசில்

*அணுக்கத் தொண்டர்கள், வந்த புலவன் நிலையையும் தகுதியையும் முருகனிடம் விண்ணப்பித்துக் கொண்டவுடன் அவன் என்ன செய்கிறான்? அவனுடன் உள்ள தொண்டர்களுக்கே இத்தனை அருள் இருக்கும் போது அவனுடைய பேரருளைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? அவன் உடனே அருள் புரிய எழுந்தருளுகிறான். தன்னுடைய பொருளை வாங்கிக் கொள்ள யாரேனும் இரவலன் வரமாட்டானா என்று எதிர்பார்த்து நிற்பது ஈகையாளன் இயல்பு. தன் குழந்தை பால் குடிக்காமையால் பால் கட்டிக்கொண்டு வருந்தும் தாய் அக்குழந்தைக்குப் பாலூட்ட விரைவது போல இறைவன் விரைகிறான்.*

### உயர்நிலை

*அவன் உலகம் கடந்த பேருருவினன், பேராற்றல் வாய்ந்தவன். எல்லோருக்கும் மேலான தெய்வம் இவன் என்பதை அந்தக் கோலமே காட்டும். அகடித கடனா சக்தியாகிய திறல் விளங்கும் விசுவரூபம் உடைய பெருமான். வையத்துக்கும் வானத்துக்கும் எட்டாமல் நிமிர்ந்து நிற்பவன். வானம் ஓங்கி ஓங்கி எல்லை காண முடியாமல் செல்கிறது. அவன் திருவுருவமும் அப்படியே உயர்ந்து வானைத் தோய்ந்து எல்லை காண முடியாமல் விளங்குகிறது. அத்தகையவன் இப்போது தன்னை நாடி வந்த புலவனுக்கு அருள் செய்ய வருகிறான். அவனுடைய இயல்பான நிலையில் அவனை அணுகுவது என்பது இயலாத காரியம். அவன் அடி நிழலை அடைந்து நிற்கலாம். அவன் விசுவரூபத்தைக் காண முடியாது. காண முயன்றால் அச்சமே உண்டாகும். பல காலம் கண்ணனோடு தோழனாகப் பழகி நின்ற அருச்சுனனே அப்பெருமான் விசுவரூபம் எடுத்து நின்ற போதும் "அப்பனே அச்சமாயிருக்கிறது. இதை அடக்கிக் கொள் என்று" புலம்பினானாம். ஆகவே, மிக்க திறல் விளங்கும் தன் விசுவரூபத்தை வானிலே உயரவிட்டு நிற்கும் முருகன், புலவன் தன் அடி நிழலை அடைந்து நிற்பதை அறிகிறான். தன் உயர்ந்த நிலை புலவனால் அடைவதற்கரியது மட்டும் அன்று. அவனுக்கு அச்சத்தையும் உண்டாக்கும் என்பதை அறிந்து அதைச் சுருக்கிக் கொள்கிறான். இது அவனுடைய கருணையின் விளைவு.*

**தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்**
**வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி**
**அணங்குசால் உயர்நிலை தழீஇ.**

*(தெய்வத் தன்மை வாய்ந்த பராக்கிரமம் விளங்குகின்ற உருவத்தோடு ஆகாயத்தை அளாவிய உயரத்தை உடைய முருகன் நீ உள்ள இடத்துக்கு வந்து*

*அடைந்து, காண்பவருக்கு அச்சத்தைத் தரும் நெடிய கோலத்தை அடக்கிக் கொண்டு.*

*தெய்வத் தன்மை சான்ற திறலாவது. அகடிதகடனா சாமர்த்தியம்; இறைவன் எல்லாம் வல்லவன் அல்லவா? தழீஇ - சுருக்கி; உள் அடக்கி).*

*சிலப்பதிகாரத்தில் இப்படி ஒரு செய்தி வருகிறது; சாத்தன் என்னும் தெய்வம் தன் இயல்பான பேருருவைக் காட்டினால் கண்டு அஞ்சுவாள் என்ற தேவந்தி என்பவளுக்கு அவள் கண்கொள்ளும்படியாக அழகிய திருவுருவத்தோடு வந்தானாம்.*

*"பூவந்த உண்கண் பொறுக்கென்று மேவித்தன்*
*மூவா இளநலம் காட்டி" (சிலப். 9 : 34-5)*

*தன்னிடம் வந்தவனுடைய உள்ளப்பாங்கை அறிந்து அவனுக்கு ஏற்ற வகையில் முகமலர்ச்சியும் இன் சொல்லும் உடையவனாக அவனை அணுகி ஈவது வள்ளலுக்குரிய இலக்கணம். அகமும் முகமும் மலர்வது, வந்தவன் இங்கே உதவி கிடைக்கும் என்று கண்ட மாத்திரத்திலே மகிழும் பொருட்டு, முருகன் இந்த இலக்கணம் நிரம்பியவன், தன்னை நாடி வந்தவன் தன் தோற்றத்தைக் கண்டு, அஞ்சாமல் இருக்க வேண்டும் என்று விரும்பிப் பேராற்றல் உடைய பெருந்திரு உருவத்தை அடக்கிக் கொள்கிறான். அது மட்டுமா? வருபவன் கண்டு உள்ளம் உருகும்படியான திருக்கோலம் கொள்கிறான். இந்த இரண்டு திருவுருவும் அவனுக்கு அநாதி காலமாக உள்ளவை. ஒன்று பெருந்திருவடிவம்; மற்றொன்று எழில் திருவடிவம். ஒன்றில் ஆற்றல் தோன்றும்; மற்றொன்றில் அழகு தோன்றும். ஒன்றினால் அச்சம் உண்டாகும்; மற்றொன்றினால் அன்பு தோன்றும். ஒன்று மறத்தை அழிப்பது; மற்றொன்று அன்பை வளர்ப்பது. ஒன்று மறக்கருணையின் வெளியீடு; மற்றொன்று அறக் கருணையின் விளைவு. ஒன்று துஷ்ட நிக்கிரகத்தின் பொருட்டு அமைவது; மற்றொன்று சிஷ்ட பரிபாலனத்துக்கு அமைந்தது. ஒன்று உக்கிரமூர்த்தி; மற்றொன்று சாந்தமூர்த்தி. ஒன்று வீரம் காட்டுவது; மற்றொன்று ஈரம் காட்டுவது. ஒன்று பகைவரை அச்சுறுத்துவது; மற்றொன்று அன்பருக்கு இனிப்பது.*

*இந்த இரண்டில் முன்னையதை அடக்கிக் கொண்டு பின்னைய திருக்கோலத்தில் எழுந்தருளுகிறான் முருகன். இரண்டு கோலமும் ஒரு தாளின் இரு பக்கம் போன்றவை. இரண்டும் பழமையானவை; அநாதியாக உள்ளவை. அருள்புரிய வருகின்ற முருகன் ஈரத் திருக்கோலங்கொண்டு எழுந்தருளுகிறான். அப்போதுதான் அவனுக்கு முருகன் என்னும் திருநாமம் வந்ததற்குரிய காரணம் புலப்படுகிறது. அந்தத் திருக்கோலம் எவ்வாறு இருக்கும்? அதைச் சொல்ல வருகிறார் நக்கீரர்.*

## முருகுத் திருக்கோலம்

*முருகன் தன் முருகுத் திருக்கோலத்தைக் காட்டுகிறான். அது பழமையானது; அநாதியாக விளங்குவது.*

> *"ஆதியொடும் அந்தம் ஆகிய நலங்கள்*
> *ஆறுமுகம் என்று தெரியேனே"*

*என்பர் அருணகிரிநாதர். அந்தக்கோலம் எல்லாவற்றுக்கும் முதலில் இருப்பது; எல்லாவற்றுக்கும் முடிவாகவும் இருப்பது. அந்தப் பழைய திருக்கோலத்தோடு முருகன் வருகிறானாம்.*

> ...................................................... பண்டைத்தன்
> மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி

*மிகப் பழையதாகிய தன் அழகுத் திருவுருவத்தை முருகன் காட்டுகிறான்.*

*முருகன் என்பது முருகை உடையவன் என்ற பொருளை உடையது. முருகு என்பதற்குப் பலபொருள் உண்டென்பதைப் பார்த்தோம். அவற்றில் தலைமை யானவை நான்கு.* ***மணம், தெய்வத்தன்மை, இளமை, அழகு என்பவை அவை.*** *நக்கீரர் இந்த நான்கையும் சிறப்பாக எடுத்துச் சொல்கிறார். முருகன் தம்மை நாடி வந்த புலவனுக்கு மணங்கமழ் கோலத்தைக் காட்டுகிறான்; தெய்வத் திருக்கோலத்தைக் காட்டுகிறான்; இளமை உருவத்தைக் காட்டுகிறான்; எழில் நலம் நிரம்பிய வடிவத்துடன் எழுந்தருளுகிறான். "மணம் கமழ் தெய்வத்து இளநலம்'' என்ற சொற்களில் இந்த இயல்புகளைக் காணுகிறோம்.*

*முருகன் இருக்கும் இடமெல்லாம் மணம் மகிழும். அவன் வாழும் குறிஞ்சி நிலம் மலர்கள் நிரம்பியது. அவற்றின் மணம் எங்கும் விரவியிருக்கும். அவனுடைய திருக்கோயிலில் வேலனும் ஆடும் மகளும் மலர்களைக் கொணர்ந்து பூசை போடுவார்கள். அங்கும் மலர் மணம் நிரம்பியிருக்கும். மலர்கள் நிரம்பிய இடத்தை வருணிக்கும் போது, "இது வெறிக்களத்தை ஒத்திருக்கிறது'' என்று சொல்வது சங்க காலப் புலவர்களின் வழக்கம். முருகனுக்குப் பூசை செய்து ஆடும் ஆட்டத்தை வெறியாட்டு என்றும், பூசை போடும் இடத்தை வெறிக்களம், வெறியர் களம் என்றும் சொல்வார்கள். முருகனை வழிபடும் இடங்களிலெல்லாம் மலர்கள் மிகுதியாக இருக்கும் என்பது இதனாற் புலனாகும்.*

*முருகனும் செஞ்சாந்து அணிந்து பல மலர்மாலைகளை அணிந்து விளங்குகிறவன். அதனால் அவன்பால் நறுமணம் மலிந்து தோன்றும். அன்றியும் இயற்கையான தெய்விக மணம் உடையவன் அவன்.*

> *"கந்தமுறு நின்மேனி காணாத கயவர்கண்*
> *கலநீர் சொரிந்த அழுகண்"*

*என்று அருட்பிரகாச வள்ளலார் பாடுவார்.*

இவற்றையன்றி, ஞானமே திருமேனியாகிய அவனிடம் ஞான மணம் வீசும், ஞானத்தை மணமென்று கூறுவது ஒரு வழக்கு.

"ஒருஞான வாசம் வீசி"

என்பது திருப்புகழ். மலர் மணமும் திவ்ய கந்தமும் ஞான வாசனையும் ஒருங்கே வீசும் முருகன் திருக்கோலம் மணம் நிரம்பியது என்று சொல்வதில் மிகை ஏதும் இல்லை. அதனால் அதை 'மணம் கமழ்' கோலமாகச் சொல்கிறார் நக்கீரர்.

அடுத்துத் தெய்வத்தன்மை வாய்ந்த கோலம் என்கிறார். தெய்வத்தின் தன்மை யாது? அருளே தெய்வத்தின் தன்மை. அருள் வேறு, அவன் வேறு என்று பிரிக்க வொண்ணாதாயினும் விவகாரத்தில் அப்படித் தனித்தனியே சொல்லி அனுபவிப்பது பக்தர்களுக்கு இயல்பு.

"நீமறந்தா யெனினும் இவ் வகிலமெலாம்
அளித்திடும்நின் அருள்மறவா தென்றே"

என்று அருட்பிரகாச வள்ளலார் பாடுவதைக் காண்க.

தெய்வத்தினிடம் உள்ள அருள் தன்மை கண்டே அன்பர்கள் அடைந்து போற்றுகிறார்கள். முருகனிடம் அந்த அருள் மிகுதியாக இருக்கிறது.

எல்லா உயிர்களுக்கும் தனு கரண புவன போகங்களைத் தந்து பாதுகாப்பது இறைவன் திருவருள். அது பொதுவானது. தன்னை வழிபட்டு உருகும் அன்பர்களின் பக்குவம் அறிந்து இன்பம் வழங்கும் அருள் சிறப்பான அருள். தன் குழந்தைகள் எல்லோருக்கும் உணவு அளிக்கிறாள் தாய்; அது பொதுவான அன்பு. இளங்குழந்தையை எடுத்து அணைத்து முத்தமிடுகிறாள். அது சிறப்பான அன்பு. அது போன்றே இறைவனுடைய பொதுவருளும் சிறப்பருளும் இருக்கின்றன. சிறப்பருளினும் சிறந்த பேரருள் ஒன்று உண்டு, தன்னைப் பகைத்தவனுக்கும் நலம் செய்யும் கருணை அது.

முருகன் அந்தப் பெருங்கருணை உடையவன். தன்னைப் பகைவனாகக் கருதிப் போரிட்ட சூரபன்மனை மயிலும் சேவலுமாக்கி ஆட்கொண்டான், போர்க்களத்தில் தன்னுடைய விசுவரூப தரிசனத்தை அவ்வசுரனுக்கு அளித்தான். அது கண்டு உருகிய சூரனே, "இப்பெருமான் போரென்று ஒரு வியாஜத்தை வைத்துக் கொண்டு எனக்கு அருளல்லவா செய்ய வந்திருக்கிறான்?" என்று சொல்லி வியப்படைகிறான்.

"அண்ணலார் குமரன் மேனி
அடிமுதல் முடியின் காறும்
எண்ணிலா ஊழி காலம்
எத்திறம் நோக்கி னாலும்

கண்ணிலா லடங்கா துன்னிற்
கருத்தினா லடங்கா தென்பான்
நண்ணினான் அமருக் கென்கை
அருளென நாட்ட லாமே"

என்கிறான். 'அருளென நாட்டலாமே' என்று உறுதியாகக் கூறுகிறான். இது முருகனுடைய பேரருள் திறத்தை நன்கு எடுத்துக் காட்டும்.

அருளின் மிகுதியை, கருணை கூர்வதை, 'கருணை கூர்முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும்' என்று பாராட்டுவார் கந்தபுராண ஆசிரியர், கூர்தலாவது உள்ளது சிறத்தல்.

அடுத்தபடி வருவது அவனுடைய இளமை. அவன் என்றும் மாயாத இளமையை உடையவன்.

"என்று மகலாத இளமைக்கார"

என்பது திருப்புகழ். என்றும் பொன்றாத இளமையை உடையவனாதலால் அவனைப் பிள்ளையார் என்று பழந்தமிழுரைகள் கூறுகின்றன. தெய்வத் திருக்கூட்டத்தில் அவன் இளையவன். சிவபிரானுடைய மக்களுள் இளையவன்.

அவனுடைய அழகைப் பற்றிச் சொல்லத் தொடங்கினால், அது மிக மிக விரியும். அழகுக்கு உவமை சொல்லும் போது முருகனைச் சொல்வது புலவர் வழக்கம்.

"கந்தனை யனையவர் கலைதெரி கழகம்"

என்பது கந்தர் வாக்கு.

"என்றும் இளையாய் அழகியாய்"

என்பது பழம் பாட்டு. முருகனுடைய பேரழகில் ஈடுபட்டு மயங்கிய சூரபன்மன் வியந்து பாராட்டுகிறான்.

"ஆயிர கோடி காமர்
அழகெலாம் திரண்டொன் றாகி
மேயின எனினும் செவ்வேள்
விமலமாம் சரணந் தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றா
தென்றிடின் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம்
உவமையார் வகுக்க வல்லார்"

என்று அவன் கூறுவதாகக் கந்தபுராணத்தில் காண்கிறோம். ஈடும் எடுப்பும்

*இல்லாத அவன் பேரழகைக் கண்டு பகைவனே மயங்கினான் எனின், மற்றவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?*

***ஆகவே, முருகன் இணையற்ற மணமும் ஈடற்ற அருளும் ஒப்பற்ற இளமையும் உவமையற்ற எழிலும் உடையவன் என்பது தெளிவாகிறது.*** *இத்தனை முருகுகளும் ஒன்று திரண்ட கோலமுடையவனாதலின் முருகன் என்ற பெயருக்கு அவன் எவ்வாற்றானும் பொருத்தமுடயவனாக விளங்குகிறான். இந்த நான்கும் மிகச் சிறந்து ஒருங்கே இணைந்த திருக்கோலம் வேறு இல்லை. அதனால்தான் இவ்வளவு இலக்கணங்களும் பொருந்தியதால் வந்த இத்திருநாமம் பிறரால் பெறுவதற்குரியது என்று முன்பே நக்கீரர் கூறினார்.*

*"அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக"*

*என்று கூறியதை முன்பே பார்த்தோம்.*

*இத்தகைய மணமும் அருளும் இளமையும் அழகும் இணைந்து கண்ணையும் கருத்தையும் கவ்வும் அற்புதக் கோலத்தைத் தரிசிக்கும்படி முருகன் புலவனுக்குக் காட்டுவானாம்.*

**பண்டைத்தன்**
**மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி**

## அன்பு மொழி

*கண்குளிர இந்தக் கோலத்தைக் காட்டும்போதே காது குளிர அன்பு நிரம்பிய மொழிகளை முருகன் கூறுவானாம்.*

*சாமானிய அதிகாரி ஒருவனைக் கண்டாலே மக்களுக்கு அச்சம் உண்டாகிறது. தேவாதி தேவனும் சர்வ சக்திமானும் ஆகிய முருகனைக் காணும் போது முதலில் யாருக்குமே அச்சம் உண்டாகும். 'நாம் எத்தனையோ குற்றங்களைச் செய்திருக்கிறோமே!' என்ற நினைவு வரும். 'நமக்கு இறைவன் அருள் செய்வானா? அதற்குரிய தகுதி நமக்கு இருக்கிறதா?' என்றெல்லாம் எண்ணி அஞ்சும் நிலை உண்டாகும். பிரபஞ்சத்தில் உழன்று பட்ட துன்பங் களெல்லாம் நினைவுக்கு வரும். உடம்பு நடுங்கும். வாய் குழறும்.*

*இதைக் கருணாநிதியாகிய முருகன் உணர்வான். "பயப்படாதே அப்பா!" என்று முதலில் அபயம் அருள்வான். அது மட்டுமா? போன புலவன், 'நம்மை இவன் அறிந்து கொள்வானா? நமக்கு உள்ள ஆர்வத்தை இவன் தெரிந்து கொண்டிருப்பானா? நம் குறையை எப்படி எடுத்துச் சொல்வது?' என்று நினைப்பான். "முருகனோ, அப்பா நீ வருவது எனக்கு முன்பே தெரியும்" என்று சொல்வான். உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். நீ சொல்ல வேண்டாம்.*

*உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன். நீ அஞ்சாமல் இரு. உனக்கு வேண்டியன வெல்லாம் கிடைக்கும்' என்று சொல்லாமல் சொல்வானாம். அந்த வார்த்தைகளில்தான் எத்தனை அன்பு! அவை எத்தனை நம்பிக்கையூட்டும் ஆறுதல் மொழிகள்! எத்தனை நல்ல மொழிகள் தன் குழந்தையைக் கண்ட தாய் பேசுவது போல முருகன் பேசுவான்.*

அஞ்சல் ஓம்புமதி; அறிவல்நின் வரவுஎன
அன்புடை நன்மொழி அளைஇ

*(அஞ்சுவதை விட்டுவிடு; உன் வரவை முன்பே அறிவேன் என்று அன்புடைய நல்ல மொழிகளைச் சொல்லி).*

*அவன் இனிமேல் பரிசில் தரப் போகிறான். அதற்கு முன்பு கிடைக்கும் நன்மைகள் சாமானியமா? அவன் அழகுத் திருக்கோலக்காட்சி கிடைக்கிறது. உயிரையே குளிர்விக்கும் அருள்மொழி கிடைக்கிறது. அதற்கு மேலும் அவன் அளிக்கும் பரிசு ஒன்று உண்டு. அதைச் சொல்ல வருகிறார் நக்கீரர்.*

**பரிசில்**

*திருமுருகாற்றுப்படை முருகனுடைய திருவருளைப் பெற்று இன்பம் துய்க்க வேண்டும் என்னும் நாட்டமுடைய புலவன் ஒருவனுக்கு, அப்பெருமானுடைய அருளைப் பெறும் வழி இது என்று அவனருளைப் பெற்ற வேறு ஒரு புலவன் கூறும் வாய்ப்பாட்டில் அமைந்தது. முருகன் இருக்கும் இடங்களையும் அவற்றின் இயல்புகளையும் கூறி, அவனை எவ்வாறு அணுக வேண்டும் என்பதையும் கூறிய பிறகு, அவனை அடைந்தால் இன்ன பரிசில் கிடைக்கும் என்பதையும் கூற வந்தார் நக்கீரர். இன்ன பரிசில் கிடைக்கும் என்பதுதான் ஆற்றுப்படையில் தலைமையானது; பயனைக் கூறுவது அல்லவா? முருகனை அணுகினால் கிடைக்கும் பயன் எதுவோ அது தான் பரிசில்.*

*அதை நக்கீரர், **'விழுமிய பெறலரும் பரிசில்'** என்று சிறப்பிக்கிறார்.*

***உலகிலுள்ள மக்களை அணுகினால் பொன் தருவார்கள்; பொருள் தருவார்கள்; ஆடை தருவார்கள்; அணி தருவார்கள்; நிலம் தருவார்கள்; இடம் தருவார்கள்; இவை யாவும்சில காலம் இருந்து அழியும்தன்மையுடையவை. எவ்வளவு பெரிய செல்வனாக இருந்தாலும் அவனுக்கும் ஏதேனும் குறை இருக்கும். குறை இல்லாதார் யாரும் இல்லை. குறையுடையாரிடம் பெறும் பரிசில் குறையுடையதாகவே இருக்கும். குறைவிலா நிறைவுடையாரே குறைவிலாப் பரிசிலைத் தர வல்லவர்.***

***குறைவிலா நிறைவுடையவனாகவும், தனக்கு உவமை***

*இல்லாதவனாகவும் இருப்பவன் இறைவன். அவன் தரும் பரிசிலை வேறு யாரும் தர முடியாது. அதுவே எல்லாவற்றிலும் உயர்ந்த பரிசில். வேறு எங்கும் பெறுவதற்கரிய பரிசில் அது. அதனால் அதனை "விழுமிய பெறலரும் பரிசில்" என்கிறார் நக்கீரர்.*

## சீவன் முத்தி

*அந்தப் பரிசில் யாது? இறைவனேயன்றி வேறு யாராலும் தருவதற்கரிய முத்தியே அப்பரிசில். முத்தியிலும் இருவகை உண்டு; ஒன்று சீவன் முத்தி; மற்றொன்று விதேக முத்தி. இந்த உடம்பு உள்ளபோதே முத்தியின்பத்தை நுகர்ந்து வாழ்வது சீவன் முத்த நிலை; உடம்பை விட்ட பிறகு பெறுவது விதேக முத்தி. முருகன் தன்னை அண்டி வழிபட்ட அன்பனுக்கு உடனே பரிசிலைத் தருவான்; உடம்பை விடச் செய்து விதேக முத்தியை அருள்வது அன்று; உடம்பு இருக்கும்போதே பசுகரணங்களெல்லாம் பதிகரணமாக மாறப் பெறும் சீவன் முத்தியைத் தருவான். ஈடும் எடுப்பும் இல்லாத நிலை அது.*

*இந்த உலகத்தைச் சுற்றியிருக்கும் கடல் கருமையாக இருளின் நிறத்தைப் பெற்றிருப்பது; சூரியன் முதலிய சுடர்கள் இல்லாத போது உலகமே இருளில் மூழ்கிக்கிடப்பது. மாயிருள் ஞாலம் அல்லவா? இதன் அகத்திலும் இருள்; புறத்திலும் இருள் நிறக்கடல். அகம்புறமென்னும் இரண்டிடங்களிலும் இருள் நிரம்பிய உலகத்தில் வாழும் பொழுதே ஒளி படைக்கும்படி அருள் செய்வான் முருகன்.*

*என்றும் இறவாத பெருநிலையை, மரணமிலாப் பெருவாழ்வை, அவன் வழங்குவான். நமக்குச் சமானம் யாரும் இன்றி, நாமே தனித்தலைவராகத் தோன்றும் வகையில் இன்பம் அருளுவான். மற்ற வள்ளல்களிடம் சென்றார் யாரும் இத்தகைய பரிசிலைப் பெறாதவர்களாக நிற்க, முருகனை அடைந்தவன் மட்டும் மற்றவரோடு சேராமல் தனியே சிறந்து நின்று தோன்றும்படி அப்பெருமான் திருவருள் பாலிப்பான்.*

.............................................. விளிவின்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகத் தோன்ற, விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி

*(இருளின் நிறத்தைப் பெற்ற கடல் வளைந்து சூழ்ந்த உலகத்தில் என்றும் அழிவே இல்லாமல், நீ ஒருவனே தலைவனாகத் தோன்றும்படி, எல்லாவற்றுக்கும் மேலான, வேறு எங்கும் பெறுவதற்கு அரிய பரிசிலாகிய சீவன் முத்தியை அருளுவான்.*

*விளிவு - அழிவு. இன்று - இன்றி. விளிவின்று ஒரு நீ ஆகத் தோன்ற*

*என்று கூட்டவேண்டும். முந்நீர் - கடல்; ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற மூன்று இயல்புகளையும் உடைமையால் இப்பெயர் அமைந்ததென்றும், ஆற்று நீர், ஊற்று நீர், வேற்று நீர் என்ற மூன்று நீர்களையும் உடைமையால் அமைந்ததென்றும் கூறுவர். வளை இய - வளைந்த ஒரு நீ ஆக - ஒப்பற்ற நீயே யன்றிப் பிறர் யாரும் இல்லை ஆக. விழுமிய - விழுப்பமான; சிறந்த நல்குமதி - கொடுப்பான். மதி என்பது பெரும்பாலும் முன்னிலையோடுதான் வரும்; இங்கே அருமையாகப் படர்க்கையோடு வந்தது)*

*'இருண்ட நிறத்தையுடைய கடல் சூழ்ந்த உலகத்திடத்தே நீ ஒருவனுமே பிறர்க்கு வீடளித்தற்கு உரியையாய்க் கேடின்றித் தோன்றும்படி, சீரிய பிறராற் பெறுவதற்கரிய வீடுபேற்றினைத் தருவன்' என்று நச்சினார்க்கினியர் உரை கூறினார். ஞானம் பெற்ற சீவன் முக்தர்கள் தம்மை அண்டியவர்களின் அறியாமையை மாற்றி ஞானம் வழங்கி வீடுபெறச் செய்யும் இயல்பை உடையவராவதை எண்ணி, பிறர்க்கு வீடளித்தற்கு உரிமையாய் என்று அவர் கூறினார்.*

> *"பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து*
> *முத்தி கொடுக்க முறை"*

*என்று இறைவன் உமாபதி சிவாசாரியாரைப் பணித்ததாக ஒரு வரலாறு உண்டு. அதை இங்கே எண்ணிப் பார்த்தால் இவ்வியல்பு புலனாகும்.*

*'இனி மதி பலவுடன் எனக் கூட்டி, அறிவுகள் பலவுடனே பரிசில் நல்கும் என்று கூறுவாரும் உளர்' என்று வேறு ஒரு சாரார் உரையையும் நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டினார்.*

## மரணமில்லாப் பெருவாழ்வு

*சங்க காலப் புலவர் நக்கீரர். வேதங்களும் வேத முடிவாகிய உபநிடதங்களும் தமிழ்நாட்டில் அக்காலத்திலும் பெருகி வழங்கி வந்தன. கடவுட் கொள்கையும் முத்தி நெறியும் சீவன் முத்தியைப் பற்றிய கருத்துக்களும் அந்தப் பழங்காலத்திலேயே தமிழ் மக்களுக்கு உரியனவாக இருந்தன. வேதம். "அம்ருதம் இகபவதி" என்று சொல்கிறது. 'இவ்வுலகத்திலேயே சாவாமையைப் பெறலாம்' என்கிறது.* ***இந்த உடம்போடு என்றும் இருக்கும் நிலையன்று அது. இந்த உடம்பில் இருக்கும்போதே முத்தியின்பத்தை அடையும் நிலை. மரணமிலாப் பெருவாழ்வு என்பது அதுதான்.***

***ஏனையோர் மரணம் அடைவது ஓருடம்பை விட்டு மற்றோர் உடம்புக்கு போகும் பயணம், அது சிறை மாற்றம் போன்றது. சீவன் முத்தர்கள் காலமாவது மரணம் அடைவதாகாது. அவர்கள் இந்த உடம்பை விட்டால் நேரே வீடு***

அடைகிறார்கள். பூரணம் அடைகிறார்கள். அதனால் ஞானிகள் உடலை நீத்தால் சித்தியடைந்தன என்றும், பூரணமடைந்தனர் என்றும் கூறுகிறோம். அவர்கள் உடம்பை விடுவது, கைதி சிறையினின்றும் விடுதலை பெறுவதைப் போன்றது. மற்றவர்கள் உடம்பை விடுவது பிறிதொரு சிறைக்குப் போவதற்காக முன்பே இருக்கும் சிறையை விடுவது போன்றது. அதுதான் மரணம். இனி இங்கே வந்து பிறவாமல் ஜீவயாத்திரை நிறைவடைய இந்தச் சரீரத்தை உதறிவிட்டுப் போகும் ஞானியர் மரணம் அடைவதில்லை; அவர்கள் பரிபூரணம் அடைகிறார்கள். அவர்கள் இவ்வுடம்பில் வாழும் வாழ்வு மரணமிலாப் பெருவாழ்வு. நக்கீரர் சொல்கிற 'விளிவின்று ஒரு நீயாகத் தோன்ற' என்று கூறும் நிலையும் அதுதான்.

இந்த உடம்பு இருக்கும் போதே முத்திநிலை கூடும் என்பதைச் சங்க நூல்களில் வேறிடத்தும் காணலாம்.

"தவம்செய் மாக்கள் தம்உடம்பு இடாஅது
அதன்பயம் எய்திய அளவை மான"

என்று பொருநராற்றுப்படையில் வருகிறது. 'தவம் செய்யும் ஞானிகள் தம் உடம்பைக் கீழே போட்டு விடாமலே அந்தத் தவத்தின் பயனாகிய முத்தியின்பத்தை அடைந்த முறையை ஒப்ப' என்பது இதன் பொருள். இதனால் உடம்பை விடாமலே அந்த இன்பத்தை அடையும் நிலை ஒன்று உண்டு என்பது புலனாகும். அதுவே சீவன் முத்தி நிலை.

"நன்றாய் ஞானம் கடந்துபோய்
நல்இந் திரியம் எல்லாம்ஈர்த்து
ஒன்றாய்க் கிடந்த அரும்பெரும்பாழ்
உலப்பி லதனை உணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்பத் துன்பங்கள்
செற்றுக் களைந்து பசைஅற்றால்
அன்றே அப்போ தேவீடாம்;
அதுவே விடு வீடாமே"

என்று நம்மாழ்வார் கூறும் நிலையும் இதுவே என்று தோன்றுகிறது.

மாங்குடி மருதனார் என்னும் புலவர் மதுரைக் காஞ்சி என்ற நூலைப் பாடியிருக்கிறார். திருமுருகாற்றுப் படையை முதற்பாட்டாகக் கொண்ட பத்துப் பாட்டில் ஆறாவது பாட்டாக அமைந்திருப்பது அது.

மதுரை மாநகரில் உள்ள மக்களின் இயல்புகளையும் அவர்கள் வாழும் இடங்களையும் பற்றி விரிவாக வருணிக்கிறார் அவர் அங்கே.

"நிலம்அமர் வையத்து ஒருதாம் ஆகி

உயர்நிலை உலகம்இவணின் றெய்தும்
அறநெறி பிழையா அன்புடை நெஞ்சிற், பெரியோர்”

என்று ஒரு வகையினரைப் பற்றிக் கூறுகிறார். ‘நால்வகை நிலங்கள் அமர்ந்த உலகத்தே ஒன்றாகிய பிரமம் தாங்களேயாய், உயர்ந்த நிலைமையையுடைய தேவருலகத்தை இவ்வுலகிலே நின்று சேரும், தருமத்தின் வழி ஒரு காலமும் தப்பாத பல்லுயிர்கட்கும் அன்புடைத்தாகிய நெஞ்சாலே, **சீவன் முத்தரா யிருப்பார்** என்று நச்சினார்க்கினியர் உரை வகுத்தார். ஒருதாம் ஆகி உயர் நிலை உலகம் இவணின் றெய்தும்... பெரியோர் என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். திருமுருகாற்றுப்படையில் உலகத்து ஒருநீயாகித் தோன்ற என்று வரும் பகுதியிலுள்ள சொல் நடையோடு அது ஒத்திருப்பதை உணரலாம். உயர்நிலை உலகம் என்பதற்குத் தேவருலகம் என்று நச்சினார்க்கினியர் பொருள் உரைத்தலும், ‘எல்லாவற்றினும் உயர்ந்த நிலையாகிய வீட்டுலகம்’ என்று பொருள் கொள்வதே சிறப்பு. வீட்டை, “வரனென்னும் வைப்பு” என்றும், “வானோர்க்குயர்ந்த வுலகம்” என்றும் திருவள்ளுவர் கூறுவதனாலும் இதனை உணரலாம்; “இங்கே இருந்தபடியே உயர்நிலை உலகமாகிய முத்தியநுபவத்தை அடையும் பெரியோராகிய சீவன் முத்தர்” என்று பொருள் கொள்வதற்குரியது. முன்பு காட்டிய மதுரைக் காஞ்சிப் பகுதியில் அவர்கள் ஒரு தாம் ஆகித் தோன்றுபவர்கள். இங்கே பெறலரும் பரிசில் பெறும் புலவனும் ‘ஒருநீ யாகத் தோன்றி’ நிற்பான். எனவே, இங்கே குறிப்பிட்டது ‘சீவன் முத்த நிலை’ என்று சொல்வதில் தவறு இல்லை.

முருகனை வழிபட்டு அன்பு செய்யப் புகுந்தவன் ஒருவன், அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களுக்குச் சென்றும், அவனுடைய சைதன்யம் பொருந்தியிருக்கும் இடங்களுக்குச் சென்றும் யாத்திரை செய்து, அதனால் உள்ளம் தெளிவடைந்து பக்குவம் பெறும்போது, முருகன் தன் காட்சியை அப்போது அவனிடத்தில் காட்டிச் சீவன் முத்த நிலையை அருளுவான் என்பது இதுவரையிற் கூறியவற்றால் தெளிவாகிறது.

“பெறலரும் பரிசிலைத் தருவான்; அப்படித் தருபவன் பழமுதிர்சோலை மலைகிழவோன்” என்று இந்த வாக்கியத்துக்கு எழுவாயை வைப்பவர்போல மற்றொரு படை வீட்டையுடையான் என்பதைப் புலப்படுத்துகிறார் நக்கீரர்.

## பழமுதிர் சோலைமலை

பழமுதிர்சோலை மலைகிழவோனைச் சொல்ல வரும் நக்கீரர் அந்த மலையின் இயற்கையெழிலை விரிவாகச் சொல்கிறார். அந்த மலைக்கு உரியவன் என்ற அளவிலே முருகனைக் குறிப்பிடுகிறார்.

*பழமுதிர் சோலைமலை வளத்தைக் கூறும்போது தனித்தனிக் காட்சியாகச் சொல்லாமல் எல்லாவற்றையும் ஒரு தொடர்பு உண்டாகும்படி அமைத்துக் காட்டுகிறார். மலையின் மேலிருந்து கீழே இழிந்துவரும் அருவியை வருணிக்கத் தொடங்கி, அது வரும் வழியில் நிகழ்வனவற்றைச் சொல்லும் முறையில் படிப்படியாக அந்த அந்த இடங்களில் உள்ள மரங்களையும் விலங்குகளையும், பறவைகளையும் காட்டுகிறார்.*

*திருமுருகாற்றுப்படையில் வரும் முதலாவது படை வீடாகிய திருப்பரங்குன்றத்தின் எழிலைச் சொல்லும் போது வண்டைத் தொடர்புபடுத்தி, அது வயலில் தாமரையில் துஞ்சி விடிந்தவுடன் கீழிருந்து மேலே சென்று இன்பம் துய்ப்பதாகச் சொல்லும் முறையில் அந்த அழகைப் புலப்படுத்துகிறார். இங்கே மேலிருந்து கீழே வரும் அருவியோடு நம்மை அழைத்துச் சென்று இடையிடையே நிகழும் காட்சிகளைக் காட்டுகிறார். தொடக்கத்தில் ஏறும் வண்டை வைத்து இயற்கையை வருணிக்கும் நக்கீரர் இறுதியில் இறங்கும் அருவியைக் கொண்டு மலையின் எழிலை விரிக்கிறார். இது ஓர் அழகான உத்தி.*

## அருவியின் தோற்றம்

*மலையின் உச்சியிலே அருவியின் மூலமாகிய சிறு சிறு பகுதிகள் இருக்கின்றன. அவையெல்லாம் திரண்டு ஒன்றாகிப் பேரருவியாக வீழ்கின்றன. அந்தச் சிறிய சிறிய அருவிகள் வெள்ளை வெளேரென்ற துணியாலான கொடிகள் அங்கங்கே அசைவது போலத் தோன்றுகின்றன. இந்த உயரத்திற்குக் கீழே அருவி பெருந்தாரையாகி வேகம் பெற்று இழியத் தொடங்குகிறது.*

பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி

*(பல சிறிய அருவிகள் ஒருங்கே பலவேறு துணிக் கொடிகளைப் போல வளைந்து அசைந்து, துகில் - கொடி, நுடங்கி - அசைந்து.)*

## மரங்கள்

*இப்போது அருவி கீழ்நோக்கி வருகிறது. அருகிலுள்ள பொருள்களையெல்லாம் அடித்துக் கொண்டு வருகிறது. மலையின்மேல் அகில் வளர்ந்திருக்கிறது. சந்தன மரங்கள் ஓங்க வளர்ந்துள்ளன. இரண்டும் மணமுள்ள பொருள்கள். மிகவும் உயரத்தில் உள்ளவை இவை. அகிலைப் பறித்து அருவி சுமந்து கொண்டு வருகிறது. சந்தன மரங்களின் அடிகளையெல்லாம் வீழ்த்தி உருட்டிக்கொண்டு வருகிறது. அந்த நிலைக்குக் கீழே பல ஆண்டுகளாக மூங்கில்கள் வளர்ந்திருக்கின்றன; ஆழமாக வேரூன்றி யிருக்கின்றன;*

*மலர்களைத் தாங்கியபடி மெல்ல அசைகின்றன. அந்த மூங்கில்களை மோதி உலுக்குவதால் பூக்கள் உதிர்கின்றன. மூங்கில்களையே வேரோடு பறித்துக் கொண்டு வருகிறது அருவி.*

அகில்சுமந்து
ஆர முழுமுதல் உருட்டி, வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு

*(அகில் கட்டைகளைச் சுமந்து, சந்தன மரத்தின் அடிப்பாகத்தை உருட்டி, சிறு மூங்கிலின் பூவையுடைய அசைகின்ற கொம்பு பூவில்லாமல் மொட்டை யாகும்படி, அதன் வேரைப் பிளந்து.*

*ஆரம் - சந்தனம். முழுமுதல் - அடிமரம், வேரல் - சிறுமூங்கில், அலங்கு - அசையும், சினை - கிளை. புலம்ப - மலர் இல்லாமல் தனியாக இருக்க).*

*மலர் நிறைந்த சூழ்நிலை இது. மக்கள் அதிகமாக கடையாடாத இடம். இங்கே மலைப் பக்கத்தில் பெரிய பெரிய தேனடைகள் இருக்கின்றன. வானளாவிய உயர்ந்த மலைப்பகுதிகள் அவை. வட்ட வட்டமாக உள்ள அந்தத் தேனடைகளின் தேன் நிரம்ப உள்ளது. ஆதலால் சிவப்பாக இருக்கின்றன. அவை சூரிய மண்டலத்தைப் போலக் காட்சி அளிக்கின்றன. குளிர்ந்த மணம் நிரம்பிய தேன் அவற்றில் இருக்கின்றது. அருவி விழுகிற வேகத்தில் அதன் நீர்வீச்சு அந்தத் தேனடைகளின் மேல் மோதுவதனால் அவை சிதைகின்றன. தேனும் அருவியிலே வீழ்ந்து கலக்கிறது.*

விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய

*(வானை முட்டுகின்ற உயர்ந்த மலைப்பக்கத்தில் வண்டுகள் அடை அடையாக வைத்த குளிர்ந்த நறுமணம் வீசிப் பரவியிருக்கும் தேனடைகள் சிதைய.*

*பொரு - முட்டும். நெடுவரை - உயர்ந்த மலைப்பக்கம். பருதியின் - சூரியனைப்போல. அலர் - விரிந்து பரந்த. இறால் - தேனடை).*

*மணமுள்ள பொருள்களும் சுவையுள்ள பொருள்களும் அருவியிலே கலந்து வருகின்றன. அங்கே மலைக்காடுகளில் வெவ்வேறு மரங்கள் ஓங்கித் தழைத்து வளர்ந்திருக்கின்றன. ஒரு பக்கம் ஈரப் பலா மரங்கள் முதிர்ந்த கனிகளுடன் நிற்கின்றன. மற்றொரு பக்கம் சுரபுன்னை மரங்கள் நிரம்பப் பூத்துக் குலுங்குகின்றன. இந்த அருவி பலா மரத்தை மோதிப் பழுத்து வெடித்த பழங்களிலிருந்து சுளைகள் உதிர்ந்து விழச் செய்கின்றது. அவை அருவியிலே கலக்கின்றன. சுரபுன்னையின் மேல் மோதி அதிலுள்ள மலர்களை உதிர்க்கின்றது. அந்த மலர்களும் அருவியிலே வருகின்றன.*

நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர

*(நல்லனவாகிய பல ஈரப் பலாக்களின் முதிர்ந்த சுளைகள் உதிர்ந்து கலக்கவும், மேலே உள்ள சுரபுன்னையின் மணம் வீசும் மலர்கள் உதிரவும். ஆசினி - ஈரப்பலா, கலாவ - கலக்க. நாகம் - சுரபுன்னை).*

## விலங்குகள்

*மரங்களையும் தேனடைகளையும் சிதைத்து வரும் அருவி பின்னும் கீழே இறங்கி வரும்போது, அங்குள்ள மரங்களில் இருக்கும் குரங்குகள் அஞ்சுகின்றன. உடம்பு முழுவதும் கருமையான குரங்குகளும், முகம் மாத்திரம் கருமையாக இருக்கும் குரங்குகளும், மரத்துக்கு மரம் தாவி விளையாடுகின்றன. அருவி வேகமாக வரும்போது அதன் திவலைகளும் துளிப்படலமும் தம்மேல் வீசுவதனால் அந்தக் குரங்குகள் நடுங்குகின்றன. அங்கே யானைகள் உலாவுகின்றன. அவற்றின் முகத்தில் பொறிப் பொறியாகப் பூவைப் போன்ற புள்ளிகள் இருக்கின்றன. கருமையான பெண் யானைகள் அருவி வீசும் துளிகளால் குளிர் அடைந்து நடுங்குகின்றன.*

யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசி.

*(கருங் குரங்குகளோடு கரிய முகத்தையுடைய ஆண் குரங்குகள் நடுங்கவும், பூவைப் போன்ற புள்ளிகளையுடைய நெற்றியையுடைய கரிய பெண்யானைகள் குளிர்ச்சி அடையும்படியும் வீசி.*

*யூகம் - கருங்குரங்கு. மாமுகம் - கரிய முகம். முசு - ஒரு வகைக் குரங்கு. கலை - ஆண். பனிப்ப - நடுங்க. இரும் பிடி - கரிய பெண்யானை. குளிர்ப்ப - குளிர்ச்சி அடையும்படி)*

*அங்கங்கே ஆண் யானைகள் இறந்துபட்டதனால் அவற்றின் தந்தங்கள் கிடக்கின்றன. பல காலம் வாழ்ந்த யானைகளின் தந்தங்களாதலின் அவை முதிர்ந்து முத்துடையனவாக இருக்கின்றன. முத்துப் பிறக்கும் இடங்களில் யானையின் தந்தமும் ஒன்று. அந்தத் தந்தங்களை அலைத்துக் கொண்டு வருகிறது அருவி. மலையில் பலவகை மணிகள் பிறக்கும். 'மலைதரு மணியே' என்று சொல்வது வழக்கு. அந்த மணிகளையும் அலசிக் கொண்டு அருவி வரும்போது அவை பளபளக்கின்றன; அவற்றின் வண்ணங்கள் எடுப்பாகத் தெரிகின்றன.*

*மலைகளில் பொன்னும் கொடி கொடியாகப் பாறையினிடையே ஓடிக் கிடக்கும். அருவி வேகமாகப் பாறையினூடே வரும்போது அந்தப் பொன்னையும் அரித்து வருகிறது; பொன்னின் பொடியைக் கொழித்துக் கொண்டு வருகிறது.*

*மணமுள்ள பொருள்களும் சுவையுள்ள பொருள்களும் அருவியிலே சேர்ந்து வருகின்றன என்பதைப் பார்த்தோம். இப்போது மதிப்புள்ள பொருள்களையும் அருவி இழுத்துக் கொண்டு வருகிறது. முத்துடைய தந்தத்தையும் மணியையும் பொன்னையும் அல்லவா அடித்துக் கொண்டு வருகிறது? "இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்து நீ" என்பதில், இறைவனைப் பாடும் அப்பர் சுவாமிகள் மதிப்புடைய பண்டங்களாக அவன் இருப்பதைப் பொன், மணி, முத்து என்று கூறிப் புலப்படுத்துகிறார். அந்த மூன்று அரும் பண்டங்களையும் அரித்துக் கொண்டு வருகிறது அருவி.*

பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா

*(பெரிய ஆண் யானைகளின் முத்தையுடைய வெண்மையான தந்தங்களை வாரிக்கொண்டு, குதித்து, நல்ல பொன்னும் மணியும் தம் நிறம் நன்றாக ஒளிரும்படி செய்து, பொன்னைக் கொழித்துக் கொண்டு.*

*வான்கோடு - வெள்ளைத் தந்தம், தழீஇ - தழுவி; இழுத்துக்கொண்டு கிளர - நன்றாகத் தோன்ற).*

## வேறு மரங்கள்

*இப்போது அருவி மலையில் பாதிக்குக் கீழே வந்து விட்டது. மேலே சந்தனம், ஈரப் பலா, சுரபுன்னைகள் இருக்கின்றன. இங்கே கீழ் மட்டத்தில் வாழை மரங்கள் வளர்ந்திருக்கின்றன. தென்னை மரங்களும் இருக்கின்றன. வாழை மரங்கள் முறிந்து விழுகின்றன. அருவிக்குப் பழைய வேகம் இல்லை. இனிமேல் சிறிது தூரத்தில் கீழே சமநிலம் இருக்கிறது. முன்னை வேகமாக இருந்தால் வாழை மரத்தை அடியோடு பறித்துக் கொண்டல்லவா வரும்? இப்போது அவை ஒடிந்து ஒடிந்து விழுகின்றன. தென்னை மரங்களில் இளநீர்க் குலைகள் நிறைய இருக்கின்றன. அருவி வீசுகிறதனால் அந்தக் குலைகள் உதிர்கின்றன. வேகம் மிகுதியாக இருந்தால் தென்னை மரங்களையே சாய்த்திருக்கும். அங்கே மரங்களில் மிளகு கொடி படர்ந்திருக்கிறது. கொத்துக்கொத்தாகக் காய்த்திருக்கிறது மிளகு. அந்தக் கொத்துக்கள் அருவி தாக்குவதால் கீழே சாய்கின்றன.*

வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாய

*(வாழையின் அடிமரம் முறியவும், தென்னை மரத்தின் மேலான இளநீர்க் குலைகள் உதிரவும் தாக்கி, மிளகு கொடியில் காய்க் கொத்துக் கீழே சாயவும்.*

*முழுமுதல்ல - அடிமரம். துமிய - ஒடிய. தாழை - தென்னை. கறிக்கொடி - மிளகு கொடி. துணர் - காய்க்கொத்து).*

## பறவைகள்

*அடுத்தபடி அங்கே உள்ள பறவைகள் அஞ்சுகின்றன. மயில்கள் கூட்டங் கூட்டமாக அங்கே உலவுகின்றன. புள்ளியையுடைய கலாபத்தைப் பெற்ற அவை ஒய்யாரமாகத் தோகைகளை விரித்துக்கொண்டு நடன மாதர்போல மெத்தென்று நடக்கின்றன. அருவி கிர்கிர்ரென்று வீசவே அவை அஞ்சி ஓடுகின்றன. காட்டுக் கோழிகள் அங்கே இருக்கின்றன. பெட்டைக் கோழிகள் குஞ்சுகளுடன் உலாவுகின்றன. அவையும் அருவியைக் கண்டு திக்குக்கு ஒன்றாக ஓடுகின்றன.*

பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரிய

*(பொறிகளையுடைய மேற்புறத்தையும் மெத்தென்ற நடையையும் பெற்ற மயில்கள் பல ஒருங்கே அஞ்சவும், காட்டுக் கோழிகளின் வலிமையையுடைய பேடைகள் ஓடிப் போகவும்.*

*பொறி - புள்ளி, மடநடை - மென்மையான நடை. வெரீஇ - அஞ்சி; அஞ்சவென்று கொள்ள வேண்டும்; எச்சத்திரிபு. வயப்பெடை - வலிமையையுடைய பெண் பறவை. இரிய - கெட்டு ஓட).*

## பிற விலங்குகள்

*பின்னும் அருவி கீழே வருகிறது. இந்தப் பகுதிகளில் காட்டுப் பன்றிகளும் கரடிகளும் காட்டு மாடுகளும் இருக்கின்றன.*

*கரடிகளின் மயிர் பனமரத்தின் சிலாம்புகளைப் போல இருக்கிறது. பனமரத்தின் உள்ளே சோறு போல உள்ள பகுதியில் உள்ள சிலாம்புகள் விறைப்பாக இருக்கும். கரடியின் மயிர் அப்படி இருக்கிறது. அவற்றின் கால்கள் வளைந்தவை. அருவியின் ஓட்டத்திற்குப் பயந்து காட்டுப் பன்றிகளும் கரடிகளும் ஓடிப் பாறைகள் பிளந்து முழையாக உள்ள இடங்களுக்குள்ளே*

*போய் ஒளிந்து கொள்கின்றன. காட்டுப் பசுக்களில் காளை மாடுகள் இருக்கின்றன. கரிய கொம்பையுடையவை அவை. அவையும் அஞ்சி மலையே எதிரொலிக்கும்படி முழங்குகின்றன.*

........................................................... கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாஅடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்லேறு சிலைப்ப.

*(காட்டுப் பன்றியோடு கரிய பனமரத்தின் உள்சோற்றிலே உள்ள புன்மையான சிலாம்பைப் போன்ற நிறம் பெற்ற மயிரையுடைய உடம்பையும் வளைந்த அடியையும் பெற்ற கரடிகள் பெரிய மலையின் பிளப்பிலே உள்ள குகைகளிலே சென்று சேரவும், கரிய கொம்பையுடைய காட்டு மாடுகளின் காளைகள் முழங்கவும்.*

*கேழல் - காட்டுப்பன்றி. வெளிறு - வெள்ளையான உட்சோறு. சாய் - சிலாம்பு. குருஉ - நிறம். குடாவடி - வளைந்த அடி. உளியம் - கரடி. கல் - மலை. விடர் - பிளப்பு. அளை - குகை. முழை கோடு - கொம்பு. ஆமா - காட்டுப்பசு. ஏறு - காளை. சிலப்ப - முழங்க).*

*இவ்வாறு உயரத்திலிருந்து வரும் அருவி அங்கங்கே உள்ள மரங்களையும் மலரையும் தேனையும் கனியையும் அடித்துக் கொண்டு, பல்வேறு மரங்களை அலைத்தபடி, முத்தும் மணியும் பொன்னும் பளபளக்கும்படி அவற்றை அரித்து, அங்கங்கே உள்ள பறவைகளையும் விலங்குகளையும் நடுங்கும்படி செய்துகொண்டு வருகிறது. அதன் ஓசை இடைவிடாமல் ஓமென முழங்குகிறது.*

*விட்டுவிட்டு வரும் ஓசையை அரிக்குரல் என்றும், தொடர்ந்து இழைந்து ஒலிக்கும் ஒலியை இழுமெனோசை என்றும் சொல்லுவது வழக்கு. இங்கே மலையின் முகட்டிலிருந்து வரும் அருவியின் ஓசை இடையீடு இல்லாமல் இழுமென முழங்கிக் கொண்டே இருக்கிறது. மேலிருந்து கீழே இறங்குவதனால் தான் இந்த ஓசை உண்டாகிறது. இழுமென இழிதரும் இத்தகைய அருவியையுடையது பழமுதிர் சோலை மலை. அதற்குத் தலைவனாக, உரிமை யுடையவனாக, இருப்பவன் முருகன்.*

சேண்நின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர்ச் சோலை மலைகிழ வோனே

*(மலையின் உச்சியாகிய நெடுந்தூரத்திலிருந்து இடையீடில்லாமல் இழுமென்ற ஓசையுடன் இறங்கிவரும் அருவியையுடைய பழமுதிர் சோலை மலையை உடையவனாகிய முருகன்.*

*மலைகிழவோன் நல்குமதி என்று வாக்கியத்தை முடிக்க வேண்டும்.*

*சேண் - நெடுந்தூரம். இழிதரும் - இறங்கிவரும். கிழவோன் - உரியவன்; தலைவன்.)*

*இதற்குமுன் ஐந்து இடங்களில் முருகன் இருப்பதை, அவ்விடங்களில் இருத்தலும் உரியன் என்று சொன்னவர், ஆறாவது படை வீடாகிய பழமுதிர்ச் சோலைமலையில் அவன் இருக்கிறான் என்ற முறையில் சொல்லாமல் பழமுதிர் சோலைமலை கிழவோன் பெறலரும் பரிசிலைத் தருவான் என்ற முறையில் சொல்லி முடிக்கிறார். அப்படிச் சொன்னாலும் முருகன் பழமுதிர் சோலையிலும் எழுந்தருளியிருக்கிறான் என்று சொன்னதாகவே கொள்ள வேண்டும்.*

*இவ்வாறு சொல்வதை உடம்படுபுணர்த்தல் என்ற உத்தியாகச் சொல்வர். ஒரு செய்தியைத் தனியே எடுத்துச் சொல்லாவிட்டாலும், சொல்லுகின்ற முறையில் அந்தச் செய்தி புலப்படும்படி சொல்வதே அது.*

**பழமுதிர் சோலைமலை**

*பழமுதிர் சோலைமலை என்னும் தலம் மதுரைக்கு அருகில் உள்ளது. அதை இப்போது அழகர்மலை என்று சொல்வார்கள். திருமாலிருஞ் சோலைமலை என்றும் வழங்குவர். பழங்காலத்தில் இங்கே முருகன் கோயிலும் திருமால் கோயிலும் ஒருங்கே இருந்திருக்க வேண்டும். சிலப்பதிகாரத்தில் 'புண்ணிய சரவணம்' என்ற தீர்த்தம் இங்கே இருந்ததாக ஒரு செய்தி வருகிறது. சரவணம் என்பது முருகனோடு தொடர்புடையது. முருகன் திருவவதாரம் செய்த இடம் சரவணப் பொய்கை ஆதலின் அவன் எழுந்தருளியிருக்கும் தலங்களில் சரவணப் பொய்கை என்ற பெயருள்ள தீர்த்தம் இருப்பதைக் காணலாம். பழனியில் அந்தப் பெயரோடு ஒரு தீர்த்தம் இருக்கிறது.*

*ஆகவே, பழமுதிர் சோலைமலையில் புண்ணிய சரவணம் என்ற தீர்த்தம் இருப்பது அங்கே முருகன் திருக்கோயிலும் இருந்திருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது. ஆறுபடை வீடுகள் என்று நெடுங்காலமாக வரும் வழக்கில் இந்த மலையையும் சேர்த்தே வழங்குவதைக் கொண்டும் இத்தலத்தில் முருகன் கோயில் இருந்ததை உய்த்துணரலாம். அழகர் மலை பற்றிய மான்மியத்தில் முருகன் திருமாலைப் பூசித்ததாக ஒரு வரலாறு வருகிறது. அதனாலும் முருகன் இத்தலத்துக்கு எழுந்தருளியதாக வழங்கும் கருத்துக்கு வலிமை உண்டாகிறது.*

## தொகுப்பு

*நக்கீரர், முருகன் திருவருளைப் பெறவேண்டும் என்று விரும்பிய பக்தன் ஒருவனுக்கு, அப்பெருமானை இங்கே காணலாம் என்று கூறி, அவனை இவ்வாறு வழிபட வேண்டும் என்பதையும் சொல்லி அவனால் கிடைக்கும் பயனையும் சொல்கிறார். ஒரு புலவனை மற்றொரு புலவன் ஆற்றுப்படுத்துவதாக அமைந்திருத்தலின் இதற்குப் புலவராற்றுப்படை என்றும் ஒரு பெயர் உண்டு.*

### வேறுபாடு

*பொதுவாக ஆற்றுப்படைகளை, யார் பயன்பெறச் செல்கிறார்களோ அவர்கள் பெயரால் வழங்குவது வழக்கம். பாணரை ஆற்றுப்படுத்தினால் பாணாற்றுப்படையெனப் பெயர் பெறும்; கூத்தரை ஆற்றுப்படுத்தினால் கூத்தராற்றுப்படை என்று பெயர். இது யாரிடத்தில் ஆற்றப்படுத்துகிறார்களோ. அவரைக் கொண்டு பெயர் பெற்றிருக்கிறது. மற்ற ஆற்றுப்படைகளில் ஆற்றுப்படுத்துகிறவன். 'நான் உன்னைப் போல வறியவனாக இருந்தேன். அந்த வள்ளலை அடைந்து நலம் பெற்றேன்' என்று கூறுவது வழக்கம். அத்தகைய பகுதி இந்த நூலில் இல்லை. நேரே முருகனை நாடிச் செல்வானுக்கு, நீ இப்படிச் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தும் வகையில் தொடங்கிவிடுகிறார் நக்கீரர்.*

*ஆற்றுப்படை என்ற பிரபந்தத்தின் வடிவத்தில் இது அமைந்தாலும் நக்கீரருடைய கருத்து முருகனுடைய பெருமையை வெளியிடவேண்டும் என்பதே.*

### வழிபடுவோர்

*கடைச்சங்க காலம் என்பது ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. அந்தக் காலத்தில் முருகனைப் பற்றிய எண்ணங்கள் தமிழ்நாட்டில் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை அறிய இந்த நூல் துணையாக இருக்கிறது. பல வேறு நிலைகளில் உள்ளவர்கள் முருகனை வழிபட்டு பயன்பெறும் காட்சிகளை காண்கிறோம். சமுதாயத்தில் இடத்தாலும், நிலையாலும், தொழிலாலும், பழக்கவழக்கங்களாலும் கீழ் நிலையில் உள்ளவர்களாயினும் மேல் நிலையில் உள்ளவர்களாயினும் யாவருமே முருகனை வழிபடுகிறார்கள்.*

*அவனை வணங்கி வரம் வேண்டுவதற்கு வரும் கூட்டத்தில் உருத்திரன் இருக்கிறார். திருமால் இருக்கிறார். இந்திரன் இருக்கிறான். முப்பத்து முக்கோடி தேவர்களின் தலைவர்களாகிய முப்பத்து மூன்று தேவர்கள்,*

பதினெண் கணங்கள் அவர்களோடு செல்கிறார்கள். கந்தருவர்களும் அவர் மகளிரும் யாழ் வாசித்து அவனை பாடுகிறார்கள். யாவரும் பிரமனை விடுதலை செய்ய வேண்டுமென்று வரம் கேட்பதற்காகத் திருவாவினன்குடிக்கு வருகிறார்களாம்.

தேவலோகத்து மடந்தையர் தம்முடைய அழகை மிகுவிக்கும் மலர்களைத் தரும் குறிஞ்சி நிலக் கடவுள் என்று அவனைப் பாடி ஆடுகிறார்கள். அழகு பொங்கும் அம் மகளிர் அவனைப் பாடுவது மட்டும் அன்று. அழகில்லாத பேய்மகளும் முருகனுடைய வீரத்தைப் பாராட்டிப் பாடுகிறாள்.

இவர்கள் வழிபடுவதைக் கற்பனைக் கண்ணால் கண்டு நமக்குக் காட்டுகிறார் நக்கீரர்.

இவ்வுலகில் உள்ளவர்களில் முனிபுங்கவர்கள் அவனை வழிபடுகிறார்கள். இடையில் மரவுரியும் தலையில் வெளுத்த சடைமுடியும உடையவராக, விரதமிருந்து மெலிந்த உடம்பினராக உள்ள அவர்கள் கற்றவர்களும் அறியாத அறிவை உடையவர்கள்; கற்றவர்களுக் கெல்லாம் வரம்பாக நிற்பவர்கள். அவர்கள் முருகனை வணங்கும் கூட்டத்தில் முன்னே நிற்கிறார்கள். அந்தணாளர்கள் முருகனைப் போற்றுகிறார்கள். அவர்கள் செய்யும் வேள்விகளை முருகன் ஏற்றுக் கொள்கிறான்.

குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்களுக்கு முருகன் பெருமையை எடுத்துக் காட்டி அப்பிரானைப் பூசை செய்வதே தன் தொழிலாகக் கொண்டிருக்கிறான் வேலன். அவன் தன் கையில் வேலை வைத்திருப்பதால் அப் பெயரைப் பெற்றான். குன்றுகளில் உள்ள வேடர்கள் கள்ளைக் குடித்துச் சிறு பறைகளைக் கொட்டி முருகனை வாழ்த்திக் குரவைக் கூத்து ஆடுகிறார்கள். குறமகளும் அவனைப் பய பக்தியுடன் வழிபடுகிறாள். அவனுடைய கோயிலில் கொடியேற்றி விழாவை நடத்துகிறார்கள். கடுகை அரைத்து அப்புகிறார்கள். பூவை அங்கங்கே இட்டுப் பூசிக்கிறார்கள். தூபம் காட்டிப் பூசை செய்கிறார்கள். குறிஞ்சிப் பண்ணைக் குறமகள் பாடுகிறாள். அங்கே முருகன் ஆவேச உருவத்தில் வெளிப்படுகிறான்.

பழமுதிர்சோலை மலையில் அருவி எவ்வாறு மேலிருந்து கீழே வரும்போது எல்லா வகையான நிலைகளையும் கடந்து வருகிறதோ, அவ்வாறு முருகனும் தேவர்கள் முதல் பேய் இறுதியாகவுள்ளவர்கள் வழிபடும் தெய்வமாகவும், முனிபுங்கவர் முதல் குறவர் வரையில் பூசிக்கும் பரம்பொருளாகவும் நிலவுகிறான்.

### புராண வரலாறுகள்

*அவன் நீலப்பைஞ் சுனையாகிய சரவணப் பொய்கையில் திருவவதாரம் செய்ததும், ஆறு கார்த்திகை மாதரால் வளர்க்கப் பெற்றதும், நான்முகனைச் சிறையிலிட்டதும், கிரவுஞ்சமென்னும் மலையைப் பிளந்ததும், சூரனை அழித்ததும் தேவயானையைத் திருப்பரங்குன்றத்தில் திருமணம் செய்து கொண்டதும், வள்ளி நாயகியோடு எழுந்தருளியிருப்பதுமாகிய புராண வரலாறுகளை நக்கீரர் நினைப்பூட்டுகிறார்.*

### முருகுத் திருக்கோலம்

*முருகன் என்னும் திருநாமத்துக்குரிய பொருளைக் குறிப்பாக ஓரிடத்தில் கூறுகிறார். மணம், தெய்வத் தன்மையாகிய அருள், இளமை, அழகு என்னும் நான்கும் இணையில்லா வகையில் நிரம்பியவன் முருகன்.*

*"மணங்கமழ் தெய்வத்து இளநலம்"*

*என்பதில் அவற்றைக் குறிப்பிடுகிறார். இந்த முருகுத் திருக்கோலம் பழமையானது. "பண்டைத்தன், மணங்கமழ் தெய்வத் திளநலம்" என்கிறார். அவனுக்கு மிகப் பெரிய விசுவரூபமும் உண்டு. அதைக் கண்டவர் அஞ்சுவர். "அணங்குசால் உயர்வுநிலை" என்று அதனைச் சுட்டுகிறார். அவ்வளவு பெரிய திருவுருவம் இருப்பினும், பணிபவர்கள் பால் உள்ள பெருங் கருணையால் அவன் அதை மறைத்துக்கொண்டு அழகனாக வருகிறான்.*

### அங்க அடையாளங்கள்

*அவனுக்கு ஆறுமுகமும் பன்னிரண்டு திருக்கரங்களும் இருக்கின்றன. உலகிலுள்ள இருளையெல்லாம் போக்கிச் சுடர் விடுகின்றது ஒரு முகம்; அதற்கு ஏற்ற கைகளில் ஒன்று சூரியனுடைய வெப்பத்தைத் தாங்கிச் செல்லும் முனிவர்களுக்கு அருள்புரிய, மற்றொரு கை இடையிலே இருக்கிறது. ஒரு முகம் வணங்கிய அன்பர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுக்கிறது; அதற்காக அவன் யானையின் மீது எழுந்தருளியிருக்கும்போது ஒரு கையைத் துடைமேல் வைத்து, மற்றொரு கையில் அங்குசத்தைப் பிடித்திருக்கிறான். அந்தணர் செய்யும் வேள்விகளுக்குப் பாதுகாப்பாக நிற்கும் முகமும், அவ்வேள்விகளைக் குலைக்க அசுரர் வந்தால் அவர்களை அழிக்க வேலெடுத்த கையும் கேடயம் கொண்ட கையுமாக அவன் விளங்குகிறான். ஒரு முகம் நுட்பமான கருத்துக்களை விளக்கும்போது ஒரு கை மோன முத்திரையோடு விளங்க மற்றொரு கை மார்பிலுள்ள மாலையைப் பற்றியிருக்கிறது. மற்றொரு முகம் அசுரரை மாய்த்து வென்று களவேள்வி செய்கையில் ஒரு கை மேலே சுழன்று ஆவன செய்யும்படி ஏவ, மற்றொரு கை மணியை ஒலிக்கிறது. வள்ளி*

நாச்சியாரோடு இன்பம் கொள்ளும் ஒரு முகத்துக்கு ஏற்ப மழை வளம் சுரக்கச் செய்யும் ஒரு கையும், தேவலோக மடந்தையருக்கு மணமாலை வழங்கும் ஒரு கையும் விளங்குகின்றன. இப்படி ஆறுமுக நாதனாகப் பன்னிருகைப் பரமனாக அவன் தோற்றம் அளிக்கிறான்.

அவனுடைய திருவடி அடைவாரைத் தாங்குகிறது. அவனுடைய இடையில் சிவந்த ஆடை ஒளிர்கிறது அவன் மார்பில் கடம்ப மாலை இலங்குகிறது; முத்துமாலை அசைகிறது. அவனுடைய காதுகளில் குழையும், தலையில் மணிமுடியும் சுடர்கின்றன. அவன் காந்தளங் கண்ணியை முடிமேல் அணிந்திருக்கிறான். அவனுடைய திருமேனி சிவப்பு நிறமுடையது; கதிரவனைப் போன்ற ஒளி வீசுவது.

## உறையும் இடங்கள்

இத்தகைய திருக்கோலத்தையுடைய முருகன் திருக்கோயில்கள் உள்ள ஆறு படைவீடுகளில் எழுந்தருளியிருக்கிறான். கோயில் இல்லாத ஆற்றிலும், குளத்திலும், மன்றத்திலும், பொதியிலும், சதுக்கத்திலும், சந்தியிலும் இருக்கிறான். அவன் இல்லாத இடம் இல்லை. எங்கே அன்பர்கள் உணர்வு பெற்று நின்று வாழ்த்திப் போற்றுகிறார்களோ, அங்கே அவள் எழுந்தருளி உடனே கருணை பாலிப்பான்; வேறு யாராலும் வழங்க முடியாத முத்தியின் பத்தை வழங்குவான்.

இவ்வாறு முருகனுடைய அருளைக் கூறும் இந்த நூல், அந்தக் காலத்து மக்கள் இயல்பையும், இயற்கை வளத்தையும் கவிச்சுவை பொங்கப் புலப்படுத்துகிறது.

இந்த அரிய நூலைப் பாராயணம் செய்யும் பழக்கம் நெடுநாட்களாக இந்த நாட்டில் இருந்து வருகிறது.

"நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்போல நாள்தோறும் சாற்றினால்"

என்று வரும் பாட்டு நாள்தோறும் பாராயணம் பண்ணும் மரபையும் அதன் பயனையும் தெரிவிக்கிறது.

இது சங்க நூற் சோலையின் முன்னே முதலில் திகழும் கற்பக மரமாகவும், பன்னிரண்டு திருமுறைகளின் இடையே திகழும் சோதி மரமாகவும் விளங்குகிறது.

காலத்தை எதிரிட்டு நின்று பொலியும் திருமுருகாற்றுப்படை எல்லோருக்குமே முருகன் திருவருளைப் பெறுவதற்குத் துணை செய்யும் வழிகாட்டி.

## பெருமழைப்புலவர் பொ.வே. சோமசுந்தரனார்

*இனி, 217 - 'அதாஅன்று' என்பது முதல் 249 - 'ஆண்டாண்டுறைதலும் அறிந்த வாறே' என்னுந்துணையும் ஒருதொடர். இதன்கண் முற்கூறிய இடங்களேயல்லாமல் அவ்விறைவனைக் கண்டு அருள்பெறுதற்குரிய பிற இடங்கள் இவை எனக் கூறுகின்றார்.*

### ஊரூர் கொண்ட சீர்கெழு விழவு

*217 - 220 :* **அதாஅன்று ................. விழவினும்**

***பொருளுரை :*** *அதாஅன்று - அவ்விடமன்றியும், சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து - சிறிய தினை அரிசியைப் பூக்களோடே கலந்து பிரப்பரிசியாக வைத்து மறியை அறுத்து, வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ - கோழிக் கொடியோடே தான் அவ்விடத்தே நிற்கும்படி நிறுத்தி, ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும் - ஊர்தோறும் ஊர்தோறும் எடுத்துக் கொண்ட தலைமை பொருந்தின விழாவின் கண்ணும்.*

***கருத்துரை :*** *அவ்வாறு குன்று தொறும் ஆடற்கண் அப்பெருமான் நிற்றலேயன்றியும், சிறிய தினையரிசியைப் பூக்களோடே கலந்து பிரப்பரிசியாக வைத்து மறியறுத்துக் கோழிக் கொடியுயர்த்து அவ்விடத்தே அவ்விறைப் பொருள் நிற்பதாக நினைத்து நிறுத்தி ஊர்கள் தோறும் எடாநின்ற தலைமை பொருந்தின விழாவிடத்தும் என்பதாம்.*

***அகலவுரை :*** *தினை - அரிசிக்கு ஆகுபெயர். குறுணியளவிற்றாகப் பல கொள்கலங்களில் அரிசியைப் பெய்து பரப்பி வைத்தலைப் பிரப்பரிசி வைத்தல் என்ப. "மறிக்குர லறுத்துத் தினைப்பிரப் பிரீஇ" (குறுந் - 243-1) என்றும், "உருவச் செந்தினை குருதியொடு தூஉய்", (அகம் 22-10) என்றும் வருதல் காண்க. விரைஇ - கலந்து. மறி - ஆடு. வாரணம் - கோழி. தொல்காப்பிய மரபியல் 48 ஆம் சூத்திர உரையில் பேராசிரியர் "கடனறிந்தோர் ஈன்றதனான் வழக்கிலும் செய்யுளினும் அவை வந்தமையிற் கடியலாகா என்றாவாறு. இன்னும் இப் பரிகாரத்தாலே கோழியை வாரணம் என்றலும் வெருகினை விடை என்றலும் போல்வன பலவுங் கொள்க", என்றோதுதலும் காண்க. "கான வாரணம் ஈனும் காடாகி விளியும் நாடுடையோரே" 5) எனப் புறத்தினும், "முறஞ் செவி வாரணம் முன்சம முருக்கிய புறஞ்செவி வாரணம்", (10, 247-8) எனச் சிலப்பதிகாரத்தும், "பொறிமயிர் வாரணங் குறுங்கூ விரிப்ப" (7 : 106) என மணிமேகலையினும் வருதல் காண்க. வயின்பட நிறீஇ - அவ்விடத்தே நிற்கும்படி நிறுத்தி என்க.*

*ஊர் ஊர் என்ற அடுக்கு ஊர்கள் தோறும் என்னும் பொருட்டு. சீர், ஈண்டு தலைமைமேனின்றது. குறிஞ்சிநிலத் தெய்வம் முருகன் ஆகலான், அவற்கு எடுக்கும் விழாவே ஏனை விழாக்களினும் சிறந்ததாகல் பற்றிச் சீர்கெழு விழாவென்றார்.*

## ஆர்வலர் உள்ளத்திருக்கோயில்

*221 :* **ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்**

***பொருளுரை :*** *ஆர்வலர் ஏத்த - தன்பா லன்புடையார் தன்னை வழிபட்டு ஏத்துதலாலே, மேவரு நிலையினும் - தன்மனம் பொருந்துதல் வந்த இடத்தினும்;*

***கருத்துரை :*** *தன்பாலன்புடையோர் ஏத்துதலாலே தன் மனம் பொருந்துதலையுடைய அவ்விடத்தினும் என்பதாம்.*

***அகலவுரை :*** *இவ்வாறு குறித்துக் கூறப்பட்ட இடங்களில் அன்றியும், தன்னை வழிபடும் அடியார் எவ்விடத்தே நின்று தன்னை ஏத்தினர் அவ்விடத்தேயும் அம்முருகப் பெருமான் தோன்றி அருள்செய்வன் என்பதாம். எனவே, நீயும் அன்போடு வழிபட்டேத்துவாயாயின் அவ்விடத்தேயும் அப் பெருமானைக் காணக்கடவை என்றறிவுறுத்தவாறு. "நெஞ்சில், ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும், முருகா என்றோதுவார் முன்," (திருமுருகு வெண்பா. 4) என வருதல் காண்க.*

*ஆர்வலர் - இறைபணி நின்ற அடியவர், ஆர்வலர் நெஞ்சாகிய தாமரையில் எழுந்தருளுதல் அவ்விறைவனுக்குப் பெரிதும் விருப்பமுடைய செயலாகலின், மேவருநிலை என்றார். மேவருதல் - பொருந்துதல், வருதல். ஆர்வலர் உள்ளமே ஏனையிடங்களினும் முருகப்பெருமான் விரும்பி உறைதற்குப் பொருந்தியவிடம் என்றவாறு. "மலர் மிசை ஏகினான்" என வள்ளுவனார் கூறுதலும் அறிக.*

## வெறியயர் களனும் பிற இடங்களும்

*222 - 226 :* **வேலன்..... நிலையினும்**

***பொருளுரை :*** *வேலன் தைஇய வெறி அயர் களனும் - படிமத்தான் இழைத்த வெறியாடு களத்தினும், காடும் காவும் கவின் பெறு துருத்தியும் - காட்டினும் பொழிலினும் அழகிய மாற்றிடைக் குறையினும், யாறும் குளனும் வேறுபல் வைப்பும் - யாறுகளினுங் குளங்களினும் முற்கூறப்பட்ட ஊர்களன்றி வேறுபட்ட பலவாகிய ஊர்களினும், சதுக்கமும் - நாற்சந்தியினும், சந்தியும் - முச்சந்தியினும் ஐஞ்சந்தியினும், புதுப் பூங்கடம்பும் - புதிய பூக்களையுடைய கடப்பமரத்தினும், மன்றமும் - ஊர்க்கு நடுவாய் எல்லாருமிருக்கும் மரத்தடியினும், பொதியிலும் - அம்பலத்தினும், கந்து உடை நிலையினும் - திருவருட் குறியாக நடப்பட்ட தறியிடத்தினும்.*

***கருத்துரை :*** *வேன்மதன் இழைத்த வெறியாடு களத்தினும், காட்டினும், சோலையினும், அழகுபெற்ற யாற்றிடைக் குறையினும், யாற்றினும், குளத்தினும், முற்கூறப்பட்ட ஊர்களன்றி வேறாகிய பற்பல ஊர்களினும், நாற்சந்தியினும், முச்சந்தியினும் ஐஞ்சந்தியினும், புதிதாக மலர்ந்துள்ள கடப்ப மரத்தினும் ஊர்நடுவே மக்கள் குழுமியிருக்கும் மன்றத்து மரத்தினும், ஊரம்பலங்களினும், அருட்குறியா நடப்பட்ட தறியிடங்களினும் என்பதாம்.*

***அகலவுரை :*** *வெறியயர்களன் என்றது, வேன்மகன் முருகப்பெருமானுக்குக் களனிழைத்து வெறியாட்டயரும் இடம் என்றவாறு. பண்டைக்கால மக்கள் தமக்கு உடல்நலமில்லா வழியாதல், பிற குறைகள் உண்டான பொழுதாதல், வேலன் கட்டுவிச்சி முதலியோரிடத்துக் குறி கேட்டலும், அவர் இக்குறை தெய்வத்தானே நேர்ந்தது என்று கூறினாலும், அல்லது தெய்வத்திற்கு வெறியாட்டயர்ந்ததால் தாம் உற்று துயர் நீங்கும் என்று கருதினாலும் எதிர்காலத்தே நிகழப்போவதனை முன்னரே அறிந்துகொள்ள விரும்பினாலும், அவ்வழி முருகப்பெருமானுக்கு வேலனைக் கொண்டு களன் இழைத்து மறியறுத்து, மலர் சிதறி, நறுமணப் புகை, சாந்தம் முதலியன கொடுத்து, வழிபாடு செய்தலும், அங்ஙனம் செய்யுங்கால், அக்கடவுள் அவ் வேலன்மேல் எழுந்தருளி ஆவன கூறி அவர் குறையைப் போக்குதலும் வழக்கமாம். ஆதலின், வெறியாடுதல் அகம் புறம் இரண்டற்கும் பொதுவாகிய நிகழ்ச்சி என்றறிக. ஆசிரியர் தொல்காப்பியனாரும்,*

> *"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்*
> *வெறியாட் டயர்ந்த காந்தளும்"* *(புறத். - சூ. 5)*

*என்று புறத்திணையினும்,*

> *"வெறியாட் டிடத்து வெருவின் கண்ணும்"* *(கள. சூ. 20)*

*என்று அகத்திணையினும் துறை வகுத்தோதுதல் காண்க. இதனை,*

> *"நெடுவேட் பேணத் தணிகுவள் இவள்என*
> *முதுவாய்ப் பெண்டிர் அதுவாய்க் கூறக்*
> *களனன் கிழைத்துக் கண்ணி சூட்டி*
> *வளனகர் சிலம்பப் பாடிப் பலிகொடுத்து*
> *உருவச் செந்தினை குருதியொடு தூஉய்*
> *முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்"* *(அகம். 22)*

> *"........................................ நெடுவேள்*
> *அணங்குறு மகளிர் ஆடுகளங் கடுப்பத்*
> *திணிநிலைக் கடம்பின் திரளரை வளைஇய*

*துனியறை மாலையிற் கைவிடேஎம்"* *(குறிஞ்சி-374-6)*

*என்றும்,*

*"வேலன் புனைந்த வெறியயர் களந்தொறும்"* *(குறுந்-53-3)*

*என்றும்,*

*"வேலனார் வந்து வெறியாடு வெங்களத்து*
*நீலப் பறவைமேல் நேரிழை தன்னோடும்*
*ஆலமர் செல்வன் புதல்வன் வரும்வந்தால்*
*மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே"*

*(சிலப்-குன்றக்.)*

*என்றும்,*

*"இறைவனை நல்லாய் இதுநகை யாகின்றே*
*கறிவளர் தண்சிலம்பன் செய்தநோய் தீர்க்க*
*அறியாள் மற்றன்னை அலர்கடம்ப னென்றே*
*வெறியாடல் தான்விரும்பி வேலன் வருகென்றாள்*
*............................................................................................................................"*

*"நேரிழை நல்லாய் நகையா மலைநாடன்*
*மார்புதரு வெந்நோய் தீர்க்க வரும்வேலன்*
*தீர்க்க வரும்வேலன் தன்னினும் தான்மடவன்*
*கார்க்கடப்பந் தாரெங் கடவுள் வருமாயின்"*

*என்றும் வருவனவற்றாலுணர்க.*

*தைஇய - இழைத்த; இயற்றிய. "காடும் காவும் கவின்பெறு துருத்தியும்" முதலிய இடங்களில் எல்லாம் முருகன் காணப்படுவான் என்றது,* ***எங்கெல்லாம் அழகு உணர்ச்சி மிக்குப் புலனாகுமோ அங்கெல்லாம் கடவுட்காட்சியே மனத்திற்குப் புலனாகின்றது என்றதொரு சிறந்த உண்மையைப் பண்டைக்கால மக்கள் கொண்டிருந்தனர்*** *என்பதை விளக்குதல் காண்க. இவ் வழகினைக் கண்ணாற்காணப்படும் கடவுள்தோற்றம் என்றே கொண்டு, அதற்கே முருகென்ற பெயரையிட்டு வழங்கினர் என்றறிக. எனவே, தமிழ்மக்கள் மனனுணர்ச்சிக்குப் புலனாம் அழகுண்மையாலேயே கடவுட்காட்சி பெற்றனர் என்பது உணரற்பாலது. முருகென்னும் சொல் அழகு, இனிமை, இளமை முதலிய பல பண்பினையும் உணர்த்துதலும் உணர்க.*

*"ஆலமுங் கடம்பும் நல்யாற்று நடுவும்*
*கால்வழக் கறுநிலைக் குன்றமும்"*

அழகுமிக்க இடங்களாதலும் அறிக. இறைப்பொருள் யாண்டும் உளதாயினும், இவ்விடங்களில் மக்கள் உணர்ச்சிக்குப் புலனாகும் என்பது கருத்தென்க.

கவின் பெறு துருத்தி - அழகிய யாற்றிடைக்குறை. யாற்றிடைக் குறை நீர்வளனும் நிலவளனும் ஒருங்கே பெற்று மரஞ்செடி கொடிகள் மாண்புற்றோங்கிக் கண்டோர் உளத்தைக் கவரும் அழகு (முருகு) உடைத்தாகலின் கவின்பெறு துருத்தி என்றார்.

வைப்பு - ஊர். திருப்பரங்குன்றம் முதலாக யாம் முன்னே குறித்துக் கூறிய ஊர்களினன்றி வேறாகிய பல ஊர்களினும் அப்பெருமானைக் காண்டல் கூடுமென்பார். “வேறு பல் வைப்பும்” என்றார். சதுக்கம் - நாற்சந்தி. சந்தி என வேறு கூறியது ஏனை முச்சந்தி, ஐஞ்சந்தி முதலியவற்றை எனக் கொள்க. இச் சந்திகளிடத்தே முருகவேளுக்குத் திருக்கோயிலெடுத்து வழிபடுதல் வழக்கம் என்க.

மன்றம் என்றது ஊர்மக்கள் கூடியிருக்கும் மரத்தடியை. மன்றில் (மன்றாகிய இல் என்று மன்றத்தின் வேறாக வழங்குதலை, பொதியில் ஊர்மக்கட்குப் பொதுவாகவுள்ள மண்டபம் என்க. இதனை “மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்” (492) எனவரும் மலைபடுகடாத்தான் உணர்க.

கடப்பமரம் முருகக் கடவுள் விரும்பியுறைவதொரு மரம். “கடம்பமர் நெடுவேள்” (பெரும்பாண். 75) என்றும், “செல்வக் கடம்பமர்ந்தான்” (ஐந். ஐம். 1) என்றும் வருதல் காண்க.

கந்துடைநிலை என்றது, இறைவன் அருட்குறியாகக் கல் தறி நட்டிருக்கும் இடத்தை, பண்டைக் காலத்தே ஊர்களில் இறை வணக்கம் செய்தற் பொருட்டுக் கல்தறி நட்டு அதனை வணங்கி வந்தனர். அக்கல்தறியே பிற்றை நாள் சிவலிங்க வுருவமாகக் கொள்ளப்பட்டதென்றறிக. இத்தகைய கடவுள் தறியைப் பொதியிலிடத்து நட்டனர் என்பதையும்; அக் கந்துருவினை மலர் முதலியவற்றால் ஒப்பனைசெய்து அவண் மெழுக்கிட்டு, விளக்கேற்றி, ஊர்மக்கள் வணங்கினர் என்பதையும்,

“கொண்டி மகளிர் உண்டுறை மூழ்கி
அந்தி மாட்டிய நந்தா விளக்கின்
மலரணி மெழுக்க மேறிப் பலர்தொழ
வம்பலர் சேக்கும் கந்துடைப் பொ தியில்”

(பட்டினப். - 246 - 9)

எனவரும் பட்டினப் பாலையானும் உணர்க. கந்தினும் என்றதற்கு - “ஆதீண்டு

*குற்றியையுடைய இடத்தினும்” என்பர் நச்சினார்க்கினியர். யானைத்தறியிடத் தென்பாருமுளர்.*

## முருகாற்றுப் படுத்த உருகெழு வியனகர்

*227-231 :* **மாண்டலை..... சிதறி**

***பொருளுரை :*** *மாண்தலைக் கொடியொடு அமைவர மண்ணி - மாட்சிமைப்பட்ட தலைமையினையுடைய கொடியோடே பொருந்துதல் வரச்செய்து, நெய்யோடு ஐயவி அப்பி - நெய்யோடே வெண்சிறு கடுகையும் அப்பி, ஐதுரைத்து - தான் வழிபடுதற்குரிய மந்திரத்தைத் தோன்றாமல் உரைத்து, குடந்தம்பட்டு - வழிபட்டு - கொழுமலர் சிதறி - அழகிய மலர்களைத் தூவி,*

***கருத்துரை :*** *மாட்சிமையுடைய - தலைமைசான்ற கோழிக்கொடியோடே பொருந்துமா றியற்றி, நெய்யையும் வெண்சிறு கடுகையும் அப்பி, ஓதும் மந்திரத்தை மறைவாக ஓதி வழிபட்டுக் கொழுவிய மலர்களைத் தூவி என்பதாம்.*

***அகலவுரை :*** *ஆண்டலைக் கொடி என்றும் பாடம். அப் பாடத்திற்குப் “பேய் முதலியன பலியை நுகராமல் தலை ஆண்மகன்றலையும் உடல் புள்ளின் வடிவுமாக எழுதின கொடி என்க”, என்பர் நச்சினார்க்கினியர்.*

*இனிச் சேவலின் தலை ஏனைப் பறவைகள் தலையைவிட மிக்க அழகுடைத்தாகலின், மாட்சிப்பட்ட தலையை உடைய கோழிக்குப் பெயராய் நின்ற தெனினுமாம். இப் பொருட்கு மாண்டலை என்பது அன்மொழித்தொகை யாகக் கொள்க. மாட்சிமைத் தலைப்பட்ட கோழி யென்பாரும் ஆண்டலைக் கொடி என்ற பாடத்திற்கு மயிற்கொடி என்பாரும் உளர்.*

*ஐயவி - வெண் சிறு கடுகு. நெய்யும் வெண் சிறு கடுகும் அப்புதலை, “ஐயவி உப்பி நெய்யணி நெடுநிலை” (நெடுநல் - 86) என்பதனானும், “நெய்யோ டிமைக்கும் ஐயவித் திரள்காழ்” (நற். 370 : 3) என்பதனானும் உணர்க.*

*குடந்தம் படுதலாவது, வணங்குதல். ‘‘வழிபடுதல்’’ என்பர் நச்சினார்க்கினியர். நான்கு விரலை மடக்கிப் பெருவிரலை நிறுத்தி மார்பினிடையே வைப்பது குடந்தம் என்பாருமுளர். ‘‘குடவென்பது தடவென்பது போல வளையை உணர்த்துவதோர் உரிச்சொல்லாகலின், அதனடியாகப் பிறந்த பெயருமாம்” என்பர் நச்சினார்க்கினியர். குடந்தம் பட்டென்பதற்கு, “வணக்கம் பட்”டென்பாருமுளர்.*

## இதுவுமது

*231 - 234 :* முரண் ..... இரீஇ

***பொருளுரை :*** *முரண்கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ - தம்மில் மாறுபட்ட வடிவினையுடைய இரண்டு அறுவையை உள்ளொன்றும் புறம்பொன்றுமாக உடுத்து, செந்நூல் யாத்து - சிவந்த நூலைக் கையிலே காப்புக்கட்டி, வெண் பொரி சிதறி - வெள்ளிய பொறியைச் சிதறி, மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடை - மிகுதியை உடைய வலி நிலைபெற்ற பெரிய காலையுடைத்தாகிய கொழுவிய கிடாயினது, குருதியொடு விரைஇய தூவெள் அரிசி - உதிரத்தோடே பிசைந்த தூய வெள்ளரிசியை, சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇ - சிறு பலியாக இட்டுப் பல பிரப்பும் வைத்து;*

***கருத்துரை :*** *மாறுபட்ட வடிவினையுடைய இருவேறு ஆடைகளை உள்ளொன்றும் புறம்பொன்றுமாக உடுத்துச் சிவந்த நூலைக் கையிலே காப்புக்கட்டி, வெண்பொரி தூவி, வலிமிக்கதும், பெரிய காலையுடையதும் ஆகிய கொழுத்த கிடாயினது குருதியோடே பிசைந்த தூய வெள்ளரிசியைச் சிறு பலியாக இட்டுப் பல பிரப்பு வைத்து என்பதாம்.*

***அகலவுரை :*** *முரண் - ஒன்றற்கொன்று நிறத்தானும் வடிவானும் மாறுபடுதல். உரு - நிறம்; வடிவமுமாம். "இரண்டுடை" என்றும் பாடம். இரண்டு வெண்பட்டையும் என்பாருமுளர். உடன் உடீஇ - ஒருங்கே உடுத்தென்க. செந்நூல் - சிவந்த நூல். சிவந்த நூலாற் காப்புக்கட்டி என்க. இனிச் செந்நூல் யாத்தென்பதற்கு, செவ்விய நூல் பிடித்து எல்லைப்படுத்தி என்றுமாம்.*

*மதவலி - மிக்கவலி. நிலைஇய - நிலைபெற்ற. மா - பெரிய. தாள் - கால். கொழுவிடை - கொழுத்த ஆட்டுக்கிடாய். கொழுவிடை என்றதற்கு யானைத்திரள் என்பாருமுளர். சில்பலி - சிறிய பலி என்க. சின்மை ஈண்டு எண் குறியாது சிறுமையாகிய அளவு குறித்து நின்றது.*

*பிரப்பு - 218 - சிறுதினை என்பதன் அகலவுரையிற் காண்க. இனிப் பிரப்பங்கூடை என்பாரு முளர். இரீஇ - பரப்பி, இருத்தி என்க.*

## இதுவுமது

*235 - 239 :* சிறுபசுமஞ்சள் ..... குறிஞ்சிபாடி

***பொருளுரை :*** *சிறு பசுமஞ்சளொடு நறுவிரை தெளித்து - சிறிது பசுமஞ்சளோடே நறிய சந்தனம் முதலியவற்றையுந் தெளித்து, பெருந்தண் கணவீரம் - பெரிய குளிர்ந்த செவ்வலரி மாலையினையும், நறுந்தண் மாலை*

- ஒழிந்த நறிய குளிர்ந்த மாலைகளையும், துணையுற அறுத்துத் தூங்க நாற்றி -தம்மில் இணையொக்க அறுத்து அசையும்படி தூங்கவிட்டு, நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி - செறிந்த மலைப்பக்கத்திலுள்ள நல்ல ஊர்களைப் பசியும் பிணியும் பகையும் நீங்குகவென்று வாழ்த்தி, நறும்புகை எடுத்து - நறிய மணப்புகை கொடுத்து, குறிஞ்சி பாடி - அந் நிலத்திற்கு அடுத்த குறிஞ்சிப் பண்ணைப் பாடி.

**கருத்துரை :** சிறிய பசுமஞ்சளோடே நறிய சந்தன முதலியவற்றைத் தெளித்துப் பெரிய குளிர்ந்த செவ்வலரி மாலையையும் ஏனைய நறிய குளிர்ந்த மாலைகளையும் இணைஒக்க அறுத்து அசையும்படி நாலவிட்டுச் செறிந்த மலைப்பக்கத்துள்ள நல்ல ஊர்களைப் பசியும், பிணியும், பகையும் நீங்குக என்று வாழ்த்தி, நறிய மணப்புகை கொடுத்து அந்நிலத்துக்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடி என்பதாம்.

**அகலவுரை :** சிறுபசு - மஞ்சள் என்றது, மஞ்சளிலே ஒருவகை எனினுமாம். நறுவிரை - சந்தன முதலிய மணப்பொருள்களுக்கு ஆகுபெயர். விரை - மணம். கணவீரம் - அலரி. அலரிப்பூ பரியனவும் குளிர்க்கனவுமாயிருத்தல் இயல்பாகலின், பெருந்தண் கண வீரம் என்றார். நறுந்தண்மாலை என்றது, ஏனை மாலைகளை என்க. துணையுற அறுத்தலாவது, எல்லா மாலைகளும் ஓரளவாக அமையும்படி அறுத்தென்றவாறு, துணையற என்ற பாடத்திற்குத் தமக்கு ஒப்பில்லாதபடி என்க. நளிமலை - செறிந்த மலை; "நளியென் கிளவி செறிவும் ஆகும்" (உரி-உரு) என்பது தொல்காப்பியம். சிலம்பில் நன்னகர் என்றதற்கு மலையின்கண் அமைந்த முருகப் பெருமானுடைய நன்றாகிய கோயிலை என்றுமாம். இப் பொருட்கு வாழ்த்தி என்பதனைத் திருக்கோயிலை வாழ்த்தி என்க. இனி நகர் ஊர் எனக்கொள்ளின், ஊரிலுள்ளோர் பசியும், பிணியும், பகையும் நீங்கி வாழ்க என்று வாழ்த்தி என்க. "பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி" (5 : 72-3) எனச் சிலப்பதிகாரத்தும் மணிமேகலையினும் (1. 70-71) ஓதியவாறுணர்க.

தூங்க - அசைய. நாற்றி - தூங்கவிட்டு. நறும்புகை - அகில் முதலியவற்றாலாய நறிய மணப்புகை என்க. குறிஞ்சி - குறிஞ்சி நிலத்திற்குரிய பண்.

## இதுவுமது

### 240 - 244 : இமிழிசை ..... வியனகர்

**பொருளுரை :** இமிழ் இசை அருவியொடு இன்னியம் கறங்க - முழங்குகின்ற ஓசையினையுடைய அருவியோடே இனிய இசைக்கருவிகளும் ஒலியாநிற்க, உருவப் பல்பூத் தூஉய் வெருவரக் குருதிச் செந்தினை பரப்பி -

*சிவந்த நிறத்தினையுடைய பல பூக்களையும் தூவி அச்சம் வரும்படி குருதி அளைந்த சிவந்த தினையினையும் பரப்பி, குறமகள் முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க முருகு ஆற்றுப்படுத்த உருகெழு வியன் நகர் - குறவர் குடியிற் பிறந்த மகள் முருகன் உவக்கும் இசைக்கருவிகளை ஒலிக்கச்செய்து இறைவன் இலன் என்பார் அஞ்சும்படியாக அம்முருகக்கடவுள் வரும்படி வழிப்படுத்தின அச்சம் பொருந்தின அகற்சியையுடைய நகரின்கண்ணே;*

***கருத்துரை :*** *முழங்குகின்ற ஓசையையுடைய அருவியோடே இனிய இசைக்கருவிகளும் முழங்காநிற்பச் சிவந்த நிறத்தினையுடைய பல பூக்களையும் தூவி, அச்சம் உண்டாகும்படி குருதி அளைந்த சிவந்த தினையினையும் பரப்பி, முருகப்பெருமான் உவக்கும் இசைக்கருவிகளை முழங்கப்பண்ணி, இறைவன் இலன் என்பார் அஞ்சும்படியாக அம் முருகப் பெருமான் வரும்படி வழிப்படுத்தின அச்சம் பொருந்தின அகற்சியையுடைய நகரின் கண்ணே என்பதாம்.*

***அகலவுரை :*** *இமிழிசை : வினைத்தொகை. முழங்கும் இசை என்க. அருவி கூறினார் இருள் தூங்கித் துளித் தலைஇய கூதிர்க்காலம் என்றற்கு; என்னை? குறிஞ்சிக்கடவுளாகிய முருகப்பெருமான் உறையும் அந்நிலத்திற்குரிய பெரும்பொழுது கூதிராகலின் என்க. இதனை,*

> *“காரும் மாலையும் முல்லை குறிஞ்சி*
> *கூதிர் யாமம் என்மனார் புலவர்”* (தொல். அகத். சூ. 6)

*என்பதனானும் அறிக. இன்னியம் - இனிய இசைக்கருவி. கறங்க - முழங்க. உருவம் - நிறம்; “வினைபயன் மெய்யுரு என்ற நான்கே” (தொல்-உவம. சூ. 1.) என்புழியும் அஃதப்பொருட்டாதல் அறிக. நிறம் - ஈண்டுச் சிவந்த நிறம் என்க. தூஉய் - தூவி. குருதியைத் தினையரிசியோடே அளைந்தகாலை அதனைக் கண்டோர் அஞ்சுவராகலின் வெருவரக் குருதிச் செந்தினை பரப்பி என்றார். குறமகள் - குறவர் குடியிற் பிறந்த மகள். “வேலன் வெறியாட்டயர்ந்த” (தொல். புற - சூ.ரு) என்புழி, சிறுபான்மை ஏனையோரும் ஆடுவாரென்றலின் குறமகள் வெறியாட்டுக் கூறினார்” என்பர் நச்சினார்க்கினியர்.*

*முருகிய - முருகன் உவக்கும் இசைக்கருவி என்க. அவை குறிஞ்சி யாழ், தொண்டகம், சிறுபறை, கோடு முதலியனவாம். முரணினர் - இறைப்பொருள் உண்டென்பாரோடு மாறுபட்டு அஃதின்றென்போர். எனவே, கடவுள் இல்லை என்போர் அக் காலத்தும் உணராதலறிக. குறமகள் மேல் முருகன் ஆவேசித்து மக்கள் அறிவாற் காணப்படாத எதிர்கால நிகழ்ச்சிகளைக் கூறக்கேட்டுக் கடவுள் இல்லை என்பார் அஞ்சினர் என்க. முருகாற்றுப்படுத்தலாவது முருகன் தன்மேல் ஏறி ஆடப்பெறுதல். மக்கள் மேல் தெய்வம் ஏறியாடுதலை,*

*"குரற்றலைக் கூந்தல் குலைந்துபின் வீழத்*
*துடித்தனள் புருவம் துவரிதழ்ச் செவ்வாய்*
*மடித்தெயி றரும்பினள் வருமொழி மயங்கினள்*
*திருமுகம் வியர்த்தனள் செங்கண் சிவந்தனள்*
*கைவிட் டோச்சினள் கால்பெயர்த் தெழுந்தனள்*
*பலரறி வாராத் தெருட்சியள் மருட்சியள்*
*உலறிய நாவினள் உயர்மொழி கூறித்*
*தெய்வமுற் றெழுந்த தேவந் திகைதான்"* *(30 : 37 - 45)*

எனவரும் இளங்கோவடிகள் சொல்லோவியத்தானும் அறிக.

உரு - அச்சம்; ''உரு உட்காரும் புரை யுயர்வாகும்'' என்பது தொல்காப்பியம். வியன் - அகற்சி. வியனகர் என்றது ஈண்டு மலையின்கட் கோயிலை என்க.

குறமகள் மண்ணி அப்பி உரைத்துக் குடந்தம்பட்டுச் சிதறி உடீஇ யாத்துச் சிதறி செய்து இரீஇத் தெளித்து நாற்றி வாழ்த்தி எடுத்துப் பாடிக் கறங்காநிற்கத் தூய்ப் பரப்பி நிறுத்து ஆற்றுப்படுத்த நகரென வினைமுடிவு செய்க.

இப் பகுதியானே பண்டைக்காலக் குறிஞ்சிநில மக்கள் முருகனை வழிபடும் முறை கண்ணாற் கண்டாங்கு நன்கு விளங்கித் தோன்றுதலறிக.

இனி, அக் கோயிலிடத்தே முருகனை மக்கள் வழிபடும் முறை கூறுகின்றார்.

## மக்கள் முருகப்பெருமானை வணங்கும் முறை

### *245-249 :* ஆடுகளம் ..... அறிந்தவாறே

***பொருளுரை :*** *ஆடு களம் சிலம்பப் பாடி* - அங்ஙனம் வெறியாட்டெடா நின்ற களம் ஆரவாரிப்ப அதற்கு ஏற்பனவற்றைப் பாடி, *கோடுபலவுடன் வாய் வைத்து* - ஊது கொம்புகள் பலவற்றையும் ஒருங்கே ஊதி, *கொடுமணி இயக்கி* - வளைவுடைய மணியை ஒலிப்பித்து, *ஓடாப்பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி* - கெடாத வலியினையுடைய பிணிமுகம் என்னும் பட்டத்தினையுடைய யானையை வாழ்த்தி, *வேண்டினர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட* - காரியங்களை வேண்டுவோர் தாங்கள் விரும்பின காரியங்களை விரும்பினபடி பெற்றாற்போல நின்று வழிபாடு செய்ய, *ஆண்டாண்டு உறைதலும் அறிந்த ஆறே* - அவ்வவ்விடங்களிலே தங்குதலும் உரியன், யான் அறிந்தபடியே கூறினேன்.

***கருத்துரை :*** அங்ஙனம் வெறியாட்டயராநின்ற களம் ஆரவாரிக்கும்படி பாடி ஊதுகொம்புகள் பலவற்றையும் சேர ஊதி மணியை ஒலித்து அப் பெருமானுடைய யானையை வாழ்த்தி, குறை வேண்டினார் தாம்

வேண்டியவற்றைப் பெற்றாற்போன்று நின்று வழிபாடு செய்ய அவ்விடங்களில் தங்குதலும் உரியன். அப் பெருமானைக் காண்டற்குரிய இடங்களை யான் அறிந்தபடியே நினக்குக் கூறினேன் என்பதாம்.

***அகலவுரை :*** *மலைநிலமாகலின் எதிரொலி செய்ய என்பார் ஆடுகளம் சிலம்ப என்றார். ஆடுகளம், அங்ஙனம் வெறியாடநின்ற களம் என்க. சிலம்புதல் - ஒலித்தல். கோடுபலவுடன் என மாறுக. வாய் வைத்தென்றது, ஊதி என்றவாறு. கொடுமணி - தன்கண் வளைவு பொருந்தியமணி என்க. இயக்குதல் - அசைத்து ஒலிக்கச் செய்தல். "கோடுவாய் வைம்மின் கொடுமணி இயக்குமின்", (24 : 17) என்றார் சிலப்பதிகாரத்தும். "களநன் கிழைத்துக் கண்ணி சூட்டி, வளநகர் சிலம்பப் பாடிப் பலி கொடுத்து. உருவச் செந்தினை குருதியொடு தூஉய், முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்", (அகம் 22 : 8-11) என்றார் பிறரும். பிணிமுகம் என்பதனைப் பட்டம் எனக் கொண்டு அதனையுடைய யானை என்றார் நச்சினார்க்கினியர். இப் பொருளில் பிணிமுகம் என்பது அன்மொழித் தொகை என்க. "சேயுயர் பிணிமுகம் ஊர்ந்து" என்றும், "பிணிமுக ஊர்தி ஒண்செய் யோனும்" எனப் பிறாண்டும் வருதல் காண்க. பிணிமுகம் என்பதற்குப் பெரும்பாலோர் மயில் என்றே பொருள் கூறுவர். பிணிமுகம் என்பது முருகன் ஏறு யானை ஒன்றற்கே பெயர் என்பாரும் உளர்.*

*பிணிமுகம் வாழ்த்தும் வழக்கத்தை, "கடம்பும் களிறும் பாடி" (தொல்-பொரு-சூ 14.3 மேற்) என்பதனாலும் அறிக. இறைவனை வழிபடுவோர் இவ்வுலக வாழ்க்கைக்குரிய பொருட்பேற்றை விரும்புநரும் முத்திப்பேற்றை விரும்புநரும் எனப் பலதிறப்படுவர் ஆகலின், வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட என்றார். எய்தினர் என்றது, வழிபட்ட துணையானே எய்தினாரைப் போன்று என்றவாறு. வழிபட்டோர் வேண்டியது கைகூடப் பெறுதல் ஒருதலை யாகலின், அத்துணிவு பற்றி எய்தினாரைப் போன்று என்றார். எய்தி வழிபட என்றும் பாடம் உண்டு. ஆண்டாண்டு - அங்ஙனம் வழிபடு மிடந்தோறும் உரியன், யான் கூறினேன் என்பன வருவித்துக் கொள்க. அவ் விறைவன் உறைவிடம் முற்றும் அறிதல் யார்க்கும் இயலாதாகலின், யான் அறிந்த அளவிற் கூறினேன் என்றார்.*

*இனி 250, 'ஆண்டாண்டாயினுமாக' என்பது முதல் 215 'பெற வரும் பரிசில் நல்குமதி' என்னுந் துணையும் ஒரு தொடர். இதன்கண்;*

*ஆற்றுப்படுத்தும் நல்லாசிரியர் ஆற்றுப்படுத்தப்படும் மாணவனை நோக்கி, யான் கூறிய திருப்பரங்குன்றம் முதலிய இவ்விடங்களினாதல், பிற இடங்களினாதல் சென்று அப்பெருமானை வாழ்த்தி உன் எண்ணத்தை இயம்புதியாயின், ஆண்டுள்ள பணியாளர் நின் வருகையை முருகக் கடவுளிடம்*

சென்று அறிவிப்பர் என்றும், அங்ஙனம் அறிவித்த வழி, அக் கடவுள் நின் முன்னர்த் தோன்றி முகமன் மொழிந்து நீ வேண்டியதைத் தந்தருள்வன் என்றும் அறிவுறுத்தி யருள்கின்றார்.

## முருகப்பெருமானைக் கண்டபொழுது செய்யக்கடவன

*(250 - 252) :* **ஆண்டாண்டு ..... வணங்கி**

***பொருளுரை :*** *ஆண்டு ஆண்டாயினும் ஆக - யான் முற்கூறிய இடங்களிலே ஆயினும் ஆகப் பிறவிடங்களிலே யாயினுமாக, காண் தக முந்து நீ கண்டுழி - காணும் தகுதிபெற நீ நின்முன்னர் அப்பெருமானைக் கண்டபொழுது, முகன் அமர்ந்து ஏத்தி - முகத்தானே விரும்பி நோக்கி வாயானே வாழ்த்தி, கைதொழூஉப் பரவி - கையைத் தலைமேலே குவித்துப் புகழ்ந்து, காலுற வணங்கி - அப்பெருமானுடைய திருவடிகளிலே நின்றலை பொருந்தும்படி வீழ்ந்து வணங்கி;*

***கருத்துரை :*** *யான் இதுகாறும் கூறிய இடங்களினாதல் பிற விடங்களினாதல் நீ அப் பெருமானை முற்படக் கண்டபொழுது முகத்தானே விரும்பி நோக்கி வாயானே புகழ்ந்து வாழ்த்திக் கையைத் தலைமேலே குவித்துத் தொழுது வாழ்த்தித் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கி, என்பதாம்.*

***அகலவுரை :*** *இதனால் திருக்கோயில் வழிபாடு செய்யும் முறை இனிது விளங்குதல் அறிக.*

*"கையுந் தலைமிசை புனையஞ் சலியன*
*கண்ணும் பொழிமழை யொழியாதே*
*பெய்யுந் தகையன கரணங் களுமுடன்*
*உருகும் பரிவின பேறெய்து*
*மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும்*
*மின்றாழ் சடையொடு நின்றாடும்*
*ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர்*
*ஆர்வம் பெருகுதல் அளவின்றால்"*

*(பெரியபுரா. திருநாவு - 167)*

*எனவரும் சேக்கிழாரடிகள் திருமொழியானும் அன்பர்கள் இறை வணக்கம் செய்யும் முறையினை உணர்க.*

*இறைவன் இவ்விடத்துளன் இவ்விடத்திலன் என்று வரையறுத்துக் கூறப்படாதவன்; அவன் யாண்டுமுளன்; அன்பர் விழைந்த பொழுது விழைந்த இடத்தே வெளிப்பட்டருளுவன், ஆதலால் ஆண்டாண்டாயினுமாக என்றார்.*

*காண்டக என்றது நீ காணுந்தகுதியுடைத்தாக என்றவாறு. முந்து - முற்பட, கண்டுழி - கண்டபொழுது. முகனமர்தல் என்றது, அகத்தேயுள்ள ஆர்வம் முகத்தின்கண் வெளிப்பட்டுத் தோன்றும்படி என்றவாறு. "முகனமர்ந்து இனிது நோக்கி" என்றார் வள்ளுவனாரும். ஏத்துதல் - வாழ்த்துதல். பரவுதல் - அவனுடைய புகழ்களை எடுத்துப் பாரித்தோதுதல். தொழூஉ - தொழுது. காலுற - காலிலே தலையுற என்க.*

*இனி, கைதொழூஉப் பரவி என்றவர் பரவுமாற்றைப் பாரித்து 28 அடிகளில் ஓதுகின்றார் என்க.*

## முருகன் புகழ்மாலை

### *253 - 259 :* நெடும்பெரும் ..... குழவி

***பொருளுரை :*** *நெடும்பெரும் சிமையத்து நீலம் பைஞ்சுனை - நெடிய பெரிய இமவான் உச்சியிலே தருப்பை வளர்ந்த பசிய சுனையிடத்தே, ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப - விசும்பும் வளியும் தீயும் நீரும் நிலனுமாகிய ஐவருள் ஒருவனாகிய தீ தன் அங்கையிலே ஏற்ப, அறுவர் பயந்த ஆறமர் செல்வ - அருந்ததி மொழிந்த அறுவராலே பெறப்பட்ட ஆறு வடிவு பொருந்திய செல்வனே, ஆல்கெழு கடவுள் புதல்வ - கல்லாலின் கீழிருந்த கடவுளினுடைய மகனே!, மால் வரை மலைமகள் மகனே - பெருமையையுடைய மலையாகிய மலையரையன் மகளுடைய மகனே! மாற்றோர் கூற்றே - பகைவர்க்குக் கூற்றுவனே!, வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ - வெற்றியையுடைய வெல்லும் போர்த்தெய்வமான கொற்றவையின் மகனே!, இழை அணி சிறப்பிற் பழையோள் குழவி - பூண் அணிந்த தலைமையினையுடைய காடுகிழாளுடைய குழவியே!*

***கருத்துரை :*** *நெடிய பெரிய இமவானுச்சியிலே தருப்பை வளர்ந்த பசிய சுனையிடத்தே விசும்பும் வளியும் தீயும் நீரும் நிலனுமாகிய ஐவருள் ஒருவனாகிய தீக்கடவுள் தன் அங்கையிலே ஏற்ப அருந்ததி ஒழிந்த அறுவராலே பெறப்பட்ட ஆறுவடிவு பொருந்திய செல்வனே! கல்லாலின் கீழிருந்த கடவுளுடைய மகனே! பெருமையையுடைய மலையரையன் மகளுடைய மகனே! பகைவர்க்குக் கூற்றுவனே! வெற்றித் தெய்வமாகிய வெல்லும் போரையுடைய கொற்றவை மகனே! பூண் அணிந்த தலைமையினையுடைய காடுகிழாளின் மகனே! என்பதாம்.*

***அகலவுரை :*** *உலகின்கண்ணுள்ள மலைகள் எல்லாவற்றினும் இமயமலையே பெரியதும் உயர்ந்ததுமாகலின், நெடும்பெருஞ்சிமையம் என்றார். சிமையம் - உச்சி. நீலப்பைஞ்சுனை என்றது, நீலநிறமான தருப்பை வளர்ந்த பசிய சுனை என்றவாறு. சரவணம் - தருப்பை. சரவணத்தை*

உடைத்தாகலின் அச்சுனையைச் சரவணப் பொய்கை என்றும் கூறுப. அதன்கண் தோன்றினமையால் சரவணபவன் என்பது முருகக் கடவுளின் பெயராயிற்று. ஐவர் பூதமாகிய தெய்வங்களை அவை, நிலனும் நீரும் தீயும் காற்றும் வெளியுமாம். இப்பூதங்கட்கு அதிதெய்வமாவார் அயனும் அரியும் உருத்திரனும் மயேச்சுரனும் சதாசிவனும் என்ப. இதனை,

> "பாராதி ஐந்துக்கும் பன்னுமதி தெய்வங்கள்
> ஆரார் அயனாதி ஐவராம்"

(உண்மை விளக்கம், எ)

என்பதனான் அறிக.

ஐவருள் ஒருவன் என்றது, உருத்திரன் தெய்வமாகிய தீயை என்க. அவன் அங்கை ஏற்ப வென்றது, இறைவனிடத்தினின்றும் இந்திரன் வாங்கிய கருப்பத்தினை முனிவர் வாங்கித் தமக்குத் தரிக்கலாகாமையின் இறைவன் கூறாகிய முத்தீக்குண்டத்திட்டதனைக் கூறியவாறாம். அறுவர் என்றது, கார்த்திகை மகளிரை; அங்ஙனம் தீயிலிடப்பட்டதனால் சக்தி குறைந்த கருப்பத்தினைக் கார்த்திகை மகளிர்க்குக் கொடுப்ப, அவர் அதனை விழுங்கிச் சூல் முதிர்ந்து சரவணப் பொய்கையிலே பதுமப் பாயலிலே பெற ஆறுவடிவாக வளர்ந்தமையை அறுவர் பயந்த ஆறமர் செல்வ என்ற தொடர் குறிக்கின்றது.

ஐவர் அறுவர் என்பவற்றுள் முரண்தோன்றிச் செய்யுள் இன்பம் மிகுதலுணர்க. அகம் - கை - என்பன புணருங்கால் 'க' என்பதன்கண் உள்ள உயிரும் மெய்யுங் கெட்டு மகரம் வருமொழி முதற் கினமாகத் திரிந்து அங்கை என்றாகும். இதனை,

> "அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
> முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்
> வரைநிலை யின்றே ஆசிரி யர்க்க
> மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான"

(தொல் - புள்ளி - சூ : உ0)

என்னும் இலக்கண விதியானே உணர்க.

ஆல் - ஆலமரம். ஈண்டுக் கல்லாலினைக் குறித்து நின்றது; ஆல்கெழு கடவுள் என்றது தக்கிணாமூர்த்தியை. மால் வரை - இமயமலை. மலைமகள் என்றது பெயர் மாத்திரையாய் நின்றது; மலையரையன் மகளாகிய உமையின் மகனே என்றவாறு. கொற்றவை பழையோள் என்பன சத்தியின் வேறு வேறு வடிவங்களாகிய துர்க்கையையும், காடுகிழாளையும் குறிப்பன வெற்றியின் அதி தெய்வமாகலின் வெற்றிக் கொற்றவை என்றும் மகிஷாசுரனை வென்றமை கருதி வெல்போர்க் கொற்றவை என்றும் கூறினார். ஆதியில்லாதவளாகலின்

*பழையோள் என்றார். ‘‘முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!” என்றார் மணிவாசகரும்.*

## *இதுவுமது*

**260 - 269 : வானோர் ..... முருக**

***பொருளுரை :*** *வானோர் வணங்கு வில் தானைத் தலைவ - தேவர்கள் வணங்குகின்ற விற்படைத் தலைவனே!, மாலைமார்ப - இன்பத்திற்குரிய கடப்பமாலையணிந்த மார்பையுடையோனே!, நூல் அறி புலவ - எல்லா நூல்களையும் அறிந்த புலவனே! செருவில் ஒருவ - போர்த்தொழிலில் ஒருவனாகி நிற்போய்! பொருவிறல் மள்ள - பொருகின்ற வெற்றியையுடைய இளைஞனே!, அந்தணர் வெறுக்கை - அந்தணருடைய செல்வமாயிருப்போனே!, அறிந்தோர் சொல்மலை - சான்றோர் புகழ்ந்து சொல்லப்படும் சொற்களின் ஈட்டமாயிருப்போய்!, மங்கையர் கணவ - தெய்வயானையாரும் வள்ளிநாய்ச்சியாருமாகிய மகளிர்க்குக் கணவனே!, மைந்தர் ஏறே - மறவருள் அரியேறு போன்றவனே!, வேல் கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ - வேல் பொருந்தின பெருமையையுடைய கையானமைந்த பெரிய செல்வனே!, குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ - குருகாற் பெயர்பெற்ற மலையைப் பிளந்த குறையாத வெற்றியையுடைய தேவருலகைத் தீண்டும் நெடிய மலைகளையுடைய குறிஞ்சி நிலத்திற்கு உரிமையுடையோனே!, பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே - பலரும் புகழ்ந்து சொல்லும் நன்றாகிய சொற்களையுடைய புறச்சமயப் புலவர்கட்கு அரியேறு போன்றவனே!, அரும்பெறன் மரபில் பெரும்பெயர் முருக - அரிதிற்பெறும் முறைமையினையுடைய பெரிய பொருளையுடைய முருகனே!*

***கருத்துரை :*** *தேவர்கள் வணங்கும் படைத்தலைவனே! கடப்பமாலை யணிந்த மார்புடையோனே! எல்லா நூல்களையும் அறிந்த புலவனே! போரின்கண் ஒருவனாகி நிற்போனே! வெற்றியையுடைய இளைஞனே! அந்தணர்களுக்குச் செல்வமானவனே! சான்றோர் புகழும் சொற்களின் ஈட்டமாயிருப்போனே! தெய்வயானையும் வள்ளியுமாகிய மகளிர்க்குக் கணவனே! மறவர்களுள் அரியேறு போன்றவனே! வேல் பொருந்திய கையானமைந்த பெரிய செல்வனே! குருகுபெயர்க் குன்றங்கொன்ற குறையாத வெற்றியை உடையவனே! குறிஞ்சி நிலத்திற்கு உரிமை யுடையோனே! புறச்சமயப் புலவர்கட்கு அரியேறு போன்றவனே! அரிதிற்பெறு முறைமைத்தாகிய பெரிய பொருளையுடைய முருகனே! என்பதாம்.*

***அகலவுரை :*** *வானோர் வணங்குத் தலைவ; விற்றானைத் தலைவ எனத் தனித்தனி கூட்டுக. ''வானோர் தானைத்தலைவ, வணங்குவிற் றலைவ எனக்கூட்டித் தேவர்கள் படைத்தலைவனே, வளையும் வில்லையுடைய தலைவனே" என்பர் நச்சினார்க்கினியர். முருகப்பெருமானைத் தேவசேனாபதி என்றலும் அறிக. மாலை - ஈண்டு முருகனுக்குரிய கடப்பமாலை என்க. "இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து உருள் பூந் தண்டார் புரளும் மார்பினன்'' (க0-கக) என முன்னும் ஓதியமை காண்க. இம் மாலை முருகனுக்குரிய இன்பமாலை என்ப.*

*இனி நூலறி புலவ என்றது - உயிர்கள் மெய்ந்நூற் பொருளை உணரும் பொருட்டுத் தானும் அவ்வுயிர் அறிவோடு இரண்டறநின்று இறைப்பொருள் உணர்தல் வேண்டுதலால் அங்ஙனம் அறிகின்ற புலவனே என்றவாறு. என்னை?*

*"காணுங் கண்ணுக்குக் காட்டு முளம்போல்*
*காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்*
*அயரா அன்பின் அரன்கழல் செலுமே"*

*(சிவஞானபோ - சூ - 11)*

*என்னும் இச் சூத்திரத்திற்கு,*

*காட்டக் காணும் தன்மையுடைய கண் உருவத்தைக் காணும்படி அதனோடொருங்கியைந்து நின்று காட்டி, அவ்வுருவத்தைக் காணுகின்ற உயிர்போல, அறிவிக்க அறியும் இயல்புடைய அவ்வுயிர் யாதாமொரு பொருளை யறியும்படி முதல்வன் அதனோ டொருங்கியைந்து நின்று அறிந்து வருதலான், அக் கலப்பு நிலையினை மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பானே அம் முதல்வன் திருவடியின்பத்தைத் தலைப்படும் என்பது பொருளாகலின், இறைவனாகிய முருகப்பெருமான் தன் அன்பர்கள் மெய்ந்நூலுணர்ந்து கட்டறுத்து வீடு பெறும்பொருட்டு அவர் உயிரோடு ஒன்றித்து நின்று அவர் உணரும்பொருட்டுத் தானும் அம் மெய்ந்நூல்களை உணர்வோன் என்பார் நூலறிபுலவன் என்றார் என்க. இன்னும்*

*"எவ்விடத்தும் இறையடியை இன்றியமைந் தொன்றை*
*அறிந்தியற்றி யிடாஉயிர்கள் ஈசன் றானும்*
*செவ்விதினி னுளம்புகுந்து செய்தியெலாம் உணர்ந்து*
*சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்பன்"*

*(சித்தியார் சுபக் - 10-6)*

*என்றும்,*

*முதல்வன் உயிரிற் கலந்துநின்று உயிருடன் ஒக்க அறிந்தாலன்றி அறிவித்தன் மாத்திரையான உயிர் அறியமாட்டாதென்பதனை "தொண்டனேன்*

*நினையுமா நினையே" என்றும், "விரும்புமா விரும்பே", "தொடருமா தொடரே" "நுகருமா நுகரே" (திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா 11-10-8-7) என்றும்,*

*"அறிவானுந் தானே அறிவிப்பான் றானே, அறிவா யறிகின்றான் தானே" (காரைக்-அற்புத-உ0) என்றும் வரும் சான்றோர் மெய்ம்மொழிகளானே உணர்க.*

*எனவே, உயிர்கள் மெய்ந்நூல்களை அறியும்பொருட்டு அந் நூலை அறிகின்ற புலவனே என்றவாறு. புலவன் என்றார், தனக்காக அறிய வேண்டா வாலறிவன் என்பது தோன்ற.*

*இவ்வாற்றால் மாலையணிந்து உயிர்களை இம்மையின்பம் நுகர்விப்போனே நூலறிந்து உயிர்கட்கு வீட்டின்பம் நல்குவோனே என்றவாறு காண்க. அவ்வுயிர்கட்கு இடையூறு நேர்ந்துழித் தானே முன்னின்று காப்பன் என்பது "வானோர் வணங்குந் தானைத் தலைவ" என்பதனாற் கொள்க. செருவில் ஒருவ என்பதற்கு உலகை எல்லாம் அழித்தொழிக்கின்றபொழுது ஒருவனாய் எஞ்சி நிற்கின்றவனே என்றவாறாகக் கோடல் சிறப்பாம். என்னை? உலகனை ஒடுக்குங்கால் அனைத்தையும் விரித்தமுறையே ஒன்றனுள் ஒன்று ஒடுங்க ஒடுக்கி அனைத்தும் தன்னுள்ளே ஒடுங்க, அவ் விறைப்பொருள் ஒன்றே பிறிதொன்றில் ஒடுங்காது எஞ்சி நிற்பதாகலான் என்க. அழிக்குமிடமாகலான் செரு என்றார்.*

*இனிப் பொருவிறல் மள்ள என்றது, எல்லாவற்றையும் அழிக்கும் மறத்தன்மையுடையோன் என்றபடியாம்.*

*அந்தணர் - இறைபணி நின்ற மெய்க்காட்சியாளர். மெய்க்காட்சியாளர்க்கு இறைப்பொருள் ஒன்றே மெய்ப்பொருளாக ஏனைய பொய்ப்பொருளாதல் பற்றி அவ் விறைவனே செல்வமாயினான் என்க.*

*இனி, அப் பெருமானின் இயல்பை அறிந்தோர் கூறாநின்ற மெய்ந்நூல்களின் ஈட்டம் எல்லாம் அவனன்றிப் பிறிதில்லை என்பார், 'அறிந் தோர் சொன்மலை' என்றார். நூல்கள் சமயங்கடோறும் பலவாம் அளவிறந்தன வாதல்பற்றிச் சொன்மலை என்றார். என்னை?*

"விண்ணே விணாதியாம் பூதமே நாதமே
வேதமே வேதாந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தேய வித்தின்விளைவே
கண்ணே கருத்தே என்எண்ணே எழுத்தே
கதிக்கான மோனவடிவே"

*(தாயுமான - கருணா - 6)*

*என்றாங்கு மெய்ந்நூல்களும் அவனன்றிப் பிறிதில்லை யாகலின் என்க.*

*மங்கையர் - வள்ளிநாய்ச்சியாரும் தெய்வயானையாரும் என்க. இச்சா சத்தியும், கிரியாசத்தியும் உடையவனே என்றவாறாம். மைந்தர் - வலியவர் வலியவருள் மிக்க வலியவனே என்றது, அவனது வரம்பிலாற்றலுடைமையை விதந்தோதியபடியாம். வேல் முருகப் பெருமானுக்கு ஞான சத்தி என்ப. எனவே, இச்சை, கிரியை, ஞானம் என்னும் மூன்று சத்தியும் உடையானே என்றவாறாம். ஞானமாகலின் அதனையே செல்வமாக உடையன் என்பார், 'வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ' என்றார்.*

*குன்றம் - கிரௌஞ்சமலை. "குருகு பெயர்க்குன்றம் கொன்ற நெடுவேலே" என்றும், "குருகு பெயர்க்குன்றம் கொன்றான்" என்றும் இளங்கோவடிகளாரும் ஓதுதல் காண்க. குன்றாக் கொற்றம் என்றது பிறர் வெற்றிபோலாது என்றும் குறையாத வெற்றி என இறைத்தன்மை குறித்தவாறாம்.*

*"சேயோன் மேய மைவரை யுலகம்" எனத் தமிழ் நுலோர் உரிமை கூறியாங்கு உலகங்கட்கெல்லாம் உரியனாயிருந்தும் குறிஞ்சிக்குமட்டும் உரிமையுடையோன் போன்றிருப்போனே என்பதாம். புலவர் ஏறே என்றதற்குப் "புறச்சமயப் புலவர்களாகிய யானைகட்கு அரிமாப்போல்வானே" என்க. பெயர் - பொருள். அரும்பெறன் மரபிற் பெரும் பெயர் என்றது, வீட்டின்பத்தை. வீட்டின்பத்தையுடைய முருகப் பெருமானே என்க. எனவே, முருகா என்றோதும் அடியார்க்கு அவ்வீட்டின்பத்தை நிரம்ப அளிப்போன் எனக் குறிப்பாற் கூறியபடியாம். நெஞ்சில், ''ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும், முருகா என்றோதுவார் முன்", எனல் அறிக. ஈண்டு இருகால் என்றது திருவடியாகிய வீட்டின்பத்தை என்க.*

## இதுவுமது

### *270 - 274 :* நசையுநர்க்கு ..... இயவுள்

***பொருளுரை :*** ***நசையுநர்க்கு ஆர்த்தும் இசை பேராள - வீட்டினைப் பெறவேண்டுமென்று நச்சி வந்தோர்க்கு அதனை அளித்து நுகர்விக்கும் பெரிய புகழை ஆளுதல் உடையோனே, அலந்தோரார்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய் - இடுக்கட்பட் டெய்தினோர்க்கு அருள்பண்ணும் பொன்னாற்செய்த பேரணிகலன்களையுடைய சேயோனே! மண்டு அமர்கடந்த வென்று ஆடு அகலத்துப் பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள் - மிக்குச் செல்கின்ற போர்களை முடித்த வென்று அடுகின்ற நின்னுடைய மார்பிடத்தே இரந்து வந்தோரைத் தழுவி வேண்டுவன கொடுத்துப் பாதுகாக்கும் உட்குதல் பொருந்திய நெடிய வேளே!, பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள் - வானோரும் அந்தணரும் ஓதி ஏத்தாநின்ற பெரிய மறைமொழியாகிய திருப்பெயரையுடைய இறைவனே;***

***கருத்துரை :*** *வீட்டினைப் பெறவேண்டுமென்று விரும்பி வந்தோர்க்கு அதனை அளித்து நுகர்விக்கும் பெரிய புகழையுடையோனே! இடுக்கட்பட்டெய்தினோர்க்கு அருள்பண்ணும் சேயோனே! மிக்குச் செல்கின்ற போரைவென்ற நின் மார்பகத்தே இரவலரைத் தழுவிக் கொண்டு அவர் வேண்டுவன வேண்டியாங்கு நல்கிப் பாதுகாக்கும் நெடியவேளே! தேவர் முதலிய பெரியோர் ஓதிப் பரவும் ஆறெழுத் தருமறை மொழியாகிய பெயரையுடைய இறைவனே என்பதாம்.*

***அகலவுரை :*** *நசையுநர் என்றது "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டு" பிறவித் துன்பங்கட்கு அஞ்சி வீட்டின்பத்தின்கண் விழைவுடையராய்த் தன்பாற் புகல்புக்க மெய்யறிவாளரை. இங்ஙனம் புகல் புக்கார்க்கன்றி வீட்டின்பத்தை ஆர்த்துதல் கூடாமையின் அடைந்தார்க்கே ஆர்த்துவன் என்பார், 'நசையுநர்க்கு ஆர்த்தும் இசை பேராள' என்றார். "உன்னில் உன்னும் உன்னாவிடின் விட்டிடும்" என்றெழுந்த சான்றோர் மொழியும் உணர்க. ஆர்த்தும் - நுகர்விக்கும். அலந்தோர் - தீவினைப் பயனாலே இவ் வுலகில் அல்லலுற்று அத்துயரந் தீர்தல் கருதித் தன்பால் வந்து குறையிரந்தோர் என்க. எனவே, அழியாத பேரின்பத்தை விரும்பி உலகை வெறுத்துத் தன் அடியடைந்த பெரியோர்க்கு அவ் வீட்டின்பத்தை நல்கி நுகர்வித்தலும் இம்மையிலே துயருற்று அத்துயர் தீர்ந்து இன்புற எண்ணி தன்பாலடைந்தவர்க்கு அவர்படுந் துயரகற்றி இம்மை வாழ்க்கையின்பத்தை அளித்தலும் உடையன் முருகப் பெருமான் என்றவாறாம்.*

*பண்டமர் - புனவெழுச்சியானே மிக்குச் சேறற்குரிய போர்த்தொழில் போரின்கண் வென்றோர் அவ்வெற்றிக் கறிகுறியாகச் சூடும் வகைமாலை புரளுதலாலே அவ்வெற்றியை மார்பின்மேல் ஏற்றி வென்றாடு அகலம் என்றார். அடு - ஆடு என முதனீண்டது. அடுதல் - கொல்லுதல். அகலம் - மார்பு. பகைவரைக் கொன்று வாகைசூடு மார்பிடத்தே இரவலரைத் தழுவித் தாங்கி என்க. இது, அப் பெருமானுடைய திருவருட் பெருமையை விதந்தோதியவாறு.*

*நெடுவேள் என்றதன்கண், நெடுமை, இறைமைத்தன்மை குறித்து நின்றது. மகவேளின் இவ்வேள் வேறாம் வேற்றுமை தெரிய நெடுவேள் என்றார் எனினுமாம். பெரியோர் - தேவர் முதலியோர்; இனி இறை பணிநிற்கும் சான்றோருமாம். ஏத்தும் பெரும்பெயர் என்றது, ஆறெழுத்து மந்திரமாகிய பெரிய திருப்பெயரினை. அதனை ஏத்துதல் இடையறாது நாவானே பயிலுதல் என்க. இவ்வாறு பயிலுதல் இறைபணி நிற்பார்க்கு இன்றியமையாச் செயல் என்க; என்னை?*

*"ஊனக்கண் பாசம் உணராப் பதியை*
*ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி*

*உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்*
*தண்ணிழலாம் பதிவிதி எண்ணுமஞ் செழுத்தே”*

*(சிவஞான. சூ-9)*

*என்னும் சிவஞான போதத்துச் சூத்திரத்தின்கண்,*

*“இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்பு தின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கு இவ்விடத்தே திருமந்திரத்தை விதிப்படி ஓதுதல் வேண்டும்'' என விதிக்கப்படுதலான். மேலும் **இறைவன் திருப் பெயராகிய அம் மந்திரத்தை ஓதுதன் மாத்திரையே அவர் அளவிறந்த இன்பம் எய்தும் இயல்புடையராதலானும் பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் என்றார்**. இயவுள் - கடவுள்; தலைவனுமாம்.*

## இதுவுமது

### *275 - 281 :* சூர் ..... அளவையின்

***பொருளுரை :*** *சூர் மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி - சூரபன்மாவின் குலத்தை இல்லையாக்கி வலியுடைமையாலே மதவலி என்னும் பெயரை உடையோய், போர்மிகு பொருந - போர்த் தொழிலின்கண் மிகுகின்ற வீரனே!, குருசில் - தலைவனே!, எனப் பலயான் அறி அளவையின் ஏத்தி ஆனாது - என்று பலவற்றையும் யான் அறிந்த அளவானே புகழ்ந்து அமையாதே, நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின் - நின் தன்மையெல்லாம் முற்ற அளவிட்டறிதல் பல் உயிர்க்கும் அரிதாகையாலே, நின் அடி உள்ளி வந்தனன் - நின் திருவடியைப் பெற வேண்டுமென்று நினைத்து வந்தேன், நின்னொடு புரையுநர் இல்லாப் புலமையோய் என - நின்னோடு ஒப்பாரில்லாத மெய்யறிவுடையோனே என்று, குறித்தது மொழியா அளவையின் - நீ கருதிய வீடுபேற்றினை விண்ணப்பம் செய்வதற்கு முன்னரே;*

***கருத்துரை :*** *சூரபன்மாவின் குலத்தை இல்லையாக்கிய வலியாலே மதவலி என்னும் பெயருடையோனே! போரின்மிக்க வீரனே! தலைவனே! என யான் அறிந்த அளவானே புகழ்ந்து நின் தன்மையெல்லாம் முற்ற அளந்தறிதல் உயிராகிய எம்மனோர்க் கியலாமையான் இடையறாது நின் திருவடியைப் பெற வேண்டும் என்று நினைந்து வந்தேன்; நின்னோடு ஒப்பாரில்லாத மெய்யறிவுடையோனே என்று கூறி நீ கருதிய வீடுபேற்றை விண்ணப்பம் செய்தற்கு முன்னரே என்பதாம்.*

***அகலவுரை :*** *சூர் - சூரபன்மா. மருங்கு - குலம்; மொய்ம்பு - வலி. சூரபன்மாவைக் குலத்தோடு இல்லையாக்கிய வலியுடைமையானே மதவலி என்னும் பெயருடையோனே என மொய்ம்பினை ஏதுவாக்குக. மதவலி :*

*அன்மொழித்தொகை. பொருந - மறவனே. குரிசில் - தலைவன். நினது புகழை முற்றுமறிதல் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினேனாகிய எனக்கு இயலாதாகலின் என் சிற்றறிவிற்கெட்டிய அளவே புகழ்ந்து வந்தேன் என்க என்று, செவியறிவுறுத்துவார், 'யாளறியளவையின் ஏத்தி' என்றார். ஆனாது - அமையாமல், ஏத்துமளவி னமையாதே உள்ளிவந்தேன் என்க.*

***உயிர் இறைவனை அளவைகளானே அளந்து காண்டல் இயலாதென்றலின், 'நின்னளந்தறிதல் மன்னுயிர்க்கு அருமையின்' என்றார்.** அருமை ஈண்டு இயலாமை குறித்து நின்றது. என்னை?*

*"சிவனையவன் திருவடிஞா னத்தாற் சேரச்*
*செப்புவது செயல்வாக்குச் சிந்தை யெல்லாம்*
*அவனை அணு காவென்று மாத லானும்*
*அவனடியவ் வொளிஞான மாத லானும்"*

*(சித்தியார் சுபக். 295)*

*என்றும்,*

*"கண்டிடுங்கண் தனைக்காணா கரணம் காணா*
*கரணங்கள் தமைக்காணா உயிருங் காணா*
*உண்டியமர் உயிர்தானும் தன்னைக் காணா*
*துயிர்க்குயிராம் ஒருவனையும் காணா தாகும்*
*கண்டசிவன் றனைக்காட்டி உயிருங் காட்டிக்*
*கண்ணாகிக் கரணங்கள் காணாமல் நிற்பன்*
*கொண்டரனை உளத்திற்கண் டடிகூடிற் பாசம்*
*கூடாது கூடினும் குறித்தடியின் நிறுத்தே"*

*(சித்தியார் சுபக். 269)*

*என்றும் உயிர் இறைப்பொருளைக் காணமாட்டாமையும் காரணமும் தெரித்தோதுதலான் அறிக.*

*இறையை அளந்தறிதல் மன்னுயிர்க்கியலாதாயினும் அவன் திருவடி உள்ளுதல் வாயிலாகவே அவன் திருவருள் பெறக்கூடும் ஆகலின், நின்னடி உள்ளுதலைச் செய்து வந்தேன் என்க என்றார். இறைப்பொருள் உவமையற்றதாகலின் நின்னொடு புரையுநர் இல்லாப் புலமையோய் என்றார். புரையுநர் - ஒப்பாவார்.*

*''தனக்குவமை யில்லாதான்'' எனத் திருவள்ளுவனாரும் ஓதுதலறிக. அறிவே கடவுளாகலின், புலமையோய் என்றார். புலமை - அறிவுடைமை. குறித்தது என்றது, திருவடிப்பேற்றினை.*

*எவ்விடத்தேனுமாக நீ கண்டுழி ஏத்திப் பரவி வணங்கி, செல்வ, புதல்வ, மகனே, கூற்றே, சிறுவ, குழவி, தலைவ, மார்ப, ஒருவ, மள்ள, வெறுக்கை, சொன்மலை, கணவ, மைந்தரேறே, செல்வ, கிழவ, ஏறே, முருக, இசைபேராள, சேஎய், நெடுவேஎள், இயவுள், மதவலி, பொருந, குருசில் எனப் பல யான் அறியளவையின் ஏத்தி அளந்தறிதல் அருமையின் உள்ளி வந்தேன்! புலமையோய் என மொழியா அளவையின், எனத் தொடர்பு காண்க.*

*இனி உஅக - 'குறித்துடன்' என்பது முதல், உஅசா - 'நனிபல ஏத்தி' என்னுந் துணையும் ஒரு தொடர்; இதன்கண், முருகக் கடவுளின் பணியாளராகிய கூளியர் புதுவதாக வந்தோனைப் பற்றி அப் பெருமானிடம் விண்ணப்பித்தல் கூறப்படும்.*

## கூளியர் விண்ணப்பம்

### *281 - 286 :* குறித்துடன் ..... ஏத்தி

***பொருளுரை :*** *குறித்து உடன்* **- இங்ஙனம் நீ விண்ணப்பித்தலைக் குறித்து அப்பொழுதே,** *வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்* **- வேறு வேறாகிய பல வடிவினையுடைய குறிய பலராகிய பணியாளர்,** *சாறு அயர் களத்தின் வீறுபெறத் தோன்றி* **- விழாவெடுத்த களத்தின்கண் தாங்கள் பொலிவுபெறத் தோன்றுமாறு தோன்றி,** *அளியன் தானே முதுவாய் இரவலன்* **- அளிக்கத்தக்கான் இவ்வறிவு வாய்த்தலையுடைய இரவலன்,** *வந்தோன் பெரும நின் வண்புகழ் நயந்து* **- வந்துளன் பெருமானே நின்னுடைய வளவிய புகழினை விரும்பி,** *இனியவும் நல்லவும் நனிபல ஏத்தி* **- கேட்டோர்க்கு இனியனவும் உறுதிபயப்பனவுமாக மிக்க பலவற்றை வாழ்த்தி,** *என* **- என்று கூறாநிற்ப;**

***கருத்துரை :*** *நினது வருகையைக் குறித்து அப்பொழுதே வேறு வேறாகிய வடிவமைந்த குறிய பலராகிய பணியாளர்கள் விழாக்களத்தே தோன்றுதல் போன்று பொலிவுறுமாறு தோன்றி "இவன் அளிக்கத்தான் அறிவு வாய்க்கப் பெற்றோன் பெருமானே! நினது வளவிய புகழை விரும்பி இனியனவும் உறுதி பயப்பனவுமாகிய பலவற்றையும் கூறிப் புகழ்ந்து வந்தனன்", என முருகக்கடவுள் திருமுன்னர்க் கூறாநிற்ப என்பதாம்.*

***அகலவுரை :*** *வேறுபல் உரு என்றது, ஒருவரை ஒருவர் ஒவ்வாத பலவேறு வடிவினையுடையார் என்றவாறு. குறும்பல் கூளியர் என்றதற்குக் குறியராகிய பல பூதங்கள் எனினுமாம். கூளியர், பணியாளருமாம். என்னை? "நின்கூர் நல்லம்பிற் கொடுவிற் கூளியர்" (புறம். உங : சா - ரு) என்புழியும் அஃதுப் பொருட்டாகலான் என்க. சாறயர்களம் - திருவிழாக் கொண்டாடும் களம். சாறயர் களத்தின் வீடுபெறத் தோன்றி என்றதற்குத் திருவிழா நிகழும் களத்திற்றோன்றுமாறு போலப் பொலிவுறத் தோன்றி என்க.*

*அளியன் - அளிக்கத் தக்கான். பாதுகாக்கத் தக்கவன் என்றவாறு. தான்: அசை. முதுவாய் - அறிவு வாய்த்தலையுடைய. எனவே, மெய்யறிவு வாய்க்கப் பெற்றவன் ஆதலால், அளிக்கத்தக்கான் என்றவாறு. மெய்யறிவு வாய்த்தலாவது திருவடிப்பேறொன்றே மெய்ப்பொருள், அல்லாதன வெல்லாம் பொய் என்னும் அறிவு வாய்க்கப் பெறுதல் என்க*

*திருவடி யின்பத்தைப் பெற இரந்து நின்றானாகலின் இரவலன் என்றார் என்க. என என்னும் எச்சத்தை ஏத்தி என்பதன் பின்னாக இயைத்துக் கொள்க. இனியவும் நல்லவும் எனப்பட்டன. 'ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப' என்பது முதல் 'குரிசில்' என்னுந் துணையும் கிடந்த புகழ்மாலைகள் என்க. என்னை? அவை கேட்டற்கு இனியனவும் உறுதியளிப்பனவுமாகலின் என்க.*

### முருகப் பெருமான் பரிசில் நல்கும் மாண்பு

**287 - 295 : தெய்வம் ..... நல்குமதி**

***பொருளுரை :*** ***தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவின் - தெய்வத்தன்மை யமைந்த வலிவிளங்கும் வடிவினையும், வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி - வானைத்தீண்டும் வளர்ச்சியினையும் உடைய தான் நினக்கு முன்னர் எழுந்தருளி, அணங்கு சால் உயர்நிலை தழீஇ - வருத்தமமைந்த தெய்வத்தன்மையை உள்ளடக்கிக்கொண்டு, பண்டைத் தன் மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி - முன்புண்டாகிய தனது மணங்கமழ்கின்ற தெய்வத்தன்மை பொருந்திய இளைய வடிவைக் காட்டியருளி, அஞ்சல் ஓம்புமதி அறிவல் நின் வரவு என - அஞ்சாதேகொள் வீடுபெற நினைத்துவந்த நின்னுடைய வருகையை யான் முன்னரே அறிவேன் என்று கூறி, அன்புடை நன்மொழி அளைஇ - நின்மேல் அன்புடைமைக்கு அறிகுறியாகிய நல்ல மொழிகளைப் பலகாலும் அருளிச்செய்து, விளிவு இன்று இருள் நிற முந்நீர் வளைஇய வுலகத்து - ஒருகாலத்தும் கேடின்றாக இருண்ட நிறத்தையுடைய கடலாற் சூழப்பட்ட இப் பேருலகத்தே, ஒரு நீயாகித் தோன்ற - ஒருவனாகிய நீயே யாண்டுமாகித் தோன்றுமாறு, விழுமிய பெறலரும் பரிசில் நல்குமதி - சீரிய பிறராற் பெறுதற்கரிய வீடுபேற்றினைத் தந்தருளுவான்.***

***கருத்துரை :*** ***தெய்வத்தன்மை யமைந்த வலிவிளங்கும் வடிவினையும், வானைத் தீண்டும் வளர்ச்சியினையும் உடைய தானே நின் முன்னர் எழுந்தருளிச் செய்து, வருத்தமைந்த தெய்வத்தன்மையை உள்ளடக்கிக் கொண்டு பழையதாய் மணங்கமழ்கின்ற தனது மூவாவிளநலத்தைக் காட்டியருளி அஞ்சாதே கொள்! நீ வீடுபெறக் கருதி வந்தமையை யான் முன்னரே அறிகுவன் என நின்மேல் அன்புடைய மொழிகளைப் பலகாலும்***

*கூறிக் கடல் சூழ்ந்த இப் பேருலகத்தே நீ ஒருவனே உளையாகித் தோன்றுமாறு சீரிய பிறராற் பெறற்கரிய வீட்டினைத் தந்தருள் செய்வன் என்பதாம்.*

***அகலவுரை :*** *அவன்றானே அருள் செய்தாலன்றி மக்கள் முயற்சியால் அவனைக் காண்டல் இயலாதென்பது தோன்ற, தான் வந்தெய்தி என்றார். வந்தெய்துதலாவது தனக்கியல்பாகிய வியாபக நிலையினின்றே ஒரு கூற்றில் அன்பர்கள் நினைந்த வடிவில் அருளுருக்கொண்டு எழுந்தருளுதல். வான்றோய் நிவப்பின் தான் என்றது, எங்கும் நிறைவாகிய வியாபகத்தினையுடைய தன்னிலை யினின்றும் என்றவாறு. அணங்கு - வருத்தம். இறைப்பொருளின் முழுநிலையினை உயிர் எவ்வாற்றானும் அறிந்து கோடல் இயலாமையின் அவ்வுயிர் உணர்ச்சி தழுவும் படியாகத் தான் எழுந்தருளி என்பார் அணங்குசால் உயர்நிலை தழீஇ என்றார். தனது உயர்நிலையாகிய வியாபகத்தைத் தன்னுள் அடக்கிக் கொண்டென்றவாறு. அவ்வுயர்நிலை என்றென்றும் உயிர் அறியவொண்ணாத நிலை என்க. அதனை அறியமுயன்று முடிவுபோகாது உயிர் வருந்துதல் இயல்பாகலின், அதனை அணங்குசால் உயர்நிலை என்றார். இளநலம் என்றது தனது மூவா விளந்தன்மையை, இத்தன்மையுடைமையாலே இறைவனை முருகன் என வழங்குவாராயினர் என்க. தன் மூவா இளநலம் காட்டி எனவே, அங்ஙனம் காட்டுமாற்றால் தனக்கு மகன் முறைமைத்தான உயிரின் இளநலமும் உணர்த்தி என்றவாறாயிற்று. அங்ஙனம் உணர்த்தாக்கால் தனது இன்பவீட்டை ஆளுந் தன்மை உயிர்க்குண்டாதல் இல்லை என்க. இங்ஙனம் காட்டுமாற்றால், உயிரின் ஏகதேச உணர்ச்சியை மாற்றித் தனது வியாபக முழுதினும் வியாபிக்குமாறு செய்தலால் பின்னர் உயிர் அஞ்சவேண்டாமையின் அச்சம் போக்கி அஞ்சல் ஓம்புமதி என்று அபயம் அளித்து என்க.*

*விளிவின்று - கேடில்லாமல். விளிவின்று ஒரு நீயாகித் தோன்ற என்றது, அவ்விறைப்பொருள் நின்னில் வேறாகாது நீயேயாகித் தோன்றுமாறு என்றபடி. எனவே தான் அவன் என வேறுபாடின்றி அவனே ஒரு நீயாகிய உண்மை நினக்குத் தோன்றுமாறு செய்து என்றவாறு. அது நீயாகின்றாய் என்றவாறாம்.*

*இவ்வுண்மை உயிர்க்குத் தோன்றாமல் இதுகாறும் மறைத்துக் கொண்டு நின்றதனால், 'இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து' என்றார். இவ்வுலகத்திலேயே இம்மையிலேயே வீடுபேறடைவாய் என்பார் உலகத்து ஒருநீயாகித் தோன்ற என்றார். இதனை,*

*"புண்ணியமேல் நோக்குவிக்கும் பாவங்கீழ் நூக்கும்*
*புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தி னாலே*
*நண்ணியஞா னத்தினால் இரண்டினையும் அறுத்து*
*ஞாலமொடு கீழ்மேலும் நண்ணா னாகி*

*எண்ணுமிக லோகத்தே முத்திபெறும் இவன்றான்*
*எங்கெழில்என் ஞாயிறெமக் கென்றுகுறை வின்றிக்*
*கண்ணுதல்தன் நிறைவதனிற் கலந்து காயம்*
*கழிந்தக்கால் எங்குமாய்க் கருதரன்போல் நிற்பன்"*

*(சித்தியார் சுபக். 283)*

*எனவரும் சிவஞான சித்தியாரானும் அறிக.*

*வீடுபேற்றிற் சிறந்ததொரு பேறு பிறிதின்மையின் விழுமிய பரிசில் என்றும், அதனைப் பெறுதல் மிகவும் அரிதாகலின் பெறலரும் பரிசில் என்றும் ஓதினார். மதி என்னும் முன்னிலையசை படர்க்கைக்கண் நல்குமதி என வந்ததனை இடவழுவமைதியாகக் கொள்க.*

*இனிக் கூளியர் தோன்றி அளியன் இரவலன் ஏந்திவந்தோன் எனத் தான் வந்தெய்தி உயர்நிலை தழீஇக் காட்டி நன்மொழி அளைஇ உலகத்து ஒருநீயாகித் தோன்றுமாறு பரிசில் நல்கும் எனத் தொடர்பு காண்க.*

*இனி 295 'பலவுடன்' என்பது முதல் 317 'மலைகிழவோனே' என்னும் நூல் முடிவுகாறும் ஒரு தொடர். இதன்கண், அங்ஙனம் நல்குவோன் யார் என்றெழுந்த வினாவிற்குப் பழமுதிர்சோலைமலை கிழவோன் என விடுக்கும் வாயிலாய் அப்பழமுதிர்சோலை மலையின் வளமெலாம் தோன்ற அதன் அருவியைப் பாடுகின்றார் என்க. நக்கீரருடைய இனிய இச்செய்யுள் இறுதியில் வெள்ளமாகப் பெருகி ஓடுங் காட்சியை இப்பகுதியில் காணலாம்.*

## பழமுதிர் சோலைமலையின் அருவி

**295 - 304 : பலவுடன் ..... வீசி**

***பொருளுரை :*** **பலவுடன் வேறு பல் துகிலின் நுடங்கி - பலவும் ஒருங்கே இயைந்த வேறு வேறாகிய பல துகிற் கொடிகளைப் போன்று அசைந்து, அகில் சுமந்து ஆரம் முழுமுதல் உருட்டி - அகிலை மேற்கொண்டு சந்தனமாகிய பெரிய மரத்தைத் தள்ளி, வேரல் பூவுடை அலங்குசினை புலம்ப வேர் கீண்டு - சிறு மூங்கிலனது பூவுடைத்தான அசைகின்ற கொம்பு தனிப்ப வேரைப் பிளந்து, விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த தண்கமழ் அலர் இறால் சிதைய - விண்ணைத் தீண்டுகின்ற நெடிய மலையிடத்தே ஞாயிற்றின் மண்டிலத்தைப் போல் ஈக்கள் வைக்கப்பட்ட தண்ணியவாய் மணக்கின்ற விரிந்த தேன்கூடு கெட, நன்பல ஆசினி முதுசுளை கலாவ - நன்றாகிய பல ஆசினிகளுடைய முற்றிய சுளை தன்னிடத்தே கலக்க, மீமிசை நாக நறுமலர் உதிர - மலையின் உச்சியின் உண்டான சுரபுன்னையின் நறிய மலர்கள் உதிர, யூகமொடு மாமுக முசுக்கலை பனிப்ப - கருங்குரங்கோடே கரிய முகத்தையுடைய முசுக்கலைகளும் நடுங்க, பூ நுதல் இரும்பிடி குளிர்ப்ப**

*வீசி - புகரை யணிந்த மத்தகத்தையுடைய பெரிய பிடியானை குளிரும்படி வீசி;*

***கருத்துரை :*** *பல்வேறு துகிற்கொடிகள் ஒருங்கே அசைந்தாற் போன்று அசைந்து, அகிலைச் சுமந்து சந்தனமரத்தைச் சாயத்தள்ளி சிறு மூங்கிலின் கொம்பு தனிக்கும்படி வேரைப் பிளந்து விண்முட்டிய மலையின்மிசைத் தொடுத்த ஞாயிற்று மண்டிலத்தை ஒத்த தேனிறால்களைக் கெடுத்து ஆசினிப் பலாவின் சுளைகள் தன்னிடத்தே கலக்கச் சுரபுன்னையின் மலர்கள் உதிரக் கருங்குரங்குகளும் முசுக்கலைகளும் நடுங்காநிற்பப் பிடியானைகள் குளிர்ப்ப வீசி என்பதாம்.*

***அகலவுரை :*** *பலவிடங்களினும் பல்வேறு அருவிகள் விழுதற்குப் பலவேறு துகிற் கொடிகள் அசைதல் உவமை. துகிற்கொடி ஈண்டு வெண்டுகிலாலாய கொடி என்க. "அவிர்துகில் புரையும் அவ்வெள் ளருவி" (குறிஞ்சி. 55) என்றும், "அறுவைத் தூவிரி கடுப்பத் துவன்றி மீமிசைத் தண்பல இழிதரும் அருவி" (புறம். 154 : 10-12) என்றும் பிறரும் ஓதுதல் காண்க. அகின்மரம் மிதந்து வருதலாலே, அகில் சுமந்த என்றார். ஆரம் - சந்தனமரம். முழுமுதல் - பெரிய அடிமரம். வாழை முழுமுதல் எனப் பிறாண்டும் (308) ஓதுதல் காண்க. வேரல் - சிறு மூங்கில் அலங்குசினை - அசைகின்ற கொம்பு. புலம்ப - தனிப்ப. "புலம்பே தனிமை" (உரி - 33) என்பர் தொல்காப்பியர். கீண்டு - பிளந்து. பரிதி - ஞாயிற்று மண்டிலம்; இது, தேனிறாலுக்கு உவமை. "நெடுவரை நேமியிற் றொடுத்த, சூர்புகலடுக்கத்துப் பிரசம்", (238-9) என்பர் மலைபடுகடாத்தினும். தண் கமழ் அலர் இறால் - குளிர்ந்த மணம் நாறுகின்ற விரிந்த தேனடை. நன்பல ஆசினி, என்றதற்கு நல்ல பலாமரமாகிய ஆசினி எனினுமாம். ஆசினி - பலாமரத்தின் ஒருவகை என்க. முதிர்ந்த சுளை என்பார் முதுசுளை என்றார். ஆசினிப் பலாப்பழம் முற்றி வெடித்துச் சுளைகள் அருவி நீரில் வீழ்ந்து கலக்க என்றவாறு. மீமிசை - மிகவும் உயர்ந்ததாகிய உச்சி. நாகம் - சுரபுன்னை, யூகம் - கருங்குரங்கு. "பைங்கணூரகம் பாம்புபிடித் தன்ன" (சிறுபாண் - 221) என்புழியும் காண்க. முசு - ஒருவகைக் குரங்கு; முசுக்கலை என்றது, அக் குரங்கில் ஆண் என்றவாறு.*

*"கலையென் காட்சி உழைக்கும் உரித்தே"*

*"நிலையிற் றப்பெயர் முசுவின் கண்ணும்" (மரபியல், 45-46)*

*என்பது தொல்காப்பியம்.*

*பனித்தல் - நடுங்குதல். பூ - புகர். நுதல் - நெற்றி. இரும்பிடி - கரிய பெண் யானை; பெரிய பெண் யானையுமாம். குளிரைத் தாங்குவதில் யானைகள் சிறப்புடையன; அவையும் குளிர்ப்ப என்றது குளிர் மிகுதி கூறியவாறு.*

## இதுவுமது

*304 - 315 :* **பெருங்களிற்று ..... சிலைப்ப**

***பொருளுரை :*** *பெருங்களிற்று முத்துடை வான்கோடு தழீஇ - பெரிய யானையினுடைய முத்தை உடையவாகிய வெள்ளிய கொம்புகளை உள்ளடக்கி, தத்துற்று நன்பொன் மணி நிறம் கிளர - குதித்து நல்ல பொன்னும் மணியும் நிறம் விளங்கும்படி செய்து, பொன் கொழியா - கொடியான பொன்னைத் தெள்ளி, வாழை முழுமுதல் துமியத் தாழை இளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கி - வாழையினது பெரிய முதல் துணியத் தெங்கினது இளநீரையுடைய சீரிய குலை உதிர அவ் விரண்டினையும் மோதி, கறிக்கொடிக் கருந்துணர் சாய - மிளகினது கொடியின் கரிய கொத்துக்கள் சாய, பொறிப்புற மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக் கோழி வயப்பெடை இரிய - பீலியையுடைய புறத்தினையும் மடப்பத்தையுடைய நடையினையும் உடைய மயில்கள்.*

*பலவற்றோடே அஞ்சிக் கோழியின் வலியுடைய பேடைகள் கெட்டோட, கேழலொடு வெளிற்றின் இரும்பனை புன்சாயன்ன குரூஉ மயிர் யாக்கைக் குடாவடி உளியம் பெருங்கல்விடர் அளைச்செறிய - ஆண் பன்றியுடனே உள்ளே வெளிற்றினை யுடைய கரிய பனையினது புல்லிய செறும்பை ஒத்த கரிய நிறத்தையுடைத்தாகிய மயிரினையுடைய உடம்பினையும் வளைந்த அடியினையுமுடைய கரடி பெரிய கல் வெடித்த முழைஞ்சிலே சேர, கருங்கோட்டு ஆமா நல்லேறு சிலைப்ப - கரிய கொம்பினையுடைய ஆமாவினுடைய நன்றாகிய ஏறுகள் முழங்காநிற்ப;*

***கருத்துரை :*** *பெரிய களிற்றுயானைகளின் முத்துக்களையுடைய வெள்ளிய கொம்புகளை உள்ளடக்கிக் கொண்டு குதித்து நல்ல பொன்னும் மணியும் நிறம் விளங்கும்படி செய்து பொடியாகிய பொன்னைக் கொழித்துக் கொண்டு, வாழையின் பெரிய அடிமரம் ஒடியவும் தெங்கின் இளநீர்க் குலை உதிரவும் அவற்றைத் தாக்கி, மிளகினது கொடியின் கரிய கொத்துக்கள் சாய, பீலியை யுடைய மயில்களோடே கோழிப் பெடைகள் கெட்டோட ஆண்பன்றியும் பனையின் செறும்பு போன்ற கரிய மயிரையுடைய உடலையுடைய கரடிகளும் மலைமுழைஞ்சுகளிலே புக்கொடுங்கவும், கரிய கொம்பினையுடைய ஆமானேறுகள் முழங்கா நிற்பவும் என்பதாம்.*

***அகலவுரை :*** *நிலவளங் கூறுவார் பெருங்களிறு என்றார். யானைக் கொம்பின்கண் முத்துக்கள் தோன்றுதலுண்மையின் முத்துடைக்கோடு என்றார். வான்கோடு - வெள்ளிய கொம்பு. “குரூஉப்புலி பொருத புண்கூர் யானை முத்துடை மருப்பின்” (561-7) என்றார் மலைபடுகடாத்தினும். தத்துறுதல் - குதித்தல். அருவி செங்குத்தான இடங்களிற் குதித்தது என்றவாறு.*

*பொன்னையும் மணியையும் அருவி நீர் உராய்ந்தோடலின் அவையிற்றின் நிறம் அராவினாற் போன்று விளங்கின என்க. பொன் கொழித்தென்றது பொடியான பொன்னை தெள்ளி என்றவாறு. வாழைமரம் வலியற்றதாகலின் முழுமுதல் துமிய என்றார். துமியல் - முரிதல். தெங்கின் அடியிலே மோதிய அதிர்ச்சியாலே இளநீர்க்குலை உதிர்ந்ததென அருவியின் ஆற்றல் கூறினார். முதிர்ந்த குலை தாமே உதிருமாகலின் உதிரும் இயல்பில்லாத இளநீர்க்குலை உதிர்ந்தமை ஓதினார். தாழை - தெங்கு. தாக்கி - மோதி. கறிக்கொடி - மிளகுக்கொடி. அது கரிய நிறமுடைத்தாகலின் கருந்துணர் என்றார். "கருங்கொடி மிளகின் காய்த்துணர்" (521) என்றார் மலைபடுகடாத்தினும். பொறி - ஈண்டுப் பீலிக்கு ஆகுபெயர் என்க. பொறி என்றது பீலியிற்கண்களை. மஞ்ஞை - மயில். கோழியும் வயப்பெடையும் எனினுமாம். வயப்பெடை - வலியுடைய பெண் கோழி. "வயவலி யாகும்" (உரி - 68) என்பது தொல்காப்பியம். இரிதல் - கெட்டோடுதல். கேழல் - ஆண்பன்றி. வெளிற்றின் இரும்பனை என "இளம்பனஞ் செறும்பி னன்ன பரூஉமயிர்ச் சிறுகட்பன்றி" (277 : 7 - 8) என்றார் அகத்தினும். வீடர் - வெடிப்பு. அளை - முழைஞ்சு; குகை. ஆமா - காட்டான். சிலைப்ப - முழங்க, "துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும், இசைப்பொருட் கிளவி என்மனார் புலவர்" (உரி-40) என்பர் தொல்காப்பியர்.*

## இதுவுமது

### *315 - 317 :* சேண் ..... மழைகிழவோனே

***பொருளுரை :** சேண்நின்று இழும் என இழிதரும் அருவி - மலையின் உச்சியின்றும் இழும் என்னும் ஓசைபடக் குதிக்கும் அருவியையுடைய, பழமுதிர்சோலை மலைகிழவோன் - பழம் முற்றின சோலைகளையுடைய மலைக்கு உரிமையை உடையோனாகிய முருகப்பெருமான்.*

***கருத்துரை :** மலையுச்சியினின்றும் இழும் என்னும் ஓசையுண்டாகக் குதிக்கும் அருவியையுடையதும் பழம் முற்றின சோலைகளையுடையதும் ஆன மலைக்கு உரிமையை உடையோனாகிய முருகப் பெருமான் என்பதாம்.*

***அகலவுரை :** பழமுதிர்சோலை மலைகிழவோன் என உடம்பொடு புணர்த்தலால் அப்பழமுதிர்சோலை மலையின்கண்ணும் எழுந்தருளியிருத்தலும் உரியன் என்பதும் கொள்க. இது 'மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனையும் முட்டின்று முடித்தல்' என்னும் உத்தியாற் கொள்ளப்பட்டது.*

*இழும் : ஒலிக்குறிப்பு. "இழுமென்று வந்தீங் கிழியு மலையருவி", (சிலப்-குன்றக்குரவை) என்றார் இளங்கோவடிகளும்.*

அருவிமலை பழமுதிர் சோலைமலை எனத் தனித்தனி கூட்டுக.

முருகப் பெருமான் குறிஞ்சி நிலக் கடவுள் என்பது பற்றி இவ்வாறு அருவி பாய்கின்ற வளமுடைய மலைகட்கு உரிமையுடைய முருகக் கடவுள் என்பார், பழமுதிர்சோலை மலைகிழவோன் என்றார். அல்லது பழமுதிர் சோலைமலை எனத் திருப்பரங்குன்றம் போன்றதொரு திருப்பதி உளதென்றுரைத்தார் அல்லர் என்று கருதவும் இடனுண்டு. ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரையை நோக்குமிடத்து அவரும் பழமுதிர்சோலை என்பதனை மலைக்குரிய அடையாகக் கருதினர் என்பது விளங்கும். முருகப்பெருமான் மலைக்கு உரிய கடவுள் என்பதனை,

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

(தொல்-அகத்திணை, சூ-ரு)

எனவரும் தொல்காப்பிய நூற்பாவானே உணரலாம்.

இனிப் பழமுதிர்சோலை என்பது, முருகப்பெருமானுடைய ஆறுபடைவீடுகளுள் ஒன்றென்றும் அஃது இக்காலத்தே திருமால் திருப்பதியாக விளங்கும் (மதுரைக்கண்மையிலுள்ள) திருமாலிருஞ் சோலையேயாம் என்றும் சிலர் கூறுவர். அங்ஙனம் கூறுவோர் அது பண்டு முருகன் திருக்கோயிலாக இருந்ததற்குரிய சில சான்றுகளும் காட்டா நிற்பர். இச்செய்தி இன்னும் நன்கு ஆராய்ந்து முடிவு செய்யற்பாலது.

ஆசிரியர் நக்கீரனார் மலையின்கண் அருவியைச் சிறப்பிப்பார் போன்று முருகப் பெருமான் விரும்பியுறையும் மலையும் மலைசார்ந்த இடமுமாகிய குறிஞ்சிவளத்தை இப் பகுதியில் அழகாகப் புனைந்தோதியிருத்தல் காண்க. என்னை? யாண்டும் வெண்டுகிற் கொடி யசையுமாறு போன்று அருவிகள் நுடங்கி வீழ்தலும், ஆண்டு அகில் சந்தன முதலியன இருத்தலும் மூங்கில்கள் அடர்ந்திருத்தலும், மலைகளின் உச்சியிலே ஞாயிற்று மண்டிலம் போன்ற தேனிறால்கள் தூங்குதலும் ஆசினிப் பலாமரங்கள் பழுத்துதிர்தலும் சுரபுன்னைகள் பூத்துச் சொரிதலும் கருங்குரங்குகளும் முசுக்கலைகளும் திரிதலும் பிடியானைகளும் களிற்று யானைகளும் திரிதலும் பொன்னும் மணிகளும் திகழ்ந்து விளங்குதலும் பரிய வாழைகளும் தெங்குகளும் அடர்ந்திருத்தலும் வளமிக்க மிளகுக் கொடிகள் அடர்ந்து படர்ந்து காய்த்துக்

*கிடத்தலும் தோகையையுடைய மயில்களும் கோழிகளும் திரிதலும் பன்றிகளும் கரடிகளும் மலை முழைஞ்சுகளிலே பதுங்கிக் கிடத்தலும் ஆமானேறுகள் இடியென முழங்குதலும் உச்சியினின்றும் அருவிகள் இழுமென்னும் ஓசையோடே குதித்தலும் பழம் முதிர்ந்த சோலைகள் அடர்ந்து நிற்றலும் ஆகிய இனிய மலைக் காட்சிகள் எத்துணை அழகாக 266 ஆம் அடி முதல் இறுதிகாறுமமைந்த 22 அடிகளிலே கண்கூடாகத் தோற்றம் அளிக்கின்றன காண்மின்.*

*இனி, 265 'பலவுடன்' என்பது முதல் நுடங்கிச் சுமந்து உருட்டி வேர் கீண்டு இறால் சிதையச் சுளை கலாவ மலர் உதிர யூகமொடு முசுக்கலை பனிப்பப் பிடி குளிர்ப்ப வீசிக் களிற்றின்கோடு தழீஇத் தத்துற்றுப் பொன் மணி நிறம் கிளரக் கொழித்துத் துமிய உதிரத்தாக்கிச் சாய வெரீஇ இரியச் செறியச் சிலைப்ப இழூம் என இழிதரும் அருவியையும் சோலையையும் உடைய மலைகிழவோன் என வினை முடிவு காண்க.*

*இதன்கண் ஒரு பெரிய அருவிக் காட்சியைக் கண்டின்புறுக.*

*இனி, கணவன் மார்பினன் சென்னியனாகிய சேஎயின் சேவடி படரும் உள்ளமொடு செல்லும் செலவை நீ நயந்தனையாயின் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப இன்னே பெறுதி நீ முன்னியவினை; அது பெறுதற்கு அவன் உறையும் இடம் கூறக் கேள்; அவன் குன்றமர்ந்துறைதலும் உரியன்; அதாஅன்று, அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பு; அதாஅன்று குன்றுதோறாடலும் நின்றதன் பண்பு; அதாஅன்று, விழவின் கண்ணும், நிலையின் கண்ணும் கந்துடை நிலையினும் களன் காடு முதலியவற்றினும் உறைதலும் உரியன்; இது யான் அறிந்தபடியே கூறினேன்; யான் கூறிய இடங்களினாதல் வேறிடங்களினாதல் அவனை முந்துநீ கண்டுழி ஏத்திப் பரவி வணங்கி யானறி யளவையின் ஏத்தி நின்னடி உள்ளி வந்தேன் என்று நீ குறித்தது மொழியா அளவை, கூளியர் தோன்றிப் பெரும! அளியன்! இரவலன் ஏத்திவந்தோன், எனக்கூற அவனும் தானே வந்தெய்தி, தழீஇக்காட்டி அஞ்சலோம்பென்று நன்மொழி அளைஇ ஒரு நீயாகித் தோன்றும்படி பரிசில் நல்கும் (அவன் யாரெனில்) பழமுதிர்ச்சோலை மலைகிழவோன் என இப்பாட்டின் தொடக்க முதல் முடிவுகாறும் தொடர்ந்த வினைகளை முடிவு செய்க.*

*முருகவேளை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய*

**திருமுருகாற்றுப்படையும் அதற்குப் பெருமழைப் புலவர் பொ.வே. சோமசுந்தரனாரும் எழுதிய உரையும் முற்றுற்றன.**

-------------------

# பழமுதிர்சோலை மலை

*மதுரையை அடுத்துள்ள அழகர்மலை அடிவாரத்தில் அழகர் கோவில் இருக்கின்றது. அழகர் மலை திருமால் இருஞ்சோலை மலை என்றும், 'பழமுதிர்சோலை மலை' என்றும், அழகர் கோவில் முன்பு முருகன் கோவிலாய் இருந்தது என்றும், அழகர் கோவிலுக்கு எதிரில் முருகன் கோவில் இருந்து அழிந்துவிட்டது என்றும் பல செய்திகள் கூறப்படுகின்றன. திருமுருகாற்றுப்படையில் கூறப்பட்டுள்ள 'பழமுதிர்சோலை மலை' என்பது அழகர் மலையைக் குறிக்கின்றதா என்பது இங்கு ஆராயத்தகும்.*

**சிலப்பதிகாரம்**

*ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு முதலிய தொகை நூற்பாடல்கள் பலவற்றின் நடைக்கும் நூற்பொருளுக்கும் சிலப்பதிகார நடைக்கும் நூற்பொருளுக்கும் வேறுபாடு இருத்தலைக் கொண்டு, சிலப்பதிகாரம் முன்னவற்றிற்குப் பிற்பட்டது என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள செங்குட்டுவன் இலங்கைக் கயவாகுவின் காலத்தவன் என்று சிலப்பதிகாரமே செப்புகின்றது. அந்தக் கயவாகு இலங்கையில் பத்தினி வணக்கத்தை ஏற்படுத்தினான் என்று இலங்கைக் கதைகளும் நாட்டுப் பாடல்களும் நவில்கின்றன. அந்தக் கயவாகுவின் காலம் கி.பி. 114-136 என்று இலங்கை வரலாறு இயம்புகின்றது". எனவே, கயவாகு, செங்குட்டுவன் ஆகியோர் காலத்தில் வாழ்ந்த இளங்கோ அடிகள் செய்த சிலப்பதிகாரத்தின் காலமும் இதுவேயாகும் என்பது வெளிப்படை.*

*இங்ஙனம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பாதியில் செய்யப்பட்ட சிலப்பதிகாரத்தில் 'திருமால் குன்றம்' என்று இன்றைய அழகர்மலை சொல்லப்பட்டுள்ளதென்பது நம்பப்படுகிறது. மேலும், திருமால் கோவில் அக்குன்றின்மீதே இருந்தது என்றே அந்நூல் கூறுகின்றது" அங்கு முருகன் கோவிலும் இருந்திருக்குமாயின், இளங்கோ அடிகள் அதனைக் குறித்திருப்பார் அல்லரோ?*

**அகநானூறு**

*அகநானூறு 59 ஆம் செய்யுளில் அச்செய்யுளைப் பாடிய மதுரை மருதன் இளநாகனார் என்ற புலவர்,*

> ***"சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்***
> ***சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து***
> ***அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை"***

*என்று மதுரையை அடுத்துள்ள திருப்பரங்குன்றத்தைப் பாடியுள்ளார். மதுரை மருதன் இளநாகனார் என்பவர் மதுரையைச் சேர்ந்தவர் என்பது தெளிவு. அவர் காலத்தில் அழகர் மலைப் பகுதியில் சிறப்புப் பெற்ற முருகன் கோவில் இருந்திருக்குமாயின், அதனையும் குறித்திருத்தல் கூடுமன்றோ?*

*அகநானூற்றில் எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார் என்ற புலவரும் 149ஆம் செய்யுளில்,*

> ***"நெடுநல் யானை அடுபோர்ச் செழியன்***
> ***கொடிநுடங்கு மறுகிற் கூடற் குடாஅது***
> ***பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யுயரிய***
> ***ஓடியா விழவின் நெடியோன் குன்றத்து"***

*என்று முருகனது திருப்பரங்குன்றத்தையே பாடியுள்ளார். மதுரைக்கு அருகில் உள்ள அழகர் மலைப்பகுதியில் இப்புலவர்கள் காலத்தில், திருப்பரங்குன்றத்தைப் போல முருகன் கோவில்கொண்ட மலை ஒன்று இருந்திருக்குமாயின், இப்புலவர்கள் அதனைப் பாடாது விட்டிருப்பார்களோ?*

**கலித்தொகை**

*'கலித்தொகை' என்னும் சங்கநூலில் 93ஆம் செய்யுளில்,*

> ***"ஈரணிக் கேற்ற வொடியாப் படிவத்துச்***
> ***சூர்கொன்ற செவ்வேலாற் பாடிப் பலநாளும்***
> ***ஆராக் கனைகாமங் குன்றத்து நின்னொடு***
> ***மாரி யிறுத்த கடவுளைக் கண்டாயோ?"***

*என்னும் அடிகள் திருப்பரங்குன்றத்தைக் குறிப்பதாகவே நச்சினார்க்கினியர் பொருள் கூறியுள்ளார். அவ்வுரையாசிரியரே அந்நூல் 27ஆம் செய்யுளில் வந்துள்ள, 'வென்வேலான் குன்று' என்பதற்கு, 'முருகன் திருப்பரங்குன்றம்' என்றே குறித்துள்ளார். இந்த இரண்டு செய்யுட் பகுதிகளிலும் திருப்பரங்குன்றத்தை வெளிப்படையாகக் குறிக்கும் சொற்கள் இல்லை ஆயினும், மதுரையிலே பிறந்து வளர்ந்த நச்சினார்க்கினியர் திருப்பரங்குன்றத்தையே குறித்திருப்பது கவனிக்கத்தக்கது. அவர் கி.பி. 14*

*அல்லது 15 ஆம் நூற்றாண்டினர் எனலாம். சங்க இலக்கியங்களுக்கு உரை எழுதிய அப்பேரறிஞர், மதுரைக்கு அண்மையில் அழகர் மலைப்பகுதியில் மெய்யாகவே ஒரு முருகன் கோவில் இருந்திருக்குமாயின், அதனைக் குறித்திருத்தல் கூடுமன்றோ?*

**பரிபாடல்**

*'பரிபாடல்' என்னும் சங்கநூலில் திருமாலைப் பற்றிய பாடல்களும், முருகனைப் பற்றிய பாடல்களும், வையை பற்றிய பாடல்களுமே இடம் பெற்றுள்ளன. திருமாலைப் பற்றிய பாடல்கள் ஆறு; முருகனைப் பற்றியவை எட்டு. முருகனுக்குரிய எட்டுப்பாடல்களுள் ஒன்றிலேனும் பழமுதிர்ச்சோலை மலையைப் பற்றியோ, அங்குள்ள முருகனைப் பற்றியோ ஒரு குறிப்பும் காணப்படவில்லை. மாறாகப் பெரும்பாலான செய்யுள்கள் திருப்பரங் குன்றத்தைப் பற்றியே பேசுகின்றன. முருகனைப் பற்றிய எட்டுப் பாடல்களைப் புலவர் எழுவர் பாடியுள்ளனர். இவ்வெழுவருள் ஒருவரேனும் பழமுதிர்ச்சோலை மலை என்று ஒன்று இருந்ததாகவோ, அதன்மீது முருகன் கோவில் இருந்ததாகவோ பாடாமை கவனிக்கத்தகும்.*

*திருமால் கோவில் இருந்த குன்றம் முதலில் 'இருங்குன்றம்' எனப்பட்டது. அதன்மீது திருமால் கோவில் உண்டான பிறகு, 'மால் இருங்குன்றம்' எனப்பட்டது. அம்மலைமீது சோலைகள் மிக்கிருந்த காரணத்தால்,*

**"சோலையொடு தொடர்மொழி மாலிருங் குன்றம்"**

*(பரிபாடல் 15)*

*''மாலிருஞ்சோலைமலை'' என்னும் பெயர் பெற்றது. இதுகாறும் கூறப்பட்ட சான்றுகள், மதுரைக்கு ஒருபால் முருகனுக்குரிய பரங்குன்றமும், மற்றொருபால் திருமாலுக்குரிய இருங்குன்றமும் இருந்தமையையே வற்புறுத்துகின்றன.*

**திருமுருகாற்றுப்படை**

*திருமுருகாற்றுப்படையைக் கூர்த்து கவனிப்பின், அதன் ஈற்றடியாகிய 'பழமுதிர் சோலை மலைகிழ வோனே' என்பது எழுவாயாய் அமைந்திருத்தலைக் காணலாம். 'சேயோன் மேய மைவரை யுலகம்' என்பது தொல்காப்பியம்; அஃதாவ, முருகன் மலையும் மலை சார்ந்த நிலமுமாகிய குறிஞ்சிக்குரிய கடவுள் என்பது. இதனாலேதான் முருகன் குன்றுதொறாடலை*

மேற்கொண்டவன் என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது. அப்பெருமான் பழமுதிர்சோலைமலைகட்கும் உரிமை பூண்டவன். அவன் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவிநன்குடி, திருஏரகம் ஆகிய நான்கு இடங்களிலும் கோவில் கொண்டவன்; மலை தோறும் ஆடல் கொண்டவன்; இவையன்றி அவன் ஊர்தோறும் விழா எடுக்கும் இடங்களிலும், வெறியாடு களத்திலும், காட்டிலும், பொழிலிலும், ஆற்று இடைக்குறையிலும், ஆறுகளிலும், குளங்களிலும், பல்வேறு ஊர்களிலும், நாற்சந்தியிலும், முச்சந்தியிலும், ஐஞ்சந்தியிலும் கடம்பமரத்திலும், ஊர் நடுமரத்தடியிலும், ஊர் அம்பலத்திலும், ஆதீண்டு குற்றியை உடைய இடத்திலும், குறமகள் சிறந்த முறையில் வழிபாடு இயற்றும் இடத்திலும் உறைபவன்'', என்று நக்கீரர் கூறியுள்ளார்.

'பழமுதிர்குன்று' என்னும் தொடர் நற்றிணையில் (செ.78) வந்துள்ளது. அதுபோலவே திருமுருகாற்றுப்படையில், பழமுதிர்சோலைமலை என்பது குறிக்கப்பட்டுள்ளது. அம்மலையில் மிளகுக் கொடி வளர்வதாக (அடி, 309) நக்கீரர் கூறியுள்ளார். தமிழகத்தில் சேர நாட்டு மலைத்தொடரிலேதான் மிளகு பயிராவது என்பதை அனைவரும் அறிவர். பழமுதிர்சோலை என்று கருதப்படும் அழகர் மலையிலோ, அதனைச் சார்ந்த நத்தம் மலைத்தொடரிலோ மிளகு பயிரானது என்பதற்குரிய சான்று கிட்டவில்லை. அங்கு இன்றும் மிளகு பயிராதல் இல்லை. இக்கால மக்கள் வாழ்வாங்கு வாழ, இளைய தலைமுறையினருக்கு தோற்றம், எழுச்சி, வளர்ச்சி என்று வழிகாட்ட நமது மூதாதையர் திருத்தணியை குன்றுதோறாடலாகவும், மதுரை திருமாலிருஞ் சோலையைப் பழமுதிர்ச்சோலையாகவும் நிலைநிறுத்திவிட்டார்கள். நாமும் அதைப் பின்பற்றுவோமாக.

## பழமுதிர்சோலைமேல் அருளப்பட்ட நூல்கள்

| வ.எண் | நூலின் பெயர் | நூலாசிரியர் |
|---|---|---|
| 1. | திருப்புகழ் | அருணகிரிநாதர் |
| 2. | அழகர் கலம்பகம் | கவிக்குஞ்சரர் வேம்பத்தூரார் |
| 3. | முருகன் துதி | |
| 4. | சஷ்டிக்கவசம் | தேவராய சுவாமிகள் |
| 5. | கந்த புராணம் | கச்சியப்ப சிவாசாரியார் |
| 6. | பரிபாடல் | இளம்பெருவழுதியார் |
| 7. | சோலைமலைப்பதிகம் – திருவலங்கல் திரட்டு | பாம்பன் சுவாமிகள் |
| 8. | திருச்சோலை மலை 'னகர' வெதுகைக் கலிநிலைத்துறை | |

**ப**ழந்தமிழிலக்கியங்களில் பழமுதிர்ச்சோலைத்தலம், மாலிருங்குன்றம் எனவும், இருங்குன்றம் எனவும், சோலைமலை எனவும், திருமாலிருஞ்சோலை எனவும் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. பரிபாடல் என்னும் சங்கத்தொகை நூல்,

> "சிலம்பா றணிந்த சீர்கெழு திருவிற்
> சோலையொடு தொடர்மொழி மாலிருங் குன்றம்"

என இத்தலத்தின் பெயரைக் குறித்துக் காட்டுகின்றது. இவ்வடிகளில் உள்ள 'திரு' என்னும் சொல்லும், 'சோலை' என்னும் சொல்லும், 'மாலிருங்குன்றம்' என்னும் சொல்லும் தொடர்சேர்ந்து 'திருமாலிருஞ்சோலை மலை' என்று இத்தலத்திற்குப் பெயர்கள் உண்டு.

சிலம்புக் காப்பியம் படைத்த இளங்கோவடிகள், தம் நூலில் இத்தலத்தின் பெயரைத் 'திருமால்குன்றம்' எனக் குறிப்பிடுகின்றார்.

பத்துப்பாட்டுகள் முதற்பாட்டாகிய திருமுருகாற்றுப்படை இயற்றிய நக்கீரனார்,

> "பழமுதிர்ச்சோலை மலைகிழ வோனே"

என்று குறிப்பிடுகின்றார். இத்தலத்தின் பெயரைப் 'பழமுதிர்ச்சோலை' எனக் குறிப்பிடுகின்றார். ஆதலால் மக்களும் இன்று அவ்வாறே குறிப்பிடுகின்றனர்.

மலைகிழவோன் என்னும் திருப்பெயர் பொதுவாக முருகப்பெருமானை மட்டுமே குறிப்பதாகும். முருகப் பெருமானைப் பற்றி நக்கீரனார் கூறுங்கால் படைவீடு வகுத்து அவற்றின் பெருமைகளை விரித்து,

முதற்படைவீடாகிய திருப்பரங்கிரியில்,

> **'குன்றமர்ந் துறைதலும் உரியவன்'** அதா அன்று எனவும்,

இரண்டாம் படைவீடாகிய திருச்செந்தூரில்,

> **'அலைவாய் சேறலும் நிலைஇய பண்பே'** அதா அன்று எனவும்,

மூன்றாம் படைவீடாகிய திருவாவினன்குடியில்,

> **'ஆவி னன்குடி அசைதலும் உரியவன்'** அதா அன்று எனவும்,

நான்காம் படைவீடாகிய சுவாமிமலையில்,

> **'ஏரகத்து உறைதலும் உரியவன்'** அதா அன்று எனவும்,

*ஐந்தாம் படைவீடாகிய குன்றுதோறாடலில்,*

***'குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே'*** *அதா அன்று எனவும் முறையே ஒவ்வொரு படைவீட்டையும் போற்றிப் பாடி, ஆறாவது படைவீடாகிய இத்தலத்தைப் போற்றிப் பாடுங்கால்,*

***'பழமுதிர்ச்சோலை மலைகிழவோனே'*** *எனப் பாடுகின்றார்.*

**திருமலிவான பழமுதிர்சோலை**

*காரணம தாகவந்து புவிமீதே*
*காலனணு காதிசைந்து கதிகாண*
*நாரணனும் வேதன் முன்பு தெரியாத*
*ஞானநட மேபு ரிந்து வருவாயே*
*ஆரமுத மான தந்தி மணவாளா*
*ஆறுமுகம் ஆறிரண்டு விழியோனே*
*சூரர்கிளை மாளவென்ற கதிர்வேலா*
*சோலைமலை மேவிநின்ற பெருமாளே!*

*மதுரைக்குப் 19 கி.மீ. தொலைவில் அமைந்த அழகர்கோவில் திருமாலிருஞ்சோலை என்றழைக்கப்படும். அங்கே மலைமீது பழமுதிர்ச்சோலை மலைகிழவோனாக முருகப்பெருமான் விளங்குகின்றார். திருச்செந்தூரில் மருகனாகிய முருகன் தயவில் மாமனாகிய திருமால் கோயில் அமைந்துள்ளது. இங்கே மாமன் தயவில் முருகன் கோயில் கொண்டுள்ளார் என்பர்.*

*சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் இம்மலையில் உள்ள நூபுரகங்கைச் சுனையின் மாதவி மண்டபத்தில் அமர்ந்து சிலப்பதிகாரத்தை இயற்றினார் என்பர். "பலவுடன் வேறு பல்துகிலின் நுடங்கி அகில் சுமந்து .........இழுமென இழிதரும் அருவிப், பழமுதிர் சோலை மலைகிழவோனே" (திருமுருகாற்றுப்படை 296-317) என நக்கீரர் வருணித்துள்ள இயற்கைக் காட்சிகளை இன்றும் இங்கே நாம் கண்டு இன்புறலாம்.*

*மதுரையிலிருந்து இத்தலத்திற்கு வருவோர் கள்ளழகர் கோயிலுக்கருகில் பஸ்ஸில் வரலாம். கள்ளழகர் கோயிலிலிருந்து மலைமீது நூபுரகங்கை வரை (2 மைல்) செல்ல நல்ல தார்ச்சாலை உள்ளது. அதில் சென்றால் பழமுதிர்சோலை (3 கி.மீ.) முருகன் திருக்கோவிலை அடைகின்றோம்).*

*மலையின் நீளம் கிழக்கு மேற்கில் 16 கி.மீ. உள்ளது. எழில்மிகு இயற்கை - இன்பம் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றது. இத்தலம் இடபகிரி (விருஷபகிரி) எனவும் அழைக்கப்படுகின்றது. இயமன் இத்தலத்தில் இடபமாகிய தரும வடிவுடன் தவமியற்றித் தன் பெயரால் இம்மலை விளங்கவேண்டுமென இறைஞ்சி இறைவனருள் பெற்றதால் இம்மலை இடபகிரி (விருஷபாத்ரி) என்றும் அமைவதாயிற்று.*

*தொன்மையான தலமாயிருப்பினும் அண்மைக் காலக்கோயிலாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இங்கு வேல் மூலவராக உள்ள முருகப்பெருமான் ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களுங் கொண்டு இருபுறமும் வள்ளி, தெய்வகுஞ்சரி விளங்க நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றார். கல்லால் ஆகிய வேலுக்கு தனிச்சிறப்பு உள்ளது.*

*இத்தலத் தீர்த்தமாக நூபுரகங்கை (திருச்சிலம்பாறு) என்ற சுனை உள்ளது. திருமாலின் திருச்சிலம்பிலிருந்து உற்பத்தியாகி வருவதாகக் கூறுவர். இச்சுனை மலை உச்சியிலிருந்து வரும் போது சூரிய ஒளியால் பலவிதங்களில் ஒளிரும். நவரத்தின ஒளியும் இதில் தெரியும். திருமாலின் (அழகரின்) திருவடியை இச்சுனை வருடிக் கொண்டு பாய்வதால், திருமாலின் திருவடிக்குப் பணிசெய்யும் திருமகளைப் போன்றுள்ளது. இதில் அனைவரது எண்ணங்களும் பூர்த்தியாவதால் இஷ்டசித்தி எனவும் இதனை அழைப்பர்.*

*தலவிருட்சம் : நாவல்மரம், ஏனைய நாவல் மரங்கள் விநாயக சதுர்த்தியின் போது பழுக்கும். இம்மரமோ ஸ்கந்தசஷ்டியின் போது பழுக்கும் இயல்புடையது என்பர்.*

*சங்ககாலத்திலும் அருணகிரிநாதர் காலத்திலும் விளங்கிய கோயில் தற்போது இல்லை. இன்று காணப்படும் அண்மைக்காலக் கோயிலே பழமுதிர் சோலையாகத் திகழ்கின்றது. தினமும் பூசைகள் குருமார்களால் சிறப்பாக நடைபெறுகின்றன. ஆனால் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரையில் கோயில் திறந்திருக்கும். கந்தசஷ்டி விழாச் சிறப்புடையது. அப்போது லட்சார்ச்சனை நிகழ்கின்றது.*

*பழமுதிர்சோலைத் திருக்கோயிலுக்குச் செல்லும் வழியில் அழகர் கோயில் உள்ளது. கள்ளழகர் என்று போற்றப் பெறும் அருள்மிகு சுந்தரராஜப் பெருமாள் இருதேவியர் சூழ இங்கே விளங்குகின்றார். இக்கோயிலில் பதினெட்டாம் படிக்கோபுரத்தில் கருப்பண்ண சுவாமியுள்ளார். இதுவும்*

*திருமாலே. இக்கோபுர வாயில் ஆடிமாதத்தில் திறக்கப்படுகிறது. ஒருநாள் மட்டுமே இங்கு விபூதி கொடுக்கப்படுகிறது.*

*அழகர் கோயிலுக்கருகில் உணவு விடுதிகள் உள்ளன. மலையில் முருகன் கோயிலுக்கருகில் ஒரு சிற்றுண்டிச் சாலையும் உண்டு.*

*கள்ளழகர் கோயில் நிர்வாகத்திலுள்ள பழமுதிர் சோலைப் பைந்தமிழ் முருகன் கோயில் முருகப் பெருமானிடம் அடியார்களை ஆற்றுப்படுத்திய நக்கீரர் ஆறாவதாகக் காட்டித் தனது முருகாற்றுப் படையை முடிக்கின்றார். அருணகிரி நாதர் இத்தலத்தில் பாடிய 16 திருப்புகழ்ப் பாடல்கள் நமக்குக் கிடைத்துள்ளன.*

*"அகரமும் ஆகி அதிபனும் ஆகி அதிகமும் ஆகி அகமாகி*
*அயன்என வாகி அரியென வாகி அரன்என வாகி*
*அவர்மேலாய்;*
*இகரமும் ஆகி எவைகளும் ஆகி இனிமையு மாகிவருவோனே*
*இருநில மீதில் எளியனும் வாழ எனதுமுன் ஓடி*
*வரவேணும்;*
*மகபதி ஆகி மருவும் வலாரி மகிழ்களி கூரும் வடிவோனே*
*வனம்உறை வேடன் அருளிய பூஜை மகிழ்கதிர் காமம்*
*உடையோனே;*
*செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு மயிலோனே*
*திருமலி வான பழமுதிர்ச்சோலை மலைமிசை மேவு*
*பெருமாளே"*

*"சோதி யுணர்கின்ற வாழ்வு சிவம் என்ற*
*சோகமது தந்து எனையாள்வாய்"*
*- (வாதினையடர்ந்த...)*

*"வாழுமயில் மீதுவந்து தாணிணைகள் தாழுமென்றன்*
*மாயவினை தீரஅன்பு புரிவாயே"*
*- (சீலமுளதாயர்...)*

*"பாகம்வர சேரஅன்பு நீபமலர் சூடுதண்டை*
*பாதமலர் நாடியென்று பணிவேனோ"*
*- (வீரமதனுல்...)*

"ஊமையேனை ஒளிர்வித்துனது முத்திபெற
மூலவாசல் வெளி விட்டுனது ரத்திலொளிர்
யோகபேத வகை யெட்டுமிதி லொட்டும்வகை இன்று தாராய்"
- (ஆசைநாலு..)

"உருவிலாத பாழில் வெட்ட
வெளியி லாடுநாத நிர்த்த
உனது ஞானபாதபத்மம் உறுவேனோ"
- (துடிகொள்தோய்..)

"திகழ்புகழ் கற்றுச் சொற்கள் பயிற்றித்
திருவடி யைப்பற் றித்தொழு துற்றச்
செனனம றுக்கைக் குப்பர முத்திக் கருள்தாராய்"
- (தலைமயிர்...)

எனவரும் பழமுதிர் சோலைத் திருப்புகழ் அடிகள் அருணகிரிநாதர் இத்தலத்து முருகனிடம் கோரியவற்றை இனிது காட்டும்.

"தோதகப் பெரும் பயோதர" என்று தொடங்கும் திருவருணைத் திருப்புகழ் "கோலமுற்றிலங்கு சோண வெற்புயர்ந்த" என்ற வரியில் "கோல முற்றுயர்ந்த சோலை வெற்பிலங்கு'' என்று பாடம் உள்ளது. ''பரிவுறுநாரற்'' என்று தொடங்கும் சேலம் திருப்புகழில் "திருவளர் சோலைக்கமர்வோனே" என்றும் பாடம் உள்ளதாகத் தணிகைமணி குறிப்பிடுகிறார்.

## அருணகிரிநாதர் (திருப்புகழ்) 16 பாடல்களின் ஈற்றடிகள்

*அருணகிரிநாதர் சுவாமிகள்,*

1. 'சோலைமலை வந்துகந்த பெருமாளே'
2. 'சோலைமலை நின்ற பெருமாளே'
3. 'சோலைமலை யுற்ற பெருமாளே'
4. 'பழமுதிர்சோலை மலை மிசை மேவு பெருமாளே'
5. 'பழமுதிர்சோலை மேவு பெருமாளே'
6. 'சோலைமலை மேவிநின்ற பெருமாளே'
7. 'சோலைமலை மேவுகந்த ஆதிமுதலாக வந்த பெருமாளே'
8. 'சோலைமலை மேலமர்ந்த பெருமாளே'
9. 'சோலைமலை வந்துகந்த பெருமாளே'
10. 'சோலை வளர் வெற்பிலுறை முத்தர் புகழ் தம்பிரானே'
11. 'சோலை வியப்புறு அலையாமலை மேவிய பக்தர்கள் பெருமாளே'
12. 'சோலை வெற்பின் மேவு தெய்வா தெய்வானைதொள்
    பூனியிச்சை யாறுபுயா புயா றுள பெருமாளே'
13. 'புனித சோலை மாம லைக்குள்
    முருக வேல த்யாகர் பெற்ற பெருமாளே'
14. 'ஆதிச் சோலைமலைப் பகுதியிற்றிகழ் பெருமாளே'
15. 'குமர குலமலை யுயர்த்திக் காட்டு
    பரிவொ டணிமயில் நடத்திக் காட்டு பெருமாளே'
16. 'குலகிரி யிற்புக் குற்றுறை யகரப் பெருமாளே
    குலகிரி மகிழ்ந்து மேவு பெருமாளே'

*எனத் தமது 16 திருப்புகழ் பாடல்களிலும் ஆறாவது படை வீட்டின் அரும்பெருமைகளை அருளிப் போற்றிப் பாடுகின்றார்.*

### அழகர் கலம்பகம், கவிக்குஞ்சரர் வேம்பத்தூரார்

*அழகர் கலம்பகம் எனும் நூலில் அதன் ஆசிரியர் கவிக்குஞ்சரர் வேம்பத்தூரார் தமது நூலில் இத்தலத்தினைப் பற்றி கீழ்க்கண்டவாறு போற்றிப் பாடுகின்றார்.*

'நீர் பூத்த பொற்றகட்டு நெட்டி தழ்ச்செந்தாமரைமான்
கார்பூத்த முழு நீலக் கண்ணுமன முங்குளிர்ச்
கரும்பு துவைத் தோகை மிகச் சுடியதா மமுங்கவியும்
தரும புதுவைத் தோகைகளை தனதடங்கள் புளகரும்பப்
பழமுதிர்நான் மறைகுமுறப் பதின்மர்கண்முத் தமிழ்முழங்கப்
பழமுதிர் பூஞ்சோலைமலை பச்சையா கதத்திலங்க
வந்தவிமா னத்தமரர் மலர் தூவிப் பணிசோமச்
சந்தவிமா னத்தமருஞ் சௌந்தரய பரஞ்சோதீ"

*என்று சிறப்புறக் கூறுகின்றார். மேலும்,*

"அஞ்சார லும்மணி நீ ராறுங் கிடைத்தரிய
மஞ்சீர மாறா வனகிரியே – பஞ்சவர்தம்
பங்கங்களைந்தான் பன்னிரண்டு கண்ணொருவர்
பங்கங் களைந்தான் பதி" *என்று போற்றுகின்றார்.*

"மதிழ் சூழ் சோலைமலைக்கரசே" *என்று பெரியாழ்வார் பாடுகின்றார்.*

*'முருகன் துதி' எனும் நூலில்*

"விட தூதரோடு வரும் போது ஒம்மை வெகுவாகு – நம்பினேனே
குறவாது வள்ளி யிடமாக வந்து மயிலேறி வந்த – செல்வா
திடமாக சோலைமலை மீதில் வாழும் திருமால் தமக்கு – மருகோ
வடமான பழனி வடிவேலு நாதா வரவேணு மென்றனருகே"

*என முருகன் துதி நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

### சோலைமலைக் கோயில்கள்

*வண்ணச்சோலைகளால் சூழப்பட்ட இம்மலைத்தலத்தில், மலையில் அடிவாரத்தில் ஒரு திருக்கோயிலும், மலைமீது ஒரு திருக்கோயிலும், அமைந்து அருள் பெருக்கித் திகழ்கின்றன. அடிவாரத்தில் அமைந்து*

விளங்குவது மாமனாகிய திருமாலின் திருக்கோயில். மலைமீது அமைந்து விளங்குவது மருமகனாகிய முருகன் திருக்கோயில்.

திருமாலாகிய கண்ணபகவானும் பேரழகர். ஆறுமுகனாகிய கந்தப் பெருமானும் பேரழகர். இரு பேரழகர்களும் இத்தலத்தில் திருக்கோயில் கொண்டு விளங்குவதால், இத்தலம் 'அழகர்கோயில்' என்றும், இத்தலத்து மலை 'அழகர்மலை' என்றும் திருப்பெயர்கள் பெற்று விளங்கி வருகின்றன.

சோலைமலை முருகனை வணங்கி வழிபடச்செல்லும் அன்பர்கள், அடிவாரத்து நெடியோனாகிய திருமாலைக் கண்டு தரிசித்துக் கொண்டு, முடியில் விளங்கும் முருகனைக் கண்டுவழிபடச் செல்ல வேண்டிய முறையாகும்.

இவ்வாறு ஈரழகர்களையும் நெறிவழுவாது வழிபடுவோர், சமய வேறுபாடு கருதாத சன்மார்க்கர்களாவர். பழமுதிர்ச்சோலையும், சமய ஒற்றுமைத் தலமாகவும், சன்மார்க்கத் தலமாகவும் விளங்குதல் உண்மையாகும்.

அடியில் திருமாலும் முடியில் முருகனும் நிற்க அவர்கள் இருவரையும் இணைத்து நிற்கும் மலைக்காட்சி, சமய ஒற்றுமைத் திருக்காட்சிகளாகும்.

## திருச்சோலைமலை

*னகரவெதுகைக் கலிநிலைத்துறை*
*பண் - **இந்தளம்***

நின்னையே சிவமா யறுமுனி வருந்துதி நிகழ்த்திப்
பன்னொணா நலமே படைத்துய்ய வருளிய பரனே
மன்னுமா சோலை மலைமனா வுன்பதம் வணங்கற்
கென்னமா தவஞ்செய் துள்ளதோ வெனதுநற் றலையே. 1

சென்னிநா லுடையா னனுதினம் பழிச்சிடு தெய்வம்
என்னவே துலங்கிப் பவளத்தின் றிரளென வியங்கும்
நென்னடைச் சோலை மலைமனா நின்மொழி கேட்க
என்னமா தவஞ்செய் துள்ளதோ வெனதுநற் செவியே. 2

வன்னிசேர் நுதற்கண் ணானுடை யோகதிர் வடிவேல்
மின்னுபூங் கரனே வானவரேத்தருள் விதுரா
பன்னமார் சோலை மலைமனா நின்னிலை பார்க்க
என்னமா தவஞ்செய் துள்ளதோ வெனதுநல் விழியே. 3

அன்னையா யயனா யனுதினம் வழிபடு மடியேன்
தன்னுளே யுணர்வாய்ச் சுடர்பொரு ளாயுள்ள சாமீ
முன்னைசேர் சோலை மலைமனா நின்சரண் முகக்க
என்னமா தவஞ்செய் துள்ளதோ வெனதுநன் மூக்கே. 4

மின்னுவா னவர்மன் மயிலென வரவதன் மேலே
உன்னியே றிமகா நிசிசர ருயிர்தொலைத் துள்ளோய்
மன்னுமா சோலை மலைமனா நின்னடி வாழ்த்தற்
கென்னமா தவஞ்செய் துள்ளதோ வெனதுநன் னாவே. 5

பின்னைகேள் வனயன் யிறங்கெழின் முனிவரர் பிறரும்
உன்னியே கணித்தற் கமைவறு பெருந்தகை யுடையோய்
துன்னுமா சோலை மலைமனா நின்சரண் டொழமுன்
என்னமா தவஞ்செய் துள்ளதோ வெனதுநற் கரமே. 6

தென்னிலா வொளிவிஞ் சறுமுகத் திளமையந் தேவாய்ச்
சொன்னநீ ளயிற்கை யிலைகடி கேண்மனத் தூயோர்
மின்னிவாழ் சோலை மலைமனா நின்றல மிதிக்க
என்னமா தவஞ்செய் துள்ளதோ வெனதுநற் காலே. 7

முன்னைநா ளரியவ தாரவல் லேனத்தின் முரணார்
சென்னிகே டுறவொண் மருப்பினைப் பறித்தவொர் திறலோய்
அன்னமூர் சோலை மலைமனா நின்பொடி யணிய
என்னமா தவஞ்செய் துள்ளதோ வெனதுநல் லுடம்பே. 8

அன்னவா கன்னை யருஞ்சிறைப் படுத்திமெய் யறிவால்
பன்னகா பரணற் கோமுதற் பொருடனைப் பகர்ந்தோய்
கன்னல்சூழ் சோலை மலைமனா நின்கழல் கருதற்
கென்னமா தவஞ்செய் துள்ளதோ வெனதுநன் மனமே. 9

பன்னொணாப் புகழ்தான் படித்தவன் றனைத்திருப் பரிவால்
இன்னனீத் திருக்க வுரைத்தசின் மயதின வெழிறான்
மின்னுமா சோலை மலைமனா நின்னருள் வேண்டற்
கென்னமா தவஞ்செய் துள்ளதோ வெனதுநன் னெஞ்சே. 10

*நந்தன பங்குனி மாதம் 23-ம் தேதி சோமவாரம்*

### *அழகர் கலம்பகம்*

### *நூல்*

### *மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா*

### *எட்டடித் தரவுகள் (உ)*

**சீர்பூத்த பொற்றகட்டு நெட்டி தழ்ச்செந் தாமரைமான்**
**கார்பூத்த முழுநீலக் கண்ணுமன முங்குளிரச்**
**கரும்புதுவைத் தோகைமிகச் சூடியதா மமுங்கலியும்**
**தரும்புதுவைத் தோகைகன தனதடங்கள் புளகரும்பப்**
**பழமுதிர்பூஞ் சோலைமலை பச்சைமர கதத்திலங்க**
**வந்தவிமா னத்தமார் மலர்தூவிப் பணிசோமச்**
**சந்தலிமா னத்தமருஞ் சௌந்தரிய பரஞ்சோதீ.**

## தேவராய சுவாமிகள் அருளிய சஷ்டிக்கவசம்

**கவச பலன்**

*ஆறுமுகம் கொண்ட முருகன் அல்லது வள்ளி தெய்வானை முருகன் மயில் மேலமர்ந்த படத்துக்கு முன்னே .... இந்தக் கவசத்தை பாராயணம் செய்யலாம்.*

*குழந்தைகளுக்கு மொழிப்பயிற்சியிலும், கல்வித் தேர்ச்சியிலும் முன்னேற்றம் தரும். கல்விச் சிறப்பும் செல்வச் சிறப்பும் மிகும். மேலும் நல்லெண்ணம், நல்லொழுக்கம், நற்சிந்தனை வளரும். குடும்பமும் சமுதாயமும் முன்னேற்றம் அடையும். பாடமுடியாதவர்கள் கூடப் பிறர் பாடக் கேட்டாலும் அதே பலனைப் பெறுவர்.*

**காப்பு**

**(குறள் வெண்பா)**

அமரர் ரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் – கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டிக் கவசந் தனை.

**கவசப் பாடல்**

சங்கரன் மகனே சரவண பவனே
ஐங்கரன் துணைவனே அமரர்தம் கோனே
செங்கண் மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழநிமா மலையுறும் பன்னிரு கரத்தனே
அழகுவேல் ஏந்தும் ஐயனே சரணம்

சரவணபவனே சட்கோண த்துள்ளுறை
அரணருள் கதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சடாட்சரத் தோனே
மயில்வா கனனே வள்ளலே சரணம்
திருபுர பவனே தேவசே னாபதி
குறமகள் மகிழும் குமரனே சரணம்
திகழொளி பவனே சேவற் கொடியாய்
நகமா யுதமுடை நாதனே சரணம்
பரிபுர பவனே பன்னிரு கையனே
தருணமுவ் வேளை தற்காத் தருளே
சவ்வும் ரவ்வுமாய் தானே யாகி
வவ்வும் ணவ்வுமாய் விளங்கிய குகனே
பவ்வும் வவ்வுமாய் பழமுதிர்ச் சோலையிலே
தவ்வியே ஆடும் சரவண பவனே
குஞ்சரி வள்ளியைக் குலாவி மகிழ்வோய்
தஞ்சமென் றுன்னைச் சரணம் அடைந்தேன்
கொஞ்சிய உமையுடன் கழவியாய்ச் சென்றங்கு
அஞ்சலி செய்தவன் அமுதமும் உண்டு
கார்த்திகை மாதர் கனமார்(பு) அமுதமும்
பூர்த்தியாய் உண்ட புனிதனே குகனே
நவமைந்தர் சிவனால் நலமுடன் உதிக்கத்
தவமுடை வீரவாகுவோ(டு) ஒன்பான்
தம்பிமா ராகக் கொண்ட
சம்பிர தாயா சண்முகா வேலா
நவ வீரர் தம்முடன் நவகோடி வீரரும்
கவனமாய் உருத்திரன் அளித்தே களித்துப்
பேதம் இல்லாமல் பிரமனைக் குருவாய்
ஓதிடச் செய்ய உடன் அவ் வேதனை
ஓமெனும் பிரணவத் துண்மைநீ கேட்கத்
தாமே யோசித்த சதுர்முகன் தன்னை

அமரர்கள் எல்லாம் அதிசயப் படவே
மமதைசேர் அயனை வன்சிறை யிட்டாய்
விமலனும் கேட்டு வேகம தாக
உமையுடன் வந்தினி துவந்து புரிந்து
அயனைச் சிறைவிடென்(று) அன்பாய் உரைக்க
நயமுடன் விடுத்த ஞானபண் டிதனே
திருமால் அயன்சிவன் சேர்ந்து மூவரும்
கௌரி லட்சுமி கலைமக ளுடனே
அறுவரோர் அம்சமாய் அரக்கரை வெல்ல
ஆறு முகத்துடன் அவதரித் தோனே
சிங்க முகாசுரன் சேர்ந்த கயமுகன்
பங்கமே செய்யும் பானு கோபனும்
சூரனோ டொத்த துட்டர்க ளோடு
கோரமே செய்யும் கொடியரக் கர்களை
வேருடன் செய்தவ் வமரர்கள் தமக்குச்
சேனா பதியாய் தெய்வீகப் பட்டமும்
தானாய்ப் பெற்ற தாட்டிகப் பெருமானே
திருப்பரங் குன்றம் செந்தூர் முதலாய்ச்
சிறப்புறு பழநி திருவே ரகமுதல்
எண்ணிலாத் தலங்களில் இருந்தாடும் குகனே
விண்ணவர் ஏத்தும் விநோத பாதனே
அன்பர்கள் துன்பம் அகற்றியாள் பவனே
தஞ்சமென்(று) ஓதினர் சமயம் அறிந்தங்(கு)
இன்பம் கொடுக்கும் ஏழை பங் காளா
கும்பமா முனிக்குக் குருதே சிகனே
தேன்பொழில் பழநித் தேவ குமாரா
கண்பார்த்(து) எனை யாள் கார்த்திகே யா என்
கஷ்டநிஷ் டூரம் கவலைகள் மாற்றி
அஷ்டலட்சுமி வாழ் அருளெனக்(கு) உதவி
இட்டமாய் என்முன் னிருந்து விளையாடத்

திட்டமாய் எனக்கருள் செய்வாய் குகனே
அருணகிரி தனக்(கு) அருளிய தமிழ்போல்
கருணையால் எனக்கு கடாட்சித் தருள்வாய்
தேவ ராயன் செப்பிய கவசம்
பூவல யத்தோர் புகழ்ந்து கொண்டாட
சஷ்டிக் கவசம் தான்செபிப் போரைச்
சிஷ்டராய்க் காத்தருள் சிவகிரி வேலா
வந்தென் நாவில் மகிழ்வுடன் இருந்து
சங்கத் தமிழ்த்திறம் தந்தருள் வோனே
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் தமிழ்தரும் அரனே
சரணம் சரணம் சங்கரன் சுதனே
சரணம் சரணம் சண்முகா சரணம்.

உ
*சிவமயம்*
*திருச்சிற்றம்பலம்*

# பழமுதிர்ச்சோலை முருகன் நவமணிமாலை

*ஆசிரியர்*
**ந. இரா. சென்னியப்பன்,** பேரூர்

***விநாயகர் காப்பு - நேரிசை வெண்பா***

சிவமலி சோலை மலைமுருகன் மீது
நவமணி மாலை நயந்தே – தவமணிய
நத்தக வள்ளியை நன்மணம் நாட்டிய
வித்தக விநாயகர் காப்பு.

***1. நூல் - நேரிசைவெண்பா***

வழுத்தும் முருகன் வரலாற்றுத் தொல்லோன்
பழுத்த தமிழின் பழமை – எழுத்திடு
தேறுதொல் காப்பியச் சேயோன் தெளிதமிழின்
கூறுகு றிஞ்சிக் குகன்.

***2. கட்டளைக் கலித்துறை***

கன்னித் தமிழின் கடவுள் கருதும் இலக்கியங்கள்
முன்னி முழங்கிடும் முற்றிய சங்கம் முழுவதிலும்
மன்னும் முருகன் மயிலுடை ஊர்தியன் மாமலையன்
பன்னி குறவள்ளி பார்வதி சேயன் பகர்ந்திடுமே.

***3. தரவுக் கொச்சகக்கலிப்பா***

பகர்ந்திடும் ஆற்றுப்படை பண்ணாரும் பரிபாடல்
புகழ்ந்திடு பிணிமுகத்தி ளம்பூரணன் பூவையர்கோன்
மகந்தரு மறித்தகரை ஊர்ந்திட்ட மாவீரன்
யுகந்தரு களவுகற்பு உவந்திட்ட பழையனே.

***4. கலிவிருத்தம்***

பழமுதிர் சோலைப் பரமன் முருகன்

அழமுதிர் காலை அருளும் அறவன்
கிழமுதிர் கோலக் கிரியைக் களவன்
இழமுதிர் வேலை கிளையின் அருள்வான்

*5. அறுசீர் ஆசிரிய விருத்தம்*

**அருளும் வள்ளல் ஆறெழுத் தண்ணல் ஆன்ற சிலம்பில்**
**உருளும் கடம்பன் ஊர்புகழ் குன்றக் குரவை உறைவான்**
**தெருளும் கண்டேத்து செவ்வேள் தேன்மொழி மகளிர் பாராட்ட**
**பொருளில் அகமும் புறமும் அறிந்தோர் போற்றும் அழகனே!**

*6. தாண்டகம்*

**ஏராரும் பரங்குன்றின் ஏந்தல் கண்டாய்!**
**ஏந்தெழில் செந்தூரின் ஏகன் கண்டாய்!**
**ஆராரும் ஆவினன்குடி யண்ணல் கண்டாய்!**
**ஆவிகையாய் ஏரகத்தின் அண்ணல் கண்டாய்!**
**பாராரும் குன்றுதொறும் பயில்வான் கண்டாய்!**
**பானலமை திருத்தணிகைப் பரமன் கண்டாய்!**
**சீராரும் மருதமலைச் சேந்தன் கண்டாய்!**
**சிற்குளத்துச் சோலைமலைச் செல்வன்தானே!**

*7. வஞ்சிவிருத்தம்*

**தானே அருளும் தகவன்**
**மானேர் விழியர் கணவன்**
**வானேர் கருணை வளவன்**
**பானேர் பகிதம் பயில்வே!**

*8. நேரிசை ஆசியப்பா*

**வேலாய் நின்றாய் வேற்கோட்ட மானாய்!**
**சேலார் கண்ணியர் சேர்ந்தருள் புரிய**
**மேலாம் கோயில் மேம்பட அமைத்தார்**
**மாலார் வழக்கில் மன்னி வதிந்தாய்!**

மாலோன் மருகனாய் மாமலை அமர்ந்தாய்!
கீரன் பாடல் கிளைபரி பாடல்
வாரன் சிலம்பு வண்திரு முறைகள்
கந்த புராணம் செந்தில் அகவல்
கந்தர் கலிவெண்பா கச்சி யப்பர்
திருத்தணி நூல்கள் தீந்தமிழ்த் திருப்புகழ்
பொருத்தமை அனுபூதி பொலிவ லங்காரம்
போரூர் முனிவர் பாம்பன் சாமி
தேவ ராயர் முருக தாசர்
மூத்தோர் பாடல் முழுதும் ஆனாய்!
நும்மைப் போற்றி நும்புகழ் நுவலும்
எம்மவர் இன்றே ஏற்றவ ழிபாடு
காலால் நடந்தும் காவடி எடுத்தும்
வாலார் பொற்றேர் வளம்பெற இழுத்தும்
அலகு குத்தியும் ஆடியும் பாடியும்
சட்டி விரதம் ஒட்டி யிருந்தும்
இட்ட கிருத்திகை இனிதே நோற்றும்
தையில் பூசத் தகுதேர் ஈர்த்தும்
வையம் புகழ வழுத்தி வருவர்
எல்லாம் பதித்தே ஏற்றம் செய்யவே
நல்லார் கற்பக நற்றமிழ் வேந்தர்
பழுனிய முயல்வுக் கருள்வான்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே!

*9. மருட்பா*

**ஏரம்பன் வாழி! எழிற்குகன் வாழி!**
**ஆரம்பன் வாழி! அயில்வாழி! – பேரின்ப**
**அற்பக அடியார் வாழி!**
**கற்பகம் வாழி! கனிதமிழ் வாழி!**



**அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி, பழமுதிர்சோலை**

*சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா என்று ஔவையிடம் விளையாடிய பழமுதிர்சோலை மலைக் குமரனின் வள்ளி-தெய்வானை இணைந்த திருக்கோலம் இயற்கை அழகு நிறைந்த இனிய படை வீடு அல்லவா.*

# ஆறாவது படை வீடு

# இருபத்தொன்றாம் நூற்றாண்டில் பழமுதிர்சோலை

## அருள்மிகு முருகன் திருக்கோயில் சோலைமலை மண்டபம்

அழகர்கோயில், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.

*தலத்தின் பெயர்*

**சோலைமலை, சோலை வெற்பு, விருஷபகிரி, குலமலை, குலகிரி, பழமுதிர்சோலை, பழமுதிர் பூஞ்சோலை மலை**

*மூர்த்தியின் பெயர்*

**அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர்**

*தீர்த்தம்*

**நூபுரகங்கை தீர்த்தம்**
**(ஆயிரமுகங்கள் கொண்ட நூபுரமிரங்கு கங்கை)**
**(திருப்புகழ்)**

*தலவிருட்சம்*

**நாவல் மரம் (ஐப்பசி மாதம் பழம் பழுக்கும் அதிசய மரம் முருகன் ஔவைக்கு நாவற்கனி கொடுத்த இடம்)**

*சன்னதிகள்*

1. அருள்மிகு வித்தக விநாயகர்
2. அருள்மிகு வள்ளி தேவசேனா உடனுறை முருகப்பெருமான்
3. அருள்மிகு ஆதிவேல் அருள்மிகு உற்சவர்
4. அருள்மிகு நாவல் மரத்தடி விநாயகர்

*பூஜை நேரங்கள்*

***ஆகமம் தினசரி மூன்று கால பூஜைகள்***

| | | | | |
|---|---|---|---|---|
| **1.** | **காலசந்தி** | **:** | **அபிஷேகப் பூஜை** | **– காலை 9.00 மணி** |
| **2.** | **உச்சிகாலம்** | **:** | **பூஜை** | **– நண்பகல் 12.00 மணி** |
| **3.** | **சாயரட்சை** | **:** | **அபிஷேகம்** | **– மாலை 5.00 மணி** |

*காமிக ஆகமப்படி பூஜைகள்*

*சன்னதி திறந்திருக்கும் நேரம்*

**காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**

**இடையில் சன்னதி சாத்தப்படமாட்டாது**

***உற்சவங்கள்***

**பிரதி மாதந்தோறும் கிருத்திகை மற்றும் வளர்பிறை சஷ்டி**

**மஹா அபிஷேகம், தீபாராதனை, சுவாமி புறப்பாடு (திருக்கோயில் வலம்)**

| | | | |
|---|---|---|---|
| **1.** | தமிழ்வருடப்பிறப்பு | – | சித்திரை |
| **2.** | வைகாசி விசாகம் | – | வைகாசி |
| **3.** | ஆடி கார்த்திகை | – | ஆடி |
| **4.** | வினாயகர் சதுர்த்தி | – | ஆவணி |
| **5.** | வருசாபிஷேகம் | – | ஆவணி (பூரம் நட்சத்திரம்) |
| **6.** | கந்த சஷ்டி 7 தினங்கள் | – | ஐப்பசி |

நாவல் மரத்தடியில் சூரசம்ஹாரம், திருக்கல்யாணம், ஊஞ்சல் உற்சவம்

| | | | |
|---|---|---|---|
| **7.** | சோமவாரங்கள் | – | கார்த்திகை |
| **8.** | கார்த்திகை தீபம் | – | கார்த்திகை |
| **9.** | தனுர் மாத பூஜை | – | மார்கழி |
| **10.** | தை மாதப்பிறப்பு | – | தை |
| **11.** | தைப்பூசம் | – | தை |
| **12.** | சிவராத்திரி (நான்கு கால இரவு பூஜை) | – | மாசி |
| **13.** | பங்குனி உத்திரம் | – | பங்குனி |

(அடிவாரம் அருள்மிகு **18–**ஆம்படி கருப்பண்ண சுவாமி கோவிலிலிருந்து **108** பாற்குடங்கள் பக்தர்களால் எடுத்துச்சென்று உற்சவம் நடைபெறும்)

### *கோடி அர்ச்சனை*

இத்திருக்கோயிலில் 2004 ஆம் ஆண்டு தை மாதம் 1—ஆம் தேதி தொடங்கி தை 29—ஆம் தேதி முடிய 29 நாட்கள் கோடி அர்ச்சனை சிறப்பாக நடைபெற்றது. இதற்காக கோடி அர்ச்சனைச் சீட்டு 1க்கு ரூ.100/— கட்டணமாக பக்தர்களிடம் வசூலிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்ட பக்தர்களுக்கு பிரசாதத்துடன் 2 கிராம் எடையுள்ள முருகன் வெள்ளி டாலர் ஒன்றும் (கோடி அர்ச்சனையில் வைக்கப்பட்டது). பிரசாதமாக வழங்கப்பட்டது. வரும் ஆண்டுகளிலும் இத்திட்டம் சிறப்பாக செயலாக்கப்படவுள்ளது.

### *அன்னதானத் திட்டம்*
### *மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அன்னதானத் திட்டம்*

இத்திருக்கோயிலில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அன்னதானத் திட்டம் ஒரு சிறந்த திட்டமாக பக்தர்களுக்கும் ஏழை, எளியோர்க்கும் தினமும் நண்பகல் 12.00 மணி அளவில் 1 நாள் மதிய உணவாக – நூறு நபர்களுக்கு (100) வழங்கப்பட்டு வருகிறது. ஒரு நாள் திட்டத்திற்கு ரூ.1200/—ஐ உபயதாரர்கள் விரும்பினால், பணம் செலுத்தி அன்னதானத்திட்டத்தில் பங்கேற்கலாம்.

### ஆறாவது படைவீடு சோலைமலை திருக்கோயில்

*முருகக் கடவுளின் திருக்கோயில் அழகர் கோயிலின் அடிவாரத்திலிருந்து மலைமீது அமைந்து விளங்குகிறது. இக்கோயில் உள்ள இடத்தில் முன்பு வேலின் சிலை வடிவம் மட்டுமே இருந்து, அதனை மக்கள் நெடுங்காலமாக வழிபட்டு வந்ததாக கூறுகின்றனர். அந்தச் சிலை வடிவம் இப்போதும் இத் திருக்கோயிலுக்குள் தனி சன்னதியாக உள்ளது.*

*முருகப்பெருமான் இங்கு இச்சா சக்தியாகிய வள்ளியம்மையுடனும், கிரியா சக்தியாகிய தெய்வானையம்மையுடனும், ஞான சக்தியாகிய ஆதிவேலுடனும் ஒரே பீடத்தில் வீற்றிருந்து காட்சியளிக்கின்றார்.*

*‘கோபுர தரிசனம் கோடிப் புண்ணியம்’ எனும் வாக்கிற்கிணங்க, திருக்கோயிலின் முகப்பில் மூன்று நிலைகளுடன், தங்க கலசங்களுடனும் இயற்கையான எழிலுடனும் பசுமை மலைகளால் சூழப்பட்டு மத்தியில் புதிய இராஜகோபுரம் கம்பீரமாக காட்சியளிக்கின்றது. இக்கோபுரம் ஸ்தூலலிங்கம் என்று போற்றப்படும். கோபுரத்தின் உள்ளே சென்றதும் கொடிமரத்தை*



ஆறாவது படைவீடு
அருள்மிகு முருகன் திருக்கோயில், சோலைமலை மண்டபம், அழகர்மலை.
உற்சவர்

தரிசிக்கலாம். அதனைத் தொடர்ந்து உள்ளே சென்றால் சோபன மண்டபம் அழகுடன் அமைந்துள்ளது. அதன் பிறகு மகா மண்டபத்தில் இத்திருக்கோயிலின் கொடிமரத்தின் முன்நின்று வணங்கும் போதே கருவறையின் முருகப் பெருமானையும் கருவறை விமானத்தையும் கண்குளிர கண்டு வழிபடும் அமைப்பாக இத்திருக்கோயில் அமைந்திருப்பது தனிச்சிறப்பாகும். இவ்வரிய காட்சியை வணங்கி உள்ளே சென்றால் 'வித்தக விநாயக விரை கழல் சரணே' என்னும் ஔவைப்பிராட்டியின் திருவாக்கிற்கிணங்க இங்குள்ள விநாயகரின் பெயர் அருள்மிகு வித்தக விநாயகர். நான்கு திருக்கரங்களுடன் அமர்ந்திருந்த கோலத்தில் அருள் பாலிக்கின்றார். அவரை சேவித்ததும் மூலஸ்தானத்தில் முருகப்பெருமான் வள்ளி - தெய்வானையுடன் ஒரே பீடத்தில் நான்கு திருக்கரங்களும் கையில் வேலாயுதத்துடன் வீற்றிருக்கின்றார். இத்திருவுருவம் மிகவும் அழகுவாய்ந்தது. அழகே உருவானது. மனதில் அமைதியும், இன்பத்தையும், அளிக்கும் இயற்கை எழில்குடி கொண்டிருக்கும் இடத்தில் குமாரக்கடவுள் கோயில் கொண்டு அருள்புரிகின்றனர்.

அருள் வள்ளலாகிய இம்முருகப் பெருமானின் புகழை பாடவந்த அருணகிரிநாதர்,

"செககன சேகு தகுதிமி தோதி திமியென ஆடுமயிலோனே
திருமலிவான பழமுதிர்ச்சோலை மலைமிசை மேவு பெருமாளே"

என இத்தலத்தில், திரு என்றால் அருளைக் குறிக்கும் (செல்வம்) என போற்றி பாடி மகிழ்கின்றார்.

**ஆதிவேல் சன்னதி உற்சவர்**

இதனைத் தொடர்ந்து ஆதிவேல் சன்னதி அழகுடன் அமைந்துள்ளது. இங்குள்ள ஆதிவேலவர் சன்னதியில் வழிபட்டால் சகல காரியங்களும் சித்தியாகி ஞானத்தைக் கொடுக்கும் பேரருள் சக்தியாக விளங்குகிறது. ஆறுபடை வீடுகளில் இங்கு மட்டுமே முருகப்பெருமான் சன்னதியில் வள்ளி தெய்வானையுடன் வீற்றிருக்கிறார். பிரதி செவ்வாய் தோறும் பால் அபிஷேகம் செய்து, வழிபட்டால் சகல காரியங்களும் சித்திக்கும். மேலும் மூலவருக்கு மூன்று மாலைகள் சாற்றி, சாற்றிய மாலையைத் திருமணம் தாமதமாகும்

கன்னியர் தம் கழுத்தில் அணிந்து கொண்டு, திருக்கோயிலை வலம் வந்து கோவிலின் வலப்புறத்தில் உள்ள கடம்ப மரத்தில் தம் கழுத்தில் உள்ள மாலையைக் கழற்றி அணிவித்து மரத்தை வலம் வந்து வணங்கினால் திருமண பாக்கியம், விரைவில் ஏற்பட்டு திருமணம் நடக்கும். இப்பிரார்த்தனை இத்தலத்தில் விசேடமாகும்.

மேலும் புத்திரசந்தானம், நல் ஒழுக்கம், நல்ல கல்வியும், சகல செல்வயோகம் மிக்க பெருவாழ்வையும் சோலைமலை கந்தப் பெருமான் வழங்கியருள்கின்றார். அனைவரும் திருவருள் பெறுவோமாக.

## பழம் உதிர்க்கப்பட்ட வரலாறு
### (தலவிருட்சம் - நாவல் மரம்)

*ஒவ்வொரு படை வீட்டிலும் ஒவ்வொரு திருவிளையாடலைப் புரிந்து உவந்த முருகக்கடவுள், இப்படை வீட்டிலும் நிகழ்த்தி மகிழ்கின்றார். இங்கு எம்பெருமான் நிகழ்த்திய திருவிளையாடல் பழம் உதிர்த்த திருவிளையாடலாகும்.*

*பழங்காலத்தில் இத்தலம் மதுரைக்குச் செல்லும் வழியில் அமைந்திருந்த தாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. அந்த வழியாக ஔவை மூதாட்டியார் மதுரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அவர் முருகக்கடவுளிடத்தில் நீங்கா அன்பு கொண்டவர். சேர, சோழ, பாண்டியர்களாகிய மூவேந்தர்களாலும் ஒப்ப மதித்துப் போற்றப்பட்ட முத்தமிழ் வித்தகர். தமிழ் நலம் காரணமாகவும், அன்பின் திறம் காரணமாகவும் முருகப்பெருமான், ஔவை மீது இரக்கம் கொண்டார். அம்மூதாட்டிக்கு அருள் புரியத் திருவுள்ளங்கொண்டார். அருள் புரிவதன் வாயிலாக உலகுக்குப் பல நீதிகளை உணர்த்தும் குறிப்புக் கொண்டார்.*

*தமிழ் மூதாட்டியாகிய ஔவை, கடும் வெய்யிலில் மிகவும் களைப்புடன் மதுரை நோக்கிச்சென்று கொண்டிருந்தார். ஔவையின் நிலையறிந்த முருகப் பெருமான் மாட்டுக்காரச் சிறுவனாக உருக்கொண்டு, ஔவை செல்லும் வழியினிடையில் இருந்த நாவல் மரம் ஒன்றின் மீது ஏறி கிளையில் அமர்ந்து கொண்டார். களைப்போடு அவ்வழியே வந்த ஔவையார், மரத்தின் நிழலில் சிறிது நேரம் ஓய்வெடுத்துக்கொண்டு செல்லக்கருதி, அம்மரத்தின் கீழ்ச்சென்று ஓய்வெடுத்தார்.*

*அந்நிலையில் அம்மரக்கிளையில் இருந்த மாட்டுக்காரச் சிறுவன், ஔவையை நோக்கி, பாட்டி களைப்பைப் போக்க நாவற்பழங்கள் வேண்டுமா? என்று பரிவுடன் கேட்டான். அதைக்கேட்ட ஔவை மகிழ்வுற்று, “வேண்டும்” என மறுமொழி கூறினார்.*

*அதைக்கேட்ட முருகனாகிய மாட்டுக்காரச் சிறுவன், “சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?” என்று இரு கேள்விகளைக் கேட்டார்.*

*அக்கேள்விகள் ஔவையைத் திகைக்கச் செய்தன. பின்னர் ஔவை “சுடாத பழமாகவே தருக” என்று கூறினார்.*

மாட்டுக்காரச் சிறுவன் மரக்கிளையை உலுக்கினான். கிளையில் இருந்த கனிந்த பழங்கள் கீழே உதிர்ந்தன. கீழே விழுந்த பழங்களில் மண் ஒட்டிக் கொண்டது. ஔவையார் ஒவ்வொரு பழமாக எடுத்து, அதில் ஒட்டிக் கொண்டிருந்த மண்ணைப் போக்குவதற்கு வாயினால் ஊதினார்.

அதைக்கண்ட மாட்டுக்காரச் சிறுவன், ''பாட்டி! பழம் மிகவும் சுடுகின்றதா? நன்றாக ஊதி ஆறிய பிறகு உண்க!" என்று கூறிய வண்ணம் சிரித்தான். அச்சிறுவனின் மதி நுட்பத்தை வியந்த ஔவையார், தன் அறிவின் சிறுமையை எண்ணிக் கண்கலங்கினார்.

"கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி
இருங்கதலித் துண்டுக்கு நாணும் - பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்ற
தீரிரவு துஞ்சாதென் கண்"

என்று கூறி வருந்தினார்.

முருகப்பெருமான் இத்திருவிளையாடல் மூலம் ஒரு தத்துவத்தை உலகுக்கு உணர்த்தியருளினார். அஃதாவது, உலகில் உள்ள உயிர்களெல்லாம் உலகப்பற்று என்னும் மண்ணால் ஒட்டப்பட்டிருக்கின்றன. அந்த மண்ணைப் போக்க வெறும் கல்வியறிவு மட்டும் போதாது. இறைவனை உணரும் மெய்யறிவு தேவை. மெய்யறிவு ஒன்றினாலேயே பற்று என்னும் மண்ணை அகற்ற முடியும். மெய்யறிவினால் பற்று என்னும் மண்ணை அகற்றுதல் வேண்டும் என்பதாகும்.

மெய்யறிவால் உணர்ந்து, எம்பெருமான் முருகனின் இருதாளைப் போற்றி வணங்கும் அடியவர்களின் இடர்களைவோன் முருகன் என்பதனை அருணகிரிநாதர்,

"பாடன் முக்ய மாது தமீழ் தழீழிறை
மாமுநிக்கு காதி லுணர் லுணர்விடு" எனவும்,

"அறவிா லறிந்துண் இருதா ளிறைஞ்சும்
அடியார் இடைஞ்சல் களைவோனே" - திருப்புகழ்

எனப் போற்றிப் பாடி உணர்த்துகின்றார்.

அடியார் இடர் களையும் அருள் வள்ளலாகிய முருகன், களைப்பால்

*வருந்திய ஔவைக்கு இடர்களைந்து அருள்புரிய வேண்டியே, மாட்டுக்கார சிறுவனாகத் தோன்றித் திருவிளையாடல் புரிந்தருளினார். இன்றும் அம்மரத்தின் தொடர்ச்சி மரமாக திருக்கோவிலின் வலப்புரத்தில் அந்த நாவல் மரம் தல விருட்சமாகவும் மரத்தின் அடியில், நாவல் மரத்தடி விநாயகரும் காட்சி தருகின்றனர்.*

*இந்த மரம் ஏனைய மரங்கள் பழுக்கும் காலத்தில் பழம் பழுக்காமல், (மற்ற மரங்கள் ஆடி, ஆவணி மாதத்தில் பழம் பழுக்கும்).*

*ஆண்டுதோறும் முருகப்பெருமானுக்கு கந்த ஷஷ்டி திருவிழா மாதமாகிய ஐப்பசித் திங்களில் தான் இந்த மரம் நாவல் பழம் பழுக்கும். இவ்வதிசயத்தை நாம் இன்றும் காணலாம்.*

*முருகப்பெருமான், ஔவைக்கு உதிர்த்த பழம் வடிவில் நாவற்பழமேயாயினும், உண்மையில் அது ஞானப்பழமாகும். முருகனே ஒரு ஞானப்பழம். ஞானப்பழமான முருகன் இவ்வாறு நாவற்பழங்களை உதிர்த்தால் இத்தலம் பழமுதிர்ச்சோலை என்று பெயர் வழங்கப்பட்டு வருகிறது.*

*இந்தப் பழமுதிர்ச்சோலைப் பகுதியில் கருணை வடிவாயுள்ள முருகனைக் கண்டு கரங்குவித்து வணங்கி வழிபட்டால் ஞானமும் கல்வியும் பெற்று நல்வாழ்வினைக் கொள்ளலாம்.*

### ***விசேட தீர்த்தங்கள்***

**சோலைமலை மலைமீது சுமார் அரை (1/2) கி.மீ. தூரத்தில்**
**சிலம்பாறு என்று வழங்கப்படுகின்ற 'நூபுர கங்கை' தீர்த்தம் உள்ளது.**

***அருணகிரிநாதப் பெருமான் சோலைமலைத் திருப்புகழில்,***

**'ஆயிர முகங்கள் கொண்ட நூபுர மிரங்கு கங்கை'**

***என்று மிகவும் பெருமை பொருந்தி நூபுர கங்கையை வர்ணிக்கிறார். இது சிலம்பாறு எனப்படும்.***

**'ஆமாநல் ஏறுசிலைப்பச் சேண் நின்று**
**இழுமென இழிதரும் அருவிப்**
**பழமுதிர்ச் சோலை மலை கிழவோனே"**

***என்று திருமுருகாற்றுப்படையில் நக்கீரரும் விளக்குகின்றார்.***

மேலும், சோலைமலை பெருமானின் அருட்பார்வைக்கு நேர் எதிரே மலைமீது சுமார் அரை கி.மீ. உயரத்தில் ஒரு ஊற்று உள்ளது. அதிலிருந்து தான் தினசரி முருகப் பெருமான் அபிஷேகம், பூஜைகளுக்கு தீர்த்தம் குழாய் மூலமாக எடுக்கப்பட்டு உபயோகப்படுத்தப்படுகின்றது. இதற்குப் பெயர் முருக தீர்த்தம் என்பதாகும். இந்த ஊற்றின் அடியில் உள்ள மண் திருநீறைப் போன்று வெண்மையாக இருக்கும். இன்றும் அதை நாம் அறியலாம்.

நூபுரகங்கைத் தீர்த்தம், முருகன் திருக்கோயிலுக்கு அருகில் உள்ள மாதவி மண்டபத்தில் கோமுகியின் வழியாக விழுகின்றது. இத்தீர்த்தத்தில் இரும்புச் சத்தும், தாமிரச்சத்தும் நிறைந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. அதனால் இந்தத் தீர்த்தம் பல வகையான நோய்களையும் குணப்படுத்த வல்லதாயுள்ளது.

நூபுர கங்கையில் நீராடி, நீலமயில் வாகனப் பெருமானின் திருவடி போற்றி வணங்கி, திருவருள் நலம் பெற்று இன்புற்று வாழ்வோமாக.

அறுபடைவீடு கொண்ட ஆறுமுகப்பெருமான் ஈசருடன் ஞானமொழி பேசிய பிரணவ சொரூபியாகவும், சக்திவேல் தாங்கி வானவர்களைக் காத்தருளிய வீரவேலராகவும், தேவகுஞ்சரியை மணம் புணர்ந்து மணப்பேரரழகராகவும், வள்ளி நாயகியை கரம் பிடித்த கண்கண்ட கலியுகவரதராகவும், வள்ளல்களுள் தலையா ஞான வள்ளலாகவும், வாழவைக்கும் தமிழ் கருணைத் தெய்வமாகவும் ஆறுபடை வீடுகளில் கோயில் கொண்டு எழுந்தருளி, அன்பர்களையெல்லாம், அகிலத்தையெல்லாம் தம் பெருங்கருணைத் திறத்தால் காத்தருள்கின்றார்.

# திருமுருகாற்றுப்படை பாராயணப்பயன்

## தச வெண்பாக்களின் உரை

– கி.வா. ஜகன்னாதன்

*எந்தக் கடவுளுடைய துதியாக இருந்தாலும் அதற்கு ஒரு பயனைச் சொல்வது மரபு. வடமொழியில் அதைப் பலசுருதி என்று சொல்வார்கள். தமிழில் சில துதி நூல்களுக்குப் பயன் கூறப்பட்டிருக்கும். திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளிய தேவாரப் பதிகங்களில் ஒவ்வொன்றுக்கும் பயன் உண்டு. பதிகத்தின் இறுதிப் பாட்டாகிய திருக்கடைக்காப்பில், இதனை, 'ஓதுவார் இன்ன பயனைப் பெறுவார்' என்று சம்பந்தப் பெருமானே பாடியுள்ளார்.*

"அருநெறியமறை வல்ல முனியகன்
பொய்கை யலர்மேய
பெருநெறியபிர மாபுர மேவிய
பெம்மா னிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர் ஞானசம்
பந்த னுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை
தீர்தல் எளிதாமே"

*என்பது போல வரும் திருக்கடைக்காப்புப் பாசுரங்களைப் பார்த்தால் இது விளங்கும். எல்லா நூல்களிலும் பயன் கூறும் பாடல்கள் இல்லாவிட்டாலும் சிலவற்றில் இருக்கின்றன.*

*நூல்களைப் பாராயணம் செய்யும் அன்பர்கள் இறுதியில் பயனைச் சொல்வது ஒரு பழக்கம். திருமுருகாற்றுப்படை இந்த நாட்டில் பல காலமாகப் பாராயண நூலாக இருந்து வருகிறது. அதைப் பாராயணம் செய்த அன்பர்கள் அதற்குப் பயனாகச் சில கவிகள் இருந்தால் நலமாக இருக்கும் என்று எண்ணினார்கள். பக்தி கனிந்த உள்ளமுடைய புலவர் ஒருவர் சில வெண்பாக்களை இயற்றிப் பலருக்கும் கூறினார். பிறகு எல்லாரும் திருமுருகாற்றுப்படையை பாராயணம் செய்து முடித்தவுடன் அந்த வெண்பாக்களையும் சேர்த்து ஓதும் வழக்கம் வந்தது.*

### புராணக் கதை

*இந்தப் பாடல்களை நக்கீரரே பாடினாரென்றும் அவ்வாறு பாடுவதற்கு*

*ஒரு காரணம் உண்டென்றும் பழைய திருவிளையாடற் புராணத்தில் உள்ள வரலாறு கூறுகிறது. திருமுருகாற்றுப்படையை, "பழமுதிர்சோலை மலைகிழ வோனே" என்று நக்கீரர் பாடி முடித்தவுடன் முருகன் தோன்றிப் பூதத்தை வேலால் சங்காரம் செய்து நக்கீரர் முதலியோரை விடுதலை செய்தான். பிறகு, "நம்மைக் கிழவன் என்று கூறினையே!" என்று சொல்லி மறைந்தானாம். உடனே நக்கீரர், "குன்றம் எறிந்தாய்" என்று பாடத் தொடங்கி, என்றும் இளையாய் அழகியாய்" என்று பாடினார். உடனே முருகன் அநுக்கிரகம் செய்து, "இந்த நூலை யார் பாராயணம் செய்கிறார்களோ அவர்களுக்கு வேண்டிய வரங்களை வழங்குவோம்" என்று அருள, நக்கீரர் மீண்டும் மதுரையை அடைந்தாராம். இந்தச் செய்தியைக் கூறும் பாடல்கள் பின்வருமாறு :*

"உயர்வற உலகம் உவப்பஎன் றெடுத்தாங்
கொண்டமிழ்த் தண்டலம் உவப்ப
வியனுற உரைப்பக் கேட்டலும் அடைந்து
வெற்பகம் திறக்கவேல் விட்டு
நயனொடும் எடுத்து வினைகள்தீர்த் தருளும்
நன்சுனை காட்டிநீ ராட்டி
அயிலுடை நம்மைக் கிழவனென் றனையென்
றாலயத் தடைந்தனன் காண"

"இனிதொர்கவி குன்றமெறிந் தாயெ னப்பின்
என்றும் இளை யாய்அழகி யாய்என் னுங்கால்
மனமகிழந்தீ தியார்பகர்வார் அவர்க்கு வேண்டும்
வரங்கொடுப்போம் மதுரையிற்போ கென்னப் போந்து
கனமலிசங் கத்துரைப்பக் கேட்டி யாரும்
களிகூர்ந்தார் தமிழ்முருகன் அருளை வாழ்த்திப்
பனுவல் திரு முருகாற்றுப் படையென் றோங்கிற்
றென நயந்து"

*இவ்வாறு பழைய திருவிளையாடற் புராணம் திருமுருகாற்றுப்படை தோன்றிய வரலாற்றை வேறுபடக் கூறும்.*

*"பழமுதிர்ச்சோலை மலைகிழவோனே" என்ற திருமுருகாற்றுப்படை முடிகிறது. அங்குள்ள 'கிழவோனே' என்னும் சொல்லை எண்ணியே இந்த வரலாறு எழுந்திருக்க வேண்டும். இடையிலும், "விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ" என்று ஓரடி வருகிறது.*

*கிழவன் என்ற சொல்லுக்கு முதியவன் என்ற பொருள் பழங்காலத்தில் இல்லை. அது பிற்காலத்தில் தோன்றியது. தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் அச்சொல் உரிமையுடையவன் என்ற பொருளில்தான் வருகிறது. கிழமை - உரிமை, நட்பு. காதலுடைய கணவனைக் கிழவன் என்று கூறுவர். இதை முன்பும் பார்த்தோம்.*

*பிற்காலத்தில் கிழவன், கிழவி என்னும் சொற்கள் முதுமையையுடையவர் களைக் குறிக்கும் சொற்களாகவும் வழங்கத் தொடங்கின. பழைய திருவிளை யாடலைப் பாடியவர் காலத்தில் அந்தப் பொருள் வந்துவிட்டது. அதனால் இந்த வரலாற்றை அமைத்தார். சில திருவிளையாடற் புராணப் பிரதிகளில் இந்தப் பாடல்கள் இல்லை என்று அதனைப் பதிப்பித்த டாக்டர் ஐயரவர்கள் எழுதியிருக்கிறார்கள்.*

*அருணகிரிநாதர் காலத்துக்கு முன்பே கிழவன் என்பதற்கு முதியவன் என்று பொருள் வந்துவிட்டது. ஆதலின் 'இளங் குழந்தையாகிய முருகனைக் கிழவனென்று கூறுகிறதே உலகம்' என்று நயமாக ஒரு பாடலைக் கந்தர் அலங்காரத்தில் அவர் பாடியிருக்கிறார். அதை முன்பு பார்த்தோம்.*

*"குன்றம் எறிந்தாய்" என்று தொடங்கும் வெண்பா முதலாகப் பத்து வெண்பாக்கள் திருமுருகாற்றுப்படைக்குப் பின்னே காணப்படுகின்றன. பத்துப் பாட்டைப் பதிப்பித்த ஐயரவர்கள் இந்த வெண்பாக்களையும் பதிப்பித்துள்ளார்கள். அங்கே அவர்கள் எழுதியுள்ள குறிப்பு ஒன்று உண்டு. 'அடியில் உள்ள பாடல்கள், பத்துப் பாட்டும் சேர்ந்துள்ள பழைய ஏட்டுப் பிரதிகளில் இல்லாமல் திருமுருகாற்றுப்படை மட்டும் உள்ள புதிய ஏட்டுப் பிரதிகளிலும் அச்சுப் பிரதிகளிலும் இருந்தமையால் தனியே பதிப்பிக்கப் பெற்றன' என்பது அது.*

*ஆகவே, இந்தப் பாடல்கள் பழைய பிரதிகளில் இல்லையென்று தெரிய வருகிறது. அதனாலும் இவற்றின் நடை, உள்ளுறை ஆகியவற்றாலும் இவை பிற்காலத்தில் எழுந்தவை என்பது தெளிவாகும்.*

*இவை காலத்தினால் பிற்பட்டவை என்பதனால் இவற்றின் மதிப்புக் குறையாது. பக்திச்சுவை செறிந்த பாடல்கள் இவை; கேட்பவர்களின் மனத்தை உருக்கும் வகையில் அமைந்தவை. ஆதலின் இவற்றைத்*

*திருமுருகாற்றுப்படையோடு சேர்த்துப் படிப்பதனாலும் பாராயணம் செய்வதனாலும் நன்மை உண்டாகும். இவ்வாறு மூலநூல் செய்த ஆசிரியர் வேறாகவும், பயன் கூறும் ஆசிரியர் வேறாகவும் இருப்பது புதிதன்று.*

*இந்தப் பத்துப் பாடல்களில் முருகனை முன்னிலைப்படுத்தியும் படர்க்கையாக வைத்தும் பாடும் பாடல்கள் இருக்கின்றன. 9ஆவது வெண்பா திருமுருகாற்றுப்படையைப் 'பூசையாகக் கொண்டே புக'லும்படியும், 10-ஆம் பாடல் இதனை ஓதினால் பயனையும் கூறுகின்றன.*

**1**

**உள்ளத்தில் உறை**

*இனி அந்த வெண்பாக்களைப் பார்க்கலாம்.*

குன்றம் எறிந்தாய்! குரைகடலில் சூர்தடிந்தாய்!
புன்தலைய பூதப் பொருபடையாய்! – என்றும்
இளையாய்! அழகியாய்! ஏறூர்ந்தான் ஏறே!
உளையாய் என உள்ளத் துறை.

*(கிரவுஞ்ச மலையை வேலை வீசி எறிந்து அழித்தவனே, ஒலிக்கின்ற கடலிலே புகுந்து மறைந்த சூரபதுமனைக் கொன்றவனே, சிவந்த தலையையுடைய பூதங்கள் நிறைந்த, போர் செய்யும் படைகளை உடையவனே, என்றும் மாறாத, இளமையை யுடையவனே, என்றும் மாறாத அழகையுடையவனே, இடப வாகனத்தில் ஊரும் சிவபெருமானுக்கு ஆண் சிங்கம் போன்ற மைந்தனே, நீ என்றும் என் மனத்தே இருக்கும் துணையாக எழுந்தருளுவாயாக.*

*எறிதல் - அழித்தல். சூர் - சூரன். புன்தலை - செம்மயிரையுடைய தலை. என்றும் என்பதை அழகியாய் என்பனோடும் கூட்டிப் பொருள் செய்க. உளை - உள்ளாய்; தலையாய் உள்ளாயாகி. உறை - தங்குவாயாக)*

*முருகனுடைய வீரத்தையும் அழகையும் பாராட்டும் பாடல் இது. 'குன்றமெறிந்த குமரவேள்' என்று குறிப்பிடுவது பண்டையாசிரியர் வழக்கம். அவன் கிரவுஞ்சாசுரனை வேலாற் பொடியாக்கிப் பிறகு கடலில் மாமரமாக மறைந்து நின்ற சூரனைக் கொன்றான். ஒரே சமயத்தில் குன்றத்தையும்*

சூரனையும் முருகனுடைய வேல் பிளந்தது என்று ஒரு வழக்கு உண்டு.

முருகன் பூதப்படையை உடையவன். அருணகிரிநாதர் பூத வேதாள வகுப்பில் அதைச் சொல்கிறார். சிவபிரான் பூதப்படையை உடையவன்; "பூதஞ்சூழப் பொலிய வருவார்" என்பது தேவாரம். முருகனும் அவ்வாறே பூதங்களால் சூழப் பெற்றவன்.

முருகன் என்ற பெயரே அழகும் இளமையும் உடையவன் என்ற பொருளையுடையது. அவனுடைய இளமையும் அழகும் என்றும் அழியாதவை. ''என்று மகலாத இளமைக்கார'' என்று அருணகிரிநாதர் பாடுவார். அப்ராக்ருதமான சௌந்தர்யமாதலின் அது என்றும் அழியாததாயிற்று.

சிவபெருமான் ஏற்றின்மேல் ஊர்ந்து வருகிறான். அவனுடைய மைந்தன் முருகன். சிங்கக் குட்டி போன்ற மைந்தன் ஆதலால் 'ஏறூர்ந்தான் ஏறே' என்றார்.

பக்தியினால் முருகனைத் தியானிப்பவர்கள் யாவரும் அவனுடைய திருவுருவ தரிசனம் பெறுவதில்லை. அவனே அருள் கொண்டு தன் உருவைக் காட்டினால் காணலாம். "காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே" என்பது அப்பர் திருவாக்கு. அவன் அப்படிக் காட்டும்போது மின்னற்கீற்று அடித்தது போலத் தோன்றி மறைந்தால் பயன் இல்லை; என்றும் உள்ளமே கோயிலாகக் கொண்டு தங்கிவிட வேண்டும்.

சில செல்வர்கள் பல இடங்களுக்குப் போவார்கள். அப்படிப் போகின்ற இடங்களில் மாளிகைகள் இருக்கும். அங்கெல்லாம் அவர்கள் வருவார்கள், தங்குவார்கள், போய்விடுவார்கள். ஆனால் அவர்கள் நிரந்தரமாகத் தங்கியிருக்கும் மாளிகை அவர் சொந்த ஊரில் இருக்கும். 'என் உள்ளத்தைச் சில காலம் தங்கும் இடமாகக் கொள்ளாமல், எப்போதும் இங்கே இருக்கிறவன் என்று சொல்லும்படி தங்கியிருக்க வேண்டும்' என்று வேண்டிக் கொள்ளுகிறார். 'இங்கேயே இருக்கிறவன் நீ என்று சொல்வதற்கேற்றவனாய் என் உள்ளத்திலே உறைய வேண்டும்' என்கிறார். உளையாய் - உள்ளாயாகி.

என்றும் இளமையும் அழகும் வீரமும் கொண்டவனாக முருகன் திருக்கோலம் கொண்டதே அன்பர்களின் மனதில் தியான மூர்த்தியாக உறையத்தான். ஆகவே அவனுடைய திருக்கோலத்தை எண்ணி, என் உள்ளத்தில் உறை என்றார்.

## 2

## வீரன் கைவேல்

*என்றும் இளையபிரானை நோக்கி, "என் உள்ளத்தில் எழுந்தருளியிருக்க வேண்டும்" என்று வேண்டிய அன்பர், மேலே முருகன் திருக்கையில் உள்ள வேலாயுதத்தைப் பற்றிச் சொல்ல வருகிறார். மூன்று வெண்பாக்களில் வேலைப் பற்றியே கூறுகிறார்.*

*முருகன் வேற்படையை எறிந்தே தான் ஆற்றிய வீரச் செயல்களில் பெரும்பாலானவற்றைப் புரிந்தான். அவன் கிரவுஞ்ச மலையைப் பொடிப் பொடியாக்கினான். அவனுடைய திருக்கை வேலே அந்தக் காரியத்தைச் செய்தது. மாயையின் மகனாகிய சூரனையும் அவனுடன் சேர்ந்திருந்த அசுரர்களையும் வலி குன்றும்படி போரிட்டதும் அந்தத் திருக்கை வேல்தான். அறியாமை அல்லது அஞ்ஞான மயமாக நின்றவர்கள் அசுரர்கள். வேலோ ஞான சக்தி. அஞ்ஞான சக்தியை அழிப்பதற்கு ஞான சக்திக்குத்தான் வலிமை இருக்கிறது. ஆதலின் அஞ்ஞானப் பரப்பாகிய அசுரர்களோடு செய்த போரில் வேல் அவர்களை அடியோடு அழித்து வெற்றியுடன் விளங்கியது.*

*சூர சங்காரம் நடந்தது மிகப் பழைய காலம். அந்தப் பண்டைக் காலத்தில் வீரச் செயல்களை ஆற்றிய வேல், தன்னுடைய ஆற்றலால் அமரர்களுக்கு வந்த இடர்களையெல்லாம் களைந்தது. தங்கள் நாட்டையும் வீட்டையும் பதவியையும் இழந்து, அசுரேந்திரனாகிய சூரனுக்கும் அவனுடைய ஏவலர்களுக்கும் அஞ்சி நடுங்கினார்கள் தேவர்கள். அசுரர்களால் அவர்கள் பட்ட இன்னல் கொஞ்சம் நஞ்சம் அல்ல. முருகனுடைய வேல் அசுரர்களைக் கட்டழித்ததனால் அமரர்களின் இடர்கள் தீர்ந்தன.*

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர் இடர் தீர்த்ததுவும்..... வேல்.

*இது பழைய கதை. ஆனால் இந்த வேல் இன்றும் தொழிற்படுகிறது; பக்தர்களுக்குப் பாதுகாப்பாக நின்று உதவுகிறது.*

*"துதிக்கும்படி யவர்க்கொருவர் கெடுக்க இடர் நினைக்கின் அவர்*
*குலத்தைமுதல் அறக்களையும் எனக்கொர்துணை யாகும்"*

என்று அருணகிரியார் வேலைப் பாராட்டுவார். அடியார்களுக்கு வேல் துணையாக விளங்குவது.

> "தனித்துவழி நடக்குமென திடத்துமொரு வலத்துமிரு
> புறத்துமரு கடுத்திரவு பகல்துணைய தாகும்"

என்பதும் அருணகிரியார் வாக்கு. அன்பர்களை விட்டு நீங்காமல் உடனிருந்து துணை செய்வது வேல்.

நக்கீரர் முதலிய ஆயிரம் பேரைக் குகையில் அடைத்து வைத்தது கற்கிமுகி என்ற பூதம். நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடியவுடன் முருகன் வேலாயுதத்தை ஏவினான். அது பூதத்தைக் கொன்று குகையை இடித்து அதில் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை வழங்கிக் காப்பாற்றியது.

"பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்குமொரு கவிப்புலவன் இசைக்குருகி வரைக்குகையை இடித்துவழி காணும்" என்பது வேல் வகுப்பு.

> ............................................ இன்று என்னைக்
> கைவிடா நின்றதுவும் கற்பொதும்பிற் காத்ததுவும்
> .................................................... வேல்.

முருகன் பெருவீரன் அவன் கையில் இருப்பதனால் தான் வேலுக்கு இத்தனை பெருமை உண்டாயிற்று. படைக்கலம் சிறந்ததாக இருந்தால் போதாது. அதை ஏந்துகிறவர்கள் விறலுடையவர்களாக இருக்க வேண்டும்.

> "வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு"

என்று கேட்கிறார் திருவள்ளுவர். வல்லனாக இருந்தால் அவன் கையில் எந்த ஆயுதம் அகப்பட்டாலும் அது சிறப்படையும். "வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்பது அதைத்தானே சொல்கிறது? வீரனாகிய முருகன் கையில் இருப்பதனால் வேலுக்குப் பெருமை உண்டாயிற்று முருகன் சத்தியமே வடிவானவன் சத்தியம் அவனை விட்டு நீங்காது. அவன் விடும் வேல் உறுதியாகப் போய் வைரிகளை அழிக்கும்.

> மெய்விடா வீரன்கை வேல்

*இப்படிப் பழைய கதையையும் புதிய கதையையும் இணைத்து வேலின் பெருமையைப் புலப்படுத்துகிறார் புலவர்.*

குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங்கு அமரர்இடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

*(கிரவுஞ்சமென்னும் மலையை எறிந்து அழித்ததும், அசுரர்களின் வலிமையெல்லாம் குறைந்து அழியப் போர் செய்ததும், அந்தப் பழங்காலத்தில் தேவர்களுடைய இன்னல்களைப் போக்கியதும், இன்றைக்கு என்னைக் கைவிடாமல் பாதுகாத்து நின்றதும், மலைக் குகையில் நக்கீரர் முதலியவர்களைக் காத்ததும், மெய்யை அகன்று நில்லாத வீரனாகிய முருகனுடைய திருக்கரத்தில் உள்ள வேல்.*

*குன்றம் - கிரவுஞ்சமலை. அன்று; பண்டறி சுட்டு, கைவிடாது என்பது விகாரமாயிற்று. பொதும்பு - குகை)*

## 3
## கொற்ற வேல்

*இன்னும் அந்த வேல் எத்தகையது?*

*அது வீரத்துக்கு இருப்பிடமான ஆயுதம்; வீரர்கள் சிறப்பாகக் கைக்கொள்ளும் படைக்கலம்; வீரத்துக்கே அறிகுறியானது. படைக்கலன்களில் சிறந்தவை வில், வாள், வேல் என்பவை. அந்த மூன்றிலும் சிறந்தது வேல்.*

*வேலின் நுனியில் இலை இருக்கும். அதற்கு நீண்ட காம்பு இருக்கும். ஆகவே அது நெடுவேல்; தாரைவேல்.*

*சூரன் தேவர்களைச் சிறையில் இட்டான் அவனையும் அவனுடன் துணையாக நின்ற அசுரர்களையும் அழித்துத் தேவர்களை மீட்ட அருஞ்செயலைச் செய்தது அந்த வேல்.*

*முருகன் செவ்வண்ண முடையவன். வேள் என்னும் பெயர் மாரனுக்கும்*

குமாரனுக்கும் பொதுவான பெயர். மாரனுடைய நிறம் கருமை; அவன் கருவேள். குமாரன் செந்நிறம் படைத்தவன்; அவன் செவ்வேள். அவனுடைய திருக்கரத்தில் உள்ள அழகிய வேல் இது.

சூரபதுமன் கடலிலே மறைந்து போனான். அப்போது அந்தக் கடலில் வேலை விடுத்தான் முருகன். கடல் நீரைச் சுவறச் செய்துவிட்டது வேல். சூரன் தோன்றினான். முதலில் கடல் நீரிலே குளித்து நின்றது அவ்வேல். வேல் சென்ற இடமெல்லாம் வெற்றியை நிலைநாட்டும்; ஆதலின் வெற்றிவேல் என்றே அதை வழங்குவர்.

வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல், செவ்வேள் திருக்கைவேல் – வாரி
குளித்தவேல், கொற்றவேல்,

பழைய காலத்தில் வழங்கிய கதை ஒன்று உண்டு. சூரன் தனக்கு அரணாக ஒருமலையை மேற்கொண்டு அதனுள்ளே புகுந்து எங்கும் திரிந்தான் என்றும், முருகன் தன் வேலை வீசிக் குன்றும் சூரன் மார்பும் ஒருங்கே ஊடுருவும்படி துளைக்கச் செய்தான் என்றும் அந்தக் கதையிலிருந்து தெரிய வருகிறது.

“.................................................................... கார்வந்து
உறங்குசிகைப் பொருப்பும்சூர் உரப் பொருப்பும்
பிளப்ப..........................................................................................
மறங்குலவு வேல்எடுத்த குமரவேள்”

என்பது திருவிளையாடற் புராணம், கிரவுஞ்சமாகிய மலையையும் சூரனுடைய மார்பாகிய மலையையும் ஒருங்கே பிளந்தது வேல் என்ற கருத்தை இதிற் காணலாம். ‘சூரமார்பும் குன்றும் துளைத்த வேல்’ அது இத்தகைய சிறப்புடைய வேல் நமக்குத் துணையாக இருக்கிறது இனி நமக்குப் பயம் ஏது?

வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல், செவ்வேள் திருக்கைவேல் – வாரி
குளித்தவேல், கொற்றவேல், சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை,

(வீரத்தையுடைய வேல், நீட்சியையுடைய வேல், தேவர்களின் சிறையை

*மீட்டத் தீரத்தையுடைய வேல், செய்ய நிறமுடைய முருகப் பெருமான் திருக்கரத்தில் உள்ள வேல், கடலில் குளித்துச் சூரனைத் தேடிய வேல், வெற்றி தரும் வேல், சூரனுடைய மார்பையும் கிரவுஞ்ச மலையையும் ஒருங்கே துளைத்த வேல் நமக்குத் துணையாக இருக்கிறது.*

*தாரை - நீட்சி. வாரி - கடல், கொற்றம் - வெற்றி.*

*(வேல் சடமானாலும் வீரம் முதலிய பண்புகளை அதன் மேல் ஏற்றிச் சொன்னது இலக்கணையும்)*

## 4

## இடும்பைக் குன்று

*மனிதனுக்கு ஓயாத கவலை; ஒழியாத துன்பம், அவனுடைய துன்பத்துக்கு ஒரு கணக்குப் போட்டுப் பார்ப்பதென்பது இயலாத காரியம். ஆற்று மணலை எண்ணினாலும் எண்ணலாம் அவனுடைய துன்பத்தை எண்ண முடியாது. அது குவியல் குவியலாக அடர்ந்து நிற்கிறது. நாளாக ஆகத் துன்பம் கரைந்து போகும் என்ற எண்ணத்துக்கும் இடம் இல்லை. தீர்க்காத கடன் வட்டியும் முதலுமாக ஏறிக்கொண்டு போகிறது போலத் துன்பம் மலையாக உயர்ந்து அழுத்துகிறது.*

*மனிதன் பிறந்து குழந்தையாக விளையாடும்போது துன்பம் அதிகம் இருப்பதில்லை. அவனுக்கு வேண்டியவற்றை அவன் தாய், தந்தையர் அளித்து வளர்க்கிறார்கள். அவனோ, குருவி போல அடுத்த வேளைக்கு இது வேண்டுமே என்ற கவலையே இல்லாமல் விளையாடித் திரிகிறான், குழந்தைகளுக்குப் பொறுப்பு இல்லை; கவலை இல்லை; குறை இல்லை; வஞ்சகம் இல்லை; ஆகவே துன்பம் குறைவு மனிதனுக்கு வயது ஆக ஆக அவனைத் துன்பங்கள் சூழ்ந்து கொள்கின்றன. வரவர அவனுக்குப் பல உறவினர்களும் நண்பர்களும் உண்டாகி விடுகிறார்கள். அதனால் தனக்காக அவன் படும் துன்பங்களோடு அவர்களுக்காக வேறு துன்பங்களை அடைய வேண்டி நேர்கிறது. உடைமைகளைச் சேர்த்துக் கொள்கிறான். அவற்றாலும் துன்பம் மண்டுகிறது. எத்தனைக்கு எத்தனை பிறரோடும் பிற பொருளோடும் தொடர்பு வைத்துக் கொள்கிறானோ, அத்தனைக்கு அத்தனை அவனுக்குத் துன்பங்களே வந்து சூழ்கின்றன. இருக்கும் பொருள்களைக் காப்பாற்ற வேண்டுமே என்ற துன்பம்;*

அவை பழுதுபட்டால் செப்பம் செய்ய வேண்டுமே என்ற கவலை. இல்லாத பொருள்களுக்காக ஏங்கி நிற்பது ஒரு துன்பம்.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

என்பார் திருவள்ளுவர். தொடர்பு அற அறத் துன்பமும் அறும். தொடர்பு மிகுதி ஆக ஆகத் துன்பமும் மிகுதியாகும்.

ஆகவே ஒவ்வொரு நாளும் மனிதனை அழுத்துவதற்குத் துன்பங்கள் வந்து கொண்டே இருக்கின்றன. அவற்றை நீக்க வழி என்ன? மலைபோலத் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு திணறும் அவல நிலையை மாற்ற உபாயம் இல்லையா?

துன்பம் என்பது மனத்தில் உண்டாகும் உணர்வு. இன்பமும் அத்தகையதே. பல பற்றுக்களை உடைய மனம் கவலைக்கு ஆளாவது இயல்பு. அறியாமையினால் இந்தப் பற்று உண்டாகிறது. அறியாமை அல்லது அஞ்ஞானம் ஒழிந்தால் மனத்திலே கவலை நில்லாது.

"இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை"

என்ற நிலை உண்டாகும். அஞ்ஞானத்தைப் போக்கிவிட்டால் கவலை ஒழியும், துன்பம் நீங்குமென்றால் அதைப் போக்கும் வழி யாது என்று ஆராய வேண்டும்.

அஞ்ஞானம் அறியாமை. அதற்கு மாற்று ஞானம் அல்லது அறிவு. மெய்யறிவு தலைப்பட்டால் மனம் தெளிவு பெறும்; பற்றற்று நீங்கும் கவலை ஓயும்; இன்பம் பாயும். இறைவன் திருவருளால் அந்த ஞானம் வர வேண்டும். அது விஞ்ஞானக் குவியலைப் போக்கி விடும் இடும்பை மலையை எரித்துவிடும்.

முருகப் பெருமானுடைய திருக்கையில் இருப்பது வேற்படை, அது ஞானத்தின் திருவுருவம்; ஞானசக்தி; நீண்டு அகன்று கூர்மையாக உள்ள அறிவின் அடையாளம். அசுரர்கள் அவிச்சை அல்லது அறியாமையின் உருவம். அறியாமையை இருள் என்றும் கூறுவர், இருளில் பொருள்களின் வடிவமும் வண்ணமும் தெரியாமல் இருப்பது போல, அறியாமை காரணமாக

*உண்மை புலனாகாமல் இருக்கும். இருளிலே செயல் புரிபவர் அசுரர்கள், நிசாசரர்கள் என்பது அவர்களுக்குப் பெயர். அவர் உடல் கறுப்பு உள்ளம் கறுப்பு; செய்கை கறுப்பு. அவர்களுக்குரிய காலம் ஒளியில்லா இரவு முருகனுடைய வேல் அசுரர்களை மாய்த்தது; இது புறத்தே அமைந்த வீரச் செயல். அறியாமையை அழித்துத் தூய இன்பத்தை நிலை நாட்டும் ஞானமாதலின் ஒளியுடைய வேலாக நிற்கிறது. அதைத் தியானித்தால் நெஞ்சில் இருள் போகும்; கவலை நீங்கும் துன்பம் ஒழியும்.*

*இதைப் புலவர் சொல்ல வருகிறார்.*

*"முருகா, நீ அறியாமையே வடிவான அசுரர்களை சக்தியாகிய வேலாலே பொடிபடுத்தினாய். கொலையேயன்றி வேறு செய்தறியாத ஆயுதத்தைச் சூரன் கையில் வைத்திருந்தான். அவன் படை ஒளியற்றது. அவனை நீ தடிந்தாய். அவன் அகங்கார வடிவாக நின்றவன். அவனுக்குத் துணையாக மமகார வடிவமாக நின்றவன் மலையுருவம் கொண்ட கிரவுஞ்சாசுரன். கிரவுஞ்ச மலையை நீ வேல் கொண்டு பிளந்தாய், அது மாயமான மலை; பெரிய மலை; வன்மையான மலை. அதைப் பொடிபடுத்திய வேல் இப்போது உன் கையில் ஒரு வேலையும் இல்லாமல் இருக்கிறதே! அதற்கு ஒரு சிறு வேலை தருகிறேன். அதை நீ ஏவியருள வேண்டும். தேவர்கள் அஞ்சிய பெரிய மலையைப் பொடி படுத்திய அதற்கு நான் சொல்லும் குன்றை அழித்தல் மிகவும் எளிய செயல். நீ உன் கை வேலை ஏவி இந்தக் குன்றையும் அழிப்பது உன் கருணைக்கு ஏற்ற செயல் எளிய செயல்; எனக்கோ இதனால் பெரிய நன்மை உண்டாகும். அது என்ன குன்று என்றா கேட்கிறாய்? என்னுடைய துன்பமென்னும் குன்றைத்தான் சொல்கிறேன். இதைப் போக்க என்னால் முடியவில்லை. வேறு யாராலும் இதை அழிக்க முடியாது. மலையைப் பொடியாக்கிய உன் கை வேலுக்கே இது தக்க செயல். ஆகவே சூர்தடிந்த கொற்றவனே! கிரவுஞ்ச மலை உருகும்படி நீ விட்ட வேலை என் இடும்பைக் குன்றின்மேல் ஏவுவது மிகவும் பொருத்தமான காரியம். இதைச் செய்தருளி என்னைத் துன்பத்தினின்றும் விடுவித்துப் பாதுகாக்க வேண்டும்".*

*இப்படி வேண்டிக் கொள்கிறார்.*

> இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்குக்
> கொன்னவில்வேல் சூர்தடிந்த கொற்றவா! – முன்னம்

பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

*(கொலையே பயின்ற ஆயுதத்தை உடைய சூரபன்மனைச் சங்காரம் செய்த பெருமானே! முன்பு பனியாலே மூடப் பெற்ற உயர்ந்த கிரவுஞ்ச மலையில் புகுந்து உருவும்படி ஏவிய ஒப்பற்ற வேலை, இன்னும் ஒருமுறை என்னுடைய துன்பமாகிய குன்றை ஒழிப்பதற்கும் விடுவது தக்க செயலாகும்.*

*இடும்பை - துன்பம். கொல் நவில் வேல் - கொலையே பயின்ற வேல், வேல் என்பது இங்கே ஆயுதத்தைக் குறித்தது; வேற்படை என்றும் சொல்லலாம். சூர் - சூரபன்மன். தடிந்த - அழித்த. நெடுங்குன்றம் - உயர்ந்த மலையாகிய கிரவுஞ்சம். தொட்ட - வீசிய. தனி - ஒப்பற்ற. வாங்கத்தகும் - வாங்கினால் அச் செயல் மிகவும் பொருத்தமானதாக இருக்கும். அந்த மலையைப் பிளந்த வேலுக்கு இந்தக் குன்றைப் பிளப்பது ஏற்புடையது என்றபடி).*

*முருகனுடைய திருவருளால் அறிவு பெற்றுத் தெளிவு உண்டானால் கவலையும் துன்பமும் நீங்கும். இருள் நிறைந்த மனத்திலே கப்பிக் கொண்ட துன்பங்களைப் போக்க நம் உள்ளத்தில் அவன் திருக்கை வேலை அவனருளால் தியானம் செய்ய வேண்டும் என்பது கருத்து.*

## 5

## பன்னிருகைப் பெருமாள்

*மனிதன் தன்னுடைய மனக் கவலையைப் போக்கிக் கொள்வதற்கு யார் யாரையோ பின்பற்றி ஏமாந்து போகிறான். தன்னைவிடப் பணக்காரர்களால் தன்னுடைய வறுமை போகும் என்று நம்பி அவர்களை அணுகுகிறான். ஆனால் அவனுடைய எண்ணம் நிறைவேறுவதில்லை. தன்னை விடப் பலம் உடையவர்களால் தன்னுடைய பகையச்சம் தீருமென்று அவர்களை அணுகுகிறான். அவர்களும் அவனுடைய அச்சம் முழுவதையும் போக்கும் வலிமை உடையவர்களாக இருப்பதில்லை. கல்வி நிறைந்தவர்களால் தன்னுடைய அறியாமையைப் போக்கிக் கொள்ளலாம் என்று எண்ணி முயற்சி செய்கிறான். அந்த முயற்சியிலும் முழு வெற்றியை அவன் அடைகிறதில்லை. இது மட்டும் அன்று. ஏதேனும் ஒரு பொருளால் தனக்குக் குறைவு இருப்பதை*

எண்ணி அதை நிறைவு செய்வதற்குத் தன்னைவிட அப்பொருளை மிகுதியாக உடையவனை நாடினால், அவனும் ஒருவகைக் குறைபாடு உடையவனாகவே இருக்கிறான். குறை வில்லாத நிறைவுடையோனாக யாரையும் காண முடியவில்லை. ஒவ்வொருவனும் தன்னுடைய குறையை நிரப்பிக் கொள்வதற்குத் தன்னிலும் சிறந்த ஒருவனை நாடிக் கொண்டே இருக்கிறான்.

குறைவே இல்லாமல் முழு நிறைவுடன் யாரேனும் இருந்தால் அவனால் நமக்கு வேண்டிய எல்லாவற்றையும் நிரப்பிக் கொள்ளலாம். அறிவு, ஆற்றல், செல்வம் என்னும் மூன்றும் மனிதனுக்கு இன்றியமையாத சக்திகளாகும். இந்த மூன்றினால் தனி மனிதனும் சமுதாயமும் வளம் பெற்று வாழலாம். இவற்றை நிறைவாகப் பெற வேண்டுமானால் குறைவிலா நிறைவையுடைய ஒருவனை அணுக வேண்டும். அப்படி யாராவது இருக்கிறார்களா? ஆம், இருக்கிறான்; ஒரே ஒருவன்தான் இருக்கிறான். அவன் தான் இறைவன்.

'குறைவிலா நிறைவே' என்று மாணிக்கவாசகர் இறைவனைக் கூறுகிறார். அவனுடைய திருவருள் இருந்தால் நம்முடைய மனம் நிறைவு பெறும். மனம் நிறைவு பெறுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அதிக ஆசைப்படாமல் இருப்பது. மற்றொன்று இறைவன் திருவருளைப் பெறுதல். மனிதன் தன்னுடைய உள்ளத்தில் ஆசையை வளர்த்துக் கொண்டே வந்தால் அதனை அடக்குவது எளிதன்று. ஆசை என்பது பெரிய தீ. அதற்கு இரை போடப் போட அது மேலும் மேலும் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டேயிருக்கும். ஆதலால் அதைக் கட்டுப்படுத்தி வைக்க வேண்டும். நமக்கு எது இன்றியமையாததோ அதைப் பெறுவதற்கு விரும்புவது தவறு அன்று. அளவுக்கு மிஞ்சிப் பொருளை அவாவினால் அது நிறைவேறாது. இறைவனுடைய திருவருளில் நம்பிக்கை உள்ளவன் தனக்கு வேண்டியதை அளவோடே பெற விரும்புவான். இறைவன் அவனுடைய நியாயமான விருப்பத்தை அறிந்து நிறைவேற்ற முன் வருவான்.

ஆசையை அடக்குதலும் இறைவனிடம் நம்பிக்கை வைத்துப் பக்தி பண்ணுதலும் குறைவிலா நிறைவு அடைவதற்கும், மனக்கவலை போக்குவதற்கும் உரிய வழிகளாகும்.

> "தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக் கவலை மாற்றல் அரிது"

என்பது திருக்குறள்.

*கானல் நீரை நம்புவது போலக் குறையுடைய மனிதர்களை நம்பி வாழ்கிறவர்களுக்கு நிச்சயமாக ஏதேனும் ஒரு சமயத்தில் அவர்களுடைய பலவீனம் புலனாகும். ஆகையால் இறைவனிடம் முழு நம்பிக்கை வைத்து வாழ்வதற்கு முயல வேண்டும். இறைவனே நேரே வந்து நமக்கு உதவி புரிய மாட்டான். அவனுடைய திருவருளால் அவ்வப்போது தக்கவர்களுடைய துணை கிடைக்கும். வீட்டில் உள் மின்சார மூலப் பொத்தானை அமுக்கினால் விளக்குகளும் மற்றவைகளும் இயங்கத் தொடங்கும். அது அதற்கு ஏற்ற பொத்தானையும் அமுக்க வேண்டும். மூலக் கருவியை இயக்க மறந்துவிட்டால் உள்ளே உள்ள எதனையும் பயன்படுத்திக் கொள்ளமுடியாது. இறைவனுடைய திருவருள் மூலக் கருவியைப் போன்றது. மற்ற முயற்சிகள் அங்கங்கே உள்ள பொத்தானை அமிழ்த்துவது போன்றது. இந்த இரண்டுமே மனிதனுடைய முயற்சியைப் பயனுறச் செய்கின்றன. இறைவனுடைய திருவருளில் நம்பிக்கை இல்லாவிட்டால் அவனிடம் மனமாரப் பக்தி செய்ய முடியாது. அவனே எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்வான் என்ற தீவிர நம்பிக்கையுடைய யார் அவனை அணுகுகிறார்களோ அவர்களுக்கு அவனுடைய துணை நிச்சயமாகக் கிடைக்கும்.*

*'நீயால் சரண் ஒன்றில்லை' என்று புகும் அன்பர்களுக்கு இறைவன் தன் கருணையை ஒளிக்கமாட்டான்.*

*இந்த எண்ணங்களை எல்லாம் கொண்ட அன்பர் முருகனிடத்தில் விண்ணப்பித்துக் கொள்கிறார்.*

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்;
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்

*தன்னை நம்பினவர்களுக்கு அருள் செய்து துன்பத்தை நீக்கும் பேராற்றல் உடையவன் முருகன். யாரேனும் ஒருவர் நமக்கு உதவி செய்தால், கைகொடுத்து உதவினான் என்று சொல்கிறோம். ஒருவன் பலத்தினாலும் பிறவற்றாலும் சிறந்து நின்றால், அவன் கை ஓங்கி நிற்கிறது என்று சொல்கிறோம். செயல்களைக் காட்டுவதற்கு கை ஓர் அடையாளம். ஆற்றல் இல்லாதவனைக் 'கையாலாகாதவன்' என்று சொல்லும் வழக்கம் இதனை அறிவிக்கும். நாம் இரண்டு கைகளை உடையவர்களாக இருக்கிறோம். நம்மினும் பல மடங்கு ஆற்றல் பெற்ற தெய்வங்களுக்கு நான்கு கைகள் இருப்பதைப் பார்க்கிறோம்.*

கைகள் ஆற்றலுக்கு அடையாளம். ஆதலின் ஆற்றல் மிக்க தெய்வங்களின் திருவுருவங்களில் அந்தக் கோலத்தைக் காண்கிறோம்.

முருகனோ பன்னிரண்டு திருக்கரங்களை உடையவன். ஆறு திருமுகங்களைப் பெற்றவன் அவன் நான்கு திசைகளையும் மேலும் கீழும் ஆகிய இரண்டையும் சேர்த்தால் ஆறு திசைகளாகின்றன. முருகன் அந்த ஆறு திசைகளிலும் கண் ஓட்டத்தைச் செலுத்தும் ஆறு முகங்களை உடையவன். எங்கே எது நிகழ்ந்தாலும் அவனுடைய கண் பார்வைக்கு அகப்படாமல் இருக்க முடியாது என்பதையே இது காட்டும். அதுபோலவே தன்னுடைய திருவருளில் நம்பிக்கை வைத்துத் தன்னை அண்டுகிறவர்கள் எங்கே இருந்தாலும் அவர்களுக்கு உதவி செய்து கை கொடுக்க அவன் முந்துவான். மற்ற எந்தத் தெய்வத் திருக்கோலத்திலும் இல்லாதபடி பன்னிரண்டு திருக்கரங்களை உடையவன் அவன். அதனால் அவன் ஆற்றல் மிகச் சிறந்தது என்பது தெளிவாகும். அப்படியே பிறருக்கு வழங்கும் வண்மையும் மிகமிகச் சிறப்பானது. ஆகையால் அவனை நம்பினால் எப்படியும் நமக்கு வேண்டியது கிடைக்கும்; இடர் தீரும். அவன் பன்னிருகைக் கோல அப்பன் அல்லவா?

அவன் பேராற்றல் உடையவன் என்பதை அவன் செய்த திருவிளையாடல்களால் உணர்ந்து கொள்ளலாம். எல்லாத் தேவர்களும் தங்களுடைய நிலையை இழந்து துன்புற்று, சிறைப்பட்டு வாடும் நிலை ஒரு சமயம் வந்தது, அறுபத்தாறு கோடி அசுரர்களுக்குத் தலைவனாக, ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கு அரசனாக, வரத்தினால் பெற்ற வலிமையும் படைகளால் பெற்ற பலமும் நிரம்ப உடையவனாக இருந்தான் சூரபன்மன், அவனே வானவர்களின் வளங்களைக் கைப்பற்றிக் கொண்டு கொடுமை செய்தான். முருகன் அவனையும் அவனுடைய படைகளையும் அழித்துத் தேவர்களுக்கு வந்த இன்னல்களைத் தீர்த்தருளினான். தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் நடந்த போரைத் தேவாசுர யுத்தம் என்று சொல்வார்கள். இதிகாசங்களாலும் புராணங்களாலும் அறியும் பெரும் போர்களில் மிகப் பெரிய போராக இருப்பது இந்தத் தேவாசுர யுத்தம். இதனால் துன்புற்ற தேவர்களுக்கு மிகவும் பேராற்றல் உடைய ஒருவனால்தான் நன்மை கிடைக்கும். அதை அருளியவன் பன்னிருகைப் பெருமான். இதுவும் அன்பருக்கு நினைவில் வருகிறது.

**பன்னிருகைக் கோலப்பா!**

*அடுத்தபடி முருகப் பெருமானுடைய திருக்கையில் விளங்கும் வேலின் ஞாபகம் வருகிறது. பேராற்றல் உடைய முருகனுடைய கையில் ஞானசக்தியாகிய வேல் விளங்குகிறது. புறப் பகையாகிய அசுரர்களையும் அகப்பகையாகிய ஆசுர சம்பத்துக்களையும் அடியோடு ஒழிக்கும் கருவியாக நிற்பது முருகன் கைவேல். அவனுடைய பேராற்றலைப் பன்னிரு கைகளும் வேலாயுதமும் நன்கு விளக்குகின்றன. இவற்றை உடையவனை நம்பினால் பிறகு வேறு யாரிடம் செல்ல வேண்டும்? வானோர்களுக்கு உண்டாகிய கொடிய வினையைத் தீர்த்து அருள் செய்த முருகனை நம்பினவர்களுக்கு வேறு ஒருவனிடம் சென்று நிற்க வேண்டிய அவசியமே இராது.*

*இந்தக் கருத்துக்களை எல்லாம் மனத்தில் கொண்ட அன்பர் அவற்றை வைத்துப் பாடுகிறார்.*

**உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிறேன்;**
**பின்னை ஒருவரையான் பின்செல்லேன்; – பன்னிருகைக்**
**கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்**
**வேலப்பா! செந்திவாழ் வே!**

*(உன்னைத் தவிர வேறு யாரையும் எனக்குத் துணையாக நம்ப மாட்டேன்; வேறு ஒருவரை அடியேன் பின்னின்று வழிபட மாட்டேன்; பன்னிரண்டு திருக்கரங்களையுடைய அழகுக் கோலத்தைப் பெற்ற முருகனே, தேவர்களுடைய கொடுமையான பாவத்தைப் போக்கி, அவர்களுக்கு நலம் செய்தருளும் வேலாயுதப் பெருமானே, திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே!)*

*கோல அப்பா என்பது தொகுத்தல் விகாரத்தால் கோலப்பா என்று ஆயிற்று. கொடிய வினை என்பது அவர்கள் பட்ட பரிபவத்துக்கு மூல காரணத்தைச் சொன்னபடி, செந்தி - திருச்செந்தூர்; முருகப் பெருமான் சூரனோடு போர் செய்து வென்ற பிறகு வெற்றி மாலை சூடி அபிசேகம் செய்து கொண்ட இடம் திருச்செந்தூர். அதனால் ஜயந்தி என்ற பெயர் ஏற்பட்டது. ஆகவே செந்தி என்று ஆயிற்று. அது பின்பு செந்தில், செந்தூர் என மருவி வந்தது.*

## 6

## திருநாமப் பயன்

*அடியவர்களுக்கு உதவி செய்வதற்கு முந்துபவன் முருகன், அவன் 'அடியார்க்கு நல்ல பெருமாள்' பக்தருக்கு வாய்த்த பெருமாள். தன் அடியார்கள் வேண்டியவற்றை வேண்டிய போது வேண்டியவாறே நல்குபவன். அவர்களுடைய இன்னலைப் போக்கி நன்னலம் வழங்க அவன் எப்போதும் காத்திருக்கிறான்.*

*அடியவர்கள் முருகனுடைய திருவுருவத்தைத் தியானித்து அவன் திருநாமத்தைச் சொல்லி அவனை வழிபட்டு இன்பம் காணுகிறவர்கள், அவனுடைய திருநாமத்தை இடைவிடாது சொல்கிறவர்கள் இன்பம் வந்தாலும், துன்பம் வந்தாலும் 'முருகா, முருகா!' என்று சொல்கிறவர்கள். வழுக்கி விழுந்தாலும் அவனுடைய திருநாமத்தையே சொல்வார்கள்.*

*"வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்*
*மற்று நான் அறி யேன்மறு மாற்றம்"*

*பன்முறை சொல்வதை ஓதுதல் என்பர். முருகனுடைய திருநாமத்தைப் பலமுறை சொல்வதில் அன்பர்கள் இன்பம் காணுவார்கள். வேதத்தை ஓதுவது போலவும், தோத்திரங்களை ஓதுவது போலவும் அடுத்தடுத்து முருகா, முருகா என்று சொல்லி அதனால் நாவில் தேன் ஊறியது போன்ற இன்பத்தைப் பெறுவார்கள். உள்ளத்தில் முறுகிய அன்பு இருக்குமானால் இறைவனுடைய திருநாமம் சொல்ல சொல்ல இனிக்கும். எந்தச் சொல்லைச் சொன்னால் உள்ளம் குழைகிறதோ அந்தச் சொல்லினால் நாவில் ஓர் இனிமை உண்டாகும்.*

*இனிய உணவு வகைகளைப் பற்றி ஒருவர் பேசிக் கொண்டிருக்கிறார். அப்போது அதைக் கேட்பவர்கள் நாவில் நீர் ஊறும். சொல்பவர்கள் நாவில் நீர் ஊறுவதைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். தின்னும் பண்டங்களில் நமக்கு உள்ள ஆழ்ந்த பற்றே இதற்குக் காரணம். தின்னும் பண்டத்தை உண்ணும்போது நாவில் நீர் ஊர்வது பெரிது அன்று; அதை முன்னாலே காணும்போது ஊறுவதும் வியப்பு அன்று; அதன் பெயரைக் கேட்டாலும் சொன்னாலும் நீர் ஊறுகிறதே. அது வியப்பு அல்லவா? ஆனால் அது*

வியப்பாக நமக்குத் தோன்றவில்லை. பலகாலும் பழகிவிட்டமையால் அதில் புதுமை இல்லை.

ஆனால், அன்பர் முருகா என்று சொல்லும்போது அவர் வாய் இனிக்கும் என்பதை நம்மால் நம்ப முடியவில்லை. அந்தத் துறையில் முறுகிய பழக்கம் இருந்தால் இதை அநுபவத்தில் உணரலாம்.

இறைவனுடைய திருநாமத்தை அடிக்கடி சொல்வதனால் அன்பர்கள் புதிய சக்தியைப் பெறுகிறார்கள். இறைவனுக்குத் திருவுருவம், திருநாமம் என்னும் இரண்டும் இருக்கின்றன. மனத்தை உடைய மக்களின்பொருட்டே அவன் அவற்றை உடையவனாக இருக்கிறான். குணம் குறி கடந்தவனாக, ஒரு நாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாதவனாக இருப்பினும் அன்பர்கள் தியானித்தும் வாழ்த்தியும் தன்னை அணுகும் பொருட்டு வடிவமும் நாமமும் உடையவனாக வருகிறான். அவனுடைய திருவுருவத்தை எல்லோரும் எப்போதும் காணமுடியாது. நாம் வழிபடும் விக்கிரகங்கள் அவனுடைய தேசுத் திருவுருவத்தை நினைப்பூட்டும் அடையாளங்கள். அவற்றையே நாம் வேண்டிய காலங்களில் வேண்டிய இடங்களில் பார்க்க முடியாது. அப்படிப் பார்த்தாலும் அவை இறைவனுடைய தெய்வீகத் திருவுருவத்தின் பிரதிநிதிகள்.

திருநாமம் அத்தகையதன்று. அது வேறு ஒன்றினுடைய பிரதிநிதி அன்று. எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் முருகா என்ற திருநாமத்தை உச்சரிக்கலாம். அவனுடைய திருநாமத்தின் படமோ, நிழலோ அன்று அது. சாட்சாத் அவனுடைய திருநாமமே அது. ஆகவே இறைவன் திருவுருவத்தைவிட அவன் திருநாமம் நம்மிடம் நேரே வந்து நாவில் நிற்கிறது எந்தச் சமயத்திலும் எந்த இடத்திலும் நாம் அன்புடன் இயம்பும்படி அமைந்திருக்கிறது.

இந்தக் காரணத்தினால் அடியவர்கள் முருக நாமத்தை நாவால் அடிக்கடி உச்சரிக்கிறார்கள். அதில் இன்பம் காண்கிறார்கள். அவர்கள் துன்புற்ற போது முருகா என்றால் ஆறுதல் பிறக்கிறது. இன்புறும்போது முருகா என்றால் அந்த இன்பம் மிகுதியாகிறது. வழி நடக்கும் போது முருகா என்றால் வழித்துணை பெற்றது போன்ற தைரியம் உண்டாகிறது.

முருகா என்று சொல்லிச் சொல்லிப் பழக்கப்பட்டு இன்பம் காணுகிறவர்களுக்கு முருகன் அருள்புரிய முந்துவான். அந்தக் குரல் அன்பருடைய இதயகமலத்திலிருந்து எழுவது என்பதை அவன் நன்கு அறிவான். நுனி நாக்கினால் சம்பிரதாயத்துக்குச் சொல்லி அவனை ஏமாற்ற முடியாது. காணாமல் போன தன் கன்றுக் குட்டியைக் கண்டபோது 'அம்மா' என்று தாய்ப் பசுவின் அடி வயிற்றிலிருந்து வருகிற ஒலிபோல, அன்பர்களின் இதயத்திலிருந்து திருநாம ஒலி எழும்பும், அந்த ஒலியில் உள்ள அன்பையும் குழைவையும் உணர்ச்சியையும் முருகன் அறிவான், அவன் அந்த இதயத்தில் கோயில் கொண்டிருக்கிறான் அல்லவா?

திருநாமத்தை அன்பர் கூறும்போது அது பெருமுழக்கமாக இருக்கும் என்பது அன்று. அந்தக் குரலினூடே பக்தி இழையும், ஆர்வம் ததும்பும், இன்ப அனுபவம் ஒலிக்கும். அதை முருகன் உணர்ந்து கொள்வான். இதயம் முழுவதும் மலர்ந்து அன்புத் தேன் பொங்க அதன் தாரையே நாமமாக வரும். ஒரு முறை வந்தாலே முருகன் முன்னே வந்து நின்றுவிடுவான்.

"முருகா எனவோர் தரம்ஓ தடியார்
முடிமேல் இணைதாள் அருள்வோனே!"

என்பது திருப்புகழ். நிரம்பியிருக்கும் ஏரியில் ஒரு கீற்றுக் கீறினால் போதும் வெள்ளம் பாயத் தொடங்கிவிடும். அதுபோல ஒருமுறை திருநாமத்தைச் சொல்லும்போதே உள்ளே பொங்கும் அன்பு வெள்ளம் பாய்ந்து வரும்.

இவ்வாறு திருநாமத்தைத் தேனூற நின்று உச்சரிக்கும் அன்பர்களுக்கு முருகன் எப்படி எப்படி நலம் செய்கிறான்? இதைப் பக்தர் ஒரு பாட்டில் சொல்கிறார்.

அத்தகைய அடியவர்களுக்கு ஏதேனும் அச்சம் உண்டானால் முருகன் அவர்கள் ஆறுதல் பெறும்படி தன்னுடைய ஆறுமுகங்களைக் காட்டி அருளுவான். முருகன் அடியார்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள். கோழைகளே சிறியதற்கெல்லாம் அஞ்சுவார்கள். இறைவன்அருள் துணை உண்டு என்ற உறுதியோடு இருப்பவர்கள் எளிதில் அஞ்சுவதில்லை. அவர்கள் அஞ்சும்படி வருவது ஏதும் இந்த உலகில் இல்லை. அவர்கள் வறுமைக்கு அஞ்சமாட்டார்கள். நோய்க்கு அஞ்ச மாட்டார்கள். ஒருகால் அவர்களும் அஞ்சும்படி ஏதேனும் வருமானால் அப்போது முருகன் அவர்கள் அஞ்சும்

முகங்களுக்கு எதிரே ஆறுமுகங்களுடன் தோன்றி இன்னலைப் போக்கி நலம் செய்வான்.

பக்தர்களுக்கு அஞ்சும் துன்பம் ஒன்று உண்டு. அதுதான் மரணம். மிகப் பெரியவர்களெல்லாம் அதற்கு அஞ்சுவார்கள். மனிதனுக்கு உண்டாகும் அச்சங்களில் வேறு யாராலும் மாற்ற முடியாத அச்சம் இறப்பினால் உண்டாகும் அச்சம். எந்த உயிரும் அதற்கு அஞ்சும். அவ்வாறு தன் அடியார்கள் மரண நேரத்தில் அஞ்சு முகம் காட்டினால் முருகன் எழுந்தருளி வந்து தன் ஆறுமுகத்தைக் காட்டி மரண பயத்தைப் போக்கியருளுவான்;

> "எனை நாடிவந்த கோள்என் செயும்
> கொடுங் கூற்றென் செயும்"

என்ற தைரியம் உண்டாகும்படி செய்வான்.

வறுமை, பிணி, பகை முதலியவற்றால் வரும் அச்சங்களைப் போக்கச் செல்வரும், மருத்துவரும், வீரரும் இருக்கிறார்கள். ஆனால் காலனால் வரும் அச்சத்தைப் போக்க இறைவன் ஒருவனால்தான் முடியும். மாற்றரும் கூற்றம் என்று தொல்காப்பியம் சொல்லுகிறது. அந்தக் கொடிய பயத்தை, முருகா என்று ஓதும் அடியவர்களுக்குப் போக்கும் கருணைக் கடல் முருகன்.

> அஞ்சு முகம்தோன்றின் ஆறு முகம்தோன்றும்..........
> முருகாஎன்று ஓதுவார் முன்,

ஆறுமுகம் என்ற தொடரே, கண்டவர்கள் அச்சம் நீங்கி ஆறுதல் பெறுவதற்குக் காரணமான முகம் என்ற பொருளையும் உடையதாக இருக்கிறது. தாயுமானவரும் அஞ்சு முகத்தையும் ஆறுமுகத்தையும் நினைக்கிறார்.

> "அஞ்சுமுகம் காட்டாமல் ஆறுமுகம் காட்டவந்த
> செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்பதெந்நாளோ?"

முருகா என்று ஓதுபவர்கள் வாழ்க்கையில் இடர்ப்பாடுகள் உண்டாகலாம்; மனத்தில் போராட்டம் எழலாம்; உலகத்தில் வளைய வருவதனால் அதன் வாசனை வந்து சூழ்ந்து கொண்டு துன்புறுத்தலாம்; நல்ல எண்ணங்களும் தீய எண்ணங்களும் போராடிக் கொண்டு வாழ்க்கையை அலைக்கழிக்கலாம்.

மனிதர்களுடைய மனமே ஒரு போர்க்களந்தான். தீய எண்ணங்களாகிய ஆசுர சம்பத்துக்களும், நல்ல எண்ணங்களாகிய தேவ சம்பத்துக்களும் இடைவிடாமல் போராடிக் கொண்டே இருக்கின்றன. தீய எண்ணங்களை அடக்கி வென்று நிற்பவன் நற்செயல்களைச் செய்கிறான். அல்லாதவன் தீ நெறியில் செல்கிறான். மனத்தில் நிகழும் இந்தப் போராட்டத்தில் நல்லது வெற்றி பெற வேண்டுமானால் வலிய துணை ஒன்று வேண்டும். துணை வலியினால் போரில் வெல்வது அரசர்களுக்கு வழக்கம். மனிதனும் மனத்தில் நடக்கும் போராட்டத்தில் வெற்றி பெறப் பெருந்துணை ஒன்றை நாட வேண்டும். அப்போதுதான் அமைதி உண்டாகும்.

முருகா என்று ஓதும் அடியார்களுக்கு இத்தகைய போராட்டம் நேராது; நேர்ந்தால் முருகன் வடிவேல் தோன்றிப் போராட்டத்தைப் போக்கும். தேவாசுரர்களிடையே போர் நிகழ்ந்தபோது முருகன் வேலை ஏவி வெற்றி பெற்றான். அது சென்ற இடமெல்லாம் வெற்றியே நிலவும். வேல் ஞான சக்தியாதலின் அறியாமையால் நிகழும் போராட்டங்களில் ஒளியைப் புகுத்தி வெற்றி உண்டாகும்படி அது துணை நிற்கும். பழைய வெம்மையான சமரில் எப்படி வேல் தோன்றி வெற்றியைப் பெறச் செய்ததோ, அப்படியே மனத்தில் நிகழும் வெவ்விய போராட்டங்களிலும் அது தோன்றி அச்சத்தைப் போக்கும்.

வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும்

மற்றவர்களெல்லாம் முருகா என்று சொல்லும்போது அது நா அளவில் நிற்கும். பக்தர்களோ நெஞ்சிலே முருகனை நிறுவி அவன் நாமத்தைச் சொல்கிறார்கள். அவர்கள் பலகாலும் முறையிடும்படி பார்த்துக் கொண்டிருக்க மாட்டான் முருகன். ஒருமுறை நினைத்தாலே தன் இரண்டு திருவடிகளையும் காட்டி இன்னலைப் போக்க முற்படுவான்.

வைணவர்களில் ஒரு சாரார் திருமாலை ஒருமுறைக்கு மேல் வணங்குவதில்லை. ஒரு நமஸ்காரம் செய்த அளவிலே பெருமாள் கடனாளியாகி விடுகிறாராம். உடனே பக்தருடைய செயல்களை நிறைவேற்றப்புகுகிறாராம். அதற்கு மேல் வணங்கினால் திருமால் தலையில் பெரும்பாரத்தை ஏற்றிய அபசாரம் உண்டாகிவிடுமாம். இறைவனுடைய எளிமையையும் பெருங்கருணையையும் நினைப்பூட்டுகிறது இந்த வழக்கம்.

அவ்வாறே தன்னை இடைவிடாது தொடர்ந்து திருநாமத்தைக் கூறி

*அன்பு செய்யும் அடியவர்களுக்குக் குறிப்பறிந்து அருள்புரிய ஓடி வருவான் முருகன். அவர்கள் ஒரு முறை நினைந்துவிட்டால் உடனே வந்து தன் இரண்டு திருவடித் தாமரைகளையும் காட்டுவான். அவன் காட்டுவான் என்று சொல்லாமல் அவைகளே வந்து தோன்றும் என்ற சொல்கிறார் அன்பர். பழகிய வழியில் நாம் நினைக்காமலே நம் கால் போவது போல அவை செல்லுமாம்.*

நெஞ்சில், ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்.

*முருகா என்று ஓதும் அடியவர்களுக்கு அஞ்சுவது இல்லை; மனப் போராட்டம் இல்லை; எப்போதும் முருகன் திருவடித் துணை உண்டு. இதையே பாட்டுச் சொல்கிறது.*

அஞ்சு முகம்தோன்றின் ஆறு முகம்தோன்றும்;
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்; – நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்;
முருகா என்று ஓதுவார் முன்.

*(சமர்-போர். 'வெஞ்ச மரந்தோன்றி வேல் தோன்றும்' என்பதும் ஒரு பாடம்)*

## 7
## நம்பிக்கை

*குடும்பத்துடன் வாழும் மனிதர்களுக்கு ஆண்டவன் குடும்பத்துடன் வாழும் தெய்வமாகத் தோன்றுகிறான். அவரவர்களுடைய மனப் பாங்குக்கு ஏற்பத் தன்னுடைய திருவுருவத்தைக் காட்டும் பேரருளாளன் இறைவன். போலீஸ்காரனுடைய மகனுக்கு, ஆற்றலுள்ள யாருமே போலீஸ்காரராக இருக்க வேண்டுமென்ற ஞாபகம் இருக்கும். அதுபோல் குடும்பத்தில் உழன்று சுழலும் மனிதனுக்கு ஆண்டவனும் அப்படி இருந்தால் தன்னால் அணுகுவதற்கு உரியவனாக இருப்பான் என்ற எண்ணம் உண்டாகும். ஆண்டவனும் அப்படியே ஒரு குடும்பியாகத் தோன்றுகிறான். அது தோற்றம் மாத்திரமேயன்றி உண்மையில் அவன் குடும்பத்தில் அகப்பட்டவன் அல்லன். உலகம் முழுவதும் ஒரு குடும்பம். அதற்குத் தலைவனாக இருப்பவன் முருகன், என்றாலும் அவனுக்கும் தந்தை, தாய், மாமன், மனைவி என்று உறவினர்கள் இருக்கிறார்கள்.*

உலகத்தினருக்கு எல்லாம் துணையாக இருந்து தாங்குகின்ற எம்பெருமானுக்குத் துணை தேவையில்லை. அவனது அருள் ஒன்றே எல்லாவற்றையும் பாதுகாத்து நலம் செய்கிறது. அவன் உருவம் இல்லாதவன்; என்றாலும் மனிதனது உள்ளத்தில் புக உருவத்தோடு வருகிறான். அவன் குணம் இல்லாதவன்; என்றாலும் மக்களுடைய உள்ளத்தில் புகுவதற்குக் குணங்களை உடையவனாகிறான். அவனுடைய புகழைப் பேசுவதற்கும், அவனுடைய திருநாமத்தைச் சொல்வதற்கும் ஏற்ற வகையில் அவனது கதை விரிவாக அமைந்திருக்கிறது; திருநாமங்களும் பல இருக்கின்றன. கதைகளில் சொல்லப்படுகிற வீர விளையாடல்களும், கருணைச் செயல்களும் விரிந்து விரிந்து செல்கின்றன. புராணங்களும், இதிகாசங்களும் இறைவனுடைய புகழைப் பல படியாகப் பாராட்டுகின்றன. அந்த அந்தச் செயல்களை எல்லாம் அவன் செய்தானா என்று ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியம் அன்று.

ஒருவனைப் பற்றிப் பேசுவதானால் அவனைப் பற்றிய செய்திகள் பலவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஒரு செய்தியும் இல்லாமல், ஒரு நாமமும் இல்லாமல், ஒரு குணமும் இல்லாமல் இறைவன் இருந்தால் அவனைப் பற்றிப் பேசவோ, நினைக்கவோ நமக்கு வாய்ப்புக் கிடையாது.

ஒரு சின்ன ஊசியை எடுக்க வேண்டுமானால் ஒரு தனி மனிதன் எளிதில் எடுத்துவிடலாம். ஆனால் அதைப் பல பேர் சேர்ந்து எடுக்க வேண்டுமென்று எண்ணினால் ஒரு பெரிய தென்ன மரத்தில் அந்த ஊசியைச் செருகி எல்லோரும் சேர்ந்து அந்தத் தென்ன மரத்தைத் தூக்கலாம். அப்போது எல்லோரும் அந்த ஊசியைத் தூக்கினவர்கள் ஆவார்கள். பலர் தூக்குவதற்குரிய கனம் இல்லாமல் இருக்கும் ஊசி நீளமும் கனமும் உள்ள தென்ன மரத்தில் சேர்ந்து பலரும் தூக்கும் நிலையில் இருக்கிறது. அதுபோல் குணம், குறி, வாழ்க்கை நிகழ்ச்சிகள் படைத்த மனிதனுக்கு இறைவனைப் பற்றிப் பேசுவதற்கும் பல நேரம் சிந்திப்பதற்கும் உரியனவாகப் பல கதைகள் வேண்டியிருக்கின்றன. பல நிகழ்ச்சிகள் அவசியம் வேண்டுமென்று தோன்றுகிறது. ஆகவே புராணங்களும் இதிகாசங்களும் கூறும் இறைவனைப் பற்றிய கதைகள் எல்லாம் அவனைப் பற்றிச் சிந்திப்பதற்கும், அவனுக்குள்ள குணங்களை எண்ணி எண்ணி இன்புறுவதற்கும், அறத்தின் வழியே வாழ்ந்து மறத்தைப் போக்குவதற்கும் பயன்படுவன.

*முருகன் பல உறவினர்களை உடையவன் என்பதை இந்தப் பக்தர் நினைவுக்குக் கொண்டு வருகிறார். அவன் திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் முருகன். திருச்செந்தூருக்குச் செந்தி என்பது ஒரு பெயர்.*

**முருகனே! செந்தி முதல்வனே!**

*முருகனுக்கு மாமன் மாயோனாகிய திருமால். அருணகிரிநாதப் பெருமான் முருகனைக் குறிப்பிடும் பலவிடங்களில் இன்னாருடைய மருகன் என்பதை மிகச் சிறப்பாகக் கூறுவார். முருகன் பரமேசுவரனுக்கு மகனாக விளங்குகிறான்.*

**மாயோன் மருகனே! ஈசன் மகனே!**

*அவனுக்கு ஓர் அண்ணனும் இருக்கிறான். முகத்திலிருந்து தொங்கும் துதிக்கையைப் பெற்றவன் அவன்; யானை முகன்.*

**ஒருகைமுகன் தம்பியே!**

*குடும்பத்தோடு வாழும் மக்களின் நிலைகளை எல்லாம் தெரிந்து அவர்களுக்கு வாழ வழிவகுத்து முன்னேறச் செய்கிறான் இறைவன். குடும்பத்தில் உழல்கின்றவர்களுக்குத் தங்கள் குடும்பத்தைப் பற்றிய சுகதுக்கங்கள் நன்கு தெரியும். இறைவனும் அவற்றை நன்கு தெரிந்தவனைப் போல விளங்குகிறான்.*

*பலருக்கும் உறவினனாக இருக்கும் முருகப் பெருமான், யார் தன்னை நம்புகிறார்களோ அவர்களுக்கு நலம் செய்வான். இறைவனிடத்தில் ஈடுபாடு என்பது, அவனுடைய திருவருள் நிச்சயமாகக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையின் அடித்தளத்தில் எழுவது. இந்த நம்பிக்கை இல்லாவிட்டால் எத்தனைதான் வழிபாடு நடத்தினாலும் பயன் இராது.*

*"மந்திரமும் தேவும் மருந்தும் குருவருளும்*
*தந்திரமும் ஞானத் தவத்துறையும் - யந்திரமும்*
*மெய்யென்றால் மெய்யாக மேதினியி லேவிளங்கிப்*
*பொய்யென்றால் பொய்யாகிப் போம்"*

*என்பது ஒரு பழம்பாட்டு. பக்திக்கு நம்பிக்கையே அடிப்படையாக இருக்க வேண்டும். மதத்திற்கு நம்பிக்கை என்ற பொருளை உடைய ஃபெயித்* (Faith)

என்ற சொல்லை மேல்நாட்டார் வழங்குகிறார்கள்

அறிவினால் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள முடியாது. சிலவற்றை நம்பித்தான் ஆக வேண்டும். ஒரு மூட்டை அரிசி முழுவதையும் உண்போம் என்ற நம்பிக்கையில்தான் ஒருவன் வாங்கிக் கொண்டு வருகிறான். நெடுந்தூரம் நடப்பவன் பூமி பிளந்து நாம் கீழே போவோம் என்று எண்ணமாட்டான். நம்பிக்கையின்மேல் தான் நம்முடைய முயற்சிகள் எல்லாம் நிற்க வேண்டும். உலக வாழ்வில் சிறிய செயல்களுக்கே இத்தனை நம்பிக்கை வேண்டுமென்றால் இறைவன் திருவருளைப் பெற இந்த நம்பிக்கை முறுகி நிற்க வேண்டும். **மலையே குலைந்தாலும், வானமே இடிந்தாலும், பூமியே பிளந்தாலும் இறைவன் நம்மைக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கை அழுத்தமாக இருப்பவன் உண்மையான பக்தன் ஆவான்.**

இந்தப் பக்தர் முருகனைப் பார்த்துச் சொல்கிறார். "இத்தனை உறவினர் களிடத்திலே பாராட்டுப் பெறும் அழகனாக இருக்கிற எம்பெருமானே, இளையவனே தண்டை அணிந்த அழகிய உன் திருவடிக் கோலத்தை எப்போதும் நம்பிக்கையோடு தொழுது வாழ்வேன்" என்று சொல்கிறார். இறைவனுடைய திருவடியில் நம்பிக்கை வைப்பதன் மூலம் அவனுடைய உறவும் அருளும் உண்டாகின்றன. முருகப் பெருமானுடைய தண்டைத் தாள் அவனுடைய இளமையையும் அழகையும் ஒருங்கே புலப்படுத்தும் அடையாளமாக நிற்கிறது.

இவ்வாறு ஈடுபட்ட பக்தர், அந்தப் பெருமானுடைய புகழ்களை எல்லாம் பேசும் முறையில் அவனுடைய உறவினர்களையும், அவனது தாளை நம்பிக்கையோடு வழிபடும் முறையையும் இந்தப் பாட்டில் சொல்கிறார்.

**"முருகனே! செந்தி முதல்வனே மாயோன்**
**மருகனே! ஈசன் மகனே! - ஒருகைமுகன்**
**தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்**
**நம்பியே! கைதொழுவேன் நான்"**

(ஒருகைமுகன் - முகத்திலிருந்து தொங்கும் தும்பிக்கையை உடைய கணபதி)

## 8

## நல்ல இடம்

இறைவனையே முழுவதும் நம்பும் அடியவர்களுக்கு அவன் வேண்டியவற்றை அருளிப் பாதுகாப்பான். அவனிடம் முழு நம்பிக்கை வைப்பதற்கு அடையாளம் மற்றவற்றில் நம்பிக்கை இல்லாமல் இருப்பது. மற்றவர்களை நம்புவதனால் பயனில்லை என்பதை நன்கு உணர்ந்து, இறைவனுடைய பற்று ஒன்றே யாவற்றையும் தரும் என்ற உறுதியுடையவர்கள் சிறந்த பக்தர்கள்.

"மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்"

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொல்கிறார். எல்லாப் பொருளிலும் பற்றும் நம்பிக்கையும் வைத்துச் சில சமயங்களில் இறைவனை நம்புவதாகச் சொல்வதில் பயனில்லை.

திரௌபதி கதையே இதற்குச் சான்று. அதை முன்பு பார்த்தோம்.

பிறர் உதவி கிடைக்கும் என்று நம்பும் வரைக்கும் இறைவன் அருள் புரிய வரமாட்டான், "எல்லாப் பற்றையும் விட்டொழித்து என்னையே புகல் புகுந்தவர்களுடைய நலத்தை நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்று கண்ணன் கீதையில் சொல்கிறான். இறைவனையன்றிப் பற்று இல்லை என்று இருப்பாருக்கு அவன் உறுதியாக அருள்புரிவான்.

அவனுக்கு நாம் அடிமை. அவன் நம்மைக் காப்பாற்றும் கடப்பாடு உடையவன் என்பதை உள்ளத்தில் உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். கைக் குழந்தையை அதன் தாய் எப்போதும் கவனித்துக் கொள்கிறாள், தானே நடந்து தானே உண்ணும் அளவுக்கு வளர்ந்த குழந்தைகளைப் பற்றித் தாய் மிகுதியாகக் கவலைப்படுவதில்லை. நாம் இறைவனையே நம்பும் இளங் குழந்தையாக ஆகிவிட வேண்டும்.

"நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே"

என்று இருக்க வேண்டும். அப்போது நம்முடைய பொறுப்பு முழுவதும்

அவனைச் சாரும். நமக்கு அவ்வளவு திடமான நம்பிக்கை இருப்பதில்லை. அதனால் மனம் தடுமாறுகிறோம்.

முருகனிடத்தில் உறுதியான பற்று வைத்து, நாம் அவனையன்றி வேறு யாரையும் சரணடையவில்லை யாதலின் அவன் நம்மைப் பாதுகாப்பான் என்ற நம்பிக்கையை உடையவர் இந்த அடியவர்,

"உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்;
பின்னை ஒருவரையான் பின்செல்லேன்"

என்று புகுந்தவர் அல்லவா? ஆதலின் முருகனுக்கு நம்மைக் காக்கும் கடப்பாடு உண்டு என்று உரிமை கொண்டாடுகிறார்.

"நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே"

என்று திருநாவுக்கரசர் கூறுகிறார். என்னைப் பாதுகாத்தல் அவனுடைய கடமை என்ற நம்பிக்கையை உடையவர் அவர். "என் தாய் எனக்கு எல்லாம் தருவாள்'' என்று குழந்தையும், ''என் நாயகர் எனக்கு வேண்டியவற்றையெல்லாம் தருவார்'' என்று மனைவியும் நம்பி வாழ்வதுபோல, "இறைவன் எனக்கு வேண்டியன தந்து காப்பாற்றுவான்" என்று இருத்தல் பக்தர்க்கு இயல்பு. ஆகவே இந்த அடியாரும் முருகனை நோக்கியே இதைக் கூறுகிறார்.

கடமைப்பட்டவர் தம் கடமையைச் செய்யாது ஒழிந்தால், அதை வேறு யாரும் செய்ய முற்படமாட்டார்கள், அவரவர்களுக்கு வெவ்வேறு கடமைகள் உள்ளன. இறைவனுக்கோ அடியார்களுக்காகவே செய்யும் வேலைகளேயன்றி வேறு ஏதும் இல்லை. நாம் நம்முடைய பொறுப்பை உணர்ந்து ஒழுகாவிட்டாலும், அவன் தன் பொறுப்பைத் தட்டிக் கழிப்பதில்லை.

இறைவன் இன்னும் போதிய அளவுக்கு நமக்கு அருள் செய்யவில்லையே என்ற ஏக்கம் பக்தர்களுக்கு இருக்கும். பொருள் படைத்த பேர் எப்படித் தம்மிடம் உள்ள பொருளைக் கொண்டு திருப்தி அடையாமல் மேலும் மேலும் பொருள் பெற ஏங்குவார்களோ, அப்படியே அருள் படைத்தவர்களும் ஏங்குவார்கள்.

"செழுங்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய்நின் அடைக்கலமே"

என்று ஏங்குவார் மணிவாசகர்.

இந்த ஏக்கமே பக்திக்கு அறிகுறி. முருகனுடைய திருவருள் முற்றக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தில் முறையிட வருகிறார் அடியவர்.

**காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்**
**ஆர்க்குப் பரமாம் அறுமுகவா ?**

என்கிறார். ''என்னைப் பற்றிய கவலை எனக்கு இல்லாமல் நீயல்லவா எனக்காகக் கவலைப்படுகிறவன்? அத்தகையவன் இப்போது புறக்கணிக்கலாமா? என்று கேட்கிறார். அவனுக்குத் தம்மைக் காக்கும் கடப்பாடு உண்டு" என்று உரிமையோடு பேசுகிறார்.

முருகனை 'அறுமுகவா!' என்கிறார். முருகன் எங்கும் திருமுகமாய் எங்கும் திருக்கண்களாய் நின்று எல்லாவற்றையும் உணர்பவன்.

"                                        எங்கும்
கண்ணாகக் காண்கின்ற கதியே"

என்பார் இராமலிங்க சுவாமிகள், முருகன் எல்லாத் திசைகளிலும் முகமுடையான். அவன் பார்வைக்குத் தப்பும் பொருள் ஏதும் இல்லை. 'நான் முறையிடாமலே என் இடர்ப்பாடுகளை அறிந்துகொள்ளும் ஆற்றல் உடையவன் நீ. எல்லாத் திசைகளிலும் திருமுகங்களும் கண்பார்வையும் படைத்த உனக்கு என் துயர் கண்ணிற்படவில்லை என்று சொல்வது முறையல்லவே' என்ற குறிப்போடு அவனுடைய ஆறுமுகங்களைக் சுட்டிக் கூறினார்.

முருகன் திருமார்பில் கடப்ப மாலையை அணிந்திருக்கிறான். போகத்துக்குரிய மாலை அது. போர்க்குரிய கண்ணி வேறு; போகத்துக்குரிய மாலை வேறு. முருகனுடைய கண்ணி காந்தள். அமைதியாக வள்ளி நாயகியோடும் தேவயானையோடும் எழுந்தருளியிருக்கும்போது கடப்பமாலையை அணிந்துகொண்டு விளங்குவான். இறைவனுக்குப் போகமும்

*யோகமும் அவசியமல்லவாயினும் உலகத்தார் மனைவி மக்களுடன் வாழ்ந்து இன்ப வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காக அவன் போகியைப் போல் விளங்குகிறான். அவன் அப்படி இல்லாதொழிந்தால் உலகம் இன்பவாழ்வு இன்றி வீணாகிவிடும்.*

*'நீ போகியாக விளங்கி அதற்குரிய அங்கங்களை அணிந்து கொண்டு எழுந்தருளியிருக்கிறாய். யாவரையும் வாழ்வில் இன்பம் காணும்படி பாதுகாப்பேன் என்பதற்கு அறிகுறியாக அவ்வாறு இருக்கிறாய், அப்படி உள்ள நீ என்னைக் காப்பாற்றாமல் இருக்கலாமா?' என்ற கருத்தை உள்ளடக்கி அவன் தாரைக் குறிக்கிறார்.*

பூக்கும் கடம்பா!

*(பூத்திருக்கும் கடம்ப மலர் மாலையை அணிந்தவனே).*

*இதற்கு வேறு ஒரு வகையாகவும் பொருள் கொள்ளலாம். முருகன் கடம்ப மரத்தில் எழுந்தருளியிருப்பவன். "புதுப்பூங் கடம்பினும்" அவன் உறைகிறான் என்று திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.*

*எனவே, 'மலர்ந்த கடம்ப மரத்தில் எழுந்தருளியிருப்பவனே' என்றும் இங்கே பொருள் கொள்ளலாம்.*

*அவனை, 'அறுமுகவா' என்றும் 'பூக்கும்கடம்பா' என்றும் விளித்தவர், அவனுடைய இயல்பான திருநாமத்தையும் கூறுகிறார்; "முருகா" என்றும் அடுத்து, "கதிர்வேலா!" என்றும் கூறுகிறார்.*

*முருகன் ஞானசக்தியைக் கையில் ஏந்தியிருக்கிறவன். தன்னை அண்டினாருடைய துயரத்தைப் போக்கும் அற்புதக் கருவி அது.*

"சூர்மார்பும் குன்றும், துளைத்தவேல்
உண்டே துணை"

*என்று புகுந்தவர் இந்த அடியார், முருகன் என்றும் அரும்பெறல் மரபிற் பெரும் பெயரும் கதிர்வேலாகிய தனிப்படையும் உடைய கந்தவேள். வேலே விளங்குகையான். வேலுக்கும் அவனுக்கும் உள்ள உரிமையை அவனுடைய மூலத் திருவுருவத்தில் வேலையும் இணைத்து அமைக்கும் வழக்கத்திலிருந்து உணரலாம். திருச்செங்கோடு முதலிய தலங்களில் வேலேந்திய முருகனைத் தரிசிக்கலாம்.*

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்கும் பரமாம் அறுமுகவா? – பூக்கும்
கடம்பா! முருகா! கதிர்வேலா!

*(பரம்-பாரம்; பொறுப்பு)*

*அடுத்தபடி முருகனுடைய இரக்கத்துக்குப் பாத்திரம் தாம் என்பதைச் சொல்கிறார்.*

*தம்மைத் தாமே உயர்த்திக் கொள்ளும் செருக்கு ஆகாதோ இது என்று தோன்றும். முருகனுடைய இரக்கத்துக்கு ஏற்ற இடம் இது என்று தம்மைச் சுட்டிச் சொல்கிறார். "கொடிய பசியுடையவன் நான்; சோறு போடுவதற்கு ஏற்ற பாத்திரம் நான்" என்று பசியுடையவன் சொல்வது போலவும், "நோயால் வருந்துகிறவன் நான்; என்னை நீங்கள் கவனித்து மருந்து கொடுக்கவேண்டும்; உங்கள் மருத்துவத்துக்காக நிற்பவன் நான்; உங்கள் உபகாரத்தை எதிர்நோக்கி இருப்பவன்" என்று பிணியுடையவன் சொல்வது போலவும் நிற்பது இது.*

*'இரங்காய் இனி' என்பதனால், 'உன்னுடைய இரக்கத்துக்கு உரியவன் யான்' என்பதைக் கூறியவரானார், துன்பம் உடையவரிடமும் குறையுடையவரிடமும் இரங்குபவன் முருகன். ஆகவே தம்முடைய குறையைக் குறிப்பிட்டு, 'எனக்கு அருள் செய்ய வேண்டும்; அதற்கு ஏற்ற பாத்திரம்' என்று சொல்லிக் கொள்வது அகந்தையின்பாற் படாது. "நான் பெரிய பக்தன்; என்னை நீ ஆட்கொள்ள வேண்டும்" என்று சொன்னால் அது செருக்கு மணக்கும் கூற்றாகும். இரங்கத் தக்க நிலையில் இருக்கின்றவன் நான். உன்னையன்றி வேறு புகல் இல்லை. உன் கருணைக்கு உரியவன் நான் என்கிறார். நான் ஏழை ஐயா! ஏழைக்கு இரங்க வேண்டும் ஐயா உங்கள் தர்மத்துக்கு ஏற்ற இடம் இது ஐயா என்று பிச்சைக்காரன் ஒருவன் கெஞ்சினால், அவனைச் செருக்குடையவன் என்று சொல்லலாமா? தன் பெருமையைத் தானே கூறிக் கொள்வது செருக்கு. தன் சிறுமையையும் இடர்ப்பாடுகளையும் கூறுவது செருக்கு அன்று.*

*''நல்லஇடங்காண்'' என்று சொல்கிறாரே தம்மை நல்லவரென்று சொல்லிக் கொண்டதல்லவா அது? இப்படி ஒரு கேள்வி எழலாம். நல்ல என்பது மிக்க என்ற பொருளில் வந்தது. நல்ல பசி என்னும்போது பசியின்*

*மிகுதியையே நல்ல என்ற அடை குறிக்கிறது. 'நல்ல வெயில்' என்பது அதன் மிகுதியைக் குறிப்பதே அன்றி, அது நல்லது என்பதைக் குறிப்பிப்பதன்று. 'உன்னுடைய இரக்கத்துக்கு ஏற்ற இழிநிலை என்னிடம் இருக்கிறது. அது மிக்க இழிந்த நிலை' என்று நினைக்கும்படி செய்கிறது, நல்ல என்ற அடை.*

*'உன்னுடைய இரக்கத்தைப் பெறுவதற்கு ஏற்ற ஏழைகள் பலர் இருக்கலாம். நானோ அவர்களிலும் மிக்க ஏழை. அவர்கள் நீ இரங்குவதற்குரிய இடம்; நானோ நல்ல இடம்' என்று சொல்கிறார். தம்முடைய தைரியத்தின் மிகுதியைச் சொல்கிறாரேயன்றித் தம் பெருமையைக் கூறவில்லை. 'நான் பாவியினும் பெரும்பாவி' என்று சொல்வது எப்படியோ அப்படி அமைந்தது இது.*

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்கும் பரமாம் ? அறுமுகவா ! – பூக்கும்
கடம்பா ! முருகா ! கதிர்வேலா ! நல்ல
இடங்காண் இரங்காய் இனி

## 9

## முறை

*திருமுருகாற்றுப்படையைப் பாராயணம் செய்பவர்கள் அந்நூல் முடிந்தவுடன் இதுகாறும் சொல்லி வந்த வெண்பாக்களைக் கூறித் துதி செய்வார்கள். அப்படி அமைந்த வெண்பாக்கள் எட்டுக்குப் பின்னால் இரண்டு வெண்பாக்கள் திருமுருகாற்றுப்படையைப் பாராயணம் செய்யும் முறையையும் அதனால் உண்டாகும் பயனையும் கூறுகின்றன. அவற்றை இனிப் பார்க்கலாம்.*

*திருமுருகாற்றுப்படையைத் திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த குகையில் இருந்து நக்கீரர் பாடினார் என்பது ஒரு வரலாறு. ஆதலால் ஒன்பதாவது வெண்பாவில் திருப்பரங்குன்றத்தை நினைக்கிறார், இதைப் பாடிய அன்பர். திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் பன்னிருகைப் பெருமானுடைய பாதத்தை அணுகி அன்பர்கள் கரம் குவிப்பார்கள். அவனுடைய சந்நிதானத்தை அடையும்போதே அவன் பாதத்தை லட்சியமாகக் கொண்டு தரிசித்துக் கரத்தைக் குவித்துக் கொண்டே செல்வார்கள். பின்பு கண்ணார அவன் திருமேனியழகைக் கண்டு இன்புறுவார்கள். அதுபோல, "ஏ, நெஞ்சமே, நீயும் செய்வாயாக" என்று நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறார் அன்பர்.*

கை கூப்பிக் கண்குளிரக் கண்ட பிறகு, மிக்க ஆர்வத்துடன் திருமுருகாற்றுப்படையைச் சொல்ல வேண்டுமாம். தமிழ் நயம் கெழுமிய அழகான பாடல் அது. நீர் கொண்டு அபிஷேகம் செய்து பூக்கொண்டு அருச்சித்துப் பழம் முதலிய கொண்டு நிவேதித்துப் பல வகை உபசாரங்களுடன் பூசை செய்வதற்கு எல்லாராலும் இயலாது. அவ்வாறு செய்ய முடியாவிட்டாலும் முருகனிடத்தில் பேரன்புடன் திருமுருகாற்றுப்படையை ஓதினால் போதுமாம். முருகன் சந்நிதானத்தில் இந்த நூலைப் பாராயணம் செய்வது பூசை செய்வதற்குச் சமானமாகும். சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரைப் பார்த்து, "அருச்சனை பாட்டே யாகும், ஆதலால் மண் மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக'' என்று சொன்னதாகப் பெரிய புராணம் கூறுகின்றது. அங்கே தமிழ்ப் பாட்டைப் பாடுதல் அருச்சனையோடு ஒத்தது என்ற கருத்தைக் காண்கிறோம். அதுபோலவே இங்கும் திருமுருகாற்றுப்படையை பாராயணம் செய்வதுவே பூசைக்குச் சமானமானது என்று அப்பர் கூறுகிறார்.

பரங்குன்றில் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு – சுருங்காமல்
ஆசையால், நெஞ்சே, அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

(என் நெஞ்சே, திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் பன்னிரண்டு திருக்கரங்களை உடைய தலைவனாகிய முருகப் பெருமானுடைய திருவடியைக் கைகளைக் குவித்து வணங்கிக் கண்கள் குளிரும்படியாகத் தரிசித்துச் சிறிதும் குறைவுபடாமல் மிக்க ஆர்வத்துடன் அழகிய திருமுருகாற்றுப்படையைப் பூசை செய்வதாக எண்ணிக் கொண்டு பாராயணம் செய்வாயாக.

அணி முருகாற்றுப்படை முருகனுக்கு - அணிகலனாக உள்ள முருகாற்றுப்படை என்றும் கொள்ளலாம்)

மனம் ஒருமித்து இறைவனுடைய வடிவத்தில் ஈடுபட்டுப் பலவகை உபசாரங்களைச் செய்வதே பூசையாகும். நம்முடைய கரசரணாதி அவயவங்கள் இறைவனுடைய வழிபாட்டில் ஒன்றுபட்டு இயங்குவதற்காகச் செய்வது பூசை. அவனுடைய புகழைக் கூறும் நூல்களைப் பாராயணம் செய்யும்போது மனம் ஒருமைப்பட்டு இறைவனுடைய திருவுருவத்தையும் புகழையும் நினைக்கும் நிலை உண்டாகும். அதுவும் பூசையினால் கிடைக்கும் பயனைத் தருவதாகும். இதனை எண்ணியே திருமுருகாற்றுப்படைப் பாராயணத்தையும் பூசை என்று அன்பர் கூறுகிறார்.

## 10

## பயன்

*அடுத்தபடி அவ்வாறு புகலுவதால் இன்ன பயன் உண்டாகும் என்று சொல்ல வருகிறார். இந்த நூல் நக்கீரரால் உரைக்கப் பெற்றது என்பதனையும் தெரிவிக்கிறார்.*

*நமக்கு வரும் துன்பங்கள் பல. அவற்றைப் போக்கிக் கொள்வதற்குத் தக்கபடி பாதுகாப்புச் செய்துகொள்ள வேண்டும். வறுமையைப் போக்குவதற்குப் பொருளும், பகையை அழிப்பதற்குப் படைக்கலமும், நோயைத் தீர்ப்பதற்கு மருந்தும் உதவும். இந்த மூன்றும் ஒரு சேரக் கிடைத்தாற்போல முருகனுடைய திருவருள் கிடைக்கப் பெற்றால் எந்தத் துன்பமும் நம்மை அடையாது. அவன் அருளைப் பெறுவதற்குத் தக்க வழி எது? திருமுருகாற்றுப்படையை நாள்தோறும் பாராயணம் செய்தால் நம்மை எல்லா இடர்களிலிருந்தும் காப்பாற்றிக் கொள்ளலாம்.*

*கவசம் என்ற பெயரில் வடமொழியிலும் தென்மொழியிலும் சில நூல்கள் உண்டு. இந்திராட்சி சிவகவசம், விஷ்ணு கவசம் முதலியன வடமொழியிலும் கந்தர் சஷ்டி கவசம், சண்முக கவசம் முதலியன தமிழிலும் உள்ளவை. நோய், வறுமை, பகை முதலியவற்றினின்றும் காப்பாற்றுவதற்காகவே அவை எழுந்தன. திருமுருகாற்றுப்படையின் அமைப்பு கவச நூல்களைப் போல் இல்லாவிட்டாலும், அதைப் பாராயணம் செய்வதானால் அன்பர்களுக்கு உறுதியான பாதுகாப்பு ஏற்படும். ஆகவே, அந்த நூலும் ஒரு வகையில் கவசம் என்றே கொள்ளத்தகும். இந்தக் கருத்தையும் அன்பர் கூறுகிறார்.*

*தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒருவன் திருமுருகாற்றுப்படையைப் பாராயணம் செய்தால், அவன் முன்னால் முருகப்பெருமான் எழுந்தருளி வந்து தரிசனம் தந்து, அவனுடைய மனக்கவலையைத் தீர்த்தருள்வான். அவன் மனத்தில் நினைத்த விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றுவான். இவ்வாறு அன்பர் பத்தாவது பாடலைப் பாடி முடிக்கிறார்.*

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் – முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும்.

*(நக்கீரர் திருவாய் மலர்ந்தருளிய நல்ல திருமுருகாற்றுப்படையை ஒருவன் தன்னைப் பாதுகாக்கும் பொருட்டு ஒவ்வொரு நாளும் பாராயணம் செய்து*

வந்தால், அவனுக்கு முன்னால் அழகை யுடைய, பெருமை மிக்க, முருகன் எழுந்தருளி வந்து அவனுடைய மனக் கவலையைத் தீர்த்தருளி, அவன் நினைத்த எல்லாவற்றையும் வழங்குவான்.

'நன் முருகாற்றுப்படையை' என்றார், பிறவிப் பிணியைத் தீர்க்கும் தன்மையுடையதாதலால் "கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழா அர்எனின்" என்னும் குறளில் நற்றாள் என்பதற்கு, 'பிறவிப் பிணியைத் தீர்க்கும் திருவடி' என்று பரிமேலழகர் உரை விரித்தார். அந்த நன்மையையே இங்கும் கொள்ளவேண்டும். தற்கோல - தன்னைக் காப்பாற்றிக்கொள்ள. முன் - பாராயணம் செய்பவனுக்கு முன்னாலே. கோலம் - அழகு. தான் என்றது பாராயணம் செய்பவனை. இடரை நீக்கி இன்பத்தைத் தருவான் என்றபடி).

எனவே திருமுருகாற்றுப்படையைப் பாராயணம் செய்பவர்களுக்கு முருகப் பெருமானுடைய திவ்ய தரிசனமும், இடர்நீக்கமும், நினைத்த விருப்பங்கள் கைகூடுவதும் கிடைக்கும் என்பதை இந்தப் பாடல் தெரிவிக்கின்றது.

திருமுருகாற்றுப்படை சங்க நூல் வரிசையுள் ஒன்றாகிய பத்துப்பாட்டில் முதலில் நிற்பது, அதனோடு சைவத் திருமுறைகளில் ஒன்றாகிய பதினோராம் திருமுறையில் தொகுக்கப் பெற்ற நூல்களில் ஒன்றாகவும் விளங்குகிறது. பன்னிருவர் பாடிய நாற்பது நூல்களைக் கொண்ட அத்தொகுதியில் 17-ஆவது நூலாகக் கோக்கப் பெற்றுள்ளது. நக்கீரர் பாடியனவாகப் பதினோராந் திருமுறையில் பத்து நூல்கள் உள்ளன. அவற்றில் ஒன்பதாவதாக இருப்பது இது. மற்ற ஒன்பது நூல்களும் சங்க காலத்தில் எழுந்தனவா என்பதில் ஆராய்ச்சியாளர்களுக்குள் கருத்து வேறுபாடு உண்டு. ஆனால் திருமுருகாற்றுப்படை நக்கீரர் திருவாக்கு என்பதை யாரும் ஐயுறுவதில்லை. சைவத் திருமுறைகளில் சேர்க்கப் பெற்ற நூல்களுள் மிகவும் பழமையாக உள்ளது திருமுருகாற்றுப்படையே என்று உறுதியாகச் சொல்லலாம்.

சங்க நூல்களுக்கும் சைவ நூல்களுக்கும் இணைப்புப் பாலம் போல விளங்கும் இந்தத் தெய்விக நூல் என்றும் மங்கலமாய் ஒளிர்கிறது. சங்க நூல்கள் இடையிலே சில காலம் வழக்கு ஒழிந்து மறைந்து நின்றன. தமிழ்ப் பெரும் புலவராகிய மகா மகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் அவதாரம் செய்து அந்த நூல்களை வெளிக் கொணர்ந்தார். அதன்பிறகு தமிழ்நாடு முழுவதும் அவை பரவலாயின. அவர்கள் காலத்துக்கு முன் சில காலம் சங்க நூல்கள் ஒளி மழுங்கியிருந்தன. ஒரே ஒரு நூல் மட்டும் மற்ற நூல்களைப் போல மங்காமல் ஒளிர்ந்தது. அதுவே திருமுருகாற்றுப்படை. சைவத்

திருமுறைகளில் கோக்கப் பெற்றிருந்தமை அதற்கு ஒரு காரணம். மிகப் பழங்காலந்தொட்டே இது பாராயண நூலாக இருந்தது, மற்றொரு காரணம். வேதங்கள் வாய் மொழியாகவே வந்து நிலவுவது போலத் திருமுருகாற்றுப்படையும் பாராயண நூலாக இருந்தமையால் எந்தக் காலத்தும் மறைவின்றி மங்கலின்றி வழங்கி வந்தது.

அப்படிப் பாராயணம் செய்பவர்களுக்கு நூல் முடிந்தவுடன் முருகனை நேரே துதித்துப் பாடவும், பயன் இன்னதென்று நினைத்துக் கொள்ளவும் பத்து வெண்பாக்களை யாரோ அன்பர் பாடி வைத்தார். அவை தெளிவான நடையில் பக்தியை எழுப்பும் வகையில் அமைந்தமையால் திருமுருகாற்றுப்படையைப் பாராயணம் செய்பவர்கள் அவற்றையும் சேர்த்துக் கூறலானார்கள். இந்த வகையில் அந்த வெண்பாக்களும் திருமுருகாற்றுப்படையோடு ஒட்டிக் கொண்டன.

## அருஞ்சொற் பொருள்

### அ

அகம் - இடம்
அகலம் - மார்பு
அகவ - முழங்க
அசைதல் - தங்குதல்
அஞ்சல் - அஞ்சுதல்
அஞ்சிறை - அகத்திலே உள்ள சிறகு
அஞ்சுவரு - அச்சத்தை உண்டாக்கும்
அட்டி - வைத்து
அடுக்கம் - மலைப்பக்கம்
அடுதல் - கொல்லுதல்
அணங்கு - வருத்தம்
அணி - அலங்காரம், அழகு
அணைத்த - கூட்டிக் கட்டிய
அதாஅன்று - அதுமட்டும் அன்று
அந்தரம் - ஆகாயம்
அப்பி - பூசி
அம் - அழகிய
அமர் - போர்
அமர்ந்து - இருந்து, பொருந்தி, விரும்பி
அமர்ந்தது - விரும்பியது
அமரர் - தேவர்
அமை - மூங்கில்
அமைவர - பொருந்த
அயர் - நடத்தும், செய்யும்
அயர - ஆட
அரமகளிர் - தெய்வப் பெண்கள்
அரி - வண்டு
அரை - அடிமரம்
அல்குல் - பெண்களின் இரகசிய உறுப்பு
அலங்கு - அசையும்
அலந்தோர் - வருந்துவோர்
அலர் - பரந்த
அலைக்கும் - மோதும்
அலைவாய் - திருச்செந்தூர்
அவிர் - ஒளிவீசும்
அவிர்தல் - விளங்குதல்
அவுணர் - அசுரர்
அழல் - நெருப்பு
அளவை - அளவு
அளிக்கும் - வழங்கும்
அளியன் - இரங்கத்தக்கவன்
அளை - குகை
அளைஇ - சொல்லி
அறன் - தருமம்
அறிவல் - அறிவேன்
அறுநான்கிரட்டி - நாற்பத்தெட்டு
அறுவர் - கார்த்திகை மாதர்
அன்ன - ஒத்த

### ஆ

ஆகம் - மார்பு
ஆங்கு - அங்கே, போல, அவ்வாறு
ஆசினி - வேர்ப்பலா
ஆடுகளம் - வெறியாடும் இடம்
ஆடை - உடை
ஆண்டு - அவ்விடம்
ஆமா - காட்டுப் பசு
ஆய்ந்த - ஆராய்ந்த
ஆர்த்தன்ன - ஒலித்தாற் போன்ற
ஆர்த்தும் - நிரம்பத்தரும், நுகரச் செய்யும்
ஆர்வலர் - மிக்க அன்புடையவர்
ஆரம் - சந்தனமரம், மாலை
ஆல் - ஆலமரம்
ஆல்கெழு கடவுள் - தட்சிணாமூர்த்தி
ஆற்றுப்படுத்த - வரும்படி செய்த
ஆறு - வழி
ஆறெழுத்து - 'சரவணபவ' மந்திரம்
ஆனாது - நில்லாமல்

## இ

இகந்து - கடந்து
இகல் - பகை, மாறுபாடு
இசை - ஒலி, புகழ்
இசைப்ப - ஒலிப்ப
இடித்தன்ன - இடித்தாற்போன்ற
இடுபு - இட்டு, வைத்து
இடும்பை - துன்பம்
இடை - நடு
இணர் - பூங்கொத்து
இணை - ஒத்திருக்கும்
இணைத்த - இரட்டையாகக் கட்டிய
இணைப்பு - கட்டுதல்
இமிழ் - ஒலிக்கும்
இமைக்கும் - விளங்கும்
இமைப்ப - மின்ன
இமைப்பு - விளங்குவது
இயக்கி - ஒலித்து
இயங்கும் - அசையும்
இயல்பு - இலக்கணம்
இயல - ஏற்றபடி
இயலுதல் - புரளுதல்
இயவுள் - கடவுள்
இயன்ற - அமைந்த
இரட்டி - இரண்டு பங்கு
இரட்டும் - மாறி மாறி ஒலிக்கும்
இரவலன் - யாசகன்
இரிய - ஓடிப்போக
இரீஇ - வைத்து
இரு - கரிய
இருபிறப்பாளர் - அந்தணர்
இருமூன்று - ஆறு
இழிதரும் - இறங்கி வருகின்ற
இழுமென் - இடைவிடாது தொடர்ந்து வரும்
இழை - அணிகலம்
இறால் - தேன்கூடு
இன்று - இல்லாமல்
இன்னே - இப்போதே
இனி - இப்பொழுது
இனிய - இனிமையான வார்த்தைகள்

## ஈ

ஈசன் - சிவபெருமான்
ஈர் - நெய்ப்பு

## உ

உக்கம் - இடை
உகிர் - நகம்
உச்சி - தலை
உட்க - அஞ்ச
உடன் - ஒருங்கே
உடீஇ - உடுத்து
உடுக்கை - உடை
உடை - ஆடை, உடைக்கின்ற, உடைய
உத்தி - தலைக்கலன்
உயர்த்த - உயர்த்திய
உயரிய - தூக்கிய
உயிர்க்கும் - மூச்சுவிடும்
உரம் - வலிமை
உரிஞ்சிய - அரைத்த
உரியன் - உடையவன்
உரிவை - தோல்
உரு - அச்சம், அழகு, உருவம், நிறம்
உரும் - இடி
உருவம் - நிறம்
உரை - உரைத்த பொடி
உலறிய - உலர்ந்த
உவந்து - மகிழ்ந்து
உவப்ப - மகிழ
உழி - இடம்
உள்ளி - நினைந்து

உளர்ப்பு - வலிய மலர்த்துதல்
உளர - மீட்ட
உளியம் - கரடி
உளை - தங்கி இருப்பாய்
உற - பொருந்த
உறழ் - ஒத்த
உறுநர் - வந்து அடைபவர்
உறை - தங்கு, துளி
உறைதல் - தங்குதல்
உறையும் - தங்கும்
ஊழி - ஆயுள
ஊன் - தசை

எ

எஞ்சிய - மிஞ்சி நின்ற
எடுத்த - மேலே கட்டிய
எடுத்து - தூக்கிக் காட்டி
எய்திய - அமைந்த
எய்யா - அறிய முடியாத
எயிறு - பல்
எருத்தம் - கழுத்து
எல் - கதிரவன்
எழுந்தன்ன - எழுந்தாற் போன்ற
எறிதல் - ஆயுதத்தை வீசி அழித்தல்
எறிந்தாய் - வீசி அழித்தவனே
என்பு - எலும்பு
ஏத்தி - வாழ்த்தி
ஏந்து - உயர்ந்த
ஏம் - ஏமம், இன்பம்
ஏர்பு - எழுந்து
ஏரகம் - சுவாமிமலை
ஏறு - ஆண்சிங்கம், காளை

ஐ

ஐது - மெல்லியது
ஐயர் - முனிவர்
ஐயவி - வெள்ளைக் கடுகு
ஐவர் - ஐம்பூதத் தலைவர்

ஒ

ஒடுங்கிய - மறைந்த
ஒரு - ஒப்பற்ற
ஒருகைமுகன் - கணபதி
ஒருவன் - ஒப்பற்றவன்
ஒள் - ஒளியோடு கூடிய, நல்ல
ஒழுகல் - செய்து வருதல்
ஒன்பதிற்றிரட்டி - பதினெட்டு
ஓடை - நெற்றிப்பட்டம்
ஓதி - கூந்தல்
ஓம்புமதி - விட்டுவிடு
ஓர்க்கும் - நினைக்கும்
ஓவு - இடையிலே நிற்றல்

க

கச்சு - இடையிற் கட்டுவது
கடந்த - நீக்கிய
கடவிய - கடமைப்பட்ட
கடு - நஞ்சு
கடுக்கும் - ஒக்கும்
கடுநடை - வேகமாகிய நடை
கடுப்ப - ஒப்ப
கண்டாஅங்கு - பார்த்தது போல
கண்டுழி - கண்ட இடத்தில்
கண்ணி - தலையிலணியும் அடையாளச் சிறுமாலை
கணம் - கூட்டம்
கணவீரம் - அலரி
கணை - திரட்சி
கதிர் - ஒளி, கிரணம்
கதுப்பு - கூந்தல்
கந்து - ஆதீண்டு குற்றி, கட்டுத்தறி
கம - நினைவு
கமஞ்சூல் - நிறைந்த கருப்பம்
கமழ்தல் - மணம் வீசுதல்
கருவு - கோபித்தல்

கல் - பாறை, மலை
கலாவ - கலக்க
கலை - ஆண் குரங்கு
கவிழ் - கீழ்நோக்கிய
கவின் - அழகு
கவின்று - அழகுபெற்று
கவைஇ - சூழ்ந்து
கவைஇய - சூழ்ந்த
கழல் - வீரகண்டை
கழல்கண் - கழல்வதைப் போன்ற கண்
கழி - மிக்க
கழிப்பிய - கழித்த
கள் - தேன்
களம் - இடம், போர்க்களம்
களன் - இடம்
களிறு - ஆண்யானை
கறங்க - முழங்க
கறி - மிளகு

கா

கா - சோலை
காசு - மணி
காட்சி - அறிவு, தோற்றம்
காண்தக - காணும்படி
காண்வர - காண
காதல் - விருப்பம்
காந்தள் - ஒருவகைப் பூ
காமரு - அழகிய
கார் - மேகம்
கார்கோள் - கடல்
கால் - அடிமரம், காம்பு, காற்று, தடவை
காழ் - வடம், வயிரம்
காழகம் - உடை
கானம் - காடு
கானவர் - வேடர்

கி

கிழவன் - உரிமை உடையவன்
கிழவோன் - உரியவன்
கிள்ளுபு - கிள்ளி
கிளர் - மிக்க, எடுத்துக்காட்டும்
கிளர்ந்தன்ன - எழுந்தாற்போன்ற
கிளர - தோன்ற
கிளைசுற்றத்தார், பக்கத்தில்

**கீ**

**கீண்டு - பிளந்து**

**கு**

**குடந்தம்பட்டு - கும்பிட்டு**
**குடவயின் - மேற்குத் திசையில்**
**குடாவடி - வளைந்த கால்**
**குண்டு - ஆழம்**
**குரிசில் - உபகாரி, தலைவன்**
**குருதி - இரத்தம்**
**குரூஉ - நிறம்**
**குரை - முழங்கும்**
**குல்லை - கஞ்சா**
**குலை - கொத்து**
**குழை - காதணி**
**குளவி - காட்டு மல்லிகை**
**குளன் - குளம்**
**குளித்த - மூழ்கிய**
**குளிர்ப்ப - குளிர்ச்சியடைய**
**குறடு - கட்டை**
**குறிஞ்சி - குறிஞ்சிநிலம், குறிஞ்சிப்பண்**
**குறித்த - சொல்லிய**
**குறித்தது - எண்ணியது**
**குறித்து - உணர்ந்து**
**குறும்பொறி - உதரபந்தனம்**
**குறை - வேண்டும் காரியம்**
**குன்று - திருப்பரங்குன்றம்**

**கூ**

**கூகை - கோட்டான்**
**கூடல் - மதுரை**

கூதாளம் - ஒருவகை மலர்
கூப்பி - குவித்து
கூளியர் - ஏவலர்
கூற்றம் - இயமன்

கெ

கெழு - பொருந்திய

கே

கேழ் - நிறம்
கேழல் - காட்டுப்பன்றி
கேள்வி - உபதேசம்

கை

கைவிடா - கைவிடாமல்

கொ

கொட்டி - பூசி
கொட்பு - சுழற்சி
கொடு - வளைந்த
கொடுத்தன்று - கொடுத்தது
கொண்மார் - கொள்ளும் பொருட்டு
கொல்நவில் - கொலைத்தொழில் பயின்ற
கொலைஇய - கொலைபுரியும்
கொழியா - அரித்து
கொள்கை - கற்பு, சங்கற்பம், விரதம்
கொற்றம் - வெற்றி

கோ

கோடு - ஊதுகொம்பு, தந்தம், விலங்கின் கொம்பு
கோதை - மாலை
கோபம் - இந்திரகோபப் பூச்சி
கோமான் - தலைவன்
கோல - பாதுகாக்க
கோலம் - அழகு

ச

சதுக்கம் - நான்கு தெருக்கள் கூடும் இடம்
சந்தி - தெருக்கள் கூடும் இடம்
சமம் - போர்
சமர் - போர்

சா

சாந்து - சந்தனம்
சாய் - சிலாம்பு
சாயல் - மென்மை
சால் - அமைந்த
சாற்றினால் - பாராயணம் செய்தால்
சாறு - விழா
சான்ற - அமைந்த

சி

சிதறி - தூவி
சிமயம் - சிகரம்
சிலம்ப - எதிரொலிக்க
சிலம்பகம் - மலைப்பக்கம்
சிலம்பு - மலைச்சாரல்
சிலைப்ப - முழங்க
சிறுகுடி - குறிஞ்சி நிலத்து ஊர்
சினை - கிளை
சீர் - அழகு, புகழ்
சீரை - மரவுரி
சீறடி - சிறிய அடி
சீறிதழ் - சிறிய இதழ்

சு

சுட்டி - கருதி
சுட்டிய - குறித்த
சுடர் - ஒளி, விளக்கு
சுரும்பு - வண்டு
சுளை - பலாச்சுளை

சூ

சூர் - அச்சம், சூரபத்மன்
சூர்த்த - அச்சத்தைத் தரும்
சூரரமகளிர் - தெய்வப் பெண்கள்
சூல் - கருப்பம்

செ

செச்சை - வெட்சி
செந்தி - திருச்செந்தூர்
செய்யன் - சிவந்த நிறம் உடையவன்
செய்வினை - வேலைப்பாடு
செய்வு - செய்தல்
செயலை - அசோகு
செயிர் - குற்றம்
செரீஇ - செருகி
செரு - போர்
செல் - இடி
செலல் - செல்லுதல்
செலவினர் - நடையை உடையவர்
செலவு - நடை
செவ்வேள் - முருகன்
செற்றம் - ஹிம்சை
செறிய - அடங்க
செறுநர் - போர் புரிவார், பகைவர்
சென்னி - தலை
சென்னியன் - தலையை உடையவன்

சே

சேஎய் - முருகன்
சேஎண் - வானம், மலையுச்சி, நெடுந்தூரம்
சேர்பு - சேர்ந்து
சேவடி - சிவந்த திருவடி
சேறல் - செல்லுதல்

சொ

சொல்மலை - சொற்களின் தொகுதியாக இருப்பவன்

ஞ

ஞரல - ஒலிக்க
ஞாண் - நூல்
ஞாயிறு -சூரியன்
ஞாலம் - உலகம்

***த***

***தகடு - புற இதழ்***
***தகர் - ஆடு***
***தகை - மாலை***
***தட - விசாலமான***
***தடக்கை - வளைந்த கை, விசாலமான கை***
***தடிந்த - அழித்த, கொன்ற***
***தடிதல் - அழித்தல்***
***தண் - குளிர்ந்த***
***தண்டை - கால் அணி***
***தத்துற்று - குதித்து***
***தலை - முதல்***
***தலைஇய - பெய்த***
***தலைக்கொண்ட - தன்னிடத்தில் கொண்ட***
***தலைத்தந்து - முதற்கை கொடுத்து***
***தழீஇ - தழுவி***
***தழை - தழை ஆடை***
***தற்கோல - தன்னைக் காப்பாற்றிக் கொள்ள***
***தனி - ஒப்பற்ற***

***தா***

***தா - கேடு***
***தாங்கிய - பாதுகாத்த***
***தாங்கும் - பாதுகாக்கும்***
***தாது - மகரந்தப்பொடி***
***தார் - மாலை***
***தாரை - நீட்சி***
***தாழ் - கீழே தொங்கிய***
***தாழ்ந்த - தொங்கிய***
***தாழ்பு - தங்கி***
***தாழை - தென்னை***
***தாள் - காம்பு, கால், தண்டு***
***தானை - சேனை***

***தி***

***திங்கள் - சந்திரன்***

திசை - பகுதி
திண் - உறுதியான
திணி - செறிந்த
திதலை - தேமல்
திரு - இலக்குமி, செல்வம்
திருந்து - திருத்தமான
திலகம் - நெற்றிப்பொட்டு
திவவு - நரம்புக்கட்டு
திளைப்ப - அசைய
திறல் - வலிமை

### தீ

தீது - குற்றம்

### து

துகள் - குற்றம்
துகில் - மெல்லிய ஆடை
துஞ்சி - உறங்கி
துணங்கை - கைகோத்து ஆடும் கூத்து
துணர் - கொத்து
துணை - ஒத்தல்
துணையற - அளவு ஒக்க
துணையோர் - தோழிமார்
துமிய - முறிய
துயல்வர - அசைய
துயல்வரும் - அசையும்
துருத்தி - ஆற்றின் இடையிலுள்ள மண்திட்டு
துவர - முற்றும்
துனி - வெறுப்பு

### தூ

தூ - தூய
தூஉய் - தூவி
தூங்க - ஆட, தொங்க
தூம்பு - தொளை தெய்வ உத்தி - சீதேவி என்னும் தலைக்கலன்

### தெ

தெய்வம் - தெய்வத்தன்மை, அருள்
தெறியா - தெறித்து

### தே

**தேக்கள் - தேனாலாகிய கள்**
**தேம் - வாசனை**
**தேய்த்து - இல்லையாக்கிய**
**தேய்த்து - அழித்து**
**தேய்வை - அரைத்த சந்தனம்**
**தேறல் - தெளிவு**

### தை

**தைஇய - அணிந்த, அமைத்த, அலங்கரித்த**

### தொ

**தொகுதி - கூட்டம்**
**தொட்ட - வீசிய**
**தொட்டு - தோண்டி**
**தொடி - தோள்வளை, வளை**
**தொடுத்த - வைத்த**
**தொண்டகம் - குறிஞ்சி நிலத்துப் பறை**
**தொல்குடி - பழைய கோத்திரம்**
**தொழூஉ - தொழுது**

### தோ

**தோய் - அளாவிய**
**தோன்றலர் - தோற்றத்தை உடையவர்**

### ந

**நகர் - கோயில், நகரம்**
**நகை - ஒளி, இன்பம்**
**நசை - விருப்பம்**
**நசையுநர் - விரும்பி வந்தவர்**
**நம்பகிலேன் - நம்பமாட்டேன்**
**நயந்து - விரும்பி**
**நயன் - அன்பு**
**நரம்பு - யாழ் நரம்பு**
**நரை - வெண்மை**
**நல்குமதி - கொடுப்பான்**
**நலம் - அழகு**

நவில் - சொல்லும்
நவின்ற - பயின்ற
நவின்று - பயின்று
நளி - செறிந்த
நறு - மணமுள்ள
நறை - வாசனை
நறைக்காய் - சாதிக்காய்
நன்னர் - நன்மை
நனி - நன்றாக

நா

நாகம் - சுரபுன்னை
நாட்டம் - கண்
நாவல் - நாவல் மரம்
நாற்றி - தொங்கவிட்டு
நான்முகன் - பிரமன்

நி

நினம் - தசை
நியமம் - கடைவீதி
நிரைத்த - வரிசையாகக் கோத்த
நிலை - இடம், உருவம், பதவி
நிலைஇய - நிலைத்த, நிலைபெற்ற
நிவந்த - உயர்ந்த
நிவப்பு - உயர்ந்த
நிவப்பு - உயரம்
நிறீஇ - நட்டு
நிறுத்து - வாசிக்கச் செய்து

நீ

நீடு - உயர்ந்த
நீல் - நீலம்

நு

நுசுப்பு - இடை
நுடங்கி - அசைந்து
நுண் - நுட்பமான
நுதல் - நெற்றி, மத்தகம்
நுதி - நுனி
நூல் - இலக்கணம், புத்தகம்
நூற்றுப்பத்து - ஆயிரம்

நெ

நெடு - உயரமான
நெடுமை - உயரம்
நெடுவேள் - முருகன்

நே

நேர்பு - பொருந்தி, பொருத்தி
நேர்வு - புரளுதல்

நோ

நோக்கு - பார்வை
நோன்றாள் - வலிய கால்

ப

பகடு - பெருமை
பகல் - சூரியன், நாள்
பட - இறக்க, உண்டாக, தோன்ற, பொருந்த
படரும் - செல்லும்
படு - ஒலிக்கும், பிளந்த, விழும்
பண்பு - இயல்பு
பணிந்து - தாழ்ந்து
பணை - பெருமை, மூங்கில்
பதினொரு மூவர் - முப்பத்து மூவர் தேவர்
பயந்த - பெற்ற
பயில் - நெருங்கியுள்ள
பரம் - பாரம்
பரவி - துதித்து
பராரை - பருத்த அடிமரம்
பரிசிலர் - பரிசு வாங்குதற் குரிய இரவலர்
பருதி - சூரிய மண்டலம்
பருமம் - மேகலை

பல்லியம் - இசைக் கருவிகள்
பலி - பூசைக்குரிய பண்டம்
பனி - குளிர்ச்சி, பனிக்கட்டி
பனிப்ப - நடுங்க

பா

பார் - பாறை, பூமி
பால் - பகுதி
பாவை - பொம்மை

பி

பிடி - பெண்யானை
பிண்டி - அசோக மரம்
பிணர் - சுரசுரப்பு
பிணிமுகம் - முருகனுடைய யானை
பிணை - மான்
பிணையல் - மாலை
பிரப்பு - கூடை நிறைய வைக்கும் தானியம்
பிறழ் - ஒன்றுக்கொன்று மாறுபாடான, கோணலான
பின்னை - பிறகு

பு

புகர் - குற்றம்
புகன்று - அறைகூவி
புகை - தூபம்
புட்டில் - தக்கோலக் காய்
புடைக்கும் - அடிக்கும்
புரி - செய்யும், முறுக்கிய சரடு
புரையுநர் - ஒப்பவர்
புரையும் - ஒக்கும்
புலம் - இடம்
புலம்ப - தனியாக நிற்க
புலமையோய் - ஞானமுடையவனே
புலரா - உலராத
புலவன் - அறிவுடையவன், தேவன்
புள் - பறவை
புறம் - மேல்பக்கம்
புன்மை - பொலிவின்மை
புன்தலை - சிவந்த தலை
புனைந்து - அலங்கரித்து

பூ

பூ - பொலிவு
பூட்கை - வலிமை
பூண் - ஆபரணம்
பூத்தன்ன - தோன்றினாற் போன்ற
பூந்துகில் - பூ வேலை செய்த ஆடை

பெ

பெடை - பெண்பறவை
பெயர் - செல்வம்
பெயரா - வீசி
பெயரிய - பெயர்பெற்ற
பெயல் - பெய்யும் மழை
பெரிது - நீண்ட காலம்
பெரீஇயர் - பெற்றவர்
பெறலரும் பரிசில் - பெறுவதற்கரிய பரிசு
பெறுதி - பெறுவாய்

பே

பேராளன் - பெரியவன்
பேழ் - ஆழமான

பை

பைங்கொடி - பச்சிலைக் கொடி

பொ

பொதி - சேர்த்து வைக்கும்
பொதியில் - பலரும் கூடும் சபை
பொதும்பு - குகை
பொதுளிய - செறிந்த
பொரு - முட்டும்

பொருத - மோதிய
பொருநர் - போர் செய்வார்
பொருநன் - உவமிக்கப்படுபவன், வீரன்
பொலம் - பொன்
பொற்ப - பொலிய
பொறி - பீலி, புள்ளி

போ

போழ் - பிளக்கும்

ம

மகரப் பகுவாய் - மகரவாய் என்னும் ஆபரணம்
மஞ்ஞை - மயில்
மடநடை - மெத்தென்ற நடை
மடம் - மென்மை
மடவரல் - மென்மையை உடையவள்
மண்டி - மேற்சென்று
மண்டு - மேற்செல்லும்
மண்ணி - அலங்காரம் செய்து
மண்ணுறுத்து - அலங்கரித்தமைத்து
மணி - இரத்தினம்
மத - வலிமை
மதவலி - மிக்க வலிமை
மதன் - அறியாமை, வலிமை
மதி - அறிவு, சந்திரன்
மந்தி - பெண் குரங்கு
மரபு - இலக்கணம், கடமை, முறை
மரபுளி - சம்பிரதாயத்தினின்றும்
மரன் - மரம்
மராஅத்து - கடம்ப மரத்தின்
மராஅம் - வெண்கடம்பு
மருங்கு - அளவு, இடை, குலம், பக்கம்
மருப்பு - கொம்பு
மருது - மருதமரம்
மழை - மேகம்
மள்ளன் - இளையவன், வீரம்
மறி - ஆடு
மறு - குற்றம்
மறுகு - வீதி
மறை - மந்திரம்
மன்றம் - மரத்தடியில் உள்ள மேடை
மன் உயிர் - நிலைபெற்ற உயிர்
மனன் - மனம்

**மா**

**மா - கரிய, பெரிய, மாமரம்**
**மாண்டலைக் கொடி - கோழிக்கொடி**
**மால் - பெருமை**
**மாலோன் - திருமால்**
**மாற்று - தடுத்தல்**

**மி**

**மிசை - மேலே**
**மிலைந்த - அணிந்த**
**மின் - மின்னல்**

**மீ**

**மீ - மேலே**
**மீமிசை - மிக மேலே**
**மீன் - நட்சத்திரம்**

**மு**

**முகந்தனன் - முகத்தாற் போன்ற**
**முகன் - முகம்**
**முகிழ் - அரும்பு**
**முகை - அரும்பு**
**முச்சி - உச்சிக்கொண்டை**
**முசு - குரங்கு**
**முடி - கேசம்**
**முடிமார் - முடிப்பவர்**
**முடை - நாற்றம்**

முத்தீ - மூன்று வேள்வித் தீ
முதல் - அடிமரம், தலைவன்
முது - அறிவு
முந்து - முன்னாலே
முரண் - மாறுபாடு
முரணினர் - தெய்வமில்லை என்பவர்
முருக்கி - போக்கி
முருகியம் - முருகனுக்குகந்த வாத்தியங்கள்
முருகு - முருகன்
முழவு - மிருதங்கம்
முழு - முற்றிய
முழுமுதல் - அடிமரம், முழுமையான மரம்
முற்றிய - முடித்த
முறி - தளிர்
முன்னி - எண்ணி
முன்னிய - நினைத்த
முன்னீர் - கடல்

மூ

மூசா - மொய்க்காத

மெ

மெய் - உண்மை

மே

மேவர - முன்னாலேவர
மேவலர் - உடையவர்
மேவரு - விரும்பிச் செல்லும்
மேனி - உடம்பின் நிறம்

மை

மைந்தர் - வலிமையை உடையவர்

மொ

மொய்ம்பு - பலம், மார்பு

**மோ**

**மோடு - வயிறு**

**யா**

**யாக்கை - உடம்பு**
**யாண்டு - வருடம்**
**யாத்து - கட்டி**
**யாவதும் - சிறிதும்**
**யாழ் - வீணை**
**யாறு - நதி**
**யூகம் - கருங்குரங்கு**

**வ**

**வகை - கூறுபாடு**
**வசிந்து - வசியம் செய்து**
**வடு - தழும்பு**
**வண்புகழ் - கொடையால் வந்த புகழ்**
**வணங்கு - வளைந்த**
**வதுவை - மணமாலை**
**வந்தனென் - வந்தேன்**
**வய - வலிமை**
**வயிர் - ஊதுகொம்பு**
**வயின் - பக்கம்**
**வரம்பு - எல்லை**
**வரி - கோடு**
**வரிப்புனைபந்து - வரிந்து புனையப்பட்ட பந்து**
**வரை - மலை, மூங்கில்**
**வலம் - வெற்றி**
**வலம்புரி - தலைக்கலன்களில் ஒன்று, வலத்தே சுழித்த சங்கு**
**வலவியின் - வலப்பக்கம்**
**வலன் - வலம்**
**வலி - வலிமை**
**வழாஅ - தவறாத**
**வழாஅது - தவறாமல்**
**வழிபட - வணங்க**

வள் - பெரிய, வளமான
வளி - காற்று
வளை - சங்கு
வளைஇ - வளையச்சுற்றி
வளைஇய - வளைந்த
வனப்பு - அழகு

வா

வாங்கிய - வளைந்த
வாங்கு - உள்வளைந்து
வாய் - பொருந்திய
வாயவிழ்ந்த - மலர்ந்த
வாரணம் - கோழி
வாரி - கடல்
வால் - வெண்மையான
வாழ்வு - வாழ்பவள்
வாள் - ஒளி, கத்தி
வானோர் - தேவர்

வி

விசும்பு - வானம்
விடர் - பிளப்பு
விடுபு - விட்டு
விடை - ஆட்டுக்கிடாய்
விண் - ஆகாயம்
வியல் - அகலம்
விரிந்தன்று - விரிந்தது
விரை - நறுமணம்
விரைஇ - கலந்து
விரைஇய - கலந்த
விரைசெலல் - விரைந்து செல்லுதல்
விளிவு - அழிவு
விழவு - உற்சவம்
விழு - மேலான
விழுமிய - மேலான
விறல் - வெற்றி
வினை - செயல், பாவம்

வீ

வீறு - வேறான சிறப்பு

வெ

வெட்சி - ஒரு பூ, விருட்சி என்று இப்போது வழங்கும், சிவந்த நிறம் உடையது
வெரீஇ - அஞ்சி
வெருவர - அஞ்ச
வெளிறு - மரத்தின் உட்சோறு
வெற்பு - மலை
வெறி - வெறியாட்டு
வெறுக்கை - செல்வம்
வெள்ளில் - விளாமரம்
வென்றுஅடு - வஞ்சியாமல் எதிர்நின்று கொல்லும்

வே

வேங்கை - ஒரு மரம்
வேட்டன்று - வேள்வி செய்தது
வேண்டியாங்கு - வேண்டியபடி
வேண்டுநர் - வேண்டிக் கொள்வோர்
வேய் - மூடிய
வேலன் - பூசாரி
வேழம் - யானை
வேள் - முருகன்
வேள்வி - யாகம்

வை

வை - கூர்மை
வைகறை - விடியற்காலை
வைப்பு - இடம்